
எங்கே
போகிறோம்
நாம்?
தமிழருவி மணியன்

# எங்கே போகிறோம் நாம்...


அடுத்த இதழ் முதல்...
எண்பத்தாறு வயதிலும்
புலனடக்கம் போற்ற முடியாமல்,
காமச் சகதியில் திளைத்து
நின்றாடும் 'திவாரி'கள்..!
இரண்டு ஆண்டுகள் முதல்வராக
இருந்ததில் இரண்டாயிரம்
கோடி ரூபாய் கொள்ளையடித்த
'மதுகோடா'க்கள்..!
உதவியாளரைக் கொலை செய்த
குற்றச்சாட்டுக்கு உள்ளான
பின்பும் மத்திய அமைச்சராகவும்,
மாநில முதல்வராகவும்
மாறி மாறி பவனிவரும்
'சிபுசோரன்'கள்..!
இப்படியான ஆக்கிரமிப்புகள்
நிறைந்த அரசியல் உலகில்
சத்தியம் சார்ந்த சமூகநலத்
தொண்டர்களுக்கு இடம் எங்கே?
கொதிப்போடு தொடங்குகிறது
ஒரு தேடல்..!
இளைஞர்களே...
தயாராகுங்கள் அந்த
சுத்திகரிப்புப் பயணத்துக்கு...
எங்கே
போகிறோம்
நாம்...
தமிழருவி மணியன்

**எங்கே போகிறோம் நாம்...**




என் இனிய நண்பர்களே... வணக்கம்.

எனக்காக ஒரு நிமிடம் உங்கள் செவிக்கதவுகளை அகலத் திறந்து வையுங்கள். 'செவியிருப்போர் கேட்பாராக...' என்றார் கர்த்தர் இயேசு. வேண்டாத, விரும்பாத

எதையெதையோ அன்றாடம் கேட்டுப் பழகிய உங்கள் காதுகள், சமூக நலன் சார்ந்து நம் ஜூனியர் விகடனில் இதழ்தோறும் நான் சொல்லவிருக்கும் செய்திகளையும் கொஞ்சம் கவனமாகக் கேட் கட்டும்! 'பொய்யிலிருந்து உண்மையை நோக்கி, இருளிலிருந்து ஒளியை நோக்கி நாம் செல்ல வேண்டும்' என்று உபநிடதம் உரைக்கிறது. வீரத் துறவி விவேகானந்தர், 'உண்மையிலிருந்து பேருண்மையை நோக்கி - ஒளியிலிருந்து பேரொளியை நோக்கி நாம்

புறப்படுவதுதான் வாழ்வின் உன்னதம்!' என்றார்.

பொய்யென்றும், இருளென்றும் உச்சரிக்கக் கூட அவர் உள்ளம் விரும்பவில்லை. அவர் விரும்பியபடியா நம் வாழ்க்கை இன்று நடக்கிறது? நுகர் பொருள் கலாசாரத்தின் உச்சத்தில் இருக்கும் நம்மைச் சுற்றி முற்றுகையிட்டிருப்பவை பொய்மையும் இருட்டும்தானே!



'இந்தியா அழிந்தால், உலகில் ஆன்மிகம் அழியும்; ஒழுக்கம் அழியும், எல்லா உயர்ந்த லட்சியங்களும் முற்றாக அழிந்து விடும்! மேலான வாழ்க்கை லட்சியங்கள் இருந்த இடத்தில் காமமும், சுகபோகமுமே ஆண் - பெண் தெய்வங்களாக ஆட்சி நடத்தும். அங்கு பணமே புரோகிதம் பார்க்கும். புரட்டும், பலாத்காரமும் வழிபாட்டு முறைகளாக வாய்த்து விடும். மனிதம் பலிப் பொருளாகும்!' என்றார் விவேகானந்தர். அவர்

அஞ்சியபடியே அடுத்தடுத்து பல சம்பவங்கள் நடக்கின்றன.

இந்த இழிநிலைக்கு யார் காரணம்? தனி மனிதர்களா... அதிகார நாற்காலியில் அமர்ந்திருக்கும் ஆட்சியாளர்களா... சொந்த ஆதாயத்துக் காகவே கட்சி நடத்தும் அரசியல்வாதிகளா... பொறுப்பற்ற முறையில் கடை பரப்பும் சில ஊடகங்களா... பொழுதுபோக்குப் போர்வையில் மனித சமூகத்தை மலிவுபடுத்தும் கலை, இலக்கிய கர்த்தாக்களா... லட்சிய நோக்கங்களின்றி இழிந்த நடவடிக்கைகளில் இதயத்தைப் பறிகொடுக்கும் இளைய தலைமுறையா?

இவர்கள் அனைவரும் நம் சமுதாயத்தை அவரவர் சக்திக்கேற்பச் சீரழிக்கின்றனர் என்பதே சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மை!

வெறுப்புக்கு மாற்றாக அன்பு, போட்டிக்கு பதில் பூரண ஒத்துழைப்பு, தன்னலத்துக்கு எதிராகத் தியாகம், புற ஆரவாரங்களைப் புறக்கணிக்கும் எளிமை சார்ந்த அகநாகரிகம் ஆகியவையே காந்தியம் வளர்த்தெடுத்த பொது வாழ்க்கைப் பண்புகள். இன்று எங்கே போயின அந்த நேரிய பண்புகள்?

86 வயதிலும் புலனடக்கம் போற்ற முடியாமல், காமச் சகதியில் திளைத்து நின்றாடும் 'திவாரி'கள்..! இரண்டு ஆண்டுகள் முதல்வராக இருந்ததில் இரண்டாயிரம் கோடி ரூபாய் கொள்ளையடித்த 'மதுகோடா'க்கள்..! உதவியாளரை கொலை செய்த குற்றச்சாட்டுக்கு உள்ளான பின்பும் மத்திய அமைச்சராகவும், மாநில முதல்வராகவும் மாறி மாறி பவனிவரும் 'சிபுசோரன்'கள்..! இப்படியான ஆக்கிரமிப்புகள் நிறைந்த அரசியல் உலகில் சத்தியம் சார்ந்த சமூகநலத் தொண்டர்களுக்கு இடம் எங்கே?

நடிப்பு சுதேசிகளின் பிடியிலிருந்து நாட்டின் விதியெழுதும் அரசியலை விடுவிக்கும் எண்ணமே நமக்கில்லையா? தேநீர் விற்றவன் தேர்தலில் நிற்கிறான். பதவியைப் பெற்றதும் தேயிலைத் தோட்டத்தையே விலைக்கு வாங்குகிறான். நான்கடி நிலம் இல்லாமல் தெருவில் திரிந்தவன் அரசியல்வாதியாகப் பிறவியெடுத்ததும், ஆறு ஆண்டுகளில்ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு அதிபதியாகிறான். எழுதப் படிக்கத் தெரியாதவன்கூட, இங்கேஆள்பவருக்கு அடியாளாக ஒத்துழைப்புக் கொடுத்து பல்கலைக் கழகத்தைக்

கட்டி நிர்வாகம் செய்கிறான்!

பொது ஜனமாகிய நாமோ பொறுமையில் எருமையாகப் பார்த்துக் கொண்டே இருக்கிறோம் அனைத்தையும்! எங்கே போகிறோம் நாம்?

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் ஆன்மிக உரைகள் நிகழ்த்தியபோது, ஒரு நாள் அமெரிக்கப் பெண்மணி ஒருவர், அவரை சந்தித்து உரையாடினாள். அப்போது அவள், 'சுவாமிஜி, உங்கள் இந்தியாவில் மக்கள் அனை வரும் அமைதியும், பொறுமையும், சகிப்புத் தன்மையும் நிறைந்தவர்களாக இருப்பது மிகவும் பெருமைக்குரிய அம்சம் அல்லவா?' என்று கேட்டாள். அந்தக் கேள்வி அவரை மகிழ்ச்சிப்படுத்தும் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால், அது வரை ஒளிவீசிய விவேகானந்தரின் முகத்தில் இருள் படர்ந்தது. சோகம் செறிந்த ஒரு பெருமூச்சுடன், 'அளவற்ற பொறுமையும், சகிப்புத் தன்மையும் என் இந்திய சமூகத்தைப் பாழடித்து விட்டன!' என்றார் சுவாமி.



நேர்மையும், உண்மையும்தான் இந்தியரின் இரு கண்கள்.

'சத்யம் வத; தர்மம் சர' என்பதுதான் வேத நெறி. உண்மையை உரைப்பதும், தர்மத்தைத் தொடர்வதுமே நம் முன்னோர் நமக்களித்த நற்செய்திகள்! ஆனால், 'சமூகத்தில் படர்ந்து கிடக்கும் தீமைகளையும் பொய்மைகளையும் நான் ஒருவன் தனியாக எப்படி எதிர்த்துப் போராடுவது?' என்ற தயக்கமே இன்றைய இளைஞர்களின் தடைக்கல்லாக இருக்கிறது. தயவுசெய்து கலங்காதீர்கள். ஒவ்வொரு துளியும் ஒன்றாகச் சேர்ந்து நாம் கடலாகப் பெருக்கெடுப்போம். கால ஓட்டத்தில், நமது கரை புரளுதலில் அனைத்து அழுக்குகளும் அகன்று போகும். அரசியல், சமூக, பொருளாதாரப் போக்குகளை உயர்ந்த தளத்தில் கொண்டு போய் சேர்க்க என்னோடு நீங்கள் ஒன்றிணைவீர்களா?

தொடங்குவோம் வாருங்கள் - அந்த சுத்திகரிப்புப் பயணத்தை, அடுத்த இதழ் முதல்..!

என்றும் உங்கள்,

தமிழருவி மணியன்.

**எங்கே போகிறோம் நாம்...**




அரசியல்

1 அறிவார்ந்தவர்களும், தன்னலம் துறந்தவர்களும், நாட்டு நலனில் நாட்ட முள்ளவர்களும், மாசற்ற தொண்டு மனம் கொண்டவர்களும் மட்டுமே ஒரு கால கட்டத்தில் அரசியல் உலகில் அடியெடுத்து வைத்தனர். 'தத்துவ ஞானிகளே தலைமையேற்று ஆளவேண்டும்!' என்று அறிவுறுத்தியவர் கிரேக்க அறிஞர் பிளேட்டோ. தனக்கென்று தனியாக ஒரு குடும்பம் இல்லாத மனிதர்களே தலைமைப் பொறுப்பேற்க வேண்டும் என்பது அவருடைய அழுத்தமான அபிப்ராயம்.

'வாயிலே அழுக்கென்று
நீரெடுத்துக் கொப்பளித்தேன்.
கொப்பளிக்கக் கொப்பளிக்க
வாயும் ஓயாமல் அழுக்கும் போகாமல்
உற்றுப் பார்க்கிறேன்...
நீரே அழுக்கு!

– சுப்ரமண்ய ராஜு

மனைவி, மக்கள், குடும்பம் என்று அன்றாடம் பாசத்தில் அலைக்கழிக்கப்படுபவர்கள் விரைவில் ஆசை வலையில் விழுந்து, தன் நிலை தாழ்ந்து, தான் ஏற்றுக்கொண்ட லட்சியத்தில் இருந்து வெகுதூரம் விலகி,

காலநடையில் ஊழலின் உற்பத்தியாளர்களாக உருப்பெற்று விடுவார்கள் என்ற நியாயமான அச்சத்தினால்தான், நெருங்கிய உறவுகளை நெஞ்சத்தில் வளர்த்துக் கொள்ளாதவர்கள் மட்டுமே 'வையகத் தலைமை' கொள்ள வேண்டும் என்று இயேசு பிறப்பதற்கு முன்பே விதியன்று செய்தார் பிளேட்டோ.

தத்துவம் என்பது உண்மையின் உருவம். உண்மையைத் தேடும் யாரும் பொய்யின் நிழலில் இளைப்பாற விரும்ப மாட்டார்கள். அதனால்தான், அதிகார நாற்காலியில்

தத்துவஞானிகள் அமரவேண்டும் என்று ஆசைப்பட்டார் அந்த ஆதிச் சிந்தனையாளர். மக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் வல்லமை அன்று முதல் இன்று வரை அரசியலுக்கே உண்டு. அரசியல் சார்ந்த ஆட்சிக் கலையைத் 'தலைமை அறிவியல்' (Master Science) என்று அரிஸ்டாட்டில் வர்ணித்ததில் ஆழ்ந்த அர்த்தம் உண்டு. ஆனால், இன்று அனைத்தும் தலைகீழாக மாறித் தரம் தாழ்ந்துவிட்டன. அயோக்கியர்களின் கடைசிப் புகலிடமாக நேற்றிருந்த அரசியல் உலகம், இன்று சகல விதமான அயோக்கியர்களுக்கும் முதல் சரணாலயமாகிவிட்டது.

சந்திரமதி இல்லாமல் அரிச்சந்திரன் நாடகம் இல்லை. கள்ள மனிதர்கள் இல்லாமல் இன்று எந்த அரசியல் கட்சி யும் இல்லை.

சமூகத்தில் படிந்துவிட்ட சகல அழுக்குகளையும் அகற்றுவதற்காகவே உருவாக்கப்பட்ட அரசியலமைப்பே இன்று எளிதில் சுத்தப்படுத்த முடியாதபடி அடர்த்தியாக அழுக்கேறிக் கிடக்கிறது. துர்நாற்றம் வீசும் இந்த அரசியல் குட்டையைத் தூர்வார யாரும் இங்கே தயாராக இல்லை.

அடித்தட்டு மக்களுக்கு இந்த நாற்றம் பழகிவிட்டது. மேல்தட்டு வர்க்கம் மூக்கை மூடியபடி முகத்தைத் திருப்பிக்கொண்டது. யார்தான் இந்த நாட்டு மக்களின் நிலை குறித்து யோசிப்பது? புழுத்துக்கிடக்கும் பொதுவாழ்வைப் புனிதமாக்க யாராவது சிலர் முன்வந்து சிலுவை சுமக்கத்தான் வேண்டும்.

ஒரேயரு இயேசு புறப் பட்டால், அதிகாரபீடம் எளி தாக அவரைச் சிலுவையில் அறைந்துவிடும். ஆயிரக்கணக்கில் சிலுவை சுமக்க வாக் காளர்கள் முன்வந்தால்... தவறு செய்பவர்கள் தலையில் சிரமமின்றி முள்மகுடம் சூட்டிவிடலாம். 'எது நடந்தால் நமக்கென்ன?' என்றா பகத்சிங்கின் பரிவாரம் பார்த்துக் கொண்டிருந்தது? 'எரிகிற வீட்டில் எடுத்த வரை ஆதாயம்...' என்ற நோக்கிலா காந்தியப்படை அன்று அகிம்சைப் போர் நடத்தியது? சமூகப் பொறுப்பு உணர்வு உள்ள வர்கள் இனியும் மௌனப் பார்வையாளர்களாக இருத்தலாகாது.

அடிமை இந்தியாவில்கூட ஆயுதம் தேவைப்பட்டிருக் கலாம். சுதந்திர இந்தியாவில் அறவழி மூலம் அறப்போர்

நடத்தியே ஆயிரம் மாற்றங்களை நாம் நினைத்தால் அரங்கேற்ற முடியும். முதல் மாற்றம் நம் விதியெழுதும் அரசியல் தளத்தில் நிகழ்வதற்கு வழிவகுக்க வேண்டும். 'தீமையின் வெற்றிக்குத் தேவையானது நல்லவர்கள் எதுவும் செய்யாதிருப்பதே' என்ற ஆங்கில அறிஞர் எட்மண்ட் பர்க் வாசகத்தை நாம் நெஞ்சில் நிறுத்தவேண்டும்.



அறத்தையும், அரசியலையும் நம் முன்னோர் கள் பிரித்துப் பார்த்ததில்லை. அரசியலறம் கூறுவதுதான் திருக்குறளின் பொருட்பால். 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்கிறது சிலப்பதிகாரம். எந்த மனிதனும் ஆட்சித்

தலைமையைத் தகுதியின்றி அலங்கரிக்க நம் மூதாதையர்கள் அனுமதித்ததில்லை. மகாபாரதம் சாந்தி பர்வத்தில் ஓர் ஆழ்ந்த அரசியல் செய்தி உண்டு. 'ஆள்வதற்காக அரசுக் கட்டிலில் அமர்ந் தவன் ஒரு தாயைப் போல் இருக்கவேண்டும். ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்குரிய தர்மமே அரச தர்மம். தனக்கு விருப்பமான உணவைவிட, கருவில் வளரும் குழந்தைக்குத் தேவையான உணவையே ஒரு தாய் ஏற்பாள். ஆட்சியாளனும் தனக்கு விருப்பமான செயல்களைச் செய்யாமல், மக்கள் நலனுக்கு உரிய காரியங்களில் மட்டுமே ஈடுபட வேண்டும்' என்று அம்புப் படுக்கையில் மரணத்தின் மடியில் சாய்ந்து கிடக்கும் பீஷ்மர், தருமனுக்கு அரசியலறம் உரைக்கிறார்.

'இந்திரன் வேள்விப் பொருளைப் பெற்று உலகைக் காப்பது போல், ஆள்பவன் மக்களிடமிருந்து வரியைப் பெற்று அவர்களை வாழச் செய்ய வேண்டும். உயிர் வளர்க்கும் காற்றை வாயு வழங்குவது போல், ஆட்சித் தலைவன் தீமையை அழித்து நன்மையை வழங்க வேண்டும்.

இருளகற்றி ஆதவன் ஒளியைப் பரப்புவது போல், அதிகாரம் செய்பவன் மறமகற்றி, அறத்தை நிலைநிறுத்தவேண்டும். காவலன் காலனைப் போல் தீயவரைத் தண்டித்து, நெருப்பைப் போல் தூய்மை காத்து, மழையைப் போல் மண்ணை வளப்படுத்தி, நிலவைப்போல் மக்களை மகிழச் செய்ய வேண்டும்' என்கி றது சுக்கிர நீதி.

சாணக்யன் தனது அர்த்தசாஸ்திரத்தின் ஆறாம் அத்தியாயத்தில், 'மக்களை ஆள்பவன் முதலில் தன் மனத்தை ஆள வேண்டும். காமம் என்னும் உட்பகையை வெல்ல அவன் புலனடக்கம் பழக வேண்டும்' என்கிறான். 'கனவில் கூட காமவசப்படல் ஆகாது. ஆணவம், பொய், தீமை தரும் சூழ்ச்சிகளை விட்டு விலக வேண்டும். அறம், பொருள், இன்பம் மூன்றையும் சமநிலையில் அனுபவிக்க வேண்டும்' என்று அரசு நடத்துவோர்க்கு அவன் அறிவுறுத்துகிறான். திருக்குறளும், சிலம்பும், பாரதமும், சுக்கிரநீதியும், அர்த்தசாஸ்திரமும் காட்டிய வழியிலா நம் அரசியல்வாதிகள் நடக்கிறார்கள்? அப்படி நடக்கவேண்டும் என்று மக்களே இன்று எதிர்பார்க்கவில்லை என்பதுதான்

அதிர்ச்சியூட்டும் அவலம். ஊழல் பேர்வழிகள் அதிகாரத்தில் இருப்பதுதான் நம் சொந்த நலனுக்கு உகந்தது என்று ஒரு சமூகம் நினைக்கத் தொடங்கிவிட்டால்... அதன் சரிவை யாரால் தடுத்து நிறுத்த முடியும்?

மறைந்த சட்டமேதை நானி பல்கிவாலா, 'இந்தியாவின் இன்றைய தேவை அளவற்ற சுதந்திரமில்லை; அதிகமான ஒழுக்கம்' என்றார். கொசுக்களின் கூடாரமாக, நோய்களின் இருப்பிடமாக, சதுப்புநிலக் காடுகளின் உறைவிடமாக இருந்த சிங்கப்பூரைத் தென்கிழக்கு ஆசியாவின் சொர்க்கமாக லீ குவான் யூ மாற்ற முடிந்ததற்கு அடித்தளம், அவர் கையாண்ட கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரமும், கட்டமைக்கப்பட்ட மானுட ஒழுக்கமும்தான். நம் நாட்டில் தவறான சுதந்திரத்துக்கு எல்லையில்லை; ஒழுங்கீனத்துக்கோ அளவேயில்லை. 'நாடாண்ட அரசர்கள்



சுகங்களைத் துறந்து, காடேகி அறம் வளர்த்தார்கள். சொந்த சுகங்களை மறுதலித்த அந்தப் பண்பு, இன்று ஏன் அரசியல் உலகில் அற்றுப்போனது?' என்று மனம் நொந்த பல்கிவாலா, 'நம் நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் முதல் தரமானது. ஆனால், அரசியல்வாதிகள் மூன்றாம் தரமானவர்கள்!' என்று குறிப்பிட்டார்.

இந்தியாவில் சுதந்திரம் கண் விழித்து 62 ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்று உலகிலேயே அதிகமான ஏழைகள் உள்ள நாடு நம் இந்தியாதான். நாற்பது கோடி மக்கள் வறுமை இருட்டில் வாடுகின்றனர். இவர்களில் 75 சதவிகிதம் மக்கள் கிராமங்களில் வாழ்பவர்கள். நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 40 சதவிகிதம் பேர் கல்வி வெளிச்சத்தை இன்று வரை காணவில்லை. உலகிலேயே குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பது இந்தப் புண்ணிய பூமியில்தான். மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் உலகின் 196 நாடுகளில் நமக்கு 127-வது இடம். இந்த லட்சணத்தில் நாம் விரைவில் வல்லரசாகப் போவதாக நம் அதிகார வர்க்கம் வாய்ஜாலம் காட்டுகிறது.

வெறும் வார்த்தைகள், வரலாறு படைப்பதில்லை.

தங்கள் சொந்த சுகவாழ்வுக்காக மக்களைச் சுரண்டி, சுரண்டப்பட்டவர் களையே தொடர்ந்து தண்டிக்கும் நம் அரசியல்வாதிகள் எதற்காகவும் வெட்கப்படுவதில்லை. 'எந்த நெறிமுறைக்கு உட்பட்ட சட்டத்தையும் அரசியல் அரங்கில் நான் ஏற்பதில்லை. அரசியல் ஒரு விளையாட்டு. அதில் எல்லா விதமான தந்திரங்களும் அங்கீகரிக்கப்படும். அரசியல் விளையாட்டில் ஈடுபட்டவர்களின் வசதிக்கேற்ப சட்டங்கள் வளைக்கப்படும்!' என்றான் ஹிட்லர். அந்த ஹிட்லரின் வழித்தோன்றல்களுக்குத்தான் நாம் இங்கே வழிபாடு நடத்தி வருகிறோம்.

நேர்மையின் நிறம் மாறாமல், நெறிசார்ந்து அரசியல் நடத்த 110 கோடி மக்களின் 543 நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆறரை கோடித் தமிழரில் 234 சட்டமன்ற உறுப்பினர்களும் நமக்குக் கிடைக்கவில்லை என்றால், எங்கே போகிறோம் நாம்?

- பயணம் தொடரும்...




*'அமுதசுரபியைத்தான் நீ தந்து சென்றாய்*

*இப்போது...*

*எங்கள் கையில் இருப்பதோ பிச்சைப் பாத்திரம்*

*அணைக்கட்டுகளில் திறக்கப்படும் தண்ணீர்*

*பள்ளங்களை ஏமாற்றி விட்டு*

*மேட்டை நோக்கியே பாய்கிறது*

*சேரிகளில் மட்டுமே யாத்திரை செய்வாய் என்பதைத்*

*தெரிந்து கொண்டதால் உன்னை நேசித்தவர்கள்*

*தேசத்தையே சேரியாக மாற்றி விட்டார்கள்'*

**- மு.மேத்தா**

2 **அ**ரசைப் பற்றி ஆய்வு செய்யும் இயல்தான்அரசியல். ஓர் அரசு இது வரை

எவ்வாறு இருந்தது, இப்போது எவ்வாறு இருக்கிறது. இனி எவ்வாறு இருக்க வேண்டும் என்று அறிவியல் நோக்கில் ஆய்வு நடத்த வேண்டிய அரசியல் இன்று, நம் மண்ணில் பிழைப்புவாதிகளின் புகலிடமாக இழிந்து விட்டது. சமுதாயத்தின் நேரிய அரசியல் ஒழுங்கமைப்புக்காக வரலாற்றுப் போக்கில் உருவான ஒரு வடிவமே அரசு. அந்த அரசின் முதன்மையான நோக்கம் மக்களுக்கு நன்மை செய்வதும், அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்துவதுமாகும். அதற்காக, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சட்டபூர்வமாக அதிகாரம் கட்டமைக்கப் படுகிறது. அதிகாரம் செலுத்தும் மனிதர்களின் தகுதியையும், தரத்தையும் பொறுத்தே... ஆட்சியின் மாட்சியும், வீழ்ச்சியும் அமைகின்றன.



ஜனநாயக அமைப்பில் கட்சிகள் தவிர்க்க முடியா தவை. மக்களின் நம்பிக்கையையும், ஆதரவையும் பெரிதாக வளர்த்தெடுக்கும் கட்சி, ஆட்சி நடத்தும் வாய்ப்பைப் பெறுகிறது. அதன் மூலம் கட்சித் தலைமை, ஆட்சித் தலைமையை அடைகிறது. ஒரு சமுதாயத்தின் தலையெழுத்தை ஜனநாயகத்தில் ஆளுங்கட்சித் தலைமையே நிர்ணயிப்பதால், அந்தத் தலைமைப் பீடத்தில் அமரும் தனி மனிதர்களின் பண்புகள் ஆழ்ந்த பரிசீலனைக்கு உரியவை, 'மக்கள் நல்ல

சட்டங்களால் ஆளப்படுவதைக் காட்டிலும், ஒரு நல்ல மனிதரால் ஆளப்படுவதே சிறப்புக்கு உரியது' என்றார் அரிஸ் டாட்டில். 'பெரிய படையாக இருந்தாலும் சரியான

தலைவன் இல்லாமற்போனால், அது போரில் நிலைத்து நிற்காது!' என்கிறார் வள்ளுவர்.

'வரலாறு மக்களால் படைக்கப்படுகிறது' என்பது மார்க்ஸியப் பார்வை. அந்த மக்களை நெறிப்படுத்தவும், அவர்களுக்குள் உயர்ந்த லட்சியத்தைக் கொண்டு செலுத்தவும், அதற்கான உத்திகளை வடிவமைக்கவும், வழிகாட்டவும் உன்னதமான ஒரு தலைவன் தேவைப் படுகிறான் என்பது மறுக்க முடியாத உண்மை. சோவியத் மண்ணில் பொதுவுடைமை மலர்ந்ததற்கு லெனினது தலைமைதானே அடித்தளம்!

'என் வாழ்க்கை முழுவதும் இதயபூர்வமாகவும், முழு பலத்துடனும் நம் நாட்டுக்காகவும், புரட்சிக்காகவும், மக்களுக்காகவும் பாடுபட்டு வந்திருக்கிறேன். இந்த உலகிலிருந்து நான் விடைபெற்றுக் கொள்ளும் வேளையில், இன்னும் அதிக நாட்கள் என் மக்களுக்கு சேவை செய்ய முடியவில்லையே என்ற ஓர் ஏக்கத்தைத் தவிர வேறு எதற்காகவும் நான் வருந்த வேண்டியதில்லை. நான் இறந்த பின்பு மக்களுடைய

நேரத்தையும், பணத்தையும் வீணாக்கும் வகையில் என் இறுதிச் சடங்கைப் பெரிய அளவில் நடத்துவதைத் தவிர்க்க வேண்டும். உங்களிடம் என் எல்லையற்ற அன்பை மட்டும் விட்டுச் செல்கிறேன்!' என்றவர் வியட்நாமின் புரட்சித் தலைவர் ஹோசிமின்.

ஐம்பதாண்டுகள் கரடு முரடான புரட்சிப் பாதையில் பயணித்து, நம் கற்பனைக்கெட்டாத கடும் சோதனைகளை சந்தித்த ஹோசிமின் தனது 79-வது வயதில் மரணத்தைத் தழுவும் தருணத்தில் ஓர் உயிலைத் தயாரித்தார். அந்த உயில், பொது வாழ்வில் குவித்து வைத்த சொத்தைக் குடும்ப உறவுகளுக்குக் கூறு போட்டுத் தருவதற்காக எழுதப் படவில்லை. தனக்கென்று குடும்பமும், சொத்தும் இல்லாத ஹோசிமின், நாட்டு மக்களுக்கு வழங்கும் நற்செய்தியாக அந்த உயிலை வரைந்தார். ஒரு கட்சிக் கும், அதன் தலைமைக்கும் எது அவசியம் என்பதை அந்த உயில் அழகாக வெளிப்படுத்தியது.

'நம் கட்சி அதிகாரத்தில் உள்ளது. ஒவ்வொரு கட்சி உறுப்பினரும், ஊழியரும் உயர்ந்த புரட்சிகர ஒழுக்

கத்தைப் பெற்றிருக்க வேண்டும். கடும் உழைப்பு, சிக்கனம், நேர்மை, ஒழுக்கம், பொது நலனுக்காக முற்றிலும் அர்ப்பணித்துச் சுயநலமற்றிருப்பது போன்ற சிறந்த பண்புகளை வெளிப்படுத்த வேண்டும். நமது கட்சி முழுமையான தூய்மையைப் பாதுகாக்க வேண்டும். உண்மையான ஊழியன் என்ற நிலையில் தனது பங்களிப்பைத் தரும் தகுதியை மக்கள் தலைவராகப் பொறுப்பேற்பவர் நிரூபிக்க வேண்டும்!' என்று ஹோசிமின் எழுதி வைத்த உயிலின் வாசகங்களை ஒவ்வோர் ஆளுங்கட்சியின் தலைவர்களும், தொண்டர்களும் பின்பற்றினால் அப்போதே மண்ணுலகம் பொன்னுலகமாகி விடும். ஆனால், அப்படிப் பின்பற்றுபவர்கள் இங்கே யார்? 'முன் ஏர் வழியில் பின் ஏர் நடக்கும்' என்பது பழமொழி. 'கடவுள் எவ்வழி, பக்தன் அவ்வழி' என்பது காந்தியம். 'தலைவன் எவ்வழி, தொண்டன் அவ்வழி' என்பதுதானே நடைமுறை!

காலம் கடக்கும் ஒவ்வொரு கணத்திலும், பண் பாட்டுத் தளத்தில் மனிதகுலம் மேலும் சிறப்புற முயல வேண்டும்.

நம் மூதாதையர் வாழ்ந்த காலத்தில் இருந்ததை விட இன்றுள்ள அரசியல் சிறந்ததாக விளங்க வேண்டாமா? காந்தியின் வாரிசுகள் அவரை விடப் பெருமைக்கு உரியவர்களாக விளங்காமற் போயிடினும், அவரைப் போல் இயன்றளவு வாழக் கூட முயலவில்லையே! உடம்பில் அணியும் கதரைத் தவிர, வேறெந்த காந்திய அடையாளமும் இவர்களிடம் இல்லை. இந்த மலினமான சீரழிவு, எல்லா அரசியல் கட்சிகளிலும் விஷவிருட்சமாக வேரூன்றி வியாபித்து விட்டது. மாஜினிக்கு ஒரு கரிபால்டியும், மார்க்ஸுக்கு ஒரு லெனினும்வாய்த்தது போல், காந்திக்கும், அம்பேத் கருக்கும், பெரியாருக்கும் வாரிசுகள் வாய்க்காமற் போனதுதான் இந்த அரசியலின் மிக மோசமான அவலம்!

'ஆசிரியருக்கு ஒரு மாணவன் செலுத்தும் நன்றியின் நல்லடையாளம், அந்த ஆசிரியரை விட அனைத்து வகையிலும், தான் சிறந்து விளங்குவதுதான். அதைத் தான் சாக்ரடீஸின் மாணவர் பிளேட்டோ சாதித்தார்' என்கிறார் ஜூலியஸ் ஸ்டென்செல். 'பளிங்கு போல் அவர்

தூய்மையானவர். ஐயத்துக்கு அப்பாற்பட்ட உண்மையானவர். நாடு அவரிடம் பாதுகாப்பாக இருக்கும்!' என்று நேருவைப் புகழ்ந்தார் காந்தி. ஆனால், நேரு காந்தியத் திட்டங்களைக் கை விட்டார். அதிகாரப் பரவலும், கிராமப் பொருளாதாரமும் காந்தியக் கனவு. வலிமையான மத்திய அரசும், கனரகத் தொழிற்சாலைகளும் நேருவின் நோக்கம். இருவரின் லட்சியங்களும் நேரெதிர் பாதைகள். ஆனால், நேருதான் காந்தி கண்டெடுத்த அரசியல் வாரிசு. இது ஒரு வரலாற்று அதிசயம்!

மகாத்மாவின் 78-வது பிறந்த நாள். வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. தேசப் பிரிவினையில் நெஞ்சம் நொந்திருந்த காந்தி, 'இரங்கற் செய்திகள் இன்று அனுப்பப்பட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். வேதனையைத் தவிர என்னுள் வேறொன்றும் இல்லை. நான் சொன்னதையெல்லாம் ஏற்று நடந்தவர்கள் இன்று என்னுடன் இல்லை. என் குரல் தனிமைப்பட்டு விட்டது. நான் 125 ஆண்டுகள் வாழ்ந்து சேவையாற்ற

விரும்பினேன். ஆனால், இப்போது வாழ்வதில் எனக்கு விருப்பமில்லை. வெறுப்புக்கும் வன்முறைக்கும் இடையில் நான் ஏன் வாழ வேண்டும்?' என்று புலம்பினார்.

'கட்சித் தலைமையைக் கலந்து நேரு ஆட்சி நடத்தவில்லை. இந்த நிலையில் பதவியில் பொம்மையாக அமர்ந்திருக்க முடியாது!' என்று காந்தியிடம் சொல்லிவிட்டு அடுத்த கணமே காங்கிரஸ் தலைவர் பொறுப்பிலிருந்து ஆசார்ய கிருபளானி விலகினார். அவர் விலகிய பின்பு, ஆசார்ய நரேந்திர தேவ் என்னும் அப்பழுக்கற்ற சோஷலிச சிந்தனையாளரை மகாத்மா அகில இந்திய காங்கிரஸின் தலைவர் பதவிக்குப் பரிந்துரை செய்தார். நேருவும், பட்டேலும் காந்தியின் பரிந்துரையைப் புறந்தள்ளி விட்டு, ராஜேந்திர பிரசாத்தை அவர்கள் விருப்பப்படி தலைவராக்கினர். காந்தி உயிரோடு இருந்தபோதே, காங்கிரஸ், அவரைக் கைகழுவி விட்டது. அப்படியிருக்க, இன்றுள்ள சோனியா காந்தியின் சீடர்கள் மகாத்மா காந்தியை எப்படி மனதில் நிறுத்துவார்கள்? மகாத்மா

காந்தி நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார். ஆனால், இன்றுள்ள காங்கிரஸ்காரர்களுக்கு எம்.எல்.ஏ., எம்.பி., மந்திரி பதவியெல்லாம் சோனியா காந்தியும், ராகுல் காந்தியும்தானே பெற்றுத் தர முடியும்! அதனால், பிரியங்கா காந்தி யின் குழந்தைகளுக்குக் கூடக் கூச்சமில்லாமல் 'கட் அவுட்' வைக்கத் தயாராகி விட்டவர்கள் பிடியில் இருக்கும் காங்கிரஸ், காந்திய வழியில் எப்படிப் பயணிக்கக் கூடும்?

சுயமரியாதை இயக்கம் கண்ட பகுத்தறிவுப் பகலவன் பெரியாருக்கு வாய்த்த வாரிசுகள் குறித்துப் பெரியார், தான் வாழ்ந்த காலத்திலேயே தீர்க்கமாக அறிந்து வைத்திருந்தார். 'எவனைப் பக்குவம் பண்ணினாலும், இறக்கை முளைத்தால் ஓடி விடுகிறான். நான் பேசிய பேச்சுகளும், கருத்துகளும், எழுதிய புத்தகங் களும், கட்டுரைகளும்தான் எனக்குப் பிறகு எனது இயக்கத்தை வழி நடத்திச் செல்லும். நான் பிடித்து வைக்கிற மாதிரி ஆள் ஒன்றும் தோன்றவில்லை. புத்த மதத்துக்கு புத்தன் என்று ஒருவர் வந்தார். அவர் மறைந்தார். அவருக்குப் பின்

யாரும் வரவில்லையே! அவர் கொள் கையைப் பின்பற்றி நடந்த மக்களைத்தான் பார்க்கிறோம். பகுத்தறிவுக்காரர்கள் அப்படித் தான் 4+4=8 என்று சொல்லிக் கொடுத்து விட்டால், வாத்தியார் செத்துப் போனாலும், அதன் பின் வாத்தியாருக்கு என்ன அவசியம்? என்றைக்கும் 4+4=8 தானே! அது போல் இதற்கு (திராவிடர் கழகம்) பகுத்தறிவுதான், பகுத்தறிவுக் கொள்கைதான் பரம்பரை. எனக்கு ஒரு சமயம் குறை ஏற்படலாம். சுயமரியாதை இயக்கத்துக்குக் குறை ஏற்படாது' என்று பகிரங்கப் பிரகடனம் செய்தவர் பெரியார். அவரது அந்த கசப்பான அவநம்பிக்கை, தீர்க்கதரிசனமானது என்றுதானே வாரிசுகள் சுட்டிக் காட்டுகின்றன!

தனி மனித ஒழுக்கமும், தன்னல மறுப்பும், நேர்மையும், எளிமையும் மக்கள் நலனில் முழுமையான நாட்டமும், ஊழலற்ற நிர்வாகத் திறனும் நிறைந்த தலைவர்கள் இன்று ஏன் நமக்கு வாய்க்கவில்லை? இது குறித்து மிகுந்த சமூகப் பொறுப்பு உணர்வுடன் எத்தனை அறிவுஜீவிகள் யோசிக்கிறார்கள்? ஆட்சி நாற்காலியில்

அமர்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கேற்ப இச்சகம் பேசி, கைகட்டி வாய் பொத்தி அடிமை சேவகம் செய்யவும், வாய் வலிக்க வாழ்த்துப்பா வாசிக்கவும் வரிசையில் நிற்கும் இந்த அறிவு ஜீவிகளால், பாமர மக்களுக்கு எப்படி விழிப்பு உணர்வு ஏற்படும்? வாழ்க்கை சுகங்களுக்காக, அறிவை அடகு வைக்கும் நடிப்பு சுதேசிகளைப் பார்த்து நெஞ்சம் புண்ணானதால்தான் மகாகவி பாரதி, 'படித்தவன் சூதும் வாதும் பண்ணினால் போவான், போவான், ஐயோ என்று போவான்' என்று சபித்தான். ஆனால், அவன் சாபம் பலித்ததாகத் தெரியவில்லை!

சென்ற தலைமுறை அகில இந்திய அரசியலில் மகாத்மா காந்தி, நேரு, வல்லபபாய் பட்டேல், அபுல்கலாம் ஆசாத், அம்பேத்கர் போன்ற மகத்தான தலைவர்களையும், தமிழக அரசியலில் ராஜாஜி, பெரியார், காமராஜர், ஜீவானந்தம், அண்ணா போன்ற எளிமையான, ஊழலற்ற மக்களுக்காக அரசியல் தளத்தில் தன்னலமற்றுப் பணியாற்றும் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்ட அரிய தலைவர்களையும்

பெற்றுச் சிறந்தது. ஆனால் இன்று...? 'மக்களுடைய நலன்களுக்காகப் பாடுபடுவதை விட... அழகு மிக்கதும், அற்புதமானதுமான எதுவும் அகிலத்தில் இல்லை' என்று அறிவித்து, வியட்நாம் மக்களுக்காகவே தன் வாழ்வை முற்றாக அர்ப்பணித்த ஹோசிமின் போன்ற தலைவர்கள் இந்த மண்ணில் இன்று யார் இருக்கிறார்கள்?

-

**எங்கே போகிறோம் நாம்...**




கட்சி

*'துதிக்கையைப்*

*பிச்சைப் பாத்திரமாய் மாற்றிவிட்ட*

*யானைப் பாகர்கள்!*

*சீட்டெடுப்பது*

*தங்களின் கெட்டகாலம் என்பதைக்*

*கிளிகள் அறியாமல் பார்த்துக் கொள்கிற*

*சோதிடர்கள்.*

**- நெல்லை ஜெயந்தா**

**ஆ**ட்சிமுறை குறித்து ஆயிரம் பரிசோதனை முயற்சிகள் நடந்து முடிந்த பின்பு, உலகின் பெரும்பான்மை நாடுகள் மிகக் குறைந்த தீமையுள்ள ஜனநாயக முறையை அங்கீகரித்தன. 'உள்ள தீமைகளில் சிறிய தீமை ஜனநாயகம்!' என்றார் சர்ச்சில். 'நன்மைக்கும், தீமைக்கும் இடையில் எதைத் தேர்வு செய்வது என்ற நிலையில் நாம் இல்லை. நமக்கு வாய்த்திருப்பதெல்லாம், இரண்டு தீமைகளில் எந்த ஒன்றைத் தேர்வு செய்வது என்பதே. நாம் பெரிய தீமையைப் புறக்கணித்துவிட்டு, சிறிய தீமையைத் தேர்வு செய்ய உதவுவதே ஜனநாயகம்!' என்று விளக்கினார் முதிர்ந்த காந்தியவாதி கிருபளானி.



ஒவ்வொரு நிறையிலும் நம் கண்களுக்குப் புலப் படாமல் ஒரு குறை ஒளிந்திருக்கும்; ஒவ்வொரு குறையிலும் அதேபோன்று ஒரு நிறை மறைந்திருக்கும். பூரணத்துவம் என்பது இயற்கையின் படைப்பில் இல்லவே இல்லை. ராமனிலும் சுருதி பேதம் உண்டு. ராவணனிலும் சுகராகம் உண்டு. 'அரசியல் அறிவு மிக்க

உயர்குடி மக்களின் ஆட்சியே உன்னதமானது!' என்று பிளேட்டோ நம்பினார். 'நடுத்தர வர்க்கம் மூலமே நல்லரசு அமையும்...' என்று அரிஸ்டாட்டில் அறிவுறுத்தினார். இந்த இரண்டு சிறந்த சிந்தனையாளர்களும் ஜனநாயக

முறையை ஏற்கவில்லை. 'பாமர கும்பலின் மோசமான ஆட்சியே ஜனநாயகத்தில் அமையும்' என்று அரிஸ்டாட்டில் கடுமையாக விமர்சித்தார். அந்த விமர்சனம் மிகவும் நியாயமானது என்று நிரூபித்த 'பெருமை' நமக்கே உண்டு!

'மக்களால், மக்களுக்காக ஏற்படுத்தப்படும் மக்களுடைய அரசு' என்று ஜனநாயகத்துக்கு விளக்கம் அளித்தவர் ஆபிரகாம் லிங்கன். 'அப்பாவி மக்களை அரசியல்வாதிகள் சுரண்டுவதற்கு வசதியான வாகனம் ஜனநாயகம்' என்பதுதான் இந்திய அரசியலின் இப்போதைய யதார்த்தம். கட்சிகளற்ற ஜனநாயகம் ஓர் உயர்ந்த 'உட்டோப்பியன்' கனவு. அதாவது போகாத ஊருக்கு இல்லாத வழி! கட்சித் தூண்களின் மீதுதான் நம் ஜனநாயக மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. தகுதியற்றவர்களிடம் ஆட்சி அதிகாரம் வந்து சேர, கட்சிமுறை வழிவகுக்கிறது. சமுதாயத்தில் மக்களிடையே மோதலும் முரணும் கட்சிகளால்தான் வளர்த்தெடுக்கப்படுகின்றன. சாதி சச்சரவுகளும், மத வேற்றுமைகளும் கட்சிகளால் தூண்டப்படுகின்றன. ஆட்சித் தலைமையின் அவசியமற்ற

ஆடம்பர நடவடிக்கைகளும், உற்பத்தி சம்பந்தப்படாத செலவினங்களும் நமது பொருளா தாரத்தைப் பாழ்படுத்துகின்றன.

மார்க்ஸ் மக்களை இரு வேறு வர்க்கங்களாகப் பகுத்துப் பார்த்தார். தொழிலாளி வர்க்கம் எப்படி, முதலாளி வர்க்கத்தால் சுரண்டப்படுகிறது என்பதைத் தனது மூலதனத்தில் ஆராய்ந்தார். ஆனால், முதலாளி களையும், தொழிலாளிகளையும் ஒரே நேரத்தில் சுரண்டிக் கொழுக்கும் 'அரசியல்வாதி வர்க்கம்' பின்னாளில் காளான்களாகக் குடை விரிக்கும் என்பதை அவரால் அன்று யூகிக்க முடியவில்லை. ஜனநாயகத்தின் ஆணிவேராக இருக்க வேண்டிய கட்சி அரசியல், இன்று மலினமான மனிதர்களின் சூதாட்டக் களமாகிவிட்டது. தேர்தல்கள் தார்மீக நெறிகளுக்கு எதிரான தில்லுமுல்லுகளால் நம்பகத்தன்மையை இழந்துவிட்டன. தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், வாக்களித்தவர்களுக்கு விசுவாசமாக இல்லாமல், கட்சித் தலைமையிடம் கைகட்டி நிற்கின்றனர். கட்சித் தலைமையின் பலவீனத்தைப்

பயன்படுத்தி ஆதாயம் தேடும் உட்குழுக்கள் உருவாகி, அவற்றின் விருப்பத்துக் கேற்ப ஆட்டிப்படைக்கின்றன. வெளிப்படையாக பகிரங்கப்படுத்த முடியாத பணிகளுக்காக, அரசியல் கட்சிகள் கிரிமினல் குற்றவாளிகளை அரவணைக்கின்றன. அரசியல்வாதிகள் - அதிகாரிகள் - கிரிமினல்கள் சேர்ந்து ஒட்டுமொத்த சமுதாயத்தையும் திட்டமிட்டுச் சுரண்ட ரகசியக் கூட்டணியை அமைக்கின்றனர். கட்சி அரசியலால் கடுமையாக பாதிக்கப்படுவது பரிதாபத்துக்கு உரிய பொதுஜனம்தான். வேலியே பயிரை மேய்வதற்குச் சரியான சான்று இங்குள்ள கட்சி அரசியல்தான்.

இந்திய அரசியல் களத்தில் முதன் முதலில் கண் விழித்தது காங்கிரஸ் இயக்கம். 1885-ல் பிறந்த காங்கிரஸுக்கு இன்று 125 வயதாகப் போகிறது. அதற் கடுத்து 1906-ல் மதச் சாயத்துடன் மலர்ந்தது முஸ்லிம் லீக். வெள்ளையர் ஆட்சிக்கு வெண்சாமரம் வீசும் அமைப்பாக ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம், வில்லியம் வெட்டர்பன் என்ற இரண்டு ஆங்கிலேயர்களால்

ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ், காலநடையில் வெள்ளை யரை வெளியேற்றும் விடுதலை இயக்கமாக வீறு கொண்டது. சிறுபான்மை முஸ்லிம்களின் உரிமைகளைக் காக்க உயிர் தரித்த முஸ்லிம் லீக், இந்து வகுப்புவாத அமைப்புகளின் தவறான அணுகுமுறைகளால், பாகிஸ் தான் பிரிவினைக்குப் பாதை போட்டது. கம்யூனிஸ்ட் இயக்கம் 1925-ல் கான்பூரில் புரட்சிகர வாசத்துடன் வந்து சேர்ந்தது. இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று எம்.என்.ராய் புகழப்பட்டாலும், கான்பூரில் முதல் கம்யூனிஸ்ட் மாநாட்டைத் தொடங்கி வைத்தவர் தமிழர் சிங்காரவேலர் என்ற செய்தி பெருமைக்கு உரியது.

அமெரிக்காவில் இரண்டு கட்சிகள். இங்கிலாந்தில் மூன்று கட்சிகள். மியான்மரில் இருநூறு கட்சிகள். நம் இந்தியாவில் எண்ணிக்கையில் அடங்காது எத்தனையோ கட்சிகள்! இங்கே மனிதர்கள் மானம் மறைக்க கோவணத்துக்குத் துணியில்லாமல் தலை தாழ்ந்து நிற்கின்றனர். ஆனால், கொடி மரங்களில் பல்வேறு வண்ணங்களில் விதம் விதமாகக் கட்சிக் கொடிகள்

விண்ணளாவப் பறக்கின்றன. நம் பாரதத்தில் ஒவ்வொரு வைகறைப் பொழுதும், ஒரு புதிய கட்சியின் பூபாளத்தோடுதான் புலர்கிறது. ராஜாஜி, வல்லபபாய் படேல், ராஜேந்திர பிரசாத் போன்ற வலதுசாரித் தலைவர்களோடு சமரசம் செய்து கொள்ள முடியாத ஜெயபிரகாஷ் நாராயணன், நரேந்திர தேவ், லோகியா போன்ற சோஷலிஸச் சிந்தனையாளர்கள் காங்கிரஸுக் குள்ளேயே 'காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி' என்ற பெயரில் இயங்கினர். சுதந்திரத்துக்குப் பின்பு சித்தாந்த அடிப்படையில் சோஷலிஸ்ட்கள் காங்கிர ஸிலிருந்து வெளியேறி இந்திய சோஷலிஸ்ட் கட்சியை உருவாக்கினர். முதலாளித்துவத்தை எதிர்த்ததோடு, மார்க்ஸியத்திலிருந்தும் முரண்பட்ட சோஷலிஸ்ட்கள் தனிக்கட்சி கண்டதில் தவறில்லை. ஆனால், முதல் பொதுத் தேர்தலில் 12 எம்.பி-க்களை மட்டும் பெற்று சோஷலிஸ்ட் கட்சி மோசமான தோல்வியை அடைந்ததும், ஜெ.பி-யிடம் கருத்து வேறுபாட்டால் லோகியா சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியை

உருவாக்கியபோது, இந்திய அரசியலில் சித்தாந்த வேறுபாடின்றி தனிநபர் காழ்ப்பு உணர்வில் அரசியல் கட்சிகள் அரங்கேறும் அவலம் தொடங்கியது. அந்த அவலத்தின் உச்சம்தான் தமிழகத்தின் இன்றைய அரசியல் போக்கும் நோக்கும்.

சென்னை மாகாணத்தில் பிராமண ஆதிக்க எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு, காலத்தின் தேவையை நிறைவு செய்ய 1916-ல் தென்னிந்திய நல உரிமை சங்கம் தோன்றியது. உயர்கல்வி பெற்ற பிராமணர்கள் நிர்வாகத்திலும், நீதித் துறையிலும் நீக்கமற நிறைந்திருந்த நேரத்தில் தியாகராயர், 'பிராமண ரல்லாதார் கொள்கை அறிக்கை'யை வெளியிட்டார். 'ஐ.சி.எஸ். தேர்வில் வெற்றி பெற்ற 16 பேரில் 15 பேர் பிராமணர்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் 650 பேர்களில் 452 பேர் பிராமண சமுதாயத்தவர். அகில இந்திய காங்கிரஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவரில் நால்வர் பிராமணர்' என்று அந்த அறிக்கையில் அவர் பட்டியலிட்டார். தென்னிந்திய நல உரிமை சங்கம்தான்

நீதிக்கட்சியாக உருமாறியது. பிராமண ஆதிக்கத்தை எதிர்த்த நீதிக்கட்சி, பிராமணரல்லாத உயர்சாதி இந்துக்களின் நலனில் அதிக நாட்டம் காட்டியது. நிலக்கிழார்களும், பெருந்தனக் காரர்களும், உயர்சாதி மக்களுமே அக்கட்சி யில் மூலவர்களாக விளங்கினர். தமிழரைவிட நீதிக்கட்சியால் நிறைய நன்மையை அடைந் தவர்கள் தெலுங்கரே. அக்கட்சி ஆண்டபோது அமைந்த அமைச்சரவைகளை ஒரு பருந்துப் பார்வை பார்த்தால், இந்த உண்மை புரியும்.

'ஆங்கிலேயர் ஆட்சியின் செல்வாக்கைக் குறைக்கும் எந்தத் திட்டத்தையும் நாங்கள் விரும்பவில்லை. இன்று நாடு இருக்கும் நிலையில் வெவ்வேறு சாதியினர், வகுப்பினர்களுக்கு நீதி கிடைக்கவும் அவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும், தேசிய ஒருமைப்பாட்டை உண்டாக் கவும் கூடியவர்கள் ஆங்கிலேயர்தான்' என்று கொஞ்சமும் கூச்சமின்றி 'ராஜவிசுவாசம்' காட்டிய நீதிக்கட்சிதான் இன்றைய திராவிடக் கட்சிகளின் மூல ஊற்று. இட ஒதுக்கீடு குறித்து அரசாணை பிறப்பித்ததும்,

கோயில் சொத்துகளைப் பாதுகாக்க அறநிலைய சட்டம் இயற்றியதும் நீதிக்கட்சியின் பாராட்டுக்கு உரிய சாதனைகள். நீதிக்கட்சி 'பிராமணரல்லாதார் நலன்' என்ற ஒரு கொள் கையோடு நடந்தது.

சுயமரியாதை இயக்கம் (திராவிடர் கழகம்) பெரியார் தலைமையில் சகல தளங்களிலும் தாழ்ந்திருந்த தமிழினத்தை மீட்டெடுக்கப் போரா டியது. ஆனால், ஜெ.பி-யிடம் கருத்து மாறுபாடு கொண்டு, எந்தக் கொள்கை வேற்றுமையுமின்றி லோகியா தனிக்கட்சி கண்டது போல், பெரி யாரின் கொள்கைகளில் மாறுபடாமல் அவரது அகவாழ்வில் நடந்தேறிய திருமணத்தைக் காரண மாக்கி அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தார்.

தமிழகத்தில் 1919 முதல் 1925 வரை வெகுமக்க ளிடம் காங்கிரஸை கொண்டு சேர்த்த பெருமை பெரியாருக்கு உண்டு. காந்திய வழியில் வீதிவீதியாக கதர் மூட்டையைத் தோள்களில் சுமந்தவர் பெரியார். மதுக்கடை முன்பு மறியல் நடத்தியவர் அவர். தன் மனைவியையும், சகோதரியையும் சிறை

செல்ல வைத்தவர்; கேரளாவின் வைக்கம் நகரின் கோயில் வீதியில் தாழ்த்தப்பட்டவர் தலைநிமிர்ந்து நடக்க, காராக்கிருகத்தின் கம்பிகளைத் தழுவியவர்; பெரும் பணத்தை ஈட்டிக் கொடுத்த வணிகத்துக்குப் பூட்டுப் போட்டு, ஈரோடு நகராட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து பல்வேறு பதவிகளையும் துச்சமெனத் தூக்கியெறிந்து, பொதுவாழ்வைப் புனிதப்படுத்தியவர். வகுப்புவாரி பிரதிநிதித்துவ வழிக் கதவைத் திறக்க மறுத்த காங்கிரஸிலிருந்து 1925-ல் வெளியேறி, மக்களை மானவுணர்வு உள்ளவர்களாக மாற்ற இறுதி நாள் வரை ஓயாமல் சலிப்பின்றி உழைத்தவர். வயோதிகத்தில் குடலிறக்க நோய் தந்த வலியை மீறி, மூத்திரச் சட்டியுடன் மேடை யில் அமர்ந்து, 95 வயதில் தமிழரின் இழிவுகளைத் துடைத்தெறிய சங்கநாதம் செய்த சிங்கம் பெரியார். அவருக்கு இணை சொல்ல இன்று வரை இந்த மண்ணில் எந்த மனிதனும் பிறக்கவில்லை!

'ஈ.வே.ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகிலுள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல்

மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு, அதே பணியாக இருப்பவன். அந்தத் தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ... இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் இல்லாததாலும், பகுத்தறிவையே அடிப் படையாகக் கொண்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதாலும் நான் அத்தொண்டுக்குத் தகுதியுடையவன் என்றே கருதுகிறேன்...' என்று வாக்குமூலம் வழங்கியவர் பெரியார். அந்த பெரியாரை விட்டுப் பிரிந்து கொட்டும் மழையில் ராயபுரம் ராபின்சன் பூங்கா அருகில், 1949 செப்டம்பர் 17 (பெரியார் பிறந்த நாள்) அன்று 'கண்ணீர்த்துளி'களுடன் தி.மு.கழகம் கண்டார் அண்ணா.

ஜெ.பி-யை விட்டு விலகி சம்யுக்த சோஷ லிஸ்ட் கட்சியை உருவாக்கிய லோகியாவின் தனிவாழ்வு தூய்மையானது. வங்கிக் கணக்கில் ஒரு பைசாவும் இல்லாமல் வாழ்ந்து மறைந்த சோஷலிஸ சிற்பி அவர். ஆனால், லோகியாவின் வாரிசுப் பரம்பரையில்

வந்தவர்தான் முலாயம் சிங். சோஷலிஸ்ட் இயக்கத்துக்கு எவ்வளவு பெரிய வீழ்ச்சி! பெரியாரிடமிருந்து பிரிந்து தனிக்கட்சி நடத்தி, ஆட்சியில் அமர்ந்த அண்ணா, ஊழலின் நிழல் படாதவர்; எளிமை யாக வாழ்ந்தவர். ஆனால், அவருக்கு வாய்த்த வாரிசுகளின் வாழ்க்கை முறை எவ்வளவு வித்தி யாசமானது!

மேலான சமூக லட்சியங்களை மக்களிடம் முன்னெடுத்துச் செல்லும் முனைப்போடு பிறந்த இயக்கங்கள் இன்று செயலற்றுப் போய்விட்டன. கோட்டை நாற்காலிக் கனவுகளுடன் பிறந்த கட்சிகள், கொள்கைகளைக் கைவிட்டு விட்டன. கட்சி அரசியலில் இன்று கைம்மாறு கருதாத, சுயலாபம் தேடாத, தன்னலமற்ற தேவமனிதர்களைத் தேடிப் பிடிப்பது எளிய செயல் அன்று. ஒவ்வொரு கட்சியும் ஆட்சி நாற்காலியில் ஆசை வைப்பது மக்களின் ஏழ்மையைத் தீர்ப்பதற்கு அல்ல; அக்கட்சிகளின் தலைவர்களை பங்களா பகட்டுகளோடு பார்ப்பதற்காகவே!

-



## கொள்கை

4 ஓர் இயக்கம் ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை நனவாக்கும் வரை நடைபோடும். அதன் லட்சியத்தை அடைந்தவுடன், அதுவரை அது மேற்கொண்ட பயணத்தின் வீரியமும் முடிந்துபோகும். விடுதலை வேள்வி வளர்த்தெடுக்கப்பட்டபோது, அடிமைத்தளையிலிருந்து இந்தியாவை விடுவிப்பது ஒன்றுதான் காங்கிரஸின் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கம் நிறைவேறியதும், 'காங்கிரஸை கலைத்துவிட வேண்டும்!' என்றார் காந்தி. ஆனால், நேருவும், பட்டேலும் மற்ற காங்கிரஸ் தலைவர்களும் காந்தி சொன்னதைக் காதில் வாங்கவில்லை. காலப்போக்கில் காங்கிரஸ் ஒரு பேரியக்கம் என்ற பெருமையிழந்து, அரசியல் ஆதாயம் தேடும் கட்சியாகச் சிறுமைப்பட்டுவிட்டது. கொண்ட

கொள்கைக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்த தலைவர்களின் லட்சியப் பாசறையாகப் பரிணமித்த பழைய காங்கிரஸ், பதவி தரும் சுகங்களுக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராகிவிட்ட மலினமான மனிதர்களின் அதிகார வேட்டைக் களமாக இன்று இழிந்துவிட்டது. இன்றுள்ள காங்கிரஸில் மன்மோகன் சிங்குகள், ஏ.கே.அந்தோணிகள் மிகக் குறைவு. ஆனந்தமயமான திவாரிகளே அதிகம். இயக்கம் என்பது வழக்கமான ஒரு கட்சியானதுதான் இந்த இழிந்த நிலைக்குக் காரணம்.



தன்னலமற்ற தலைவர்களும், தொண்டர்களும் நிறைந்த இயக்கத்துக்கு ஒன்றே லட்சியம். ஆனால், பல தரப்பட்ட பண்புகள் கொண்ட மனிதர் கள் வடிவமைக்கும் கட்சிகளுக்குப் பல கொள்கைகள் இருக்கும்.

'இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும் சமவுரிமையும், சமவாய்ப்பும் இருக்கவேண்டும். எல்லா மக்களும் தங்கள் விருப்பப்படி வளர்ச்சியடைவதற்கு முழுமையான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு பிரதேசமும் அதன் வாழ்க்கையையும், கலாசாரத்தையும் விருத்தி செய்வதற்கு வேண்டிய சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும். இந்த நோக்கம் சாத்தியப்படுவதற்கு மொழிவாரியாகவும், கலாசார அடிப்படையிலும் மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும். சமூகநீதிக்கும், சம அந்தஸ்துக்கும் குறுக்கே நிற்கும் தடைகள் அகற்றப் பட வேண்டும். இவையே காங்கிரஸின் கொள்கைகள்' என்று அக்கட்சி 1946-ல் தேர்தல் அறிக்கையில் தெளிவு படுத்தியது.

'அடிப்படை ஜீவாதார உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் அரசியல் சட்டத்தின் மூலம் சுதந்திர ஜனநாயக

அரசு அமைய வேண்டும். சட்டமன்றங்கள், மக்களின் வாக்குரிமையால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கூட்டாட்சி அமைப்பில் மாநிலங்களுக்கும் அதிகபட்ச சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். மாநிலங்கள் விட்டுத்தரும் குறைந்த அதிகாரத்தையே மத்திய சமஷ்டி அரசு ஏற்கவேண்டும். இந்தியக் கூட் டாட்சியில், விருப்பத்தின் அடிப்படையில் பல்வேறு பிரதேசங்கள் இணைந்து யூனியனாகச் செயல்படலாம்' என்று முதலில் கொள்கை வகுத்த காங்கிரஸ், பின்பு முற்றிலும் முரணாகச் செயல்படத் தொடங்கியது. இன்றைய காங்கிரஸ், மாநிலங்களின் அதிகாரங்களைக் குறைப்பதிலும், மத்தியில் அதிகாரங்களை அளவுக்கு மேல் குவிப்பதிலும் திட்டமிட்டுச் செயல்படுகிறது. பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதமிருந்து உயிர்நீக்கும் வரை அது மொழிவாரி அடிப்படையில் மாநிலங்களைப் பிரிக்க முன்வரவில்லை. 'கால மாற்றத்துக்கேற்ப கோலம் மாறும். கோலமாற்றத்துக்குத் தக்கபடி கொள்கை மாறும்' என்பதுதான் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் உள்ள ஒரே

இலக்கணம். கொள்கை மாற்றங்களில் திராவிடக் கட்சிகளின் சாதனைகளை மிஞ்ச இந்தியாவில் வேறெந்தக் கட்சியாலும் இயலாது!

புதிய இயேசுவை
எதிர்பார்த்துக் காத்திருக்கிறது
பழைய சிலுவை!
புதிய வலைகளோடு
புறப்படுகிறான் பழைய சாத்தான்!
புதிய ஒப்பனைகளோடு
சந்தையில், நிற்கின்றனர்
பழைய வேசிகள்!

– அப்துல் ரகுமான்

வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பொதுவாழ்வில் அடியெ டுத்து வைத்த பெரியார், காங்கிரஸில் இணைந்து அதை வெகுமக்கள் இயக்கமாக வளர்த்து, தமிழ்நாடு காங்கிரஸின் தலைவராகவும் பணியாற்றியவர். சமூக நீதிக் கான சரியான கருவியாக அந்த இயக்கம் செயற்படாத நிலையில் அதிலிருந்து விலகி சுயமரியாதை இயக்கம் கண்டவர் அவர். 'காந்தி ஒழிய வேண்டும் , காங்கிரஸ் ஒழிய வேண்டும். பார்ப்பான் ஒழிய வேண்டும்' என்று ஓயாமல் குரல் கொடுத்த பெரியார், திருவாரூரில்

1940-ல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில், 'திராவிடர்களுடைய கலை, நாகரிகம், பொருளாதாரம் ஆகியவை முன்னேற்றமடைவதற்கு, பாது காக்கப்படுவதற்குத் திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம் இந்திய மந்திரியின் நேரடிப் பார்வையின் கீழ் ஒரு தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது' என்று பிரகடனம் செய்தார். அந்தத் தீர்மானத்தை விரிவாக விளக்கி 'திராவிட நாடு' கொள்கையை வலியுறுத்தி அன்று வழிமொழிந்து பேசியவர் பெரியாரின் படைத்தளபதி அண்ணா.

சேலத்தில் 1944-ல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் 'அண்ணாதுரை தீர்மானம்' அரங்கேறியது. ஆங்கிலேய அரசுக்கு ஆதரவாக இருந்த போக்குக்கு, பகிரங்கமாக வருத்தம் தெரிவிக்கும் தொனியில் அந்தத் தீர்மானம் அமைந்தது. வெள்ளையர் தந்த கௌரவப் பட்டங்கள் கைவிடப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. 'திராவிடர் கழகம்' என்று புதிய பெயர் அன்றுதான் சூட்டப்பட்டது. 'திராவிட நாடும், திராவிட நாட்டு மக்களும்,

திராவிட நாட்டவரல்லாத அந்நியர்களின் சுரண்டல்களிலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட வேண்டும்' என்று முழங்கப்பட்டது.

பெரியாரின் தன்னலமற்ற பொதுவாழ்வு முற்றாகத் தேர்தலைப் புறக்கணித்து, ஆட்சியதிகாரத்தை விட்டு விலகி நின்றது. ஆனால், அண்ணா 1935-ல் சென்னை நகராட்சி உறுப்பினர் தேர்தலில் நின்று தோற்றவர். தேர்தல் அரசியலில் அவருக்கு உள்ளார்ந்த ஈடுபாடு இருந்ததால், பெரியாரின் பாசறையில் இருந்து விடுபடுவதற்கான காலத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தார். அவர் எதிர்பார்த்தபடியே காலமும் கனிந்து கைகொடுத்தது.

'நாணயஸ்தர்கள் என்றும், இயக்கத்தினரிடமும் என்னிடமும் உண்மையான பற்றுடையவர்கள் என்றும் நான் நம்பின தோழர்கள் பலர் ஆயிரக்கணக்கில் ரூபாய்களை மோசம் செய்துவிட்டதைக் கண்டும், கண்டுபிடித்தும் வருகிறேன். சிலர் இன்னமும் என்னை மோசம் செய்துவருவதாக ஐயம் கொண்டும், உறுதி

கொண்டும் வருகிறேன்' என்று அறிவித்த பெரியார், தன் வாரிசாக நம்பிக்கைக்குரிய ஒருவரைத் தத்தெடுக்க முடிவு செய்தார். ஆறாண்டுகளுக்கு மேல் தனது அணுக்கத் தொண்டராக இருந்து, தனது நலனில் நாட்டம் காட்டிய மணியம்மையை வாரிசாக்க விரும்பினார் பெரியார். அந்நாளில் இந்து சட்டப்படி ஒரு பெண்ணை வாரிசாகத் தேர்ந்தெடுக்க இயலாது என்பதனால் மணியம்மையை, பெரியார் மனைவியாக்கிக் கொண்டார். அதற்கு முன்பு திருவண்ணாமலையில் பாதாள லிங்க கோயிலைத் திறந்து வைக்க வந்த இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரல் ராஜாஜியைத் தேடிச் சென்று அவருடன் ஆலோசனை நடத்தினார் பெரியார்.

திருமணம் பதிவு செய்யப்பட்டபோது பெரியாருக்கு 70 வயது. மணியம்மைக்கு 31 வயது. உடல் இச்சைக்காகப் பெரியார் மணியம்மையின் கரம் பிடிக்கவில்லை. ஆனால், தனிக்கட்சி தொடங்க ஆர்வத்துடன் காத்திருந்த அண்ணா, இந்தப் பொருந்தாத திருமணத்தைப் பொருத்தமாகக் கையிலெடுத்தார். கண்ணீர்த் துளிகளோடு பெரியாரை

விட்டுப் பிரிவதாக அண்ணா அறிவித்தார். பெரியார் என்ற ஆலமர நிழலில் பெரிதாக வளர முடியாது என்று உணர்ந்தவர்கள், அரசியல் ஆசையுடன் அண்ணாவைத் தொடர்ந்தனர். ராயபுரம் ராபின்சன் பூங்கா அருகில் கொட்டும் மழையில் 1949 செப்டம்பர் 17-ம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் மலர்ந்தது. எந்தக் கொள்கை வேறுபாடும் இல்லாமல் ஒரு தலைவரின் தனிவாழ்க்கையை விமர்சனத் துக்குள்ளாக்கி, அரசியலரங்கில் ஒரு புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

திராவிடர் கழகமும், தி.மு.கழகமும் ஒரே கொள்கைக்காக இயங்கும் 'இரட்டைக்குழல் துப்பாக்கி' என்றார் அண்ணா. வாக்குகளைப் பெறும் நோக்கமில்லாத பெரியார் எதற்காக வும் தனது கொள்கைகளில் இறக்கும் நாள் வரை சமரசம் கொள்ளவில்லை. ஆனால், ஆட்சி நாற்காலியின் மூலமே நினைத்ததை சாதிக்க முடியும் என்று நினைத்த அண்ணா, பாமர மக்களின் ஆதரவைப் பெறவும் படித்தவர்களைத் தன் பக்கம் திருப்பவும் பார்ப்பன சமூகத்தின் வெறுப்பைத் தணிவிக்கவும் சமரசங்களில் ஈடுபட்டார். பெரியாரின்

கடவுள் மறுப்புக் கொள்கை அண்ணாவிடம், 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்று உருமாறிப் போனது. பார்ப்பன எதிர்ப்பு, பிராமணிய எதிர்ப்பு என்று மென்மை காட்டியது. திராவிடர் கழகத்தில் பிராமணர்கள் உறுப்பினராக முடியாது. தி.மு.கழகத்தில் அது போன்ற தடையெதுவும் கிடையாது. இந்தி எதிர்ப்பு, காங்கிரஸ் எதிர்ப்பு, திராவிடநாடு பிரிவினை மட்டும் தி.மு.க. மேடைகளில் கொள்கை முழக்கமானது.

'தேர்தலில் வேட்பாளராக நிற்க விரும்பும் அனைவரும், இனிமேல் இந்திய அரசமைப்புச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு, இந்திய அரசின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் பராமரிக்கத் தவற மாட்டோம் என்று உறுதிமொழி தரவேண்டும்' என்ற 16-வது சட்டத்திருத்தம் 1963 அக்டோபர் 5 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும், 1963 நவம்பர் மூன்றாம் நாள் திராவிட நாடு கோரிக்கையைக் கைவிடுவதாக தி.மு.கழக சட்டதிட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. 'அடைந்தால் திராவிட நாடு; இல்லையேல் சுடுகாடு' என்றவர்கள்

பிரிவினைவாதத்தைக் கைவிட்டு ஒரேநாளில் தேசியவாதிகளானார்கள். இந்தி எதிர்ப்பு குறித்து, ஆட்சிக் கட்டிலை இழக்கும்போது மட்டும் மறவாமல் நினைவுபடுத்திக் கொள்வார்கள். 'காங்கிரஸ் எதிர்ப்பு' ஒன்றுதான் 1971 வரை தி.மு.க-வின் கைகழுவப்படாத கொள்கையாக இருந்து வந்தது. 'காங்கிரஸ் கட்சி பிர்லா கட்சி, டாட்டா கட்சி, முத்தய்யா செட்டியார் கட்சி, வடபாதிமங்கலம் கட்சி, காங்கிரஸ் கட்சி பிராமணப் பாதுகாப்பு கட்சி, வடநாட்டுச் சுரண்டலை ஆதரிக்கிற கங்காணி கட்சி, காங்கிரஸ் கட்சி அடக்கு முறை ஒன்றையே நம்பி வாழ்கின்ற பண நாயகக் கட்சி' என்று எழுதிய அண்ணா தன் வாழ்காலம் வரை காங்கிரஸ் எதிர்ப் பாளராகவே இருந்தார்.



கலைஞர்தான் முதன் முதலில் 1971-ல் இந்திரா காங்கிரஸுடன் தேர்தல் கூட்டணி அமைத்தார். 'அன்னை' இந்திராதான் 1976 ஜனவரியில் கலைஞர் ஆட்சியைக் கவிழ்த்து, ஸ்டாலின் முதல் சிட்டிபாபு

வரையிலானவர்களை சிறையிலடைத்தார். மோகன்குமாரமங்கலத்தின் மூலம் எம்.ஜி.ஆரை பயன்படுத்தி 1972-ல் தி.மு.கழகத்தை உடைத்தவரும் இந்திரா காந்திதான். 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யவேண்டும்' என்று ஐயன் வள்ளுவன் சொன்னதை நெஞ்சில் நிறுத்தி, அந்த இந்திராவை, 'நேருவின் மகளே வருக; நிலையான ஆட்சியைத் தருக' என்று 1980-ல் வரவேற்ற கலைஞர் இன்று காங்கிரஸ் தயவில் அதிகாரபீடத்தில் அமர்ந்திருப்பது காலத்தின் கோலமா? சந்தர்ப்பவாதமா? கொள்கையற்ற அரசியலா? பெரியாரிடமிருந்து அண்ணா வும், அந்த அண்ணாவிடமிருந்து சம்பத்தும், கலைஞரிடமிருந்து எம்.ஜி.ஆரும், வைகோவும் பிரிந்து தனிக் கட்சி கண்டதற்கு எந்தக் கொள்கை வேற்றுமையோ, சித்தாந்தச் சிக்கலோ, தத்துவத் தகராறோ அடிப்படைக் காரணமில்லை. தமிழகத்தில் தி.மு.க. என்றும், அ.தி.மு.க. என்றும், ம.தி.மு.க. என்றும் மூன்று கட்சிக் கொடிகள் இன்று பறப்பதற்கும், அரசியல் ஆரோக்கியம் முற்றாக

அழிந்ததற்கும் தனிநபர் பிணக்கும் பகையும், பூசலுமே காரணம். இந்திய அரசியலில் கட்சிகள் அனைத்துக்கும் பொதுவான ஒரு கொள்கை மட்டும் உண்டு. அது, (to grab power and share the loot) அதிகாரத்தைக் கைப்பற்றுவதும்... அதில் வரும் லாபத்தைப் பிரித்துக் கொள்வதும்...

நல்ல பொதுவுடைமைக் கொள்கை!




**கட்சித்தாவல்**

'உலகம் உறங்கும் இந்த நள்ளிரவு நேரத்தில் நமது சுதந்திர வாழ்க்கை கண்விழிக்கிறது. சுதந்திரமும், அதிகாரமும் நம்முள் பொறுப்பு உணர்வை உருவாக்கியுள்ளன. இந்தியாவுக்குத் தொண்டாற்றுவது என்பது, வறுமையில் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்குத் தொண்டு செய்வதாகும். வறுமையும்,

அறியாமையும், பிணியும், சமத்துவம் இன்மையும் போக்கப்பட வேண்டும். அற்பமான, அழிவுக்கு வழி வகுக்கும் விமர்சனங்களில் ஈடுபடவும், ஒருவரையருவர் குறை கூறவும் இது நேர மில்லை. இந்தியத் தாயின் எல்லாக் குழந்தைகளும் இன்புற்று வாழும் புனிதம் செறிந்த இருப்பிடமாக நமது நாட்டைக் கட்டமைக்கும் வேள்வியில் நாம்அனைவரும் இன்றுமுதல் ஈடுபட வேண்டும்!' என்று முதல் பிரதம ராகப் பொறுப்பேற்றபோது பிரகடனம் செய்தார் நேரு.



அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக அமைக் கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டத்தில் பேசிய நேரு, 'இந்தியாவின் குடிமக்கள் அனைவருக்கும்

உணவு, உடை, வீடு மிக விரைவில் கிடைப்பதற்கேற்ற பாதை யில் நம்மை வழி நடத்தும் வகையில் நமது அரசமைப்புச் சட்டம் அமைய வேண்டும்!' என்று தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். 'ஒரு குடிமகனின் கண்களிலிருந்தும் ஒருதுளி கண்ணீரும் வெளிப்படாத சமுதாயத்தை நாம் சமைத்தாக வேண்டும்...' என்றார் மகாத்மா. இருவரது ஆசையும் இன்றுவரை நிராசையாகவே நீடிக்கிறது. இந்த நிலைக்கு முதற் காரணம் நம் அரசியல்வாதிகளே!

கட்சி மாறும் அரசியல்வாதிகள் மூன்று வகை. தாங்கள் நெஞ்சில் நேர்ந்து கொண்ட சமூக லட்சியங்களுக்கு முரணாக இயங்கும் கட்சியில் இருக்க விரும்பாமல்... விலகி நிற்பவர்கள் முதல் வகை. இன்று இவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவானவர்கள். காங்கிரஸிலிருந்து வெளியேறி, சுயமரியாதை இயக்கம் கண்டு, நீதிக்கட்சிக்குத் தலைமையேற்று, திராவிடர் கழகமாக அதற்குப் பெயர் சூட்டியவர் பெரியார். காங்கிரஸில் தொண்டாற்றி, சுயமரியாதை இயக்க

மேடைகளில் முழங்கி, சமதர்ம சுயமரியாதை இயக்கத்தை ஏற்படுத்தி, காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியைத் தமிழகத்தில் வளர்த்தெடுக்க முயன்று கம்யூனிஸ்ட் இயக்கத்தில் கலந்து, இறக்கும்வரை அந்த இடதுசாரி இயக்கத்திலேயே கரைந்து போனவர் தோழர் ஜீவானந்தம். இவர்கள் இருவரும் மக்கள் நலனுக்காகப் போராடிய லட்சியவாதிகள். இவர்களை யாரும் கட்சித்தாவலில் கைதேர்ந்தவர்கள் என்று களங்கப்படுத்த முடியாது.

தலைமையின் கோபத்துக்குள்ளாகிப் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அந்தக் கட்சியில் நீடிப்பதனால் தனக்கு இனி எதிர்காலம் வளமாக அமையாது என்பதைத் தெளிவாக உணர்ந்து, தனது நலனை முன்னிறுத்தி நிறம் மாறும் மனிதர்கள் இரண்டாம் வகை. இவர்களுக்கு எந்த மேலான லட்சியமும், சமுதாயப் பார்வையும் கிடை யாது. தி.மு.க-

விலிருந்து அ.தி.மு.க-வுக்கும், அ.தி.மு.க-விலிருந்து தி.மு.க-வுக்கும் இடம் பெயரும் இந்த இரண்டாந்தர மனிதர்களின் ஒரே நோக்கம் தன்னலத்தைத் தவிர வேறேதுமில்லை. கலைஞருக்கு காவடி தூக்குவதும், புரட்சித் தலைவிக்குப் புகழாரம் சூட்டுவதும் தங்களது சுயவளர்ச்சிக்கு இவர்கள் வகுத்துக்கொண்ட வாழ்க்கைச் சாமர்த்தியங்கள். இந்தப் போலி மனிதர்கள் பாடும்பொய்மைப் பல்லாண்டில் மெய்யான பாசமும், பக்தியும் இல்லை என்பதை தலைவர்கள் இருவரும் அறிந்திருந்தாலும் அவர்களுக்கு இவர்களுடைய 'சேவை' தேவைப்படுகிறது.

மூன்றாம் வகை மனிதர்கள், தலைமைக்குப் பல்லக்குத் தூக்கும் தொண்டர்களாக இருந்து அலுத்துப் போனவர்கள். தாங்களும் பல்லக்கில் அமர்ந்து பவனி வருவதற்கு ஆசைப்படுவார்கள். அந்த ஆசையின் உந்துதலில் தலைமையை விமர்சித்து விட்டு, தனிக்கட்சி தொடங்கும் இந்த வகை மனிதர்களால்தான், இந்தியாவில் இத்தனை வகை வண்ணக்கொடிகள் நம் கண்ணைப் பறிக்கின்றன. சுரண்டலற்ற, வர்க்க ஆதிக்க-அடிமை நிலையற்ற,

வறுமையும், வேலையின்மையும் அற்ற ஒரு சமூகத்தைப் படைக்கும் நோக்கில் இவர்களால் புதிய கட்சிகள் பூப்பதில்லை. அரசமைப்புச் சட்டம் முழு வடிவம் பெற்றபோது, அரசியல் நிர்ணய சபையில் உரை நிகழ்த்திய அம்பேத்கர், 'அரசமைப்புச் சட்டம் எவ்வளவு சிறப் பானதாக இருந்தாலும், அதைச் செயற்படுத்துபவர்கள் தவறான மனிதர்களாக அமைந்து விட்டால், அந்தச் சட்டமும் தவறான சட்டமாகத் தரங்குறைந்து விடும்!' என்றார். எவ்வளவு பொருள் பொதிந்த பேச்சு அது!

இந்தியாவில் முதல் கட்சித் தாவல் 1937-லேயே உத்தரப் பிரதேசத்தில் சூல் கொண்டது. முஸ்லிம் லீக் வேட்பாளராக வெற்றி பெற்ற ஹபீஸ் முகமது இப்ராஹீம் என்பவர் பின்னர் காங்கிரஸில் இணைந்தார். ஆனால், கட்சி மாறியதும் அவர் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். அப்போது நேர்மையாளர்கள் மட்டும் அரசியலில் இயங்கினார்கள். இப்போதும் அனிதா ராதாகிருஷ்ணன் தி.மு.க-வில் சேர்ந்ததும் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து, மீண்டும் திருச்செந்தூரில்

வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார். அவர் அமைச்சராக இருந்தபோது வாக் காளர்களுக்குக் கிடைக்காத 'நற்பலன்கள்', வேட்பாளராக தி.மு.க-வின் சார்பில் நின்றபோது வீடு தேடி வந்து சேர்ந்தது வேறு கதை. ஆனால், கட்சித் தாவல் தடைச் சட்டம் இல்லாமற் போயிருந்தால், அனிதாவுக்கு ராஜினாமா செய்யும் யோசனையே நெஞ்சில் நிழலாடியிருக்காது.

ராஜாஜியிடம் கருத்து வேறுபாடு கொண்ட 'சுதந்திரா கட்சி' எம்.எல்.ஏ., கோவை கிருஷ்ணசாமி கவுண்டர் கட்சித்தாவல் குறித்த சட்டம் இல்லாதபோதே, சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த செயல் பாராட்டுக்கு உரியது.

தமிழக அரசியலில் கட்சித்தாவல் சாகசம் 1952 பொதுத் தேர்தலுக்குப் பின்பே நிகழ்ந்தது. பெரும்பான்மை பெறத் தவறிய காங்கிரஸ், ஆட்சியைக் கைப்பற்ற மாணிக்கவேலரின் 'காமன்வீல்' கட்சிக்கு வலை விரித்தது. ராஜாஜியின் முயற்சியால் நடந்த இந்த கட்சித் தாவலுக்குப் பரிசாக மாணிக்கவேலருக்கு மந்திரி பதவி கிடைத்தது. உழைப்பாளர் கட்சியை இணைத்ததற்காக

ராமசாமி படையாச்சிக்கு அமைச்சரவையில் காமராஜர் இடம் தந்து கௌரவித்தார். கட்சித் தலைவருக்கு அமைச்சர் பதவி வழங்கியதும், அந்தக் கட்சியே அடுத்த கணம் காணாமற் போனது. காங்கிரஸ் கொள்கையில்தான் மாணிக்க வேலருக்கும், ராமசாமி படையாச்சிக்கும் ஆழ்ந்த ஈடுபாடு என்றால், அவர்கள் ஏன் தங்கள் சமுதாய நலன் காக்க தனிக்கட்சி கண்டனர்? காங்கிரஸ் மூலம் தங்கள் சமுதாயம் நலன் பெற வாய்ப்பில்லை என்று உணர்ந்த பின்பே அவர்கள் தனிக்கட்சி கண்டது உண்மையெனில், அவர்கள் ஏன் காங்கிரஸில் கரைந்தனர்? அவர்கள் இருவரும் அமைச்சர்களாக வேண்டும் என்பதுதான் அந்த சமுதாயம் அது வரை செய்த தவமா? இந்தக் கேள்விகளைத் தமிழகம் அன்றே எழுப்பியிருந்தால்... மக்கள் விழிப்பு உணர்வுடன் இருப்பதைக் கண்டு, பிழைப்பு அரசியல்வாதிகள் அஞ்சி இருப்பார்கள். நம் மக்களுக்கும் விழிப்பு உணர்வுக்கும் அன்று முதல் இன்று வரை எள் மூக்கின் முனையளவும் சம்பந்தம் இல்லையே!

கேரள மாநிலத்தில் 1953-ல் பட்டம் தாணுப்பிள்ளையின்

தலைமையில் சிறுபான்மை அரசு அமைந்தது. இன்று தமிழ கத்தில் பெரும்பான்மை பலமின்றி, காங்கிரஸ் கட்சியின் 36 எம்.எல்.ஏ-க்களின் 'அற்புதமான' ஒத்துழைப்புடன் கலைஞர் ஒரு சிறுபான்மை அரசை வெற்றிகரமாக நடத்தி வருகிறார். ஆட்சியின் எந்த நடவடிக்கையிலும் காங்கிரஸை எள்ளளவும் கலந்தாலோசிக்கப்படுவ தில்லை. இங்குள்ள சுயமரியாதை பொங்கித் ததும் பும்(!) காங்கிரஸ் உறுப்பினர்கள் அதுகுறித்துக் கவலைப்படுவதுமில்லை. அரச கம்பீரத்துடன் அமர்ந்திருக்கும் அமைச்சர் பெருமக்களிடம் தங்களுக்கு வேண்டிய காரியங்களை சாதித்துக் கொள்வதற்காக, இவர்கள் இணக்கமாக நட்பு பாராட்டும் அழகே அலாதியானது. காங்கிரஸ் கோட்டை நாற்காலியைக் கோட்டைவிட்டு 42 ஆண்டுகள் ஆகிவிட்டன. குறைந்தபட்சம் கூட்டணி அரசில் இடம்பெறும் வாய்ப்பைத் தமிழக மக்கள் 2006-தேர்தலில் இவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். என்றோ ஒருநாள் சுயமாக 'காமராஜ் ஆட்சி'(?) தரப்போகும் இந்தப் புதிய

கதர்ச்சட்டைக்காரர்கள் இன்று கூட்டணி அரசில் பங்கேற்று 50 சதவிகிதம் காமராஜ் ஆட்சியை இப்போதைய இளைஞர்களுக்கு அறிமுகப் படுத்தியிருக்கலாமே! இவர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றால், இருநூறு சதவிகிதம் தி.மு.க. ஆட்சியைத் தந்து விடுவார்கள் என்று அஞ்சியே சோனியா காந்தி அந்த அரிய வாய்ப்பை வழங்க மறுத்து விட்டாரோ!

கேரளாவில் அன்றைய காங்கிரஸ், பட்டம் தாணுப் பிள்ளையின் ஆட்சியை வாழ விடவில்லை. 1950-களில் அகில இந்திய காங்கிரஸின் ஆசியோடு பட்டம் தாணு ஆட்சியைக் காற்றில் பறக்க விட்டு, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி ஆதரவுடன் கோவிந்த மேனன் தலைமையில் கேரள காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் அமர்ந்தனர். கேரள காங்கிரஸார் எப்படியாவது ஆட்சிப் பல்லக்கில் ஏறி அமர ஆசைப்படுபவர்கள். ஆனால், நம் தமிழ்நாடு காங்கிரஸை வழி நடத்தும் தலைமைத் தவப் புதல்வர்களோ, தங்கள் சொந்த நலன்களுக்காக அடிமை மனோபாவத்தோடு இரண்டு திராவிடக் கட்சிகளுக்கு மாறி மாறிப் பல்லக்குச்

சுமப்பதில் சொர்க்க சுகம் காண்பவர்கள். தொண்டர்களோ, கடந்த நாற்பதாண்டுகளாக வீதி முனைகளில் எப்போதாவது மேடை போடுவதிலும், அணி களாகப் பிரிந்து எப்போதும் அடுத்தவரின் வேட்டி சட்டை கிழிப்பதிலும், வட இந்தியத் தலைவர்களை விமான நிலையங்களில் வாழ்த்து கோஷங்களோடு வரவேற்பதிலும், வழியனுப்புவதிலும் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள். சமுதாயப் பிரஜை என்பதைத் தமிழ்நாடு காங்கிரஸில் காண்பது அரிதினும் அரிது. இந்தியா முழுவதையும் தன் ஆளுகைக்குள் வைத்திருந்த காங்கிரஸ் 1967-ல் நடந்த பொதுத் தேர்தலில் பல மாநிலங்களில் பரிதாபகரமான தோல்வியைத் தழுவியது. பதவிப் பசியோடு காத்துக் கிடந்த பல கட்சிகள் ஒன்று சேர்ந்து அதிகாரத்தைச் சுவைக்கக் கதம்பக் கூட்டணி அமைத்தன. அப்போதுதான், கட்சித்தாவல் இந்திய ஜனநாயகத்தின் ஆரோக்கியத்தை அழிக்கும் கொள்ளை நோயாக நாடு முழுவதும் பரவியது. 1952 முதல் 1967 வரை 432 எம்.எல்.ஏ-க்கள் பல காரணங் களுக்காக

வேறு கட்சிகளுக்குத் தாவினர். ஆனால், 1967 முதல் 1972 வரை இடைப்பட்ட ஐந்தாண்டுகளில், சொந்த நலன்களை மட்டும் முன் நிறுத்தி 2,000 சட்டமன்ற உறுப்பினர்கள் பச்சோந்திகளாக நிறம் மாறினர். பஞ்சாபிலும், ஹரியானாவிலும் கட்சித் தாவல் நடக்காத நாளில்லை. கட்சி தாவியவர் தலைகளிலெல்லாம் அரச மகுடம் அழகாக அலங் கரித்தது. 1967-ல் கட்சி மாறிய 210 எம்.எல்.ஏ-க்களில் 116 பேர் அமைச்சர் நாற்காலியில் அமர்ந்தனர். கற்றோர்க்கு 'சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற நிலை மாறி, 'கட்சி தாவியவர்க்குப் போகும் இடத்தில் எல்லாம் ஆட்சிப் பொறுப்பு' என்ற புதிய அத்தியாயம் தொடங்கியது.

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து எம்.ஜி.ஆர். பிரிந்து தனிக்கட்சி தொடங்கிய பின்பு தான் தமிழகத்தில் கட்சித்தாவல் அதிகரித்தது. தாய் கழகத்திலிருந்து, சேய் கழகத்துக்குச் செல்வதும், சேய் கழகத்திலிருந்து மீண்டும் தாய்

கழகத்துக்குத் திரும்புவதும் எந்த விதமான தர்ம சங்கடமும் இல்லாமல் தாராளமயமானது.

'யோக்கியர்களுக்கு மட்டுமே என்றும் தர்மசங்கடம் உண்டு' என்றார் ராஜாஜி. கட்சி களைப் பிளந்து பலவீனப்படுத்துவதிலும், ஒவ்வொரு கட்சியிலும் தன் ஆதரவாளர்களை உருவாக்குவதிலும் கலைஞருக்கு இன்று வரை ஈடு இணை இல்லை. தி.மு.க-விலிருந்து எம்.ஜி.ஆர். வெளியேறியதற்கு மறைமுகமாக இந்திரா காங்கிரஸ் சதி செய்தது என்று கலைஞர் குற்றம் சாட்டினார். ஆனால், இதே கலைஞர்தான் சித்தாந்த உறுதி மிக்க கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து மணலி கந்தசாமியும், முஸ்லிம் லீகிலிருந்து லத்தீபும் வெளியேறி தனிக்கட்சி தொடங்கியதற்குக் காரணம் என்கிறது கடந்த கால வரலாறு. ம.தி.மு.க-விலிருந்தும், அ.தி.மு.க-விலிருந்தும் ஆட்களைக் கொண்டு வந்து அறிவாலயத்தில் சேர்ப்பதில் இன்று ஒரு தனிப்படையே இயங்குவதாகக் கேள்வி.

வைகோவும், கண்ணப்பனும் ஈழ ஆதரவுக் குரல் கொடுத்த மேடையில், நாட்டின் இறையாண்மைக்கு எதிராகப்

பேசியதாக மாநில அரசு வழக்கு தொடுத்தது. கண்ணப்பன் கலைஞரிடம் வந்து சேர்ந்ததும் அவருக்கு எதிரான வழக்கு கைவிடப்பட்டது. இதுதான் கலைஞரின் அரசியல் 'நீதி'. பணத்துக் காகவும், அதிகாரத்துக்காகவும், வாழ்க்கை சுகங் களுக்காகவும் கூடு விட்டுக் கூடு பாயும் நவீன விக்ரமாதித்யர்களை, நாம் நினைத்தால் அரசியல் உலகத்தில் அகதிகளாக்க முடியும். தேர்தல் களத்தில் சுயநலச் சிந்தனைகளோடு வாக்கு கேட்க வரும் இந்த மலினமான மனிதர்களை முகவரியற்றவர்களாக மாற்றுவதுதான் வாக்காளர்களின் முதல் வேலை!

'சுயநலமின்மையே சிறந்த ஒழுக்கம்' என்ற பாடத்தை சமூகப் பொறுப்பு உணர்வு மிக்க இளைஞர் கூட்டம் இனியாவது இவர்களுக்கு போதிக்க வேண்டும்!

– பயணம் தொடரும்–

# எங்கே போகிறோம் நாம?



தமிழருவி மணியன்

எரிமலைத் தொடர்

-

## 6 தடைச்சட்டம்...

'சுயராஜ்ஜியம் கிடைத்ததும், அது சிறந்த அரசையும், நிறைந்த மகிழ்ச்சியையும் உடனே மக்களுக்குத் தந்துவிடாது. தேர்தல் ஒழுங்கீனம், ஊழல், அநீதி, பணபலத்தின் கொடுங்கோன்மை, நிர்வாகத் திறமை இன்மை ஆகியவை மூலம் மக்கள் வாழ்க்கை நரகமாகும். முன்பிருந்த வெள்ளையர் ஆட்சியே மேலானது என்று மக்கள் நினைக்கும் நிலை வரும்.



'அவமானத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை' என்ற ஒன்றே நம் மக்களுக்கு உடனடியாகக் கிடைக்கவிருக்கும் ஒரே நன்மை!' என்று மூதறிஞர் ராஜாஜி 1922-ல்

வேலூர் சிறையில் இருந்தபோது தன்னுடைய சிறைக் குறிப்பு களில் எழுதி வைத்தார். அவர்தான் எவ்வளவு பெரிய அரசியல் தீர்க்கதரிசி!

சுதந்திரம் பெறும் சூழலில் அரசியல் அரங்கில் அறிவாளி களும், நேர்மையாளர்களும் மட்டுமே முதல் வரிசையில் வீற்றிருந்தனர். எதையும் கட்சிக் கண்ணோட்டத்தில் அணுகும் அருவருப்பான நடைமுறை, அன்றைய அரசியல் தலைவர்களிடம் அறவே இல்லை. அரசியல் நிர்ணய சபை யில் பெரும்பான்மை உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தபோதும், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் சட்ட மேதைகளையே காங்கிரஸ் தலைமை ஈடுபடுத்தியது. அம்பேத்கர், எம்.ஆர்.ஜெயகர், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், கோபாலசாமி ஐயங்கார், எச்.என்.குன்ஸ்ரூ, ஷியாம் பிரசாத் முகர்ஜி, கே.டி.ஷா, ஃப்ராங்க் அந்தோணி, பி.என்.ராவ் போன்றவர்கள் காங்கிரஸை

கடுமையாக எதிர்த்தவர்கள். அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்துடன் புறக்கணிக்கப்படவில்லை. இன்னும்

சொல்லப் போனால், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய வரைவுத் திட்டக் குழுவுக்கு அம்பேத்கர் தலைமையில் பல காங்கிரஸ் சார்பற்ற அறிவுஜீவிகளே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். நேருவின் அமைச் சரவையில் நிதியமைச்சராக இருந்த ஆர்.கே.சண்முகம் செட்டியாரும், சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்ற டாக்டர் அம்பேத்கரும் காங்கிரஸ் பிரதிநிதிகள் இல்லை.

இன்றுள்ள நிலைமையோ, சுருதிபேதம் இல்லாமல் இச்சகம் பேசுவோர்க்குப் பதவி நாற்காலி; அப்பழுக்கற்ற திறமைசாலிகளுக்கு பலிபீடம்!

முதல் தரமான மனிதர்கள் மூன்றாம் இடத்திலும், மூன்றாம் தரமான விசுவாசிகள் முதலிடத்திலும் இருக்க வேண்டும் என்பது கலியுக அரசியல் களத்தின் நியதி போலும். அரசியல் தரம், சுதந்திரம் பெற்ற இருபதாண்டு களில் அதலபாதாளத்தை அடைந்துவிட்டது. 1967-க்குப் பின்பு அமைந்த நாடாளுமன்றத்தில் கட்சித் தாவல் பிரச்னையை ஆராய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று தனிநபர் தீர்மானம் கொண்டு

வரப்பட்டது. அன்றைய உள்துறை அமைச்சர் ஒய்.பி.சவான் ஒரு பரிசீலனைக் குழுவை அமைத்தார். கட்சி மாறியவருக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை அமைச்சர் பதவியும், அரசுப் பதவியும் அளிக்கக்கூடாது என்று அந்தக்குழு பரிந்துரைத்தது. இந்திராகாந்தி அரசு இப்பரிந்துரையைப் புறக்கணித்தது. கட்சி மாறியவர், அவை உறுப்பினர் பதவியை இழந்தால் போதும் என்று இந்திரா கருதினார். 1973-ல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் சட்டத்திருத்த மசோதா நிறைவேறவில்லை. மொரார்ஜி தேசாய் அரசு 1978-ல் கொண்டு வந்த மசோதா, ஆட்சிக் கவிழ்ப்பில் காணாமற் போனது.

---

*கட்சிகளின் படுக்கை அறைகளில்*
*கசக்கி எறியப்பட்டது ஜனநாயகம்!*
*ஆட்சிக்கட்டிலின்*
*ஐந்தாண்டுப் புருஷர்கள்*
*பசிக்கப் பசிக்கப் புசிப்பது*
*இந்தியாவின் ஈரல்.*

**– ஈரோடு தமிழன்பன்**

இந்திராகாந்தி படுகொலைக்குப் பின்பு வீசிய அனுதாப அலையில் ராஜீவ்காந்தி மிகப்பெரிய மக்கள் ஆதரவுடன் பாரதப் பிரதமரானார். நேரு காலத்திலும் பெறாத

வெற்றியைக் காங்கிரஸ் பெற்றது. நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் 404 எம்.பி-க்களைக் கொண்டிருந்தது. மும்பையில் நடைபெற்ற காங்கி ரஸ் நூற்றாண்டு விழாவில் கட்சியை ஆட்டிப்படைக்கும் அதிகாரத் தரகர்களைப் பகிரங்கமாக விமர்சனம் செய் தார் ராஜீவ். கட்சித்தாவல் தடுப்புச் சட்டத்தை 1985-ல் அவர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார்.

அரசமைப்புச் சட்டத்தின் பத்தாவது அட்டவணையில் 52-வது திருத்தம் மூலம் இடம் பெற்ற கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தில் காணப்படும் முக்கிய அம்சங்கள்...

1. ஒரு கட்சியின் சார்பில் உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், தாமாக அந்தக் கட்சியிலி ருந்து விலகினாலோ, கட்சியின் கட்டளைக்கு எதிராக வாக்களித்தாலோ உறுப்பினர் பதவியை இழப்பார்.

2. நியமன உறுப்பினர், பதவியேற்ற ஆறு மாதங்களுக்குப் பின்பு ஒரு கட்சியில் சேர்ந்தால் பதவி பறிபோகும். 3.சுயேச்சை உறுப்பினர் ஏதாவதொரு கட்சியில் இணைந்தால் பதவியை இழக்க நேரிடும். 4.மூன்றில் ஒரு

பங்கு கட்சி உறுப்பினர்கள் விலகி, புதிய கட்சியை உருவாக்கினாலும், மற்றொரு கட்சியுடன் ஒரு கட்சி இணைந்தாலும் பதவி இழப்பு நேராது. 5.அவைத் தலைவர், துணைத் தலைவர் தம் கட்சியிலிருந்து விலகினாலும் பதவிக்கு பாதிப்பில்லை!

கட்சித் தாவல் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்படும்வரை அரசமைப்புச் சட்டத்தில் 'கட்சி'(party) என்ற குறிப்பே இல்லை. தேர்தல் சட்டத்திலும், சின்னம் ஒதுக்கும் உத்தர விலும் மட்டுமே 'கட்சி' பற்றிய குறிப்பு இருந்தது.

ஜனநாயக நெறிமுறைகளை ஆழக் குழிதோண்டிப் புதைக்கும் தவறான மனிதர்களின் கட்சித் தாவலைத் தடுக்கப் பிறப்பிக்கப்பட்ட சட்டத்தால், எந்தப் புதிய நன்மையும் பூத்துவிடவில்லை. எம்.எல்.ஏ-க்களும் எம்.பி-க் களும் சில்லறை வணிகத்தில் விலை போவதற்கு பதில், மொத்த வணிகத்தில் விலைபோக இச்சட்டம் வழிவகுத்தது. கட்சித் தலைமையின் கருத்துக்கு எதிரான கருத்துள்ளவர்கள் சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும் அவைகளில் விவாதிக்கவோ, வாக்களிக்கவோ

இயலாமற்போனது. கட்சித் தலைமையிடம் சர்வாதிகாரச் சாயல் படிவதற்கு இந்த சட்டம் இடம் தந்தது.

ஆளுங்கட்சித் தலைமையின் விருப்பத்தை நிறைவேற்றும் ரப்பர் ஸ்டாம்பாக நாடாளுமன்றமும், சட்டமன்றமும் மாறியது. மாமனார் நேருவின் மந்திரிசபையில் நிதியமைச்சராக இருந்த டி.டி.கிருஷ்ணமாச்சாரிக்கு எதிராக 'முந்திரா ஊழல்' விவகாரத்தில் நாடாளு மன்றத்தில் போர்க்குரல் கொடுத்த மருமகன் பெரோஸ் காந்தியைப் போல் இன்று ஒருவரையும் நம் கனவிலும் காணமுடியாது. அது ஜனநாயகம் செழித்த காலம். இப்போது நடப்பதோ ஜனநாயகம் முற்றாகச் சிதைந்த காலம்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் உறுப்பினர்களின் சொந்த அபிப்பிராயங்களை வெளிப்படுத்தத் தடை விதிக்க வில்லை. பிரிட்டனின் பிரதமராக இருந்த டோனி ப்ளேர் ஈராக் போரில் ஈடுபடுவதற்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு



திரட்டியபோது, எதிர்க்கட்சியாகிய 'கன்சர்வேடிவ் கட்சி'யின் உறுப்பினர்கள் சிலர் கட்சி எல்லைகளை மீறி ஆதரவு தெரிவித்தனர். அமெரிக்க நாடாளுமன்றத்தில் கட்சியை விட, பிரச்னையின் தன்மையை முன்வைத்தே வாக்களிப்பது வழக்கமாக இருக்கிறது. இந்திய நாடாளுமன்றத்திலும் நேருவின் காலத்தில் கட்சித் தலைமையின் நிர்ப்பந்தமின்றி வெளிப்படையாக விவாதம் நடந்திருக்கிறது. இந்து தனிநபர் சட்டம், நிலச் சீர்திருத்தம் போன்றவை குறித்து காங்கிரஸில் கருத்துகள் சுதந்திரமாக வெளிப்படுத்தப்பட்டன. கட்சித் தாவல் தடைச் சட்டம் உறுப்பினர்களின் கருத்து சுதந்திரத்தின் குரல் வளையை

நெரித்துவிட்டது. கட்சித் தாவலைத் தடை செய்வது ஆரோக்கியமான அம்சம். ஆனால், கருத்துரிமைக்குக் குழி பறிப்பது ஜனநாயக அவலம்.

சட்ட கமிஷன், தேர்தல் சீர்திருத்தம் குறித்து அறிக்கை சமர்ப்பித்த தினேஷ் கோஷ்வாமி கமிட்டி, அரசமைப்பு சட்டத்தின் செயல்முறைகளை ஆய்வு செய்யும் தேசிய கமிஷன் ஆகியவை பத்தாவது அட்டவணையில் உள்ள, 'கட்சிப் பிளவு ஏற்பட்டால் உறுப்பினர் பதவி இழக்கமாட்டார்' என்ற ஷரத்து அகற்றப்படவேண்டும் என்று பரிந்துரை செய்தும் பலனில்லை. ஒருவர் கட்சி தாவுவதற்கு பதில், ஒரு கூட்டமே கட்சியைப் பிளந்து இன்னொரு கட்சியில் இணைவதற்கு ஊக்கம் தரும் இச்சட்டம், 'பிள்ளையார் பிடிக்க குரங்காகிப் போன' கதைக்குச் சாட்சியாகிவிட்டது.

இந்திய அரசியலில் இன்று ஜனநாயகப் பொம்மலாட்டம்தான் நடக்கிறது. கட்சிகள் தங்கள் சௌகரியத்துக்கேற்ப செயற்படுகின்றன. எந்தக் கட்சியும் கொள்கை சார்ந்து நடப்பதில்லை. சுயநலத்தைத் தவிர

கூட்டணி தர்மம் எதுவுமில்லை. யாரைவிட யார் உயர்ந்தவர் என்ற தன்முனைப்பு, ஆள்பவர்க்கு மாரடிக்கும் மனோபாவம், வெற்றுப் புகழுரைகள், பணத்தை வைத்துப் பதவியைப் பெறும் வணிக அரசியல், சாதி, மதம், மொழி வெறியைத் தூண்டும் போக்கு, கறுப்புப் பணத்தில் கனகாபிஷேகம் நடத்தி மகிழும் நபும்சகத்தனம் இன்று எந்தக் கட்சியில் இல்லை? அளவு மாறலாம்... அவ்வளவுதான்!

பாரதத்தைப் போன்று பரந்து விரிந்த நாட்டில் நேரடி ஜனநாயகத்துக்குச் சிறிதும் சாத்தியமில்லை. பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை விட்டால், நமக்கு வேறு வழியில்லை. ஆனால், தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அனைவரும் சுயலாப நோக்கில் கட்சித் தலைமையிடம் காட்டும் விசுவாசத்தில் கடுகளவும் தம்மைத் தேர்வு செய்யும் மக்களிடம் காட்டுவதில்லை என்பதுதான் கவலைக்குரியது. கட்சித்தாவல் தடுப்புச் சட்டம் நம் ஜனநாயக மாளிகையை வலுப்படுத்துவதற்கு மாறாக, அதனுடைய அடித்தளத்தையே பலவீனப்படுத்திவிட்டது.

'சட்டம், குற்றத்தைத் தண்டிக்கக்கூடும். ஆனால், அதை முற்றாக அகற்றமுடியாது' என்றார் மகாகவி மில்டன். 'திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்று நாம் கை கட்டி இனி நிற்கலாகாது. பொதுச் சொத்தைக் கொள்ளை அடிப்பதில் கைதேர்ந்துவிட்ட திருடர்கள், தாமாகத் திருந்துவார்கள் என்று இன்னமும் நம்பினால், நம்மைவிட ஏமாளிகள் எங்கும் இருக்கமாட்டார்கள்.

'கட்சி என்பது தங்களால் அங்கீகரிக்கப் பட்ட கொள்கைகளின் மூலம் தேச நலன் களைப் பெருக்குவதற்குக் கூட்டு முயற்சி செய்பவர்களின் தொகுப்பு' என்றார் அறிஞர் எட்மண்ட் பர்க். தேசநலன்களில் முழுமை யாக நாட்டம் செலுத்தும் கட்சி சார்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். இன்றுள்ள பெரும்பாலான கட்சிகள் உண்மைகளைத் திரித்தும், பொய்களை விரித்தும் நடத்தும் பிரசாரத்தில் சமுதாயத்துக்குப் பயன்படும் நல்ல கருத்துகள் கல்லறையில் புதைக்கப்படுகின்றன. ஒரு கட்சி,

பிற கட்சிகளைக் குறை கூறுவதன் மூலம், தன்னுடைய களங்கம் மக்கள் கண்களில் பட்டு விடாமல் பார்த்துக் கொள்கிறது. கட்சித் தாவல் தடைச் சட்டம் சட்டப் பேரவை, மக்களவை உறுப்பினர்களை ஊமைகளாக்கிவிட்டது. சுயசிந்தனை, கட்சித் தலைமையின் கட்டுப்பாட்டில் கழுவிலேற்றப் படுகிறது. 'எங்கே எதிர்ப்பவர் இல்லையோ, அங்கே ஜனநாயகம் இல்லை' என்பதை இளைய தலைமுறை நினைவில் நிறுத்த வேண்டும்.

அரசியல் சுதந்திரத்துக்கு அடிப்படை அம்சமான அரசியல் சமநிலை, ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிமுறையில் தான் சாத்தியம். ஒரு கட்சி நடத்தும் ஆட்சியை, இன்னொரு கட்சி கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். இங்கே ஆளுங்கட்சி ஆதிக்க சக்தியாகவும், எதிர்க் கட்சி எதிரிக்கட்சியாகவும் செயற் படுகின்றன. பாக்கு வெட்டிக்கு இடையில் சிக்கிய பரிதாப நிலையில் நாம். இந்த நிலை இன்னும் எவ்வளவு காலம் நீடிக்க நாம் அனுமதிக்கப் போகி றோம்? நேர்மையாளர்களை, நல்லவர்களை நாம்

மனதளவில் போற்றுகிறோம், ஆனால், அவர் களைப் பின்பற்ற அஞ்சுகிறோம். மக்கள் சேவை என்ற பெயரில் ஜனநாயக நெறிகளையும், சட்ட விதிகளையும் மீறி, சாதாரண மனிதர்களிடம் சாராயத்தையும், பணத்தையும் காட்டி, தங்கள் மனச் சான்றைச் சாத்தானிடம் அடகு வைத்து விட்டு சுகபோகங்களில் மிதக்கும் சமூகக் குற்றவாளிகளுக்குத்தான் நாம் தொடர்ந்து வாக்களிக்கப் போகிறோமா?

ஒரு கட்சியின் சின்னத்தில் நின்று வெற்றி பெற்றவர், ஐந்தாண்டுகள் முழுவதும் அக்கட்சி உறுப்பினராகவே செயற்பட வேண்டும். சட்டப்பேரவை, மக்களவை ஆயுள் முடிவதற்குள் எந்தக் காரணத்துக்காகவும் ஓர் உறுப்பினர் இடம் மாறக்கூடாது. இடையில் அவர் தடம் மாறினால், அக்கணமே பதவி அவரிடமிருந்து பறிக்கப்பட வேண்டும். சட்ட கமிஷன் சமர்ப்பித்த இந்தப் பரிந்துரை, நாடாளுமன்றத்தில் ஒட்டு மொத்த உறுப்பினர்களாலும் நிராகரிக்கப் பட்டது. தேசநலனில் இல்லாத ஒற்றுமை, இவர்கள் அனைவருக்கும் தங்கள் சொந்த நலனில்

இருக்கிறது. நம் நலனில் நமக்கு நாட்டம் இருந்தால், இந்த மனிதர்களைப் பொதுவாழ்விலிருந்து ஏன் ஓட்டமுடியாது? வாழ்க்கை விழுமங்களிலிருந்து வேண்டு மென்றே வழுக்கி விழுந்தவர்களின் தலைகளை இதுவரை அரச மகுடங்கள் அலங்கரித்தது போதும். பொதுவாழ்வில் புதிய தோர் உலகம் செய்யப் புறப்படுவோம்.

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

## சந்தர்ப்பவாதம்...

7 இந்தியாவுக்கு விடுதலை வழங்கும் முடிவு, பிரிட்டனின் ஆளுங்கட்சியான தொழிற்கட்சியால் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது, அந்த முடிவை வின்ஸ்டன் சர்ச்சில் மிகக் கடுமையாக எதிர்த் தார். "தங்கள் நாட்டை ஆள்வதற்கு, இந்தியர்கள் எந்த வகையிலும் தகுதிபடைத்தவர்கள் இல்லை.

பிரிட்டிஷ் ஆட்சி முடிவுற்றால் குழப்பமும், முரண்பாடும், பிரிவினைக் குரல்களும் இந்தியா முழுவதும் எதிரொலிக்கும். இந்தியரின் நலனுக்காகவாவது நம் ஆட்சி அங்கு நீடிக்க வேண்டும்!" என்று பேசிய சர்ச்சில், "இந்தியர்களால் ஒழுங்காக ஆட்சி நடத்த இயலாது..." என்று சாபமிட்டார். "சர்ச்சிலின் சாபத்தை நம் நாட்டு மக்கள் பொய்யாக்குவார்கள்!" என்று மகாத்மா நம்பிக்கை தெரிவித்தார். ஆனால், நம் அரசியல் தலைவர்கள் அண்ணலின் நம்பிக்கையைத்தான் பொய்யாக்கிவிட்டனர்.



சுயநலம்தான் எல்லாவிதமான தவறு களுக்கும் வாசற்கதவைத் திறந்துவைக்கிறது. சுயநலம் அரசியலில் பெற்றெடுத்த குழந்தையே, சந்தர்ப்பவாதம். சந்தர்ப்பவாதத்தின் ஒரே இலக்கு வெற்றி. எப்படியும் வெற்றி பெற விரும்பும் சந்தர்ப்பவாதம், எந்தவகை சமரசத்

துக்கும் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளும்.

சந்தர்ப்பவாத சாகசம் முதலில் பலி கொள்வது நேர்மையையும், உண்மையையும் என்பதுதான் சரித்திரம். தமிழக அரசியலில் சந்தப்பவாதத்தை ஓர் அரிய சாகசமாகவே வளர்த்தெடுத்து, வெற்றியைத் தழுவியவர் அண்ணா. சந்தர்ப்பவாதத்தில் அண்ணா ஒரு மாநில மன்னர் என்றால், அவருக்குப் பின் வந்தவர்கள் உலக சாம் ராஜ்ஜியத்தின் சக்ரவர்த்திகள்.

பெரியாரை விட்டுப் பிரிந்தாலும், திராவிடநாடு பிரிவினைக் கொள்கையை அண்ணா முதலில் கைவிட வில்லை. 'நாட்டு விடுதலை கேட்கும்போதே, நாம் வாய்க்கரிசி போட்டுக் கொண்டுதான் கேட்கிறோமே தவிர, வாழ அல்ல. இந்த நாட்டில் நமக்கு வாழ்வு என்ன கேட்கிறது? வடநாட்டு ஆட்சியின் கொடுமையைத் தாங்கிக் கொண்டு, உள்நாட்டில் உள்ள கங்காணிகள் (தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களுக்கு அண்ணா தந்த அடைமொழி) பேச்சையும் கேட்டுக்கொண்டு நாம் வாழத்தான் வேண்டுமா? குவைத்தை ஒரு தனிநாடாக ஏற்கலாம். குவலயம் புகழும் தமிழகத்தை, திராவிடத்தை

ஏற்கக் கூடாதா?' என்று ஆவேசமாக எழுதியவர் அண்ணா.

தி.மு.கழகம் கேட்டது திராவிடநாடு. மொழிவாரி மாநிலப் பிரிவினையின் தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் கேரளத்தில் சேர்க்கப்பட்ட போது, 'நாம் கேட்கும் திராவிட நாட்டில்தானே இந்தப் பகுதிகளும் இருக்கப் போகின்றன' என்று

எண்ணாமல், எதிர்த்தது ஏன்? உள்ளத்தில் தமிழ்நாடும், உதட்டில் திராவிட நாடும் இருந்ததனால்தானோ இந்த முரண்பாடு? கோட்டை நாற்காலிக் கனவில் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தில்தான் அண்ணாவும், அவருடைய தம்பிகளும் தன்னைவிட்டுப் பிரிந்ததாக பெரியார் குற்றம் சாட்டியதால், 1952-ல் நடந்த நாட்டின் முதல் பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் பங்கேற்கவில்லை.

'திராவிடர்களின் கருத்தை அறியாமலும், திராவிடரின் ஜீவாதார உரிமைக்கு ஊறு செய்யும் வகையிலும், ஒரே கட்சியரின் எதேச்சதிகார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பதன் அறிகுறியாக, அந்தச் சட்டத்தின்படி

நடைபெறும் முதல் பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் அபேட்சகர்களை நிறுத்தி கலந்து கொள்வதில்லை' என்று 1951 நவம்பரில் மதுரையில் கூடிய கழகப் பொதுக்குழு முடிவெடுத்தது. தி.மு.க-வின் விருப்பப்படி அரசியல் சட்டத்தில் ஒரு சிறிய மாற்றம்கூட செய்யப்படாத நிலையில்... 1957-ல் அது ஏன் தேர்தலில் பங்கேற்றது? 'திராவிடர்களின் ஜீவாதார உரிமைக்கு ஊறு செய்யும் வகையில்' அமைந்த அரசியல் சட்டப் பிரிவுகள் அனைத்தும் அகற்றப் பட்டதாக அண்ணாவுக்கு மட்டும் தனியாக நேரு செய்தி அனுப்பினாரா? 'திராவிட நாடு கொள்கையை ஆதரிக்கிற, நாடாளுமன்றத்திலும் சட்டப்பேரவையிலும் திராவிடநாடு கொள்கைக்கு ஆதரவாகச் செயற்படுகிற, சுரண்டலுக்கும் எதேச்சதிகாரத்துக்கும் எதிரான தி.மு.க-வின் திட்டங்களை ஏற்றுப் பணியாற்றுகிற உறுதிமொழியைத் தரும் கட்சிகளைத் தேர்தலில் நாங்கள் ஆதரித்து வாக்களிப்போம்!' என்றார் அண்ணா. 1952 தேர்தலில் அப்படி உறுதிமொழியளித்து, காங்கிரஸுக்கு எதிராகக் களமிறங்கி

> புழுக்கள் நெளிவதால்
> ஏற்பட்ட சலனத்தை
> நீரோட்டம் என்றால்
> ஏமாந்தா போவோம்?
> - இன்குலாப்

வெற்றி பெற்ற மாணிக்கவேலரின் 'காமன் வீல்' கட்சியும், ராமசாமி படையாச்சியின் உழைப்பாளர் கட்சியும், கொடுத்த உறுதி மொழியைக் காற்றில் பறக்கவிட்டு, ராஜாஜியின் தூண்டுதலில் காங்கிர ஸில் கரைந்தன! இடம் விட்டு இடம் மாறும்... கூடு விட்டுக் கூடு பாயும் கலையில் மருத்துவர் ராமதா ஸுக்கு முன்னோடிகள்! 'குரு பரம் பரை' மதங்களில் மட்டுமின்றி, அரசியலிலும் தொடர்கிறது.

'பெரியாரின் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருப்போம்' என்ற அண்ணா, 1953-ல் பெரியார் பிள்ளையார் உடைப்புப் போராட்டம் நடத்தியபோது, 'நாங்கள் பிள்ளையாரையும் உடைக்கமாட்டோம், தேங்காயும் உடைக்கமாட்டோம்' என்று பின்வாங்கி னார். முதன் முதலில் 1957-பொதுத் தேர்தலில் களமிறங்கிய தி.மு.க-வின் தேர்தல் அறிக்கையில், 'மாநிலங்களுக்கு அரசியல் சமத்துவம், மத்திய அரசின் அதிகாரங்களுக்கு வரம்பு, சுயநிர்ணய உரிமை' போன்ற சொல்லாடல்கள் இருந்தன. ஆனால், 'திராவிட நாடு

கோரிக்கை' வாக்குகளை வாங்கித் தராது என்று உணர்ந்ததால், அந்த அறிக்கையில் 'திராவிட நாடு' காணாமற் போன கைக்குழந்தையாகிவிட்டது. சீனப் படையெடுப்பு நிகழ்ந்தபோது, 'திராவிட நாடு பிரச்னையை விட்டுவிட மாட்டோம். தலைவலி வந்தால், அமிர்தாஞ்சன் தடவ வேண்டும். அதற்காக, தலையை எடுத்துவிட முடியாது. அதுபோலவேதான், திராவிட நாடு பிரச்னையும். போர் நெருக்கடியில் நமது பிரச்னையைத் தள்ளி வைத்திருக்கிறோம்!' என்று விளக்கமளித்த அண்ணா, பிரிவினை தடைச் சட்டம் வருவதறிந்து இருபதாண்டுகளுக்கு மேல் இடையறாமல் முழங்கிய, தன் உயிர்க் கொள்கைக்கு வாய்க்கரிசி போட்டது ஒருவகையில் ராஜதந்திரம்; இன்னொரு வகையில் சந்தர்ப்பவாதம்தானே! அண்ணாவும், கழக உடன்பிறப்புகளும் 1967 பொதுத் தேர்தலில் ராஜாஜியுடன் கூட்டு சேர்ந்தது தமிழக அரசியல் அதுவரை கண்டிராத 'அதிசய' காட்சி!' குல்லுகபட்டர்' என்று கழகத்தவரால் பழிக்கப்பட்ட ராஜாஜி, திடீரென்று மூதறிஞராகப்

பாராட்டப்பட்டார். காங்கிரஸை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றுவது அண்ணாவின் ஆசை. காமராஜரின் அரசியல் செல்வாக்கை அழித்தொழிப்பது ராஜாஜியின் லட்சியம். இருவருக்கும் இடையில் சமூகத்தின் எந்தப் பிரச்னையிலும் ஒருமித்த பார்வை இல்லை. மதம், வகுப்பு, வர்க்கம், பொருளாதாரம் என்று எல்லாவற்றிலும் சனாதன தர்மத்தின் அடையாளமாகக் காட்சியளித்த ராஜாஜி, பெரியாரின் சீடர் ஆட்சியில் அமர்வதற்குத் துணை நின்ற பேரதிசயம்தான், சந்தர்ப்பவாத அரசியலின் திருப்புமுனை. ராஜாஜியின் அந்தரங்க ஆசை நிறைவேறும் வகையில் காமராஜர் விருதுநகரில் தோற்றார். ஆனாலும், காங்கிரஸ் 42 சதவிகிதம் வாக்குகளைப் பெற்றது. ஆட்சியில் அமர்ந்த தி.மு.க-வுக்கு 41 சதவிகிதம் வாக்குகளே கிடைத்தது. ராஜாஜியின் சுதந்திரா கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டும், முஸ்லிம் லீகும், ஃபார்வர்ட் பிளாக்கும் தி.மு.கழக கூட்டணியில் அன்று இடம் பெறாமற் போயிருந்தால், காங்கிரஸ் கோட்டையைக் காலி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. நான்கு காளைகள்

சேர்ந்து ஒரு சிங்கத்தை வீழ்த்தும் கதை நிஜமானது. குறைந்தபட்சக் கொள்கையுமின்றி, தேர்தல் வெற்றிக்காக யாரும் யாரோடும் சேரலாம் என்ற 'கூட்டணி தர்மம்' நம் மாண்புமிகு வாக்காளர்களால் அமோக மாக அங்கீகரிக்கப்பட்டது. அன்று வேகம் கொண்டது அரசியல் சீரழிவு.

தேர்தல் வெற்றிக்காக எந்த சமரசத்துக்கும் தயாராகத் தன்னைச் செதுக்கிக் கொண்ட அரசியல் சிற்பி நம் கலைஞர். முதன் முறையாக 1969-ல் முதலமைச்சரான பின்பு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான கலைஞர், காமராஜருக்கும், இந்திராகாந்திக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கை அரசியல் சாணக்கிய தந்திரத்துடன் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். இந்திரா காங்கிரஸூடன் கூட்டணி அமைத்து அவர் காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸை வீழ்த்தினார். எந்த இந்திரா காந்தியால் தி.மு.க. செயல்வீரர்கள் சிறையில் அடித்து நொறுக்கப்பட்டார்களோ... எந்த இந்திரா காந்தியை மதுரையில் எதிர்த்து தி.மு.க-வினர் முற்றுகைப்போர்

நடத்தி னார்களோ... எந்த இந்திரா காந்தியால் சர்க்காரியா கமிஷன் விசாரணை மூலம் கலைஞர் அவமானமுற்றாரோ... எந்த இந்திரா காந்தியின் ஆட்சியில் சோதனை என்ற பெயரில் தன்னுடைய உறவுகளின்கண்ணியத்துக்குக் களங்கம் நேர்ந்ததாக, தஞ்சைப் பொதுக் கூட்டத்தில் கண்கலங்கப் பேசினாரோ... அந்த இந்திராவை, 'நேருவின் மகளே' என்ற பல்லாண்டு பாடி வரவேற்று, அவருடைய காங்கிரஸுடன் 1980 தேர்தலில் கூட்டு வைத்தது கலைஞரின் 'சுயமரியாதை'! 'நான் நெருக்கடி நிலையை எதிர்த்தேன் என்றாலும்கூட, அம்மை யார் அறிவித்த இருபது அம்சத் திட்டத்தை வரவேற்றிருக்கிறேன். இன்னும்கூடச் சொல்லப் போனால், சஞ்சய்காந்தி சொன்ன ஐந்து அம்சத்தை, நெருக்கடி நிலையை எதிர்த்த அந்தக் காலத்திலேயே வரவேற்றது கருணாநிதிதான் என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்!' (முரசொலி 26-11-1979) என்று நெருக்கடி நிலை நாயகனாக, ஜனநாயக நெறிமுறைகளைக் குழி தோண்டிப் புதைத்த சஞ்சய் காந்தியிடம் சமாதானக் கரம்

நீட்டியவர் நம் கலைஞர். ஜெயலலிதாவுடன் 1998-ல் பி.ஜே.பி. கூட்டணி அமைத்தபோது, 'மதவெறியைத் தூண்டி, பிற மதத்தினரை அந்நியப்படுத்தவும், வர்ணாஸ்ரம ஆதிக்கத்தைப் புதுப்பிக்கவும் முயலும் பிற்போக்குச் சக்திகளுடன் கைகோத்து நிற்பவர்கள் பெரியார், அண்ணா பெயரைக் கூறிக் கொள்ளவும் அருகதை அற்றவர்கள். நமது லட்சியத்துக்கு துரோகம் செய்யும் அவர்களைத் தமிழக மக்கள் அடையாளம் கண்டு பாடம் கற்பிக்க வேண்டும்!' என்று தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை வன்மையாகச் சாடியது. ஆனால், ஓராண்டு இடைவெளியில் அதே 'ஆக்டோபஸ்' பி.ஜே.பி-யுடன் கலைஞர் கூட்டணி வைத்து, மத்திய அரசில் மாறனை இடம்பெறச் செய்தார்.இதெல்லாம்தான் சந்தர்ப்பவாதமா? மொரார்ஜி தேசாய்க்கும், இந்திரா காந்திக்கும் இடையில் எம்.ஜி.ஆர். நடத்தாத சாகசமா? 'சோனியா காந்தியை வெளிநாட்டுப் பெண் என்றும், அவர் கணவனுக்கு உண்மையானவராக இருந்தால் எப்படி தி.மு.க-வுடன் கூட்டணி அமைக்க முடியும்?' என்றும் கடுமையாக

விமர்சித்த ஜெயலலிதா, அதே சோனியாகாந்தியுடன் 'தேநீர் விருந்து அரசியல்' நடத்தி பி.ஜே.பி-யின் தலைமையிலிருந்த மத்திய அரசைக் கவிழ்க்க முயலவில்லையா? கலைஞரையும், ஜெயலலிதாவையும் மாறி மாறி விமர்சித்து, அந்த இருவரோடும் அடுத்தடுத்து கூட்டணி அமைத்து, வைகோ சந்தர்ப்பவாதப் பள்ளத்தில் சரிந்து விழுந்து தன்னுடைய நம்பகத்தன்மையை இழக்கவில்லையா?

'இக்கரைக்கும், அக்கரைக்கும் பரிசலோட்டி, பரிசலோட்டி... எக்கரை என்கரை என்பது மறக்கும்' என்ற கல்யாண்ஜியின் கவிதை வரிக்கு இலக்கணமாக, இன்று எந்தக் கட்சியோடு நமக்குக் கூட்டு என்று புரியாமல் நிற்கும் மருத்துவர் ராமதாஸின் பட்டாளி மக்கள் கட்சியைச் சந்தர்ப்பவாத சாகசத்தில் மீற இந்தியாவில் இன்னொரு கட்சி உண்டா? ஜெயின் கமிஷனின் சந்தேக நிழல் கலைஞர் மீது விழுவதாக விண்ணுக்கும், மண்ணுக்கும் தாவி, குஜ்ராலின் மத்திய அமைச்சரவையிலிருந்து மாறனை வெளியேற்ற ஒற்றைக் காலில் தவமிருந்து, ஆட்சியைக் கவிழ்த்த

காங்கிரஸ், இன்று கலைஞருக்குப் புகழஞ்சலி செலுத்துவதில் போட்டியிடவில்லையா? கலைஞரின் கரம் பிடித்துத் தோழமை கொண்டாடுவதும், காற்று மாறி வீசினால் போயஸ் தோட்டத்தில் போய் நிற்பதுமாக இடதுசாரி இயக்கங்கள் அடிக்கடி இடம் பெயரவில்லையா?

எங்கேதான் காணக் கிடைக்கிறது சந்தர்ப்பவாத சாகசம் செய்யாத நல்ல அரசியல்?

இந்த அரசியல் கட்சிகளின் சந்தர்ப்பவாதத்தில் மக்கள் நலனுக்கு எங்கே இடம்? சுயநலத்தில் ஊறித் திளைக்கும் தலைவர்களின் திருவிளையாடல்களை இன்னும் எத்தனை நாட்கள் நாம் பார்த்து ரசிக்கப் போகிறோம்? இவர்கள்



அனைவரும் விளையாடும் சதுரங்கத்தில் வெட்டுப்படும் காய்கள் நாம் என்ற புரிதல் எப்போது ஏற்படும்? 'அச்சமின்மை என்பதே இப்போது போதிக்கப்பட வேண்டிய ஒரே மதம். அச்சம்தான் எல்லா அழிவுகளுக்கும் காரணம். அச்சம்தான் துன்பத்தைக் கொண்டு வருகிறது. அச்சமே சாவை நம்மிடம் சேர்த்துவிடுகிறது. அதுதான் அன்றாடம் தீமைகளைப்

பெருக்குகிறது!' என்றார் விவேகானந்தர். 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்று முதலில் உணர்வோம். அரசியலைத் தூய்மையாக்க இனியாவது அணிவகுப்போம்.

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

தேர்தல்...

8

'அந்நிய அரசுக்கு மாற் றாக நம் சுதேசி அரசு ஏற்பட்ட பின்பும், அது சகலவிதமான சுரண்டல் போக்குகளையும் அப்படியே பாதுகாத்தால், சுதந்திரத்தின் நிழலைக் கூட நம்மால் காண முடியாது. இந்தியாவின் உடனடி லட்சியம் மக்கள் மீது நடத்தப்படும் சுரண்டலை ஒழிப்பதுதான். அதுதான் அரசியல் ரீதியில் நாம் சுதந்திரம் அடைந் ததற்கும், ஏகாதிபத்திய பிரிட்டிஷ்

தொடர்பை அறுத்து எறிந்ததற்குமான அடையாளம். இந்தியாவில் படிந்திருக்கும் சகல வர்க்க நலன்களும், சுரண்டல் போக்குகளும் எப்படியும் ஒழித்தாக வேண்டும்!' என்றார் நேரு. அரசியல் அமைப்பின் மூலம் நேரு ஆத்மார்த்தமாக எவற்றை ஒழிக்க ஆசைப்பட்டாரோ, அந்த அரசியல் அமைப்பே இன்று அவற்றைப் பாதுகாக்கும் வலிமையான இரும்புக் கவசமாகி விட்டது.



அரசியல்வாதிகளும், அதிகார வர்க்க மும்தான் இப்போது சுரண்டல் கும்பலின் சூத்திரதாரிகள்.

தமிழகத்தில் ராஜாஜி, பிரகாசம், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா, காம ராஜர், பக்தவத்சலம், அண்ணா ஆகியோர் முதல்வர்களாக இருந்தபோது அதிகார வர்க்கம் அடக்கமாக இருந்தது. தலைமை ஒழுங்காக இருக்கும் வரை, அதிகார வர்க்கம் வாலை

சுருட்டியபடி வேலை பார்க்கும். தவறான பலவீனங்கள் உள்ள தலைமையானால், அதிகார வர்க்கம் அச்சம் நீங்கித் தனது சுயமுகம் காட்டும்; தவறு செய்வதற்கான பட்டியலை அதுவே தயாரித்துக் கொடுக்கும். 'ஆற்று நீரை நீயும் நானும் சேர்ந்து குடிப்போம்!' என்று சமத்துவம் கொண்டாடும். சமூகக் குற்றவாளிகளோடு சரசமாடும். ஆட்சித்தலைமையில் வந்து அமரும் மனிதர்களின் தரத்தைப் பொறுத்தே சமூகத்தின் தரமும் இருக்கும். இந்த சூட்சுமத்தை உணர்ந்து நாம் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். நமது விதையை ஒவ்வொரு தேர்தலிலும் நாம்தான் நிர்ணயிக்கிறோம். நமது வாக்குச்சீட்டை டாஸ்மாக் சாராயத்துக்கும், காந்தி படம்

போட்ட ரூபாய் நோட்டுக்கும், பிரியாணி பொட் டலத்துக்கும், இலவச வேட்டி புடவைக்கும் விற்கத் தொடங்கினால், ஜனநாயகம் கல்லறையில் படுத்துக் கண்மூடி விடும்!


சமத்துவமும், சகோதரத்துவமும் செழிக்க, மக்கள் சுதந்திரத்தை சுவாசிக்க வேண்டும். சுதந்திரக் காற்று

வீசுவதற்கு ஜனநாயகக் கதவுகள் திறந்திருக்க வேண் டும். அந்தக் கதவுகள் இற்று விடாமல் இருக்க, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் மராமத்து நடக்க வேண்டும். மராமத்துப் பணிகளில் ஊழல் நடந்தால், மாளிகை பாழாகும். அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் வாக்குரிமை பற்றிய விவாதம் நடந்தபோது, பரிபூரண ஜனநாயகத்தை பாரதத்தில் வளர்த்தெடுக்க விரும்பிய நேரு, 21 வயது நிறைந்த அனைவரும் வாக்களிக்க வழி வகுத்தார். அரசியல் நிர்ணய சபைக்குத் தலைமையேற்ற ராஜேந்திர பிரசாத் படிப்பறியாப் பாமரர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படுவதை விரும்பவில்லை. பூனா வழக்கறி ஞர் சங்கத்தில் 1959 நவம்பரில் பங்கேற்றுப் பேசிய, நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத், 'ஜனநாயகத்தில் தலைகள் மட்டுமே கணக்கில் கொள்ளப்படுகின்றன. தலைக்குள் என்ன இருக்கிறது என்பது குறித்து யாரும் கவலைப்படுவதில்லை!' என்று குறிப் பிட்டார்.

உலகில் கல்வி வெளிச்சம் காணாத மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியர். வாக்குரிமை பெறுவ தற்கு ஒருவர் குறைந்த பட்ச கல்வித் தகுதியைப் பெற் றிருக்க வேண்டும் என்று விதித் திருந்தால், படித்தவர் எண்ணிக்கையும் பெருகியிருக்கும் என்பது உண்மை. படித்தவர்கள் வருகையால் அரசியல் தரம் உயரும் என்று ராஜேந்திர பிரசாத் நம்பினார். ஆனால், படித்தவன்தானே சட்டத்தின் சந்து பொந்துகளைச் சரியாகக் கண்டறிந்து, தவறுகளை, எந்தத் தவறுமின்றி செய்து முடிக்கிறான்! எம்.ஜி.ஆர். 1977-ல் நடந்த பொதுத் தேர்தலில், படித்தவர்களையே வேட்பாளர்களாகத் தேர்வு செய்து களத்தில் நிறுத்தினார். அவர்கள் அனைவரும் வள்ளுவரின் வாரிசுகளாகவா வலம் வந்தனர்? 'படித்தவன் சூதும் வாதும் பண்ணினால் ஐயோ என்று போவான்' என்று சபித்தான் பாரதி. ஆனால், மகாகவி மனம் நொந்து கொடுத்த சாபம் கொஞ்சமும் பலிக்கவில்லையே? சூதும் வாதும் செய்யும் படித்த வர்க்கம்தானே பங்களாவும், தோட்டமும், காருமாக பவனி வருகிறது! தேர்தலில் ஏழைப் பாமரன்,

வாக்குச்சீட்டின் வலிமையறியாமல் மலிவு விலைக்குத் தன்னை விற்கிறான். படித்த, படிக்காத ஏமாற்று அரசியல்வாதியோ பதவியில் அமர்ந்ததும் மண்ணையும், பொன்னையும் அறத்துக்குப் புறம்பாக அள்ளிக் குவிக்கிறான்.

தேர்தலில் நிற்கும் எல்லாக் கட்சிகளுக்கும் வெற்றி ஒன்று தான் லட்சியம். இறைச்சிக் கடைக்கு வள்ளலார் பெயர் வைத்த பொருத்தம்தான் தேர்தலின்போது கூட்டணி காணும் பொருத்தமும்.




'யானையும் சிங்கமும் கூடிக் குலவும்; புலியும் மானும் ஒன்றாக நீரருந்தும்; மயிலும் பாம்பும் சேர்ந்து விருந்துண்ணும். பொதிகை மலையில் அகத்தியர் ஆசிரமத்தில் இந்த அதிசயம் அன்றாடம் நிகழும்!' என்று குமரகுருபரர் மீனாட்சி அம்மைக் குறத்தில் பாடிய பாடல் ஒன்றுண்டு. இவற்றை விட அதிசயங்கள், நம் தேர்தல் திருவிழாவில் நடப்பதை நாம் பார்க்க முடியும்!

ராஜாஜியும் அண்ணாவும் 1967 தேர்தலில் காமராஜரை

வீழ்த்த ஒன்றிணைந்தனர். காமராஜரும் ராஜாஜியும் 1971 தேர்தலில் கலைஞரை வீழ்த்த கூட்டணி அமைத்தனர். வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும் என்றறிந்திருந்த இந்திரா காந்தி, அதுவரை அரசியலில் எந்தத் தமிழனும் எட்டிப் பிடிக்காத சிகரத்தில் ஏறி நின்ற காமராஜரை படுகுழியில் தள்ள, கலைஞரோடு தேர்தல் உறவு கண்டார். காரியம் முடிந்ததும் கழகத்தை முற்றாக முடித்து விட 1976 ஜனவரியில் கலைஞரின் ஆட்சியைக் கவிழ்த்து, உடன்பிறப்புகளைக் கம்பி எண்ண வைத்தார். எம்.ஜி.ஆரின் அரசியல் செல்வாக்குக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஆசையில், கலைஞர் 'அடிக்கிற கையே அணைக்கும்' என்று இந்திராவிடம் மனுப்போட்டார். 'கோலங்கள்' தொடர் கூட ஒரு வழியாக முடிந்து விட்டது. நம் அரசியல் தலைவர்கள் போடும் சுயநலக் கோலங்கள் மட்டும் முடிவற்று நீண்டு கொண்டே போகிறதே!

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடக்க வேண்டிய நாடாளுமன்றத் தேர்தல் மூன்று ஆண்டுகளில் மூன்று முறை நடந்தது... ஏன்? ஒவ்வொரு முறையும் மக்கள்

வரிப்பணத்தில் 5,000 கோடி ரூபாயை தேர்தலுக்குச் செல வழிக்க அடிப்படைக் காரணம் என்ன? நரசிம்மராவ் 1991-ல் பிரதமரானதும் தன் சிறுபான்மை அரசை ஐந்தாண்டுகள் வெற்றிகரமாக நடத்த ஆடுமாடுகளை ஏலத்தில் எடுப்பது போல், சில கட்சிகளின் எம்.பி-க்களை ரகசிய ஏலத்தில் வாங்கினார். ஏலத்தில் விலை போனவர்களில் ஒருவரான சிபுசோரன், நெறிசார்ந்த மன்மோகன் சிங் அரசில் மத்திய அமைச்சராகவும், கிரிமினல் வழக்கின் விளைவாகப் பதவியிழந்த பின்புகூட இன்று ஜார்கண்ட் மாநில முதல்வராகவும் அதிகாரம் செலுத்த முடிகிறதென்றால்... இந்த நாடு எங்கே போகிறது? அரசியல் விழிப்பு உணர்வற்ற பழங்குடி மக்களை ஏமாற்றித் தேர்தலில் சிபுசோரன் வெற்றி பெறுவதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், நியாயவான் மன்மோகன்சிங் அவரை அமைச்சரவையில் சேர்த்தது எந்த நியாயத்தில் அடங்கும் என்பது புரியவில்லையே. பிரதமர் நாற்காலி மன்மோகன் சிங்கையும் திருதராஷ்டிரனாக மாற்றிவிட்டதே!

வாஜ்பாய் 1996 மே 16 முதல் மே 28 முடிய... வெறும் 13

நாட்கள் மட்டுமே பாரத பிரதமராக நீடிக்க முடிந்தது. எக்கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத நிலையில், அதிக இடங்களில் வென்ற தனிப்பெருங்கட்சியின் தலைவர் என்ற முறையில் பிரதமர் வாய்ப்பு வாஜ்பாய்க்கு வந்து சேர்ந்தது. அவருடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டு காங்கிரஸ் தயவால் தேவகவுடா பிரதமரானார். இந்திரா காந்தியால் ஜெயில் சிங் குடியரசுத் தலைவரானபோது, அந்தப் பதவி அதற்குரிய பெருமையை இழந்தது. 'இந்திரா காந்தி என்னைப் பெருக்கச் சொன்னால் அதையும் செய்யத் தயங்காதவன்!' என்று கூச்சமின்றி வாக்குமூலம் வழங்கியவர் ஜெயில் சிங். கவுடா பிரதமரானதும் பிரதமர் நாற்காலியின் கௌரவம் தூக்கில் தொங்கியது. தேவகவு டாவின் கர்நாடக அரசியல் சித்து விளையாடல்களையும், சமீபத்தில் எடியூரப்பாவை அவர் கூவம் மணக்கும் வாய் திறந்து விமர்சித்த நாகரிகத்தையும் நெஞ்சில் நிறுத்தினால்... அவருடைய தரத்தின் நிறம் தெரியும்.

காங்கிரஸின் கருணையால் கனவிலும் கண்டிராத பிரதமர் பொறுப்பில் அமர்ந்த கவுடா, தீட்டிய மரத்தில் கூர் பார்க்கத்

தொடங்கினார். இந்திரா காந்தி வகுத்த இலக்கணப்படி தலைவராக இருக்கத் தகுதி பெற்ற சீதாராம் கேசரி அப்போது அகில இந்திய காங்கிரஸின் தலைவராக இருந்தார். கவுடா, நரசிம்மராவ் நடத்திய ஏலபேரங்களை வெளிப்படுத்தினார். நரசிம்மராவின் மகன் பிரபாகர ராவ் ஈடுபட்ட 133 கோடி ரூபாய் யூரியா ஊழல் மீது நடவடிக்கையில் இறங்கினார். கேசரி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் அணிவகுத்தன. காங்கிரஸின் 'கை'யைக் கொண்டே காங்கிரஸ் கண்ணைக் குத்திய தேவகவுடாவை விட்டு வைக்குமா காங்கிரஸ்? நம்பிக்கை இல்லாத் தீர்மானத் தில் கவுடா பதவி பறிபோயிற்று. பழைய காங்கிரஸ்காரர் ஐ.கே.குஜ்ரால் புதிய பிரதம ராகப் பொறுப்பேற்றார். அவர் நல்லவர். ஆனால், வல்லவரில்லை.


ராஜீவ்காந்தி படுகொலையில் ஜெயின் கமிஷன் தி.மு.க-வின் மீது சந்தேகம் எழுப்பியது. முரசொலி மாறனின் அமைச்சர் பதவியைப் பறிக்க, காங்கிரஸ் குரல் கொடுத்தது. தி.மு.க. அமைச்சர்கள் நீக்கப்பட்டால்,

காங்கிரஸின் ஆதரவு நீடிக்கும் என்று குஜ்ராலுக்கு அறிவிக்கப்பட்டது. 'மாறன் ராஜினாமா செய்வதா? அல்லது, இந்தியா முழுவதும் இரண்டாண்டு முடிவதற்குள் இன்னொரு இடைத் தேர்தலா? இன்னொரு தேர்தல் 5,000 கோடி ரூபாய் செலவில் நடந்தாலும் சரி, ஐக்கிய முன்னணி ஆட்சி கவிழ்ந்தாலும் சரி, மருமகன் மாறனை பதவி விலகச் சொல்வதில்லை' என்று முடிவெடுத்தார் கலைஞர். குஜ்ரால் ஆட்சி கவிழ்ந்தது. இடைத் தேர்தல் கனிந்தது. இந்த நிலைக்குக் காரணம் கலைஞரும், அவருக்கு எதிராக யுத்த முழக்கம் செய்த காங்கிரஸும். இன்று காங்கிரஸ் தயவில் கலைஞர் ஆட்சி; கலைஞரின் கார்மேகக் 'கருணை மழை'யில் காங்கிரஸ் உறுப்பினர்கள். நாட்டில் 12-வது நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டது. கூட்டணி ஏற்பாடுகள் வியூகம் வகுத்தன. தமிழகத்தில் பி.ஜே.பி-யுடன் ஜெயலலிதா கூட்டணி அமைத்தார். மதவாத சக்தி பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் பாசறையில் படர்வதற்கு ஒரு திராவிடக் கட்சியே(?) வித்தூன்றியது. பெரியாரின் பள்ளியில்

அரசியல் படித்த கலைஞர் ஆர்த்தெழுந்தார். 'பண்டாரங்கள்' என்றும், 'ஆக்டோபஸ்' என்றும் விமர்சனக் கணைகளை வீசினார். 'இட ஒதுக்கீடு, மாநில சுயாட்சி, தமிழ் தேசிய மொழி போன்ற தி.மு.க-வின் கொள்ளைகளுக்கு எதிரான பாசிச ஆர்.எஸ்.எஸ். பரிவாரம் தமிழ் மண்ணில் வேரூன்றினால், சமூக நல்லிணக்கம் சீரழிந்து தமிழகமே ரத்தக் காடாகி விடும்!' என்று எச்சரித்தார். ஆனால், இந்த கலைஞர்தான் ஒரே ஆண்டில் ஆயுள் முடிந்து நாடாளுமன்றத் தேர்தல் 1999 மார்ச்சில் நடந்தபோது, வாஜ்பாயிக்கு வரவேற்பு ராகம் வாசித்து, பி.ஜே.பி-யுடன் கூட்டணி அமைத்து மத்திய அரசிலும் தி.மு.க. அங்கம் வகிக்க அடித்தளமிட்டார். கலைஞரின் கச்சேரியில்தான் எவ்வளவு சுருதிபேதங்கள்!

அரசியலில் நேர்மை, பொதுவாழ்வில் தூய்மை என்ற புனிதமான கோஷங்களுடன் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி, ஜெயலலிதாவின் ஊழல் சொத்துகள் அனைத்தையும் பறிமுதல் செய்து அரசுக் கருவூலத்தில் சேர்க்கும் வரை ஓயப்

போவதில்லை என்று நடைபயணம் நடத்திய வைகோ, அந்த ஜெயலலிதாவுடனும், பி.ஜே.பி-யுடனும் கூட்டணி சேர்ந்து தனக்கிருந்த பெருமையைப் பறிகொடுத்தார். பொடா சட்டத்தின் கீழ் பலமாதங்கள் ஜெயலலிதாவின் ஆட்சியால் சிறையில் தள்ளப்பட்டவர், கலைஞரிடம் கொண்ட கோபத்தால், அடித்த கையிடமே ஆறுதலைத் தேடினார். தலைமைக்குரிய பல தகுதிகள் இருந்தும்; எந்த நேரத்தில் எங்கு நிற்கக் கூடாதோ, அந்த நேரத்தில் அங்கு போய் நிற்கும்' அவசர முடிவுகளால் 'பசிக்கு விதை நெல்லைத் தின்றுவிட்ட விவசாயி' போலானார் வைகோ.



ஒருகணம் பெரியாராகவும், மறுகணம் அம்பேத்கராகவும் மாறி மாறித் தோற்றம் தர முயலும் மருத்துவர் ராமதாஸ், ஒருமுறை ஜெயலலிதாவோடும், மறுமுறை கலைஞரோடும் மாறி மாறிக் கூட்டணி அமைத்து, தமிழக அரசியலில் சந்தர்ப்பவாத சாகசத்தில் சிகரம் கண்டவர். கலைஞரோடு நிற்கும்போது ஜெயலலிதாவையும்,

ஜெயலலிதாவுடன் சேரும்போது கலைஞரையும் வன்மையான வார்த்தைகளால் வறுத்தெடுத்து விட்டு, அரசியல் லாபத்துக்காக எப்படி இவரால் மீண்டும் அவர்களோடு சேர்ந்து சிரிக்க முடிகிறது? அதை விட ஆச்சர்யம், கலைஞரும், ஜெயலலிதாவும் இவரது வசைமாரிகளை மறந்து, தங்கள் கூட்டணியில் மீண்டும் எப்படி சேர்த்துக் கொள்கிறார்கள் என்பதுதான். தனியருவன் நேர்மையான விமர் சனத்தை நெஞ்சத் துணிவுடன் வைத் தால், அவனை அழித்தொழிக்க முயல் வதும், சாதிசார்ந்த வாக்கு வங்கி இருந்தால் தரங்குறைந்த ஏச்சுகளையும் மறந்து தழுவிக் கொள்வதும் தலைவர்கள் கையாளும் தனி வழி போலும்.

கலைஞரின் பிடிவாதத்தால் 1998-ல் நாடாளுமன்றத் தேர்தல். ஜெயலலிதாவின் தன்னலத்தால் 1999-ல் நாடு மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தது. இந்த இரண்டு தேர்தல்களால் மக்கள் வரிப்பணம் பத்தாயிரம் கோடி பாழ்பட்டதில் நாடு கண்ட நன்மை என்ன? நாடாளு மன்றத்திலும் சட்டப்பேரவைகளிலும் கிரிமினல்

குற்றச்சாட்டுக்குள்ளானவர்களைக் கொஞ்சமும் சமூகப் பொறுப்பு உணர்வில்லாமல் தேர்ந்தெடுக்கும் மக்கள் கரங்களில் வாக்குச்சீட்டு எதற்கு? இவர்களுக்குப் பணம் காய்க்கும் மரமாக தேர்தல் மாறிய பின்பு, அந்தத் தேர்தல்தான் எதற்கு? வரங்களே சாபங்களானால் தவங்கள் எதற்கு?

'கிரிமினல்கள் அரசியலில் இடம் பெறுவது நல்ல தல்ல. இவர்களை சட்டம் அல்ல... அரசியல் கட்சிகளே தடுத்து விட முடியும். கிரிமினல் குற்றங்களில் ஈடுபடுபவர் களுக்குத் தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சிகள் அனுமதிக்க மறுத்தால், இந்தப் பிரச்னை தீர்ந்து விடும்!' என்றார் தகுதி மிக்க குடியரசுத் தலைவராகத் திகழ்ந்த கே.ஆர். நாராயணன். கம்யூனிஸ்ட் கட்சிகள்தான் கிரிமினல்களை வேட்பாளர்களாக நிறுத்துவதில்லை. அதனால்தான், அந்தக் கட்சிகளுக்கு நம் மக்களிடம் பெரிய வரவேற்பு இல்லையோ?

வாக்குறுதி!

9 அரிச்சந்திரன் விஸ்வாமித்திரனுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் முயற்சியில்... தன்னுடைய அரசைத் துறந்தான்; காசி நகர் அடைந்து மனைவியையும், மகனையும் வேதியன் ஒருவனிடம் விலைக்கு விற்றான். தன்னை ஒரு புலையனிடம் ஒப்புக்கொடுத்து, அவனிடம் அடிமை ஊழியம் ஆற்றினான். உயிரைக் கொடுத்தாவது, வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதே தன்னுடைய சுதர்மம் என்று அவன் உறுதிகொண்டிருந்ததாக... அரிச்சந்திர

புராணம் உரைக் கிறது. கைகேயிக்குத் தந்த வாக்கைக் காப்பதற்கு தசரதன் தன் உயிரையே தாரை வார்த்தான் என்கிறது ராமாயண இதிகாசம். ஆனால், நம் அரசியல்வாதிகள் வகுத்துக் கொண்ட வாழ்நெறியே வேறல்லவா! அவர்களுக்கு இருக்கும் ஆயிரம் வேலைகளில், வாக்குறுதியை நினைத்துப் பார்க்க நேரம் எங்கே இருக்கிறது?





துரோணரும், துருபதனும் ஒரே குருகுலத்தில் ஒன்றாக வித்தை பயின்றபோது, இருவருக்கும் இடையில் நெருங்கிய நட்பு மலர்ந்தது. நட்பின் நெகிழ்ச்சியில் ஒருநாள், 'நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும் என் அரசில் பாதியை உனக்குப் பகிர்ந்தளிப்பேன்!' என்று துரோணரிடம் வாக்களித்தான் துருபதன். காலம் அதன் கதியில் ஓடியது. துருபதன் பாஞ்சாலத்தின் அரசனாகப் பதவியேற்றான். துரோணரோ, தன் பிள்ளை அசுவத்தாமனுக்குப் பால்

வாங்கவும் வழியின்றி வறுமையில் வாடினார். பழைய நட்பின் பாசத்தில் அவர் பாஞ்சாலம் சென்று துருபதனிடம் உதவி கேட்டார். 'அரசனாகிய என்னை நீ எப்படி நண்பனாக நினைக்கலாம்? எந்த நட்பும் எல்லாக் காலமும் நீடிப்பதில்லை. கோழையோடு வீரனும், ஏழையோடு அரசனும் எப்படி நட்புக் கொள்ள முடியும்? என்றோ நான் அளித்த வாக்குறுதியை அன்றே மறக்காமல், இன்று வந்து என்முன் நிற்கும் உன்னைப் போன்ற முட்டாளை எங்கும் பார்க்க முடியாது!' என்று பழித்து அவமானப்படுத்தினான் துருபதன். ஆட்சி நாற்காலியில் அமர்ந்ததும், அளித்த வாக்குறுதியை மறப்பது மகாபாரதக் காலம் தொட்டு இன்றுவரை தொடர்கிறது.

நாடு விடுதலை அடைந்ததும் பாலாறும் தேனாறும் தானாகப் பாய்ந்தோடும் என்று காங்கிரஸ் தலைவர்கள் வாக்குறுதி வழங்கினர். சுதந்திரம் வந்து சேர்ந்து 62 ஆண்டுகள் ஆனபின்பும், ஏழைகள் இருக்கும் இடத்தில் பாலாறும் பாயவில்லை;

தேனாறும் தென்படவில்லை. பள்ளம் தேடியே தண்ணீர்

பாயும். ஆனால், நம் ஆட்சியாளர்களால் பயன் பெற்றவர்கள் மேட்டுக்குடி வர்க்கமே தவிர, பள்ளத்தில் இருக்கும் பாமர ஏழைகள் அன்று. இந்தியாவில் 600 கட்சிகளுக்கு மேல் இருக்கின்றன. நான்கு மாநிலங்களில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், தேசியக் கட்சிகள் என்ற தகுதியைப் பெறுகின்றன. தேர்தல் கமிஷனால் 9 கட்சிகள் தேசியக் கட்சிகளாகவும், 38 கட்சிகள் மாநிலக் கட்சிகளாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்சிகள் ஒவ்வொரு தேர்தலிலும் வழங்கிய வாக்குறுதிகளை எந்த வாக்காளரும் நினைவில் நிறுத்துவதில்லை. இதற்கு முக்கியக் காரணம், தேர்தல் அறிக்கைகளும் தேர்தல் நேரத்து வாக்குறுதிகளும் வெறும் சடங்குகளாகி விட்டதுதான்.

'காங்கிரஸ் 1952 முதல் 2009 வரை ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் எத்தனை வாக்குறுதிகள் வழங்கியது... அவற்றுள் எத்தனை வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டன?' என்று எந்த காங்கிரஸ் தலைவராவது சொல்லக் கூடுமா? தன்னுடைய தகர்ந்து போன அதிகாரக் கூட்டமைப்பைத்

தக்க வைத்துக் கொள்வதற்கு இந்திரா காந்தி 1971-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 'வறுமையே வெளியேறு' என்று போர்ப்பரணி பாடினார். இரண்டு தட்டுத் தட்டினால் இடம் பெயர்வதற்கு வறுமையென்ன எருமையா? இந்தியாவின் முதல் பிரதமராகப் பொறுப்பேற்ற நேரு 17 ஆண்டுகளும், அவருடைய மகள் இந்திராகாந்தி 16 ஆண்டுகளும், இந்திராவின் மகன் ராஜீவ் 5 ஆண்டுகளும், சோனியாவின் வழிகாட்டுதலில் மன்மோகன் சிங் 5 ஆண்டுகளும் நாட்டின் உயர் பதவியில் அமர்ந்து ஆட்சி நடத்தினர். சோனியாவின் கண்ணசைவுக்கேற்ப காரியமாற்றும் பிரதமராக மன்மோகன் சிங் இன்றும் தொடர்கிறார். ஒரு குடும்பத்தின் ஆளுகையில் பாரததேசம் 43 ஆண்டுகளுக்கு மேல் ஆட்பட்டுக் கிடந்து என்ன பயன்? வறுமை முற்றாக வெளியேறியதா? இன்றும் எண்பது கோடி மக்களின் ஒருநாள் வருமானம் இருபது ரூபாய்க்கும் குறைவு என்றுதானே சென்குப்தா குழுவின் அறிக்கை அதிர்ச்சித் தகவல் தந்திருக்கிறது. அப்படியானால்... உலக மயமாக்கலும், தாராள

மயமாக்கலும், தனியார் மயமாக்கலும் கொண்டு வந்த புதிய பொருளாதாரம் யாருக்குப் பயன் தருகிறது? சிதம்பரம் போன்றவர்கள் நிதியமைச்சர்களாக இருந் ததில் ஆதாயம் அடைந் தவர்கள் அம்பானிகளா? கூவம் நாற்றத்தில் குடிசைக்குள் வாழும் ஏழைக் குப்பன்களா?

தமிழகத்தில் திராவிட இயக்கங்கள் வெறும் தேர்தல் கட்சி களாகத் தேய்ந்து போன பின்பு... வழங்கிய வாக்குறுதிகளுக்குப் பஞ்சமே இல்லை! நிறைவேற்றவே முடியாத வாக்குறுதியைத் தந்து வாக்காளர்களை ஏமாற்றிய முதல் அரசியல் குற்றவாளி அறிஞர் அண்ணா. 1967-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவோம்!' என்று வாக்குறுதி வழங்கி அனைவரையும் வியப்பிலாழ்த்தினார் அண்ணா. 'தவறினால் முச்சந்தியில் நிறுத்திச் சவுக்கால் அடியுங்கள்!' என்று ஆணித்தரமாக அவர் பேசிய பேச்சு, ஏதுமறியாப் பாமரர்களை ஏமாற்றியது. கழகத்தின் தேர்தல் அறிக்கையில் இடம் பெறாத அந்த வாக்குறுதி, மாலை நேரத்து மேடைப் பேச்சில் வந்து

விழுந்தது. எம்.ஆர்.ராதாவால் சுடப்பட்டுக் காயக்கட்டுகளுடன் தோற்றம் தந்த எம்.ஜி.ஆர். சுவரொட்டியும், மாணவர்கள் 1965-ல் நடத்திய மொழிப் போராட்டமும், அண்ணாவின் மூன்றுபடி அரிசி வாக்குறுதியும்தான் தி.மு.க-வை ஆட்சியில் அமர்த்தின. அண்ணா சொன்னபடி ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி போட முடியவில்லை. 'நாடோடி மன்னன்' திரைப்படத்தில் எம்.ஜி.ஆர். 'ஆளுக்கு ஐந்து ஏக்கர் நிலம், இரண்டு காளை மாடுகள் இலவசமாகத் தரப்படும்' என்று வசனம் பேசியதையே வாக்குறுதியாக நம்பி, அவரை முதல்வராக்கிய 'அறிவாளிகள்' நாம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்டவர்கள், தமிழுக்கு மத்திய அரசு செம்மொழித் தகுதியைத் தந்து விட்டதையே 'மாநில சுயாட்சி' பெற்றவர்கள் போல் பெருமை பொங்கப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு திராவிடக் கட்சிகளும் தேர்தல் உற்சவத்தின்போது வழங்கும் வாக்குறுதிகள் மக்கள் நலனைப் பெருக்குவதற்காக அன்று. ஜெயலலிதா ஆட்சி நாற்காலியில் அமர்ந்து விடக் கூடாது

என்பதற்காக கலைஞரும், முதல்வர் பதவியிலிருந்து கலைஞரை இறக்கியாக வேண்டும் என்ற தவிப்பில் ஜெயலலிதாவும் போட்டி போட்டு வாக்குறுதிகளை வழங்குகின்றனர். இந்த வாக்குறுதிப் போட்டியில் அரசின் நிதிநிலை குறித்த அக்கறை இருவருக்குமே இல்லை.

திருச்செந்தூரிலும், வந்தவாசியிலும் இடைத் தேர்தல் வந்தது. தி.மு.கழகம் திருச்செந்தூரில் 40 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறும் என்று அழகிரி அறிவித்தார். அவர் எந்த இலக்கை நிர்ணயித்தாலும், அதை எளிதாக அடையும் வழி முறையை அவர் அறிவார். மகா பாரதத்தில் சகுனி சொன்னபடி சூதாட்டக் காய்கள் விழுவதைப் போன்று தேர்தல் களத்தில் அழகிரி அறிவித்தபடி வாக்குகள் வந்து விழும். 'அழகிரி காய்ச்சலில் மூளை குழம்பிய முன்னாள்' தமிழக நிதியமைச்சர் பொன்னையன் திருச்செந்தூர் சென்று, 'அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் ஒரு பவுன் தங்கம் ஐயாயிரம் ரூபாய்க்குத் தரப்படும்' என்று திருவாய் மலர்ந்தார். தங்கத்தின் விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு

தமிழக அரசிடம் இல்லை என்பதையும், சர்வதேசப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளே தங்கத்தின் அன்றாட விலையைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நிதியமைச்சராக இருந்தவர் அறியாதவரா? மனச்சான்றை மறந்து மக்களை ஏமாற்றும் மலிவான வாக்குறுதிகளை வழங்கும் அரசியல்வாதிகளை இனியும் நாம் நம்பி ஏமாறப் போகிறோமா?

கலைஞர் 2006- சட்டமன்றத் தேர்தலின்போது வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறை வேற்றிவிட்டார் என்று புகழாரம்சூட்டப் படுகிறது. வாக்குறுதி வழங்கியபடி நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் உரிய வேகத்துடன் செயற் படுத்தப்படவில்லை என்ற விமர்சனம் இன்னொரு பக்கம் எழுப்பப்படுகிறது. ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, ஏழைகளுக்கான காப்பீட்டுத் திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சி, நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலம் வழங்கும் திட்டம் என்று பல நலத்திட்டங்கள் அடித்தட்டு மக்களிடம் பரவலாக வரவேற்பைப் பெற்றிருப்பது மறுக்க முடியாத

உண்மை. ஆனால், ஏழ்மையை முற்றாக அகற்றும் பொருளாதாரத் திட்டங்கள் ஒன்று கூட இந்த அரசிடம் இல்லை என்பதும் புறக்கணிக்க முடியாத உண்மை. பழுதாகிவிட்ட பகுதியில் பராமரிப்புப் பணியைச் செய்யாமல், பளபளப்புப் படுதா விரித்து மறைப்பதில் கலைஞரின் கைவண்ணம் ஈடிணையற்றது.

முறைகேடுகள் நடக்காத தேர்தலை இனி நாம் காணக்கூடும் என்ற நம்பிக்கை கால நடையில் பொய்த்து விட்டது. பணபலம், அடியாள் பலம், அதிகார பலம் ஆகிய மூன்றும்தான் தேர்தல் வெற்றியைத் தேடித் தரும் என்றால், உண்மையான ஜனநாயகம் எப்படி உயிர் வாழும்? நியாயமான தேர்தல் நடக்கவில்லை என்று கலைஞர் அரசைக் குறை கூறும் ஜெயலலிதா



முதல்வராக இருந்தபோது சென்னை மாநகராட்சித் தேர்தலில் வாக்குச்சாவடிகள் கைப்பற்றப்படும் பீகார் அரசியலைப் பின்பற்றியது குறித்து வாய் திறப்பாரா? அமைச்சர்கள் அனைவரும் இடைத்தேர்தல்

நடக்கும் தொகுதிகளை முற்றுகையிடும் போக்கை ஜெயலலிதாதான் முதலில் கும்மிடிப்பூண்டியிலும், காஞ்சிபுரத்திலும் அறிமுகப்படுத்தினார். தவறான அரசியலில் ஜெயலலிதா முதுகலைப் பட்டம் பெற்றவர் என்றால், கலைஞரும், அவருடைய சகாக்களும் முனைவர் பட்டம் பெற்றவர்கள் என்பதுதானே பொய்மைக் கலப்பற்ற மெய்? கள்ளவாக்குப் போடுவதை ஒரு கலையாகவே கற்றுத் தேர்ந்தவர்கள் அல்லவா கழகக் கண்மணிகள்!

திருமங்கலம் பாணிதான் இனி எல்லா இடங்களிலும் பின்பற்றப்படுமெனில், நேர்மையும், உண்மையும் சார்ந்த சமூகப் பொறுப்பு உணர்வு மிக்க சாதாரண மனிதர்கள் தேர்தலில் எப்படி நிற்க முடியும்? அழகிரி உருவாக்கிய 'திருமங்கலம் தேர்தல் முறை' 1957-ல் காங்கிரஸ் அரசால் பின்பற்றப்பட்டிருந்தால்... அண்ணாவும், கலைஞரும், அன்பழகனும், நாவலரும் சட்டமன்றத்துக்குள்ளேயே நுழைந்திருக்க முடியாதே! அன்றைய தி.மு.க-வின் தலைவர்கள் அனைவரும் ஏழையும் பாழையுமாக இருந்த சாமானியர்கள்தானே! '1957 தேர்தலில் தி.மு.கழகம்

ஈடுபடும்போது, அதற்கிருந்த வசதிகள் குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. பணம்... அது பற்றி வாழ்க்கையிலேயே கவலைப்படாத தி.மு.கழகத் தோழர்கள் தேர்தலிலும் கவலைப்படவே இல்லை... 'எதிர்த்துப் போட்டியிடுபவர்களின் பணபலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் பணியாற்றுங்கள். வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களை விற்றேனும் அவசியமான செலவுகளைச் சரிக்கட்டித் தேர்தல் பணியாற்றுங்கள்' என்பது அறிஞர் அண்ணா இட்ட கட்டளை. வாழ்க்கைப் பிரச்னைக்கே பணத்துக்காகத் திணறிக் கொண்டிருந்த கழகத் தோழர்கள், தேர்தல் பணிக்காகப் பணத்துக்கு அலைந்ததை என்னால் மறக்க முடியாது' (கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' முதல் தொகுதி) என்று எழுதியிருக்கும் கலைஞரின் கழகம்தான் 'திருமங்கலத் தேர்தல் திருவிழா' நடத்தியது என்பது நம்மை அதிர வைக்கும் உண்மை அல்லவா! அண்ணா அன்று கழகத்தவரை 'சாலையோரத்துச் சாமானியர்கள்' என்று வருணித்தார். அந்த சாலையோரத்துச் சாமானியர்களில் பலர் இன்று

அம்பானிக்கும், பிர்லாவுக்கும் போட்டியாளர்களாக வளர்ந்தது எப்படி?

'என்னிடமிருந்த 1335 எண்ணுள்ள ஃபியட் கார், முரசொலி அலுவலகத்திலிருந்து ஒரு பழைய வேன், அச்சடிக்கப்பட்ட என்னுடைய வேண்டுகோள் அடங்கிய துண்டுத்தாள், ஒரு டேப்ரிக்கார்டர். இவைதான் சாதனங்கள்' என்கிறார் 'நெஞ்சுக்கு நீதி'யில் கலைஞர். இந்த சாதனங்களுடன் சென்று குளித்தலையில் 1957-ல் வெற்றிபெற்ற கலைஞர், இதே சாதனங்களுடன் ஒருவர் களத்தில் நின்று சட்டமன்றம் செல்லும் சூழலை இன்றில்லாமல் செய்து விட்டாரே! இந்தியாவிலேயே ஆந்திரம், கர்நாடகம், தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்களில்தான் ஒவ்வொரு தொகுதிக்கும் கோடிக்கணக்கில் செலவழிக்கப்படுகிறது. இன்றுள்ள நிலையில் காமராஜரும், கக்கனும் வெற்றி பெறக்கூடுமா?

'ஜனநாயகம் பிரபுக்கள் ஆட்சியை விடவும் கீழானது. ஏனெனில், சமத்துவம் என்ற பொய்யான யூகத்தை அது அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதன் விளைவாக,

திறமை எண்ணிக்கைக்கு பலியாகிறது. தந்திரங்களால்தான் எண்ணிக்கை இயக்கப்படுகின்றன. மக்கள் மிக எளிதில் திசை திரும்பக் கூடியவர்கள். கருத்தளவில் அவர்கள் திடபுத்தி இல்லாதவர்கள்' என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே அரிஸ்டாடில் எழுதி வைத்ததற்கு இலக்கணமாக இந்திய ஜனநாயகம் இருக்கிறது. 'ஒரேயரு அயோக்கியனை மக்கள் சமாளிப்பதற்குப் பெயர் சர்வாதிகாரம். ஒவ்வொரு அயோக்கியனையும் சமாளிப்பதற்குப் பெயர்தான் ஜனநாயகம்' என்பது கண்ணதாசனின் கண்டுபிடிப்பு.

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# இலவசம்!

10 இலவசத் திட்டங்கள் மூலம் ஓர் அரசு, மக்களின்

ஏழ்மையை அகற்ற முயல்வது, ஓட்டைப் பாத்திரத் தில் தண்ணீரை சேகரிப்பதற்கு ஒப்பானது. அரசிடம் கையேந்தி நிற்கும் மனோபாவம் முதலில் மாற வேண்டும்.

உழைப்பைத் தராமல் பெறும் பொருள் 'திருட்டுப் பொருள்' என்றார் மகாத்மா. 'உழைக்காமல் உண்பது பாவம்' என்கிறது பகவத்கீதை'. உழைப்புக்கு வழியில்லாதபோது ஏழைகள் எப்படிப் பசியாறுவது?' என்ற கேள்வி எழுவது இயல்பு. இந்த வினாவுக்கு விடை காண்பதுதான் மக்கள் நலன் சார்ந்த அரசின் முதற்கடமை.



'இந்தியா ஏழை நாடல்ல; ஏழைகளின் நாடு' என்றார் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் வி.கே.கிருஷ்ணமேனன்.

வளம் மிக்க நாட்டில் வறுமையோடு மக்கள் வாழ்வதற்கு ஒரே காரணம் சரியாகத் திட்டமிடத் தெரியாத ஆட்சியாளர்கள்தான்.

உடலில் நோய் தீர நாம் சரியான மருத்துவரைத் தேடிச் செல்கிறோம். நன்றாகப் பேசத் தெரிந்தவரா, கவர்ச்சியான தோற்றம் உள்ளவரா என்று நாம் அப்போது முக்கியத்துவம் தருவதில்லை. ஆனால், நம் வாழ்வை நிர்ணயிக்கும் தேர்தல் களத்தில், ஆட்சிக்கலையில் தேர்ந்தவரா என்று ஆராயாமல், பேசத் தெரிந்தவரையும் அழகாக இருப்பவரையும் ஆதரிக்கிறோம். விளை பொருள்களின் உற்பத்தியை அதிகரித்து, வேலை வாய்ப்பைப் பெருக்கி, மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்தினால், அரசிடம் யாரும் கையேந்தும் அவசியம் எழாது. அதற்குத் தேர்ந்த பொருளாதார அறிவு தேவைப்படுகிறது. நாம் எல்லாத் துறையிலும் பொருளாதார மேதைகளையும், அறிவியல் அறிஞர்களையும், கல்வியாளர்களையும், தொண்டுள்ளம் கொண்ட கர்மவீரர்களையுமா அமைச்சர்களாகப்

பெற்றிருக்கிறோம்?

காந்தியப் பொருளாதார நிபுணர் ஸ்ரீமன் நாராயண் 1968-ல் நிகழ்த்திய பட்டேல் நினைவுச் சொற்பொழிவில் குறிப்பிட்ட ஒரு விளக்கம், இலவசத் திட்டங்களில் பணத்தைப் பாழடிக்கும் ஆட்சியாளர்களின் கவனத்துக்குரியது. 'நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வேலை வாய்ப்பற்றவர்களுக்கு அரசு இலவசமாக வழங்குவதாக வைத்துக் கொள்வோம். ஒரு கோடி மக்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு ரூபாய் என்று ஓராண்டு முழுவதும் வழங்கினால் 365 கோடி ரூபாய் வரும். ஐந்தாண்டுகள் இந்த இலவசம் நீடித்தால் 1,825 கோடி ரூபாய் அரசுமானியமாக ஒதுக்கப்பட வேண்டும். இதற்கு மாறாக, கிராமக் கைத்தொழில்களுக்கு ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்தால் கிராமப்புறங்களில் உருப்படியான வேலை வாய்ப்புகள் உருவாகும்' என்றார் நாராயண்.

வாக்காளர்களை எளிதில் ஏமாற்றும் வசீகரம் இலவசத் திட்டங்களில் இருக்கிறது. ஆனால், எந்த இலவசத்

திட்டமும் ஏழ்மையை முற்றாக அகற்றி விட முடியாது. நம் ஆட்சியாளர்கள் அனைவரும் மரத்தடி கிளி ஜோஸ்யக்காரர்கள். தன் சுயநலத்துக்காக ஒரு கிளி ஜோஸ்யர் கிளியின் சிறகை முறித்து அதன் சுதந்திரத்தைப் பறித்துக் கூண்டில் அடைத்து வைப்பார். வியர்வையை நம்பாமல் விதியை நம்பும் ஒருவன் வந்தால், கூண்டைத் திறந்து கிளியைச் சீட்டெடுக்கச் செய்வார். சீட்டை எடுத்துக் கொடுத்ததும் கிளியின் வாயில் ஒரு நெல்மணி வைத்து, மீண்டும் கூட்டில் அடைப்பார். இலவச நெல்மணிக்காக, கிளி தன் சுதந்திரத்தை இழக்கிறது. ஜோஸ்யக்காரருக்கோ வாழ்க்கை நடக்கிறது. நாமும் இலவசங்களில் நம்மை இழந்து ஆள்பவர்க்கு அடிமைகளாகி விட்டோம்.

காமராஜர் தாழ்த்தப்பட்டவரும், பிற்படுத்தப்பட்டவரும் அறிவு வெளிச்சம் பெற்று, அறியாமை இருட்டிலிருந்து விடுபட கல்வியைத்தான் இலவசமாகத் தந்தார். பசித்தவன் வயிறு பற்றியெரியும் போது மூளைக்குள் அறிவு சென்று சேராது என்று அனுபவத்தில் உணர்ந்த

அவர், பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவசமாக மதிய உணவு கொடுத்தார். ஏழ்மையில் பிறந்து, ஏழையாகவே இறுதி வரை வாழ்ந்து, ஏழைகள் உயர இதயம் விரித்த அந்த மனிதர், மதுக்கடைகளைத் திறந்து, அரசுக் கருவூலத்தை நிரப்பி, இலவசங்களைக் கடை பரப்பவில்லை. இரண்டு திராவிடக் கட்சிகளின் ஆட்சிகளில் ஏழை மக்கள் தங்கள் தேவைகளுக்காக அரசிடம் கூச்சமின்றிக் கையேந்துபவர்களாக மாற்றப்பட்டதுதான் பெரிய சமூகக் கொடுமை. மக்களுக்குத் தேவை வேலை வாய்ப்பு; இலவச மானியம் இல்லை என்பது இந்த அரசுக்குத் தெரியாதா என்ன?

கலைஞர் 2006-ல் நடந்த சட்டமன்றத் தேர்தலின் போது, 'தி.மு.கழகத்துக்கு வாக்களித்தால் இலவச வண்ணத் தொலைக்காட்சி, நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் இலவச நிலம், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, விவசாயிகளின் வங்கிக் கடன் ரத்து, ஏழைப் பெண்கள் திருமணத்துக்கு 15 ஆயிரம் ரூபாய், வேலையற்ற இளைஞர்களுக்கு மாதம் 300 ரூபாய் உதவிப் பணம் என்று

இலவச அறிவிப்புகளை அடுக்கினார். எப்படியும் ஜெயலலிதாவிடமிருந்து ஆட்சியதிகாரத்தைப் பறித்து விட வேண்டும் என்பதைத் தவிர, இந்த அறிவிப்புகளுக்கு வேறெந்த சமூக நோக்கமும் இல்லை. இந்த இலவச அறிவிப்புகள் அடங்கிய தி.மு.க. தேர்தல் அறிக்கையைத்தான் பொருளாதார மேதை சிதம்பரம் 'தேர்தல் கதாநாயகன்' என்று மேடைதோறும் வர்ணித்தார்.

தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையைப் பார்த்து ஜெயலலிதா அதிர்ந்தார். 'ஒரு கிலோ அரிசி ரூபாய் 3.50-க்கு வழங்கும்போதே அரசுக்கு 1,500 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த நிலையில் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியை எப்படித் தர முடியும்?' என்று சந்தேகத்தை எழுப்பினார் ஜெயலலிதா. 'தர முடியும்' என்று அன்று மத்திய நிதியமைச்சராக இருந்த சிதம்பரம் கலைஞருக்கு ஆதரவாகச் சான்றிதழ் சமர்ப்பித்தார். அடுத்த கணமே ஜெயலலிதாவின் குரல் மாறியது. 'எங்களுக்கு வாக்களித்தால், பொது விநியோகத்தில் வழங்கப்படும் 20 கிலோ அரிசியில் முதல் 10 கிலோ அரிசி

இலவசம். மீதி 10 கிலோ ரூபாய் 35 கொடுத்து வாங்கிக் கொள்ளலாம். மொத்தமாகப் பார்த்தால் ஒரு கிலோ அரிசி விலை ரூபாய் 1.75 மட்டுமே. கருணாநிதியை விட 25 பைசா குறைந்த விலையில் நான் அரிசி வழங்குவேன்' என்றார் ஜெயலலிதா. 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' படத்தில் பி.எஸ்.வீரப்பா, 'சபாஷ்! சரியான போட்டி' என்ற கதைதான். ஆனாலும், வண்ணத் தொலைக்காட்சி கலைஞரை ஐந்தாவது முறை ஆட்சியில் அமர்த்தி விட்டது.

ஜெயலலிதா ஆட்சியில் அரிசியால் அரசுக்கு இழப்பு 1,000 கோடி ரூபாய். கலைஞரின் 'ஒரு கிலோ 2 ரூபாய்' திட்டத்தால் இழப்பு 1,950 கோடி ரூபாய். நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கான வியூகம் வகுத்து, அண்ணாவின் கனவை நனவாக்குவதாகச் சொல்லி, 'ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி' என்று கலைஞர் அறிவித்த பின்பு இழப்பு 2,700 கோடி ரூபாயாக உயர்ந்தது. உணவுப் பொருள் மானியமாக இப்போது 4,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யவிருப்பதாக நம் துணை முதல்வர் ஸ்டாலின்

சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார். மற்ற மாநிலங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாடுபவர்கள் மட்டுமே குறைந்த விலையில் உணவுப் பொருளைப் பெறுகின்றனர். தமிழகத்தில்தான் ரூபாய் 30 ஆயிரம் மாத வருவாய் உள்ளவருக்குக் கூட ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படும் அதிசயம் அரங்கேறியது. நடுத்தர வர்க்கம் வாங்க விரும்பாத அரிசி கள்ள வாணிகத்தில் கடத்தப்படுகிறது. எவ்வளவு அரிசி எங்கெங்கு வெற்றிகரமாக இடைத்தரகர்களால் கடத்தப்படுகிறது? இந்த கள்ளப் பணம் இறுதியில் யார் யாருக்குப் பங்கு வைக்கப்படுகிறது? யார் அறிவார் பராபரமே?

பொது விநியோகத்தில் வழங்கப்படும் அரிசியின் விலை, வெளிச்சந்தையில் கிடைப்பதை விட மிகக் குறைவாக இருந்தால்... கடத்தல் தொடர் கதையாகவே நடக்கும். எந்த அரசும் இந்தக் கடத்தலைத் தடுத்து நிறுத்த முடியாது. மதுவிற்பனையில் தமிழக அரசுக்கு உள்நாட்டுப் பொருள் வரி (எக்சைஸ் வரி) மூலம் 5,755 கோடியும், விற்பனை வரிமூலம் 4846 கோடியும் 2008-09 நிதியாண்டில் வருவாயாக

வந்து சேர்ந்தது. மொத்தத்தில் மது அருந்துவோர் 10,601 கோடி ரூபாய் வரியாகக் கொடுத்துள்ளனர். அப்படியானால், மது விற்பனை 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நடந்திருக்க வேண்டும். இந்த 15 ஆயிரம் கோடி குடிக்காமல் மக்களிடமே இருந்தால் அவர்கள் தாமாக விரும்பியபடி தரமான அரிசியை வாங்க முடியுமே! அவர்களுக்குப் பிடித்த வண்ணத் தொலைக்காட்சியை அரசிடம் கையேந்தாமல், கௌரவம் கலையாமல் காசு கொடுத்துக் கடையில் வாங்கக் கூடுமே! அவர்களுக்கு வேண்டிய வேட்டி-புடவையை அதர்மம் குலையாமல் சுயமாக வாங்கி அணிய முடியுமே! வாங்கிய ஊதியத்தில் பெரும்பகுதியை டாஸ்மாக்கில் அழுது விட்டுப் புழுதி மண்ணில் ஏழைத் தமிழர் புரளுவதனால்தானே வறுமையில் அவர்கள் வாழ்க்கை நடக்கிறது!

பொங்கல் திருநாளை முன்னிட்டு மூன்று கோடி மக்களுக்கு மேல் இலவச வேட்டி-புடவை வழங்கப்பட்டதாகவும், இதற்கு 256 கோடி ரூபாய் செல வழிக்கப்பட்டதாகவும் அரசு அறிவித்தது. அணிவதற்கு

ஓராடை கூட இல்லாதவர்கள், விழாக்காலத்திலாவது புத்தாடை உடுத்தட்டும் என்றுதான் இலவச வேட்டி-சேலை வழங்கபட்டதாக கருணை பொங்கக் கூறியிருக்கிறார் கலைஞர். நாற்பதாண்டுகளுக்கு மேல் இரு திராவிடக் கட்சிகளும் மாறி மாறி ஆட்சி பீடத்தில் அமர்ந்து, எண்ணிக்கையிலடங்காத நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய பின்பும், 6 கோடிக்கு மேற்பட்ட தமிழரில் 3 கோடிக்கு மேற்பட்டவர்கள் மாற்றாடை கூட இல்லாமல் நலிந்து கிடப்பதை நம் முதல்வரின் அறிக்கை வெளிப்படுத்துகிறது.

அரிசி மானியம் சுமார் 3 ஆயிரம் கோடி ரூபாய். புடவை-வேட்டிக்கு 256 கோடி ரூபாய். இந்த 3256 கோடி ரூபாயில் ஸ்ரீமன் நாராயண் அறிவித்தபடி ஒவ்வோராண்டும் கிராமத் தொழில்களை வளர்த்து, வேலை வாய்ப்பைப் பெருக்கியிருக்கலாமே! ஆனால், அது பாமர வாக்காளர்களை ஏமாற்றி தேர்தலில் வெற்றிக்கனி பறிக்கப்

பயன்படாது என்பதை ஜெயலலிதாவும், கலைஞரும் நன்றாக அறிவார்கள்.

முதல்வரே அறிவித்தபடி மூன்று கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் ஒரு ஜோடி ஆடை கூட இல்லாமல் இருப்பது நிஜமெனில், நூறு நாட்கள் ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், குறைந்த விலையில் உணவுப் பொருள் வழங்கும் பொது விநியோகத் திட்டம், வயதான மக்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் திட்டம், பட்டியலிட முடியாத அளவு பல்கிப் பெருகியிருக்கும் பல்வேறு சமூக நலத் திட்டங்கள் சாதித்தது என்ன? மாற்று ஆடைக்கும் வழியற்ற மக்களுக்கு 2,125 கோடி ரூபாயைக் கொட்டி, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் அரசுக்கும், சமூகப் பொறுப்புணர்வுக்கும் சம்பந்தமுண்டா? தர்மபுரியிலும், கிருஷ்ணகிரியிலும் உள்ள மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் ஒகேனக்கல் திட்டம் 1998-ல் மத்திய அரசின் அனுமதி கிடைத்த பின்பும் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. ஜப்பான் கடனுதவி கிடைக்காததே தாமதத்துக்குக் காரணம் என்கிறார்

கலைஞர். திட்டத்தின் தாமதத்தால் 600 கோடி ரூபாய் அதிகம் செலவாகும் என்கிறது அரசு. வண்ணத் தொலைக்காட்சிக்கு ஒதுக்கிய 2,000 கோடி ரூபாயை, உயிர் காக்கும் குடிநீர் திட்டத்துக்குப் பயன்படுத்தியிருக்கலாமே! வாக்காளர்கள் அனைவரும் இலவச தொலைக்காட்சிப் பெட்டி வேண்டுமென்று கோட்டை முன் கூடி குரல் கொடுத்தார்களா? ஒரு தனிமனிதரின் வாக்கு சேகரிக்கும் தந்திரம், ஒட்டு மொத்தத் தமிழகத்தையே பாதிப்பதுதான் ஜனநாயகத்தின் இலக்கணமா?

விவசாய வளர்ச்சியும், பல் தொழில் பெருக்கமும் சிறக்காத சூழலில் ஏழ்மை எப்படி ஒழியும்? கார் தொழிற்சாலைகளும், கணினி சேவை மையங்களும் கிராமங்களின் வறுமையைக் களைந்து விடுமா? இந்தியாவின் விவசாய வளர்ச்சி விகிதம் 2.9 சதவிகிதம். தமிழகத்தின் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 4 சதவிகிதம். ஆனால், குஜராத்தில் வேளாண் வளர்ச்சி விகிதம் 9.6 சதவிகிதம். 2001-ல் 18 ஆயிரம் கோடியாக இருந்த விவசாயப் பொருள் உற்பத்தி, இன்று 49 ஆயிரம் கோடியாக

உயர்ந்திருக்கிறது. இது மோடியின் சாதனை. விதையின் தரம் உயர்த்தல் பத்தாண்டுகளில் ஒரு லட்சம் சிறிய தடுப்பணைகள் கட்டி நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரித்தல், சொட்டு நீர்ப்பாசனத்தைப் பரவலாக்கல், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தல், விளைநிலங்களை விரிவாக்கல் என்று குஜராத்தில் பசுமைப் புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் விளை நிலங்கள் வீடு கட்டும் லே-அவுட்டுகளாக மாறி வருகின்றன. இலவச அறிவிப்புகளைத் தவிர ஏழ்மையகற்றும் அறிவியல் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் இங்கு எதுவுமில்லை.

'நமக்கு வேண்டியது உழைக்கச் சந்தர்ப்பமோ, வேலை வாய்ப்போ அல்ல. வீடு தேடி வரும் சாப்பாட்டுச் சுகம். விச்ராந்தியாகச் சாய்ந்து கொண்டு, பழைமை பேசிக் கொண்டு இந்த இலவசங்களில் மூழ்கிப் போவதே நம் லட்சியம். ஆரம்பிக்கப்பட வேண்டிய எத்தனை தொழிற்சாலைகளின் முதலீடுகள் இதற்காகத் திசை திருப்பப்படுகிறது? எத்தனை பள்ளிக்கூடங்களும்,

பல்கலைக்கழகங்களும் முடக்கப்படுகின்றன என்பது பற்றி எல்லாம் நமக்கும் கவலை இல்லை.

அரசியல்வாதிகளுக்கும் கவலை இல்லை. ஈர்க்குச்சி ஓசியில் கிடைக்கிறதென்றால் காசு கொடுத்து பல்செட்டு வாங்கும் வர்க்கம் நாம். போயும் போயும் ஓட்டுப் போடவா யோசிக்கப் போகிறோம்!'

- இவ்வளவு தெளிவாக நம்மைப் படம் பிடித்திருப்பவர் யார் தெரியுமா? கலைஞரின் மகள் கனிமொழி. ('பார்வைகள்' பக்கம் 111) ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது கனிமொழி எழுதியது. கலைஞரின் ஆட்சிக்கும் அட்சரம் பிசகாமல் பொருந்துகிறது.

பூக்களின் வண்ணமும், வாசமும் வேறாக இருந்தாலும் தேன் ஒன்றுதான். தி.மு.க., அ.தி.மு.க. என்று பெயர்ப் பலகை மாறினாலும் செயல் ஒன்றுதான்!

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# மது...

11

'மதுவால் பாழாக்கப்பட்ட பேரறிவாளர்களைச் சிந்தியுங்கள்... கற்பனை உலகில் உலவவிட்டுப் பல்லாயிரக்கணக்கான மனிதர்களைப் பித்தர்களாகவும், வெறியர்களாகவும் மாறச் செய்த மது என்னும் பிசாசுப் பொருளைச் சிந்தியுங்கள்... குடியால் ஏற்படும் தற்கொலைகள், மூளைக் கோளாறுகள், ஏக்கங்களை எண்ணிப் பாருங்கள்... மரண ஆற்றில் இரு கரைகளையும் நிறைத்திருக்கும் சிதைவுச் சின்னங்களை நெஞ்சில் நிறுத்துங்கள்... தெளிவாக யோசிக்கும் ஒவ்வொரு மனிதனும் இழிபொருளாகிய மதுவை முற்றாக வெறுத்து ஒதுக்கி விடுவான்!' என்றார் இங்கர்சால்.

'ஒழுக்கமும் நேர்மையும் மக்களிடம் பழுதுபடாமல்



பார்த்துக் கொள்வதே ஒரு நல்லரசின் நோக்கமாக இருக்க வேண்டும்!' என்று வலியுறுத்தினார் கன்பூஷியஸ். தமிழகத்தில் கலைஞருக்கு முன்பு ஆட்சியில் இருந்தவர்கள், ஒழுக்கத்தின் ஆணிவேரை அறுக்கும் மதுவின் மயக்கத்தில் மக்கள் மூழ்கிவிடாதபடி... மதுவிலக்கைப் பின்பற்றினர்! அண்ணாவின் மறைவுக்குப் பின்பு கலைஞர் 1969-ல் முதல்வரானார். அரசின் வருவாயை அதிகரிக்க மாநிலம் முழுவதும் மதுக் கடைகளைத் திறந்து வைத்தார். கள்ளுண்ணாமை குறித்து வள்ளுவன் வலியுறுத்தியதும், மதுவிலக்குக்காக மகாத்மா கொடி பிடித்ததும் அர்த்தமற்றுப் போய்விட்டன. மதுவை 'ராஜதிரவம்' என்றும், 'மகாகவிகளின் தாய்ப்பால்' என்றும் வாழ்த்தி வணங்கும் கூட்டம் இங்கே பெருகிவிட்டது. போதை தரும் பாதையில் சமுதாயத்தின் பண்பாட்டுச் சரிவுப் பயணம், அரசாங்க அங்கீகாரத்துடன் நடந்து

கொண்டிருக்கிறது!

மகாத்மாவின் மனச்சான்றாக மதித்துப் போற்றப்பட்ட ராஜாஜி 1937-ல் சென்னை மகாணத்தின் பிரதம அமைச்சராகப் பொறுப் பேற்றதும், காந்தியத்தின் உயிர் மூச்சுக் கொள்கையான மதுவிலக்கை முதலில் சேலத்தில் அறிமுகப்படுத்தினார். பின்னர் மாநிலம் முழுவதும் நடைமுறைப் படுத்தியபோது, அரசின் வருவாய் பாதிக்கப்படுவதாக எதிர்ப்புக் குரல் எழுந்தது. வருவாய் இழப்பை ஈடுகட்ட இந்தியாவிலேயே முதன் முதலாக ராஜாஜி சென்னை மாநிலத்தில் விற்பனை வரியை அறிமுகம் செய்தார். 1938-ல் அவர் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த போது, சேலம் மாவட்ட ஆட்சியர் டிக்சன் எழுதிய கடிதத்தை வாசித்தார். வெள்ளை அதிகாரி டிக்சன், 'மதுவிலக்கு நடைமுறைக்கு வந்த இந்த மூன்று மாத அனுபவத்தில், ஏழை மக்களுக்கு வந்து வாய்த்த வரமிது என்பதை உணர்ந்து கொண்டேன். மிகக்குறைந்த வருவாயுள்ள கூலித் தொழிலாளர்கள் குடித்து உடலைக்

கெடுத்துக் கொள்வதுடன், குடும்பத்தையும் வறுமைத் தீயில் பொசுக்கி விடுகின்றனர். மதுவிலக்கு வந்தபின்பு அவர்களுடைய வருவாய் வீட்டுக்குச் செல்கிறது. சாவும் நோவும் நீங்கி, அவர்கள் வாழ்வதற்கான வழி பிறந்திருக்கிறது!' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்திய தேசிய காங்கிரஸை உருவாக்கிய ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம், 'குடிபோதை குற்றங்களைத் தூண்டுகிறது. குடியின் மூலம் வரும் வருவாய் 'பாவத்தின் கூலி'(wages of sin)யாகும். அரசுக்கு இதில் ஒரு ரூபாய் வருவாயாக வந்தால், இதனால் விளையும் குற்றங்களைத் தடுக்க இரண்டு ரூபாய் செலவழிக்க நேரும்!' என்றார். இங்கர்சால் அமெரிக்கர்; ஹ்யூம் பிரிட்டனைச் சேர்ந்தவர். இவர்கள் கலாசாரத்தில் மது முக்கிய அம்சம். ஆனாலும், மதுவின் தீமையை விளக்கி, மக்கள் குடிப்பதைத் தடுத்தனர்.

இன்றைய முதல்வரோ, ஐயன் வள்ளுவரிடம் எல்லையற்ற காதல் கொண்ட போதிலும் - குமரிக் கடலில் வள்ளுவருக்கு வானளாவ சிலை வைத்து மகிழ்ந்த

போதிலும் - 'உண்ணற்க கள்ளை' என்று வள்ளுவன் உபதேசித்ததை மட்டும் முன்பே காதில் வாங்க மறந்துவிட்டார்.

'மாநிலம் முழுவதும் மதுக்கடைகள் திறக்கப்படும்' என்று கலைஞர் அறிவித்தும் ராஜாஜி திடுக்கிட்டார். இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக, மத்திய அரசில் உள்துறை அமைச்சராக, வங்காளத்து ஆளுநராக, அடிமை இந்தியாவிலும் சுதந்திர இந்தியாவிலும் சென்னை மாநில முதல்வராக, தேசத்தின் மிக உயர்ந்த தலைவராக பவனி வந்த மூதறிஞர் ராஜாஜி சுயகௌரவம் பார்க்காமல், கொட்டும் மழையில் கோபாலபுரம் சென்று கலைஞரின் கரங்களைப் பற்றி, 'மதுவிலக்கை ரத்து செய்யாதீர்கள். இன்றைய இளைய தலைமுறைக்கு மதுவின் மணமும் நிறமும் தெரியாது. அவர்களைப் பாழ்படுத்தி விடாதீர்கள்!' என்று கண்ணீர் ததும்ப வேண்டினார். கலைஞர் அசைந்து கொடுக்கவில்லை. 'பல்லாண்டுகள் ராஜாஜிக்குப் பக்கத்தில் இருந்து சேவை செய்திருக்கிறேன். மதுவிலக்கு ரத்தானபோது அவர் துடித்த துடிப்பை அதற்கு முன்பு நான்

பார்த்ததில்லை!' என்றார் 'கல்கி' சதாசிவம். இத்தனைக்கும்... அண்ணா ஆட்சியில் அமர்ந்ததும் 'மூன்று படி' வாக்குறுதியை நிறைவேற்ற வழியின்றித் தவித்தபோது, அதிகாரிகள் மதுக்கடைகளைத் திறக்கப் பரிந்துரை செய்தனர்.

> கள்ளுண்ணாமை
> கடைப்பிடித்து
> என்ன கண்டாய் மகாத்மா?
> ஒரு
> மது வியாபாரியால்தான்
> உன் உடைமைகளை
> மீட்டெடுக்க முடிந்தது!
>
> — சுமதி பெனடிக்ட்

'ஆட்சியே பறிபோனாலும் அந்தப் பாவத்தை நான் செய்ய மாட்டேன்!' என்றார் அண்ணா. சாராயம் குடித்து சுயபிரக்ஞை இழந்து, சாக்கடையில் விழுந்து கிடந்தவர்களை நான் பார்த்தது போல், என் பிள்ளைகள் பார்க்க அனுமதிக்க மாட்டேன். அவசியப்பட்டால் காமராஜரோடு கைகோத்து அடுத்த மாநிலங்களில்கூட மதுவுக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபடுவேன்...' என்று அண்ணா சொன்னதாக அகில இந்திய மதுவிலக்கு அமைப்பின் தலைவராக இருந்த சுசீலா நய்யார் பிறகு நெகிழ்வுடன் குறிப்பிட்டார். மதுவிலக்கில் மகாத்மாவைப் போன்று மனவுறுதி காட்டிய

அதே அண்ணாவோ, அரசு வருவாயை அதிகரிக்க லாட்டரிச் சீட்டை அறிமுகப்படுத்தினார். 'செலவோ ஒரு ரூபாய், வரவோ ஒரு லட்சம்' என்றும், 'விழுந்தால் வீட்டுக்கு, விழாவிட்டால் நாட்டுக்கு' என்றும் கவர்ச்சிகரமாக விரிக்கப்பட்ட விளம்பர வலையில் தலைகுப்புற விழுந்தது தமிழினம். நூறு ரூபாய் ஊதியம் பெற்றவன் ஐம்பது ரூபாய்க்குப் பரிசுச் சீட்டு வாங்கினான். முதுகு நோக மூட்டை தூக்கி முப்பது ரூபாய் ஈட்டியவன், இருபது ரூபாய்க்குச் சீட்டுகள் வாங்கிச் சீரழிந்தான். பரிசுச் சீட்டுப் பைத்தியத்தால் நடுத்தர வர்க்கமும், அடித்தட்டு மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டனர். பல மாநிலங்களில் பரிசுச் சீட்டு விற்பனை நடந்த போதிலும், நாட்டி லேயே விற்பனையில் முதலிடம் பெற்று வரலாறு படைத்தது தமிழகம் மட்டுமே. நாகாலாந்து, மிஸோரம், சிக்கிம், அருணாசலப் பிரதேசம், பூட்டான் லாட்டரிச் சீட்டுகளின் வேட்டைக்களமாக விளங்கியது நம் தமிழகம். இன்று லாட்டரிச் சீட்டு விற்பனை தமிழகத்தில் தடை செய்யப்பட்ட நிலையிலும், மறைமுகமாக அங்குமிங்கும்

'சுரண்டும் லாட்டரி' மூலம் ஏழைகளைச் சுரண்டும் போக்குத் தொடருகிறது. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண விரும்பிய' அண்ணா அவசரப்பட்டு தமிழகத்துக்குத் தந்த தவறான கொடைதான் பரிசுச்சீட்டு.

கலைஞர் மதுவிலக்கை ரத்து செய்தபோது எம்.ஜி.ஆர். தி.மு.க-வில்தான் இருந்தார். கோவையில் நடைபெற்ற தி.மு.க. கழகப் பொதுக்குழுவில் மதுவிலக்கை ரத்து செய்யும் தீர்மானத்தை அவர் ஆதரித்துப் பேசினார். கலைஞருக்கும் அவருக்கும் பின்னாளில் பிரச்னைகள் உருவானபோது அவரே 'மதுவிலக்கு மகாத்மா'வாக மாறி, பொது மேடைகளில் கழக ஆட்சியை விமர்சித்தார். தி.மு.க.-விலிருந்து எம்.ஜி.ஆரை வெளியேற்றும் முயற்சியில் அனுப்பப்பட்ட விளக்கம் கேட்கும் கடிதத்திலும், அவர் பகிரங்கமாக அரசின் மதுக்கொள்கையைக் குறை கூறியதுதான் சுட்டிக்காட்டப்பட்டது.

கலைஞருக்குப் பின் எம்.ஜி.ஆர். அரசுக் கட்டிலில் அமர்ந்தார். கள்ளச்சாராயம் குடித்துக் கண்மூடிய ஏழைத்

தொழிலாளிகளுக்காகக் கண்ணீர் வடித்தார். நல்ல சாராயம் கொடுப்பதுதான் கள்ளச் சாராயத்தைத் தடுக்கும் சிறந்த வழி என்ற 'ஞானம்' அவருள் கனிந்தது. 'நான் ஆட்சிக்கு வந்தால் மதுக்கடைகளை மூடுவேன்!' என்று வாக்குறுதி வழங்கியவர், ஆட்சியில் அமர்ந்தபின் சாராய சாம்ராஜ்ஜியத்தை விரிவாக ஸ்தாபித்தார். அன்று முதல் இன்று வரை வற்றாத ஜீவநதியாக மது வெள்ளம் சந்து பொந்துகளிலெல்லாம் பெருக்கெடுத்து ஓடுகிறது. சாராய விற்பனையில் தனியார் கொள்ளை லாபம் ஈட்டுவதைப் பார்த்த தமிழக அரசு, 1983-ல், தானே ஏற்று நடத்த முடிவு செய்தது. அதன் விளைவாகவே மது சப்ளையை கவனிக்கும் தனி பிரிவாக டாஸ்மாக் உருவானது. இரண்டாவது முறை ஜெயலலிதா முதல்வர் பொறுப்பேற்றதும் ஒரு புரட்சி கரமான செயலைச் செய்தார். தனியாருக்கு மது விற்பனையைத் தருவதைவிட, சாராய வருவாய் முழுமையாக அரசுக்கு வந்து சேரும் வகையில் 'டாஸ்மாக்'கை வீதிதோறும் சில்லறை வணிகத்தில் ஈடுபடுத்தினார். நாளுக்கு நாள்

தமிழர்கள் 'பெருங்குடி' மக்களாக மாறத் தொடங்கினர். சாராயக் காசில் அரசுக் கருவூலம் நிரம்பி வழிந்தது. டாஸ்மாக் வருவாய், 1983-84-ல் 140 கோடி ரூபாய். ஏவுகணை வேகத்தில் விற்பனை கூடியதால், 2005-06-ல் சாராய வருமானம் 7335 கோடி ரூபாயாக விஸ்வரூபம் எடுத்தது. கலைஞர் அரசு, 2008-09 நிதியாண்டில் 13,500



கோடியை மதுவில் மட்டுமே சம்பாதித்தது. நடப்பாண்டில் விற்பனை இலக்கு 15 ஆயிரம் கோடியைத் தாண்டி விடக்கூடும். சென்ற நிதியாண்டில் மது வகைகள் மீது விதிக்கப்பட்ட உள்நாட்டுப் பொருள் வரி (Excise) மூலம் 5,755 கோடியும், விற்பனை வரி மூலம் 4,846 கோடியும் அரசுக்கு வருவாயாகக் கிடைத்தது. ஏழையும் பாழையும் குடித்துக் குடித்துக் கொட்டிக் கொடுக்கும் பணம்தான் வண்ணத் தொலைக்காட்சியாகக் குடிசைகளில் கொலுவிருக்கிறது. இடைவிடாமல் தமிழன்

குடித்துக்கொண்டே இருந்தால், இலவசத் திட்டங்கள் வளர்ந்து கொண்டே இருக்கும். குடிக்காத தமிழனே இருக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசின் அறிவிக்கப்படாத அமர லட்சியமோ?!

தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி ஒன்றுதான் மதுவுக்கு எதிராக, வலிமையாகக் குரல் கொடுத்து வருகிறது. காந்தியின் கதர் வாரிசுகள், 'கழக அரசின் தவறுகளைக் கண் திறந்து பாராமல், காது கொடுத்துக் கேளாமல், வாய் திறந்து விமர்சனம் செய்யாமல், மகாத்மாவின் குரங்கு பொம்மைகளாக மோன நிலையில் மூழ்கிவிட்டனர். மருத்துவர் ராமதாஸும், பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் கோட்டையில் கலைஞரை சந்தித்தபோது, 'புதிதாக இனிமேல் மதுக்கடைகள் திறக்கப்படாது. மது விற்பனைக்கான நேரத்தில் ஒரு மணிநேரம் குறைக்கப்படும். மதுவிலக்கு படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும்' என்று உறுதியளித்தார். ஆனால், இப்போதும் புதிய சாராய உற்பத்தி ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்படுவது தொடர்கிறது. மதுக் கடைகளை

முற்றாக மூடிவிட்டால், அடுத்த கணமே கலைஞரின் 'இலவச சாம்ராஜ்ஜியம்' சரிந்துவிடும் என்பதுதான் உண்மை. நம் முதல்வரின் சாதனைச் சக்கரத்தின் கடையாணியே சாராயக் கடைகள்தான். தமிழன் உணவுக்கும், மருந்துக்கும் செலவழிப்பதை விட, சாவதற்கு வழிகாட்டும் சாரா யத்துக்குத்தான் அதிகமாகச் செலவழிக்கிறான். பொது விநியோகத்தில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய். டாஸ்மாக் கடையில் ஒரு பீர் புட்டி 75 ரூபாய்! எங்கே போகிறோம் நாம்?

'உலகம் முழுவதும் மது இருக்கிறது. இந்தியாவில் மட்டும் மதுவிலக்கு எப்படிச் சாத்தியம்?' என்று மகாத்மாவிடம் கேட்டபோது, 'இங்கேதான் மதுவின் வாசனை அறியாத ஒரு புதிய தலைமுறை வளர்ந்து வருகிறது. அதனால், இந்தியாவில்தான் மதுவிலக்கு வெற்றி பெறும் வாய்ப்பு முழுமையாக இருக்கிறது!' என்றார் காந்தி. காந்தியின் கனவை இந்தியா முழுவதும் காங்கிரஸ்காரர்கள் கலைத்தனர். தமிழ்நாட்டிலோ நிலைமை வெகு ஜோர்தான்! வரவிருக்கும் கோடையில் பீர் தட்டுப்பாட்டைச்

சமாளிக்க முன்நடவடிக்கையாக மூன்று லட்சம் பீர் பெட்டிகளுக்கு அரசு அனுப்பாணை (order)வழங்கவிருக்கிறதாம். சாப்பாட்டுக்குத் தட்டுப்பாடு வந்தாலும், சாராயத்துக்கு வந்துவிடலாகாது என்பதில் கலைஞர் அரசுக்குத்தான் எவ்வளவு அக்கறை!

'மது அருந்துவது பாவங்கள் அனைத்துக்கும் தாயாகும். மது அருந்துபவர், பெற்றோரைத் துன்புறுத்துபவர், கூட்டிக் கொடுப்பவர் ஆகிய மூவரும் சொர்க்கம் நுழைய முடியாது' என்றார் நபிகளார். ஆனால், நம்மை ஆள்பவர்கள்தான் இருக்கும் இடத்தையே 'சொர்க்க'மாக்கத் தெரிந்த சித்தர்களாயிற்றே!

– பயணம் தொடரும்–

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# ஊழல்! 12

ஒரு தனி மனிதரிடம் தரப்பட்டிருக்கும் அதிகாரம் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ... அந்த அளவுக்குஅவரால் நாட்டுக்கு ஏற்படும் ஆபத்தும் அதிகமாகிவிடுகிறது என்பது தான் உலக வரலாறு வெளிப்படுத்தும் உண்மை. 'அதிகாரம் ஊழலை வளர்க்கிறது; அளவற்ற அதிகாரம் எல்லையற்ற ஊழலை வளர்க்கிறது!' என்றார் லார்டு ஆக்டன். வாழும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருள், அறவழியில் ஈட்டப்பட வேண்டும் என்பதே இந்திய மண்ணின் கொள்கை. அறம், அரசியலால் செழிக்க வேண்டும்; அரசியல் அறத்தின் வழி நடக்க வேண்டும். 'அறநெறி முதற்றே அரசின் தோற்றம்' என்கிறது புறநானூறு.

'யானையின் காலடிச் சுவட்டில் மற்றெல்லா விலங்குகளின் காலடிச் சுவடுகளும் அடங்குவது போன்றுதான், அரச தர்மத்தில் அனைத்து தர்மங்களும் அடங்குகின்றன' என்று அழகாகச் சொல்கிறது மகாபாரதம்.



'வாழ்க்கை முழுவதும் மக்கள் நலனுக்காக அர்ப்பணிப்பவர் யாரோ, மக்களுக்குத் தீமை தரும் செயல்களை எந்த நிலையிலும் செய்யாமல் இருப்பவர் யாரோ, அவரையே மக்கள் தங்கள் ஆட்சி யாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்' என்று

தன்னுடைய அழியாப் புகழ் பெற்ற 'அரசியல்' நூலில் அறிவுறுத்துகிறார் பிளேட்டோ. 'எண்ணத்தாலும், பேச்சாலும், செயலாலும் அறத்தைப் போற்றி வாழ

வேண்டுமானால்... மனம், மொழி, மெய் என்பவற்றைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருக்கும் ஆற்றல் வேண்டும். அவ்வாறு மனம், மொழி, மெய் அடங்கி ஒத்துழைக்கும் வாழ்வே சிறந்த வாழ்வு' என்று வழிகாட்டியவர் பேராசிரியர் மு.வ. ஆனால், இன்று பல ஆட்சியாளர்களோ ஆசை வழி நடப்பவர்கள்; கோடி கோடியாகக் குவித்த பின்பும் பணப்பசி அடங்காத வர்கள். மக்களுக்கு நல்வழி காட்டும் மேய்ப்பர்களாக இருப்பதற்கு மாறாக, முடிந்தவரை பொதுச்சொத்தை மேய்பவர்களாகத் தங்களை மாற்றிக் கொண்டவர்கள்.

'அமைச்சர்கள், கிடைக்கும் ஊதியத்தில் திருப்தி யுற்று, அந்த ஊதியத்துக்கேற்ப செலவு செய்ய வேண்டும்' என்கிறது சுக்கிரநீதி. 'பொன்னை உருக்கி ஆராய்வது போல, அமைச்சர்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்' என்கிறது அந்த அறநூல். ஆசைகளையும், தேவைகளையும் அளவின்றிப் பெருக்கிக் கொண்ட நுகர்வெறி வாழ்க்கையில்... ஊழல் சகல துறைகளிலும் ஊடுருவி விட்டது. நாடு விடுதலை அடைந்து நம்மவர்கள் ஆட்சி

அமைந்ததும், கும்பகர்ணன் உறக்கத்திலிருந்து விழித்தது போல், ஊழலும் விழித்தெழுந்தது. புதிதாக ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்தவர்களிடம், 'இன்று உங்கள் தலையில் முள்முடி சூட்டப்பட்டுவிட்டது. அதிகாரத்தில் அமர்பவர்கள் அதிக எச்சரிக்கையுடன் இருங்கள். அதிகாரம் எந்நாளும் ஊழலையே வளர்க்கும். பதவி தரும் சுகத்தில் மயங்கிவிடாதீர்கள். கிராமங் களில் ஏழ்மையுடன் வாழும் கோடிக்கணக்கான மக்களே உங்கள் உண்மையான எஜமானர்கள். அவர்களது ஏழ் மையை அகற்றும் பணியில் ஈடுபடுவதற்காகவே, இந்தப் பதவி கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை மறவாமல் செயற்படுங்கள்' என்றார் அண்ணல் காந்தி. அவருடைய அறிவுரை அப்போதே காற்றில் கலந்து விட்டது.





இந்தியாவின் முதல் பிரதமராகப் பொறுப்பேற்ற ஜவஹர்லால் நேரு, நாடு விடுதலை பெற நடத்திய

சுதந்திர வேள்வியில் 3,262 நாட்கள் சிறையிலிருந்து...

'சிறைப்பறவை' என்று பெயர் பெற்றவர். தன்னளவில் ஊழலுக்கு இடம் கொடுக்காத நேருவால், தன் நண்பர்களின் ஊழலைத் தடுக்க முடியவில்லை. நேருவின் நெருங்கிய நண்பர் வி.கே.கிருஷ்ண மேனன் பிரிட்டனில் இந்தியாவின் ஹைகமிஷனராக இருந்தபோது, காஷ்மீர் போரில் பயன்படுத்துவதற்கு பிரிட்டனிடமிருந்து வாங்கப்பட்ட ஜீப் சப்ளையில் ஊழல் செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. நேருவின் அரசு அவரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தாமல், இந்தியாவின் ராணுவ அமைச்சராக நியமித்து அழகு பார்த்தது. சுதந்திர இந்தி யாவின் முதல் ஊழல் மூடி மறைக்கப்பட்டது.

ஹரிதாஸ் முந்த்ரா என்பவர் நட்டப்பட்ட தன் நிறுவனங்களின் பங்குகளை ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் விற்றார். மதிப்பிழந்த பங்குகளை அதிக



விலைக்கு வாங்கியதில் நடந்த ஊழலை நேருவின் மருமகன் ஃபெரோஸ் காந்தி நாடாளுமன்றத்தில் அசைக்க முடியாத ஆதாரங்

களுடன் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்.

தமிழகத்தைச் சேர்ந்த, நேரு அரசின் நிதியமைச்சர் டி.டி.கிருஷ்ணமாச்சாரி, முந்த்ரா ஊழலில் பெரிய பங்கு வகிக்காவிடினும் ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. பஞ்சாபின் முதல்வராக இருந்த பிரதாப் சிங் கெய்ரோன், குடும்பத்தார் தலையீட்டில் வேண்டியவர்களுக்கு வழங்கிய சலுகைகள் வெளிப்பட்டதும் 1964-ல் முதல்வர் பதவி யிலிருந்து விலக்கப்பட்டார். கிருஷ்ண மேனன், டி.டி.கே.கெய்ரோன் போன்ற நண்பர்களைக் காப் பாற்ற முயன்றவர் என்ற பழிக்கு ஆளானாலும், தன்னுடைய 16 ஆண்டு பிரதமர் பதவியில் பத்துக் காசுகூட சேர்க்காத உத்தமர் நேரு. நாட்டை நேசித்த மாபெரும் தலைவர்களில் நேருவுக்கு என்றும் தனிஇடம் உண்டு.

எளிமையும், நேர்மையும், தூய்மையும், ஏழ்மையும் மாறாமல் இறுதிவரை வாழ்ந்த இரண்டாவது பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி. அவர் இந்தியா-பாகிஸ்தான் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுடன் சேர்ந்து



கையப்பமிடுவதற்காக ரஷ்யாவிலுள்ள தாஷ்கண்ட் நகரில் தங்கியபோது, மர்மமான முறையில் மரணம் அடைந்தார். அவருக்குப் பின்பு காமராஜர் செய்த இமாலயத் தவறால் இந்திரா காந்தி பிரதமரானார். 1966 முதல் 1977 மார்ச் வரை 11 ஆண்டுகளும், 1980 முதல் 1984 வரை 4 ஆண்டுகளும் இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில் அரசியல் நெறிமுறைகளும், ஜனநாயக நடைமுறைகளும் மிக மோசமான சீரழிவைச் சந்தித்தன. ஒவ்வொரு மாநிலத்திலும் நாட்டுக்கு உழைத்த மாசுமருவற்ற தலைவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். தேசிய அளவில் பரூவாக்களும், மாநில அளவில் குண்டுராவ்களும் முக்கியத் துவம் பெற்றனர். எந்தவிதமான சிந்தனைத் திறனும், செயலூக்கமும், சமூகக் கண்ணோட்டமும், தன்னலமற்ற அர்ப்பணிப்பும் இல்லாத பதவிமோகமும், பணத்தாசையும், இழிந்த இன்ப நாட்டமும் உள்ள மிக மலினமான மனிதர்கள், இந்திரா காந்தியின் காலத்தில்தான் காங்கிரஸை கைப்பற்றிக் கொண்டனர்.


இந்திரா காந்தி ஆட்சியில் 'நகர்வாலா வங்கி ஊழல்'

பெரிதாகப் பேசப்பட்டது. மகாராஷ்டிர மாநில முதல்வராக இருந்த அப்துல் ரகுமான் அந்துலே, 'இந்திரா காந்தி பிரதிபா பிரதிஷ்டான்' அறக்கட்டளையை அமைத்து, அதற்கு நிதியளிப்பவர்களுக்கு மட்டும் சிமெண்ட் ஒதுக்கீடு செய்து கோடிக்கணக்கில் கொள்ளையடித்த ஊழல் வெளிப்பட்ட பின்பும், அந்துலே மீது நடவடிக்கை எடுக்காமல் அவரைப் பாதுகாக்க முயன்றார் இந்திரா காந்தி. விசாரணைக் கமிஷன் அமைக்கவும் அவர் முன் வரவில்லை. உச்சநீதி மன்றம் வரை நடந்த வழக்கின் விளைவாக அந்துலே பதவி விலகினார்.

இந்திரா காந்தி இந்திய ஒருமைப்பாட்டைக் காக்கும் முயற்சியில் தன் இன்னுயிரை பலி கொடுத்தார். பாதுகாப்பற்ற உணர்வுடன் வாழ்க்கை முழுவதும் உள் மனதில் அலைக்கழிக்கப்பட்ட இந்திரா காந்தி தன் அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளப் பல தவறுகளை செய்திருந்தாலும், தன் தந்தையைப் போன்றே இந்திய மண்ணை ஆழமாக நேசித்தவர். இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பின்பு நாடு முழுவதும் வீசிய

அனுதாப அலையால் ராஜீவ் காந்தி பிரமிக்கத் தக்க வெற்றியுடன் பிரதமரானார். 'திருவாளர் பரிசுத்தம்' என்ற அடைமொழியுடன் வலம் வந்த இளைஞர் ராஜீவ், ஃபோபர்ஸ் பீரங்கி விவகாரத்தில் வழுக்கி விழுந்தார். சுவீடன் நாட்டிலுள்ள ஃபோபர்ஸ் நிறுவனத்திடம் 155 மி.மீட்டர் பீரங்கிகளை 1,437 கோடி ரூபாய்க்கு வாங்கியதில் 64 கோடி ரூபாய் கமிஷன் பெறப்பட்டது என்று சுவீடன் வானொலி அறிவித்த செய்தி, நாடு முழுவதும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியது.

ஃபோபர்ஸ் நிறுவனம் வழங்கிய 64 கோடி ரூபாய் கமிஷனில், ஃபோபர்ஸ் நிறுவன ஏஜென்ட் வின்சத்தா மூலம் 38 கோடி ரூபாயும், லண்டனில் வாழும் ஹிந்துஜா சகோதரர்கள் மூலம் 16 கோடி ரூபாயும், ஏ.இ.சர்வீசஸ் மூலம் 10 கோடி ரூபாயும் தரப்பட்டதாகத் தகவல் வெளியானது.


லால்பகதூர் சாஸ்திரி

சோனியா காந்திக்குக் குடும்ப நண்பரான இத்தாலியைச் சேர்ந்த ஒட்டாவியோ குவத்ரோச்சியின் 'கோல்பார்

இன்வெஸ்ட்மென்ட்ஸ்' நிறுவனத்தின் கணக்கில் ஏ.இ.சர்வீசஸ் பணம் மாற்றப்பட்டதாகவும் செய்திகள் வெளியாயின. ஃபோபர்ஸ் ஊழல் வெளிப்பட்டு 22 ஆண்டுகள் ஆனபின்பும் யாரும் சிக்கவில்லை. மத்திய புலனாய்வுத் துறை குவத்ரோச்சி மீதிருந்த குற்றச்சாட்டையும் திரும்பப் பெற்றுக் கொண்டது. நீதி தேவதையின் கண்களில் கறுப்புத் துணி மூடியிருப்பது எவ்வளவு பொருத்த மானது!

நரசிம்மராவ் 1991-ல் பிரதமர் ஆனார். ஒரு சிறுபான்மை அரசை, ஐந்தாண்டு கள் வெற்றிகரமாக நடத்துவது எப்படியென்று அவரிடமிருந்தான் அனைவரும் பாடம் படித்தனர். அவருடைய ஆட்சிக்கு எதிராக 1993 ஜூலை 28-ல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. ஆட்சியதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள 14 எம்.பி-க்களின் ஆதரவு நரசிம்மராவுக்குத் தேவைப் பட்டது. காங்கிரஸ் கடுமையான குதிரை பேரத்தில் களமிறங்கியது. ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவின் 4 எம்.பி-க்களும் ஆளுக்கு 50 லட்சம் ரூபாய்

வீதம் விலை பேசப்பட்டனர். இவர்கள் வங்கிக் கணக்கை சி.பி.ஐ. சோதனையிட்டபோது, இந்த உண்மை ஐயத்துக்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டது. இந்த நால்வரில் ஒருவரான சிபுசோரன், நேர்மையாளர் மன்மோகன் சிங்கின் அமைச்சரவையில் பின்பு இடம் பெற்றார்; இன்று பி.ஜே.பி. ஆதரவில் ஜார்கண்ட் மாநில முதல்வராக 'நல்லாட்சி' வழங்குகிறார். காங்கிரஸுக்கும், பி.ஜே.பி-க்கும் 'நெறி சார்ந்த' அரசியலில் இருக்கும் ஈடுபாடு நம்மை சிலிர்க்கச் செய்கிறது.


ஊழல் செய்வதில் இந்தியாவில் எந்தக் கட்சியும் ஒன்றுக் கொன்று இளைத்ததில்லை என்பது ஹவாலா ஊழல் மூலம் தெளிவானது. சுரேந்திர குமார் ஜெயின் என்பவர், பிலாய் இன்ஜினீயரிங் கார்ப்பரேஷனின் உரிமையாளர். அவருடைய விருந்தோம்பலை ஏற்காத டெல்லி அரசியல் பிரமுகர்கள் மிக மிகக் குறைவு. ஹவாலா பணமாற்றம் குறித்த விசாரணையில் ஈடுபட்ட சி.பி.ஐ., ஜெயின் வீட்டில் இரண்டு டைரிகளைக் கைப் பற்றியது. இந்த டைரியில் 1988 முதல் 1991 வரை மூன்று மத்திய அமைச்சர்கள். 30

அரசியல்வாதிகள், 32 அதிகாரிகள் உட்பட 115 பேருக்கு 65 கோடி ரூபாய் கமிஷனாகத் தரப்பட்ட விவரங்கள் இடம் பெற்றிருந்தன. பன்னாட்டு நிறுவனங்கள் நம் நாட்டில் மின்னுற்பத்தித் திட்டங்களை உருவாக்க இடைத்தரகர்களுக்கு அனுப்பி வைத்த ஹவாலா பணம்தான் ஜெயின் மூலம் கைமாறி யது. மாதவ்ராவ் சிந்தியா, வி.சி.சுக்லா, கல்பநாத்ராய் போன்ற காங்கிரஸ் மந்திரிகளிலிருந்து, அர்ஜுன் சிங், அத்வானி, யஷ்வந்த் சின்ஹா வரை இதில் தொடர்பு படுத்தப்பட்டனர். ஆனால், இந்த ஹவாலா மோசடியில் ஒரு அரசியல்வாதிகூட தண்டிக்கப் படவில்லை!

நரசிம்மராவ் தலைமையில் 1991 முதல் 1996 வரை இந்தி யாவை காங்கிரஸ் ஆண்ட காலம், ஊழல் நாற்றம் உச்சத்தில் வீசிய காலம். அப்போது தகவல் தொடர்பு அமைச்சராக இருந்தவர் சுக்ராம். அவரது வீட்டில் சோதனை நடந்த போது, படுக்கை விரிப்பிலிருந்து, பிளாஸ்டிக் பை வரை தொட்ட இடமெல்லம் கள்ளப் பணம் கத்தை கத்தையாகக் கிடந்தது

கண்டுபிடிக்கப்பட்டது. தொலை பேசித் துறைக்குத் தேவைப்படும் கருவிகளை வாங்குவதில் கிடைத்த கறுப்புப் பணம் அது. சுக்ராம் பிரச்னையில் நாடாளுமன்றத்தை

பி.ஜே.பி. தொடர்ந்து 13 நாட்கள் இயங்கவிடவில்லை. ஆனால், அந்த சுக்ராம் ஹரியானாவில் தனியாக 'ஹரியானா விகாஸ் கட்சி' ஆரம்பித்ததும் பி.ஜே.பி. அவருடைய கட்சியுடன் தேர்தல் கூட்டணி அமைத்து அவரை மாநில துணை முதல்வராக்கியது. நம் கட்சிகளுக்கு வெட்கம் இல்லையா? இந்தக் கட்சிகளுக்கு வாக்களிக்கும் மக்களுக்குத்தான் மனநிலை



நேரு

சரியில்லையா? ஆய்வுக்குரிய விஷயம் இது. தகவல் தொடர்பு அமைச்சராக மன்மோகன்சிங் அமைச்சரவையில் தி.மு.கழகத்தின் சார்பில் இடம் பெற்றிருந்த ராசா 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் 2009-ஆம் ஆண்டுக்குரிய கட்டணத்தை நிர்ணயிக்காமல், 2001-ல் இருந்த

கட்டணத்தை நிர்ணயித்து மத்திய அரசுக்கு 60 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தியிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தின. தனக்கு இந்த ஊழலில் பங்கில்லை என்றும், இது அதிகாரிகள் மட்டத்தில் நடந் திருக்கும் தவறு என்றும் ராசா கம்பீரமாக பேட்டியளிக்கிறார். அரியலூர் ரயில் விபத்து நடந்தபோது சாஸ்திரி ஓட்டுநராகவோ, பாயின்ட்ஸ்மேனாகவோ, ஸ்டேஷன் மாஸ்டராகவோ இல்லை... ஆனாலும், தார்மீகப் பொறுப்பேற்று ரயில்வே அமைச்சர் பதவியிலிருந்து சாஸ்திரி விலகியபோது, 'மனச்சான்றுக்கும், உயரிய லட்சியத்துக்கும் மதிப்பளிக்கும் அரிய மனிதர்' என்று நேரு நெஞ்சம் நெகிழ்ந்து பாராட்டினார். லாலு பிரசாத்தின் கால் நடைத் தீவன ஊழல், பி.ஜே.பி-யின் சித்திரத்தையே சிதைந்துவிட்ட 'டெஹல்கா' வெளிப்படுத்திய போர்த் தளவாட ஊழல், கார்கில் போரின் சவப்பெட்டி ஊழல் என்று தொடரும் ஊழல்களுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைப்பது? எப் படி முற்றுப்புள்ளி வைப்பது?

'இந்தியாவை வெள்ளை யர்கள் தாங்களாக எடுத்துக்

கொள்ளவில்லை. நாமாகத் தான் அவர்களிடம் கொடுத்தோம்' என்றார் மகாத்மா. ஊழல் அரசியல்வாதிகளும் தாங்களாகவே அதிகாரத்தில் அமர்ந்து விடுவதில்லை. நாம்தான் விவரமில்லாமல் வாக்களித்து வினையை அனுபவிக்கிறோம்.




அன்பளிப்பு!

13

ஊழல் ஊடுருவாத இடமேஇந்தியா வில் இல்லை. ஊழல், தனிமனிதர் களை மட்டும் பாதிக்கும் சாதாரண சமூக நோயில்லை. ஒட்டுமொத்த தேசத்தின் வளர்ச்சியையும் முற்றாக முடக்கி மரணப்படுக்கையில் சாய்த்துவிடும் கொள்ளை நோய் அது! நம் அரசிய லமைப்பின் அத்தனை

அங்கங்களும் இன்றைக்கு ஊழல் சீழ் பிடித்து அழுகிக்கிடக்கின்றன. இந்த நோய்க்கு மருத்துவம் பார்க்க வேண்டிய அரசியல்வாதிகளால்தான், ஊழல் நோய் இன்னும் வலுவாகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அரசியல் வாதிகளின் பலவீனங்களைப் பயன்படுத்தி அதிகாரவர்க்கமும் ஊழலில் ஈடுபட்டது. காலநடையில் காவல்துறையிலும், நீதித்துறையிலும் ஊழல் பெருநோயாகப் பெருகி வருகிறது. லஞ்சம் கொடுக்காமல் எந்தவொரு காரியமும் எளிதில் நடக்காது என்பது எல்லாருக்கும் வாய்த்திருக்கும் பொது அனுபவம்.

'உலகிலேயே மிக மோசமான ஊழல் பேர்வழிகள் இந்திய அரசியல்வாதிகள் தான்'

என்று 'டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நேஷனல்' அறிவித்திருக்கிறது. தொழிலதிபர்களும், தனவணிகர் களும், பெருநிலக்கிழார்களும், மேல்தட்டு மக்களும் தங்கள் ஆதாயத் துக்காக லஞ்சம் தருவதைத்தான் நாம் பெரிதாகப் பேசுகிறோம். ஆனால், இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாடும் ஏழை மக்கள் பொதுவிநியோகம்,

மருத்துவம், பள்ளிக்கல்வி, மின்சாரம், குடிநீர் போன்ற பயன்களைப் பெறுவதற்கு 883 கோடி ரூபாய் சென்ற ஆண்டில் லஞ்சம் கொடுத்திருப்பதாக ஓர் ஆய்வறிக்கை அதிர்ச்சித் தகவலைத் தருகிறது. இந்தியாவில் இரண்டரை லட்சம் கோடி ரூபாய் லஞ்சப் பணமாகப் புழங்குவதாக வேறொரு தகவல் தெரிவிக்கிறது!

ஆனால், சமீப காலங்களில்தான் ஊழல் உருப்பெற்றது என்று சொல்வதற்கில்லை. 2,400 ஆண்டுகளுக்கு முன்பே சாணக்கியன் 'அர்த்த சாஸ்திரம்' என்னும் அரசியல் நூலில் 40 வகை ஊழல் நடவடிக்கைகளைக் குறிப்பிடு கிறான். 'நீரில் வாழும் மீன் நீர் குடிப்பது தெரியாததுபோல், அரசு



ஊழியர்கள் செய்யும் ஊழலும் அடுத்தவருக்குத் தெரியாது' என்கிறான் சாணக்கியன். தமிழகத்தில் ராஜாஜி, பிரகாசம், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா, காமராஜர், பக்தவத்சலம் ஆகியோர் காங்கிரஸ்

முதல்வர்களாக இருந்தபோது, அடிமட்டத்தில் ஐந்து ரூபாய்க்கும், பத்து ரூபாய்க்கும் ஒழுங்கீனங்கள் நடந்திருக்கலாம். ஆட்சியைப் பயன்படுத்தி ஒருசில காங்கிரஸ்காரர்கள் ஆதாயம் அடைந்திருக்கலாம். ஆனால், எந்த முதல்வரும் ஊழல் செய்தார் என்ற குற்றாச்சாட்டுக்கு உள்ளாகவில்லை. ஹைதரா பாத் வங்கியில் காமராஜர் கணக்கில் ஆறு கோடி ரூபாய் போடப்பட்டிருப்பதாக தி.மு.க. தலை வர்கள் அவதூறு பரப்பினர். ஆனால், நெருப்பை எந்தக் கரையானும் அரிக்க முடியவில்லை. 'பத்து லட்சம் பக்தவத்சலம்' என்று பழித்தனர். அதற்கான எந்த ஆதாரத்தையும் ஆட்சியில் அமர்ந்த பின்னும் கழகத்தவரால் காட்ட முடிய வில்லை. துரும்பை இரும்பாக்கியவர்கள், இரும்பைத் துரும்பாக மறைக்கப் பார்ப்பதும் அடுத்து நடந்தது.

'எழுத்திலே ஒன்று... செயலிலே ஒன்று... சொல்லிலே ஒன்று என்கிற சூது மனப்பான்மையினர் இல்லாத, சுயநலப் பெருச்சாளிகள் நுழைய முடி யாத வீரர்களின் பாசறை திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தல் வேட்டை

யிலே நாட்டம் செலுத்தாமல், பதவி பீடத்துக்கு நாக்கைத் தட்டாமல், பணபுரியின் மீது பற்று வைக்காமல் நாட்டிலே நடைபோடுகிறது' ('மாலை மணி'- 13.9.1951) என்று எழுதியவர் நம் முதல்வர். தேர்தல் வேட்டையில் இன்று அவருக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் இருக்கும் நாட்டமும், பதவி பீடத்தைத் தக்க வைத்துக்கொள்ள அன்றாடம் படும் பாட்டமும், பணபுரியில் கழகப் பிரமுகர்கள் ஆடும் ஆட்டமும் தமிழக மக்கள் அறியாத ரகசியம் இல்லை. ஒரு குவளை தேநீரிலும், ஒரு காய்ந்த ரொட்டித் துண்டிலும் பசியாறிவிட்டு, அண்ணாவின் அழகுத் தமிழில் மயங்கி, அவர் காட்டிய வழியில் அல்லும் பகலும் பணியாற்றிக் காடு மேடுகளில் அலைந்து திரிந்து கழகத்தை வளர்த்தவர்களெல்லாம் கண்மூடிவிட்டனர். வியர்வை வழிய உழுது விதைத்தது சென்ற தலைமுறை; ஆனந்தமாக அறுவடை செய்து அனுபவிக்கிறது இன்றைய தலைமுறை.

ஆட்சியில் அமர்ந்த பின்பும் அண்ணாவின் எளிமை மாறவில்லை; பதவியைத் தவறாகப் பயன்படுத்திப் பணம்

சேர்க்கும் ஆசை எழவில்லை. உடன்பிறப்புகள் பெரிதாக ஊழலில் ஈடுபட இடம் தரவில்லை. பிறகு காட்சிகள் மாறத் தொடங்கின. கோட்டைத் தாழ்வாரங்களில் கரை வேட்டிகளின் கூட்டம் அலைமோதியது. காவல்துறை, கழகத்தவரின் ஏவல்துறையாக இழிந்தது. அதுவரை வளர்த்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்க்குரிய பண்பு நலன்கள் பறிபோயின. கழகம் முழுவதையும் கலைஞர் தன் கைக்குள் அடக்க முயன்றார். திரைப்படங்களில் நடித்துக் கொண்டே அமைச்சராகவும் வலம் வர ஆசைப்பட்ட எம்.ஜி.ஆரின் கனவைக் கலைத்து அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றினார். கழகப் பிரமுகர்கள், மயன் சிருஷ்டித்த மாளிகை மனிதர்களாக மாறிவிட்டனர்.கம்யூனிஸ்ட் தலைவர் கல்யாணசுந்தரத்துடன் ஆளுநரை சந்தித்து, கலைஞர் ஆட்சிக்கு எதிராக ஊழல் புகார்ப் பட்டியலைக் கொடுத்தார் எம்.ஜி.ஆர்! டெல்லியில் குடியரசுத் தலைவர் வி.வி.கிரியை இருவரும் 1972 நவம்பர் 6-ஆம் நாள் நேரில் சந்தித்து, ஊழல் பட்டியலைச் சமர்ப்பித்தனர். அந்தப் பட்டியல்

பிரதமர் இந்திராகாந்தியின் கடிதத்துடன் கலைஞரிடம் வந்து சேர்ந்தது. நள்ளிரவில் மயானம் வழி செல்பவன் பயத்தை மறைக்கப் பாட்டிசைப்பது போல், 'புகார்ப் பட்டியலைப் பார்த்தேன், படித்தேன், ரசித்தேன்!' என்றார் கலைஞர். நெருக்கடி நிலையை கலைஞர் எதிர்த்தார். கோவை மாநாட்டில் கழகம் அவரைத் தென்னகத்து முஜிபுர் ரஹ்மானாக வருணித்தது. 'இந்திராகாந்திக்கு வேண்டுமானால், கலைஞர் அரசில் விதவை திட்டத்தின் கீழ் இலவசமாகத் தையல் மெஷின் தரத் தயார்' என்று வாய்கொழுத்த சிலர் வக்கணை பேசினர்.







தி.மு.க. ஆட்சியை 1976 ஜனவரி 31 அன்று இந்திராகாந்தி கலைத்தார். சர்க்காரியா கமிஷன், ஊழல் விசாரணையில் ஈடுபட்டது. எம்.ஜி.ஆர் அளித்த 57 ஊழல் புகார்களில் 28 புகார்களுக்கு ஆதாரங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. வீராணம் குடிநீர் திட்டத்தில் 6 கோடி ரூபாய் வரை பொதுப்பணம் கொள்ளையடிக்கப் பட்டதாக கமிஷன் சொன்னது. பூச்சி மருந்து தெளித்ததிலும், கோதுமை

பேரத்திலும் ஊழல் செய்ததாக கமிஷன் சொன்னது.

பொதுவாழ்வில் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்பது இந்திரா காந்தியின் லட்சியமாக இருந்திருந்தால்... எம்.ஜி.ஆர். 1972-ல் கலைஞருக்கு எதிராக புகார்ப் பட்டியல் தந்தபோதே நடவடிக்கை எடுத்திருப்பார். நெருக்கடி நிலையை கலைஞர் கடுமையாக எதிர்த்ததனால்தான், மூன்று ஆண்டுகளுக்கு மேல் கவனிப்பாரற்றுக் கிடந்த ஊழல் புகாரை இந்திரா கையிலெடுத்தார். பின்னாளில், இந்திராகாந்தியிடம் தி.மு.க. சரணடைந்தது; சி.பி.ஐ. வழக்கிலிருந்து விடுதலை கிடைத்தது. 'நேருவின் மகளே வருக' என்ற கோஷம் ஒலித்தது. 'வலுவான ஆதாரங்கள் இருந்தபோது இரண்டு வழக்குகளையும் இந்திரா காந்தி வாபஸ் பெற்றதில் நியாயமில்லை!' என்றார் சி.பி.ஐ. அதிகாரி வி.ஆர்.லட்சுமிநாராயண்.

காலச் சக்கரம் சுழன்றது. சரித்திரம் திரும்பியது. எம்.ஜி.ஆர். ஆட்சியில் வருவாய்த்துறை அமைச்சராக இருந்த எஸ்.டி.சோமசுந்தரம் உணவுத்துறைக்கு மாற்றப் பட்டார். எஸ்.டி.எஸ் மறைமுகமாக முதல்வரை

விமர்சித்தார். அவரை எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க-விலிருந்து வெளியேற்றினார். 'சினிமாவில் வந்த எம்.ஜி.ஆரும் அரசியலில் இருக்கும் எம்.ஜி.ஆரும் ஒன்றல்ல; மாவட்ட வாரியாக ஊழல் பணத்தை வசூலிக்க ஒப்புக்கொள்ளாததால்தான் என் இலாக்கா பறிக்கப்பட்டது!' என்ற எஸ்.டி.எஸ்., புதிதாக 'நமது கழகம்' தொடங்கினார். ஆளுநரிடம் எம்.ஜி.ஆருக்கு எதிராக ஊழல் புகார்ப் பட்டியலைக் கொடுத்தார். அந்த எஸ்.டி.எஸ்., ஜெயலலிதாவின் தேர்தல் பிரசார வேனில் தன் தோள் துண்டை முறுக்கி, அதையே பிடிமானமாகக் கொண்டு தொங்கிக் கொண்டு போன கதை வேறு.

> 'எதிலும் எப்போதும்
> காசைக் குறிவை.
> தேசம் முழுதும்
> தீக்கிரையாயினும்
> சாம்பலை விற்றுச்
> சம்பாத்யம் நடத்து!'
>
> –கந்தர்வன்

கலைஞரின் ஊழலுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கிய எம்.ஜி.ஆரின் ஆட்சியிலும் 'வாலு போய் கத்தி வந்தது டும்டும்டும்' நிலைதான். எரிசாராய ஊழலில் எம்.ஜி.ஆர்.

மத்திய அரசின் 'ரே' கமிஷனை சந்திக்க நேர்ந்தது. மதுவைத் தொடாதவர் என்று மக்கள் மதித்தவரின் ஆட்சியில்தான், சாராய சாம்ராஜ்ஜியம் கொடி கட்டிப் பறந்தது!

ஜெயலலிதா 1991-ல் தமிழகத்தின் முதல் வரானார். தமிழக அரசியல் வரலாறு தனிப் பெருமை கொண்டது. நாட்டு விடுதலையில் ஈடுபட்ட தலைமுறை ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்ததெல்லாம் பக்தவத்சலத்துடன் முடிந்தது! கலைத்துறையில் வசனம் எழுதிய அண்ணா வும் கலைஞரும் அடுத்தடுத்து முதல்வர் பொறுப்பேற்றனர். பிறகு, நடிகராக இருந்த எம்.ஜி.ஆர். முதல்வரானார். அவருடன் நடித்த நடிகை ஜெயலலிதாவும் முதல்வராகிவிட்டார். இனி அடுத்த வாய்ப்பு வில்லனாகவோ, காமெடியனாகவோ நடித்தவருக்குத்தானா? என் கருத்துப்படி அந்த வாய்ப்பு நிச்சயம் விஜயகாந்த்துக்கு இல்லை.

ஐந்தாண்டு ஆட்சியில் ஜெயலலிதா அரங்கேற்றியதாகக் கூறப்படும் ஊழல்களுக்காக அவர் மீது போடப்பட்ட

வழக்கில் அவர் நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்குவது இன்றுவரை நிற்கவில்லை. 'ராஜகுமாரி திரைப்படத்துக்கு வசனமெழுத, கோவைக்கு அடுத்த சிங்காநல்லூரில் பத்து ரூபாய்க்கு ஒரு வீடு பிடித்துக் கொண்டு நானும் என் மனைவியும் தங்கியிருந்தோம்...' என்றும், 'சிங்காநல்லூரிலிருந்து கோவைக்குச் செல்ல பஸ்கள் உண்டு என்றாலும் இடம் கிடைப்பது அரிது. குதிரை வண்டியில்தான் செல்ல வேண்டும். ஒரு வண்டியில் ஆளுக்கு இவ்வளவு கட்டணம் என்று பேசிக்கொண்டு பலபேர்கள் ஏறிக்கொள்வதுண்டு. அப்படித்தான் நாங்களும் கோவைக்கு செல்வோம்...' என்றும் 'நெஞ்சுக்கு நீதி'யில் கலைஞர் விவரித்ததை இன்று நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியுமா?ஜெயலலிதாவிடம் நட்பு பாராட்டும் சசிகலாவுக்கும் அவரைச் சார்ந்த சிலருக்கும் பல்வேறு நிறுவனங்களின் தனி உரிமையும், ஜெயா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் முதல் சசி என்டர்பிரைசஸ் வரை 18 நிறுவனங்களில் பங்குதாரராக இருக்கும் பாக்கியமும்

எப்படி, யாரால் வந்து சேர்ந்தன?

ஊழலின் பரிணாமத்தைக் கண்டு அஞ்சிய நேரு, அதை ஆராய்வதற்கு சந்தானம் கமிட்டியை அமைத்தார். அந்த கமிட்டியின் பரிந்துரைப்படியே மத்திய லஞ்ச ஒழிப்பு ஆணையம் உருவாக்கப்பட்டது. மாநில அளவிலும் லஞ்ச ஒழிப்பு ஆணை யங்கள் அமைக்கப்பட்டன. கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிக்க 1971-ல் வாஞ்சு கமிட்டி தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், ஊழலும் ஒழியவில்லை; கறுப்புப் பணமும் களையெடுக்கப்படவில்லை. 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' அறிக்கையின்படி சென்ற ஆண்டில் மட்டும் 21 ஆயிரம் கோடி ரூபாய் லஞ்சமாக நம் நாட்டில் பரிமாறப்பட்டுள்ளது. இந்திய அரசியல்வாதிகள், அதிகாரிகள், தொழிலதிபர்கள் சுவிஸ் வங்கிகளில் சுமார் 70 லட்சம் கோடி ரூபாய் கறுப்புப் பணமாகப் பதுக்கி வைத்துள்ளனர். ஊழல் நடவடிக்கைகள்தான் கறுப்புப் பணத்தின் ஊற்றுக்கண். கறுப்புப் பணம், நிழல் பொருளாதாரத்தை நிர்ணயிக்கிறது; பணவீக்கத்தைப் பெருக்குகிறது; சமூகத்தின் ஒரு சாரார் மிதமிஞ்சிய

சுகபோகங்களில் மிதக்கவும், பெரும்பகுதி மக்கள் பசியோடு போராடவும் வழிவகுக்கிறது.

அரசியலில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பு வாடகை சைக்கிளில் கூட செல்ல முடியாதவர்கள், கட்சிப் பதவிகளிலும், ஆட்சியதிகாரத்திலும் அமர்ந்த பின்பு பத்து கார்களுக்கும், பலகோடி சொத்துக்கும் அதிபர் களாக வலம் வருவதை வாயில் விரலை வைத்தபடி இன்னும் எவ்வளவு காலம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோம்?

தவறாக சொத்துச் சேர்த்த அரசியல்வாதிகள் இல்லாத கட்சியென்று இங்கு எதுவுமில்லை. இடதுசாரி இயக்கங்களில் கூட சிலர் சீரழிந்து விட்டனர். ஆள்பவர்களுக்கு ஒவ்வொரு தேர்தலிலும் அதிர்ச்சி வைத்தியம் அளித்தால்... எல்லாத் தளங்களிலும் ஓரளவு ஊழல் நாற்றம் குறையும். வாங்கும் லஞ்சத்தை 'அன்பளிப்பு' என்று மாற்றிய பெருமை கழகங்களையே சாரும். கழகத் தலைவர்களில் ஒருவராக இருந்த ஏ.வி.பி. ஆசைத்தம்பிதான் முதலில் 'அன்பளிப்பு' என்றவர்.

'தமிழ்நாட்டு வாக்காளர்கள் அறிவாளிகள். கோவணத்தை இழந்து நின்றால் கல்லால் அடிப்பார்கள்; கொள்கையை இழந்துவிட்டால்... அமைச்சர்கள் ஆக்கு வார்கள்!' என்று கண்ணதாசன் சொன்னார். கவிஞர் கூற்று பொய்யில்லை!

எங்கே போகிறோம் நாம்?
எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

14

நம் சமூக அமைப்பில், சாதாரண மனிதர்கள் மீதுதான் சட்டம் கடுமையாகப் பாயும். 50 ரூபாய் லஞ்சம் வாங்கிய அரசு ஊழியரின் பதவி பறிபோகும். ஆனால், ஐந்து கோடி லஞ்சம் வாங்கும் அமைச்சருக்கு பூனைப் படையும் புலிப் படையும் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கும்!



நம் அரசியல்வாதிகளுக்குக் கோட்டையில் இருக்கும் வரை வேட்டை. பதவி பறிபோனாலும், அறத்துக்குப் புறம்பாக அடித்த கொள்ளையில் குவித்த பணம்

பறிபோகாது என்பதை அவர்கள் நன்றாக அறிவர். இவர்கள் மீது எத்தனை விசாரணை கமிஷன்கள் நிறுவப்பட்டாலும் எந்த நல்ல விளைவும் ஏற்படப்போவதில்லை. மக்கள் வரிப் பணத்தைப் பாழாக்கும் இந்த விசாரணை கமிஷன்களால் ஓய்வு பெற்ற நீதிபதிகளுக்கு மேலும் சில காலம் அரசு வழங்கும் வசதிகளுடன் பணியாற்ற ஒரு வாய்ப்பு கிடைக்கிறது என்பதைத் தவிர வேறென்ன பயன்?

காந்தியின் கண் முன்னாலேயே ஊழலின் திருநடனம் தொடங்கிவிட்டது. பதவியில் இருப்பவர்கள் நடத்தும் ஊழலின் பரிமாணத்தைப் பார்த்துப் பதைத்த நேரு, 1952-ல் விசாரணை கமிஷன் சட்டத்துக்கு வித்தூன்றினார். நாட்டு மக்களின் கவனத்தை முதன் முதலில் பெரிதாக ஈர்த்தது முந்திரா ஊழல் விவகாரம். ஒரு தனியார் நிறுவனத்துக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஒரு கோடி ரூபாய் தந்த விவகாரம். ராம்சுபாக் சிங், ஃபெரோஸ் காந்தி இருவரும் நாடாளுமன்றத்தில் வைத்த வலுவான ஆதாரங்களால் வெளிச்சத்துக்கு வந்தது. அதனால், நேருவின் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டது. பம்பாய் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எம்.சி.சாக்னாவின் தலைமையில் விசாரணை கமிஷன்

அமைக்கப்பட்டது. நீதித் துறையின் நெறி சார்ந்த மனிதராகத் திகழ்ந்த சாக்னா, முந்திரா நிறுவன ஊழலை உறுதிப்படுத்தினார். அந்த ஊழலில் எந்தப் பயனும் பெறாத நிதியமைச்சர் டி.டி.கிருஷ்ணமாச்சாரியின் பதவி பறிபோனது!

பஞ்சாப் மாநில முதல்வராக 1957 முதல் ஏழு ஆண்டுகள் கொடி கட்டிக் கோலோச்சியவர் சர்தார் பிரதாப் சிங் கெய்ரோன். அகாலிகளின் தனி நாடுக் கிளர்ச்சியை அடக்கி, ஆளுங்கட்சியாக காங்கிரஸை மீண்டும் அதிகாரத்தில் அமர்த்தியவர் கெய்ரோன் என்பதால், நேரு அவர் மீது மிகுந்த பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தார். பிரபோத் சந்திரா என்ற காங்கிரஸ்




உறுப்பினர், கெய்ரோனின் குடும்பம் அரங்கேற்றிய ஊழல் திருவிளையாடல்களைப் பட்டியலிட்டு, அன்றைய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் யு.என்.தேபரிடம் தந்தார். பயன் இல்லை. நேருவிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, 'கெய்ரோனுக்கு எதிராக மிக மெல்லிய, மங்கலான சாட்சியத்தின் நிழல்கூட இல்லை என்று முற்றாக மறுத்தார். விவகாரம் நீதிமன்றப் படியேறியது. கெய்ரோன் மீதும், அவரது மனைவி மீதும் சுமத்தப்பட்ட ஊழல் புகார்களை உச்ச நீதிமன்றம் உண்மை

என்றது. வேறு வழி இன்றி, நேருவின் அரசு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி எஸ்.ஆர்.தாஸ் தலைமையில் 1963 நவம்பரில் விசாரணை கமிஷனை நியமித்தது.

கெய்ரோனும், அவருடைய மனைவியும், அவர்களுடைய மகன் சுரீந்தர் சிங்கும் அரசு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தங்கள் குடும்ப சொத்துகளைப் பெருக்கி யதை ஆதாரங்களுடன் தாஸ் கமிஷன் நிரூபித்தது. அப்போது பிரதமராகப் பொறுப்பேற்றிருந்த சாஸ்திரியின் நிர்ப்பந்தத்தால் கெய்ரோன் பதவி விலக நேர்ந்தது. பின்னாளில், அவர் படுகொலை செய்யப்பட்டார் என்பது ஒரு சோக சம்பவம்.

காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா முதல்வராக இருந்தபோது இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிராகச் செயற்பட்டதாக மத்திய அரசு குற்றம் சுமத்திச் சிறையில் வைத்தது. துணை முதல்வர் பக்ஷிகுலாம் முகமது பின்பு முதல்வரானார். நம் ஊர் அரசியல்வாதிகளுக்கு ஆசானாகவும், ஆதர்சமாகவும் விளங்கியவர் அவர். அரசியலில் பக்ஷிலோம் அடியெடுத்து வைத்தபோது, கதர்க்

கடை ஊழியராக இருந்தார். அப்போது அவருடைய மாத ஊதியம் 20 ரூபாய். அவருடைய தந்தையும், சகோதரர்களும் தையற் கடையில் பணிபுரிந்தனர். முதல்வரான பக்ஷி 54 லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள (இன்றைய நிலவரப்படி பல நூறு கோடி ரூபாய்) சொத்துகளைக் குவித்ததாகப் புகார் எழுந்தது. ராஜகோபால ஐயங்கார் கமிஷன், பக்ஷிகுலாமை குற்றவாளி என்றது. 'ஒரு கமிஷனால் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டவர், சட்டமன்ற உறுப்பினராக இருக்க முடியாது' என்று ஜி.எம்.சாதிக், அரசு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தம் செய்தது. சட்டமன்றம் செல்ல முடியாத பக்ஷிகுலாமை, நாடாளு மன்றத் தேர்தலில் நிறுத்தி, இந்திரா காந்தி புதிய அரசியல் புரட்சி செய்தார். தவறாக சொத்துச் சேர்த்த பக்ஷிகுலாம் முகமது எந்த தண்டனையும் பெறவில்லை. அதற்குப் பின்பு எந்த மாநில முதல்வருக்கும் அச்சமற்றுப் போனது.

இந்த நாடு இன்று வரை எத்தனை விதமான ஊழல்களைச் சந்தித்திருக்கிறது! லண்டன் ஹைகமிஷனராக

இருந்தபோது ஜீப் ஊழலில் ஈடுபட்ட கிருஷ்ணமேனன், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சரானார்.

பல்லாண்டுகள் வரி கட்ட மறந்துவிட்ட ஜெகஜீவன்ராம், மத்திய அமைச்சராக நீண்ட காலம் இருந்து சாதனை படைத்தார். லஞ்ச ஊழலில் கை தேர்ந்து விளங்கிய எல்.என்.மிஸ்ரா, மத்திய ரயில்வே அமைச்சராகவும், பீகார் மாநில முதல்வராகவும் வலம் வந்தார். வெடிகுண்டு விபத்தில் பலியான அவருடைய மரணத்தில் மறைந்திருந்த

மர்மம் வெளிப்படவே இல்லை. மராட்டிய மாநில முதல்வராக இருந்து சிமெண்ட் ஊழலில் ஈடுபட்டு முதல்வர் பதவி இழந்த அந்துலே, மத்திய அமைச்சரானார். இந்திராகாந்தி குரலில் பேசி ஸ்டேட் பேங்கில் 60 லட்சம் பெற்ற நகர்வாலா விவகாரம் பழங்கதையானது. ராஜீவ் ஆட்சியில் நடந்த ஃபோபர்ஸ் ஊழல் பொய்யாகிப் போனது. இடைத்தரகர் குவத்ரோச்சியைக் கைது செய்யும் நாடகத்தில் அரசுப் பணம்தான் மேலும் பாழானது. மாட்டுத் தீவன ஊழலில் சிக்கி மாநில முதல்வர் பதவியை இழந்த

பின்பும், லாலு பிரசாத்தால் மத்திய ரயில்வே அமைச்சராக முடிந்தது. தெஹல்கா இணையதளம் ஆதாரத்துடன் ஊழலை அம்பலப்படுத்திய நிலையிலும் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் ராணுவ அமைச்சராக நீடிக்க முடிந்தது. ஸ்பெக்ட்ரம் ஊழலில் 60 ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு என்று நாடு முழுவதும் குரல் எழுந்த பின்பும், ஆ.ராசா மீண்டும் அதே தகவல் தொழில்நுட்ப அமைச்சராகப் நீடிக்கும் அதிசயம் நிகழ்ந்தது. பொய்கள் கூடி நியாயம் பேசும் தேசம் இது என்பது நிஜம்.

கலைஞர் மீது சுமத்தப்பட்ட ஊழல்களை விசாரித்து நீதி வழங்க, சர்க்காரியா கமிஷனை நியமிக்கவில்லை இந்திராகாந்தி. தன்னிடம் தலை வணங்காத தலைவர்களின் பலவீனத்தை வெளிப்படுத்தி, காலம் முழுவதும் தனக்குக் கட்டுப் பட்டு அவர்கள் நடப்பதற்கு இந்திராகாந்தி பயன்படுத்திய கருவிதான் விசாரணை கமிஷன். 'பூச்சி மருந்து ஊழல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள், நம்பற்குரியனவாக வாய்மொழி, ஆவணம், சூழ்நிலைச் சாட்சியங்களால் தெளிவாக

நிரூபிக்கப்பட்டுள்ளன' என்று சர்க்காரியா தீர்ப்பளித்தார். மொரார்ஜி தேசாய் பிரதமரானதும், சர்க்காரியா தீர்ப்பின் அடிப்படையில் சி.பி.ஐ. மேல் நடவடிக்கையில் ஈடுபடாமல் தடுக்க வேண்டும் என்று கலைஞர் மறைமுகமாக வேண்டினார். 'நீங்கள் நிரபராதி என்று நீதிமன்றத்தில் நிரூபிப்பதுதான் உங்களுக்கு நல்லது!' என்றார் தேசாய். உடனே கலைஞர் அணி மாறினார். இந்திராகாந்தியிடம் சமாதானக் கொடி பிடித்துச் சரணடைந்தார். இந்திரா மீண்டும் பிரதமரானதும் சர்க்காரியா அறிக்கையைத் தொடவே இல்லை.

காலச் சக்கரம் சுழன்றது. காட்சிகள் மாறின. கோட்டையில் இருந்த கலைஞர் கோபாலபுரம் திரும்பினார். கேமராவுக்கு முன் நடித்துக்கொண்டு இருந்த எம்.ஜி.ஆர்., முதல்வர் பீடத்தில் அமர்ந்தார். இழந்த பீடத்தை மறுபடியும் பெற, கலைஞர் துடித்தார். அமர்ந்த இடத்தைத் தக்கவைத்துக்கொள்ள எம்.ஜி.ஆர். தவித்தார். இரண்டு தனிமனிதர்களின் சுயநலப் போட்டியில் பொது வாழ்க்கைப் பண்புகள் அனைத்தும் தரம் தாழ்ந்தன.


மாலை நேரத்து அரசியல் மேடைகளில் ரசக்குறைவான லாவணிக் கச்சேரிகள் அரங்கேறின. தன் மீது புகார்ப் பட்டியல் தந்து கமிஷன் முன்பு களங்கப்படுத்திய எம்.ஜி.ஆருக்கு எதிரான நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் கலைஞர். கலைஞர் எதிர்பார்த்த தருணமும் கனிந்தது. எரிசாராய ஊழலில் எம்.ஜி.ஆர். சிக்கினார்.

கேரள அரசு எம்.ஜி.ஆர். அரசிடம் 65 லட்சம் லிட்டர் எரிசாராயம் கேட்டது. முதலில் 26 லட்சம் லிட்டரும், அடுத்து 7.5 லட்சம் லிட்டரும் அனுப்பிவைத்த தமிழக அரசு, அதற்குமேல் அனுப்ப இயலாது என்று மறுத்துவிட்டது. ஆனால், கேரளக் கடத்தல் புள்ளிகளால் ஐந்து வாகனங்களில் 60 ஆயிரம் லிட்டர் எரிசாராயம் தமிழகத்தில் இருந்து கடத்தப்பட்டபோது, கேரள அரசால் கைப்பற்றப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் நிதி தரப்பட்டதாகச் செய்தி வெளியானது. காத்திருந்த கலைஞர், சட்டமன்றத்தில் ஆதாரங்களை அடுக்கினார். எம்.ஜி.ஆர். பொறியில் சிக்கிய எலியானார். கலைஞரின் வாயை மூடுவதற்கு அவசரமாக கைலாசம்

கமிஷனை அறிவித்தார். சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்பட்டபோது, மத்திய அரசு மாநில உரிமைகளைப் பறிப்பதாகப் போர்க் குரல் கொடுத்து, கமிஷனோடு ஒத்துழைக்க மறுத்த கலைஞர், எம்.ஜி.ஆர். நியமித்த கமிஷனை ஏற்க மறுத்து, மத்திய அரசு கமிஷன் அமைக்க மனு போட்டார். கைலாசம் வீட்டுக்குக் கழக எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினார். கைலாசமும் கமிஷன் பொறுப்பில் இருந்து விலகிக்கொண்டார்.

எம்.ஜி.ஆர். சதாசிவம் கமிஷனையும், கேரள முதல்வர் நயனா சதாசிவன் கமிஷனையும் அமைத்தனர். 'ஒரு விஷயத்தில் மாநில அரசு விசாரணை கமிஷனை அமைத்தால்... அதே விஷயத்தில் கமிஷன் அமைக்க மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை' என்கிறது விசாரணை கமிஷன் சட்டம். ஆனால், கலைஞரின் விருப்பத்துக்கேற்ப இந்திராகாந்தி, 'இது இரண்டு மாநிலங்களுக்கு இடையில் உள்ள பிரச்னை' என்று நியாயம் கற்பித்து எஸ்.கே.ரே கமிஷனை அறிவித்தார். மாநில சுயாட்சிப் போராளி கலைஞர், எம்.ஜி.ஆர் விவகாரத்தில் மத்திய அரசால்

உரிமை மீறல் நிகழ்த்தப்பட்டபோது, நெஞ்சம் மகிழ்ந்தார்.




'தி.மு.க. அமைச்சர்கள் மீது எம்.ஜி.ஆர். கொடுத்த 54 குற்றச்சாட்டுகளின் மொத்தத் தொகை 70 லட்சம் ரூபாய்தான். என்னை, நாவலரை, ப.உ.சண்முகத்தை, மதுரை முத்துவை, சத்தியவாணி முத்துவை, மாதவனை, சாதிக்பாட்சாவை, அன்பில் தர்மலிங்கத்தை சேர்த்துக் கொடுத்த குற்றச்சாட்டுத் தொகை 70 லட்சம். ஆனால், ஒரே குற்றச்சாட்டில் இன்று ஐந்து கோடி ரூபாய். ரே கமிஷன் நியமிக்கப்பட்ட பிறகு, பாட்டிலிங், பிளான்டிங் தொழிற்சாலைகளில் மாத்திரம் அரசாங்கத்தில் உள்ள தலைவர்கள் கையூட்டாகப் பெற்றதாகச் சொல்லப்படும் தொகை ஐந்து கோடியைத் தாண்டுகிறது' என்று அகம் மகிழ வேலூர் பொதுக் கூட்டத்தில் விளக்கினார் கலைஞர். இதில் நாம் நினைவில் நிறுத்தவேண்டிய முக்கியமான செய்தி ஒன்று உண்டு. எம்.ஜி.ஆரால் ஊழல் புரிந்தவர்கள் என்று அடையாளம் காட்டப்பட்டவர்களில் சாதிக்பாட்சா,

அன்பில் தர்மலிங்கத்தைத் தவிர மற்ற அனைவரும் பின்னர் அ.தி.மு.கவில் இணைந்தனர். பொன்மனச் செம்மல் அள்ளித் தெளித்த புனித நீரில் அவர்களுடைய ஊழல் கறைகள் கழுவப்பட்டன. நெடுஞ்செழியனைத் தவிர மற்றவர்கள் மீண்டும் தாய்க் கழகத்துக்குத் தாவியபோது, கலைஞர் கட்டித் தழுவியதில் அவர்களுடைய கட்சித் துரோகம் கரைந்து மறைந்தது.

ஜெயலலிதா அமைச்சரவையில் இடம்பெற்று பொதுப் பணித் துறையைப் பொன் முட்டையிடும் வாத்தாக மாற்றிய கண்ணப்பன். சேலை முதல் செருப்பு வரை பொறுப்பாக ஊழல் செய்த இந்திரகுமாரி, சுடுகாட்டு ஊழலில் சரித்திரம் படைத்த செல்வகணபதி, கல்வித் துறையில் காசு பார்த்த மருங்காபுரி பொன்னுசாமி போன்றோரை நீதிமன்றத்தில் நிறுத்திய கலைஞரே, அவர்களைத் தன் உயிரினும் இனிய உடன்பிறப்புகளாக்கிக்கொண்டபோது, அவருடைய பகைவர்க்கும் அருளும் நன்னெஞ்சை நினைத்துத் தமிழகமே சிலிர்த்தது. அரங்கநாயகத்துக்குப் புகலிடம்

கொடுத்ததும், புதுக்கோட்டை ரகுபதியை மத்திய அமைச்சராக்கியதும் கலைஞரின் உள்ளத்தில் ஊறும் கருணை வெள்ளத்தை வெளிப்படுத்தியது. திருச்செந்தூர் கோயில் தங்கவேல் களவு போனதும், அறநிலைய அலுவலர் கொலை செய்யப்பட்டதும், கால்கள் கொப்பளிக்க 'நீதி கேட்டு நெடும் பயணம்' சென்று, வழியெல்லாம் எந்த ஆர்.எம்.வீரப்பனை கடுமையாக கலைஞர் விமர்சித்தாரோ, அந்த

ஆர்.எம்.வீ-யைக் கூட்டணித் தோழராக்கிக்கொண்ட கோலம் கண்டு இந்த ஞாலமே நெகிழ்ந்துபோனது. கவுண்டமணி 'சூரியன்' திரைப்படத்தில், 'அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா' என்று சொல்வது போல் நம் மக்களும் சொல்லத் தொடங்கிவிட்டனர். நல்ல மக்கள்... நல்ல தலைவர்கள்... நல்ல அரசியல்!

சர்க்காரியா கமிஷனால் கலைஞருக்கு ஒரு குறையும் நேர்ந்துவிடவில்லை. ரே கமிஷனால் எம்.ஜி.ஆரின். செல்வாக்கு சிதைந்துவிடவில்லை. கமிஷனுக்கு சட்ட பூர்வமாகத் தண்டிக்க அதிகாரமும் இல்லை என்பதை

அனுபவத்தில் உணர்ந்த கலைஞர், ஜெயலலிதாவைச் சிறையில் அடைக்க நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார். ஜெயலலிதாவுக்கு வாய்ப்புக் கிடைத்ததும் வீடு புகுந்து கலைஞரை நள்ளிரவில் கைது செய்து சிறைச்சாலை வாசலில் தனியாக அமரச் செய்து பழி தீர்த்தார். இருவருக்கும் இடையே நடக்கும் பழிவாங்கும் படலம்தான் தமிழக அரசியல். அது போகட்டும். இதுவரை விசாரணை கமிஷன்களில் வீணடிக்கப்பட்ட மக்கள் வரிப் பணம் எவ்வளவு என்ற விவரம் அறிய ஒரு விசாரணை கமிஷன் அமைத்தால் என்ன!







பக்தவத்சலம் ராஜாஜி காமராஜர்

15 நபிகளார் மறைவுக்குப் பின்பு முதல் கலீ்ஃபாவாகப் பொறுப்பேற்றவர் அபூபக்கர் சித்தீக். ஆட்சிப் பொறுப்பை அவர் ஏற்ற பின்பும் ஆடை வணிகத்தை விடவில்லை. தோளில் துணி சுமந்து கடைவீதியில் நடந்த அபூபக்கரை, நபிகளாரின் நெருங்கிய நண்பராக விளங்கிய உமர் சந்தித்தார். 'கலீ்ஃபாவாக ஆனபின்பும் கடைவீதியில் நீங்கள் துணி விற்றுக் கொண்டிருந்தால், ஆட்சிப் பொறுப்பை எப்படிப் பரிபாலிக்க முடியும்?' என்று கேட்டார் உமர். 'வணிகத்தை நான் கைவிட்டால், என் மனைவி மக்களின் தேவைகளை எப்படி நான் நிறைவேற்ற முடியும்?' என்றார் அபூபக்கர். அவரை உமர் பொதுக் கருவூலத்தின் பொறுப்பாளரிடம் அழைத்துச் சென்று நிலைமையை விளக்கினார். பெரும் செல்வந்தராக விளங்கிய அபூபக்கர், தன் உடைமை அனைத்தையும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வறுமையை விரும்பி ஏற்றவர். அவருடைய குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள... மிகக் குறைந்த பணத்தை அரசுக்கருவூலத்திலிருந்து வழங்குவதென்று

முடிவெடுக்கப்பட்டது.

அபூபக்கரின் அன்பு மனைவி அஸ்மா ஒரு நாள் தேனருந்த விரும்பினார். 'தேன் வாங்க நம்மால் எப்படி இயலும்?' என்ற கணவரிடம், தான் சிக்கனமாக மாதம் தோறும் சேமித்த காசைக் கொண்டு வந்து கொடுத்தார் அஸ்மா. 'ஓ! சேமிக்கவும் முடிகிறதா? மக்களின் உடைமையிலிருந்து நாம் தேவைக்கதிகமாகப் பெற்று வந்திருக்கிறோம் என்பது இப்போது புரிகிறது' என்று உரைத்த அபூபக்கர், அந்தப் பணத்தைப் பொதுக்கருவூலத்தில் சேர்த்தார். மாத ஊதியத்தை மேலும் குறைத்துத் தரும்படி அபூபக்கர் பொறுப்பாளருக்கு ஆணையிட்டார். மன்னராகத் தன்னை எண்ணாமல் மக்களின் காவலராகக் கருதி வாழ்ந்த அரிய மனிதர் அபூபக்கர். இன்று அவரைப் போன்ற ஆட்சியாளரை உலகில் எங்காவது காண முடியுமா?

வெள்ளையர் ஆட்சியில் ராஜாஜி சேலம் நகராட்சித் தலைவராக 1917-ல் பொறுப்பேற்று ஊதியம் பெறாமல் ஒவ்வொரு நாளும் ஆறு மணி நேரம் அலுவலகத்தில்

அமர்ந்து பணியாற்றினார். ஒரு லட்சம் ரூபாய்க்கும் குறைவாக வருவாய் வந்த நகராட்சியில் குடிநீர் விநியோகம், கழிவுநீர்க் கால்வாய், மருத்துவமனை, பள்ளிக்கூடம், கல்லூரி என்று வசதிகளை மேம்படுத்தினார். சேலத்தின் புகழ்பெற்ற வழக்கறிஞராகப் பொருளீட்டி வசதியாக வாழ்ந்த ராஜாஜி, மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு வழக்கறிஞர் தொழிலிலிருந்து விடுபட்டார். இருக்கும் செல்வத்தை இழப்பதற்காகவே அரசியலுக்கு வந்தவர்கள் வாழ்ந்த காலமது. சென்னை மாகாணத்தின் பிரதம அமைச்சராக 1937-ல் ராஜாஜி பொறுப்பேற்றார். தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகத்தின் ஒரு பகுதி, கேரளத்தின் பெரும்பகுதி சேர்ந்து சென்னை மாகாணமாக இருந்தது. 1937-38 பட்ஜெட்டை ராஜாஜி சமர்ப்பித்தபோது, அரசின் வரவு - செலவு வெறும் 16 கோடி ரூபாய். நிலவரியும், எக்சைஸ் வரியும் மட்டுமே முக்கிய வருவாயாக விளங்கின. இந்தியாவில் அதுவரை எந்த மாநிலத்திலும் இல்லாத விற்பனை வரியை, ராஜாஜி தன் ஆட்சியில்

அறிமுகப்படுத்தி அரசின் வருவாயைப் பெருக்கினார்.

1952-ல் மீண்டும் தமிழகத்து ஆட்சி நாற்காலியில் அமர்ந்த ராஜாஜி ஊழலற்ற, நிர்வாகத்தில் கட்சிக் குறுக்கீடில்லாத உயர்ந்த நெறிமுறைகளைப் பாதுகாத்தார். மதுவிலக்கை நடைமுறைப்படுத்தியதும், தாழ்த்தப்பட்டோர் ஆலயப் பிரவேசத்துக்கு வழிவகுத்ததும், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டமியற்றி ஏழை விவசாயிகளைக் கந்து வட்டியி லிருந்து காப்பாற்றியதும் ராஜாஜியின் பெருமைக்குரிய ஆட்சியின் சாதனைகள். இந்தித் திணிப்பும், குலக்கல்வித் திட்டமும் அவரிடம் நாம் காணும் குறைகள். ஒரு செப்புக் காசைக்கூட தேவையற்ற வீண் ஆடம்பரங்களுக்குச் செலவழிக்காத ராஜாஜி, எளிய வாழ்வில் நிறைவு கண்டவர். திருச்செங்கோடு ஆசிரமத்தில் ஒரு கீற்றுக்குடிலில் அவர் வாழ்ந்த வாழ்க்கையை அறிந்தவர்களுக்குத்தான் அவரு டைய நேர்மையும், தூய்மையும் புரியும்.

தங்குதூரி பிரகாசம் 31 வயதில் ராஜமுந்திரி நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். மிகச் சிறந்த

வழக்கறிஞர். பெரும் வருவாய் தந்த வழக்கறிஞர் தொழிலைத் துறந்து விட்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டவர். 'ஸ்வராஜ்யா' பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றியவர். சைமன் கமிஷனுக்கு எதிரான ஊர்வலத்துக்குத் தலைமையேற்று சென்னை பாரிமுனையில் சென்றபோது, வழிமறித்துத் துப்பாக்கியைக் காட்டிய காவல்துறை அதிகாரி முன்பு சிறிதும் அச்சமின்றி, அணிந்திருந்த சட்டையைக் கிழித்து மார்பைக் காட்டி, 'தைரியம் இருந்தால் சுடு!' என்று சொன்ன 'ஆந்திர கேசரி' (ஆந்திர சிங்கம்) இந்தப் பிரகாசம். தன்னலமற்ற பிரகாசம், தன் வறுமை போக்கச் சிறிது நிதி திரட்டிய ஒரே காரணத்துக்காக மகாத்மா அவர் முதல்வராவதை விரும்பவில்லை. ஆனாலும், 1946-ல் பிரகாசம் சென்னை மாகாண முதல்வரானார். பஞ்சாலைத் தொழிற்சாலைகளை முற்றாக மூடிவிட்டு, கதர்த் தொழிலை முன்னேற்ற இவர் எடுத்த நடவடிக்கை எதிர்ப்பை வளர்த்ததால், பத்து மாதங்களில் பதவி விலக நேர்ந்தது. மொழிவாரி அடிப்படையில் ஆந்திரம் தனி

மாநிலமானதும் அதனுடைய முதல் முதலமைச்சராகப் பதவியேற்ற பெருமைக்குரியவர் பிரகாசம். ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர் பத்துப் பைசா சேர்த்தார் என்று யாரும் சொல்ல முடியாது!

நேருவுடன் ஓமந்தூரார்...



பிரகாசத்துக்குப் பின்பு முதல்வர் பொறுப்பேற்றவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார். முதல்வர் பதவி இவரைத் தேடி வந்தபோது, ஏற்கத் தயங்கினார். ரமண மகரிஷியின் இசைவு கிடைத்த பின் முதல்வராகப் பொறுப்பேற்றார் ஓமந்தூரார். பெரும் நிலக்கிழாராக இருந்த ஓமந்தூரார், 'பணக்காரன் செல்வம் ஏழைக்கு சொந்தம்' என்ற கொள்கையுடையவர். இறுதிவரை ஒரு விவசாயியாக வாழ்ந்த ஓமந்தூரார், 'தொழிற்சாலைகள் அமைக்க நன்செய் நிலங்களைப் பயன்படுத்தக் கூடாது!'

என்று சட்டமியற்றியவர். இன்று பல்லாயிரம் ஏக்கர் விளைநிலங்கள் கார் உற்பத்திக்கு அரசின் உதவியோடு பறிபோகிற சூழலை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அமெரிக்காவிலிருந்து பொதுப்பணித் துறைக்குச் சில இயந்திரங்களை வரவழைப்பதில் ஊழல் நடந்ததால், தலைமைச் செயலர் எஸ்.வி.ராமமூர்த்தியின் மீது கடும் நடவடிக்கை எடுத்த ஓமந்தூரார், நேருவின் பரிந்துரையையும் நிராகரித்தவர். அரசில் அதிகமாக ஊழல் நடக்கும் இடம் பொதுப்பணித்துறை என்று பகிரங்கமாக விமர்சித்தவர். லஞ்ச ஊழல் ஒழிப்புக் குழுவை உருவாக்கிய ஓமந்தூராரை, அக்குழுவின் தலைவர் அனந்தாச்சாரி, 'ஓமந்தூராரைப் போன்ற ஒரு சத்தியசீலரை அவதார புருஷனை நான் இன்றுவரை பார்த்ததில்லை!' என்றார்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தச் சலுகையும் வழங்காத ஓமந்தூரார், அவர்கள் அன்றாட நிர்வாகத்தில் தலையிட அனுமதிக்கவில்லை. 'நீதிக்கும், சட்டத்துக்கும், நேர்மைக்கும் புறம்பாக மாவட்ட ஆட்சியரும்,

காவல்துறையினரும், அரசுத்துறை அதிகாரிகளும் சட்டமன்ற உறுப்பினர்களின் சிபாரிசை ஏற்று எந்த நடவடிக்கையையும் எடுக்கக் கூடாது!' என்று ஓமந்தூரார் சுற்றறிக்கை அனுப்பியதால், காங்கிரஸில் எதிர்ப்பு வளர்ந்தது. 'தோளில் உள்ள துண்டுக்கு சமம் இந்த முதல்வர் பதவி!' என்றெல்லாம் வாய்வசனம் பேசாமல் முதல்வர் பதவியைத் தூக்கியெறிந்து விட்டு வெளியேறினார் ஓமந்தூரார். அண்ணா 'திராவிட நாடு' இதழில் 'காந்தி ராமசாமியும், பெரியார் ராமசாமியும்' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதி ஓமந்தூராரைப் புகழ்ந்தார். பெரியாரின் 'விடுதலை' இதழில் 'யோக்கியனுக்கு அரசியலில், அதிகாரத்தில் இடமில்லை என்ற உண்மையை, பொய்யாப் புதுமொழியை நிலைநாட்டிவிட்டுச் செல்கிறீர்கள்!' என்று தலையங்கம் தீட்டப்பட்டது. தன் சொத்து முழுவதும் வடலூர் சன்மார்க்க சபைக்கு தானமாக்கி... ராமாயணத்து ஜனகரைப் போல் வாழ்ந்து மறைந்த மகான் ஓமந்தூரார்.

ஓமந்தூரார் பதவி விலகியதும், அவருடைய விருப்பப்படி



குமாரசாமி ராஜா

ராஜபாளையம் குமாரசாமி ராஜா முதல்வரானார். அப்பழுக்கற்ற காந்தியவாதியான குமாரசாமி ராஜா, ஆட்சியில்தான் நாட்டிலேயே முதன் முதலாக நீதித்துறை, நிர்வாகத்துறையிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டது. தொழிலாளர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்த அரிசனத்துறைக்குத் தனியாக அமைச்சர் நியமிக்கப்பட்டார். சென்னை மாகாணத்தில் அப்போதிருந்த 25 மாவட்டங்களிலும் பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வந்தது. கல்வித் திட்டத்தில் தமிழ் முதன்மைப் பாடமாக்கப்பட்டது. முதியோர் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு, அதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. கிராம வளர்ச்சித் திட்டம், கூட்டுறவு இயக்கம் ராஜாவின் நிர்வாகத்தில் தனி கவனம் பெற்றன. அரசவைக் கவிஞராக நாமக்கல் கவிஞர் நியமிக்கப்பட்டார். அண்ணாமலை அரசர் தமிழிசை வளர்க்க ஒரு மன்றம் உருவாக்க முனைந்தபோது, இலவசமாக அரசு நிலம்

வழங்கப்பட்டது. அரசியல் வாதிகளும், அரசு அதிகாரிகளும் லஞ்சம் வாங்குவதை ஒழிக்க விரும்பிய ராஜா, ஊழலில் ஈடுபட்டவர்களின் பெயர், பணி, முகவரி மற்றும் வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் அனைத்தையும் அரசு வெளியீடான 'சென்னை செய்தி'யில் வெளியிடச் செய்தார்.

சென்னை மாகாண முதல்வராகவும், ஒரிஸ்ஸா மாநில ஆளுநராகவும் பொறுப்பு வகித்த குமாரசாமி ராஜா, அறத்துக்குப் புறம்பான எந்தக் காரியத்திலும் ஈடுபட்டதில்லை. தான் வாழ்ந்த வீட்டையும், தன்னைச் சார்ந்த சொத்தையும் நாட்டுக்கு அர்ப்பணித்து, தன் கணக்கில் வங்கியில் மீதமிருந்த 50 ரூபாயை எட்டயபுரம் பாரதி நினைவு மண்டபம் எழுப்ப நிதியாக வழங்கிவிட்டு, எந்தச் சுமையும் இல்லாமல் மண்ணுலகை நீத்த அரிதினும் அரிதான மனிதர் குமாரசாமி ராஜா! அவருடைய வீடுதான் இன்று காந்தி கலை

> வேஷங்கள்
> போட்டுப்போட்டு
> அது
> தோல் சதை எலும்புக்குள்
> இறங்கி
> வேஷமே உங்கள்
> இயல்பாகி விட்டது
>
> – புவியரசு

மன்றமாகவும், பொது நூல் நிலையமாகவும் ராஜபாளையம் மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது.

இருள் சூழ்ந்த அடிமை இந்தியாவில், விலாசமில்லாத விருதுப்பட்டியில் பிறந்த ஏழை மனிதர் காமராஜர். படிநிலை சமுதாயத்தின் அடிநிலையில் இருந்த நாலாந்தர சாதிக்காரர் அவர். ஆறாம் வகுப்பிலேயே பள்ளியைத் துறந்த ஏழைப் பாமரர். அவர் 1954-ல் முதல்வரானதும் தமிழ் நிலத்தில் கல்வி வெள்ளம் கரை புரண்டது. சிற்றூரில் தொடக்கப்பள்ளி, பேரூரில் நடுநிலைப்பள்ளி, சிறிய நகரங்களில் உயர்நிலைப் பள்ளி என்று உருவாக்கிய கல்வி வள்ளல் காமராஜர். மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி 16 லட்சம் மாணவர்கள் பகற்பொழுதில் பசியாற வழியமைத்த பெருந்தலைவர், எட்டுப் பேர் கொண்ட அமைச்சரவையை ஏற்படுத்தி... 9 ஆண்டுகளில் செய்து முடித்த சாதனைகள்தான் எத்தனை! கல்விக் கண் தந்த காமராஜர் கீழ்பவானி, மணிமுத்தாறு, காவிரி டெல்டா, ஆரணியாறு, வைகை நீர்த்தேக்கம், அமராவதி, சாத்தனூர், கிருஷ்ணகிரி, புள்ளம்பாடி, பரம்பிக்குளம், நெய்யாறு, மேட்டூர்

கால்வாய்த்திட்டம் என்று வரிசையாக வளர்த்தெடுத்த பாசனத் திட்டங்கள்தான் இன்றும் விவசாயத்தின் உயிர்நாடியாக விளங்குகின்றன. நெய்வேலி நிலக்கரித் திட்டம், நீலகிரி கச்சா பிலிம் தொழிற்சாலை, ஆவடி டாங்க் தொழிற்சாலை, மேட்டூர் காகித ஆலை, கிண்டி, எண்ணூர் தொழிற்பேட்டைகள், குந்தா திட்டம், பெரியாறு நீர் மின்சக்தித் திட்டம் அனைத்தும் காமராஜர் ஆட்சி தமிழகத்துக்கு வழங்கிய அருட்கொடைகள்.

தன்னைப் பெற்றெடுத்த தாய்க்கு மாதம் 120 ரூபாய் மட்டும் அனுப்பியவர்; ஒரு உறவையும் தன் பக்கம் நெருங்க அனுமதிக்காதவர்; தன் தங்கையின் பேரனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்றுத் தர மறுத்தவர்; கண் மூடும் வரை காந்தியத்தைக் கடைப்பிடித்தவர்; பத்து வேட்டி-சட்டைக்கு மேல் எந்தச் சொத்தும் இல்லாமல் வாழ்ந்தவர் காமராஜ். அவரது கணக்கில் இருந்த பணத்துக்கான காசோலை பாஸ்புக் இரண்டும் சத்தியமூர்த்தி பவன் நிர்வாகியிடம்தான் இருந்தன. அந்த மாமனிதர் ஹைதராபாத் வங்கியில் 6 கோடி ரூபாய் வைத்திருந்ததாக

மனம் கூசாமல் மேடைகளில் பழி சுமத்திய பண்பாளர்கள்தான், பின்னாளில் ஊழலின் ஊற்றுக் கண்ணைத் திறந்து வைத்து மக்கள் சொத்தைக் கபளீகரம் செய்த கழகத் தலைவர்கள்!

காமராஜருக்குப் பின்பு முதல்வர் பொறுப்பேற்ற பக்தவத்சலம் ஆட்சியதிகாரத்தில் புதிய சரித்திரம் படைத்தவர். நிர்வாகத்திறன் மிக்க இவர் 1963 முதல் 1967 வரை முதல்வராக இருந்தபோது, அரிசிப் பஞ்சமும், மொழிப் போராட்டமும் சேர்ந்து இவரை அலைக்கழித்தன. 'தமிழை வளர்ப்போம் வாரீர்' என்று இவர் புத்தகம் எழுதியிருந்தாலும் கல்லூரியில் புதுமுக வகுப்பில் தமிழைப் பயிற்று மொழியாக அறிமுகப்படுத்தியிருந்தாலும், கோலாலம்பூர் உலகத் தமிழ் மாநாட்டுக்கு சென்ற பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைவராக இருந்திருந்தாலும், விமர்சனங்களால் தமிழின விரோதியாகச் சித்திரிக்கப் பட்டார். இவரை, ஆதாரமில்லாமல், 'பத்து லட்சம் பக்தவத்சலம்' என்று தி.மு.க. பழித்த போதிலும் எந்த ஊழலுக்கும் இடம்

தராமல் எளிமையாக வாழ்ந்தவர்.




யாரும் எதிர்பார்க்காத வகையில் 1967-ல் காங்கிரஸை வீழ்த்தி விட்டு அண்ணா முதல்வர்பொறுப்பேற்றதும், அமைச்சர்கள் அதுவரை பெற்று வந்த ஊதியத்தில் பாதியைப் பெறச் செய்தார். அரசு வீட்டை மறுத்து தன்னுடைய வீட்டிலேயே ஆடம்பரமின்றி எளிய வாழ்வை மேற்கொண்டார். சென்னை, தேனாம்பேட்டையில் பாலாஜி ஏஜென்சி என்ற பெட்ரோல் பங்கில் வழக்கமாகத் தன் காருக்கு பெட்ரோல் போட்ட அண்ணா, பல சமயங்களில் பணம் கொடுக்க முடியாமல் சிரமப்பட்டார். தன் வளர்ப்பு மகன்கள் பரிமளம், இளங்கோவன், கௌதமன், பாபு ஆகியோருக்கு எந்த அரசியல் ஆதாயத்தையும் அண்ணா தேடித் தரவில்லை. தன் முதல்வர் பதவியின் மூலம் ஒரு சிறிய பயனையும் தன் குடும்பம் பெறாமல், பொது

வாழ்வின் புனிதம் காத்த அறிஞர் அவர். தமிழின் மீது தனிப்பெருங்காதல் கொண்டவர். தமிழினத்தை உண்மையாக நேசித்தவர். அடுத்தவர் மனம் காயப்படாமல் அரசியல் நடத்தியவர். அவருடைய அரசியலில் ஆயிரம் விமர்சனங்களுக்கு இடமிருந்தாலும், ஊழலற்ற, எளிமையான அன்பு சார்ந்த அண்ணாவின் பொது வாழ்வின் தூய்மை விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது. யாரும் எதிர்பாராத போது முதல்வரானவர், யாரும் எதிர்பாராத நேரத்தில் கண்மூடி விடைபெற்றார்.

அந்தப் பொற்காலம் இந்த மண்ணில் இளைஞர்கள் மனம் வைத்தால் நிச்சயம் மீண்டும் மலரும். உண்மையும், நேர்மையும் சார்ந்த புதிய சமுதாயம் புலரும்! அன்றுதான் பொய்மைப் பூச்சுடன் பொதுவாழ்வில் வலம்வரும் போலி மனிதர்களின் அரிதார வேடம் பூரணமாகக் கலையும்!

*– பயணம் தொடரும்–*

எங்கே போகிறோம் நாம்?
எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# 16 சுயாட்சி...

இந்திய மக்கள் அறவுணர்வாலும், ஆன்மிக நெறியாலும் ஒன்றுபட்டிருந்தாலும், இந்தியா என்பது பல்வேறு தேசிய இனக்குழுக்களின் தொகுப்பு என்பது மறுக்க முடியாத உண்மை. பல்வேறுபட்ட மொழி, மத, கலாசாரப் பின்புலத்துடன் வேறுபட்டிருந்த இனக்குழுக்களின் நிலப்பரப்பை, வெள்ளையர் நிர்வாகமே ஒன்றிணைத் தது. இந்த வரலாற்று உண்மையை, விடுதலைப் போரில் ஈடுபட்ட தலைவர்கள் தெளிவாக உணர்ந்திருந்ததனால்தான் சுயநிர்ணய உரிமை கொண்ட மாநில அரசுகளுக்காக முதலில் குரல் கொடுத்தனர். வலிமை மிக்க ஒற்றையாட்சி முறையை அவர்கள்

முதலில் சிந்திக்கவில்லை. மகாத்மாவின் அரசியல் ஆசான் கோபாலகிருஷ்ண கோகலே 'அரசியல் சாசனம்' (Political Testament) என்ற தன் நூலில் மாகாண சுயாட்சியின் அவசியத்தை அறிவுறுத்துகிறார்.



விடுதலைப் போரை முன் நின்று நடத்திய காங்கிரஸ் பேரியக்கம், கொல்கத்தாவில் 1917-ல் நடந்த மாநாட்டில் மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைய வேண்டும் என்றது. நாக்பூரில் 1920-ல் நடந்த மாநாட்டில் இந்தக் கருத்தை

வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

மோதிலால் நேருவின் தலைமையில் ஜவஹர்லால் நேருவும், நேதாஜியும் உறுப்பினர்களாக இருந்து உருவாக்கிய 'நேரு கமிட்டி' அறிக்கையும் பிரிட்டிஷ் மாகாணங்கள் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. 1946-ல் நடைபெற்ற தேர்தலின்போது வெளியிடப்பட்ட காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிலும் மொழிவாரி மாகாணங்கள் குறித்த வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால், நேருவின் தலைமையில் சுதந்திர இந்தியாவில் அமைந்த காங்கிரஸ் அரசு, நாட்டு ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டும் என்று கூறி மொழிவாரி மாநிலங்களை அமைக்க மறுத்தது.


அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் டிசம்பர் 13, 1946 அன்று பேசிய நேரு, சுயாட்சி கொண்ட மாநிலங்களின் அவசியம் குறித்து அழுத்தமாகக் குறிப்பிட்டார். ஆனால், அதே நேரு சுதந்திர இந்திய பிரதமரானதும், 'மொழி அடிப்படையில் மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து முட்டாள் தனமானது. பழங்குடி


மனோபாவம் கொண்டது' என்று பழித்தார். மொழி அடிப்படையில் ஆந்திர மாநிலம் அமைய வேண்டும் என்று பொட்டி ஸ்ரீராமுலு நாயுடு உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த நிலையில்... வெடித்துக் கிளம்பிய மக்கள் கிளர்ச்சியில் மருண்ட மத்திய அரசு, மொழிவாரி மாநிலங்கள் அமைக்க முன் வந்தது.

பாகிஸ்தான் பிரிவினைக்கு ஜின்னா மட்டும் காரணம் இல்லை. முஸ்லிம் வகுப்புவாதிகளுக்கு இந்து வகுப்புவாதிகள் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை. 'இந்துக்களும், முஸ்லிம்களும் தனித்தனி இனங்கள். முஸ்லிம்களுக்கு இந்தியா தாய்நாடு இல்லை' என்று 1937-ல் ஆமதாபாத் மாநாட்டில் பிரிவினைக்கு வித்தூன்றியவர் சாவர்க்கர். காங்கிரஸ் தலைவர்களாக விளங்கிய லாலா லஜபதிராய், பண்டித மாளவியா போன்றோரும் சாவர்க்கரின் சிந்தனைப் போக்குடன் அவருக்கு முன்பே செயற்பட்டவர்கள். ஆனால், முஸ்லிம் லீக் மாநாடு 1937-ல் லட்சுமணபுரியில் நடந்த போது 'அரசியல் சட்டத்தின் மூலம் முஸ்லிம்

சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வழங்கும் வகையில் இந்தியாவுக்கு உட்பட்ட சுதந்திர ஜனநாயக மாநிலங்களின் கூட்டாட்சி'யை வலியுறுத்தியே தீர்மானம் தீட்டப்பட்டது.

அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த அபுல்கலாம் ஆசாத், மகாத்மாவுடன் கலந்து பேசி, 'பாதுகாப்பு, போக்குவரத்து, வெளியுறவு ஆகிய மூன்று துறைகளின் அதிகாரங்கள் மட்டும் மத்திய அரசிடமும், மற்ற அதிகாரங்கள் மாகாண அரசுகளிடமும் இருக்க வேண்டும்' என்ற திட்டத்தை பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவிடம் சமர்ப்பித்தார். ஆசாத் அளித்த திட்டம், கூட்டாட்சித் தத்துவத்தை உறுதிப்படுத்தியது. 1937-ல் காங்கிரஸ் 'மாநிலங்களுக்கு சுயாட்சி' என்ற கோஷத்துடன்தான் தேர்தலைச் சந்தித்து வெற்றி பெற்றது. நெகிழ்வுத் தன்மை கொண்ட சுதந்திர ஜனநாயக


ஜவஹர்லால் நேரு


மௌலானா அபுல்கலாம் ஆசாத்


அம்பேத்கர்

மாநிலங்களின் சுயாட்சி என்ற நிலைப் பாட்டில் காங்கிரஸ் தலைவர்கள் இறுதிவரை உறுதியாக நின்றிருந்தால், பாகிஸ்தான் பிரிவினை நிகழ்ந்திருக்காது. பெரியாருக்குப் பின்பு திராவிட நாடு பிரிவினை கைவிடப்பட்டது போல், ஜின்னாவின் மறைவுக்குப் பின்பு பாகிஸ்தான் கோரிக்கை நீர்த்துப் போயிருக்க வாய்ப்புண்டு. ஆனால், நேருவும், படேலும் கூட்டாட்சிக்குக் குழிபறிக்கும் வலிமையான மத்திய அரசு சித்தாந்தத்தில் பார்வையைத் திருப்பியதால்... ஜின்னா பாகிஸ்தானை அடைய நேரடி நடவடிக்கை(Direct Action) அறிவித்தார்.

கடைசி கிராமத்து மனிதனை நோக்கிய அதிகாரப் பரவல் என்ற காந்தியின் கனவு, அவருடைய நெருங்கிய சீடர்களாலேயே கலைக்கப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டம் அதிகாரங்களைக் குவித்து வைத்திருக்கும் மத்திய அரசுக்கு வழி வகுத்தது. ஒற்றையாட்சி (Unitary) என்றும் சொல்ல முடியாத, கூட்டாட்சி (Federal) என்றும் அழைக்க முடியாத ஓர் இரண்டுங்கெட்டான் அரசமைப்புச் சட்டம் நம் தலைமீது சுமத்தப் பட்டது. சுதந்திரத்துக்கு முன்பு

'சுயாட்சி' என்றவர்கள், ஆட்சியில் அமர்ந்ததும் மத்திய எஜமானர்களாக மாறிவிட்டனர். நம் அரசமைப்புச் சட்டத்தில் 'கூட்டாட்சி' என்ற வார்த்தைக்கே இடமில்லை. 'இந்திய யூனியன்' என்று அரசமைப்புச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு விளக்கம் தந்த அம்பேத்கர், வேண்டுமென்றேதான் 'யூனியன்' என்கிற பதத்தைப் பயன்படுத்தியிருக்கிறோம். இந்தியா ஒரு கூட்டாட்சியாக இருந்தாலும், இது மாநிலங்களுக்கிடையே உருவான ஒப்பந்தத்தின் விளைவு அன்று. எனவே, எந்த மாநிலத்துக்கும் பிரிந்து போகும் உரிமை இல்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம். இந்தக் கூட்டாட்சி ஒரு 'யூனியன்' என்பது எந்த நிலையிலும் அழிக்க முடியாதது' என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது மத்திய அரசின் அதிகாரங் களை வரையறை செய்வதற்கு நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட 'மத்திய அதிகாரக் குழு' '(Union Powers Committee)' தேசப் பாதுகாப்பு, வெளிநாட்டுறவு, செய்தித் தொடர்பு ஆகிய மூன்று

அதிகாரங்கள் மட்டும் இருந்தால் போதும்' என்றுதான் அறிக்கை சமர்ப்பித்தது. ஆனால், பிரிவினை பூதத்தைக் காட்டி மாநில சுயாட்சி புதைக்கப்பட்டுவிட்டது. இந்தியப் பெருமுதலாளிகளின் பரந்த வர்த்தகச் சந்தை நலன்கள் பாதுகாக்கப்படுவதற்கு மாநில சுயாட்சி பலியிடப்பட்டது. பிர்லா முதல் அம்பானிகள் வரை வகுத்துக் கொடுக்கும் வழியில்தான் ஆட்சித் தேர், அன்று முதல் இன்று வரை வலம் வருகிறது. நம் ஜனநாயக பொம்மலாட்டத்தின் சூத்திரக் கயிறு, பெருமுதலாளிகளின் கைகளில் தான் இருக்கிறது.

மாநில சுயாட்சி, காவிரி நீர்ப் பிரச்னை, முல்லை பெரியாறு போன்ற ஒட்டுமொத்த மக்கள் நலன் சார்ந்த விவகாரங்களில் எள்ளளவும் கட்சிக் கண்ணோட்டம் இருத்தலாகாது. இவையனைத்தும் கலைஞர், ஜெயலலிதாவின் குடும்பப் பிரச்னைகள் இல்லை. இவை ஆறரை கோடி தமிழரின் வாழ்வாதாரப் பிரச்னைகள். ஆனால், நம் துரதிருஷ்டம் இங்கு எல்லாமே ஒருசில தனிமனிதர் களின் விருப்பு - வெறுப்பு சார்ந்த அசிங்கமான

அரசியலாகிவிட்டது. அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கை அரை மணி நேரம் சந்தித்து உரையாடினர் என்ற செய்தி வந்ததும், 'மாநில சுயாட்சி' ஆயுதத்தை மீண்டும் கையில் எடுத்துவிட்டார் கலைஞர்.

முஸ்லிம் லீக் 'பாகிஸ்தான்' கேட்பதற்கு முன்பே 'திராவிட நாடு' கேட்ட வர்கள் பெரியாரின் சீடர்கள்.

'தன்னலத்துக்காக ஏதோ ஒரு தகரக் குவளை போன்ற அதிகாரம் கிடைத்தால் போதும் என்ற திருப்தி அடையச் சிலர் தயாரில் இருக்கலாம். தமிழன் தமிழ்ப் பண்பை இழவாதவன், வீரன், உண்மைத் தொண்டன், விடுதலை விரும்புவோன், இவைதமைத் துச்சமெனக் கூறிடுவான்; தூதூ என்று ஏசிடுவான், அவன் விரும்பமாட்டான் காகிதப் பூஞ்சோலையை... கலர்க் கண்ணாடியாலான நகையை. கனியாத பலாவை. அரசியலின் மூலம் நாம் வேண்டுவது சில்லறைப் பதவிகளை அல்ல; சிங்கார வாழ்வையல்ல. நமது இனத்தின் விடுதலையை நாம் விரும்புகிறோம். அதற்கே அரசியலை நாம் துணைக்கொள்கிறோம்.

திராவிடருக்குத் திராவிட நாடு என்று முழக்கம் செய்யுங்கள். அதைப் பெற்றே தீருவோம் என்று சூள் கொள்ளுங்கள் என்று ('விடுதலைப் போர்' நூலில்) பிரிவினை முழக்கம் செய்த அண்ணா, இறுதியில் 'தகரக்குவளை அதிகாரம்' போதுமென்ற முடிவுக்கு வந்து காகிதப் பூஞ்சோலையில் கலர்க்கண்ணாடி நகையணிந்து, கனியாத பலாவை ஏற்றார்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் கடைசி வரை ஓயாமல் கடைபரப்பிய மாநில சுயாட்சியைக் கலைஞர் கடன் வாங்கினார். இந்தியாவிலேயே மத்திய, மாநில அதிகாரங்களை மறு ஆய்வு செய்து சட்டப்பேரவையில் வெள்ளை அறிக்கை சமர்ப்பித்த பெருமைக்குரிய முதல் மனிதர் கலைஞர். நீதிபதி ராஜமன்னார் தலைமையில் ஏ.லட்சுமணசாமி முதலியார், சந்திரா ரெட்டி ஆகிய இருவரும் இடம்பெற்ற குழுவை கலைஞர் நியமித்தார். ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளில் முக்கியமானவை மூன்று.

அரசமைப்புச் சட்டத்தின் 256-வது பிரிவு, 'நாடாளுமன்றம்

நிறைவேற்றும் சட்டங்களை மாநிலங்களில் அமல்படுத்த மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு' என்கிறது. இது நீக்கப்பட வேண்டும்.

257-வது பிரிவு, 'சில விஷயங்களில் மத்திய அரசு பிறப்பிக்கும் உத்தரவுகளை மாநில அரசுகள் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும்' என்கிறது. இந்தப் பிரிவும் நீக்கப்பட வேண்டும்.

339(2)-வது பிரிவு, 'தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வு சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள அதிகாரம் உண்டு' என்கிறது. இந்தப் பிரிவும் அவசியமில்லை' என்றது ராஜமன்னார் குழு.

முதல்வர் கலைஞர் 1974 ஏப்ரலில் சட்டப் பேரவையில் வைத்த வெள்ளை அறிக்கை, 'இந்திய நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள், மாநிலங்களுக்கிடையே போக்குவரத்துத் தொடர்புகள், நாணயச் செலாவணி ஆகியவை தொடர்பான அதிகாரங்களை மட்டும் கொண்டுள்ள மத்திய அரசும், எஞ்சிய அதிகாரங்கள் உட்பட

ஏனைய அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டுள்ள மாநில அரசுகளும் உள்ள உண்மையான கூட்டாட்சியை நிறுவும் லட்சியத்துடன் தமிழ்நாடு அரசு ராஜமன்னார் குழுவின் பரிவுரைகளை ஆய்ந்தபின், அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளிலும், அதிகாரப் பட்டியல்களிலும் செய்யப்பட வேண்டிய திருத்தங் களை வகுத்துத் தொகுத்துள்ளது. இதன் விளைவான வேறு மாறுதல்களையும் அரசியலமைப்புச் சட்டத்தில் செய்தல் வேண்டும்' என்று வலியுறுத்தியது. 'மாநில சுயாட்சி பற்றியும் ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துகளை மத்திய அரசு ஏற்று, மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்' என்றும் சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

மாநில சுயாட்சித் தீர்மானம் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு 35 ஆண்டுகள் முடிந்து விட்டன.


'உடனடியாக அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்' என்று தீர்மானம் போட்ட கலைஞர் ஐந்தாவது முறை முதல்வரான பின்பும் ஒன்றும் நடக்கவில்லை.

'நான் நமது மாநிலத்துக்கு சுயாட்சி பெறப் போராட வேண்டுமென்று தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் கூறினார். சிறைக்குச் செல்லத் தயார் என்றார். அப்படி ஒரு நிலைமை தவிர்க்க முடியாதது என்றால், நானும் அவருடன் சிறையில் இருப்பேன். அவரைத் தனியாக விட மாட்டேன். எனது அரசியல் பொது வாழ்வில் இந்தத் தீர்மானத்தை இரு அவையிலும் (அப்போது மேலவை இருந்தது) நிறைவேற்றியதன் மூலம் நான் ஒரு பெரிய கடமையைச் செய்து முடித்ததாகவே கருதுகிறேன். இந்தக் கடமையில் வெற்றி பெறப் பதவியையும் பொருட்படுத்தாமல் பணியாற்றும் உரிய காலம் விரைவில் வரும் என்றே எதிர்பார்க்கிறேன்; நம்புகிறேன்;


பெரியார்



ம.பொ.சிவஞானம்



கருணாநிதி



தயாராக இருக்கிறேன்' என்று பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியபோது (27.4.1974) கலைஞர் பேசினார். உரிய காலம் இன்றுவரை வரவே இல்லை. பாழுங்காலத்தின் மீதுதான் நமக்குப் பெருங்கோபம் பொங்குகிறது.

புதிய உரிமைகளைப் பெறுவதற்கு கலைஞர் பின்பு போராடட்டும். நெருக்கடி நிலை நடைமுறையில் இருந்தபோது இந்திரா காந்தி மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியைப் பொதுப்பட்டியலுக்கு மாற்றினாரே, அந்தக் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலில் சேர்க்க முதலில் முதல்வர் முயலட்டும்.

'தெளிந்த நீரோடையில் தன் பிரதிபிம்பம் கண்டு மகிழ்ந்த கலைமான் தன்னுடைய குட்டிமானிடம் அந்த பிம்பத்தைக் காட்டி, தன் அழகையும், ஓடும் வேகத்தையும், தன்னிடமுள்ள ஆற்றலையும் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தது. அப்போது வேட்டை நாய்களின் குரைப்புச் சத்தம் கேட்டது. அடுத்த கணமே கலைமான் தலைதெறிக்க ஓடத் தொடங்கியது. 'இவ்வளவு நேரம் உன் ஆற்றலைப் பற்றிப் பேசிய நீ இப்போது ஏன் தலைதெறிக்க

ஓடுகிறாய்?' என்று குட்டிமான் கேட்டது. 'வேட்டை நாய்களின் குரைப்புச் சத்தம் கேட்டால் என் தைரியமெல்லாம் என்னைவிட்டு ஓடிவிடுகிறது' என்று பரிதாபமாக பதிலளித்தது கலைமான்' இந்தக் கதையைச் சொன்ன சுவாமி விவேகானந்தர், 'ஆசையும் துன்பமும்தான் வேட்டை நாய்களின் குரைப்புச் சத்தம். மனிதன்தான் கலைமான்' என்று விளக்கினார்.

ஆசை என்ற பலவீனம் உள்ளவரை, மத்திய அரசு என்ற வேட்டை நாய் குரைப்புச் சத்தத்துக்கு அஞ்சத்தானே வேண்டியிருக்கிறது!

– பயணம் தொடரும்–

எங்கே போகிறோம் நாம்?
எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

## இந்தி இந்தி இந்தி...

**17** தாயின் கருவில் நாம் இருக்கும்போதே காது கொடுத்துக் கேட்கும் மொழி நம் தாய்மொழி. தாயைப் புறக்கணிப்பதும், தாய்மொழியைப் புறக்கணிப்பதும் மண்ணில் வாழும் மனிதர்கள் செய்யும் பாவங் களிலேயே மன்னிக்க முடியாத பாவங்களாகும். இனிமையும், நீர்மை யும் இணைந்த தமிழ், நாம் பேசும் தாய்மொழியாக வாய்த்தது நமக்குக் கிடைத்த மாபெரும் வரம். ஓர் இனத்தின் தொன்மையான நாகரிகத்தையும், பண்பாட்டு விழுமங்களையும் வாழையடி வாழையாக வளர்த்தெடுப்பதும், அடுத்துவரும் தலைமுறைக்குத் தோள் மாற்றுவதும் அந்த இனம் அழியாமல் காத்து வரும் தாய்மொழி ஒன்றுதான். மொழி அழிந்தால்... இனத்தின் முகம் அழியும். மொழி தொலைந்தால்... கடலில் கலந்த

நீர்த்துளியாய் இனத்தின் தனித்துவமிக்க அடை யாளமும் தொலைந்துபோகும்.




பல்வேறு தேசிய இனக் குழுக்களின் ஒன்றியமாக விளங்கும் இந்தியாவில் 1,652 மொழிகள் பேசப்படுவதாகவும், இவற்றில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பேசும்

மொழிகள் 281 என்றும் ஓர் ஆய்வு கூறுகிறது. நம் நாட்டில் அதிகமான மக்கள் இந்தி பேசுவதால், ஆட்சிமொழியாக அரசமைப்புச் சட்டம் அதை அங்கீகரித்தது. வட இந்தியாவில் வாழும் அனைவரும் இந்தி பேசுபவர்கள் இல்லை. உருது, மைதிலி, மாகதி, போஜ்பூரி, மால்வி, பன்ஜாரி, ராஜஸ்தானி, ஆவதி போன்ற மொழிகளைப் பேசும் மக்களும் இந்தி பேசுவோராக பாவிக்கப் படுகின்றனர். இந்தியை மையமாக வைத்து நம் தமிழகத்து

அரசியல் களத்தில் நடந்தேறிய பல்வகை நடவடிக்கைகளில் ஆயிரம் சுருதி பேதங்கள் உண்டு.

அடிமை இந்தியாவில் 1937-ல் நடந்த தேர்தலில் காங்கிரஸ் 8 மாகாணங்களில் ஆட்சியைக் கைப் பற்றியது. சென்னை மாகாணத்தில் பிரதமராக (அப்போது மாகாண முதல்வர் 'பிரிமியர்' என்று அழைக்கப்பட்டார்) ராஜாஜி பொறுப்பேற்றார். இந்தியாவின் பொதுமொழியாக இந்தி இருக்க வேண்டும் என்பது காந்தியின் விருப்பம். இந்துக்களும், முஸ்லிம்களும் என்றும் பிரிந்துவிடாமல் இணைந்திருக்க, இந்தியும் உருதும் கலந்து மருவிய 'இந்துஸ்தான்' மொழியே இந்தியாவின் ஆட்சி மொழியாக அமையவேண்டும் என்று பின்னா ளில் வலியுறுத்தியவர் மகாத்மா. அவருடைய மனச்சான்றின் குரலாக மதிக்கப்பட்ட ராஜாஜி இந்தியைப் பரப்புவதிலும், பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக திணிப்பதிலும் தீவிரம் செலுத் தினார். காந்தியடிகளிடம் ஈடுபாடு கொண்டு முதலில் காங்கிரஸில் இணைந்து பணியாற்றிய பெரியாரும் இந்திக்கு ஆதரவாக இருந்தவர்தான்.

'அப்போது எனக்கு எல்லாவற்றையும்விட இந்தி சம்பந்தமாகத் தான் ஆவல் ஏற்பட்டு, இந்தியை இன்று முதல் சில பிள்ளைகளுக்கு நம் செலவிலேயே கற்றுக் கொடுக் கலாம் என்று தீர்மானித்தேன். அன்று முதல் 30 பேர்கள் கொண்ட ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. இப்படி 2 வருடங்கள் வரை அதை நடத்தினேன். இது மட்டுமின்றி, போகிற இடங்கள் தோறும் இந்தியைப் பற்றிப் பெருமையாக ஏதேதோ பேசுவதுண்டு. இப்படி இந்தியைப் பற்றிக் கவலை கொண்டு அதை நம் நாட்டில் கொண்டு வந்து பரவச் செய்தவர்களில் நானும் ஒருவன்' (விடுதலை 1-8-1955) என்று பெரியாரே வாக்குமூலம் வழங்கியிருக்கிறார். காங்கிரஸிலிருந்து 1925-ல் விலகிய பெரியார், பள்ளிகளில் இந்தியை ராஜாஜி புகுத்தியபோது கடுமையாக எதிர்த்துக் களம் கண்டார்.

ராஜாஜி அரசு 125 பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி ஆணை பிறப்பித்தது. நாவலர் சோமசுந்தர பாரதியார் தலை மையில் திருச்சியில் உருவான இந்தி எதிர்ப்புக் குழு

போராட்டத்தை வடிவமைத்தது. சென்னைக் கடற் கரையில் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய பெரியார், 'ஆச்சாரியார், இந்தி புகுத்துவதால் தமிழ் கெடாது என்று மனமறிந்து பித்த லாட்டம் பேசுகிறார். இன்று தமிழ் எங்கே இருக்கிறது?' என்று கடுமையாக விமர்சித்தார். இந்தி எதிர்ப்புப் போரில் பெரியார் உட்பட ஆயிரம் பேருக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டனர். தாளமுத்து, நடராசன் என்ற இருவரும் சிறையில் மரணமுற்றனர். மறியலில் ஈடுபட்டு மொழிக்காகச் சிறை சென்றவர்களை, 'அற்பக் கூலிக்கு அமர்த்தப்பட்ட கூலியாட்கள்' என்றார் ராஜாஜி. இரண்டாம் உலகப் போரில் வெள்ளையர் இந்தியாவை ஈடுபடுத்தியதை எதிர்த்து எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ் பதவி விலக முடிவெடுத்ததால், ராஜாஜியின் ஆட்சியும் முடிவுக்கு வந்தது. இந்தித் திணிப்பும் கைவிடப்பட்டது.



சுதந்திரத்துக்குப் பின்பு ஓமந்தூரார் ஆட்சியில் மீண்டும் இந்தித் திணிப்பு நடந்த நிலையில், 1948-ல் பெரியார் இந்தி எதிர்ப்புப் போருக்குஉயிரூட்டினார். 'இந்தியை ஒழிக்க நீங்கள் கட்டாயம் கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும். தாய்மார்களும் போராட்டத்துக்குத் தயாராக வேண்டும். என்ன விலை கொடுத்தேனும் நாம் போராட்டத்தில் வெற்றி பெற வேண்டும்' (விடுதலை 20.07.48) என்று அறிவித்தார் பெரியார்.அதே பெரியார்தான்.... தமிழகம் என்றும் கண்டிராத வகையில் 1965-ல் மொழிப் போர் மாணவர்களால் நடத்தப்பட்டபோது, 'பதவியைப் பிடிப்பதற்காகக் கண்ணீர்த் துளிகள் (தி.மு.க) செத்த பாம்பை எடுத்து ஆட்டுகின்றனர்' என்று விமர்சித்தார். 'எனது இந்தி எதிர்ப்பு என்பது இந்தி கூடாது என்பதற்காகவோ, தமிழ் வேண்டும் என்பதற்கோ அல்ல.

மற்றெதற்கு என்றால், ஆங்கிலமே பொதுமொழியாக, அரசாங்க மொழியாக, தமிழ்நாட்டு மொழியாக, தமிழன் வீட்டு மொழியாக ஆகவேண்டும் என்பதற்காகவே ஆகும்! உங்கள் வீட்டில் மனைவியுடன், குழந்தைகளுடன், வேலைக்காரிகளுடன் ஆங்கிலத்திலேயே பேசுங்கள், பேசப் பழகுங்கள், பேச முயலுங்கள். தமிழ்ப் பைத்தி யத்தை விட்டொழியுங்கள்' (விடுதலை 27.01.69) என்றார் பெரியார். ஆக, நெஞ்சில் பட்டது எதுவோ... அதை நேர்படச் சொன்னார்பெரியார்.

காந்தியின் விருப்பப்படி தமிழ்நாட்டில் இந்தியைப் பரப்பவும், தன் ஆட்சிக் காலத்தில் பள்ளிகளில் இந்தியைத் திணிக்கவும் முற்பட்ட ராஜாஜியும் ஒரே நிலைப்பாட்டில் இறுதிவரை நிற்க வில்லை. உஸ்மானியா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ஜனவரி 27, 1944 அன்று பங்கேற்றுப் பேசிய ராஜாஜி. 'இப்பல்கலைக் கழகம் கலை, அறிவியல் பாடங்களை இந்திய மொழியில் வழங்குவதை நான் வரவேற்கிறேன். இந்தியப் பல்கலைக்கழகங்களில் இன்னமும் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருப்பது

வருத்தத்தைத் தருகிறது. ஆந்திரா, மைசூர், அண்ணா மலைப் பல்கலைக் கழகங்களில் தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகியவை பயிற்றுமொழிகளாக இல்லை. காசி பல்கலைக் கழகத்திலும் இந்துஸ்தானி இல்லை. தாய்மொழி மூலம் பயில்வதே பயன் தரும்' என்றார்.

'தேசிய மொழி' என்ற தலைப்பில் கல்கத்தாவில் இந்தி உயர்நிலைப் பள்ளியில் மார்ச் 28, 1948-ல் பேசியபோது, 'இந்துஸ்தானியே இந்தியாவின் தேசிய மொழியாக இருக்க முடியும்' என்று அழுத்தம் திருத்த மாக உரைத்தார். ஆனால், அதே ராஜாஜிதான் 'சுயராஜ்யா' (16-06.62) இதழில் பள்ளிகளிலும், கல்லூரி களிலும் ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடிப்பது நல்லது' என்று எழுதினார். ஆக, ராஜாஜியும் தமிழைத் தாங்கிப் பிடிக்கவில்லை.

மாணவர் போராட்டம் 1965-ல் பெருந்தீயாக மாநிலம் முழுவதும் பற்றியெரிந்தபோது ராஜாஜி'English ever, Hindi never' என்று குரலை மாற்றி முழங்கினார். 'ஆங்கிலம் இந்தியருக்கு சரஸ்வதி வழங்கிய அருட்கொடை' என்று வருணித்தார். ஆங்கிலம் மட்டுமே நாட்டின்

ஆட்சிமொழியாகவும், மாநிலங்களின் இணைப்பு மொழியாகவும் இருக்கவேண்டும் என்று இறக்கும் வரை வற்புறுத்திய ராஜாஜி, 'இந்த ஒன்றில்தான் நானும் ராமசாமி நாயக்கரும் (பெரியார்) ஒரே கருத்தைக் கொண்டிருக்கிறோம்' என்று குறிப்பிட்டார்.

தங்கள் இயக்கத்தின் வளர்ச்சிக்கு அண்ணாவும், அவருடைய தம்பியரும் தமிழ் உணர்வை அற்புதமாகப் பயன்படுத்திக் கொண்டனர். அந்த வகையில், இந்தித் திணிப்பின் வேகம் தணிந்ததற்குத் தமிழர்கள் பெரி யாருக்கும், அண்ணாவுக்கும், கலைஞருக்கும் நன்றிக் கடன்பட்டவர்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டம் 343(1)வது விதி, 'இந்திய யூனியனின் ஆட்சி மொழி இந்தி' என்கிறது, 'ஆயினும், 1965 ஜனவரி 26 வரை இந்திய யூனியனின் அனைத்து அதிகாரபூர்வ அலுவலகங்களுக்கும் ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தப்படும்' என்றது 343(2)வது விதி. '1965 ஜனவரி 26-க்குப் பின்பு நாடாளுமன்றம் ஒரு சட்டம் மூலம், அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்படும் அலுவல்களுக்கு

ஆங்கிலத்தைப் பயன்படுத்த வகை செய்யலாம்' என்கிறது 343(3)வது ஷரத்து. பல்வேறு மொழிகளைப் பேசுபவர் இருக்கும் இந்தியாவில் இந்தியை ஆட்சிமொழியாக்கி, ஆங்கிலத்துக்கு 15 ஆண்டுகளில் வழியனுப்புவிழா நடத்தவிருந்த நிலை யில் தமிழக மாணவர்கள் பொங்கியெழுந்தனர். கழகத் தலைவர்கள் மாணவர்களின் பின்னால் நின்று கிளர்ச்சியை வளர்த்தனர். தமிழகமே எரிந் தது. தபால்நிலையங்கள் கொளுத்தப்பட்டன. தண்ட வாளங்கள் தகர்க்கப்பட்டன.

பக்தவத்சலம் அரசு துப்பாக்கியைத் தூக்கியது. குடியரசு நாளை துக்கநாளாக தி.மு.க. அறிவித்தது. சென்னையில் சிவலிங்கம், அரங்கநாதன், திருச்சியில் சின்னச்சாமி தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஊர் வலத்தில் காவல்துறை நடத்திய துப்பாக்கி சூட்டில் மாணவர் ராஜேந்திரன் மாண்டார். போராட்டம் 50 நாட்கள் நீடித்தது. ராணுவம் குவிக்கப்பட்டது. அண்ணா கைதாகி விடுதலை செய்யப்பட்டார். கலைஞர் கைது செய்யப்பட்டு

பாளையங்கோட்டைச் சிறையில் தனியறையில் அடைக்கப்பட்டார். வழக்கு விசாரணையின்போது, 'எங்களுக்கும் மாணவர் போராட்டத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை' என்று அண்ணாவும் தம்பிகளும் தெரிவித்தனர்.

ஆட்சிமொழி குறித்து நாடாளுமன்றக் குழு அறிக்கையின் மீது விவாதம் நடந்தபோது, நேரு குறுக்கிட்டு, 'இந்தி பேசாத மாநிலங்களின் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது' என்று ஆகஸ்ட் 7, 1959 அன்று வாக்குறுதி வழங்கினார். பிராங்க் அந்தோணி கொண்டு வந்த தனிநபர் தீர்மானத்தின்போது நேரு வழங்கிய உறுதிமொழி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. 'இவ்வளவு காலம் வரைதான் நீடிக்கும் என்று தேதி எதையும் நிர்ணயிக்காமல் காலவரம்பின்றி அது எவ்வளவு காலமோ எனக்குத் தெரியாது - ஆங்கிலம் ஒரு கூடுதல் மொழியாக நீடிக்க வேண்டும். மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஒரு மாற்று மொழி யாக இருந்து வரும். இதன் தொடர்பாக முடிவு செய்யும் பொறுப்பை இந்தி பேசாத மக்களிடம்

விட்டு விட வேண்டும்...' என்பதுதான் நேரு வழங்கிய உறுதிமொழி.

இந்த உறுதிமொழி மட்டும் போதுமா என்பதுதான் இன்றைய இளைய தலைமுறை சிந்திக்க வேண்டிய கேள்வி.

நேருவின் உறுதிமொழிக்கு அரசமைப்புச் சட்ட அங்கீகாரம் இல்லை. 'கூடுதல் மொழியாக ஆங்கிலம் நீடிக்கும்' என்பதுதான் நேருவின் உறுதிமொழி. 'இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கும்' என்று நேரு உறுதி வழங்கவில்லை. இந்திதான் ஆட்சிமொழி. ஆங்கிலம் ஒரு கூடுதல் மொழி என்பதுதான் உண்மை நிலை. மாநிலங்களிடையே தொடர்பு மொழியாக இந்தி மத்திய அரசால் படிப்படியாகப் பயன்படுத்தப்படுவதை நேருவின் உறுதிமொழி தடுக்கவில்லை. நேருவின் மகள் இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது மத்திய அரசு பிப்ரவரி 19, 1976-ல் மத்திய அரசு ஊழியர்கள் ஒழுங்காக இந்தி வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும் என்றும், இந்தி தேர்வுகளை எழுத

வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தது. இந்தித் திணிப்பு நடவடிக்கைகள் 1986-ல் மீண்டும் தலையெடுத்தன. இந்தி வாரம் கொண்டாட வேண்டும் என்றும், மத்திய அரசு ஊழியர்கள் இந்தியில் கையப்பம் இட வேண்டும் என்றும் மத்திய அரசு அறிவித்தது.

தி.மு.கழகம் கோவையில் இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கூட்டியது. அதில் அரசியல் சட்ட மொழிப் பிரிவின் நகல் எரிப்புப் போராட்டத்தை அறிவித்தது. நகலை எரித்த 7 சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப் பட்டதாக வானளாவிய அதிகாரத்தை அனுபவித்த சபாநாயகர் பி.எச்.பாண்டியன் அறிவித்தார். கலைஞர் சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்குக் கைதி உடை அணிவிக்கப்பட்டது.

ஒன்றைச் சொல்லியாகவேண்டும்... தி.மு.கழகம் ஆட்சிப்பொறுப்பில் இல்லாமல், எதிர்க்கட்சியாக இயங்கிய காலங்களில்தான் இந்தி எதிர்ப்புப் போரில் வேகமாக ஈடுபட்டது; மாநில சுயாட்சிக்கு மிகத் தீவிரமாகக் குரல் கொடுத்தது. மாநில சுயாட்சி குறித்து ஆட்சிப் பொறுப்பில்

இருந்தபோது ராஜமன்னார் குழுவை கலைஞர் நியமித்தார் என்றா லும், உரிமைகளைப் பெற அவர் செயலூக்கம் காட்டினாரா?

பெரியாரும், ராஜாஜியும், அண்ணாவும், கலைஞரும் இந்தியை எதிர்த்து ஆங்கிலத்தை வளர்த்தனர். தமிழில் ஓர் எழுத்தைக்கூட அறியாமல் ஒரு தமிழன் முனைவர் பட்டம் பெற முடியும். ஆனால், ஆங்கிலம் தெரியாமல் முதலாம் வகுப்பில்கூட தேர்ச்சி பெற முடியாது என்ற நிலையைத்தான் திராவிட கட்சிகள் 40 ஆண்டுகளில் சாதித்தன. இரு மொழிக் கொள்கையால் இந்தியோடு சேர்ந்து தமிழுக்கும் இடமில்லாமற் போனதுதான் உண்மை. இங்கே கல்விக் கூடங்களில் ஆங்கிலத்துக்கு மட்டுமே அரியாசனம்.

பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழிகளாக இன்று வரை நாம் என்ன செய்தோம்? இனியாவது என்ன செய்யப் போகிறோம்? இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்பது மாறாத நிலையில் அதை மாற்ற முடியாத சூழலில், அந்த இந்தியை விரும்பிப் படிப்பவர்க்கு அரசு வாய்ப்பை வழங்க

வேண்டும். உலகம் முழுவதும் சென்று பிழைக்க ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் மொழிகளைப் படிக்கும் தமிழன், இந்தியா முழுவதும் சென்று வயிறு வளர்க்க இந்தி படித்து விட்டுப் போகட்டுமே! ஆந்திரம், கேரளம், கர்நாடகத்தில் இந்தி எதிர்ப்பு இல்லையே. ஆங்கிலத் துக்கு அடிமையாக இருப்பதும், இந்திக்கு தாசனாக மாறுவதும் ஒன்றுதான். இந்தியைக் கடுமையாக எதிர்த்த பல பிரபல குடும்ப உறுப்பினர்களில் சிலரே இந்தி படித்திருக்கும்போது, குடிசை வீட்டுக்குப்பன்கள் வெளிப்படையாகப் படிப்பதனால்தானா தமிழ் பாழ்பட்டு விடப் போகிறது?

இந்தியாவின் பொது மொழி இந்தி என்கிறது அரசமைப்புச் சட்டம். மாநில மொழிகள் அனைத்தும் 'வட்டார மொழிகள்' எனப்படுகின்றன. இந்தி உட்பட எந்த மொழியும் இன்று தேசிய மொழி இல்லை. இந்தி நிர்வாக மொழி மட்டுமே. எல்லா மாநில மொழிகளும் சம மதிப்பும், சம வாய்ப்பும் உள்ள மொழிகளாக, இந்தியோடு சரிநிகர் சமானமாக அங்கீகரிக்கப்படும் தேசிய மொழிகளாக

ஆக்கப்படுவதற்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதற்கு ஒட்டுமொத்த தமிழகமும் கிளர்ந்தெழ வேண்டும்.

நாம் இந்தித் திணிப்பை எதிர்க்கிறோமா? இந்தி யையே எதிர்க்கிறோமா? முதலில் அதை முடிவு செய்வோம். நாம் சுதந்திர வானில் பறப்பதற்கு சொந்தச் சிறகு போதுமா? இரவல் சிறகுகள் வேண் டுமா? அதை அடுத்து யோசிப்போம்.

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

தமிழ்...

18 'மக்கள் தொகையில்வலிமை வாய்ந்த பெரும்பான்மையோரி டையே சிறுபான்மையினராக வாழும் தமிழர்கள், அந்தப் பெரும் பான்மையில் கலந்து,

காலப் போக்கில் கரைந்து விடாது, தங்களது அடையாளத்தைக் காப்பதற்கு, அவர்கட்கிருக்கும் ஒரே கவசம் மொழிதான். அவர்கள் தங்கள் மொழியுடன், பண்பாட்டுப் பாரம்பரியத்துடன் தொடர்பறாது வாழ வேண்டும். இதற்கான தேவைகளில் தலையாயது தமிழறிவு, அதன் வழி தமிழ்க்கலை, தமிழ் இலக்கிய வாழ்வோடு தொடர்பு' என்பார் அறிஞர் வா.செ.குழந்தைசாமி. 'மொழி என்னும் நகரத்தை நிர்மாணிக்க ஒவ்வொரு மனிதனும் ஒரு கல்லைக் கொண்டு வந்தான்!' என்ற எமர்சனின் கருத்து நம் சிந்தனைக்கு உரியது. எந்தவொரு தனி மனிதனாலும் மொழி உருவானது இல்லை. தாய்மொழியைப் பயன் படுத்துபவர்கள் உள்ளவரைதான் ஒரு மொழி வாழும்; வளரும். அடுத்த தலைமுறைக்குத் தோள் மாற்றப்படாத எந்த மொழியும் வழக்கழிந்து போகும்.



'தமிழ் மிகவும் பண்பட்ட மொழி. தனித்துவமிக்க உயர்ந்த இலக்கியங்களைத் தன்பால் கொண்ட மொழி அது' என்றார் ஜெர்மானியப் பேரறிஞர் மாக்ஸ்முல்லர். 'என் வாழ்வில் எதற்காகவாவது நான் வருந்த வேண்டும் என்றால், தமிழ் என்னும் புனித மொழியை முழுமையாக என்னால் கற்க முடியாமல் போனதற்காக மட்டுமே வருந்துவேன்' என்று நெஞ்சம் நெகிழ்ந்தார் அண்ணல் காந்தி. தமிழகத்தில் ஆறரைக் கோடிப் பேர் தமிழ் பேசுவோர். இந்தியா முழுவதும் 50 லட்சம் தமிழர் பரவி வாழ்கின்றனர். உலகில் 56 நாடுகளில் ஒரு கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் உள்ளனர். ஆனால், தமிழரிடையே தமிழ்தான் இல்லை. தன் வயிற்றுப் பசிக்கு, தான் ஈன்ற குட்டிகளையே இரையாக்கிக் கொள்ளும் விரியன்

பாம்புகளைப் போன்று, தங்கள் வாழ்க்கைப் பசிக்குத் தாய்மொழியையே தாரை வார்த்து விட்ட நவீன மனிதர்கள் நம் தமிழின வாரிசுகள்.

'ஆங்கிலக் கல்வி காரணமாக நமது ஆண்மையை இழந்து விட்டோம். நமது அறிவு குன்றி விட்டது. இக்கல்வி முறை காரணமாக நாம் பேடிகளாகி விட்டோம். சுதந்திரம் என்ற தென்றலிலே உலவ நாம் விரும்புகிறோம். ஆனால், ஆங்கிலக்

கல்வி முறை அடிமைத் தனத்தைத் தான் உண்டாக்கி விட்டது. இதனால் நமது சமுதாயம் ஆண்மையை இழந்து கொண்டு வருகிறது...' என்று தன் துயரத்தை வெளிப்படுத்தினார் திரு.வி.க. இன்று 'ஆங்கிலம் பேசினால் அறிவாளி, தமிழ் பேசுபவன் தற்குறி' என்ற பொதுப் புத்தி எல்லா இளைஞர் களிடமும் காணப்படுகிறது. 'தமிழ் படித்தால் சோறு கிடைக்காது' என்று சொல்வதைவிட சோகம் வேறேதுமில்லை. கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் பண்பாடு. அந்த பண்பாட்டை நம்முள் வளர்த்தெடுக்கும் ஆற்றல் நம் தாய்மொழிக்கு மட்டுமே

உண்டு என்பதை இவர்களுக்கு யார் உணர்த்துவது?


இனவுணர்வையும், மொழிப்பற்றையும் மக்களிடையே மீட்டெடுப்பதற்கு திராவிட இயக்கம் ஆற்றிய பணி விருப்பு-வெறுப்பற்ற விமர்சனத்துக்கு உட்பட்டது. தமிழின் மீது பெரியாருக்கு தனிப்பெருங்காதல் இருந்ததில்லை. 'மூட நம்பிக்கைகளை இலக்கியமாக்கிய மொழி தமிழ்' என்பது அவருடைய கருத்து. அவரிடமிருந்து பிரிந்த அண்ணாவின் பரிவாரம் தமிழைத் தங்கள் சொந்த வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டதாகவே அவர் நினைத்தார். 'புலவர் என்றால் சொந்த புத்தி இல்லாதவன், புளுகன் என்றுதான் உரை கூறுவேன். புலவர்களுக்குப் பகுத்தறிவு கிடையாது என்பது என் கருத்து' என்று கடுமையாக விமர்சித்த பெரியார்,' கம்ப ராமாயணமும், சிலப்பதிகாரமும் இனத்துரோகம், முட்டாள்தனம், மூடநம்பிக்கை, பகுத்தறிவுக்குப் பூட்டுப் போடுதல் ஆகிய காரியங்கள் தவிர என்ன பயனைத் தருகிறது? என்று கேட்டார்.


திரு.வி.க.

ஆங்கிலத்தின் மூலம் பிராமணர்கள் அடைந்த வளர்ச்சியைத் தாழ்ந்து கிடக்கும் தமிழ்ச் சமுதாயம் தமிழின் மூலம் பெற முடியாது என்ற நோக்கில் அவர் வகுத்துக் கொண்ட மொழிக் கொள்கை முரண்பாடு மிக்கது.

அண்ணாவும் கலைஞரும் தமிழ் உணர்வாளர்கள் என்பதில் இரு கருத்தில்லை. 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்ததும், நல்ல தமிழ்ச் சொற்களை மேடைப் பேச்சில் பயன்படுத்தியதும், புலவர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் சிலை வைத்ததும், கோட்டங்கள் கட்டியதும், உலகத் தமிழ் மாநாடு கூட்டியதும் அவர்களுடைய ஆட்சிச் சாதனைகள். ஆனால், மரத்தின் ஆணிவேர் அழுகிக் கிடக்கும்போது, அதன் கிளைகளுக்கு மட்டும் மருந்தடிக்கும் வெளிப்பூச்சு வேலையல்லவா இது! ராஜாஜியின் ஆட்சியில் 125 பள்ளிகளில்தான் இந்தி புகுத்தப்பட்டது. அவர் ஆண்ட சென்னை மாகாணத்தில் ஒரு பகுதியாக விளங்கிய தமிழகத்தில் 60 பள்ளிகள்தான் அந்தப் பட்டியலில் இடம் பெற்றன. அதை எதிர்த்துப் பெரியாரின் தலைமையில்

தமிழகமே போர்க்கோலம் பூண்டது. இன்று திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தமிழ்நாட்டில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆங்கில மழலையர் பள்ளிகள் பெருகி விட்டன. இப்பள்ளிகளில் ஆங்கிலம்தான் பயிற்று மொழி. மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பக் கல்லூரிகளில் எங்கே தமிழ்? இன்றுதான் தமிழில் பொறியியல் வகுப்பு நடத்தப்போவதாக அரசு அறிவிக்கிறது.



தாகூர்



பெரியார்

அண்ணா 1967-ல் ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்ததும், 'ஐந்தாண்டுகளில் எல்லாக் கல்லூரிகளிலும் பயிற்று மொழி யாகவும், பாடமொழியாகவும் தமிழே இருக்கும்' என்ற தீர்மா னத்தைச் சட்டப் பேரவையில் நிறைவேற்றி 41 ஆண்டுகள் நடந்து விட்டன. 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று மூலை முடுக்குகளில் முழங்கியதோடு சரி. காமராஜர் ஆட்சியில் தமிழ் ஆட்சி மொழியானது. ஆட்சி மொழிச் சட்டம் 23-1-1957-ல் நடைமுறைக்கு வந்தது. 'நம்முடைய அரசாங்க மொழி

தமிழாக இருக்கும் என்று பிரகடனம் செய்வதிலே நாம் ஒரு பெரிய முன்னேற்றப் பாதையிலே ஓர் அடியை எடுத்து வைத்திருக்கிறோம்' என்று அப்போதைய கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியம் ஆட்சி மொழிச் சட்டத்தை அறிமுகப்படுத்தும்போது குறிப்பிட்டார். இட்ட அடி நோக, எடுத்த அடி கொப்பளிக்க... அப்படியே அமர்ந்து விட்டாள் நம் தமிழ்த்தாய். இன்றுவரை அரசு நிர்வாகத்தில் முழுமையான அளவில் தமிழ் இல்லை; நீதி மன்றங்களிலும் அப்படித்தான்; கோயில் கருவறையில் தமிழ் ஒலிக்கவில்லை; கல்விக் கூடங்களில் தமிழைத் தீண்டுவாரில்லை.

இன்று தமிழன் பேசும் தமிழைக் கேட்டால் தமிழ் மொழியின் அருமையும் பெருமையும் பிறர்க்குப் புரியுமா? 'டுமாரோ ஈவினிங் பீச்ல மீட் பண்ணுவோம்' என்பதுதானே நாம் பேசும் நற்றமிழ்! ஆங்கில வார்த்தையே கலக்காமல் ஒரு வாக்கியத்தைக் கூட நம்மால் தமிழில் பேச முடியாமற்போனது எவ்வளவு பெரிய வெட்கக்கேடு. 'எனக்கு தமில் பேச வராது' என்று பெருமிதம் பொங்க

மேடைகளில் பேசும் மேதைகளை - தாய்மொழி அறியாத பேதைகளை - தாய்மொழி தெரியவில்லையே என்ற குற்றவுணர்வு கூட இல்லாத நபும்சகர்களை உலகின் வேறெந்த இனத்திலும் நம்மால் காண முடியாது. தமிழ் இன, மொழி, பண்பாட்டுணர்வு தமிழகத்தில் பட்டுப் போய் விட்டதற்கு ஈழத்துக்கு நாம் நீட்டிய ஆதரவுக் கரத்தை(!)விட வேறு சான்று வேண்டுமா?

'குற்றாலம் சென்று குழாயடியிலே குளிப் பது போல, திருக்குளத்தில் இறங்கி பாசியை எடுத்து வருவது போல, சந்தனத்தைக் கரைத்து மாட்டுத் தொழுவத்தில் தெளிப் பது போல, கரும்பைக் கொண்டு அடுப் பெரிப்பது போல, பொன்னாடை வாங்கி அதனைப் புழுதி கட்டப் பயன்படுத்துவது போல, யானை மீது அம்பாரி அமைத்து அமர்ந்து பூனை பிடிக்கச் செல்வது போல, உடைவாளை வீசி உருளைக்கிழங்கு வெட்டுவது போல, சாமியார் ஆகிவிட்டு மாமியார் வீட்டுக்குச் சாப்பிடப் போவது போல...' என்று வார்த்தைச் சிக்கனம் இல்லாமல் அண்ணா மேடைத் தமிழுக்கு மெருகேற்றினார். ஆனால், காலச்

சூழலுக் கேற்ப தமிழர் வாழ்வதற்குக் கருவியாய் தமிழ் மாறியிருக்கிறதா?

தமிழை ஆரம்பப் பள்ளிகளில் பயிற்று மொழியாக நடைமுறைப்படுத்த கலைஞர் 1998-ல் தானே அரசாணை வெளியிட்டார். அதற்கு முன்பு 9 ஆண்டுகள் முதல்வராக இருந்தபோது அவர் என்ன செய்தார்? தமிழரின் ஆங்கில மோகத்தில் கல்வி மிக மோசமான சந்தைச் சரக்காகி விட்டதை எந்த வழியில் அரசு தடுக்க முயன்றது?

'தமிழர் இருவர் சந்தித்தால் தமிழில் உரையாட வேண்டும்' என்று ஆங்கிலம், வடமொழி, இந்தி, பிரெஞ்சு மொழிகளில் புலமை பெற்ற பாரதி சொன்னதை நுனிநாக்கில் ஆங்கிலம் பேசும் அறிவு ஜீவிகள் உணரவேண்டும்.

'தமிழ் பைத்தியம் என்பது பொது மக்களை ஏமாற்றவே ஒழிய, மற்றபடி என்ன அவசியத்துக்கு என்பது எனக்குப் புரியவில்லை!' என்கிறார் பெரியார். ஓர் இனத்தின் அடையாளம் அதனுடைய மொழிதான். அதனால் அந்த மொழியை வளர்ப்பது இனத்தின் முதற்கடமை. மழலைப் பருவத்திலேயே தாய்மொழியை அளிப்பதும்

தமிழுணர்வை வளர்ப்பதும் இன்று தடைப்பட்டுவிட்டது. மொழி வாழும் வரை இனம் வாழும். மொழி புறக் கணிக்கப்படும் நிலையில் ஓர் இனத்தின் பண்பாடும், நாகரிகமும் சீரழிந்து போகும். தமிழ் மண்ணில் காசு பறிக்கும் சில ஆங்கிலப் பள்ளிகளில் தமிழில் பேசினால் தண்டனை தரப்படுகிறது. தமிழில் பேசுவது அவமானம் என்று படித்த வர்க்கம் ஆங்கிலத்திலேயே உரையாடுகிறது. 'தமிழர் இருவர் சந்தித்தால் தமிழில் உரையாட வேண்டும்' என்று ஆங்கிலம், வடமொழி, இந்தி, பிரெஞ்சு மொழிகளில் புலமை பெற்ற பாரதி சொன்னதை நுனி நாக்கில் ஆங்கிலம் பேசும் அறிவுஜீவிகள் உணர வேண்டும்.

கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் வடித்து நோபல் பரிசு பெற்ற தாகூர், அதை வங்க மொழியில்தான் முதலில் எழுதினார். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்துவதுதான் மரபாக இருந்தபோது, அந்த மரபை உடைத்து வங்கமொழியில் பேருரையாற்றி னார். பாரிஸ்டர் பட்டம் பெற்ற காந்தி குஜராத்தியில்தான் தன் சுயசரிதத்தை வரைந்தார். தாய்மொழி மூலம் கல்வி

பெறும்போதுதான் சிந்தனைத் திறன் கூடும் என்று பேரறிஞர்கள் அனைவரும் அறிவுறுத்தியுள்ளனர். தொடக்கப் பள்ளிகள் முதல் கல்லூரிகள் வரை தமிழைப் பயிற்று மொழியாக்கும்போது தான் தமிழ் உண்மையில் ஆட்சிமொழியாக அரியணையில் அமரும். அப்போதுதான் தமிழறிந்தவர்க்கே வேலை என்ற சூழல் கனியும். நம் மண்ணில் தொழில் செய்வோரில் 90 விழுக்காடு மக்கள் அமைப்பு சாராத கூலிவேலைக்காரர்கள். இவர்களில் பலர் எழுத்தறிவற்றவர்கள். தமிழில் அறிவியல் சார்ந்த கல்வியும் பயிற்சியும் இவர்களுக்கு வாய்க்கும்போதுதான் உற்பத்தித் திறன் உயரும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இதுவரை 500-க்கு மேற்பட்ட வெளியீடுகளைத் தந்திருக்கிறது. இவற்றை எத்தனை தமிழர் படித்தனர்? தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பணிகள் குறித்து இன்றுள்ள இளைஞர்கள் யார் அறிவார்? உலகத் தமிழ் மாநாடுகளில் சமர்ப்பிக்கப்படும் ஆய்வறிக்கைகள் மூலம் தமிழ் இதுவரை என்னென்ன மாற்றங்களைச் சந்தித்தது? வயிற்றுப் பிழைப்பே

வாழ்க்கையாகிவிட்ட நிலையில் நவீன அறிவியல், தொழில் நுட்பம் சார்ந்து தமிழைப் பயன்படுத்த அரசு எடுத்திருக்கும் முயற்சிகள் என்னென்ன என்பதுதான் இன்றைய இளைஞர்களுக்கு முக்கியம்.

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# ஆடம்பரம்...

19 காந்தியம் எளிமையான வாழ்க்கை முறையை வலியுறுத்துகின்றது. எளிய வாழ்க்கையும், உயர்ந்த சிந்தனையும் பொதுவாழ்வில் பணியாற்ற விரும்பும் மனிதர்களிடம் மலர

வேண்டும் என்பதே மகாத்மாவின் பெருவிருப்பம். பணம் தரும் வசதிகளால் ஒருவருடைய வாழ்க்கைத் தரம் உயரலாம். ஆனால், பண்பாட்டின் செழுமையால்தான் வாழ்வியல் தரம் உயரும். ஏக்கம் மிக்க ஏழ்மை யிலிருந்து, எளிமை சார்ந்த சமத்துவம் நோக்கி நடப்பதே சர்வோதயத்தின் சாரம். ஆள்பவர் வறுமையில் வாழ்ந்தால் தான் ஆளப்படுவோர் வளமாக வாழ முடியும்.



அண்ணல் நபிகளார் ஆட்சியாளராக இருந்த போதும் உலர்ந்த பேரீச்சம்பழங்களையே உணவாக ஏற்றார். தன் கிழிந்த ஆடையை, தானே கைகளால் தைத்து அணிந்தார். பாத்திரத்தில் நிரப்பப்பட்ட நீரில் முகம் பார்த்தார். விலங்குகளின் தோலே சுவராகவும். ஈச்ச ஓலையே பாயாகவும் இருந்த வீட்டில் வாழ்ந்தார். ஒரு நாள் இரவு அண்ணலார் உட்கார்ந்த நிலையில் தொழுவதைப் பார்த்த

தோழர் அபூஹு§ரைரா, 'இறைத்தூதரே, ஒருபோதும் நீங்கள் அமர்ந்த நிலையில் ஆண்டவனைத் தொழுது நான் பார்த்ததில்லையே' என்று வியப்புடன் கேட்டபோது, 'பசிக்கொடுமையால் என்னால் நிற்க முடியவில்லை' என்று பதிலளித்தார் பெருமானார். 'செல்வந்தர்களைவிட ஏழைகளே முதலில் சொர்க்கம் சேர்வர்' என்பது நபிவாக்கு.

இன்றைய ஆட்சியாளர்களுக்கும் எளிமைக்கும் எள் மூக்கின் முனையளவும் தொடர்பில்லை. ஏழை இந்தியா அவர்கள் பார்வையில் படுவதில்லை. சுதந்திரம்

கிடைத்த பின்பு காந்தி வைஸ்ராய் மாளிகையை ஏழைகளின் மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்றார். எளிமையான வீடுகளில் அமைச்சர்கள் குடிபுக வேண்டும் என்று அறிவுறுத்தினார். காந்தியின் அறிவுரை காற்றில் கரைந்தது. நம் குடியரசுத் தலைவர் மாளிகையில் 360 அறைகள் உள்ளன. 'ஆட்டுக்கு தாடி போல் மாநில அரசுக்கு அவசியமற்ற ஆளுநர் பதவி' என்பது அண்ணாவின் வாசகம். அந்த ஆளுநருக்குச் சென்னையில் 156 ஏக்கர் நிலப்பரப்புக்குள் ஒரு ஆடம்பர

மாளிகை; கோடையில் மலைவாசம் செய்ய உதகையில் 86 ஏக்கர் நிலத்தில் பூந்தோட்டங்களும், புல்வெளிகளும் சூழ ஓர் அழகு மாளிகை. 'கும்பி எரியுது, குடல் கருகுது, குளுகுளு வாசம் ஒரு கேடா' என்று குரல் கொடுத்த தரப்பில் பலரும்கூட இன்று மாடமாளிகைவாசிகளாக மாறிவிட்டனர். அதனால், அந்த கோஷமும் இப்போது அர்த்தம் இழந்துவிட்டது.

மத்திய அரசு தந்திருக்கும் தகவலின்படி கடந்த பத்தாண்டுகளில் 1 லட்சத்து 82 ஆயிரத்து 936 ஏழை விவசாயிகள் வாழ்வதற்கு வழியின்றி தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அரசு நியமித்த அருண் சென்குப்தா கமிட்டி வெளியிட்ட அறிக்கையில் இந்தியர்களில் 76.7 சதவிகிதம் மக்கள் ஏழ்மையில் வாடுவதாகவும், 35 சதவிகிதம் மக்கள் விளிம்பு நிலை ஏழைகளாக வாழ்க்கையோடு போராடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகில் அதிகமான குழந்தை தொழிலாளர்கள் இந்தியாவில்தான் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். உலகிலேயே அதிகமான கல்வி

அறிவற்றோர் இங்குதான் வாழ்கின்றனர். நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பங்கு மக்களுக்கு மூன்று வேளை உணவில்லை. இந்த நிலையில், அரசின் வருவாயில் ஒரு பைசா கூட விரயமாக்கப்படலாகாது என்ற பொறுப்பு உணர்வு நம் ஆட்சியாளர்களுக்கு இல்லை.

ஏழைகளின் நலனுக்காகவே அரசியல் களத்தில் இயங்கிய ராம் மனோகர் லோகியா 1963-ல் நாடாளுமன்றத்தில் நேருவைப் பார்த்து, 'நாளன்றுக்கு மூன்று அணா கூலி வாங்கும் ஏழை இந்தியாவின் பிரதமருக்கு ஒவ்வொரு நாளும் 25 ஆயிரம் ரூபாய் அரசு செலவழிப்பது அநியாயம் இல்லையா?' என்று கேட்டார். பிரதமர் நேரு 1948-ல் லண்டன் சென்றபோது, பிரதமர் அலுவலகத்திலிருந்து அவருடன் இரண்டு அதிகாரிகள் மட்டுமே சென்றனர். இன்று மன்மோகன் சிங் வெளிநாடு சென்றால் 60 பேர் உடன் செல்கின்றனர். நேருவுக்கு ஆடம்பர செலவு நடப்பதாகக் குற்றம் சாட்டிய லோகியா இன்றிருந்தால்..?

நம் அமைச்சர்களுக்கு அரச போக வாழ்க்கையில்தான் ஆர்வம் இருக்கிறது. மத்திய அமைச்சர்கள் மக்களுக்காகப்

பறந்து பறந்து பணியாற்றியதில் 2009 - 10 நிதியாண்டில் விமானப் பயணச் செலவு 161 கோடி ரூபாய் செலவு! ஒரு மத்திய அமைச்சரின் ஓராண்டு சராசரி விமானப் பயணச் செலவு 2 கோடி ரூபாய். சசிதரூர் போன்ற அமைச்சர்களுக்கு நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் அமர்ந்து செல்லும் இருக்கை, மாட்டுக் கொட்டிலாக அருவருப்பைத் தருகிறது.

கர்நாடக முதல்வர் எடியூரப்பாவும் 'எளிமையின் வடிவம்'! பெங்களூருவிலிருந்து டெல்லிக்கு அரசுப் பணத்தில் சுமார் 18 லட்சம் ரூபாய் வாடகை செலுத்தி ஒருநாள் தனி விமானத்தில் பறந்தார். பயணிகள் விமானத்தில் பறந்தாலும், தனிவிமானத்தில் விரைந்தாலும் பயண நேரம் என்னவோ ஒன்றுதான். ஆனால், எடியூரப்பாவின் 'எளிமை'க்குத் தனி விமானப் பயணம்தான் பொருத்தமானது.

இந்திய அரசியல்வாதிகளில் எளிமைக்குப் புது 'இலக்கணம்' வகுத்தவர் மாயாவதி. அவரைப் போல 'எளிமை' நிறைந்த ஓர் அரசியல்வாதியை உத்தரப்

பிரதேசம் கண்டதே இல்லை. வறியவர்கள் அதிகமாக வாழும் அந்த மாநிலத்தில் அம்பேத்கருக்கும், கன்ஷிராமுக்கும் நினைவிடங்கள் நிர்மாணிக்கவும் தன் கட்சியின் சின்னமான யானை சிற்பங்களைச் செதுக்கி வைக்கவும் அரசுக் கருவூலத்திலிருந்து 6 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கிய வள்ளல் மாயாவதி! தான் குடியிருப்பதற்காக அரசுப் பணத்தில் அவர் 42 கோடி ரூபாய் செலவழித்து மாளிகை கட்டியிருக்கிறார். தான் எழுப்பிய நினைவிடங்கள், சிலைகள், முதல்வர் மாளிகை ஆகியவற்றைப் பாதுகாக்க சிறப்புப் பாதுகாப்புப் படையை 52 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து உருவாக்கியிருக்கும் மாயாவதி, அதற்கு ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்க ஆணையிட்டிருக்கிறார். பகுஜன்சமாஜ் கட்சி வெள்ளி விழா பேரணிக்கு 300 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாக செய்தி! என்ன தவம் செய்தனரோ உத்தரப் பிரதேச மக்கள்!

தமிழகத்தில் வேலையின்றி 68 லட்சம் இளைஞர்கள் விழிநீர் சிந்தியபடி வீதியில் நிற்கின்றனர். போதிய

ஊட்டச்சத்தின்றி கிராமங்களில் உள்ள குழந்தைகளும், தாய்மார்களும் சோகை பிடித்த நிலையில் சோர்ந்து கிடக்கின்றனர். இன்னமும் பல கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் இல்லை. இந்த நிலையில் பிரமாண்டமான சட்டசபையும், தலைமைச் செயலகமும் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று கலைஞரிடம் யார் கண்ணீர் விட்டது? காமராஜர் முதல்வராக இருந்தபோது கவிஞர் எஸ்.டி.சுந்தரம் ஒருநாள் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார். 'நீங்கள் கட்டிய அணைகள், பள்ளிகள், தொழிற்கூடங்கள் ஏராளம். ஆனால், உங்கள் சாதனைகளை மக்கள் மறந்துவிட்டார்கள். இவற்றையெல்லாம் ஒரு குறும்படமாக எடுத்து நம் ஆட்சித் சாதனைகளை மக்கள் நினைவுக்குக் கொண்டு வந்தால் நல்லது' என்றார் கவிஞர். 'அப்படியா, அதற்கு எவ்வளவு செலவாகும்?' என்று கேட்டார் காமராஜர். 'மூன்று லட்சம் இருந்தால் போதும்' என்று சுந்தரம் சொன்னதும், 'மூன்று லட்சம் ரூபாயா? அந்தப் பணத்தில் நான் இன்னும் 10 பள்ளிக் கூடங்களைக் கட்டுவேனே, முதலில் நீங்கள் இடத்தைக் காலி

செய்யுங்கள்' என்று கோபப்பட்டார் பெருந்தலைவர்.

'ஆக்ரா கோட்டையில் இருந்தபடி தாஜ்மகாலைப் பார்த்த ஷாஜஹானைப் போல் என்னையும் தூரத்தில் நிறுத்திக் கட்டடத்தைக் காட்டுகிறீர்களே' என்று அதிகாரிகளிடம் கலைஞர் சொன்னாராம். கவிஞர் சாஹிர் தாஜ்மகாலை, 'ஆடம்பரத்தின் அருவருப்பான அடையாளம்' என்று வருணித்தார். ஏழ்மை முற்றாக அகலாத இந்த மண்ணில் இப்படியோர் ஆடம்பர அலங்கார மாளிகை கட்டப்பட்டது யாருக்காக? கண்ணுறங்கும் நேரத்திலும் கண்ணீர் சிந்தும் மக்கள் நலனையே சிந்தித்து மருகும் ஏழைப் பங்களார்களான எம்.எல்.ஏ-க்களுக்காக நேர்மை தவறாமல், நெறி பிறழாமல் ஐயன் வள்ளுவன் வகுத்த பொருட்பால் இலக்கணப்படி ஆட்சி நடத்தும் அமைச்சர்களுக்காக இத்தனை கோடி ரூபாய் செலவில் ஒரு கட்டடம் மிகவும் அவசியம்தான்!

தீவுத் திடலிலும், அரசினர் தோட்டத்திலும்தான் மக்கள் மரங்களைக் காண முடிந்தது. இன்று மரங்கள் அனைத்தும் வெட்டப்பட்டுவிட்டன. உட்லண்ட்ஸ் டிரைவ்-இன்

பகுதியை அரசு எடுத்துக் கொண்டது போல், கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்தைக் கையகப்படுத்தி அதில் இந்தப் புதிய கட்டடத்தைக் கட்டியிருந்தால் அது ஜி.எஸ்.டி.சாலை, வேளச்சேரி சாலை இரண்டுக்கும் இடையில் அமைந்திருக்கும். விமான நிலையம், ரயில் நிலையம் இரண்டும் அருகில் இருந்திருக்கும். நகரின் மையப் பகுதியில் நெருக்கடி குறைந்திருக்கும். உயிர்க்காற்றை இலவசமாய் வழங்கும் மரங்கள் வெட்டப்பட்டிருக்காது.

ஆனால், ஜனநாயக அரசு சட்டமன்ற அங்கீகாரம் பெற்ற பின்பு யாருடைய ஆலோசனையையும் கேட்க வேண்டியதில்லை என்ற அலட்சியத்தில், நகரின் நட்ட நடுவில் ஒரு கட்டடம் எழுப்பப்பட்டு விட்டது. வரி கொடுப்பவர்கள் வறுமையின் பக்கம். செலவழிப்பவர்கள் சுகங்களின் பக்கம். நல்ல ஜனநாயகம்!



ஆக, மக்கள் பணத்தை ஆள்பவர் நலனுக்கு அதிகமாகப் பயன்படுத்துவது தகாது என்ற அறச்சிந்தனை இன்று இந்தியாவில் எங்கும் இல்லாமல் போய் விட்டது. ஒரு நாள் அரசனும் முல்லாவும் காட்டில் வேட்டையாடி விட்டு அரண்மனைக்குத் திரும்பினர். வரும் வழியில் அரசன், 'என் ஆட்சியைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்?' என்றான். முல்லா அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்தார். அப்போது சுமக்க முடியாத அளவுக்கு மூட்டைகளைச் சுமந்த படி ஒரு கழுதை வந்து கொண்டிருந்தது. அதன் வாய்க்கு ஒரு பூட்டுப் போடப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் கையில் ஒரு கோலுடன் வணிகன் நடந்து வந்தான். 'அரசே, அந்தக் கழுதையைக் கொஞ்சம் கவனியுங்கள்' என்றார் முல்லா. அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. முல்லா சொன்னார்

'அரசே! நம் குடிமக்கள் நிலையும் அந்தக் கழுதையின் நிலையும் ஒன்றுதான்.'

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# அநாகரிகம்...

20 'பகைவரிடத்தும் நண்பரிடத்தும், மானத்திலும் அவமானத்திலும், குளிரிலும், வெம்மையிலும், இன்பத்திலும், துன்பத்திலும் சமநிலையுற்றவன் எவனோ, புகழையும் பழியையும் நிகராகக் கருதுபவன் யாரோ, அவனே எனக்கு இனியவன்' என்று கண்ணன் உரைத்த கீதை கூறுகிறது. 'எந்த மனிதனின் உரிமைகளை எனது காலடியில் போட்டு மிதிக்கிறேனோ, அவன் யாராக இருந்தாலும், அவனை விட நான் தாழ்ந்தவனாகி விடுகிறேன்' என்றார் இங்கர்சால். 'என் தவறுகளை

விமர்சிப்பவன் நேரில் அந்த விமர்சனங்களை வைக்கட்டும். அவனுடைய வரவுக்காக நான் காத்திருக்கிறேன்' என்றார் பிரெஞ்சுப் புரட்சியின் பிதாமகன் ரூஸோ. 'பொதுவாழ்க்கை என்னும் மாளிகை சுதந்திரமும் சுயேச்சையும் மிக்க கருத்துகளின் மீது கட்டப்பட வேண்டும்' என்றார் இந்திய ஜனநாயகத்தைப் பேணிப் பராமரித்த நேரு.



எதிர்க்கட்சியினர் தன்னைக் கடுமையாக விமர்சித்தபோது அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் ஒரு கதை சொன்னார். ஒரு பெரிய மனிதரின் தலையில் அவருடைய மனைவி ஓங்கி அடித்தாள். பெரிய மனிதர்

அவள் செய்கையைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. அதைக் கண்ட அவரது நண்பர், 'உங்கள் மனைவி அடித்தபோது நீங்கள் ஏன் தடுக்கவில்லை?' என்று வியப்புடன் வினவினார். 'என்னை அடிப்பதில் அவளுக்கு அளவற்ற ஆனந்தம். அவள் தந்த அடியால் எனக்கொன்றும் தாங்க முடியாத துன்பம் இல்லை' என்றார் அந்தப் பெரிய மனிதர்! இதைச் சொன்ன லிங்கன் எதிர்க்கட்சி விமர்சனங்களை மனைவி தரும் அடியாகவும், தன்னை அவற்றைத் தாங்கிக் கொள்ளும் பெரிய மனிதராகவும் ஒப்பீடு செய்தார்.

கருத்து வேறுபாடுதான் ஜனநாயகத்தின் சாரம். 'Dissent is the essence of Democracy என்பதை ஏற்பவர்களால்தான் ஜனநாயகம் தழைக்கும். ஆனால், இந்திய அரசியலில் சகிப்புத்தன்மை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. எதிர் கருத்தை எடுத்து வைப்பவர்களை அழித்து விட்டுத்தான் அடுத்த வேலை என்று அரசியல் தலைவர்கள் செயற்படும் காலம் இது.

சுதந்திரப் போராட்ட சூழலில் காங்கிரஸுக்குள் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று அணி பிரிந்து

செயற்பட்ட தலைவர்கள், ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரிப் பூசவில்லை. காந்தியின் அகிம்சையில்

ஜெயலலிதா தலைவிரி கோலம்...



நம்பிக்கையற்ற பகத்சிங்கும் அவருடைய தோழர்களும் அண்ணலுக்குத் தீங்கு விளைவிக்க வேண்டுமென்று கனவிலும் கருதவில்லை. கொள்கை முரண்பாட்டால் காங்கிரஸிலிருந்து நேதாஜி வெளியேறுவதற்கு மகாத்மாவே காரணம். ஆனால், நேதாஜி சிங்கப்பூர் சுதந்திர வானொலியில் உரையாற்றியபோது 'தேசப் பிதா மகாத்மா காந்தி' என்றுதான் குறிப்பிட்டார். காந்தியைக் கடுமையாக விமர்சித்த பெரியார், மகாத்மா படுகொலை செய்யப்பட்டபோது மனம் வருந்திய நிலையில் இந்தியாவுக்குக் 'காந்தி தேசம்' என்று பெயர் வைக்க வேண்டும் என்றார். காலம் முழுவதும் எதிர்த்து விமர்சனக் கணைகளை ராஜாஜி மீது வீசியவர் பெரியார்.

ஆனால், அந்த ராஜாஜி மண்ணை விட்டு மறைந்தபோது, துயரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் குலுங்கிக் குலுங்கிக் கண்ணீர் விட்டு அழுதவர் அவர்.

ராஜாஜிக்கும் நேருவுக்கும் அரசியலில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் உண்டு. நேருவை பிரதமர்

பொறுப்பிலிருந்து இறக்கவும், காங்கிரஸின் ஆணிவேரை அறுக்கவும் 'சுதந்திரா' கட்சியை நிறுவியவர் ராஜாஜி. ஆனால், இருவருக்கும் இடையில் இருந்த ஆழ்ந்த நட்பும், அளவற்ற மரியாதையும் இறுதி வரை மாறவில்லை. அணு ஆயுத ஒழிப்பை வலியுறுத்த அமெரிக்க அதிபர் கென்னடியை சந்திப்பதற்கு 1962-ல் ராஜாஜி சென்றார். நேருவின் ஆட்சியை ராஜாஜி மிகக் கடுமையாக விமர்சித்துக் கொண்டிருந்த காலம் அது. ஆனால், நேரு அந்த விமர்சனங்களை நெஞ்சில் நிறுத்தாமல், அமெரிக்காவிலிருந்த இந்திய தூதரகத்துக்கு, 'முன்னாள் கவர்னர் ஜெனரல் என்ற முறையில் ராஜாஜிக்கு மிக உயர்ந்த அரச மரியாதைகள் அமெரிக்க மண்ணில் வழங்கப்பட வேண்டும்' என்று வற்புறுத்திக் கடிதம்

வரைந்தார்.

நேரு மறைந்தபோது, 'என்னை விட 11 ஆண்டு இளையவர், நாட்டுக்கு என்னை விட 11 மடங்கு முக்கியமானவர். மக்களுக்கு என்னை விட 11 ஆயிரம் மடங்கு பிரியமானவர் நேருஜி. அவருடைய மறைவால் என் மிகச் சிறந்த நண்பரை இழந்து விட்டேன்' என்று நெகிழ்ந்தவர் மூதறிஞர். கருத்துகளின் மீதும், செயல்முறைகளின் மீதும் மட்டுமே விமர்சனம் இருந்த காலம் அது. ஒரு சிறிய விமர்சனம்கூட தனி மனிதப் பகையாய்ப் பரிணாமம் பெறும் காலம் இன்று நாம் காண்பது.

இன்று எந்த அரசியல் கட்சியும் விமர்சனங்களை விரும்புவதில்லை. தலைமையும் அறிவாளிகளைப் புறந்தள்ளி விட்டு 'ஆமாம் சாமி'களை அரவணைத்துக் கொள்வதால் எல்லா அரசியல் கட்சிகளும் 'கருத்துக் குள்ளர்'களின் சாம்ராஜ்ஜியங்களாகி விட்டன. தமிழகத்து அரசியலில் சகிப்புத் தன்மையற்ற காலம் தி.மு.க-விலிருந்து சம்பத் பிரிய நேர்ந்த தருணத்தில்தான் தோன்றியது. தன் சிறிய தந்தை பெரியாருக்கு எதிராக

அண்ணாவுடன் தி.மு. கழகம் கண்ட சம்பத், கழகத்தில் நடிகர்களின் செல்வாக்கையும், கலைஞரின் போக்கையும், அண்ணாவின் அணுகுமுறையையும் வெளிப்படையாக விமர்சித் ததனால் வேலூரில் நடைபெற்ற செயற்குழுவில் தாக்கப்பட்டார். சம்பத்தை ஆதரித்த கண்ணதாசன் மீது திருச்சி பொதுக்கூட்டத்தில் செருப்பு வீசப்பட்டது. மேடைகளில் நாத் தழும்பேறிய தனிமனித விமர்சனங்கள் நர்த்தனமிட்டன. அரசியல் தன் நாகரிகத்தை இழக்கத் தொடங்கியது.

எம்.ஜி.ஆர். 1969-ல் அண்ணாவின் மறைவுக்குப் பின்பு கலைஞர் முதல்வராவதற்குப் பெருந்துணை புரிந்தார் வாய்ப்பு கனிந்த போதெல்லாம் 'கலைஞர் புகழ்' பாடினார். பரங்கிமலையில் ஒரு பகுதிக்குக் 'கருணாநிதிபுரம்' என்று பெயரிட்டு 1971 ஜூன் மாதம் எம்.ஜி.ஆர் பேசியபோது, 'சிலருக்குப் பதவி கிடைத்தால் நாடு குட்டிச் சுவராகி விடுகிறது. ஆனால், நமது கலைஞருக்குப் பதவி கிடைத்ததால் நாடு வாழ்கிறது. ஏழை எளியவர்களின் நம்பிக்கை எல்லாம் அவரது விழிகளை நோக்கி

உயர்கின்றன' என்று புகழாரம் சூட்டினார். 1972 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற தி.மு.க.வின் மதுரை மாநாட்டில் கலைஞர் ஆட்சி ஊழலற்ற ஆட்சி என்று சான்று வழங்கினார்; கலைஞர் அரசு மீது கை வைத்தால் தமிழ்நாடு ராணுவத்தை சந்திக்கும் என்று போர் முழக்கமிட்டார்; மாநில சுயாட்சியை அடைந்தே தீருவோம் என்று ஆரூடம் கணித்தார். கலைஞர் வழி நடப்போம் என்று கோஷம் கொடுத்தார். அப்போது கலைஞர் நெஞ்சில் அவர் கற்கண்டாய் இனித்தார்.

எம்.ஜி.ஆர். எதிர்பார்த்த சுகாதார அமைச்சர் பதவியைக் கலைஞர் கொடுக்கவில்லை. மு.க.முத்து எம்.ஜி.ஆர். போன்று ஒப்பனையோடு ஆடவும் பாடவும் செய்தார். மாநிலம் முழுவதும் மு.க.முத்து ரசிகர் மன்றங்கள் வந்தன. எம்.ஜி.ஆரைப் பயன்படுத்தி இந்திரா காந்தி கலைஞரின் மாநில சுயாட்சிக் குரலுக்கு மறைமுகமாக 'செக்' வைத்தார். இந்திரா காங்கிரஸ் வெட்டிய பள்ளத்தில் கழகம் காலிடறி விழுந்து இரண்டு துண்டுகளானது. அன்று பள்ளத்தில் விழுந்து கழகம் மட்டுமன்று... தமிழகப் பொது

வாழ்வின் நல்ல அம்சங்களும் சேர்த்தே விழுந்து நாசமாயின.

எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.கழகத்தை ஆரம்பித்தார். அன்று முதல் சட்டமன்ற நாகரிகம் சவப்பெட்டியில் போய்ப் படுத்து விட்டது. ஆரோக்கியமான விமர்சனங்கள் வைக்கப்பட்ட இடத்தில் அநாகரிகக் குரலில் இழிமொழிகளும், ஏளனக் கூச்சலும், ஏகவசனமும் சகட்டுமேனிக்கு இரு பக்கங்களிலிருந்தும் வீசப்பட்டன. சட்ட மன்றம் சந்தைக் கூடமாகச் சரிந்து போனது. தமிழக சட்டப் பேரவையின் கறுப்பு நாள் டிசம்பர் 2, 1972. சட்டப் பேரவை சபாநாயகர் மதியழகன் எம்.ஜி.ஆருக்கு ஆதரவாகச் செயற்பட்டார். கலைஞர் அரசுக்கு எதிராக எம்.ஜி.ஆர் முன் வைத்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை மதியழகன் விவாதத்துக்கு அனுமதித்தார். 184 எம்.எல்.ஏ-க்களின் நம்பிக்கையை இழந்து விட்ட சபாநாயகர், பதவியிலிருந்து அகற்றப்படவேண்டுமென்று தி.மு.கழகம் தீர்மானம் கொண்டு வந்தது. அதை அனுமதிக்க மறுத்த மதியழகனுக்குப் பக்கத்தில் துணை சபாநாயகர்

சீனிவாசனுக்கு நாற்காலி போடப்பட்டது. ஒரே நேரத்தில் இரண்டு பேரிடம் சபாநாயகர் பொறுப்பு!

மதியழகனிடம் இருந்து மணி பறிக்கப்பட்டு சீனிவாசன் முன் வைக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். பேசியபோது ஒலிபெருக்கி இணைப்பு துண்டிக்கப்பட்டது. மதியழகன் பதவி பறிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சீனிவாசன் அறிவித்தார். 'சட்டசபை செத்து விட்டது' என்று சொல்லி விட்டு எம்.ஜி.ஆர். வெளியேறினார்.

'வெற்றியாளர்களைப் பற்றி மதிப்பீடு செய்வது கூடாது; அவர்கள் விமர்சிக்கப்படவோ, கேள்விக்குட் படுத்தப்படவோ கூடாது என்று சிலரால் கூறப்படுகிறது. வெற்றியாளர் மதிப்பிடப்படவும், விமர்சிக்கப்படவும், கேள்விக்குள்ளாக்கப்படவும் வேண்டும். அப்போதுதான் அவர்கள் தலைக்கனம் இல்லாதவர்களாகவும் தன்னடக்கம் உள்ளவர்களாகவும் இருப்பர்' என்றார் சோவியத் இரும்பு மனிதர் ஸ்டாலின். அவருடைய அறிவுரையை அவரே பின்பற்றவில்லை என்பது வேறு விஷயம். நெருக்கடி நிலையைத் துணிவுடன் கேள்விக்குள்ளாக்கிய கலைஞரின்

விமர்சனத்தை இந்திராகாந்தி ரசிக்கவில்லை. காமராஜர் இருக்கும் வரை பொறுமை காத்த இந்திராகாந்தி, அவர் கண் மூடியதும் கழக ஆட்சியைக் கலைக்கத் திட்டமிட்டார். தனிப் பெரும்பான்மை கொண்ட ஓர் அரசின் தவறுகளை வாக்குச் சீட்டின் மூலம் மக்கள் தண்டிக்க வேண்டுமே தவிர, அந்த அரசைக் கலைக்கும் அதிகாரத்தை ஒரு தனி நபர் கையிலெடுத்துக் கொள்வது ஜனநாயகத்துக்கு முற்றிலும் முரணானது.


கருணாநிதி கைது...

கலைஞரின் அரசு ஜனவரி 31, 1976 அன்று கலைக்கப் பட்டது. கழகத் தலைவர்களும், தொண்டர்களும் வேட்டையாடப் பட்டனர். சென்னை மத்திய சிறையில் மாறன், ஸ்டாலின், வீராசாமி, சிட்டிபாபு போன்றோர் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். தி.மு.க-வுக்கு எதிரான

பிரசாரம் அரசு ஊடகங்களில் அன்றாடம் நடந்தது.

அன்று காங்கிரஸ் தலைவராக, எந்தத் தகுதியும் இல்லாததையே தனிப்பெரும் தகுதியாகக் கொண்டு இந்திராகாந்தியால் நியமிக்கப்பட்ட பரூவா, 'கருணாநிதியை ஒரு நீளமான குச்சியைக் கொண்டுதான் தொட வேண்டும். கை விரலால் தொட முடியாத அளவுக்கு மோசமான பேர்வழி' என்று 'நயத்தகு நாகரிகத்துடன்' விமர்சித்துத் தன் நாக்கை அழுக்காக்கிக் கொண் டார். மாநிலம் முழுவதும் நடந்த சிறைக் கொடுமைகளில் ஏராள மான தி.மு.க. தொண்டர்கள் பாதிக்கப்பட்டனர். சிட்டிபாபுவும், சாத்தூர் பாலகிருஷ்ணனும் சிறைக் கூடங்களில் சாவைத் தழுவினர். கலைஞரின் குடும்ப உறுப்பினர்கள் 'சோதனை' என்ற பெயரில் கண்ணியக் குறைவாக நடத்தப்பட்டனர். இந்திரா காங்கிரஸ் நெருக்கடி நிலையின் போது அரங்கேற்றிய அரசியல் பழி வாங்கும் படலம் அநாகரிகத்தின் எல்லையைத் தொட்டது.

பழிக்குப் பழி தீர்க்கும் தருணத்துக்காகக் தி.மு.க-வில் தொண்டர் கூட்டம் ஒன்று காத்திருந்தது. நெருக்கடி நிலை

நீங்கியது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த மூப்பனார் இந்திராகாந்தி தமிழகத்தில் மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் செய்வதற்குரிய ஏற்பாடுகளில் ஈடுபட்டார். மத்திய அரசில் மொரார்ஜி பிரதமராக அமர்ந்தார்.

மோசமான தோல்வியை சந்தித்து, ஆட்சியதிகாரத்தைப் பறிகொடுத்த இந்திராகாந்தி, அக்டோபர் 29, 1977 அன்று காலை சென்னை வந்து மதுரை சேர்ந்தார். 'கொடி கட்டி ஆண்ட அம்மையார் காணட்டும் கோடானு கோடி கறுப்புக் கொடிகளை! கொடுமையைக் கொலுவேற்றிக் குதூகலித்த அம்மையார் செல்லுமிடமெல்லாம் கருங்கொடிச் சேனையைக் காணட்டும்... இந்திரா அரசு புரிந்த கொடுமைகளால் ஏற்பட்ட இரத்த வடுக்களை ஒரு கையால் தடவிக்கொண்டே இன்னொரு கையால் ஏந்துவர் இலட்சக்கணக்கானோர் கறுப்புக் கொடிகளை' என்று கலைஞர் அளித்த அறிக்கையைப் படித்த கழகக் கண்மணிகள் மதுரை விமான நிலையத்தின் முன்பு திரண்டனர்.

கலவரம் அரங்கேறியது. கண்ணீர்ப்புகை வீசப்பட்டது.

தடியடிப் பிரயோகம் நடந்தது. நெடுமாறன் போன்றவர்கள் இந்திராகாந்தியைச் சுற்றிச் சூழ்ந்து காப்பாற்றினர். மதுரையிலும், திருச்சியிலும் பேசமுடியாமல் சென்னை திரும்பிய இந்திராகாந்திக்குக் கிண்டி மேம்பாலத்தில் கறுப்புக் கொடி காட்டப்பட்டு, கலவரம் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. '29-10-1977... தி.மு.கழகத்தை இந்திராகாந்தியும், என்... இந்தியத் திருநாடு முழுவதும் புரிந்து கொண்ட நாள் அது' (நெஞ்சுக்கு நீதி - மூன்றாம் பாகம்) என்று பெருமிதத்துடன் பிரகடனம் செய்தார் கலைஞர். மூன்றாண்டுகள் முடிவதற்குள் இந்திராகாந்தியும் கலைஞரும் தேர்தல் கூட்டணி அமைத்து 1980-ல் தமிழகத்து மேடைகளில் ஒருவர் மீது ஒருவர் பாராட்டு மொழியும், பாசமழையும் பொழிந்து மதுரை அராஜகத்தையும், அநாகரிகத்தையும் மறந்துவிட்டதுபோல் நடித்தார்களே... அதற்குப் பெயர்தான் 'இந்திய அரசியல்.'

தி.மு.கழகத்திலிருந்து அ.தி.மு. கழகம் பிறந்தபோது... கூடவே பிறந்த விரோதமும் சேர்ந்து நாற்றமெடுக்கத் தொடங்கிய தமிழகத்துப் பொது வாழ்வு, எம்.ஜி.ஆர்.

மரணத் துக்குப் பின்பு அ.தி.மு.க. ஜானகி அணியென்றும், ஜெயலலிதா அணியென்றும் பிளந்த நிலையில் கூவத்தின் மணத்தை மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டது. பால்கனிப் பாவை, நயவஞ்சக நாரீமணி, தமிழகத்துக்கீலர் என்றெல்லாம் அருவருப்பான வசைப்பாட்டு வீதியெங்கும் காதைப் பிளந்தது. ஜானகி 24 நாட்கள் தமிழக முதல்வராக தரிசனம் தந்தார். சட்டமன்றம் ஜெ.. ஜா.. அணிகளின் போர்க்களமானது. ராஜீவ் காந்தியின் ஆதரவு ஜெயலலிதாவுக்குக் கிடைத்தது. சட்டமன்றம் கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி ஜனவரி 30, 1988 அன்று அறிவிக்கப்பட்டது. சட்டமன்ற அநாகரிகக் காட்சிகளுக்கு இடைவேளை விடப்பட்டது.

கலைஞர் 1989-ல் மூன்றாவது முறையாக முதல்வரானார். நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்க மார்ச் 25, 1989 அன்று சட்டப் பேரவையில் எழுந்து நின்றார். ஜெயலலிதா கலைஞரை நிதிநிலை அறிக்கையை வாசிக்கவிடாமல் தடுத்தார். அ.தி.மு.க. உறுப்பினர்கள் முதல்வர் கையிலிருந்து பட்ஜெட்டைப் பறித்துக் கிழித்தனர். தி.மு.க.,

அ.தி.மு.க. உறுப்பினர்கள் அடுத்த கணம் மல்யுத்த வீரர்களாக மாறினர். கலைஞரின் கண்ணாடி கீழே விழுந்து நொறுங்கியது. ஜெயலலிதாவின் சேலை இழுக்கப்பட்டது. அவருடைய கூந்தல் கலைக்கப்பட்டதோ, அல்லது அவராகவே கலைத்துக் கொண்டாரோ... புகைப்படங்களில் பார்த்தபோது அலங்கோலமாக இருந்தது. கீசக வதம், துச்சாதனத் துகிலுரிப்பு என்று நாம் படித்த இதிகாசக் காட்சிகள் எல்லாம் சட்டப் பேரவையில் நம் வாழ்காலத்தில் நடந்தேறிவிட்டன. ஒருக்கால், நாளைய தலைமுறை இந்த நிகழ்வுகளை 'நவீன இதிகாச'மாகப் படித்துப் பார்க்கக்கூடும். அன்று நடந்தது அநாகரிகத்தின் உச்சம்!

1966-ம் ஆண்டு நான்காவது முறை தமிழக முதல்வரான கலைஞர் ஜெயலலிதாவின் மீது பல்வேறு வழக்குகள் தொடுத்து அவரை மத்திய சிறையில் அடைத்தார். அவர் அன்று தொடுத்த ஊழல் வழக்குகளில் நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிய பலர், இன்று அவருடைய அருமை உடன் பிறப்புகளாகிவிட்டனர். 'சிறையிருந்த

செல்வி' ஜெயலலிதா தனக்குரிய காலம் நோக்கித் தவமிருந்தார். மக்கள் அவர் தலையில் 2001-ல் அரசமகுடம் சூட்டினர். பாஞ்சாலி கூந்தல் முடிக்கும் காலம் கனிந்தது போல், ஜெயலலிதாவுக்குப் பழி தீர்க்கும் நாளும் கனிந்தது. நள்ளிரவில் தன் மனைவியுடன் துயின்று கொண்டிருந்த 80 வயதுக்கு மேற்பட்ட முதியவர், நான்கு முறை முதல்வராக இருந்தவர் காவல் துறையால் பலாத்காரமாகக் கைது செய்யப்பட்டு மத்திய சிறை வாசலில் அநாதை போல் அமர்த்தப்பட்ட கொடுமை கண்டு தமிழகமே அதிர்ந்தது. தமிழகத்தில் மிச்சம் மீதியிருந்த அரசியல் நாகரிகமும் அன்றோடு அழித்தொழிக்கப்பட்டது.

காலச் சக்கரம் கணம் கூட ஓயாமல் சுழன்று கொண்டே இருக்கிறது. அரசியல் மேடையில் காட்சிகள் மாறிக் கொண்டே வருகின்றன. இன்று முதல்வர் பதவியில் மீண்டும் கலைஞர். எதிர்க்கட்சி வரிசையில் ஜெயலலிதா. நாளை என்ன நடக்கும் என்பது காலத்தின் கைகளில்!

– பயணம் தொடரும்–

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# முகஸ்துதி

21 குரு«க்ஷத்திரப் போர்நடந்து கொண்டிருந்தது. அர்ஜுன னுக்கும் கர்ணனுக்கும் இடையில் நடந்த வில்யுத்தத்தில் கர்ணன் கணைகளை எதிர்கொள்ள முடியாமல் அர்ஜுனன் தலைதாழ்ந்து பாசறைக்குத் திரும்பியதைப் பார்த்தான் தருமன். 'கையில் வைத்திருக்கும் காண்டீபத்தால் உன்னால் என்ன சாதிக்க முடிந்தது?' என்று ஏளனம் செய்தான்

தருமன். தன்னுடைய வில்லாகிய காண்டீபத்தை யார் பழித்தாலும் அவர்களைக் கொன்று விடுவதாக சபதம் செய்தவன் அர்ஜுனன். அண்ணன் பழித்துப் பேசியதும், கண்ணனே தடுத்தாலும் விடுவதில்லை என்ற முடிவோடு

காண்டீபத்தில் தருமன் மார்பைக் குறிவைத்தான் தம்பி அர்ஜுனன். நிலைமை மோச மானதை உணர்ந்த கிருஷ்ணன் அர்ஜுனனிடம், 'உன் சபதத்தை நீ நிறைவேற்றினால் அண்ணனைக் கொன்ற பாவம் சேரும். கொலைக்கு நிகரான வேறொரு செயலை நீ செய்வதே சரி' என்றான். 'வேறென்ன நான் செய்ய வேண்டும்?' என்று பார்த்திபன் கேட்டதும், 'ஒருவர் மீது வீண்பழி சுமத்தினால் அது கொலைக்கு சமம்' என்றான் பரந்தாமன். கீதை நாயகன் ஆலோசனைப்படி ஒரு வீண்பழியை அண்ணன் மீது சுமத்தியவன், அந்த இழி செயலுக்குப் பரிகாரமாகத் தற்கொலைக்கு முயன்றான். 'உன் தற்கொலைக்கு நிகராக நீ வேறொரு செயலில் ஈடுபடலாம்' என்று அர்ஜுன னிடம் சொன்ன கண்ணன், 'உன்னையே நீ புகழ்ந்து கொள். தன்னைத் தானே புகழ்ந்து பேசுதல் தற்கொலைக்குச் சமமானது' என்று விளக்கினான்.



இதை அறிந்தும் அறியாமலும் நம் அரசியல் தலைவர்கள் தங்களைப் புகழ்வதற்கென்றே அடுத்தவரை தயார் செய்து, தற்கொலை பாவத் திலிருந்து தப்பிவிடுகின்றனர்.

'எதுவும் தெரியாதவரெல்லாம் எல்லாம் தெரிந்தவர் போல் பேசுகின்றனர். நானோ, எனக்கு எதுவும் தெரி யாது என்ற ஒன்றை மட்டுமே தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறேன்' என்றார் சிந்தனையாளர் சாக்ரடீஸ். அந்த தன்னடக்கத்தை நம் தலைவர்களிடம் நம்மால் காணவே முடியாது. நம் தலைவர்களில் பலர்

இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி யின் வாரிசுகள். 'முசோலினி காலத்தில் வாழ்வதற்குப் பெருமைப்படுங்கள். இது தான் இத்தாலியின் பொற்காலம்' என்ற பிரமாண்டமான சுவரொட்டிகள் வீதியெங்கும் ஒட்டப்பட்டன. கர்ப் பிணிப் பெண்கள் கண்களில் படும்படி வீட்டுச் சுவரில் முசோலினியின் படம் தொங்கவிடப்பட்டது. காலையில் கண் விழித்ததும் அந்தப் படத்தைப் பார்த்தால், பிறக்கும் குழந்தைகளும் முசோலினியைப் போல் மேன்மை பெறுவர் என்ற நம்பிக்கை விதைக்கப்பட்டது. முசோலினி நிறுவிய 16 ஆயிரம் தொடக்கப் பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பறையிலும் அவனுடைய படங்கள் பெரிய அளவில் காட்சியளித்தன. காலையில் மாணவர்கள் கடவுள் வழிபாட்டுக்கு பதிலாக டியூஸ் (முசோலினி) வணக்கம் பாடினர்.

நம் தலைவர்களுக்கும் கட்சி அலுவலகத்திலிருந்து கழிப்பறைச் சுவர்கள் வரை தங்கள்

திருவுருவப் படங்கள் தரிசனம் தர வேண்டும் என்ற

தாகமும் தவிப் பும் உண்டு. முசோ லினிகள் எல்லா யுகங்களிலும், எல்லா இடங் களிலும் ஏதோ ஒரு வடிவில் வாழ்ந்து கொண்டிருப் பார்கள்.


அளவுக்கதிகமான விளம்பரமும், போலிப் புகழுரை களும் ஒரு தலைவரைத் தவறான வழியில் திசை திருப்பிவிடும் என்று காந்தி கருதியதால், தன்னை 'மகாத்மா' என்று பிறர் அழைப்பதை வெறுத்தார். 'மகாத்மா' என்ற பட்டத்தை ஒருபோதும் தான் விரும்பு வதில்லை என்று பல முறை தன் அதிருப்தியை அவர் வெளிப்படுத்தினார். எல்லை மீறிய புகழ் வெளிச்சம் பாசிசத்துக்கு வழி வகுக்கும் என்பதை உணர்ந் திருந்த நேரு, கல்கத்தாவிலிருந்து வெளி வந்த 'மாடர்ன் ரெவ்யூ' இதழில் 1937 நவம்பரில் ஒரு கட்டுரை தீட்டினார். 'பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த மனிதனின் வாகனத்தை சூழ்ந்து கொள்கின்றனர். கடவுள் நிலையில் வைத்து வணங்குகின்றனர். மக்களின் அதிகபட்ச அன்பு அவனை இன்னொரு சீஸராக்கிவிடும். கட்டுக்கடங்காத அன்பும், புகழுரையும் அவனைப் பாழ்படுத்திவிடக் கூடாது. நேருவை சீஸராக்கிவிடாதீர்கள்'

என்று வேறு யாரோ ஒருவர் எழுதுவதுபோல், தன் கருத்தை அச்சேற்றிய அரிய பெருமகன் நேரு.

கல்கத்தாவில் நடந்த ஒரு விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய ஒருவர், 'டாக்டர் ராஜாஜி அவர்களே' என்றார். அடுத்துப் பேசிய ராஜாஜி, 'அருகதை உடை யவன் என்று நான் எண்ணமுடியாத சில பட்டங்களை ஆழ்ந்த அன்பினால் என் பெயரோடு இணைத்துப் பேசினீர்கள். மாண்புமிகு என்று நீங்கள் சொல்லும்போது அது பதவியைக் குறிப்பதால், அதை நான் மறுப்பதில்லை. ஆனால், டாக்டர் என்றழைக்கும்போது நான் அதை சங்கடமாக உணர்கிறேன். ஏனெனில், அது நான் படித்துப் பெற்ற பட்டமன்று. சில பல்கலைக் கழகங்கள் எனக்கு அந்த கௌரவப் பட்டத்தைக் கொடுத்திருக்கின்றன. தன் மகனை நல்ல பிள்ளை என்று சொல்ல தாய்க்கு உரிமையுண்டு. அதற்காக, அவனை அனைவரும் நல்ல பையன் என்றழைக்க வேண்டிய அவசியமில்லை. என்னை நீங்கள் ராஜகோபாலாச்சாரி என்றே அழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்' என்றார்.

அன்று பெருமை தங்களைத் தேடி வந்தபோதும் அதை அங்கீகரிக்க தலைவர்கள் மறுத்தனர். இன்று எந்தப் பெருமையும் இல்லாதவர்கள் எல்லாப் பெருமை களையும் நாடி ஓடுகின்றனர்.

பொருத்தமற்ற புகழுரையும், போலித்தனமான முகஸ்துதியும், பொய்மை கலந்த பாவனையும் இந்திரா காந்தி காலத்தில்தான் காங்கிரஸில் வேகமாக வேரூன்றின. 'இந்தியா இறந்தால் யார் வாழ்வார்? இந்தியா வாழ்ந்தால் யார் இறப்பார்?' என்று கேட்டவர் நேரு. ஆனால், 'இந்திராவே இந்தியா, இந்தியாவே இந்திரா' என்ற பரூவாக்களின் முட்டாள்தனமான முகஸ்துதிகளில் மயங்கியவர் நேருவின் மகள் இந்திரா.



ஒவ்வொரு மாநிலத்திலும் இன்று காங்கிரஸின் முதல் வரிசைத் தலைவர்களாக முகம் காட்டுபவர்கள், முகஸ்துதி செய்வதில் மட்டுமே தனித்திறமை பெற்றவர்கள். இவர்கள் இந்திராகாந்தி காலத்தில் சஞ்சய் காந்திக்கு 'சல்யூட்' அடித்தவர்கள். முதிர்ந்த வயதிலும் இழிந்த

காமத்திலிருந்து விடுபடாத என்.டி.திவாரி, முன்பு உத்தரப்பிரதேச முதல்வராக இருந்தபோது, பொது நிகழ்ச்சியில் சஞ்சய் காந்தியின் கால் செருப்பைத் தன் கைகளில் சுமந்தபடி நின்று விசுவாசத்தை வெளிப்படுத்தியவர்!

ராஜீவ் காந்தி ஒரு பரிசுத்த மனிதராகத்தான் அரசியல் களத்தில் அடியெடுத்து வைத்தார். முகஸ்துதியை அவர் முதலில் வெறுத்தார். டி.அஞ்சையா ஆந்திர மாநில முதல்வராகப் பதவி வகித்தபோது, 1981-ல் ராஜீவ் ஹைதராபாத் நகருக்கு வருகை தந்தார். அப்போது அவர் பிரதமரில்லை. ஆனாலும், விழா மேடையில் முதல்வர் அஞ்சையா ஓர் அடிமைக்குரிய மரியாதைப் பண்பு நலன்களுடன் ராஜீவ் மீது பொருத்தமற்ற புகழ்மாரியைப் பொழிந்தார். அதில் அருவருப்படைந்த

ராஜீவ், அஞ்சையாவை ஒரு கோமாளி என்று பொதுமேடையில் ஏளனம் செய்தார். ராஜீவைப் போல் ராகுலும் இன்று வித்தியாசமாகவே தன்னை வெளிப் படுத்தி வருகிறார். அர்ஜுன் சிங்கும், பிரணாப் முகர்ஜியும்

மன்மோகன் சிங் மீதுள்ள ஆதங்கத்தில், 'அடுத்த பிரதமராக ராகுல் காந்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்' என்று சென்ற நாடாளுமன்றத் தேர்த லுக்கு முன்பு தங்கள் முகஸ்துதியைத் தொடங்கியதும், 'பிரதமர் பதவி ஒன்றும் காலியாக இல்லை' என்று முகத்தில் அறைந்தாற்போல் எதிர்வினையாற்றியவர் ராகுல். போலிப் புகழுரைகளும், கூஜா தூக்கிகளுக்கும் இன்றுவரை இடம் தராத ராகுல், ராஜீவைப் போல் பள்ளத்தில் இடறி விழாமல் இறுதிவரை இருந்தால் அவருக்கும், காங்கிரஸுக்கும், நாட்டுக்கும் நல்லது.

முகஸ்துதி மனிதர்களும், பிழைப்பு வாதிகளும் எல்லாக் கட்சிகளிலும் நீக்கமற நிறைந்துள்ளனர்; எல்லா மாநிலங்களிலும் இந்த மலினமான சுய ஆதாயச் சுரண்டல் பேர்வழிகள்தான் கட்சித் தலைமையைச் சூழ்ந்து நிற்கின்றனர். ராஜஸ்தான் முதல்வராக வசுந்தரா ராஜே பவனி வந்தபோது, அவரை அன்னபூரணியாகவும், அமைச்சர்களை தேவகணங்களாகவும் சித்திரிக்கும் சுவரொட்டிகளை ஜோத்பூர் எம்.எல்.ஏ-வான

சூர்யகாந்தவியாஸ் ஜெய்பூர் முழுவதும் ஒட்டி, தன்னுடைய ராஜவிசுவாசத்தைப் பகிரங்கப்படுத்தினார்.

ஆந்திர அரசியலில் முகஸ்துதிக்கு என்றும் அளவற்ற ஆதாயம் உண்டு. ஒரு நிறுவனத்துக்கும் எ.்.குத் தொழிலுக்கும் எந்த வகையிலும் தொடர்பில்லை. ஆனால், அதன் பரிமாற்றக் கை முதல் (thrn over) ரூபாய் 1,800 கோடி. நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற ஆந்திர அரசிடம் இன்னொரு நிறுவனம் 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போட்டிருக்கிறது. ஆனால், அதன் கையிருப்போ வெறும் 55 கோடி ரூபாய். இது எப்படி சாத்தியமாகிறது? அதிகாரத்தில் இருப்பவர்களுக்குக் கப்பம் கட்டுவதோடு, அவர்களைக் கவர்ந்திழுக்கும் போலிப் புகழுரைகளால் வார்த்தை ஜாலம் காட்டும் கலையிலும் கைதேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

முகஸ்துதிக்கு இலக்கணம் படைத்தவர்கள் நாம். 'காமராஜரும், கலைஞரும் படிநிலைச் சமூகத்தின் அடிநிலையிலிருந்து தங்கள் உழைப்பால் உயர்ந்தவர்கள். பட்டப் படிப்போ, பாரம்பரியப் பின்னணியோ, செல்வ

வளமோ, உயர்சாதிப் பெருமையோ சிறிதுமின்றி இருவரும் அரசியலின் சிகரம் கண்டவர்கள்!' என்று ஒருவர் பேசினால், அது உண்மையின் வெளிப்பாடாக உருவெடுத்த புகழுரை. ஆனால், செப்புக் காசு சேர்க்காத காமராஜரை, கலைஞரின் வடிவத்தில் காண்பதாக ஒருவர் பேசினால்... அதுதான் சுய ஆதாயத்துக்காக ஒருவர் திட்டமிட்டுச் செய்யும் முகஸ்துதி.

'கல்லூரியில் கால் வைக்காத, தமிழில் முனைவர் பட்டம் பெறாத கலைஞர், தொல்காப்பியம் முதல் தமிழ் இலக்கியங்களின் பல்வேறு படைப்பாக்கங்கள் வரை முயன்று கற்று மொழி அறிவை வளர்த்துக் கொண்டவர். மோனையும் எதுகையும் முத்தமிடுகிறாற்போல் மயக்கும் மொழியில் திரை வசனங்களில் ஒரு காலத்தில் தனி முத்திரை பதித்தவர்' என்று ஒருவர் எழுதினால் அதில் ஒப்பனைகள் இல்லாத உண்மையின் முகம் தெரியும். ஆனால், 'நீ எழுதுவதுதான் இலக்கியம். நீ பேசுவதுதான் காப்பியம். உன் சிரிப்பே சிலப்பதிகாரம். நீ கூலிங் கிளாஸ் அணிந்த குண்டலகேசி. நீ வாய் திறந்தால் வள்ளுவன். நீ

பேனா பிடித்தால் கம்பன். நீ ஏடெடுத்தால் இளங்கோ. உன் எழுத்தைப் படித்த பின்புதான் தமிழ் எனக்கு எழுதப் பழகியது' என்று பிழைப்புவாதிகளின் பரிவாரம் பாடும் பஜனைப் பாட்டுதான் முகஸ்துதி. 'எம்.ஜி.ஆர். மட்டும்தான் ஒன்று. நாங்கள் அனைவரும் அவருக்குப் பின்னால் இருக்கிற பூஜ்யங்கள்' என்று கொஞ்சமும் சுயமரியாதை இல்லாமல் பல்லிளித்த அதே கூட்டம்தான் இன்று எம்.ஜி.ஆருக்குப் பிறகு ஜெயலலிதாவுக்குப் பல்லாண்டு பாடு கிறது. வாழ்க்கை கம்பீரமானது; பிழைப்பு கேவலமானது!

எம்.ஜி.ஆரைப் பாராட்டியவர்கள் கலைஞரிடம் வந்தார்கள். கலைஞரை வான ளாவப் புகழ்ந்தவர்கள் ஜெயலலிதாவிடம் போனார்கள். ஜெயலலிதாவின் காலில் விழுந்த வர்கள், பதவி பறிபோனதும் கலைஞரின் கார் கதவைத் திறக்கப் போட்டியிட்டார்கள். இந்த நடிப்பு சுதேசிகளின் கைவசமிருக்கும் கவசம்தான் முகஸ்துதி.

கிரேக்கத் தத்துவ ஞானி டயோஜினஸ், சூப் தயாரிக்க அவரை விதைகளைநீரில் கழுவிக் கொண்டிருந்த நேரம்,

அரிஸ்டிபஸ் என்ற அறிஞர் வந்தார். 'நீங்கள் என்னைப் போன்று மன்னரைப் புகழ்ந்து முகஸ்துதி செய்தால், இப்படி அவரை விதைகளைக் கழுவும் அவசியம் நேர்ந்திருக்கிறது!' என்றார் அரிஸ்டிபஸ். 'நீங்கள் என்னைப் போல் சாதாரண அவரை விதை சூப்பைக் குடித்து வாழப் பழகியிருந்தால், அரசருக்குத் துதிபாடும் அவலம் உங்கள் வாழ்வில் வந்திருக்காது!' என்று சிரித்தபடி சொன்னார் டயோஜினஸ்.

– பயணம் தொடரும்–

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

## வாரிசு...

22

'அக்காலத்தில் பொருள்களின் மீது யாருக்கும் தனி உரிமை இல்லை. தலைவனுக்கும் தனியாக

எதிலும் பங்கில்லை. காலம் மாறியது. குழுத் தலைவன், எல்லாப் பொருள்களும் தன்னுடையது என்று எண்ணத் தொடங்கினான். முதலில் குழுவை நன்றாக நிர்வகிக்கத் தெரிந்தவனையே மக்கள் தங்கள் தலைவனாகத் தேர்ந்தெடுத்தனர். நாளடைவில் மக்கள் தங்கள் தலைவனை அக்குடும்பத்திலிருந்தே தேர்ந்தெடுக்க முற்பட்டனர். இதனால், தலைவனும் அவனுடைய குடும்பமும் அளவற்ற அதிகாரத்தையும், செல்வத்தையும் அனுபவிக்கத் தொடங்கினர். தலைவன் தனக்குப் பின் தன் மகனோ, சகோதரனோ தலைவனாக வழியமைத்தான். மக்கள் தங்கள் தலைவனைத் தேர்வு செய்யும் முறை முற்றாக மறைந்தது. குழு அரசியல் குடும்ப அரசியலானது' என்று நேரு 1928-ல் முசௌரியில் தங்கியிருந்த தன் அன்பு மகள் இந்திரா பிரியதர்சினிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார். ஆனால், நேருவுக்கு இந்தியாவின் அரசியல், இந்திரா குடும்பத்து அரசியலாக மாறிவிடும் என்று அப்போது தெரியாது.



இந்தியாவில் ஜனநாயக நடைமுறைகளை ஆழக் குழி தோண்டிப் புதைக்கும் வாரிசு அரசியல் முதன் முதலில் நேரு குடும்பத்திலிருந்துதான் ஆரம்பமானது. மோதிலால் நேரு அலகாபாத் நகரில் புகழ் பெற்ற வழக்கறிஞராக வாழ்ந்தவர். ஆனந்த பவனத்தை 1900-ல் அவர் விலைக்கு வாங்கினார். மின்வசதி, விரிந்த தோட்டம், நீச்சல் குளம், டென்னிஸ் கோர்ட் போன்ற நவீன வசதிகள் கொண்ட முதல் இந்தியர் வீடாக ஆனந்த பவனம் விளங்கியது. பிரான்ஸில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட கார்களை அலாகாபாத்தில் வைத் திருந்த முதல் இந்தியர் மோதிலால். ஐரோப்பிய சமையலறை, மதுபானக்கூடம், ஆங்கிலப் பணியாளர்கள் என்று ஆடம்பரமாக வாழ்ந்த

தன் தந்தையைக் காந்திய வழியில் ஜவகர்லால் நேரு திருப்பினார். தந்தையும் மகனும் சுக போகங்களைத் துறந்து சுதந்திரப் போரில் ஈடுபட்டு, சிறைக்கூடங்களில் வாடினர். காங்கிரஸ் பேரியக்கத் தலைவராக மோதிலால் நேரு 1928-ல் பணியாற்றினார். ஆண்டுக்கொரு முறை கூடும் காங்கிரஸ் மாநாட்டில் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

லாகூரில் 1928 டிசம்பரில் காங்கிரஸ் மாநாடு கூடியது. பட்டேல் புதிய தலைவராக வர விரும்பினார். ராஜாஜியும், ராஜேந்திர பிரசாத்தும் பட்டேலை ஆதரித்தனர். காந்தி தலைமை ஏற்கவேண்டும் என்று 10 மாகாண கமிட்டிகளும், பட்டேலுக்கு ஆதரவாக 5 கமிட்டிகளும், நேருவை ஆதரித்து 3 கமிட்டிகளும் தீர்மானம் நிறைவேற்றின. காந்தி தன் ஆதரவை நேருவுக்கு வழங்கினார். தந்தை மோதிலால் நேரு தலைவர் பதவியிலிருந்து இறங்கியதும், மகன் ஜவகர்லால் நேரு புதிய தலைவராகப் பொறுப்பேற்றார். அப்போதுதான் இந்திய மண்ணில் அரச பரம்பரையில் இருந்த வாரிசுரிமை, அரசியல் களத்திலும் வந்து சேர்ந்தது.

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக நேரு சுமார் 17 ஆண்டுகள் பணியாற்றினார். அவருக்கு அடுத்து லால்பகதூர் சாஸ்திரி பிரதமரானதை இந்திராவின் இதயம் ஏற்கவில்லை. பதவியேற்று 2 ஆண்டுகளுக்குள் அகால மரணமடைந்தார் சாஸ்திரி. காமராஜர் போட்ட தவறான கணக்கு, இந்திராவை பிரதமராக்கியது. இந்திரா காந்தியின் குறிப்பிடத் தக்க வாழ்நாள் சாதனை, இந்தியாவை நேருவின் குடும்பத்தினால் மட்டுமே வழிநடத்த முடியுமென்று மக்களை உறுதியாக நம்பச் செய்தது! முரட்டுத்தனத்தையும், தன்னகங்காரத்தையும் தவிர வேறெந்த உயர்ந்த தகுதியுமற்ற தன் மகன் சஞ்சய் காந்தியை இந்திரா அரசியல் வாரிசாக வளர்த்தார். வான வீதியில் விமான சர்க்கஸ் சாகசங்களில் ஈடுபட்டபோது சஞ்சய் விபத்தில் பலியானார். எதிர்பாராத வகையில் ராஜீவ் அரசியலுக்குள் அன்னை இந்திராவால் இழுக்கப்பட்டார். நேரு - இந்திரா - ராஜீவ் - சோனியா - ராகுல் - பிரியங்கா என்று வாரிசு அரசியல் வளர்வதற்கு காங்கிரஸ் வாசற் கதவைத் திறந்தது.

திராவிட இயக்கம் வரிசையாகப் பிளவுகளை சந்தித்தது வாரிசு அரசியலால்தான். பெரியார் அண்ணாவை விட்டுவிட்டு மணியம்மையை அரசியல் வாரிசாக அறிவித்ததினால்தான், தி.மு.கழகம் பிறந்தது. கலைஞர் தன் குடும்பத்திடமிருந்து கழகத்தை யாரும் பிரித்துவிடக்கூடாது என்று திட்டமிட்டு நடத்திய அரசியலால்தான் முதலில் எம்.ஜி.ஆரும் அடுத்து வைகோவும் வெளியேற்றப்பட்டனர். எம்.ஜி.ஆர். மரணத்துக்குப் பின், 'அவருடைய வாரிசு வி.என்.ஜானகியா... ஜெயலலிதாவா?' என்ற தரம்குறைந்த போட்டியில்தான் அ.தி.மு.க. இரண்டாக உடைந்தது. இன்று, 'கலைஞரின் அரசியல் வாரிசு ஸ்டாலினா, அழகிரியா?' என்று அவருடைய குடும்பத்தில் ஒரு மௌன யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

வாரிசற்ற ஜெயலலிதாவுக்கு அவருடைய தோழி சசிகலா வாரிசாக எல்லா நடவடிக் கைகளிலும் வந்து நிற்பது அ.தி.மு.க. இரண்டாம் வரிசை தலைவர்களின் உள்ளங்களில் ஊமைக் கோபத்தை வளர்த்து வருகிறது.

இன்று வாரிசு அரசியல் இடம் பெறாத மாநிலமே இந்தியாவில் இல்லை!

'பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை' என்று வரலாற்றா சிரியர்களால் வருணிக்கப்படும் நெப்போலியன், மன்ன ராட்சிக்கு மறுவாழ்வு தந்தது போன்று, ஜனநாயகத்தில் பிரதிநிதிகளான நம் ஆட்சியாளர்கள் அரச பரம்பரையின் வழித்தோன்றல்களாக மாறிவிட்டனர்.

முதலாளித்துவ அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் அரசியல் வாரிசுகள் ஆட்சிப் பொறுப்பேற்பதில்கூட பெரிய அதிசயம் இல்லை. கம்யூனிஸத்தின் காவலராகக் கருதப்படும் கியூபாவின் ஆட்சியாளர் காஸ்ட்ரோ 50 ஆண்டுகளுக்கு மேல் அதிகார நாற்காலியில் அமர்ந்து சாதனை படைத்தவர். முதுமையில் நோயுற்ற பின்பு அவருக்கடுத்து அவருடைய தம்பி ரெளல் காஸ்ட்ரோதான் இடைக்காலப் பொறுப்பேற்றிருக்கிறார்!



வாரிசுகள் குறித்து 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்கத்தில் பிளேட்டோ தெளிவாக

விளக்கியிருக்கிறார். 'தங்கத்தை நெருப்பில் போட்டுக் காய்ச்சிப் பக்குவப் படுத்துவதுபோல், தலைமைக்கு வருவதற்கு முன் கடினமான பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும். எதையும் நிதானமாகப் பார்க்கும் தன்மையைப் பெறச் செய்ய வேண்டும். பால்ய பருவத்திலிருந்து பல்வேறு சோதனைகளில் ஈடுபடுத்தப்பட்டு, எவ்விதக் களங்கமு மின்றி வெளிப்படுபவனைத்தான் காவலனாக மக்கள் கௌரவிக்கவேண்டும்' என்றார் பிளேட்டோ. இன்று அப்படி எத்தனை வாரிசுகள் அரசியல் பரிசோதனைக்கு ஆளான பின்பு பதவியேற்கிறார்கள்?

காஷ்மீரில் ஷேக் அப்துல்லாவின் மகன் என்ற தகுதியே பரூக் அப்துல்லாவை முதல்வராக்கியது. பரூக் அப்துல்லாவின் மகன் என்ற தகுதியே உமர் அப்துல்லாவை முதல்வராக்கிவிட்டது. கருணாகரனின் மகன் என்பதனால்தானே கட்சியின் தலைவராகவும், கேரள அமைச்சராகவும் முரளிதரன் அமர முடிந்தது? என்.டி.ராமராவின் மருமகனாக இருந்ததனால்தான்

சந்திரபாபு நாயுடு தெலுகு தேசத்தைக் கைப்பற்ற முடிந் தது. குடும்பப் பொறுப்பை கவனித்து வந்த ராப்ரிதேவி பீகாரின் முதல்வராக, லாலுபிரசாத்தின் மனைவி என்பதைத் தவிர வேறெந்தத் தகுதியில் வர முடிந்தது? உத்தரப் பிரதேசத்தில் சரண்சிங் குடும்பம், முலயாம்சிங் குடும்பம், பீகாரில் பஸ்வான் சகோதரர்கள், ஒரிஸ்ஸாவில் பட்நாயக் வாரிசு, மகாராஷ்டிராவில் பவார் பரம்பரை, சவான் சந்ததி, மத்தியப் பிரதேசத்தில் சிந்தியர்கள் என்று பட்டியல் நீளும். இடதுசாரி இயக்கமான மார்க்சிஸ்ட்கள் கூட இன்று விதிவிலக்கு இல்லை.

தமிழகத்தில் 35 ஆண்டுகளுக்கு முன்பு கலைஞர், ஸ்டாலின் மூலம் வாரிசு அரசியலை உருவாக்கியபோது, அவருடைய நடவடிக்கை கடும் விமர்சனத்துக்குள்ளானது. அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்று அரசியல் நடத்துவதாக அறிவித்தவர் கலைஞர். அண்ணா 4 பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்த்தார். எந்தப் பிள்ளையையும் தன் வாழ்காலத்தில் அரசியலில் ஆளாக்கவேண்டும் என்று அவர் அணுவளவும் ஆசைப்

படவில்லை. இன்று கலைஞரை மட்டும் குறிப்பிட்டு யாரும் பழிதூற்ற முடியாது. பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் பாட்டாளிகளையும் துறந்து, மக்களையும் மறந்து தன் குடும்ப உறுப்பினர்களின் ஆதிக்கத்தில் முற்றாகவும் முழுமையாகவும் கட்சியைக் கையகப்படுத்திவிடவில்லையா? தமிழ்நாடு காங்கிரஸுக்கு வாரிசு விவகாரத்தில் விமர்சனம் வைக்க தார்மிக உரிமை இல்லை. சசிகலாவின் குடும்பம் முற்றுகையிட்டிருக்கும் அ.தி.மு.க. கலைஞருக்கு எதிராக வாய் திறக்க முடியாது.

ஆக, ஒரு தனி பலவீனம் இன்று அரசியல் உலகின் பொது பலவீனமாக்கிவிட்டது. வாரிசு அரசியல் இன்று, புதிய வருணாசிரம தர்மமாகிவிட்டது. பஞ்சமர், சூத்திரர், வைசியர், க்ஷத்திரியர், பார்ப்பனர் என்ற 5 வருணாசிரம வகுப்புகள் போக... ஆறாவது வருணமாக வந்துதித்துள்ள 'அரசியல் குடும்பம்' என்னும் நவீன வகுப்பே அனைத்து வகுப்புகளிலும் வலிமையானது.

மாவீரன் அலெக்சாண்டரின் ஆசிரியனாக இருந்த அரிஸ்டாட்டில் தான் வரைந்த 'அரசியல்' என்னும்

அழியாப் புகழ் பெற்ற நூலில், 'ஜனநாயக அமைப்பிலும், குழு ஆட்சி முறையிலும் ஒரு மனிதனுக்கு ஒரே நேரத்தில் அனைத்து அதிகாரங்களையும் எல்லை மீறி வழங்கிவிடக்கூடாது. நெடிய இடைவெளிகளில் கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய அதிகாரத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும். ஒரே கணத்தில் எல்லா அதிகாரங்களையும் ஒருவனுக்கு வழங்கினால், அந்த அதிகாரம் தரும் மயக்கம் அவனை அழித்துவிடும்' என்று அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஸ்டாலினைப் பொறுத்தவரை கலைஞர் அரிஸ்டாட்டிலின் அணுகுமுறையைத்தான் மேற்கொண்டிருக்கிறார். மற்ற கட்சிகளின் வாரிசுகளோடு ஸ்டாலினைச் சேர்த்துப் பேசுவது நியாயம் இல்லை என்பது உண்மைதான். ஸ்டாலின் அரசியலுக்கு வந்து 35 ஆண்டுகள் முடிந்துவிட்டன. திருமணமாகி 5 மாதங்கள் நிறைவதற்குள் நெருக்கடி காலக் கொடுமைகளை மிகக் கடுமையாக அவர் சிறைக்கம்பிகளுக்குள் அனுபவிக்க நேர்ந்தது. கலைஞரைப் போல் இளமையிலேயே அவர் கட்சிப் பணிகளில் தன்னை

ஈடுபடுத்திக் கொண்டவர். தொடக்க நிலையில் அவர் மீதிருந்த சில விமர்சனங்கள் கசப்பானவை. ஆனால், சென்னை மாநகர மேயர் பொறுப்பில் அமர்ந்த பின்பும், சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய நிலையிலும் அவருள் நல்ல மாற்றங்கள் நிகழ்ந்தன.

உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதும் நேர்மை சார்ந்த அதிகாரிகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அவர் நேர்த்தியாக வெளிப்படுத்திய நிர்வாகத்திறன் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது. துணை முதல்வரான பின்பு பலவகையில் ஸ்டாலின் பண்பட்டிருக்கிறார். அதேசமயம், மக்களின் முழுமையான ஆதரவோடு ஜனநாயக முறையில் முதல்வராக அவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை 'வாரிசு அரசியல்' குற்றச்சாட்டிலிருந்து அவர் முற்றாக விடுபட முடியாது.

ஒரு நாட்டின் அரசனாக இருந்தவன் பிற நாடுகளையும் வென்று பேரரசனாக விரும்பினான். தன் விருப்பம் நிறைவேற வழியிருக்கிறதா என்றறிய அரண்மனை ஜோதிடரிடம் ஆலோசித்தான். சாமுத்திரிகா லட்சணங்கள்

அனைத்தும் குறைவற நிரம்பிய அழகுமயமான ஓர் இளைஞனின் முகத்தில் ஒவ்வொரு நாள் காலையும் கண் விழித்தால் அரசனின் விருப்பம் நிச்சயம் நிறைவேறும் என்றான் ஜோதிடன். நாட்டின் மூலை முடுக்குகளில் தேடித் திரிந்து அப்படிப்பட்ட அழகான இளைஞனை எப்படியாவது கொண்டு வந்து தன்னிடம் சேர்க்க வேண்டும் என்று அமைச்சர்களிடம் ஆணையிட்டான் அரசன். மாதக் கணக்கில் நாடு முழுவதும் தேடியும் அரசன் எதிர்பார்த்த இளைஞன் கிடைக்கவில்லை. கவலையில் வாடிய அரசனிடம், அவனுக்கு அன்றாடம் கைகால் பிடித்துவிடும் பணியாள் கவலைக்குரிய காரணம் என்னவென்று கேட்டான். அரசன் கவலைக்கான காரணத்தை விளக்கினான். 'இவ்வளவுதானா அரசே! இனி கவலையை விடுங்கள். நீங்கள் எதிர்பார்க்கும் சர்வ லட்சணம் பொருந்திய இளைஞனை நாளை காலை நான் அழைத்து வந்து உங்கள் கண் முன்னால் நிறுத்துகிறேன்!' என்றான் அந்தப் பணியாள்.

அரசனுக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. 'உண்மை யாகவா?'

என்று வியப்புடன் கேட்டான். 'நாளை காலை பாருங்கள்...' என்று சொல்லிவிட்டுப் போனான் பணியாள். இரவு முழுவதும் அரசனுக்கு உறக்கம் வரவில்லை. எப்போது வைகறை விடியும் என்று காத்திருந்தான். பொழுது புலர்ந்தது. பணியாள் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. ஆவலோடு கதவைத் திறந்து அரசன் பார்த்தான். எதிரில் பணியாளன் பக்கத்தில் கன்னங்கறுத்த விகாரமான ஓர் இளைஞன் நின்றுகொண்டிருந்தான். அதிர்ந்து போன அரசன், 'யாருடா இவன்?' என்று கோபத்தில் இரைந்தான். 'அரசே, இவன் என் மகன். எனக்குத் தெரிய இவனளவுக்கு சாமுத்திரிகா லட்சணங்கள் நிறைந்த வேறு இளைஞன் யாரும் இல்லை' என்றான் பணியாளன்.


இந்திய அரசியல் தலைவர்கள் பலர் அந்தப் பணியாளனைப் போன்றுதான் இருக்கின்றனர்.

– பயணம் தொடரும்–

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# ஓய்வு... 23



'உயர்ந்த வாழ்க்கைக்குத் தேவையானவற்றுள் ஓய்வும் ஒன்று. நாட்டுப் பணிகளில் மிகவும் முக்கியமானது, மக்களுக்கு நிம்மதியான ஓய்வுக் காலத்துக்கான வழியை உருவாக்கிக் கொடுப்பதும்தான். ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பது ஓய்வாகாது. பொதுநலன் சார்ந்த சேவை, மக்களோடு கலந்துறவாடல், தத்துவம், அரசியல் குறித்த ஆய்வில்

ஈடுபடுதல் போன்றவற்றின் மூலம் உள்ளத்துள் உறைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தி, ஒழுக்க நெறியைச் சிறக்கச் செய்வதுதான் உண்மையான ஓய்வுக்குரிய இலக்கணம்' என்பது அரிஸ்டாடிலின் அபிப் ராயம்.

அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தை உருவாக்குவதில் அறிஞர் தாமஸ் ஜெபர்சனுடன் சேர்ந்து செயற்பட்ட சிறந்த சிந்தனையாளர் பெஞ்சமின் பிராங்க்ளின், 'ஓய்வை ஒருவன் அனுபவிக்க விரும்பினால், அவன் தன்னுடைய நேரத்தை நிறைவாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு நொடியைப் பற்றியும் நமக்கு நிச்சயமில்லாதபோது ஒரு மணி நேரத்தை

வீணாக்குதல் விவேகமாகுமா? ஓய்வு என்பது, பயனுள்ளதைச் செய்யப் பயன்படுத்தும் நேரமாகும். சோம்பலுக்கும், ஓய்வுக்கும் சம்பந்தமே இல்லை. ஓய்வான வாழ்க்கை வேறு. சோம்பேறித்தனமான வாழ்க்கை வேறு' என்று விளக்கினார்.

ஒரு மனிதனின் நேசத்துக்குரிய உடைமை, அவனுக்கு

வாய்த்திருக்கும் வாழ்க்கை. இறப்பைத் தழுவும் இறுதி நாள் வரை வாழ்வின் ஒரு நொடிகூட வீணாகிவிடக் கூடாது என்று நினைத்தவர்கள் லெனின், காந்தி, பெரியார் போன்ற பெரியோர்கள். சர்ச்சிலின் நெருங்கிய உறவினர் ஷெரிடன் என்ற பெண்மணி. அவர் ஒரு சிறந்த சிற்பி. லெனினையும், காந்தியையும் சிலையாக வடித்த சிறப்புக்குரியவர் ஷெரிடன். லெனினை ஒரு நாள் ஷெரிடன் சந்தித்து அவரை சிலையாக வடிக்க நேரம் ஒதுக்கும்படி வேண்டினார். 'மணிக்கணக்கில் என்னால் உங்கள் முன் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. நான் புத்தகம் படிக்கும் நேரத்தை வேண்டுமானால் நீங்கள் சிலை செய்யப் பயன்படுத்திக்கொள்ளலாம்' என்றார் லெனின். காந்தியை ஷெரிடன் அணுகியபோது, 'நான் ராட்டையில் நூல் நூற்கும்போது நீங்கள் சிலை வடிக்க அனுமதிக்கிறேன்' என்றார். லெனினுக்குப் புத்தகம் படிப்பதும், காந்திக்கு நூல் நூற்பதும், பெரியாருக்கு மனிதரின் மானவுணர்வைத் தூண்டும் கட்டுரைகள் தீட்டுவதும்தான் ஓய்வாக இருந்திருக்கின்றன! இன்றைய

அரசியல்வாதிகளில் பலருக்கு சீட்டாடுவதும், சினிமா பார்ப்பதும், பிறரைப் பற்றிய மலினமான சொல்லாடல்களில் சுகம் தேடுவதும்தான் ஓய்வுக்கான அடையாளங்கள் என்பதை பல சந்தர்ப்பங்களில் காண்கிறோம்.

மகாத்மா காந்தியும், ஜெயப்பிரகாஷ் நாராயணும் நினைத்திருந்தால் இந்தியாவின் உயர்பதவிகளில் அமர்ந்து அதிகாரம் செலுத்தியிருக்க முடியும். சகலத்தையும் சமுதாய நலனுக்கு அர்ப்பணித்த இருவரும் தங்கள் வாழ்வில் ஊராட்சித் தலைவர் பதவியில்கூட உட்கார்ந்ததில்லை. சரித்திர புருஷர்கள் பதவிப் பித்தர்களாகப் பவனி வந்ததில்லை. பிரிட்டனின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு அமெரிக்க மக்கள் ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையில் போர்க்களம் புகுந்தனர். 'பிரிட்டிஷ் ராணுவம் அகிலம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதைவிட வலிமை மிக்க ராணுவம் உலகில் வேறில்லை. ஆனாலும், அதை எதிர்த்துப் போரிட்டு உங்களுக்கு வெற்றியைத் தேடித் தருவேன்!'

என்று வாக்குறுதி வழங்கி, அதை வாழ்வில் நிறைவேற்றிக் காட்டியவர் வாஷிங்டன். போர் முடிந்தது. அமெரிக்க மண்ணில் சுதந்திரக் கொடி பறந்தது. ஆனால், வாஷிங்டன் எந்தப் பதவியையும் எதிர்பாராமல் தன் விளை நிலங்களில் விவசாயம் செய்யப் புறப்பட்டுவிட்டார்.

மக்களோ அவரை விடவில்லை. அனைவரும் வற்புறுத்தி 1789-ல் வாஷிங்டனை முதல் ஜனாதிபதியாக முடிசூட்டி மகிழ்ந்தனர். தன் பதவிக்காலத்தில் வாஷிங்டன் ஊதியமே பெறவில்லை. ஜெயலலிதா முதல்வாரனபோது ஒரேயரு ரூபாய் ஊதியம் பெற்றது நினைவுக்கு வரும்போதே, அவருடைய ஆட்சிக் காலத்து ஊழல் புகார்களும் நினைவுக்கு வரும். ஆனால், வாஷிங்டன் எந்த ஊழலிலும் ஈடுபட்டதில்லை. அவருடைய ஆட்சி சாதனைகளில் நெஞ்சம் நிறைந்த மக்கள் இரண்டாவது முறையும் அவரே அதிபராக நீடிக்க வற்புறுத்தினர். மக்கள் விருப்பத்துக்காக 8 ஆண்டுகள் குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய வாஷிங்டன், மூன்றாவது முறையும் பதவியில் தொடரவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டபோது, அதற்கு

இணங்க மறுத்து மீண்டும் விவசாயியாக மாறினார்.

அமெரிக்க வரலாற்றில் தொடர்ச் சியாக நான்கு முறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பிராங்க்ளின் டி.ரூஸ்வெல்ட் ஒருவரே. ஐக்கிய நாடுகள் சபை உருவாவதற்கு அடிப்படை அமைத்தவர் ரூஸ்வெல்ட். இரு முறைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக இருக்கக் கூடாது என்ற சட்ட திருத்தம் ஹாரி எஸ்.ட்ரூமன் காலத்தில்தான் கொண்டுவரப்பட்டது. இந்தியாவின் அரசியல் ஓரளவாவது சீரடைய வேண்டுமென்றால் இதுபோன்ற திருத்தம் இன்றே வரவேண்டும்.

ஜனநாயக காங்கிரஸ் தலைவராக ப.சிதம்பரம் தமிழகத்தில் வலம் வந்தபோது ஒரு வார இதழில் 'நமக்கே உரிமையாம்' என்ற தலைப்பில் ஒரு தொடர் எழுதினார். 'இந்தியாவில் தேர்தல் விதிகளை மாற்றுவதை ஆதரிப்பவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். முதலில் மாற்றப்பட வேண்டிய விதி எது தெரியுமா? யாரும் இரண்டு பதவி காலங்களுக்கு மேல் (10 ஆண்டுகளுக்கு மேல்) பிரதமராகவோ, முதலமைச்சராகவோ இருக்க

முடியாது என்றொரு விதியை இயற்ற வேண்டும். அதேபோல் யாரும் மூன்று பதவிக் காலங்களுக்கு மேல் (15 ஆண்டுகளுக்கு மேல்) நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கும், சட்டமன்ற உறுப்பினராக இருப்பதற்கும் தடைவிதித்து சட்டம் இயற்ற வேண்டும். பழையன கழிவதற்கும், புதியன புகுவதற்கும் இதுவே சிறந்த வழி. 35 வயதுக்குக் குறைந்தவர்களே 75 சதவிகிதம் உள்ள நாட்டில் இளைய தலைமுறையின் உணர்வுகளையும், நவீன உலகத்தின் தேவைகளையும் பிரதிபலிக்கும் தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்க வேண்டும். அதற்கு இதுபோன்ற விதிகளைத் தவிர்க்க முடியாது. நான் கூறுவது புண்ணுக்குப் புனுகு தடவும் யோசனைகள் அல்ல. நான் ஓர் அறுவை சிகிச்சையைப் பரிந்துரைக்கிறேன். இந்த அறுவை சிகிச்சையைச் செய்யாவிட்டால், இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள சீரழிவுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாது' என்று ஜனநாயகம் புத்துயிர் பெறுவதற்கான வழிமுறைகளை விளக்கியிருக்கிறார் சிதம்பரம்.

ஆனால், சிதம்பரம் ஏழாவது முறை நாடாளுமன்ற உறுப்பினராக, இந்தத் தொடர் எழுதிய பின்புதான் புதுடெல்லி சென்று உள்துறை அமைச் சராகப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்; ஐந்தாவது முறை கலைஞர் முதலமைச்சராக வருவதற்கு மாநிலம் முழுவதும் சென்று தி.மு.க-வின் இலவச வண்ணத் தொலைக்காட்சி, 1 கிலோ அரிசி 2 ரூபாய் தேர்தல் அறிக்கையைக் 'கதாநாயகன்' என்று வருணித்து மும்முரமான பிரசாரத்தை முனைப்புடன் செய்தார் சிதம்பரம்.

'தான் கடைப்பிடிக்கும் கருத்தை மட்டுமே அடுத்தவருக்கு போதிக்க வேண்டும். அடுத்தவரிடம் எதை போதிக்கிறோமோ, அதை முதலில் நாம் பின்பற்ற வேண்டும்' என்றார் காந்தி. அது மகாத்மாவுக்கு எளிது; மனம் ஒன்று நினைக்க, வாய் ஒன்று பேச, கை ஒன்று செய்வதுதானே பொதுவாக அரசியல்வாதிக்கு அழகு! நெல்சன் மண்டேலா தென் ஆப்பிரிக்காவில்

நெல்சன் மண்டேலா



வெள்ளையர் பின்பற்றிய நிறவெறிக் கொள்கையை எதிர்த்து 67 ஆண்டுகள் போராடினார். தன் போராட்ட வாழ்வில் 27 ஆண்டுகள் சிறைக் கொடுமைகளை அனுபவித்து, இளமை முழுவதையும் இழந்து, வயோதிகராக வெளியே வந்த மண்டேலா, 1994-ல் வெள்ளையரும் கறுப்பரும் வாக்களித்து ஜனாதிபதியானார். அவர் நினைத்திருந்தால், இறக்கும் வரை தென் ஆப்பிரிக்க அதிபராக இருந்திருக்க முடியும். கறுப்பர்களால் கடவுளுக்கு நிகராகக் கருதப்பட்ட மண்டேலா இரண்டாவது முறை பதவியில் நீடிக்க விரும்பாமல் விலகினார். விலகியவர், அரிஸ்டாடில் ஓய்வுக்கு வகுத்த இலக்கணப்படி மக்கள் சேவையில் தொடர்ந்து ஈடுபட்டார். காந்தி பிறந்த நம் மண்ணிலோ பதவி மறுப்பாளர்களையும், துறப்பாளர்களையும் பார்ப்பது அரிதாகிவிட்டது. 'நான் எப்போதும் உழைத்துக்கொண்டே இருப்பேன். என்னால் ஒருபோதும் சும்மா இருக்க முடியாது. மரணம் மட்டுமே என் உழைப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்' என்றார் ஆபிரகாம்

லிங்கன். அவருடைய ஓயாத உழைப்பின் பலனாக கறுப்பர்களின் அடிமைத்தளை அறுபட்டது; அமெரிக்க மாநிலங் கள் ஒன்றுபட்டன.

நம் முதல்வர் கலைஞரும் ஓயாமல் உழைப்பவர்தான். அவருடைய பொது வாழ்க்கை தமிழகத்து அரசியலில் பல மாற்றங்களை உருவாக்கியது. கண்ணொளி வழங்கும் திட்டம், குடிசைமாற்று வாரியம் என்று அவரால் தொடங்கப்பட்ட சமூகநலத் திட்டங்கள் உயிர் காப்பீட்டுத் திட்டம் வரை சமூகநலன் சார்ந்து உருப்பெற்றன என்பது அவருடைய அரசியல் வாழ்வுக்குப் பெருமை சேர்ப்பது உண்மை. ஆனால், ஆட்சிக்கும் கட்சிக்கும் இடையில் இருந்த 'இலக்குவன் கோடு' அவரால்தான் அழிக்கப்பட்டது. அதேபோல் ஊழல் என்ற பெருநோய் ஆட்சியாளரிடையே அவர் காலத்தில் பல்கிப் பெருகியதையும் மறுத்துவிட முடியாது. மதுவின் நிறமும் மணமும் அறியாத ஓர் இளைய தலைமுறையின் கைகளில் கோப்பையைக் கொடுத்தவர் அவரே. சுயமரியாதை இயக்கத்திலிருந்து வந்த அவர்தான், உழைப்பின்றி எல்லாவற்றையும்

அரசிடமிருந்து இலவசமாகப் பெறத் துடிக்கும் சுயமரியாதையற்ற மனோபாவத்தை மக்களிடையே வளர்த்தவர். சில ஆயிரம் ரூபாய் செலவில் நடந்த தேர்தல், கோடிக்கணக்கில் கொட்டவேண்டிய சூழலுக்கு மாறியதும், வாக்களிக்க மக்கள் பணப்பெட்டியின் வருகைக்காக ஏங்கும் 'ஜனநாயக விபரீதம்' விளைந்ததும் இரண்டு கழகங்களாலும்தான் என்றாலும், இதில் கலைஞருக்கு கணிசமான பங்குண்டு. கலைஞரால் தமிழக அரசியலில் ஏற்பட்ட பாதிப்பும் நன்மையும் தீமையும் கலந்த ஓர் கலவை.

தள்ளாமையில், ஆயிரம் சிரமங்களுடன் முதல்வராக அமர்ந்து கடமையாற்றுவதிலிருந்து கலைஞர்விரைவில் விடுபட வேண்டும். சர்ச்சிலைப் போல் வெளியேற்றப்படாமல், நெல்சன் மண்டேலா, காமராஜர் போல் தானாகவே கம்பீரத்துடன் விடைபெற வேண்டும். அவருடைய விருப்பப்படியும், கழகத்தின் பெரும்பான்மை ஏற்கும்படியும் தன் அரசியல் வாரிசை முதல்வராக்கி அவர் மகிழ வேண்டும். தமிழை மத்திய அரசின்

ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஆக்கவும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடைக்கவும், சாதிகளின் பிடியிலிருந்து தமிழக அரசியல் விடுபடவும் இன்னொரு பெரியாராகப் போர்க்குணம் கலையாமல் தன்னிடம் இருக்கும் எழுத்தாற்றல், பேச்சாற்றல் மூலம் ஓயாமல் தமிழினத்தைக் கலைஞர் தட்டி எழுப்ப வேண்டும்.

ஆன்மிக உலகில் ராமானுஜர் 120 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தது போல், அரசியல் தளத்தில் கலைஞர் இன்னும் பல காலம் வாழ்ந்து 'ஊருக்கு உழைத்திடல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்க வேண்டும். புத்தன் அரசபோகங்களைத் துறந்து காடு மேடுகளில் கால்கடுக்க நடந்து மக்கள் துயர் துடைக்க முனைந்ததைக் கேள்விப்பட்ட அரசன் ஒருவன் அவரைத் தேடி வந்தான்; 'இந்தத் துறவு வாழ்வில் என்ன சுகம் இருக்கிறது?' என்று கேட்டான். புத்தன் அதற்கு விளக்கமளித்தபோது பக்கத்தில் அமர்ந்திருந்த வயது முதிர்ந்த பிட்சு, தான் நீண்டதூரம் சென்று மக்கள் பணியில் ஈடுபட வேண்டி இருப்பதால், தான் புறப்பட அனுமதிக்க வேண்டுமென்று புத்தனிடம்

பணிவாக விண்ணப்பித்தான். 'தள்ளாத வயதில் மக்கள் தொண்டா?' என்ற வியப்புடன் அரசன் பிட்சுவைப் பார்த்து, 'உங்கள் வயது என்ன?' என்று கேட்டான். 'எனக்கு வயது நான்கு' என்றார் பிட்சு. இந்த மனிதர் தன்னை ஏளனம் செய்கிறாரோ என்ற ஐயத்துடன் புத்தனைப் பார்த்தான் அரசன். புத்தன் சிரித்தபடி, 'ஆம். அவர் சொல்வது உண்மைதான்' என்றார். அரசனுக்குள் குழப்பம் அதிகரித்ததைக் கண்ட பிட்சு, 'அரசே, உங்கள் பார்வையில் நான் எண்பது வயதுக்கு மேற்பட்டவன். புத்தரைக் காணும் வரை எனக்காகவும், என் சொந்தங்களின் சுகங்களுக்காகவும் நான் ஓயாமல் உழைத்தேன். அதுதான் வாழ்க்கை என்று அப்போது நினைத்தேன். பிறர் நலனுக்காக வாழ்வதுதான் வாழ்க்கை என்று புத்தர் எனக்குப் புரிய வைத்தார். அந்தப் புரிதல் என்னுள் ஏற்பட்டு அடுத்தவர் நலன் நாடிப் புறப்பட்டு நான்காண்டுகள் நடந்துவிட்டன. இதற்கு முன்பு வாழ்ந்த நாட்களை நான் நினைவில் நிறுத்த விரும்பவில்லை. புத்தருடைய பாதிப்பில் புதிதாய்ப் பிறந்த எனக்கு

இப்போது வயது நான்கு என்பதுதான் உண்மை' என்று விளக்கினார். அந்த புத்தபிட்சுவின் கணக்குப்படி பார்த்தால் நம் அரசியல்வாதிகளில் பலர் இன்னும் புதிதாகப் பிறக்கவேயில்லை!

– பயணம் தொடரும்–


எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

## ஜனநாயகம்...

24 'உண்மையும் நாட்டுப்பற்றும் உள்ளவர்களாக, சுய ஆதாயங்களைவிட நாட்டின் நலனே உயர்ந்தது என்ற எண்ணம் உடையவராகப் பெரும்பான்மை மக்கள் இருக்கும் இடத்தில்தான் சுயராஜ்யம் நீடித்து நிலவும். சுயராஜ்யம் என்பது பலர் சேர்ந்து ஆள்வது. அந்தப் பலர் நல்லொழுக்கம் அற்றவர்களாய், தன்னலத்தில்

திளைப்பவர்களாய் இருந்து விட்டால்... அவர்கள் நடத்தும் ஆட்சி அராஜகமாக அமைந்து விடும். அதுபோன்ற ஆட்சியை ஒழுங்குபடுத்தவும், தவறான சக்திகளை அதிகாரத்திலிருந்து அகற்றவும் மக்களுக்குள்ள ஆற்றலை உணரும்படி அவர்களுக்கு போதிக்க வேண்டும்!' என்றார் அண்ணல் காந்தி.



'நான் கனவு காணும் சுயராஜ்யம், ஏழை மனிதனின் சுயராஜ்யமே. ஒரு

பணக்காரன் அனுப விக்கும் சாதாரண வாழ்க்கைத் தேவைகள் எல்லாம் ஏழைக்கும் கிடைத்தாக வேண்டும்.

இவற்றுக்கான சூழல் கனியாத வரை நமக்குப் பூரண சுயராஜ்யம் கிடைத்து விட்டதாக நான் நம்ப மாட்டேன். நான் விரும்பி எதிர்நோக்கும் ஜனநாயகத்தில் அனைவருக்கும் சரிசமமான சுதந்திரம் இருக்கும். ஒவ்வொருவரும் தமக்குத்தாமே எஜமானராய் இருப்பார்' என்றார் மகாத்மா. 'ஒரு மனிதன் - ஒரு வாக்கு நம் ஜனநாயகத்தில் வந்து விட்டது. ஒரு மனிதன் - ஒரே மதிப்பு என்று வரும்?' என்று அரசியல் நிர்ணய சபையின் முடிவுரையில் அம்பேத்கர் கேள்வி எழுப்பினார். அரசியல் நிர்ணய சபையில் தொடக்கவுரை நிகழ்த்திய நேரு, 'பசித்துக் கிடப்பவர்க்கு உணவு, நிர்வாணமாக நிற்பவர்க்கு உடை, திறமைக்கேற்ப ஒவ்வொருவரும் வளர்ச்சியைப் பெறுவதற்கான வாய்ப்பு விரைவில் கிடைப் பதற்கேற்ப அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

நாடு ஜனநாயக ஆடை உடுத்தி 63 ஆண்டுகள் முடியப்போகும் நிலையில்... காந்தியின் கனவு நனவாகவில்லை. நேரு விரும்பியது நடக்கவில்லை.


அம்பேத்கரின் அர்த்தமுள்ள கேள்விக்கு இன்று வரை விடை கிடைக்கவில்லை. அப்படியானால், ஜனநாயகம் சாதித்தது என்ன? உலகின் மற்ற பகுதிகளில், மக்கள் இலை ஆடை அணிந்து உலவிய காலத்திலேயே எஃகை கண்டுபிடித்த நாடு இந்தியா. அறிவுத் துறையில் மற்றவர் நாட்டம் செலுத்துவதற்கு முன்பே பூஜ்யத்தை அறிமுகப்படுத்தியவர்கள் நாம்.

ஆனால், இன்று கல்வியறிவற்றோர் எண்ணிக்கை இந்தியாவில்தான் அதிகம். பாரிலேயே போதிய உணவின்றி பசித்துக் கிடப்போர் இந்த மண்ணில்தான் இருக்கின்றனர். முரண்பட்ட முகங்களை உடைய சமூகம், நம் இந்திய சமூகம். உலகத்திலேயே அதிகச் செலவில் கட்டப்படும் வீடு அம்பானியுடையது. முகேஷ் அம்பானி உருவாக்கும் வீடு, 8 ஆயிரம் கோடி செலவில் 27 மாடிகள் கொண்டது. 2 மாடிகள் முழுவதும் சாப்பாட்டு அறைகள்; 3 மாடிகள் முழுவதும் பொழுதுபோக்கு அறைகள்; 2 மாடிகள் குளியலறைகளுக்காக மட்டும்; 6 மாடிகளில் கார் 'பார்க்கிங்'; அவற்றைப் பராமரிக்க 3 மாடிகளில் 'மெக்கானிக்' அறைகள்;

ஓய்வெடுக்க 3 மாடிகள்; ஆரோக்கியம் கடைப்பிடிக்க 3 மாடிகள்; 2 மாடி களில் தோட்டங்கள்; எல்லா பால்கனிகளிலும் தொங்கு தோட்டம். இந்த அம்பானியின் மாட மாளிகை எழும் மும்பை நகரில்தான் 40 சதவிகிதம் சேரிகள் உள்ளன. மாவோயிஸ்ட்டுகள் ஏன் வளர மாட்டார்கள்?

உண்மையான ஜனநாயகம் இந்தியாவில் இல்லை. இங்கு நடப்பது வெறும் ஜனநாயக பொம்மலாட்டம். ஜனநாயக அமைப்பு முறையை வலுப்படுத்த அரசியல் நிர்ணய சபையில் இருந்த அறிவாளிகள் அமெரிக்க அரசியலமைப்பிலிருந்து அடிப்படை உரிமைகளையும், அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் அடிப்படையில் இந்திய உச்ச நீதிமன்றத்தையும் உருவாக்கினார்கள். பிரிட்டனின் நாடாளுமன்ற உரிமை, அயர்லாந்தின் அரசு செயல் திட்ட வழிகாட்டுக் கொள்கை, ஜெர்மனியின் குடியரசுத் தலைவரின் அவசரகால அதிகாரங்கள், கனடாவிலிருந்து மத்திய, மாநில, எஞ்சிய அதிகாரங்கள் நம் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்டன.

உலகிலேயே மிகப் பெரிய அரசியலமைப்புச் சட்டம் நம்முடையதுதான். சட்டம் பெரிதாகவும், விரிவாகவும் இருந்தும் பாமரர்க்கும் ஏழைக்கும் என்ன பயன்? நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் 80 சதவிகிதம், செல்வச் செழிப்புள்ள 20 சதவிகித மக்களால் அபகரிக்கப்படுகிறது. மீதமுள்ள 20 சதவிகிதம் வளத்தைப் பங்கிட்டுக்


அமர்த்தியா சென்

கொள்வதில் 80 சதவிகிதம் மக்களிடையே கடும் போட்டி நிலவுகிறது. ஆனால், நம் அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை 'இறையாண்மை மிக்க சமதர்ம, சமய சார்பற்ற மக்க ளாட்சி குடியரசை அமைத்திட இந்தியர்களாகிய நாம் உறுதிபூண்டிருப்பதாக' வார்த்தை ஜாலம் காட்டு கிறது. சமதர்ம சமுதாயத்தை நோக்கி இன்று வரை இந்திய ஜனநாயகம் இரண்டடிகள் கூட எடுத்து வைக்கவில்லையே! சமதர்ம சமுதாயத்தில் குடிசை கூட இல்லாத குப்பனும், ஹெலிகாப்டர்கள் மாடியில் இறங்கும் வசதிகளோடு வாழும் அம்பானிகளும் எப்படி இருக்க முடியும்?

இந்த மண்ணில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்களில் பலர் பசியறியாதவர்கள். இவர்கள் அனைவரும் மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அடிமை இந்தியாவில் அரங்கேறிய 1935-ம் ஆண்டு இந்திய அரசு சட்டப்படி மாகாண சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால், விகிதாசார அடிப் படையில் மறைமுகமாக மத்திய சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே அரசியல் நிர்ணய சபை யின் அங்கத்தினர்களாக அமர்ந்தனர். அப்போது வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை இல்லை. கல்வி கற்றோர், நிலவுடைமையாளர்கள், அரசுக்கு வரி செலுத்துவோர், மத-இன அடிப்படையில் தனி வாக்காளர் தொகுதிகளைச் சார்ந்தவர்கள் மட்டுமே வாக்குரிமை பெற்றிருந்தனர். ஓராண்டுக்கு 180 ரூபாய் வாடகை வரும் வீட்டின் உரிமையாளர்கள், நகர சபைக்கு 15 ரூபாய் ஆண்டு தோறும் வரிகட்டுபவர்கள், நிலவரி ஆண்டுக்கு 50 ரூபாய்

செலுத்துபவர்கள், ஆண்டுக்கு 2 ஆயிரம் ரூபாய் வருமானவரி கட்டுபவர்கள் ஆகியோர் வாக்காளர்களாக இருந்தனர். அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய உறுப்பினர்களைத் தேர்ந் தெடுத்ததில் ஏழைக்கும் பாழைக்கும் எள்ளளவும் பங்கிருக்கவில்லை. இந்திய மக்கள் தொகையில் 14 சதவிகிதம் மக்கள் மட்டுமே வாக்களித்துத் தேர்ந் தெடுத்தவர்களால் தேர்வு செய்யப்பட்ட அரசியல் நிர்ணய சபை உருவாக்கிய அரசமைப்புச் சட்டம், 'நமக்கு நாமே ஏற்று, இயற்றி, வழங்கிக் கொண்டதாக' வார்த்தையாடுகிறது.

தேர்தல்கள் நடத்துவதனாலேயே ஜனநாயக ஆட்சி தொடர்வதாக நாம் எண்ணுதல் பிழை. சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நீடிக்கும் நிலையில், ஜனநாயக நடைமுறைகள் முறையாகப் பராமரிக்கப் படவில்லை என்ற உண்மை, வாக்காளர்கள் நெஞ்சைச் சுட வேண்டும். ஜனநாயகத்தின் குறைந்தபட்ச அடை யாளமாக இருக்கும் தேர்தல் முறை கூட இன்று முற்றாகச் சீரழிந்து விட்டது. வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பது இன்று கட்டாயக்

கடமையாக ஒவ்வொரு கட்சிக்கும் நேர்ந்து விட்ட பின்பு, தேர்தலின் மகத்து வமே பறிபோய் விட்டது. ஓர் ஆளுங்கட்சி, தன் ஆட்சிக் காலத்தில் ஏராளமான நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்களின் நல்வாழ்வைப் பெருக்கி இருப்பது உண்மையென்றால், ஊழலற்ற நேரிய ஆட்சியை மக்கள் பாராட்டும் வண்ணம் அது வழங்கிக் கொண்டிருந்தால், ஒவ்வோர் இடைத்தேர்தலிலும் ஏன் மறைமுகமாகப் பணத்தைக் கோடிக்கணக்கில் கொண்டு போய்க் கொட்டி வாக்காளர்களை மலினமாக விலைக்கு வாங்க வேண்டும்? ஏராளமான அமைச்சர்கள் பணப்பெட்டிகளோடு மாதக் கணக்கில் இடைத் தேர்தல் நடக்கும் தொகுதியை முற்றுகையிட்டு, அங்கேயே வீடெடுத்து ஏன் தங்க வேண்டும்?

2006-ல் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பின், தமிழகத்தில் 11 இடைத் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. எல்லா இடைத் தேர்தல்களிலும் தி.மு.க. கூட்டணியே வெற்றி பெற்று 'வரலாறு காணாத' புதிய சாதனையை

நிகழ்த்தியிருக்கிறது. இது கலைஞரின் ஆட்சிக்கு 'கிடைத்த' வெற்றியா? கணக்கில் காட்ட முடியாத கறுப்புப் பணத்தால் பாமர மக்களிடம் விலைபேசி 'வாங்கிய' வெற்றியா? ஆட்சியதிகார துஷ்பிரயோகமும், தவறான முறையில் திரட்டப்பட்டு, திரை மறைவில் வீடு வீடாகப் பட்டுவாடா செய்யப்படும் கறுப்புப் பணமும்தான் தேர்தல் வெற்றியைத் தேடித் தருமென்றால், ஜனநாயக தேவதையின் கழுத்து வெட்டப்படும் பலிபீடமாக தேர்தல் களம் மாற்றப்பட்டு விட்டது என்பதை இளைய தலைமுறையாவது உடனே இனங்காண வேண்டும். தவறினால், தமிழகத்தில் ஜனநாயகப் பாதையே தகர்ந்து விடும்.

காங்கிரஸ், பி.ஜே.பி., தி.மு.க., அ.தி.மு.க. போன்ற தேசிய, மாநிலக் கட்சிகளுக்குத் தேர்தலில் கோடி கோடியாகச் செலவழிப்பதற்குப் பணம் எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை. சந்திரமதியின் கழுத்தில் தொங்கிய தாலி அரிச்சந்திரன் கண்களுக்கு மட்டுமே தெரிந்தது போல், இந்தக் கட்சிகளுக்குப் பணம் வந்து சேரும் வழி அவற்றின்

தலைவர்களுக்கு மட்டுமே தெரியும் போலும். அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு நடந்த முதல் தேர்தலில், முதன் முதலில் வாக்களித்தவர்கள் இமாசலப் பிரதேசத்தில் உள்ள கிநெளர், சம்பா, லாஹௌல், ஸ்பிட்டி பகுதிகளில் வாழ்ந்தவர்களே. நாடு முழுவதும் 1952-ல் முதல் பொதுத் தேர்தல் நடந்தது. ஆனால், இமாசலப் பிரதேசத்தின் பனிமூடிய பகுதிகளில் குளிரின் கொடுமை கூடுவதற்கு முன்பே 1951 அக்டோபரில் தேர்தல் நடத்தப்பட்டது. ஒழுங்கான சாலைகள் இல்லாத காலத்தில், வாக்குப் பெட்டிகள் குதிரைகளின் முதுகிலேற்றப்பட்டு வாக்குச் சாவடிகளுக்குக் கொண்டு வரப்பட்ட நேரத்தில்,30 கிலோமீட்டர் தூரத்தில் இருந்தெல்லாம் மக்கள் துயரங்களைக் கடந்து வந்து, காசு வாங்காமல் வாக்களித்துத் தங்கள் ஜனநாயகக் கடமையை மகிழ்ச்சி யுடன் நிறைவேற்றினர். அந்த ஆரம்ப தருணம் மீண்டும் எப்போது முழுமையாகத் திரும்பும்?

நோபல் பரிசுபெற்ற 'உண்மையான பொருளாதார மேதை' அமர்த்தியா சென் ஜனநாயகம் செழிக்க மூன்று

வழிகளைப் பரிந்துரை செய்கிறார். 1. பன்மை சமூகத்தின் இருப்பை உணர்ந்து பொதுவாழ்வில் பலதரப்பட்ட கருத்துகளுக்கும், சிந்தனைகளுக்கும் உரிய முக்கியத்துவம் வழங்க வேண்டும்; எதிர் கருத்துகளை வரவேற்கும் சகிப்புத்தன்மை வளர வேண்டும். 2. பொதுநலன் சார்ந்த பிரச்னைகள் மீது மக்கள் விரிவாகவும், வெளிப்படையாகவும் விவாதிக்க வேண்டும். 3. சமூக மாற்றத்தை மனதில் நிறுத்தி மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் முழுமையான அர்ப்பணிப்புடன் ஈடுபட வேண்டும். 'ஜனநாயக மலர்ச்சிக்கு முக்கியமானவை பள்ளிக் கல்வி, அடிப்படை சுகாதார வசதி, நிலச் சீர்திருத்தம், சிறிய அளவில் கடன் உதவி, சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு, மனித உரிமைகளின் மேம்பாடு. இவை அனைவருக்கும் சென்று சேரும் வழியை ஆளும் அரசும், அரசியல் தலைவர்களும் விரைந்து உருவாக்க வேண்டும்' என்கிறார் சென். அறுபதாண்டு உறக்கத்துக்குப் பின்பு சோம்பல் முறித்து இப்போதுதான் மன்மோகன் சிங் அரசு கல்வி பெறுவதை

அடிப்படை உரிமையாக அறிவித்திருக்கிறது. மற்றவற்றில் கவனம் செலுத்த இன்னும் பல மாமாங்க காலம் நாம் காத்திருக்க வேண்டும். அமர்த்தியா சென் ஏழை மக்களுக்குப் பரவலாகச் சிறுகடன் வசதி செய்து தரப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறாரே தவிர, இலவசத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்லவில்லை. கலைஞர் அரசு இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு பக்கம் அம்பானிகளும், மறுபக்கம் அரை நிர்வாணிகளும் நீடிக்கும் இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயகம் தோற்று விட்டது என்பது யாராலும் மறுக்கப்பட முடியாத உண்மை. யானை கொழுத்தால் தன் தலையில் தானே மண்ணைத் தூவிக் கொள்ளும். ஆனால், அரசியல் கட்சிகள் கொழுத்தால் அப்பாவி மக்கள் மீதுதான் மண்ணை அள்ளிக் கொட்டும். 'பறவைகள் வரலாம், போகலாம். மகாவிருட்சம் மட்டும் சாய்ந்துவிடக் கூடாது' என்றார் கண்ணதாசன். கட்சிகள் வரலாம், போகலாம். ஜனநாயகம் மட்டும் அழிந்து விடலாகாது. பணத்துக்காக

வாக்களிக்கும் 'பண்பாடு' தொடர்ந்தால், பாடுபட்டுப் பெற்ற ஜனநாயகம் படுகுழியில் விழுந்து விடும். 'நீங்கள் செய்கிற தீர்ப்பின்படியே, நீங்களும் தீர்ப்புப் பெறுவீர்கள். அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்' என்பது பைபிளின் பொன்மொழி!

– பயணம் தொடரும்–

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

## பேரவை 25...

நாடாளுமன்றம், சட்ட மன்றம் என்ற அடித் தளத்தின் மீதுதான் மக்களாட்சி என்ற மாளிகை எழுந்து நிற்கிறது. ஜனநாயகப் பேரவைகளின் செயல்முறையைச் சார்ந்துதான் குடியாட்சியின் பெருமையும், சிறுமையும் அமைகின்றன. பேரவை நடக்கும் இடங்கள் வெறும் கட்டடங்கள் இல்லை. அவை ஜனநாயக தேவதை

கொலுவிருக்கும் கோயில்கள். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் நாட்டு மக்களின் விதியை நிர்ணயிக்கும் நவீன பிரம்மாக்கள். இந்த நவீன பிரம்மாக்களை உருவாக்கும் மூல முழு முதற் பரம்பொருள் நாம் என்பதை உணராத பாமர வாக்காளர்கள் உள்ள வரை, ஜனநாயகக் கோயிலின் அர்ச்சகர்கள் ஊழல் கற்பூரம் ஏற்றி, அதிகார துஷ்பிரயோக தேவதைக்கு வழிபாடு நடத்துவதை எந்த சக்தியாலும் நிறுத்திவிட முடியாது!




மத்திய அமைச்சரவை நாடாளுமன்றத்துக்கும், மாநில

அமைச்சரவை சட்டமன்றத்துக்கும் பொறுப்பாக இயங்க வேண்டும் என்பது அரசமைப்புச் சட்டத்தின் விதி. நாடாளுமன்ற, சட்டமன்ற நம்பிக்கையின் அடிப்படையில்

தான் மத்திய, மாநில அரசுகள் செயற்பட முடியும். பேரவை நம்பிக்கையை இழக்கும் நிலையில், அமைச்சரவை நீடிக்க இயலாது. ஆட்சியதிகாரத்தில் உள்ள அமைச்சரவையைக் கண்காணிக்கும் உயர் அதிகாரம் மத்தியில் நாடாளு

மன்றத்துக்கும், மாநிலத்தில் சட்டமன்றத்துக்கும்தான் உள்ளது. இந்த உயர் அதிகாரத்தை ஜனநாயக நடைமுறை மூலம் பெற்றிருக்கும் நம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் சமீப காலச் செயற்பாடுகள் மகிழ்ச்சி தரக்கூடியனவாக இல்லை. நாடாளுமன்ற, சட்டமன்ற மரபுகள், நாளுக்கு நாள் சரிந்து வருகின்றன.

'நாடாளுமன்றத்தின் தந்தை' என்று நேருவால் வருணிக்கப்பட்டவர் ஜி.வி.மல்லாங்கர். நாடாளுமன்றத்தின் மேன்மை மிகு மரபுகளுக்கு வடிவம் கொடுத்த மாமனிதர் இந்த மல்லாங்கர். இவர்தான் சுதந்திர இந்தியாவின் முதல்

நாடாளுமன்றத்தின் முதல் சபாநாயகர்.

இந்திய மண்ணின் பாரம்பரியத்துக்கேற்ப நாடாளுமன்ற விதிகளையும், மரபுகளையும் உருவாக்கிய மல்லாங்கரே இன்றளவும் ஒரு சிறந்த சபாநாயகரின் முன் மாதிரியாக இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் இடம் பெற்றவர். குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த இவர் காந்தி, படேல் ஆகியோருடன் விடுதலை வேள்வியில் இணைந்து ஈடுபட்டவர்;

அதிகாரப் பரவலையும், பஞ்சாயத்து ராஜ்யத்தையும் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தியவர். வழக்கறிஞர் தொழிலின் சிகரம் கண்டவர். 1937-ல் முதல் முறையாக பம்பாய் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோதே, சபாநாயகராகத் தேர்வு செய்யப்பட்ட பெருமைக்குரியவர் மல்லாங்கர். 1946 வரை பம்பாய் சட்டப்பேரவைத் தலைவராக இருந்தவர், அதன்பின் மத்திய சட்டப் பேரவை சபாநாயகராகப் பணியாற்றினார். இடைக்கால நாடாளுமன்ற சபாநாயகராக விளங்கிய மல்லாங்கர், அரசமைப்புச் சட்டம் அரங்கேறிய

பின்பு மே 15, 1952 அன்று முதல் நாடாளுமன்றத்தின் முதல் சபாநாயகராகப் பொறுப்பேற்றார். நாடாளுமன்றத்தில் 'கேள்வி நேரம்' அவரால்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. பல நாடாளுமன்ற நிலைக் குழுக்கள் உருவாக அவரே காரணம்.

நாடாளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டதுதான் மத்திய அமைச்சரவை என்பதை ஒவ்வொரு நடவடிக்கையிலும் உணர்த்திய மல்லாங்கர், நேருவுக்கு முன்னால் ஒருபோதும் முதுகு வளைத்து நின்றதில்லை. மல்லாங்கரின் சட்ட அறிவும், நாடாளுமன்றத்தை அவர் நடத்திய விதமும்



நேருவுக்கு அவர் மீது தனி மரியாதையைத் தோற்றுவித்தது. சபாநாயகரின் நடுநிலையைக் காக்க விரும்பி காங்கிரஸிலிருந்து விலகி, அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களையும் சமமாக நடத்திய மல்லாங்கர் 1956-ல் மரணமடைந்தபோது, ஜனநாயகத்தின்

பாதுகாவலரை இழந்துவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்ணீர் சிந்தினர். மல்லாங்கரின் மறைவுக்குப் பின் அனந்தசயனம் ஐயங்கார் சபாநாயகர் நாற்காலியில் அமர்ந்தார். வழக்கறிஞர் தொழிலில் 60 ஆண்டுகள் கொடிகட்டிப் பறந்தவர் இவர். திருச்சானூரில் பிறந்த இந்த தெலுங்கர், சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், சென்னை சட்டக் கல்லூரியிலும் படித்தவர்; ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டவர். 'நடமாடும் சட்ட அகராதி' என்று புகழப்பட்டவர். தீண்டாமை ஒழிப்பு, தாழ்த்தப்பட்டோர் கோயில் பிரவேசம் என்று சமூக நிர்மாணத் திட்டங்களில் தீவிரமாகத் தன்னை இணைத்துக் கொண்டவர். மல்லாங்கரைப் போல் சபாநாயகர் பதவிக்குப் பெருமை சேர்த்தவர். தமிழக சட்டப்பேரவை வரலாற்றில் புலுசு சாம்பமூர்த்தி, சிவசண்முகம் பிள்ளை, கோபால மேனன், கிருஷ்ணாராவ், செல்லபாண்டியன், ஆதித்தனார், புலவர் கோவிந்தன் என்று வரிசையாக சபாநாயகர் நாற்காலியில் அமர்ந்தனர். புலவர் கோவிந்தனுக்குப் பின்பு பேரவை நடந்த விதங்களில் மாற்றம் தெரியத்

தொடங்கியது. 'அதிகாரம் என்பது போதை தரும் ஒரு பொருள். பருகப் பருக அது இனிக்கும். பழகப் பழக அதிலே சொக்கி விழாதவர்கள் மிகச் சிலரே ஆவர். அதிலும் ஆட்சி அதிகாரம் அதிகமான போதையைத் தரும். அதைப் பருகுவோர் பரமானந்தம் அடைந்து, பாதம் பூமியில் சரியாகவும் படியாதபடி தாண்டவமாடுவர். ஆளுங்கட்சியினர்க்கு அளவுக்கு மீறிய அதிகார போதை ஏறாமலிருக்க வேண்டுமானால், வலிவான, நேர்மையான, நியாயமான எதிர்க்கட்சி ஒன்று இருந்தே தீரவேண்டும்' என்ற அண்ணாவின் கருத்துரை அவருடைய தம்பிகளின் நினைவில் எந்தளவுக்குப் படிந்திருந்தது என்பதற்கு அவையில் நடந்த பல சம்பவங்களே சாட்சி! நாடாளுமன்ற நடைமுறைகளுக்கும், விதிகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்தவர் நேரு. நேருவின் செயலாளராக இருந்த எம்.ஓ.மத்தாய் மீது நாடாளுமன்றத்தில் ஓர் உரிமைப் பிரச்னை வந்தபோது நேரு, 'எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டு வந்த உரிமைப் பிரச்னையை, உரிமைக்குழுவுக்கு விடும்படி நான் சபாநாயகரை வேண்டிக் கொள்கிறேன்.

இந்த அவையின் உறுப்பினர்கள் கணிசமான எண்ணிக்கையில் எழுந்து நின்று ஒரு கோரிக்கையை எழுப்பினால், அதை ஆளுங்கட்சி தனது பெரும்பான்மை பலத்தைக் கொண்டு முறியடிப்பதில் எனக்குச் சிறிதும் உடன்பாடில்லை. அப்படிச் செய்தால், தவறை மூடி மறைக்க, ஆளுங்கட்சி முயல்வதாகத் தோன்றக்கூடும். அதுபோன்ற எண்ணம் எழுவதை நான் விரும்பவில்லை!' என்றார். இந்த ஜனநாயகப் பண்பு இன்று எத்தனை ஆளுங்கட்சித் தலைமையிடம் இருக்கிறது?

பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சி தோற்று, தொழிற்கட்சி வெற்றி பெற்றதும் டோனி பிளேர் பிரதமரானார். டோனி பிளேர் வயதில் இளையவர். பிரதமர் பொறுப்பில் இருந்து இறங்கிய ஜான் மேஜர் சில புத்தகங்களை மேற்கோள் காட்டி, 'இளைஞரான டோனி பிளேர் நாட்டின் நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்று தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு இந்தப் புத்தகங்களைப் படிக்க வேண்டும். என்றார். டோனி பிளேர் அனுபவமற்ற ஒரு கற்றுக்குட்டி என்று இடித்துரைக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ஜான்

மேஜர் பேசியபோது, ஆளுங்கட்சி வரிசையிலிருந்து எந்த எதிர்ப்புக்குரலும் எழவில்லை. மாறாத புன்முறுவலுடன் பதிலளித்த டோனி பிளேர், 'நான் பரிந்துரைக்கும் புத்தகத்தை ஜான் மேஜரும், அவருடைய கட்சியினரும் படித்துப் பார்த்தால், ஆட்சி நிர்வாகத்தை எப்படி நடத்தக்கூடாது என்பதை எளிதில் அறிந்து கொள்ள முடியும்' என்றார். அப்போது எதிர்க்கட்சி வரிசையிலிருந்து எந்த ஏளனக் குரலும் வரவில்லை. இந்த கருத்துச் சுதந்திரமும் பண்பாடும் இன்று நம் நாடாளுமன்றத்திலும், சட்டப் பேரவைகளிலும் முழுமையாக இருக்கிறதா?ஆரோக்கியமான ஆய்வுரைகளும், அறிவுபூர்வமான விவாதங்களும்தான் நாடாளுமன்ற ஜனநாயகத்தை நெறிப்படுத்தும். ஆனால், இன்று குறுக்கீடுகளும், பகைமை சார்ந்த பழிப்புரைகளும்தான் பெரும்பாலும் பேரவை நடவடிக்கைகளாகிவிட்டன. மக்கள் நலனை பாதிக்கும் பல பிரச்னைகள் அவைகளில் முழுமையாக விவாதிக்கப்படாமலே கூட்டத் தொடர்கள் முடிந்துவிடுகின்றன. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின்

முதல் நிதிநிலை அறிக்கை, உறுப்பினர்களின் கூச்சல் குழப்பம் காரணமாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படாமலேயே நிறைவேற்றப்பட்டது. விவாதத்துக்கு இடமில்லாமல் ஒரு நாட்டின் பட்ஜெட் நிறைவேறியதென்றால், இவ்வளவு 'சமூகப் பொறுப்பு உணர்வு' மிக்க உறுப்பினர்களைப் பெறுவதற்கு பாரத புத்திரர்கள் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும்!

நம்நாட்டில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மகுடம் சூடாத மன்னர்கள். ஏழை இந்தியர்களின் பிரதிநிதிகளாக வலம் வரும் அவர்களுக்குத்தான் எத்தனை வகையான சலுகைகள்! வி.ஐ.முனுசாமி என்ற உறுப்பினரால் அக்டோபர் 17, 1949-ல் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பாரத மக்கள் வறுமையில் வாடும்போது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிக சலுகைகளை அனுபவிப்பது தவறு. உறுப்பினர்களுக்கு வழங்கும் தினப்படியை 45 ரூபாயிலிருந்து 40 ரூபாயாகக் குறைக்க வேண்டும். 5 ரூபாய் ஒரு சிறிய தியாகமாக, நாட்டின் பொருளாதாரத்தை

உயர்த்த நாடாளுமன்றத்தின் சிறிய பங்களிப்பாக அமையட்டும் என்று முனுசாமி கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது. 1954-ம் ஆண்டு வரை 40 ரூபாய்தான் தினப்படியாகப் பெறப்பட்டது. ஆனால், இன்று என்ன நிலைமை?

ஒரு எம்.பி-க்கு மாத ஊதியம் 12 ஆயிரம் ரூபாய். தொகுதிக்கான படி 10 ஆயிரம் ரூபாய். அலுவலகச் செலவுக்கு 14 ஆயிரம் ரூபாய். பயணப் படி 48 ஆயிரம் ரூபாய். அவை நடக்கும்போது தினப்படி 500 ரூபாய். குளிரூட்டப்பட்ட முதல்வகுப்புப் பெட்டியில் இந்தியா முழுவதும் ரயிலில் இலவசப் பயணம். சிறப்பு வகுப்பில் ஆண்டுக்கு 40 முறை இலவச விமானப் பயணம். டெல்லியில் தங்கும் வசதி இலவசம். 50 ஆயிரம் யூனிட் மின்சாரம், 1 லட்சத்து 70 ஆயிரம் தொலைபேசி அழைப்புகள் இலவசம். ஒரு எம்.பி-க்கு ஓராண்டில் அரசுப் பணம் 32 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. 5 ஆண்டுகளில் 1 கோடியே 60 லட்ச ரூபாய் ஒரு எம்.பி-க்கு ஏழை இந்தியப் பணம் போய் சேருகிறது. இதற்குக் கைம்மாறாக அவர்

ஆற்றும் கடமை என்ன என்பதுதான் கேள்விக்குரியது.

தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் 1964-ல் வெறும் 250 ரூபாய் மாத ஊதியம் பெற்றார்கள். தொலைபேசிக்கான படி 300 ரூபாய் வழங்கப்பட்டது. 1982-ம் ஆண்டில்தான் எம்.ஜி.ஆர் அரசு, அடிப்படை ஊதியத்தை 300 ரூபாயாகவும், தொலைபேசிக்கான படியை 350 ரூபாயாகவும் உயர்த்தியது.

இன்று ஒரு எம்.எல்.ஏ-வின் அடிப்படை ஊதியம் 8 ஆயிரம் ரூபாய். பல்வேறு படிகள் 42 ஆயிரம் ரூபாய். ஆக 50 ஆயிரம் ரூபாய் மக்கள் வரிப்பணத்தில் மாதம் தோறும் ஒரு எம்.எல்.ஏ. பெறுவதற்கு கலைஞரின் கருணை மிக்க அரசு ஏற்பாடு செய்துவிட்டது. இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலத்துக்கு அடுத்து நம் தமிழகத்தில்தான் எம்.எல்.ஏ., அதிக ஊதியம் பெறுகிறார். 1998 வரை எம்.எல்.ஏ-வின் வருவாய் 10 ஆயிரம் ரூபாயைத் தாண்டவில்லை. மூன்றாண்டுகளில் 5 முறை ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், நம் எம்.எல்.ஏ-க்களின் கோரிக்கைகள் நீண்டுகொண்டே போகின்றன. 100 எம்.எல்.ஏ-க்களுக்கு மேல் சேர்ந்து அரசிடம் ஆளுக்கு 2.5 கிரவுண்ட்

நிலம் சோழிங்கநல்லூரில் ஒதுக்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றனர். சோழிங்கநல்லூரில் ஒரு கிரவுண்ட் நிலம் 50 லட்சம் ரூபாய்க்கு மேல் விலை போகிறது. 1 கோடியே 25 லட்சம் மதிப்புக்கு விலை கொடுத்து வாங்கும் வசதியோடு பல எம்.எல்.ஏ-க்கள் இருந்தால், அது மிகப் பாராட்டுக்குரியதுதானே! ஏழைகளுக்குப் பிரநிதிகளாக ஏழைகளே இருக்க வேண்டும் என்பது என்ன நியாயம்?

சிறுபான்மை அரசைத் தக்கவைத்துக்கொள்ள நரசிம்மராவ் பிரதமராகப் பதவி வகித்தபோது தொகுதி மேம்பாட்டு நிதியாக ஒவ்வொரு எம்.பிக்கும் ஆண்டுக்கு 1 கோடி ரூபாய் ஒதுக்கினார். 1998 முதல் அது 2.5 கோடியாக உயர்த்தப்பட்டது. 5 கோடியாக அது மேலும் உயர்த்தப்பட வேண்டும் என்று எம்.பி-க்கள் கோரிக்கை வைத் துள்ளனர். இந்த நிதி ஒதுக்கீடு 'ஜனநாயக மூச்சுக் காற்றை முற்றாக நிறுத்திவிடும்' என்றார் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த வெங்கடாச்சலய்யா. ஜனநாயக நடைமுறையுள்ள எந்த நாட்டிலும் இதுபோன்ற நிதி ஒதுக்கீடு இல்லை. ஆள்பவரைக் கண்காணிக்க, நிதியை

ஒதுக்க, ஒதுக்கிய நிதி சரியாகச் செலவழிக்கப்படு கிறதா என்று ஆய்வு செய்யத்தான் எம்.பி-க்களும், எம்.எல்.ஏ-க்களும் மக்களால் தேர்வு செய்யப்படுகின்றனர்.

மத்திய அரசின் திட்டக்குழு 100 எம்.பி-க்களின் தொகுதிகளில் ஆய்வு செய்தபோது செலவுக்கான முறையான பதிவேடுகள் காணப்படவில்லை. 2000 ஆண்டு வரை 854 கோடி செலவுக்குக் கணக்கில்லை. 1797 கோடி செலவு செய்யப்படாத நிலையில் மத்திய அரசுக்கும் திரும்பவில்லை. எங்கே போனது அந்தப் பணம்? தொகுதி மக்களுக்குத் தொண்டு செய்வதும், அவர்களுடைய நலனைப் பேணிப் பாதுகாப்பதும், அவையின் மாண்புக்கு மாசு நேராமல் நடந்து கொள்வதும் பேரவை உறுப்பினரின் பெருங்கடமைகளாகும். 1951-ல் மக்களவை உறுப்பினர் முட்கல் என்பவர் கேள்வி கேட்பதற்குக் கையூட்டுப் பெற்றார் என்று நிரூபிக்கப்பட்டு, வெளியேற்றப்பட்டார். 2005-ல் பத்து மக்களவை உறுப்பினர்கள் பணம் பெற்றுக் கேள்வி கேட்டதற்காகப் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். கேள்வி கேட்கக் கையூட்டு பெறுபவர்களும், கிரிமினல்

வழக்குகளில் சிக்கியவர்களும் நம் பிரநிதிகள் பட்டியலில் இடம்பெற்று இருக்கும் வரை நாடாளுமன்ற ஜனநாயகம் குறித்து எந்த வகையில் நாம் பெருமைப்பட முடியும்?

- பயணம் தொடரும்-

## எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

## அபூர்வம்...

26

'நாமெல்லாம் ஒரு வகையில் திருடர்கள். என் அவசியத்துக்கு மேற்பட்ட ஒன்றை நான் எடுத்து... பத்திரப்படுத்தினால், அதை நான் திருடியவனே ஆவேன். மக்கள் அனைவருக்கும் வேண்டியதை இயற்கை அன்னை அளிக்கிறாள். அவனவனுக்கு வேண் டியதை மட்டும் பயன்படுத்தினால், பிச்சை எடுப்பவர்கள் இருக்கவே இயலாது. பசியால் யாரும் சாக நேரிடும் கொடுமை

நிகழாது. இந்தியாவில் இன்று ஒருவேளை உண்பவர்களே அதிகம். அந்த ஒருவேளை உணவிலும் நெய்யுமில்லை எண்ணெயுமில்லை. இந்த ஏழைகள் பசியாற உண்டு, மானம் காக்க உடையும் அடைந்த பின்பே, நீங்களும் நானும் எதையும் நமது என்று உரிமை பாராட்ட முடியும். நமது ஆசைகளைக் குறைத்துக் கொண்டு ஏதுமற்ற ஏழைகளுக்கு ஓரளவு கிடைக்கும்படி செய்வது நம் முதற் கடமை!' என்றார் மகாத்மா.




போதும் என்ற நிறைவில்லாமல் தவறான வழியில் அள்ளிக் குவிக்கும் இன்றைய அரசியல்வாதிகளில் ஜெயப்பிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய், ஜீவானந்தம், கக்கன் போன்ற மனிதர்களை நம்மால் காண முடிவதில்லை. பொது வாழ்வின் புனிதம் காத்த இவர்களைப் போன்ற

பெருமக்களின் பட்டியல் மிக நீளமானது. இதிகாசங்களைப் படிப்பதைவிட, நம் இளைய சமூகம் இவர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தேடிப் படிக்க வேண்டும்.

காந்தி, நேரு, பட்டேல் போன்றவர்கள் இங்கிலாந்தில் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றவர்கள். ஆனால், தாய் மண்ணை அடிமைப்படுத்திய இங்கிலாந்தில் அடியெடுத்து வைக்க விரும்பாத ஜெயப்பிரகாஷ் நாராயண் அமெரிக்காவில் மேற்படிப்பைத் தொடர்ந்தார். கலி.ஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்த ஜெ.பி., கல்விச் செலவை ஈடுகட்ட ஒரு நாளில் பத்துமணி நேரம் கடுமையாக உழைத்தார். உணவு விடுதிகளில் எச்சில் தட்டைக் கழுவுதல், ஆரஞ்சுப் பழங்களில் அழுகியவற்றை அகற்றுதல், கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்துதல், பூட்ஸுக்கு 'பாலீஷ்' போடுதல் என்று பல பணிகளைச் செய்து, அமெரிக்காவில் ஏழாண்டுகள் தங்கி, 5 பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர் ஜெ.பி! இளமையில் ஓர் ஆணழகனாகத் திகழ்ந்தவரை... பல அழகிய பெண்கள் தங்கள் வலையில் வீழ்த்த முயன்று தோற்றனர். மகாத்மாவின் கட்டளைப்படி

தன்னுடைய காதல் மனைவி பிரபாவதியிடம் இறுதிவரை பிரமச்சரியம் கடைப்பிடித்த பீஷ்மர் ஜெ.பி.


இரண்டாம் உலகப்போரில் பிரிட்டனுக்கு இந்தியா உதவக்கூடாது என்று நாடு முழுவதும் பிரசாரம் செய்த ஜெ.பி., தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். 'ஜெ.பி. ஓர் அற்புதமானபோராளி. நாட்டு நலனுக்காக

அனைத்தையும் துறந்தவர். அவருடைய உழைப்பு ஓய்வறியாதது. துன்பங்களை சகித்துக் கொள்வதில் அவர் இணையற்றவர்' என்று மகாத்மா மனம் நெகிழ்ந்து புகழ்ந்தார். ஆகஸ்ட் புரட்சி யின்போது ஹசாரிபாக் சிறையில் வைக்கப்பட்ட ஜெ.பி. 17 அடி சிறைச் சுவரைத் தாண்டி, தன் தோழர்களுடன் தப்பினார். லோகியாவுடன் சேர்ந்து நேபாளத்தில் புரட்சிப் படையை உருவாக்க முயன்றார். கைகளில் விலங்கு பூட்டப்பட்டு லாகூர் கோட்டையில் இருட்டறையில் தனிமைச் சிறையில் வாடிய ஜெ.பி. பனிக்கட்டியின் மீது படுக்க வைக்கப்பட்டார். லாகூர், ஆக்ரா சிறையில் அவர் அடைந்த

இன்னல்களை இன்றைய அரசியல் 'தியாகிகள்' கற்பனை செய்து பார்க்கவும் இயலாது.

நாடு விடுதலை பெற்ற பின்பு நேருவின் அமைச் சரவையில் ஜெ.பி. இடம் பெற வேண்டும் என்று மவுண்ட்பேட்டன் விரும்பியபோதும், நேருவே மீண்டும் மீண்டும் வற்புறுத்தியபோதும் அதிகார பீடத்தில் அமர அவர் ஆசைப்படவில்லை. காங்கிரஸ் தலைவராக அவர் பொறுப்பேற்க மகாத்மா மனம் விரும்பி அழைப்பு விடுத்தபோதும் அவர் இணங்கவில்லை. 'இந்தியாவின் விதியை ஒரு நாள் ஜெ.பி. எழுதுவார்' என்று வானொலி உரையில் நேரு குறிப்பிட்டார். ஆனால், நாட்டின் குடியரசுத் தலைவர் பொறுப்பு தேடிவந்தபோதும் ஜெ.பி. அதை ஏற்க மறுத்தார். 'நேருவுக்குப் பின் யார்?' என்ற புத்தகத்தை எழுதிய மைக்கேல் பிரெச்சர் ஜெ.பி-யைக் கை காட்டினார். ஆனால், காந்திய வழியில் கடைசிவரை அதிகாரம் சார்ந்த எந்தப் பதவியிலும் அமரவில்லை அந்த அரிய மனிதர். ஒழுக்கமும் நேர்மையும் இந்திய அரசியலிலிருந்து விடைபெற்றதைக் கண்டு இதயம் ரணப்பட்ட ஜெ.பி.,

ஊழலுக்கு எதிராகப் பொங்கி எழுந்தார். முழுமைப் புரட்சிக்காக இளைஞர்களிடம் முழங்கினார். 'லோக்நாயக்' ஜெ.பி-யின் குரலுக்குக் கிடைத்த மரியாதையின் உடனடி விளைவுதான் ஜனதா கட்சி ஆட்சி. ஆனால், ஜெ.பி-யின் லட்சியக் கனவுகள் நனவாகவில்லை. மகாத்மாவைப் போல் மனமுடைந்த மனிதராக அக்டோபர் 8, 1979 அன்று மரணமடைந்த அரசியல் ஆசைகளற்ற, ஒரு செப்புக் காசிலும் நாட்டம் செலுத்தாத ஜெ.பி-யை நெஞ்சில் நிறுத்திப் பொது வாழ்வில் படிந்து கிடக்கும் அழுக்குகளை அகற்ற இனியாவது இளைஞர்கள் புறப்பட வேண்டாமா?


மொரார்ஜி தேசாய்


ஜீவானந்தம்

நேர்மையின் வடிவமாக நெறி தவறாத பொதுவாழ்வை ஒரு தவம் போல் நடத்தியவர் மொரார்ஜி தேசாய். பிரிக்கப்படாத பழைய பம்பாய் மாநிலத்தின் முதல்வராக தேசாய் இருந்தபோது, அவருடைய அன்பு மகள் இந்து, மருத்துவக் கல்லூரியில் இறுதித் தேர்வு எழுதி முடித்தாள். முதல் வகுப்பில் தேர்ச்சி பெறும் தகுதி மிக்க

இந்து, தேர்வில் தவறிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இதை நம்ப மறுத்த சக மாணவிகள் இந்துவை தேர்வுத் தாளின் மறுமதிப்பீட்டுக்கு விண்ணப் பிக்கும்படி வற்புறுத்தினர். ஆனால், தேசாய் அதை அனுமதிக்கவில்லை. 'மறுமதிப்பீடு செய்து, தாளைத் திருத்திய ஆசிரியரின் தவறு கண்டுபிடிக்கப்பட்டு, உரிய மதிப்பெண்களைப் பெற்று... உன் தகுதி காரணமாகவே நீ தேர்ச்சி அடைந்தாலும், முதல்வராக உள்ள நான் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக சமூகம் அர்த்தப்படுத்திப் பழிதூற்றும். இந்த முயற்சியைக் கைவிட்டு அடுத்து வரும் தேர்வுக்கு உன்னை ஆயத்தம் செய்வதுதான் சரியானது' என்று தேசாய் சொன்னதும், மனமுடைந்த இந்து தற்கொலை செய்து கொண்டார். கீதையின் பாதையில் வாழ்க்கையை வகுத்துக் கொண்ட மொரார்ஜி மகளின் இழப்பை மௌனமாகத் தாங்கிக் கொண் டார்.

குஜராத் மாநிலத்தை உள்ளடக்கிய பம்பாய் மாகாணத்தின் முதல்வராகவும், இந்தியாவின் நிதி மந்திரியாகவும், பிரதமராகவும் பணியாற்றிய மொரார்ஜி, தன் நெடிய

வாழ்வின் இறுதி நாட்களில் பலர் வாழும் அடுக்கு மாடிக் குடியிருப்பில் ஒரு வாடகை வீட்டில் வசித்தார். வீட்டின் உரிமையாளர் தொடுத்த வழக்கில் நீதிமன்றம் தேசாயின் குடும்பம் வெளியேற வேண்டும் என்று தீர்ப்புரைத்தது. அதிர்ச்சியிலும் அவமானத்திலும் உறைந்து போன மொரார்ஜியின் மருமகள் மனநிலை பாதிக்கப்பட்டு மாடியிலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்துகொண்டார். இந்திய பிரதமராக இருந்தவருக்கு சொந்த வீடில்லை என்பது இதிகாசச் செய்தி அன்று. நம் கண்முன்னே கண்ட நிஜம். ஆனால், தமிழ்நாட்டு மேடைகளில் 'மொரார்ஜி மில்' தேசாய்க்குச் சொந்தம் என்று பொய்யைக் கடை விரித்தவர்கள், இன்று ஆலை அதிபர்களாக, சோலை மிராசுகளாக சொர்க்க வாழ்வு வாழ்கின்றனர். 'பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே' என்று நம் மூதாதையர்கள் சும்மாவா சொன்னார்கள்!

'நீங்கள் என்னிடம் ஆத்திகனை ஆதரிக்கிறீர்களா... நாத்திகனை ஆதரிக்கிறீர்களா? என்று கேட்டால், நமது

கொள்கைப்படி நான் நாத்திகனைத்தான் ஆதரிப்பேன். நாத்திகன் அயோக்கியனாகவும், ஆத்திகன் யோக்கியவனாகவும் வாழும் நிலையில் இருவரில் யாரை ஆதரிப்பீர்கள் என்றால், யோக்கியனாக வாழும் ஆத்திகனைத்தான் ஆதரிப்பேன். ஏனென்றால், அயோக்கியமான வாழ்க்கை நடத்தும் நாத்திகனுக்கு மக்களிடம் பேசும் யோக்கியதை ஏது?' என்று எரிமலையாக முழங்கியவர் தோழர் ப.ஜீவானந்தம். நாஞ்சில் நாட்டில் பூதப்பாண்டியில் பிறந்த ஜீவா, பள்ளிப்பருவத்தில் கடவுள் பக்தராகத் திகழ்ந்தவர்; திருநீறணிந்து பஜனைப் பாடல் பாடியவர், 'சாதி மதங்களைப் பாரோம்' என்ற பாரதியை ஆதர்சமாக நெஞ்சில் நேர்ந்து கொண்டவர். காந்தியத்தில் ஈடுபட்டுக் கதர் மட்டுமே அணிந்தவர்; தன் அன்னை கண்மூடியபோது மல்துணி அணிந்து கொள்ளி போட மறுத்தவர். காரைக்குடிக்குப் பக்கத்தில் சிராவயலில் காந்தி ஆசிரமம் கண்டவர். காந்தியால் 'இந்தியாவின் சொத்து' என்று புகழப்பட்டவர்.

காந்தியின் வருணாசிரமக் கொள்கையை மறுதலித்துப்

பெரியாரின் பாசறைக்கு வந்த ஜீவா, சுயமரியாதை இயக்கத்தின் திருத்துறைப்பூண்டி மாநாட்டில் பெரியார் சமதர்மப் போர்க்கோலம் பூணவேண்டுமென்று கோரிக்கை வைத்தார். 'என்னைவிட வேகமாகச் செயற்பட விரும்புபவர்கள் என்னைவிட்டுப் போகலாம்' என்று பெரியார் பேசியதும் ஜீவா சமதர்ம சுயமரியாதை இயக்கத்தை உருவாக்கினார். இறுதியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இரண்டறக் கலந்தவர், உரத்த குரலில் பேசிப் பேசியே உயிர் துறந்தார். 'எனக்குப் பேச்சு ஒரு தொழில் அல்ல; மேடைக் கலையும் அல்ல. அது என் வாழ்க்கைப் போராட்டம். நான் நம்பிய கொள்கையை விளக்கக் கிடைத்த சந்தர்ப்பம். மேடை ஒரு போர்க்களம். மேடைப் பேச்சு அலங்கார நடை பொழுதுபோக்கு சமாசாரம் அல்ல. அக்கினி நெஞ்சுக்குள் பற்றி எரிய வேண்டும். அது வாய்வழியாக ஆவேசப் பொறிகளாகக் கொட்ட வேண்டும்!' என்றவர் ஜீவா.

காரைக்குடி அழகப்பா கல்லூரியில் ஒரு முறை ஜீவா உணர்ச்சி பொங்க உரையாற்றியபோது அவர் காலில்

இருந்த ரத்தக்கட்டி வெடித்துக் கசிந்த ரத்தத்தில் வேட்டி நனைந்தது. அதைக் கண்ட முதல்வர் மனம் பதறி, அவரை விருந்தினர் மாளிகையில் தங்கி மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும்படி வற்புறுத்தி னார். ஜீவா அங்கு தங்கியிருந்தபோது தமிழக முதலமைச்சர் குமாரசாமி ராஜா வந்து சேர்ந்தார். ஜீவாவைக் காண அவருடைய அறைக்கு வந்தவர், 'சுதந்திரத்துக்காக நாம் சேர்ந்து போராடினோம்; சேர்ந்து சிறை சென்றோம். சுதந்திரம் கிடைத்த பின்பு உங்கள் கொள்கையைத்தானே நேரு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். எத்தனை நாள் இப்படிப் பேசிக் கொண்டிருப்பீர்கள்? எங்களோடு நீங்கள் இருக்கக் கூடாதா? ஏன் ஜீவா ஆவியைக் கெடுத்துக் கொள்கிறீர்கள்?' என்று அன்பு ததும்ப முதல்வர் ராஜா கேட் டார். 'ஏழைகள் இருக்கும் வரை எங்கள் ஏழைக் கட்சியும் இருந்தாக வேண்டும். ஏழைகளுக்கு விடிவு வராமல் எனக்கு விடுதலை கிடையாது. பேசவேண்டியதுதான். பேசியபடியே சாக வேண்டியதுதான்!' என்று பதில் தந்தார் தொழிலாளர் தோழர் ஜீவா.


1952-ல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்றம் சென்ற ஜீவா, தான் தேர்ந்தெடுக்கப்பட்ட வண்ணாரப்பேட்டையில் விளிம்புநிலை மக்கள் வாழும் சேரிப் பகுதியில் மழைக்கு ஒழுகும் கூரை வீட்டில் தங்கி, தனக்கு வாக்களித்த மக்களுக்குப் பணியாற்றினார். தேர்தலுக்குத் தேர்தல் வாக்காளர்களை சந்திக்கும் அரசியல்வாதிகளிடையே ஜீவா ஓர் அபூர்வ மனிதர், 'ஏறினால் ரயில், இறங்கினால் ஜெயில்' என்ற வாழ்க்கையை விருப்பத்துடன் ஏற்றவர்; மாற்று வேட்டிக்கு வழியின்றி வாழ்ந்த உண்மையான கம்யூனிஸ்ட்; தாம்பரம் கஸ்தூரிபா நகரில் புறம்போக்கு நிலத்தில் தோழர்கள் கட்டிக் கொடுத்த கூரை வீட்டுக்கு மேல் எந்த சொத்தும் இல்லாமல் மரணத்தை சந்தித்த மக்கள் தலைவர். மாணிக்கத்தை மறுதலித்துவிட்டு, கூழாங்கற்களைக் கூடை நிறையக் குவித்துக் களிக்கும் தரங்கெட்ட தமிழினம், 1957-ல் நாகப்பட்டினத்திலும், 1962-ல் ராயபுரத்திலும் ஜீவாவைத் தோற்கடித்த பாவத்தைத் தழுவிக் கொண்டது. நேர்மை சார்ந்த நல்ல

தலைவர்களைப் புறக்கணிக்கும் பொதுபுத்தி ஜீவா காலம் முதல் தோழர் நல்லகண்ணு காலம் வரை தொடர்ந்து கொண்டே வருகிறது. தமிழர்க்கென்றுள்ள தனிக்குணம், பொய்யைத் தேடிப் பிடித்து மகுடம் சூட்டி மகிழ்வதுதான்.

## எங்கே போகிறோம் நாம் - 27

கக்கன்... காலம் முற்றாக மறந்துவிட்ட பெயர். மதுரை மேலூர் வட்டத்தில் தும்பைப்பட்டி என்ற சிற்றூரில் தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் கக்கன் பிறந்து நூறாண்டாகிறது. காமராஜரையே மறந்துவிட்ட காங்கிரஸ்காரர்கள் கக்கனையா நினைவில் நிறுத்திப் போற்றப் போகிறார்கள்? பனித்துளியை விடவும் பரிசுத்தமான மனிதர் கக்கன். பூசாரி கக்கன் என்ற தோட்டிக்கு மகனாகப் பிறந்து, வறுமையில் உழன்று, பெரும்பாடுகளுக்கிடையே பள்ளி இறுதிவகுப்பு வரை படித்து முடித்துப் பொதுவாழ்வில் ஈடுபட்ட புனிதர் அவர். சத்தியமூர்த்தி காமராஜரை தழுவிக்கொண்டது போல், மதுரை வைத்தியநாத ஐயர் கக்கனை வளர்ப்பு

மகனாக அரவணைத்துக் கொண்டார். மாசுமருவற்ற தோழர் ஜீவாவின் தலைமையில்தான் கக்கனின் திருமணம் நடந்தது. காந்தி 1934-ல் மதுரை வந்தபோது அவருக்குத் தொண்டாற்றும் வாய்ப்பு கக்கனுக்கு வந்து சேர்ந்தது. காங்கிரஸ் நடத்திய போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்ற கக்கன் 1942 ஆகஸ்ட் புரட்சியின்போது மேலூர் காவல் நிலை யத்தில் சிறை வைக்கப்பட்டு 5 நாட்கள் கடுமையான கசையடிக்குள்ளானார். சுயநினைவு இழந்தவரை குதிரை வண்டியில் பாதம் வைக்கும் இடத்தில் கிடத்தி, தலையும் கால்களும் தொங்கிய நிலையில் இழுத்துச் சென்றதைப் பார்த்தவர்கள் விழிநீர் சிந்தினர்.



கக்கன்



ஜெயப்பிரகாஷ் நாராயண்

காமராஜருக்கு உண்மையும், நேர்மையும், எளிமையும் நிறைந்த கக்கனிடம் பெருமதிப்பிருந்தது. தான் முதலமைச் சராக ராஜாஜிக்கு பின் பொறுப்பேற்றதும், காமராஜர் கக்கனைத் தமிழ்நாடு காங்கிரஸின்

தலைவராக்கினார். தமிழ்நாடு காங்கிரஸின் தலைவராகப் பணியாற்றிய தாழ்த்தப்பட்ட இனத்தின் முதல் மனிதர் கக்கன். 1957-ல் காமராஜர் மீண்டும் முதல்வரானதும் கக்கனுக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்தார். தமிழகத்தில் 10 ஆண்டுகள் தொடர்ந்து அமைச்சராக இருந்த கக்கன் பொதுப்பணி, உள்துறை, விவசாயம், உணவு, மதுவிலக்கு, அரிசன நலம், அறநிலையத்துறை போன்ற பல்வேறு இலாகாக்களை நிர்வகித்தார். இவருக்குப் பின் எந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அமைச்சரும் திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் உள்துறை, பொதுப் பணித்துறை போன்ற முக்கியமான இலாக்காக்களின் பொறுப்பை ஏற்றதில்லை.

பத்தாண்டுகள் மிக முக்கியத் துறைகளின் அமைச்சராக இருந்த கக்கன் 1967-தேர்தலில் தோற்ற பின்பு சொந்தக் கூரை கூட இல்லாத பரம ஏழையாகப் பேருந்தில் நின்றபடி பயணித்தார். விடுதலைப் போராட்டத் தியாகத்துக்காக அவருக்குத் தனியாமங்கலம் என்ற கிராமத்தில் தரப்பட்ட நிலத்தை, வினோபாவின்

நிலக்கொடை இயக்கத்திடம் ஒப்படைத்தார். முடக்கு நோயால் பாதிக்கப்பட்டவர் கோட்டக்கல் சித்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனையில் பணம் செலுத்த முடியாத நிலையில் நோய் தீராமலே அங்கிருந்து விடை பெற்றார். மதுரை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சாதாரண வகுப்பில் அவர் சிகிச்சை பெற்றபோது, மதுரை முத்துவை நலம் விசாரிக்க வந்த முதல்வர் எம்.ஜி.ஆர்., காளிமுத்துவின் மூலம் செய்தியறிந்து கக்கனை போய்ப் பார்த்தவர் அதிர்ந்து போனார். உடம்பில் ஒரு துண்டு மட்டும் போர்த்திக் கொண்டு, முக்கால் நிர்வாண நிலையில் இருந்த கக்கனைக் கண்டு கலங்கி நின்ற எம்.ஜி.ஆர். சிறப்பு வார்டுக்கு மாற்ற உத்தரவிட்டபோது, 'வேண்டாம்' என்று மறுத்து விட்டார். 'உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும்' என்று கேட்ட எம்.ஜி.ஆரிடம், 'நீங்கள் பார்க்க வந்ததே மகிழ்ச்சி' என்று கைகூப்பினார் கக்கன்.

மனிதப் புனிதர் கக்கன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும், தன் மனைவி சொர்ணம் தொடக்கப்பள்ளி

ஆசிரியையாகத் தொடர்ந்து பணியாற்றுவதையே விரும்பினார். வலிமை மிக்க, அமைச்சராக அவர் வலம் வந்தபோது தன் மகள் கஸ்தூரிபாயை மாநக ராட்சிப் பள்ளியில்தான் படிக்கச் செய்தார். தன் தம்பி விஸ்வநாதனுக்கு தாழ்த்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் லயோலா கல்லூரிக்கு அருகில் ஒரு கிரவுண்ட் மனையை ஒதுக்கீடு செய்து அரசாணையை அளித்த செய்தியறிந்த கக்கன், அந்த ஆணையை வாங்கிக் கிழித்தெறிந்தார். இன்று அந்த இடம் 50 லட்சத்துக்கு மேல் பெறும். எளிமையின் வடிவமாக நேர்மையின் விளக்கமாக நம்மிடையே வாழ்ந்து மறைந்த கக்கன் உடல் கண்ணம்மாபேட்டையில் டிசம்பர் 24, 1981 அன்று எரியூட்டப்பட்டது. அவருக்குத் தனியாக ஒரு சமாதி வைக்கவில்லை நாம். 'இன்று கக்கனை யார் நினைக்கிறார்கள்? அவர் செய்த ஒரே பாவம் தாழ்த்தப்பட்டோர் குலத்தில்... அதுவும் தோட்டி மகனாகப் பிறந்ததுதான். பார்த்தால் பாவம், தொட்டால் தீட்டு என்னும் வர்ணாசிரம அகராதியில் அவர் ஆழக் குழி

தோண்டிப் புதைக்கப்பட்டார். பத்தரை மாற்றுத் தங்கம் - புடம்போட்ட கக்கன்ஜியை விட உயர்ந்தவர்கள் தமிழகத்தில் இதுவரை எவருமில்லை. இனியும் பிறக்கப் போவதும் இல்லை. இது சத்தியம்!' என்று கக்கனின் தனிச் செயலராக நீண்ட நாள் பணியாற்றிய

கே.ஆர்.நடராஜன் குறிப்பிட்டிருப்பதில் ஒரு சொல்லும் உயர்வுநவிற்சி இல்லை.

ஜெ.பி-யும், தேசாயும், ஜீவாவும், கக்கனும் மனிதப் பண்பை பாழாக்கும் பணத்தை நாடவில்லை. பொதுவாழ்க்கையில் பணம் ஈட்டுவதைவிட, மோசமான பாவம் வேறேது மில்லை என்று நினைத்து வாழ்வையே புனிதமான வேள்வியாக நடத்திய அவர்கள் எல்லா வகையிலும் அபூர்வமானவர்கள். அடங்காத இன்ப நாட்டமும், தவறான பொருள் தேட்டமும் இன்றைய அரசியல் வாழ்வின் இரண்டு பக்கங்களாகிவிட்டன. 'கடவுள் செல்வத்தை உயர்ந்த பொருளாக மதித்திருந்தால், அதைப் பண்பற்ற இழிந்த மக்களிடம் கொடுத்திருக்கவே மாட்டார்' என்ற அறிஞர் ஸ்விஃப்டின் வாசகம் எவ்வளவு ஆழ்ந்த அர்த்தம்

உடையது!

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# தியாகம் 27

'புரட்சி என்பது மனிதகுலத்தின் பிரிக்க முடியாதஉரிமை. சுதந்திரம் என்பது அனைவரின் அழிக்க முடியாத பிறப்புரிமை. தொழிலாளர்கள் சமுதாயத்தைத் தாங்குபவர்கள். மக்கள் அதிகாரமே தொழிலாளர்களின் இறுதி இலக்கு. இந்தக் கொள்கைகளுக்காகவும், நம்பிக்கை களுக்காகவும் எங்களுக்கு வழங்கக்கூடிய தண்டனையின் மூலம் ஏற்படும் எத்தகைய துன்பத்தையும் நாங்கள் வரவேற்கவே செய்கிறோம். புரட்சியின் பலிபீடத்தில்

எங்களது இளமையைக் காணிக்கையாக்குகிறோம்!' என்று நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கி, தூக்குமேடை ஏறியவர் பகத்சிங். இந்திய அரசியல் களத்தில் சோஷலிஸத்தை முதலில் இனங்கண்ட பெருமை பகத்சிங் ஒருவருக்கே உண்டு. சமுதாயத்தில் வேரோடிக் கிடந்த வேற்றுமைகளைக் களைந்து, விவசாயிகள் - தொழிலாளர்களின் நலன் காக்கும் ஓர் லட்சிய அரசை அமைப்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. அரசியல் சுதந்திரத்துடன் பொருளாதார சமத்துவமும் அடைய வேண்டும் என்பது அவரது ஆசை.



சைமன் கமிஷன் எதிர்ப்பு ஊர்வலத் தில் பஞ்சாப் சிங்கம்

லஜபதிராய் போலீஸ் தடியடியால் படுகாயமுற்று மரணத்தைத் தழுவிய பின்பு, காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் என்பவனை சுட்டு வீழ்த் திய பகத்சிங்கும், தோழர்களும் பட்டப்பகலில் பழி தீர்த்து வெற்றிகரமாகத் தப்பினர். 'செவிடர்களைக் கேட்கச் செய்யவேண்டுமானால், பலத்த சத்தம் அவசியமாகிறது!' என்ற வாசகம் அச்சேறிய துண்டுப் பிரசுரங்களோடு நாடாளுமன்றத்தில் பார்வையாளர்கள் பகுதியில் இருந்து பகத்சிங்கும், பட்டுகேஸ்வர தத்தும் வெடிகுண்டுகளை வீசி 'ஏகாதிபத்தியம் ஒழிக! புரட்சி ஓங்குக!' என்ற முழக்கத்துடன் சிறையேகினர். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1931 மார்ச் 23 சோகம் செறிந்த ஒரு கறுப்பு நாள். அன்றுதான் 25 வயதுகூட நிரம்பாத பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூவரும் தூக்கில் தொங்கவிடப்பட்டனர். இறுதியாக பகத்சிங்கைச் சந்தித்த ஜெயதேவ் கபூர், 'சர்தார், நீ மரணப் பொழுதை நெருங்கிவிட்டாய். இதற்காக நீ கவலைப்படவில்லையா?' என்று கேட்டபோது, 'நான் புரட்சிப் பாதையில் முதலடி வைத்தபோதே என் உயிரை

அர்ப்பணித்துவிட்டேன். இன்குலாப் ஜிந்தா பாத் (புரட்சி ஓங்குக) என்ற முழக்கத்தை நாடு முழுவதும் பரவச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தேன். இன்று நான் சிறையில் இருந்தாலும், கோடிக்கணக்கான மக்கள் எழுப்பும் அந்த கோஷத்தை என்னால் கேட்க முடிகிறது. இந்த முழக்கம் சுதந்திரப் போரை ஊக்குவிக்கும் உந்து சக்தியாக இருந்து எதிரிகளைத் தாக்கித் தகர்க்கும். வாழ்க்கையில் இதைவிட வேறென்ன வேண்டும் எனக்கு?' என்றார் அந்த மாபெரும் புரட்சியாளர்.

பகத்சிங் தூக்குமேடை ஏறும்போது அங்கிருந்த வெள்ளைக்கார மாஜிஸ்ட்ரேட்டிடம், 'நீங்கள் மிகவும் கொடுத்து வைத்த மனிதர். இந்தியப் புரட்சியாளன் ஒருவன் தன் மகத்தான லட்சியத்துக்காக மலர்ந்த முகத்துடன் உயிரை அர்ப்பணிக்கும் காட்சியைக் காணும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது!' என்று பெருமிதத்துடன் சொன்னார். தூக்கிலிடப்படுவதற்கு முந்தைய இரவில் தன் தம்பி குல்வீருக்கு வரைந்த கடைசிக் கடிதத்தில், 'நாளை காலை மெழுகுதிரியின் ஒளி

மங்குவதுபோல் நானும் காலை ஒளியில் கரைந்து போவேன். ஆனால், நம் நம்பிக்கைகளும், குறிக்கோள்களும் உலகுக்கு என்றும் ஒளியூட்டும். இன்று போய் நாளை மீண்டும் பிறப்போம்... எண்ணற்ற இந்நாட்டின் வீரர்கள் வடிவில்' என்று பகத்சிங் குறிப்பிட்டார். பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் இளம் வயதில் சுதந்திர பலிபீடத்தில் இன்னுயிரை வழங்கியது இன்றைய அரசியல் சுண்டெலிகள் மக்கள் சொத்தை பலவிதங்களிலும் சுரண்டிக் கொழுக்கவா?

'அனைவருக்காகவும் விழிநீர் சிந்தாதவர்கள், அனைவரையும் இதயம் நெகிழ்ந்து நேசிக்காதவர்கள்... சுரண்டுபவர்க்கும், கொடுமைக்காரர்களுக்கும் எதிராகப் போராட மாட்டார்கள். வன்முறையும் அகிம்சையும் ஒரே ஓவியத்தின் இரண்டு பகுதிகள். அவை காலச் சூழலுக்கேற்ப மாறிக் கொண்டே இருக்கும். ஒரு சமயம் வன்முறையாகத் தோன்றுவது இன்னொரு



சமயம் அகிம்சையாகத் தோற்றம் தரும். இந்த இரண்டு அம்சங் களின் சேர்க்கையான சந்திரசேகர ஆசாத் எங்கள் எல்லோரையும் விட மிகச் சிறந்தவர்!' என்றார் பகத்சிங்கின் தோழர் சிவவர்மா.

மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தில் 14 வயதில் ஈடுபட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட சந்திர சேகரை நோக்கி நீதிபதி அவருடைய பெயரைக் கேட்ட போது 'ஆசாத்' (சுதந்திரம்) என்றார். தந்தை பெயர் 'சுதீன்' (சுதந்திரம்) என்றும், இருக்கும் வீடு 'சிறைச்சாலை' என்றும் கூறிய சந்திரசேகருக்கு 15 கசையடிகள் பரிசாகக் கிடைத்தன. 'ககோரி' ரயில் கொள்ளையில் ஈடுபட்டு வெள்ளையர் ஆட்சியை கதிகலங்கச் செய்த ஆசாத், கடைசி வரை காவல்துறையின் கைகளில் சிக்கவில்லை. குறி தவறாமல் சுடுவதில் நிபுணரான ஆசாத், பகத் சிங்கைக் காப்பாற்றுவதற்கு ஒரு போலீஸ்காரரைச் சுட்டு வீழ்த்தியதற்காகப் பல நாள் வருந்தி விழிநீர் சிந்தினார். 'மாமிசத் துண்டுகளைப் பார்க்கும்போது ஆட்டுக்குட்டியைக் கற்பனை செய்து கண்ணீர் விடும் மென்மையான மனம்

உடை யவர் ஆசாத்' என்கிறார் தோழர் சிவவர்மா.

ஆசாத் தன் அன்னையின் மீது அளப்பரிய பாசம் பூண்டவர். தாய்தான் அவருடைய உயிர். "தாய்ப்பாசம்தான் என் பெரிய பலவீனம். தாயின் நினைவு வருத்தும்போது நான் வீட்டுக்கு வருவேன் என்று எதிர்பார்த்துக் காவல்துறை கைது செய்யக் காத்திருக்கிறது. என் அன்னையின் நினைவு என்னுள்



ராஜகுரு, பகத்சிங், சுகதேவ்

எழும்போதெல்லாம் மண்ணில் முழங்காலிட்டு, தலையால் தரை தொட்டு, 'அம்மா! நான் உன்னை மறந்துவிட்டேன் என்று எப்போதும் எண்ணாதே. நான் என்ன செய்வேன் தாயே? உன்னருகில் வரமுடியாத என்னை நீ மன்னித்துவிடு' என்று கண்ணீர்விட்டு அழுவேன்" என்றவர் ஆசாத். பகத்சிங் படையின் தலைவராய்த் திகழ்ந்த ஆசாத், மாறுவேடம் புனைவதில் பேராற்றல் பெற்றவர். ஆறாண்டுகள் காவல்துறையின் கைகளில் சிக்காமல்

புரட்சி நெருப்பை வளர்த்த ஆசாத், அலகாபாத் ஆல்ஃபிரட் பூங்காவில் வீருபத்ர திவாரி என்ற துரோகியால் காட்டிக் கொடுக்கப்பட்டார். உடலில் 65 குண்டுகளைத் தாங்கி உயிர்விட்டார். சூளுரைத்தபடி கடைசி வரை காவல்துறையிடம் சிறைப்படாமல் வீரம் செறிந்த எதிர்ப்பைக் காட்டி மண்ணில் விழுந்து மரணத்தை முத்தமிட்ட மாபெரும் போராளி சந்திரசேகர ஆசாத்.அலுங்காமல் நலுங்காமல் அரசியல் செய்து, குடும்பம் குடும்பமாக அதிகாரப் பதவிகளைக் கூறுபோட்டு, 'வழியிலா வழியில்' கோடிகளைக் கொள்ளையடித்து 'ஆனந்தத் தாண்டவம்' ஆடி மகிழும் இன்றைய இந்திய அரசியல், அதிகார வர்க்க நலனுக்காகவா தன் உடலின் செங்குருதியால் அன்னை பூமியின் மண்ணைச் சிவக்க வைத்தார் சந்திரசேகர ஆசாத்?

பகத்சிங்கின் புரட்சித் தோழர்களில் ஒருவர் மகா வீர்சிங். பாரதத்தின் அடிமைத்தளையை அறுத்தெறிய 18 வயதில் ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்த மகாவீருக்கு மணமுடித்து வைக்க அவருடைய தந்தை

விரும்பியபோது, 'தேசநலன் கெட்டுக்கிடக்கும் நிலையில் தேக சுகத்தில் எப்படி மனம் ஈடுபட இயலும்? புரட்சியை மணந்தவனுக்கு வேறொரு திருமணம் தேவையில்லை!' என்றார் மகாவீர். 'உன்னை மகனாகப் பெற்ற நான் பாக்கியம் செய்தவன். நாட்டு சேவைக்காக நீ நேர்ந்து கொண்ட பாதை கடினமானது. எனினும், பின்னோக்கிப் பாராமல் முன்னோக்கிச் செல். எந்த நிலையிலும் உன் தோழர்களுக்குத் துரோகம் இழைக்காமல் இந்தக் கிழத் தந்தையின் பெயரைக் காப்பாற்று!' என்று மகனுக்குக் கடிதம் எழுதினார் தந்தை தேவிசிங். லாகூர் சதி வழக்கில் மகாவீர்சிங் ஆயுள்தண்டனை அடைந்து பெல்லாரி சிறைக்கு அனுப்பப்பட்டார். பெல்லாரி சிறையதிகாரியோ கொடுமையான மனநோயாளி. மகாவீர்சிங், அவரோடு சிறைப்பட்ட கயாபிரசாத் ஆகிய இருவர் முகங்களிலும் ஒவ்வொரு நாளும் 15 நிமிடம் சிறையதிகாரி குத்துச்சண்டை பழகுவான். இந்தக் கொடுமை ஒன்றரை ஆண்டு தொடர்ந்தது. ஒருநாள் வார்டர்கள் பிடியிலிருந்து திமிறி விடுபட்டு, பலம் கொண்ட மட்டும் ஓங்கி அதிகாரி

முகத்தில் குத்தினார் மகாவீர்.

கரும்பலகை வைக்கும் மரச்சட்டம் போன்றதொரு சட்டத்தில் முதுகு தெரியும்படி மகாவீர் பிணைக்கப் பட்டர். இரு கைகளும் விலங்குகளால் மேலே உயர்த்தி, சட்டத்தில் இணைக்கப்பட்டன. இரு கால்களும் அகல விரிக்கப்பட்டு, சட்டத்தின் கீழ்ப்பகுதியில் விலங்கிடப்பட்டன. உடலில் இடைப்பகுதி முரட்டுத் தோல் பெல்ட்டால் இறுக்கிக் கட்டப்பட்டது. நீரில் நனைக்கப்பட்ட பெரிய பிரம்பால் வார்டன் வலிமையாக வீசினான். மகாவீரின் தோலும் சதையும் உரிந்து விழுந்தன. ஒவ்வோர் அடிக்கும் 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்று ஓங்கிக் குரல் கொடுத்தார் அந்த உன்னதப் புரட்சியாளர். பச்சை ரத்தம் சிறைத் தரையை சிவப்பாக்கியது. 30 அடிக்குப் பின்னும் மகாவீர் நிலைகுலையவில்லை.

பெல்லாரியிலிருந்து அவர் அந்தமானுக்குக் கொண்டுவரப்பட்டார். அரசியல் கைதிகளின் அவலங்களை எதிர்த்து உண்ணா நோன்பிருந்த மகாவீரின் நெஞ்சில் கால் வைத்து அழுத்தி, அவருடைய மூக்கில் ஒரு ரப்பர்

குழாயை நுழைத்து பலவந்தமாக ஒரு படி நிறையப் பாலை எடுத்துச் சிறை மருத்துவர் ஊற்றினார். பால் நேராக மகாவீரின் வயிற்றுக்குள் போகாமல் சுவாசப் பையில் நிரம்பியது. தரையில் விழுந்த மீன்போல் துடித்த அந்தப் போராளியின் உயிர் மெள்ள அடங்கியது. அவருடைய உடல் ஆழ்கடலில் வீசியெறியப்பட்டது. 'உயிரைத் தராமல் யார் பெற்றார் சுதந்திரம்? உவகையுடன் அர்ப்பணிக்கிறேன் உயிரை என் அன்னை மண்ணுக்கு!' என்று அவர் தன் நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்தி ருந்த கவிதை மற்றவர் பார்வையில் அவர் மரித்த பின்பே பட்டது.

'அரசாங்கம் நாடு முழுவதிலிருந்தும் ஒளிவீசிமின்னும் வைரங்களைத் தேர்ந்தெடுத்து அந்தமான் தீவில் சேர்த் திருக்கிறது. அந்த வைரங்களுக்கு இடையில் இருக்கும் நல்வாய்ப்பு உனக்குக் கிடைத்ததை அறிந்து மனம் மகிழ்ச்சி கொள்கிறது மகனே! அங்கிருந்து நீ மேலும் ஒளிவிடவும், என் பெயரையும், நாட்டின் பெயரையும் காக்கவும் என் நல்லாசிகள்' என்று தந்தை தேவிசிங்

எழுதிய கடிதம் மகாவீரின் துணிகளுக்கு இடையில் தென்பட்டதைக் கண்டு சிறையிருந்த தோழர்கள் கண்ணீர் சிந்தினர். தேவிசிங் போன்ற தந்தையும், மகாவீர் சிங் போன்ற மகனும் தன்னலம் பாராமல் செய்த தியாகத் தில் பிறந்ததுதான் நம் தேசத்தின் சுதந்திரம். இந்த மண்ணில் ஜனநாயகக் காற்று வீசவும், உரிமைப் பயிர் செழிக்கவும் உரமாகிப் போன பலருடைய விலாசம் வெளிச்சத்துக்கு வரவில்லை. அவர்களும் வெற்று விளம் பரத்துக்காக சுதந்திர வேள்வியில் தங்கள் உயிரை ஆகுதியாக்கவில்லை. 'மனிதனை மனிதன் சுரண்ட முடியாத, எல்லோருக்கும் எல்லாத் துறைகளிலும் பூரண சுதந்திரமுள்ள புதிய சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதே எங்கள் லட்சியம்' என்று முழங்கிய அவர்களுடைய கனவுகள் இன்றுவரை முழுமையாக நனவாகவில்லை. இன்று அரச சுகங்களை அனுபவிக்கும் பலருக்கு 'யார் இந்த தேவிசிங்? யார் இந்த மகாவீர்சிங்?' என்றாவது தெரியுமா?

லண்டனில் பொறியியல் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில்

தேறியவர் பஞ்சாபைச் சேர்ந்த மதன்லால் திங்க்ரா. இளம் வங்கப் புரட்சியாளர் குதிராம் போஸ் 18 வயதில் தூக்கிலிடப்பட்ட செய்தியறிந்து ரத்தம் கொதித் தவர் இளைஞர் மதன்லால். பிரிட்டன் அமைச்சரவையில் இந்திய விவகாரங்களை மேற்பார்வையிட்ட மந்திரியின் அரசியல் உதவியாளர் கர்சான் வில்லியை இந்திய தேசிய சங்கத்தின் ஆண்டு விழாவில் வழிமறித்து நேருக்கு நேர் நின்று துப்பாக்கியால் சுட்டு மரணதண்டனை பெற்றவர் மதன்லால் திங்க்ரா. 'அந்நியர் துப்பாக்கிகளால் அடிமைப்பட்ட மண்ணில் போர் ஒருபோதும் ஓயாது. நிராயுதபாணிகளாக நிற்கும் மக்கள் பகிரங்கமாகப் போர் நடத்தும் சாத்தியம் இல்லை. அதனால்தான், நான் திடீர் தாக்குதல் நடத்தினேன். என் கைத்துப்பாக்கியால் சுட்டேன். என் அன்னை மண்ணுக்கு ரத்தத்தைத் தவிர வேறெதை இந்த எளியவனால் வழங்க முடியும்? சுதந்திர பலிபீடத்தில் என் உயிரை அர்ப்பணிக்கிறேன்.


சூர்யா சென்

சாவை எப்படி வரவேற்பது என்ற பாடத்தைத்தான் இந்திய

மக்கள் இன்று கற்கவேண்டும். அதைக் கற்றுக் கொடுக்க முதலில் நாம் சாவைத் தழுவ வேண்டும். இந்தியத் தாயின் மடியில் நான் மீண்டும் மீண்டும் பிறக்க வேண்டும். சுதந்திரம் கண்விழிக்கும் வரை இதே போன்ற புனித வேள்வியில் நான் மீண்டும் மீண்டும் ஈடுபட்டு இறக்க வேண்டும். இது ஒன்றே என் பிரார்த்தனை...' என்ற மதன்லாலின் மரண வாக்குமூலத்தை, இந்தியரை முற்றாக வெறுத்த சர்ச்சில்கூட, 'உலகம் முழுவதும் தேசபக்தியின் பெயரில் வந்துள்ள மிகச் சிறந்த வாக்குமூலங்களில் ஒன்றாக இது போற்றப்படும்' என்று புகழ்ந்தார். தான் மட்டுமின்றி, தன் பரம்பரை முழுவதும் ஆட்சி சுகங்களை அனுபவிப்பதே லட்சியம் என்று எண்ணும் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் அறிவார் மதன்லாலின் வாழ்க்கைச் சரித்திரத்தை? இன்று வங்காளதேசத்தின் துறைமுக நகரமாக விளங்கும் சிட்டகாங் பிரிவினைக்கு முன்புஇந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது. அங்குதான் 'மாவீரன்' என்ற அடைமொழிக்கு முழுத் தகுதி வாய்ந்த சூர்யா சென் பிறந்தார். சிட்டகாங் நகரில்

'யுகாந்தர்' என்ற புரட்சி அமைப்பை உருவாக்கி வெள்ளையருக்கு எதிராக ஆயுதம் தாங்கிய கெரில்லா போர் நடத்தியவர் சூர்யா சென். அஸ்ஸாம் - பெங்கால் ரயில்வேயின் கருவூலத்தைப் பட்டப் பகலில் சூறையாடிய சூர்யா, பிரிட்டிஷ் அரசின் மிகப் பெரிய ஆயுதக் கிடங்கை முற்றுகையிட்டு, ஆயுதங்களையும், வெடி குண்டுகளையும் கைப்பற்றிய பின்பு அதைக் கொளுத்திச் சாம்பலாக்கினார். அவருடைய தலைமையின் கீழ் சாகசம் செய்த ப்ரீதி லதா வடேகர், கல்பனா தத் ஆகிய இரண்டு வீராங்கனைகளை வரலாறு என்றும் மறக்காது.

நீண்ட தேடலுக்குப் பின் வஞ்சகமாகச் சிறை பிடிக்கப்பட்ட சூர்யா சென் தூக்கிலிடப்பட வேண்டுமென்றும், கல்பனா தத் நாடு கடத்தப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. தூக்குமேடை ஏறுவதற்கு முன்பு சூர்யா சென்னின் பற்கள் அனைத்தும் சுத்தியல் கொண்டு உடைக்கப்பட்டன. விரல் களிலிருந்து நகங்கள் சதையோடு பிடுங்கி வீசப்பட்டன. அவருடைய உடலின் ஒவ்வொரு மூட்டு இணைப்பும் முறிக்கப்பட்டது. உயிரோடு சூர்யா

சென் அனுபவித்த கொடுமைகளை வார்த்தைகளில் வடித்தெடுக்கக் கூடுமா? முற்றிலும் நினைவு தப்பிய நிலையில் தன் 37-வது வயதில் தூக்கில் தொங்கவிடப்பட்ட சூர்யாவின் சடலம் வங்கக் கடலில் வீசியெறியப்பட்டது. சுயநினைவை இழப்பதற்கு முன்பு, 'மரணம் என் வாழ்வின் வாசற் கதவைத் தட்டுவது என் காதில் கேட்கிறது. என் மனம் எல்லையற்ற பெருவெளியை நோக்கி மெள்ளப் பறக்கத் தொடங்கிவிட்டது. விழிமூடும் இந்த மரணப் பொழுதில் என் நண்பர்களிடம் ஒன்றை மட்டும் என் நினைவாக விட்டுச் செல்கிறேன். அதுதான் 'சுதந்திர இந்தியா' என்ற என் பொற்கனவு. தோழர்களே! இக்கனவை நனவாக்க, நம் லட்சியத்தை முன்னெடுத்துச் செல்லுங்கள். எந்த நிலையிலும் ஓரடிகூடப் பின்வாங்க முயல வேண்டாம். நம் தேசத்தின் அடிமைப் பொழுது முடிந்துவிடும். சுதந்திரத்தின் ஒளிக்கதிர்கள் பொன்னொளி வீசுவதைக் காணுங்கள். எல்லோரும் எழுங்கள். அவநம்பிக்கை அடையாதீர்கள். வெற்றி விரைவில் வந்து சேரும்' என்று

சூர்யா சென் கடிதம் எழுதி வைத்தார். நான்கு நாட்கள் சிறையிருந்து நாலாயிரம் நாட்கள் தங்கள் தியாகத்தைத் தாங்களே வருணித்துப் புகழ் மயக்கமுறும் தற்காலத் தலைவர்கள் சூர்யா சென்னை அறிந்திருந்தால் வாய் திறக்க வெட்கமுற மாட்டார்களா?

பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் இளம் வயதில் தூக்கிலிடப்பட்டனர். யதீந்திரநாத் தாஸ் சிறையில் 63 நாட்கள் உண்ணா நோன்பிருந்த நிலையில் உயிர் துறந்தார். சந்திரசேகர ஆசாத் 65 குண்டுகளால் உடல் சல்லடையாக்கப்பட்டுத் தாய் மண்ணைத் தன் ரத்தத்தால் அபிஷேகம் செய்தார். மதன்லால் திங்க்ரா மீண்டும் மீண்டும் பிறந்து இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் பணியாற்றத் துடித்தார். மகாவீர்சிங் பெல்லாரியிலும் அந்தமானிலும் கடுமையான அடக்குமுறைக்கு ஆளாகிப்பிணமான நிலையில் கடலில் வீசப்பட்டார். சூர்யா சென் நாட்டு நலனுக்காக நரம்பும் எலும்பும்முறிக்கப்பட்டார். இவர்கள் உரமாகி வளர்த்த சுதந்திர மரத்தில் பழுத்துக் குலுங்கும் உரிமைக் கனிகளை

இன்று சுவைப்பவர்கள் யார்?

அமெரிக்காவில் சுதந்திர தினம் தேசியத் திருவிழாவாக நாடு முழுவதும் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆனால், நம் தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகள் இன்று வரை சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதில்லை. கலைஞரும், ஜெயலலிதாவும் முதல்வர்களாக இருக்கும்போது மட்டும் கோட்டையில் கொடியேற்று வார்கள். கொள்ளுக்கு வாய் திறக்கும் குதிரை, அதைப் பயிரிட்ட விவசாயியின் வியர்வை வாசனையை அறியாது. குதிரையாவது எஜமானை முதுகில் சுமக்கிறது. நமக்கு வாய்த்த 'அரசியல் குதிரை'கள் வாக்களிக்கும் எஜமானர்களின் முதுகில் ஏறி மிதிக்கின்றன. 'விடுதலை விருட்சமானது அவ்வப் போது தியாகிகளின் குருதியால் உரமேற்றப்பட வேண்டும். அதுவே அதன் இயற்கை எரு' என்ற ஜெபர்சனின் வார்த்தைகளை என்றும் நம் நினைவில் நிறுத்துவோம்.

– பயணம் தொடரும் –

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# 29 இனம்

உலகின் பிற பகுதிகளில் நாகரிகம் மெள்ள எழுந்து நடப்பதற்கு முன்பே உலகப் பொதுமை பேசியவன் தமிழன். சர்வதேசியம், உலகச் சகோ தரத்துவம் பற்றிய உயர்வான கருத்தோவியத்தை மனிதநேயம் மாறாத நிறத்துடன் தீட்டிக்காட்டிய முதல் இனம் தமிழினம். பசியின்றி வாழ்தல், பிணி நீங்கி வாழ்தல், யாரோடும் பகையின்றி வாழ்தல், அறம் சிறக்க வாழ்தல் என்ற மேலான நோக்கங்களே சங்கத் தமிழரின் வாழ்வியல் பண்பு களாகும். அறவுணர்வும், அருளுணர்வுமே பழந்தமிழர் பண்பாட்டின் அடித் தளங்களாகும்.



சங்கத் தமிழன் தோகை விரித்த மயிலுக்கும் இரங்கினான்; துவண்டு விழுந்த மலர்க்கொடிக்கும் இரங்கினான்; வண்ண மலரில் வாசம் செய்த வண்டுக்கும்

இரங்கினான் என்பதுதான் நமது இலக்கியம் காட்டும் வரலாறு. அவர்களுடைய வாரிசுகளாகிய நாமோ, சக மனிதரின் துயர் கண்டும் இரங் காத சமூக மனிதர்கள்.

தமிழனத்துக்கே உரிய மரபார்ந்த மனிதநேயம், முற்றாக வற்றிவிட்ட தற்கு நம் வாழ்காலச் சாட்சியம்தான் வீரத் திருமகன் பிரபாகரனைப் பெற்றெடுத்த பெருமைக்குரிய அன்னை பார்வதி அம்மையார் விமானத்தில் இருந்து இறங்க அனுமதி இன்றி, மீண்டும் மலேசியாவுக்குத்

திருப்பி அனுப்பப்பட்ட அவலம். 80 வயது கடந்து, ரத்த அழுத்தம் அதிகரித்து, நினைவு தடுமாறும் நிலையில் மருத்துவச் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்ட மூதாட்டியைத் திருப்பி அனுப்பிய இந்திய அரசு, காந்தியின் பெயரை உச்சரிக்கும் அருகதையை அறவே இழந்துவிட்டது. இந்திய அரசின் ஈரமற்ற நடவடிக்கையை எதிர்க்கத் துணிவின்றி நம் தமிழக முதல்வர் வழக்கம்போல், கடிதம் வரைவதற்கு எழுது கோல் எடுத்துவிட்டார். சுயநலத்தில் சுருங்கிப்போய்விட்ட எம் தமிழினமோ தொலைக்காட்சிக் கிளுகிளுப்பில் தொலைந்துவிட்டது. எங்கே இருந்து, எங்கே போய்க்கொண்டு இருக்கிறோம் நாம்?

தள்ளாத வயதுப் பெண்மணியைத் தரை இறங்கவிடாமல் திருப்பி அனுப் பிய மனிதநேயமற்ற நிகழ்வு குறித்துச் சட்டப் பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட சூழலில்... முதல்வர் கலைஞர் என்ன சொன்னார் என்பதுதான் நம் தமிழி னம் சிந்திக்க வேண்டிய செய்தி.

'... அதைப் பரிசீலனைசெய்து மத்திய அரசுக்கு அதுபற்றி எழுத மாநில அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசின் பதிலைப்பற்றி, அது என்ன கூறுகிறது என்பதைப்பற்றி, அது பற்றிய விளக்கம் தேவைப்பட்டால், அந்த நேரத்தில் பதில் வந்த பிறகு அதனை இந்த அவைக்குத் தெரிவிப்பேன் என்று கூறி இந்த அளவில் இந்தப் பிரச்னையை முடிக் குமாறு கேட்டுக்கொள்கிறேன்!' என்றார் நம் முதல்வர். ஆக, எந்தப் பிரச்னையானாலும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவது ஒன்றுதான் நம் கலைஞர் கண்டெடுத்த தீர்வு. ஆயிரம் ராகங்கள் பிறந்தாலும் ஸ்வரங்கள் ஏழுதான். எத்தனை சிக்கல்கள் வந்தாலும் கலைஞரின் தீர்வு ஒன்றே ஒன்றுதான். கடிதம்... கடிதம்... கடிதம்!

'தமிழ்நாட்டு அரசியல் பீடம் டெல்லிக்குத் தபால் பெட்டி அந்தஸ்துடன்தான் நடத்தப்பட்டது. எதற்கெடுத் தாலும் ஆணையிடுகின்ற உரிமை, ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள டெல்லிப் பட்டணத்தில்தான் தேங்கி வழிந்தது. இங்கு

காமராஜரின் அரசியலும் காங்கிரஸ் ஆட்சியின் பிடிவாதங்களும் நினைத்தாலே நெஞ்சத்துக்குச் சோர்வை அளித்தது' (கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' பக்.279 தினமணி கதிர் வெளியீடு) என்று எழுதிய கலைஞரின் இன்றைய நிலையை நினைத்தால், நமக்குச் சொல்லில் அடங்காத சோர்வு எழுகிறதே! காமராஜர் தபால் பெட்டியாக இருந்தார் என்று, அன்று குற்றம் சாட்டிய கலைஞர்... இன்று தபால் பெட்டிகளின் தலைமை நிலையமாக மாறிவிட்டது நியாயந்தானா? 'தேர்தலில் ஈடுபட்டுத்தான் அந்தஸ்து தேடிக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் அறிமுகம் இல்லாதவர்கள் அல்ல தி.மு.கழகத்தில் இருப்பவர்கள். நாட்டுக்குப் புதியதோர் அந்தஸ்து தேடித் தருவதற்காகவே தி.மு.கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது!' என்று அண்ணா சொன்னதாக அதே 'நெஞ்சுக்கு நீதி' நூலில் குறிப்பிட்டிருக்கும் கலைஞரின் கழக ஆட்சியால், தமிழ்நாட்டுக்கு எந்தப் புதிய அந்தஸ்து பூத்துச் சொரிகின்றது?

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மூன்று பட்டியல்கள்

உள்ளன. மத்திய அரசின் சட்டம் இயற்றும் பட்டியலில் 97 அதிகாரங்களும், மாநில அதிகாரப் பட்டியலில் 66 இனங்களும், மத்திய - மாநில அரசுகள் செயற்படக்கூடிய பொதுப் பட்டியலில் 47 அதிகாரங்களும் இடம்பெற்றன. பல்வேறு திருத்தங்களால் மாநில அரசுகளின் அதிகாரப் பதிவுகள், 19 ஆகச் சுருங்கிவிட்டன. மைய அரசின் அதிகாரங்கள், 144 ஆகப் பெருகிவிட்டன. 'மாநிலப் பட்டியலில் கண்ட அதிகாரங்களை மாநிலங்களவைத் தீர்மானத்தின் மூலமாகப் பறித்துக்கொள்வதற்குரிய வழிவகை, நாடாளுமன்றம் சில சூழ்நிலைகளில் மாநில ஆட்சி அதிகாரங்களில் ஊடுருவும் இயல்பு, இன்னோரன்ன மொழி, இன மக்களின் தன்னாட்சியை முறியடிக்கும் வேறு பல ஏற்பாடுகளும் இன்றைய நமது அரசமைப்பில் இடம்பெற்றுள்ளன. எனவே, அது மாநிலங்களின் உரிமைப் பட்டயம் அன்று; மாறாக மாநிலங்களின் அடிமை முறி' என்கிறார் கு.ச.ஆனந்தன். எந்த விதமான குறைந்தபட்சத் தியாகத்துக்கும் தயாராக இல்லாத இன்றைய கலைஞர், 'மாநிலச் சுயாட்சி' என்று வாய் வலிக்காமல் குரல்

கொடுப்பதோடு நின்றுவிட்டார். தேர்தல் கூட்டணிக்குச் சேதாரம் வந்துவிடக் கூடாது என்பதற்காக... காங்கிரஸ் தலைவர் சோனியாவின் மனம் சிறிதளவும் வருத்தமுறாமல் பார்த்துக்கொள்வதில் கவனமாக இருக்கும் கலைஞரால், பார்வதி அம்மையார் விவகாரத்தில் பட்டும் படாமல் பக்குவமாக மன்மோகன் அரசுக்குக் கடிதம் எழுதுவதைத் தவிர வேறென்ன செய்ய இயலும்? இலவசங்களுக்குப் பல்லை இளிக்கும் இனமாக நாம் இருக்கும் வரை, கலைஞர் வேலனாகவும் வருவார்; விருத்தனாகவும் காட்சி தருவார். வேடம் புனைவதில் நம் அரசியல்வாதிகளை யாரால் வெல்ல முடியும்?

'மாநிலங்கள் விரும்பி விட்டுக்கொடுத்த அதிகாரங்கள் மட்டுமே மத்தியக் கூட்டாட்சி அரசிடம் இருக்க வேண்டும். மற்ற வகையில் ஒவ்வொரு மாநிலமும் சுதந்திரமாக இயங்க வேண்டும்!' என்று மகாத்மா அறிவுறுத்தினார். இன்று ஒரு தமிழர் தலைவரின் நோயுற்ற அன்னைக்கு மருத்துவச் சிகிச்சை தரும் சுதந்திரம்கூட



ருத்ரகுமாரன்

மன்மோகன் அரசிடம் அடகுவைக்கப்பட்டுவிட்டது. பிறப்பால் தமிழரான ப.சிதம்பரத்தால், உணர்வால் தமிழராக இயங்க முடியவில்லை. நாட்டு நலன் சார்ந்த ஒவ்வொரு நடவடிக்கையிலும் கலைஞரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பதாக நம் பிரதமரும் சோனியாவும் சென்னை வந்து சட்டமன்றத் திறப்பு விழாவில் சொன்னார்கள். பார்வதி அம்மையார் தமிழகம் வந்து சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டுமென்று கலைஞர் கேட்பாரா? அப்படி கலைஞர் கேட்ட அடுத்த கணமே மத்திய அரசிடம் இருந்து அனுமதி கிட்டுமா? பொறுத்துப் பார்ப்போம். தன் மீதே தனக்கு உரிமை இல்லை என்ற அடிமை நிலைதான் தமிழருக்கு வாய்த்த வரமா? பொறுத்த பின் கேட்போம்.

'தமிழன் சுதந்திர ஆட்சிக்கு வரும் வரை... தமிழன், தமிழ்நாடு ஒரு நாளும் சூத்திரத்தன்மையில் இருந்து, அடிமைக் குடியாய் இருப்பதில் இருந்து கடுகளவும் மாற்ற மடைய முடியாது!' என்றார் பெரியார். சூத்திரர்கள் ஆட்சி வந்த பின்பும் அடிமைக் குடியாய் இருப்பதில் இருந்து

விடுபடவில்லையே 'வாய் வேதாந்தம்' பேசும் தமிழினம். 'வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம்; அன்னார் உள்ளத்தால் ஒருவரே; மற்று உடலினால் பலராய்க் காண்பார்' என்று பாவேந்தர் பாடியபடி தமிழினம் இன்று வரை எந்தப் பிரச்னையிலும் ஒன்றாக இணைந்து நிற்கவில்லையே. ஒன்றுக்கொன்று வேறுபட்ட மொழிகளையும், மாறுபட்ட பழக்க வழக்கங் களையும்கொண்ட 14 மலை வாழ் மக்கள் நாகாலாந்தில் ஒன்றிணைந்து உரிமைக் குரல் கொடுக்கின்றனர். ஆனால், ஒரே மொழி, ஒரே இனம், ஒரே பண்பாடுகொண்ட தமிழினம் ஒன்று சேர முடியாமல் கட்சி அரசியல் பிரித்துவைத்திருக்கிறது. கிருஷ்ணா நதியில் அலமாதி அணையை 1,720 அடியாக கர்நாடகம் உயர்த்தியபோது, ஆந்திராவின் நலன் பாதிக்கப்படுவதாக அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொங்கி எழுந்ததுபோல், முல்லை பெரியாறு விவ காரத்தில் நாம் ஒன்றாக நின்றோமா? காவிரி நீர்ப் பிரச்னையில் கர்நாடக அரசியல்வாதிகளிடம் இருக்கும் கட்சி கடந்த ஒற்றுமை,

நம்மிடம் உண்டா? 'தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அதற்கோர் குணமுண்டு' என்றாரே நாமக்கல் கவிஞர்... அது என்ன குணம்? எந்த நிலையிலும் ஒன்றுபட்டு நிற்பதில்லை என்ற நீச குணமா?

இங்குள்ள தமிழர் ஒன்றாக இல்லை. ஈழத் தமிழர்கள் ஒன்றாக நின்றார்களா? எட்டப்பன் வாரிசுகளாக டக்ளஸ் தேவானந்தாவும், கருணா வும் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு வியூகம் அமைக்கவில்லையா? புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் யூத இனத்தின் ஒற்றுமையுணர்வைக் காண முடிகிறதா? உலக நாடுகளும், இந்திய அரசும் செய்த சதியால் விடுதலைப் புலிகள் வீழ்ந்த பின்பு, தமிழீழம் வென்றெடுக்க ஒன்றிணைந்த அரசியல் உத்தி இன்று வரை வடிவமைக்கப்பட்டதா? நாடு கடந்த தமிழீழ அரசை அமைப்பதற்குப் புலம் பெயர்ந்த ஈழ அறிவுஜீவிகள் இணைந்திருக்கின்றனர். இதுவரை ஈழ நிலத்தில் இருந்த தமிழர்கள் போராடி இன்னல்களை அனுபவித்தனர். இனிமேல் ஈழப் போராட்டத்தைப் புலம் பெயர்ந்த தமிழர்கள்தான் முன்னெடுத்துச் செல்ல

வேண்டும். அவர்கள் முதலில் உலக நாடுகளின் மனோபாவத்தை, சந்தைப் பொருளாதாரம் சார்ந்த சுயநலப்போக்கைக் கணக்கில்கொண்டு, காரியத்தில் இறங்க வேண்டும். 'அக்கா வந்து அள்ளிக் கொடுக்க, சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே' என்றார் பாவேந்தர். இன்னல்கள் இன்னும் தொடரத்தான் செய்யும். அறிவின் பிரகாசமும், உண்மையின் ஒளியும், பரிசுத்தமான எண்ணங்களும், தணியாத லட்சிய வேட்கையும் சேர்ந்து செயற்பட்டால், தமிழீழம் ஒரு நாள் நிச்சயம் மலரும். அதற்கு முதல் தேவை ஒன்றிணைந்த போர்க் குரல்.

'தாயகம், தேசியம், சுயநிர்ணயம், இறைமை போன்ற உரிமை நிலைக் கோட்பாட்டின் வழி நின்று தமிழக, இந்திய, அனைத்துலக சமூக ஆதரவுடன் ஜனநாயக விழுமியங்களுக்கு உட்பட்டு, தமிழீழ விடுதலையை வென்றெடுக்கப்போவதாக விசுவநாதன் ருத்ரகுமாரன் வழங்கியிருக்கும் செய்தி, நாடு கடந்த தமிழீழ அரசு சரியான பாதையில் நடைபோடுவதற்கான நல்லடையாளம். ஆனால், 'ஆயுதப் போராட்டம் என்பதோ,

வன்முறை வழியோ இனி எங்கள் அகராதியில் கிடையாது!' என்று அவர் சொன்ன தாக வந்த செய்தியை மறுத்திருப்பது கவலையைத் தருகிறது. ஈழத் தமிழர் போராட்ட அகராதியில் இனி ஆயுதங்களுக்கும், வன்முறைக்கும் இடமில்லாத நிலை கனிந்தால்தான், உலக நாடுகளின் ஆதரவு பெருகும். ஆயுதப் புரட்சிக்கான சூழல் அடியோடு மாறிவிட்டது. எல்லாக் காலங்களிலும் பொருந்தக்கூடியது காந்தியப் போர் முறை ஒன்றுதான். வன்முறைக்கு இடம் இல்லை என்று அறிவிப்பது மாவீரன் பிரபாகரனின் அணுகுமுறையைக் களங்கப்படுத்தும் காரியம் என்று எண்ணத் தேவை இல்லை. காலச்சூழலுக்கேற்ப போராட்ட உத்திகளை மாற்றியமைப்பதுதான் விவேகமானது. தமிழ்நாட்டில் உள்ள ஆறரைக் கோடி மக்களும் அறவழியில் இந்திய அரசை நிர்ப்பந்திக்க ஆயிரம் வழிகள் உண்டு. உணர்ச்சியைத் தூண்டி வன்முறையை வளர்ப்பவர்கள், ஈழ நலனுக்கு எதிரானவர்கள். ஆயுதப் போர் தொடர்ந்தால், எஞ்சியுள்ள ஈழ நில மக்களையும் நாம் இழந்துவிடுவோம்.

ருத்ரகுமாரனும், அவருடைய தோழர்களும் ஆழச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இறுதியாக, பிரபாகரன் தாயார் பார்வதி அம்மையார் மனிதநேயத்துக்குமாறாகத் திருப்பி அனுப்பப்பட்டது குறித்து கலைஞரி டம் கேட்கவேண்டிய நியாயமான கேள்வி ஒன்று இருக்கிறது. தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா மத்திய அரசுக்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் வேலுப்பிள்ளையும், பார்வதி அம்மையாரும் தமிழகத்தில் கால்வைக்க முடியாதபடி கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றதாக நம் முதல்வர் தெளிவுபடுத்தியிருக்கிறார். பார்வதி அம்மையாருக்கு நேர்ந்த அவமானத்துக்கு ஜெயலலிதாவே காரணம் என்று கலைஞரின் அன்பு மழையில் நனையும் சில மனிதர்கள் சாவி கொடுக்கப்பட்ட பொம்மை போன்று சத்தமிடுகின்றனர். ஜெயலலிதா மத்திய அரசுக்கு பிப்ரவரி 5, 2003 அன்று கடிதம் எழுதியதாக முதல்வர் தெரிவித்தார். வாஜ்பாய் அரசு அக்டோபர் 13, 1999 முதல் மே 13, 2004 வரை மத்தியில் ஆட்சி செய்தது. அந்த அமைச்சரவையில்

தி.மு.கழகத்தின் சார்பில் முரசொலி மாறன், டி.ஆர்.பாலு, ஆ.ராசா ஆகிய மூவரும் இடம்பெற்றிருந்தனர். விசா விவகாரத்தில் மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பது உண்மை. மத்திய அரசுக்கு மட்டுமே அதில் அதிகாரம் உண்டு என்பதும் மறுக்க முடியாத உண்மை. மாநில முதல்வர் ஜெயலலிதா அனுப்பிய கடிதத்தை மத்திய அரசு புறக் கணித்திருக்க முடியுமே. கேபினட் அமைச்சர்களாக இருந்த முரசொலி மாறனும், டி.ஆர்.பாலுவும் பிரதமர் வாஜ்பாயிடம் பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை, தாயார் பார்வதி அம்மையார் ஆகியோருக்கு எதிராக விசா விவகாரத்தில் மத்திய அரசு நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது என்று எதிர்த்துக் கிளர்ந்தார்களா? இதற்குக் கலைஞர்தான் விளக்கம் தர வேண்டும். 'ஆரிய மாயை' எழுதிய அண்ணா, 'பேராசைப் பெருந்தகையே போற்றி! பேச நா இரண்டுடையாய் போற்றி!' என்றார். பார்வதி அம்மையார் விவகாரத்தில் பலரும் இரண்டு நாவால் பேசுவதுதான் வருத்தம் தருகிறது.

உலகில் எத்தனை இனங்கள் ஒன்றுபட்டாலும், ஒரேயரு இனம் மட்டும் எங்கிருந்தாலும் இரண்டுபட்டே நிற்கும். அந்த இனம்தான் நம் பெருமைக்குரிய தமிழினம். ஒன்றுபடாமையே தமிழரின் தனிக் குணம். கட்சி அரசியலும், சாதி வெறியும் நம்மை ஒருபோதும் ஒன்றாகச் சேரவிடாது. விவேகம் உள்ளவர்க்கு எதில் வேறுபடுவது, எதில் ஒன்றுபடுவது என்று தெரியும். அறிவார்ந்த (!) நம் இனத்துக்குக் காரணங்களோடு வேறுபடவும் தெரியாது; ஒன்றுபடவும் தெரியாது!

எங்கே போகிறோம் நாம்?
எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்




30 'பிற நாடுகளில் மதம் என்பது வாழ்வின் எத்தனையோ அம்சங்களுள் ஒன்று. இந்தியாவிலோ... நாட்டின் இதயமே மதம்தான். இதுவே முதுகெலும்பு. இதுவே அடிப்படை. இந்த அஸ்திவாரத்தின் மீதுதான் நம் தேசிய வாழ்வாகிய கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது. அரசியல், அதிகாரம்... ஏன் அறிவுகூட

இரண்டாம்பட்சமே. மதம் ஒன்றே முக்கியமானதாக இங்கு கருதப்படுகிறது. இந்திய வாழ்க்கை வளம் பெற்றது மதம், ஆன்மிகம் என்ற அடிப்படை மீது மட்டுமே. இனியும் அது அவ்வாறே வாழும், வளம் பெறும்' என்றார் விவேகானந்தர். ஆனால், மதம்தான் இந்தியாவை இரண்டாகப் பிளந்தது. மதம்தான் அகிலம் முழுவதும் அமைதியற்ற சூழலை உருவாக்கிவிட்டது.

மதம், மனிதனின் ரத்தத்தில் கலந்தது என்ற ரகசியம் அறிந்த சமுதாய ஆய்வாளர்கள், 'அது வகுப்புவாதமாக வளராமல் இருந்தால் போதும்!' என்றுதான் கவலைகொள்கின்றனர். உலகப் போர்களில் சிந்தப்பட்ட மனித ரத்தத்தைவிட, மதச் சச்சரவுகளில் சிந்திய ரத்தமே அதிகம். அதற்கு நம் இந்தியாவே சான்று. நாட்டுப் பிரிவினையில் நாம் இழந்தது ஐந்து லட்சம் உயிர்கள். ஒரு கோடிக்கு மேற்பட்ட இந்து-முஸ்லிம்கள் உடைமைகள் அனைத்தும் இழந்து, உயிரைக் கைகளில் பிடித்தபடி அகதிகளாக இடம் பெயர்ந்த சோக நிகழ்வை இன்றைய தலைமுறை

அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. அந்தக் கசப்பானப் படிப்பினைகள் தந்த பாடம்தான்... இந்தியாவை மதச்சார்பற்ற அரசு நடக்கும் மண்ணாக மாற்றியது. மதச்சார்பின்மையும் ஜனநாயகமும் இந்தியா என்ற தேசிய நாணயத்தின் இரண்டு பக்கங்களாக அமைந்திருப்பதுதான் நாம் பெருமிதம் கொள்ளத்தக்க அரசியல் சாதனைகளாகும்.

நம் அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம், சாதி சம்பந்தப்பட்டது. அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் மதம் சம்பந்தப்பட்டது. 'காங்கிரஸ், (அமெரிக்க நாடாளுமன்றம்) மத நிறுவனங்கள் குறித்தோ, அவற்றின் சுயேச்சையான நடவடிக்கைகளைத் தடுப்பது குறித்தோ எந்தச் சட்டமும் இயற்ற முடியாது' என்பதுதான் அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம். அமெரிக்க அரசமைப்புச் சட்டத்துக்கு வடிவம் தருவதில் பெரும் பங்காற்றிய ஜெபர்சன் திருச்சபைகளுக்கு வரைந்த கடிதத்தில், 'அரசையும் மதத்தையும் பிரிக்கும் சுவர்' என்று முதல் சட்டத் திருத்தத்தைக் குறிப்பிட்டார். (A wall of Separation between church and state) அரசையும் மதத்தையும்

தனித்தனியாகப் பிரித்துவைப்பது, அவ்வளவு எளிதன்று. மதம் சாராத அரசியல்வாதிகளும், அரசியல் சார்பற்ற மதவாதிகளும் காண்பதற்குக் குறிஞ்சி மலரைப்போல் அபூர்வமானவர்கள்.

'யூதர்களை அழிப்பதுதான் என் ஒரே நோக்கம்!' என்ற ஹிட்லர், கிறிஸ்துவ மதத்தின் இரு பிரிவுகளுக்கும் ஆதரவாக இயங்கினான். 'மத நம்பிக்கையில் வேறுபட்டாலும், நாட்டளவில் நாம் அனைவரும் ஒருவர்' என்று குரல் கொடுத்த ஹிட்லர், 'ஜெர்மானிய அரசு கிறிஸ்துவர்களுடையது; சர்வதேச நாத்திகர் களுடையது இல்லை' என்றான். இங்கிலாந்தின் அரச குடும்பம், கிறிஸ்துவத்துக்கு எதிராக இயங்க முடியாது. ரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்தவர், பிரிட்டனின் அரசராகவோ, அரசியாகவோ இருக்கவியலாது. பாகிஸ்தானின் அதிபராக ஒரு முஸ்லிம் மட்டுமே அமர முடியும். வங்க தேசம் பூத்ததும் இந்தியாவைப்போன்று ஒரு மதச்சார்பற்ற நாடாக இருக்க முயன்று... முடியாமல், இன்று முஸ்லிம் நாடாகிவிட்டது. ஆனால், நம்

இந்தியாவில் மத நம்பிக்கையே இல்லாத நேரு 17 ஆண்டுகள் பிரதமராக இருக்க முடிந்தது. ஒரு பெண்மணி 15 ஆண்டுகள் இந்திய அரசை வழி நடத்த இயன்றது. முஸ்லிம் பெருமக்கள் குடியரசுத் தலைவர் பதவியை அலங்கரிப்பது சாத்தியமானது. ஒரு கிறிஸ்துவரின் வழிநடத்தலில் நாடாளும் காங்கிரஸ் நடைபோடும் நிலை உருவானது. இதுதான் இளைஞர்களின் கனவு இந்தியா. இந்தக் கனவு எந்த நிலையிலும் கலைந்துவிட நாம் அனுமதிக்கலாகாது.


இன்று இந்திய மக்கள் தொகையில் 80.5 சதவிகிதம் இந்துக்களும், 13.4 சதவிகிதம் முஸ்லிம்களும், 2.3 சதவிகிதம் கிறிஸ்துவர்களும், 1.9 சதவிகிதம் சீக்கியர்களும் இருக்கின்றனர். பல்வேறு வண்ணங்களும் வாசங்களும் நிறைந்த அழகிய நந்தவனம் நம் இந்தியச் சமுதாயம். இதில் வகுப்புவாதக் களைகள் மண்டிவிடாமல் பாதுகாப்பதும் பராமரிப்பதும் நம் முதல் கடமை. சுதந்திரப் போர் நடந்த சூழலில், ஜின்னா உட்பட பல முஸ்லிம் தலைவர்கள் காங்கிரஸிலும், முஸ்லிம் லீக் அமைப்பிலும்

ஒரே நேரத்தில் சேர்ந்து பணியாற்றினர். முஸ்லிம் லீக் தலைவர் மஷ்ருல் ஹக் 1915 டிசம்பரில் நடந்த மாநாட்டில், 'நாங்கள் இந்திய முஸ்லிம்கள்' என்று குறிப்பிட்டார். 'இந்திய முஸ்லிம்கள்' என்ற பிரகடனம் எங்கள் தேசிய அடையாளத்தையும், மத அடையாளத்தையும் ஒரே சொற்றொடரில் இனம் காட்டுகிறது. இந்திய நலன் சார்ந்த பிரச்னையில் நாங்கள் முதலிலும் இந்தியர்கள், அடுத்தும் இந்தியர்கள், இறுதியாகவும் இந்தியர்கள்' என்றார் ஹக்.

லண்டனில் நடந்த முதல் வட்ட மேஜை மாநாட்டில் பங்கேற்ற முஸ்லிம்களின் புகழ் பூத்த தலைவர் முகம்மது அலி, 'கடவுளின் கட்டளைப்படி நான் முதலில் முஸ்லிம், அடுத்தும் முஸ்லிம், இறுதியாகவும் முஸ்லிம். ஆனால், தேசம் - தேசத்தின் விடுதலையைப் பொறுத்தளவில் நான் முதலிலும் இந்தியன், அடுத்தும் இந்தியன், இறுதியிலும் இந்தியன்!' என்றார். ('India-The siege within'-M.J.Akbar இந்த இணக்கமான சூழல் யாரால் சிதைந்தது?

முஸ்லிம் லீக் இஸ்லாமியரின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்திய அரசியல் தளத்தில் கண்

விழித்த 1906-ம் ஆண்டில்தான், 'இந்து ஒருமைப்பாடு - இந்து நாடு - இந்து அரசு' என்ற குறிக்கோளுடன் இந்து மகாசபை பிறந்தது. இந்து உணர்வை ஊட்டி இந்த அமைப்பை வளர்த்தவர்கள் காந்தியின் வருகைக்கு முன்பு காங்கிரஸின் பெருந்தலைவர்களாக விளங்கிய மதன்மோகன் மாளவியாவும். லாலா லஜபதிராயும்தான். இந்து மகாசபை, 1937 தேர்தலில் மோசமான தோல்வியைத் தழுவியது. '23 கோடி இந்துக்களின் காலடியில் 7 கோடி முஸ்லிம்கள் நசுக்கப்படுவதைத் தவிர்க்க, முஸ்லிம் கள் அனைவரும் முஸ்லிம் லீகுக்கே வாக்களிக்க வேண்டும்' என்ற ஜின்னாவின் கோரிக்கையை அதே 1937 தேர்தலில் முஸ்லிம்கள் புறக்கணித்தனர். இந்துக்களும் முஸ்லிம்களும் கைகோத்து காந்தியின் பின்னால் நின்று காங்கிரஸுக்கு வாக்களித்துப் பெருவெற்றியைத் தேடித் தந்தனர். முளையிலேயே கிள்ளியெறியப்பட்ட வகுப்புவாதம், காலநடையில் விஷ விருட்சமாக வளர்ந்ததற்கு யார் காரணம்?


ஜின்னா

அந்தமான் சிறையில் இருந்து ரத்னகிரி சிறைக்கு மாற்றப்பட்ட சாவர்க்கர் 'ஒரு நாடு - ஒரு மொழி - ஒரு பண்பாடு' என்ற கோஷத்துக்கு 'இந்துத்வம்' என்று நாமகரணம் சூட்டி, 'இந்து ராஷ்டிரதர்ஷன்' என்ற நூலை எழுதினார். 1923-ல் எழுதப்பட்ட இந்த நூலில், 'இந்துத்வம் ஒரு வார்த்தை அல்ல, வரலாறு' என்று குறிப்பிட்ட சாவர்க்கர், முதன் முதலில் இந்தியாவில் இந்து, முஸ்லிம் என்று இரு நாடுகள் உள்ளன (There are two nations in the main, the Hindus and the Muslims) என்று வாய் மலர்ந்தார். இந்து மகாசபை 1937 தேர்தலில் பெருந்தோல்வியை சந்தித்த நிலையில்... அதன் தலைமைப் பொறுப்பேற்ற சாவர்க்கர், 'இந்தியாவை இந்துமயமாக்கு; இந்துவை ராணுவமயமாக்கு' என்று முழங்கினார். ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தின் தலைவராக இருந்த கோல்வால்க்கர், 'சாவர்க்கரின் 'இந்துத்வம்' விஞ்ஞானபூர்வமாக விளக்கப்பட்டது. இதுவே என் பாடப்புத்தகம்' என்று புகழ்ந்தார். இந்த கோல்வால்க்கரின் சிந்தனைக் கொத்தில்தான் மதநல்லிணக்கம் சீரழிவதற்கான விஷச் சிந்தனைகள்

விதைக்கப்பட்டன. இந்துக்களின் மூன்று எதிரிகளாக முஸ்லிம், கிறிஸ்துவர், கம்யூனிஸ்ட் என்று அடையாளப்படுத்தி, அவர்களைப்பற்றி மூன்று தனித்தனி கட்டுரைகளைத் தன் 'சிந்தனைக் கொத்து' நூலில் பதிவுசெய்த 'பரோபகாரி' கோல்வால்க்கர்.

'இந்துத்வா' என்பது இந்திய மரபில் இல்லாத வார்த்தை. அது சாவர்க்கர் உருவாக்கிய அரசியல் வார்த்தை. எந்தப் புராணத்திலும், இதிகாசத்திலும் இந்த வார்த்தை இல்லை. 'இந்தியா' என்ற வார்த்தையே 'வரலாற்றின் தந்தை' என்று வருணிக்கப்படும் ஹெரோடோடஸ் (கி.மு.484) காலத்துக்கு முன்பு வழக்கில் இருந்தது இல்லை. 'இந்து மதம்' என்ற தொடர் தொல்காப்பியத்திலோ, சங்க இலக்கியங்களிலோ காணப்படவில்லை. மணிமேகலைக் காப்பியத்தில்தான் (கி.பி. மூன்றாம் நூற்றாண்டு) சமயக் கணக்கர் என்ற தொடரை முதன் முதலில் காண முடிகிறது.

கோல்வால்க்கர் 1939-ல், 'முஸ்லிம், கிறிஸ்துவர், யூதர், பார்சிகள் அனைவரும் இந்துப் பண்பாட்டையும், மொழியையும் பின்பற்ற வேண்டும் இந்து இனத்தின்

பெருமையைப் போற்ற வேண்டும். அவர்கள் இங்கு இரண்டாம் தரக் குடிமக்களாகவே இருக்க முடியும். அவர்கள் எந்தவிதமான சலுகையையும் எதிர்பார்க்க முடியாது' (1939-ல் வெளிவந்த 'ஷ்மீ' - நாம் என்ற நூலில்) என்றார். முஸ்லிம்களின் மனங்களில் பாதுகாப்பற்ற உணர்வு பரிணமித்தது. அந்த உணர்வை, ஜின்னா தன் அரசியல் ஆளுமைக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டார். முஸ்லிம் லீக் 1940-ல் பாகிஸ்தான் பிரிவினை கோரித் தீர்மானம் தீட்டியது. ஜின்னாவின் பிடிவாதம், காங்கிரஸ் தலைவர்களின் சலிப்பு இரண்டும் சேர்ந்து இந்தியாவைப் பிளந்தன. 'என் உடம்பை வெட்டிக் கூறுபோட்ட பின்புதான், இந்தியாவை நீங்கள் கூறுபோட முடியும்!' என்ற காந்தியின் எதிர்ப்புக் குரல் கேட்பாரற்றுப்போனது.

பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவதாக 1947 பிப்ரவரி மாதம் அறிவித்தது. மவுன்ட்பேட்டன் மார்ச் மாதம் டெல்லி வந்து சேர்ந்தார். இந்தியாவைப் பிரிப்பதற்கு பதில் ஜின்னாவையே ஒன்றிணைந்த

தேசத்தின் பிரதமராக்கலாம் என்று மவுன்ட் பேட்டனிடம் மகாத்மா பரிந்துரைத்த ஆலோசனையை காங்கிரஸ் நிராகரித்தது. மவுன்ட்பேட்டன், ஜின்னாவுடன் ஆறு முறை பேச்சுவார்த்தை நடத்தியும் பயனில்லாத நிலையில், பாகிஸ்தான் பிரிவினையை அறிவித்தார். காங்கிரஸ் சார்பில் நேரு, பட்டேல், கிருபளானியும், முஸ்லிம் லீக் சார்பில் ஜின்னா, லியாகத் அலிகான், அப்துர் ரப் நஷ்டர் ஆகியோர் கூடிய வட்டமேஜை கூட்டத்தில் பிரிவினை அங்கீகரிக்கப்பட்டு ஜூன் 2, 1947-ல் முறையாக அறிவிக்கப்பட்டது.

நிலப்பரப்பு, ராணுவம், காவல் துறை, நாட்டின் உடைமைகள் அவசரம் அவசரமாக 72 நாட்களில் பங்கு போடப்பட்டது.

'அரசியலில் இருந்து மதத்தைப் பிரிக்க முடியாது' என்று திரும்பத் திரும்ப வலியுறுத்திய மகாத்மா, அரசியல் அறவழிப்பட்டதாக அமைவதற்கு மதம் உறுதுணையாக இருக்கும் என்று நம்பினார். ஆனால், மதம் வகுப்புவாதமாக வளர்ந்தபோது, 'நான் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால் மதமும் அரசியலும் தனித்தனியாக இருக்கும் என்று என்

மதத்தின் மேல் உறுதியாகக் கூறுகிறேன். அதற்காக என் உயிரையும் தருவேன். மதம் என் சொந்த விவகாரம். அதில் அரசுக்கு எந்த வேலையும் இல்லை' என்று பிரகடனம் செய்தார்.

அந்த மகாத்மா டெல்லியில் ஏழு நிபந்தனைகளை முன்வைத்து உண்ணாநோன்பு மேற்கொண்டபோது, அவரை முஸ்லிம் ஆதரவாளராகவே கோட்சேவால் பார்க்க முடிந்தது. மசூதிகளில் தங்கியிருக்கும் இந்து அகதிகள் உடனே வெளியேற்றப்பட வேண்டும் என்றும், பிரிவினையின்போது வாக்களித்தபடி 55 கோடி ரூபாய் பாகிஸ்தானுக்குத் தரப்பட வேண்டும் என்றும் காந்தி விதித்த நிபந்தனை, கோட்சேவை கொலை வெறியனாக்கியது. 'காந்தி 18 முறை உண்ணாநோன்பை மேற்கொண்டு இருக்கிறார். அரசின் நடவடிக்கைகளையும், இந்துக்களின் செயல்களையும் எதிர்த்து உண்ணாநோன்பு இருந்த காந்தி, ஒருமுறைகூட முஸ்லிம்களுக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்ததில்லை! பிளவுபட்ட இந்தியாவை அங்கீகரிப்பது சபிக்கப்பட்ட இந்தியாவின் சித்ரவதைக்கு

உடந்தையாக இருப்பதற்குச் சமம். பாகிஸ்தான் பிரிவினையின்போது நடந்த பயங்கர அவலங்களுக்குக் காந்தியே பொறுப்பாளி. அதனால்தான் அவரைச் சுட்டு வீழ்த்தினேன்!' என்று நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கினான் கோட்சே.

மகாத்மாவின் மரணத்துக்குப் பின்பும் மதவாதிகள் மனம் மாறவில்லை என்பதுதான் கொடுமை. இந்து, முஸ்லிம் மக்களிடையே பேதம் வளர்க்கும் சதிச்செயல்கள் இரண்டு பக்கமும் நீடிக்கின்றன. பாபர் மசூதி இடிப்பு அரசியல் அதிகார வேட்டையில் நடந்து முடிந்த உச்சபட்ச அநாகரிகம். மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய வன்முறை ஒட்டுமொத்த மனித குலத்தின் அமைதிக்கு எதிரான அரக்கத்தனம். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பாதிரியார் கிராஹம் ஸ்டெயின் ஒரு ஜீப்பில் தன் இரண்டு மகன்களுடன் உறங்கும்போது எரிக்கப்பட்ட 1999 ஜனவரியில் நிகழ்ந்த மனிதநேயமற்ற செயலை யார் மன்னிக்க முடியும்? ஆனால், கணவனையும், இரு குழந்தைகளையும் கருகிய நிலையில் கண்ட திருமதி

ஸ்டெயின் மன்னித்தார். அவர்தான் உண்மையில் கர்த்தரின் தூதுவர். ஒரிஸ்ஸாவில் கந்தமால் மாவட்டத்தில் ஆகஸ்ட் 23, 2008 அன்று 90 வயதான சுவாமி லட்சுமனானந்த சரஸ்வதி படுகொலை செய்யப்பட்டதற்கு நாகரிகம் சார்ந்த மனிதர்கள் வெட்கத்தில் தலை குனிய வேண்டும். ஆனால், பழிவாங்கும் படலத்தில் பலபேரைக் கொன்று, கிறிஸ்துவ மத, கல்வி நிறுவனங்களில் கோரத் தாண்டவமாடியது எந்த வகையில் நியாயம்?

பிரிவினையின்போது நடந்த மதக் கலவரங்களின் கொடுமையான நினைவுகள் நெஞ்சை நெருப்பாகச் சுட்டதில் ஏற்பட்ட ரணங்கள் மாறாத நிலையில், 1952-ல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் புதிதாகப் பிறந்த ஜனசங்கமும், பழைய இந்து மகாசபையும் இணைந்து அரசியல் ஆதாய நோக்கில் தேர்தல் வெற்றிக் கனவில் களம் இறங்கியபோது, மிக மோசமான தோல்வியைத் தழுவின. இந்து மகாசபை தலைவர் என்.பி.கரே அவருடைய தலைமை பீடமான நாகபுரியில் டெபாசிட் இழந்தார். நேருவுக்கு எதிராக நின்ற சாமியாரின் சாயம்

வெளுத்தது. அன்று தோற்றுப் பின்வாங்கிய வகுப்புவாதம் இன்று வளர்ந்திருப்பதை இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்!

'மார்க்கத்தில் பலாத்காரத்துக்கு இடம் இல்லை' என்கிறது இஸ்லாம். 'விண்ணில் கடவுளுக்கு மகிமையும், மண்ணில் சமாதானமும் நிலவுக' என்கிறது முதல் கிறிஸ்துமஸ் பாடல். 'அன்பே சிவம்' என்கிறது இந்து மதம். இதயத்தின் ஈரமே சமயங்களின் சாரம். 'மதங்களின் பெயரால் பூசல்கள் நிகழ்வதற்கு அரசியலே காரணம்' என்றார் விவேகானந்தர். அதுதானே மறுக்க முடியாத உண்மை!

– *பயணம் தொடரும்..*

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# ஒதுக்கீடு

31 வேதகாலம் முதல் இந்திய சமூக அமைப்பில் ஏதோ ஒரு வகையில் இட ஒதுக்கீடு இருந்தே

வந்திருக்கிறது. தொழிலை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சாதிப் பிரிவுகள், பின்னாளில் அன்றைய பார்ப்பனரின் தந்திரத்தால் பிறப்பை அடிப்படையாகக் கொண்டவையாயின. சாதிகளின் ஏணிப்படி வரிசையில் பார்ப்பனர் மேல் தட்டிலும்... க்ஷத்திரியர், வைசியர் அடுத்தடுத்த தட்டுகளிலும்... சூத்திரர், பஞ்சமர் அடித்தட்டிலும் அமர்த்தப்பட்டனர்.



முதன் முதலில் சூத்திரர்களுக்கான இடஒதுக்கீடு 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜோதிபா புலேவின் இயக்கம் உருவாக்கிய அழுத்தத்தால் வந்து சேர்ந்தது. கோலாப்பூர் மன்னர் ஷாகு சத்ரபதி ஜூலை 26, 1902 அன்று பிற்பட்ட சாதிகளுக்குப் பதவிகளில் 50 சதவிகிதம் ஒதுக்கீடு செய்தார்.

கர்நாடகத்தில் மைசூர் மகாராஜா, பிற்பட்டவர்களுக்குப் போதிய பிரநிதித்துவம் வழங்கும் நோக்கில்... ஒரு கமிஷனை நியமித்தார். இடஒதுக் கீடு வரலாற்றில் இந்தியாவில் தோன்றிய முதல் கமிஷன் இதுவேயாகும். பார்ப்பனர் அல்லாத அனைவரும் பிற்பட்டவர்களே என்று அந்த கமிஷன் குறிப்பிட்டது. அதன்படி 1921-ல் அரசுப் பணிகளிலும், கல்வியிலும் பார்ப்பனர் அல்லாதவர்க்கு இடஒதுக்கீடு வரமாய் வாய்த்தது.

பம்பாய் அரசு 1925-ல்... பார்ப்பனர், பிரபுக்கள், மார்வாரி, பனியா, பார்சிகள் தவிர மற்ற அனைவரும் பிற்பட்டவர் என்று பிரகடனம் செய்தது. 1930-ல் பம்பாய் அரசு நியமித்த 'ஸ்டார் டே கமிட்டி' பிற்பட்டவரை 'ஒதுக்கப்பட்டவர், பழங்குடி மற்றும் மலைவாழ் மக்கள், இதர பிற்பட்ட வகுப்பினர்' என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து... இவர்களுக்குக் கல்வியில் சிறப்புச் சலுகையும், அரசுப் பணிகளில் இடஒதுக்கீடும் வழங்க வேண்டுமென்று பரிந்துரைத்தது. கேரளாவில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு ஜூன்

14, 1936

அன்று அமல்படுத்தப்பட்டது. கொச்சி சமஸ்தானத்தில் 1951-ல் தாழ்த்தப்பட்டவர்க்கு 10 சதவிகிதமும், பிற பிற்படுத்தப்பட்ட சாதியினர்க்கு 30 சதவிகிதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நம்பூதிரிபாட் தலைமையில் 1957-ல் அமைந்த முதல் கம்யூனிஸ்ட் அமைச்சரவை நியமித்த நிர்வாகச் சீர்திருத்த கமிஷனும், 1967-ல் மீண்டும் நம்பூதிரிபாட் தலைமையில் உருவான இடதுசாரி ஜனநாயகக் கூட்டணி அரசு அமைத்த நெட்டூர் தாமோதரன் கமிஷனும் பொருளாதார அடிப்படையில் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு அமைய வேண்டும் என்று பரிந்துரைத்தன. ஆனால், மக்களின் கடும் எதிர்ப்பால் அந்தப் பரிந்துரை நிராகரிக் கப்பட்டது.

தமிழகத்தில் இடஒதுக்கீடு வழங்கியதில் திராவிடக் கட்சிகளின் சாதனை மறுக்க முடியாத சரித்திர நிகழ்வு. தென்னிந்திய நலவுரிமை சங்கத்தின் மூலம் திராவிட இயக்கப் பிதாமகன்கள் டாக்டர் நாயரும், தியாகராயரும் பிராமணர் அல்லாதாருக்கு வேலை ஒதுக்கீடும், கல்விச்

சலுகையும் தரப்பட வேண்டுமென்று 1910-லேயே கோரிக்கை வைத்தனர். வ.உ.சி., பெரியார், திரு.வி.க., சிங்காரவேலர், சர்க்கரை செட்டியார், வரதராஜுலு நாயுடு போன்றோர் காங்கிரஸுக்குள் இடஒதுக்கீட்டுக்காகப் போராடித் தோற்றனர். இடஒதுக்கீட்டை முன்வைத்தே பெரியார் காங்கிரஸிலிருந்து விலகி, 'சுயமரியாதை இயக்கம்' கண்டார். இந்தியாவில் முதன் முதலாக டாக்டர் சுப்பராயன் தலைமையில் அமைந்த அரசுதான் தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப் பட்டோருக்கும் வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் இடஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறை வேற்றியது. 1927-ல் சுப்பராயன் அமைச்சரவையில் அங்கம் வகித்த எஸ்.முத்தையா முதலியார்தான் அரசாணை நிறைவேற அடித்தளம் அமைத்தவர்.






12 பதவிகளில் பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு 5, பார்ப்பனர்க்கு 2, முஸ்லிம்களுக்கு 2, ஆங்கிலோ இந்தியர்க்கு 2, தாழ்த்தப்பட்டவர்க்கு 1 என்று இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. ராஜாஜியின் அமைச்சரவை 1937-ல் அமைந்த போதும் இந்த இடஒதுக்கீட்டில் கைவைக்க இயலவில்லை.

மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1951-ல் காங்கிரஸ் அரசு... பிற்பட்டோருக்கு 25 சதவிகிதம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்க்கு 16 சதவிகித இடஒதுக்கீட்டை அறிவித்தது. கலைஞர் முதல்வரானதும் பிற்பட்டோர் பட்டியலில் மேலும் சில சாதிகளைச் சேர்த்து, அவர்களுக்கு 31 சதவிகிதமும், தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினர்க்கு 18 சதவிகிதமும் கிடைக்கச் செய்தார். எம்.ஜி.ஆர் முதல்வரான பின்பு 9 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவான ஆண்டு வருமானம் உள்ளவர்க்குப் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு செய்யப் போவதாக அறிவித்து, அதற்குப் பேரெதிர்ப்பை சந்தித்தார். அதைத் தொடர்ந்து அவரே, 'வைத்தால் குடுமி; அடித்தால்

மொட்டை' என்ற கதையாக பிற்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 31 சதவிகிதத்திலிருந்து 51 சதவிகிதமாக உயர்த்தினார். கலைஞர், பிற்பட்டோர் ஒதுக்கீட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்றும், தாழ்த்தப்பட்டோரில் அருந்ததியருக்கு ஒதுக்கீடு என்றும் அடுத்த சமூகநீதிக்கு வழி வகுத்தார்.

இட ஒதுக்கீடு எந்த நிலையிலும் 50 சதவிகிதத்துக்கு மேல் போகக் கூடாது என்று உச்சநீதி மன்றம் வரம்பு வைத்து விட்டது. தமிழகத்தில் 69 சதவிகித இடஒதுக்கீடு நடைமுறையில் இருக்கிறது. பல மாநிலங்களில் 50 சதவிகிதத்துக்கு மேல் இடஒதுக்கீடு இருக்கும் நிலையில்... இன்று வரை பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. இந்த நிலையில் பெண்களுக்கு நாடாளுமன்றம், சட்டமன்றம் ஆகிய அமைப்புகளில் மூன்றிலொரு பங்கு இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று தேவகவுடாவின் தலைமையில் இயங்கிய ஐக்கிய முன்னணி அரசு செப்டம்பர் 12, 1996-ல் நாடாளுமன்றத்தில் ஒரு மசோதாவை முன்வைத்தது.

இந்த மகளிர் மசோதா 14 ஆண்டுகளுக்குப் பின்பும் சட்டமாவதில் தடைகள் நீடிக்கின்றன.




'எல்லாப் பூட்டுகளையும் திறப்பதற்கு ஏற்ற திறவுகோல் அரசியல் அதிகாரமே!' என்றார் அம்பேத்கர். பெண்ணடி மைத்தனம் நீக்கப்படுவதற்கான வழிமுறைகளில் ஒன்றுதான் பெண்களுக்கான அரசியல் பிரவேசம். ஆனால், இறுக்கமாக கெட்டி தட்டிப்போன ஆணாதிக்கம் அவ்வளவு எளிதாகப் பெண்களுக்கு வழிவிடத் தயாராக இல்லை!

காந்தியின் தலைமை காங்கிரஸுக்கு வாய்த்த பின்புதான் தேசிய அரசியல் களத்தில் இந்தியப் பெண்கள் நுழைவதற்கான வாசற்கதவு திறக்கப்பட்டது. தேசிய அரசியலில் காந்தியின் செல்வாக்கால், தீவிரமாகப் பணியாற்றப் புறப்பட்ட முதல் பெண்மணி 'கவிக்குயில்' சரோஜினி நாயுடு. கல்விப் பெருமை மிக்க குடும்பத்தில்,

புகழ்பெற்ற விஞ்ஞானிக்கு மகளாகப் பிறந்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்று, வேறு சாதியைச் சார்ந்தவரை மணந்து, அரசியலில் அடியெடுத்து வைத்த சரோஜினி... 1917-ல் காங்கிரஸ் தலைவராக அன்னிபெசன்ட் அம்மையார் இருந்ததற்குப் பின் 1925-ல் அகில இந்திய காங்கிரஸ் தலைமையை அலங்கரித்த இரண்டாவது பெண்மணியாவார். காந்தியடிகளின் உப்பு சக்தியாக்கிரகம் அதிக அளவில் பெண்களை அரசியல்களம் நோக்கி ஈர்த்தது. காந்தி, நேரு, அம்பேத்கர் போன்றவர்கள் ஜனநாயகத்தின் மீது கொண்டிருந்த அளவற்ற ஈடுபாட்டினால், இந்தியப் பெண்களுக்கு வாக்குரிமை எளிதாகக் கிட்டியது.

'முற்போக்குச் சிந்தனை உடைய நாடு!' என்று பெருமிதம் கொள்ளும் அமெரிக்காவில்கூட, 'பெண்கள் வாக்குரிமை இயக்கம்' வீதிகளில் நின்று போராடிய பின்புதான் 1919-ல் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, 1920 ஆகஸ்டில் நிறைவேற்றப்பட்டது. 'நாடாளுமன்றத்தின் தாய்' என்று போற்றப்படும்

இங்கிலாந்தில் ஆயிரம் கிளர்ச்சிகளுக்குப் பின்னரே 1928-ல் பெண்கள் வாக்குரிமையை அடைய முடிந்தது. பெண்கள் வாக்குரிமையைப் பெற்றாலும் மிகக் குறைந்த அளவிலேயே மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நிலை இன்று வரை நீடிக்கிறது. 1958-ல் அமெரிக்க நாடாளுமன்றத்தில் 9 பெண்களும், இங்கிலாந்து மக்களவையில் 14 பெண்களும்தான் இடம் பெற முடிந்தது. அமெரிக்காவில் முதலில் கறுப்பர்களுக்கும், பெண்களுக்கும் வாக்குரிமை மறுக்கப்பட்டது. அமெரிக்க அரசியலமைப்பின் 75-வது திருத்தம் நிற அடிப்படையில் வாக்குரிமை மறுக்கப்படுவது சட்டவிரோதம் என்று சொன்ன நிலையிலும், பெண்களின் வாக்குரிமை குறித்து அது பேசவில்லை. பெண்ணியத்துக்கு அடிப்படை ஆதாரமான சமத்துவம், சுதந்திரம் பற்றிய கருத்தாக்கங்களின் விளை நிலமான பிரான்சில் கூட, மகளிர்க்கு எளிதாக வாக்குரிமை கிடைத்து விடவில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பும் உலகின் பல நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை வெறும்

கனவாகவே நிலவியது.

சமூகத்தின் சகல தளங்களிலும் பெண் என்பவள் சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும் செயற்பட ஆணாதிக்கம் அனுமதிப்பதில்லை. சமத்துவம் போதித்த புத்தர் பிரானே தன்னுடைய சமயத்தில் பெண்களுக்கு இடமளிக்கத் தயங்கினார். புத்தரின் சிற்றன்னை கௌதமியை புத்த மடாலயத்தில் சேர்ப்பதற்கு அனுமதி கோரிய சீடன் ஆனந்தனிடம், 'பெண்கள் விரைவில் கோப வயப்படுபவர்கள்; காம உணர்ச்சி மிக்கவர்கள்; முட்டாள்தனமானவர்கள். அதனால்தான் அவர்களுக்குப் பொது மன்றங்களிலும், வணிகத் துறையிலும் இடம் வழங்கப்படுவதில்லை. எந்தத் தொழிலில் ஈடுபட்டும் அவர்களால் வாழ்க்கையை நடத்த முடியாது, ஆனந்தா!' என்று கௌதமர் சொன்னதாகக் கூறப்படுகிறது. தேவி பாகவதத்திலும், இந்தியாவின் புகழ் பெற்ற இதிகாசமாகிய மகாபாரதத்திலும்கூட பெண்ணை இழிவாகச் சித்திரிக்கும் பகுதிகளை எடுத்துக் காட்ட முடியும் பெண் எல்லாக் காலங்களிலும் சுயவிருப்பத்துக்கு இடம் தராத, பிள்ளை

பெறும் இயந்திரமாக, வீட்டு வேலை செய்யும் அடிமையாக இருக்க வேண்டும் என்பதே ஓர் ஆணின் அந்தரங்க ஆசையாக இருக்கிறது. தன்னில் ஒரு பாதி பெண் என்று சொல்வது ஆணின் பாசாங்கு மொழியன்றி, வேறில்லை என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

மாநிலங்களவையில் மன்மோகன் சிங் அரசு மிகவும் முயன்று பி.ஜே.பி., இடது சாரிக் கட்சிகள், தி.மு.க. போன்ற மாநிலக் கட்சிகளின் ஆதரவோடு மார்ச் 9, 2010 அன்று மகளிர் மசோதாவை நிறைவேற்றி விட்டது. மசோதாவுக்கு ஆதரவாக 245 உறுப்பினர்கள் உள்ள மாநிலங்களவையில் 186 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஒருவர் மட்டும் எதிர்த்து வாக்களித்திருக்கிறார். அரசியலமைப்பில் 108-வது திருத்த மசோதா, சட்டமாக இடம் பெற அடுத்து நாடாளுமன்றத்தின் ஆதரவையும் பெற்று 14 மாநிலங்களால் (மொத்த மாநிலங்களில் பாதிக்குப் பாதி) அங்கீகரிக்கப்பட வேண்டும். இது எளிதில் நடக்குமா? இந்த அதிசயம் நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் 'ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு' என்ற முட்டுக்கட்டையை

முலாயம் சிங்கும், லாலுபிரசாதும், ஷரத் யாதவும் திட்டமிட்டு உருவாக்கியுள்ளனர்.

பெண்களுக்கான ஒதுக்கீட்டைப் பெறுவதற்குப் பெண்களின் தலைமையில் இயங்கும் கட்சிகளாவது ஆதரவாக இயங்குகின்றனவா என்றால், 'இல்லை' என்பதுதான் கசப்பான உண்மை. கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியவில்லை. ஆனால், மாயாவதி வானமேறி வைகுந்தம் பார்க்கலாம் என்று அழைக்கிறார். 'எல்லா மாநிலச் சட்டமன்றங்களிலும் மகளிர்க்கு 50 சதவிகிதம் இடஒதுக்கீடு கிடைக்கும் வகையில் மசோதா திருத்தப்பட வேண்டும்' என்கிறார் மாயாவதி. 'முஸ்லிம்களுக்கு உள் ஒதுக்கீடு வேண்டும்' என்கிறார் மம்தா பானர்ஜி. மத அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வதற்கு அரசமைப்புச் சட்டத்தில் இடமில்லை. இதை மம்தா அறியமாட்டாரா? மகளிர் மசோதா சட்டமாவதற்கு சோனியா காந்தி மிகவும் சிரமப்படுகிறார். மகளிர் மசோதாவுக்கு ஆதரவு தரும்படி அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அன்புடன் வேண்டுகிறார் கலைஞர். எதற்கு இவர்கள் சிரமப்பட

வேண்டும்? தேர்தலின்போது ஒவ்வொரு அரசியல் கட்சியும் நிறுத்தும் வேட்பாளர்களில் மூன்றில் ஒரு பங்கு இடங்களில் பெண்களை நிறுத்த முடிவெடுத்தால், அதை எந்தச் சட்டம் தடுக்க முடியும்? சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் சோனியா காந்தி 100 இடங்களில் பெண்களை ஏன் வேட்பாளர்களாக நிறுத்தவில்லை? ஜெயலலிதா, மாயாவதி, மம்தா ஆகியோர் தங்கள் கட்சிகளின் வேட்பாளர்களாக அதிக அளவில் பெண்களை ஏன் நிறுத்தவில்லை? மகளிர் மசோதா சட்டமாகாமல் போனாலும், வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் நிற்கும் மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்கு இடத்தை கலைஞர் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய முன்வருவாரா? சமூக நீதிக் காவலரும், சமூக நீதி வீராங்கனையும் தங்கள் கட்சி அமைப்புகளிலிருந்து சட்டமன்றம், நாடாளுமன்றம், அமைச்சரவை வரை பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் ஒதுக்கி இந்திய அரசியலுக்குப் புதுப் பாதையிடுவதற்குப் புறப்படுவார்களா? மாட்டார்கள்! காரணம், எப்போதும் இது ஆண்களின்

உலகம்.

கனிமொழியின் 'அகத்திணை' கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள, 'நம்பிக்கையின்மையையே சார்ந் திருக்கின்றன நம்பிக்கைகள்' என்ற வார்த்தைகள் போதும் மகளிர் மசோதாவின் நிலையை விளக்க!

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

சந்நியாசம்

32 எவனிடம் விருப்பும் வெறுப்பும்இல்லை யோ... அவனே உண்மையான சந்நி யாசி. ஆசையும் தேவையும் அற்ற நிலையில் ஒரு மனிதனுள் நிகழும் மாற்றமே சந்நியாசம். பந்தங்களிலிருந்து விடுபடுவதும், பற்றுகளிலிருந்து விலகி நிற்பதும் சந்நியாசத் தின்

அடிப்படை தர்மங்கள். ஒரு சந்நியாசிக் குரிய இலக்கணங்களை மகாபாரதம் வரையறுத்துள்ளது. ஐந்து இலக்கணங்கள் அமைந்தவனே இந்து சமூக அமைப்பில் ஒரு சந்நியாசியாக அங்கீகரிக்கப்படுவான். கையில் சொந்தமாக ஒரு பிச்சைப் பாத்திரம் இருக்கலாம்; அதற்கு மேல் எந்த உடைமையும் இருக்க லாகாது. கந்தலாடையைத் தவிர வேறெவற்றையும் அணியக்கூடாது. இயற்கை தந்திருக்கும் மரத்தின் நிழலிலோ, மலைக்குகையின் அடியிலோ தங்கலாம்; செயற்கையாக அமைக்கப்பட்ட உறைவிடம் தங்கியிருக்கத்தகாது. ஒரு பெண்ணின் கையை அலங்கரிக்கும் ஒற்றை வளையலைப் போன்று, துறவி தனிமையை நாட வேண்டும். உலகத்தின் உயிர்கள் அனைத்தையும் பேதமின்றி ஆரத் தழுவி அன்பு செய்து, அவற்றின் நலனுக்காக இறையருளைப் பிரார்த்திக்க வேண்டும். பாரதம் போட்டு வைத்த பாதையில் பயணிக்கும் ஒரு சந்நியாசியைக்கூட இந்த மண்ணில் இன்று நாம் பார்க்கவியலாது. காவி உடுத்தவரை எல்லாம்

புலன்களை வென்ற போதி புத்தர்களாக பாவித்து, அவர்களுடைய கால்களில் விழும் பழக்கத்தை நாம் முதலில் கைவிடவேண்டும்!



மனம் சமநிலை அடைந்தவருக்குத் தான் சந்நியாசம் சாத்தியம். அதனால் தான்... பகவத்கீதை, 'கர்மத்தைப் பற்றின்றிச் செய்பவன், மனம் தெளிந்தவன், ஐம்பொறிகளை அடக்கியவன், தன் ஆத்மாவில் பிறவுயிர்களின் ஆத்மாவை தரிசிப்பவன் சந்நியாசி' என்கிறது. நீரில் பிறந்த தாமரை... அந்த நீரில் நனையாமல் இருப்பது போன்று, செயல்களைச் செய்யும் மனிதன் அவற்றின் விளைவுகளில் பற்றின்றி விளங்க வேண்டும் என்பதுதான் கீதை காட்டும் பாதை.

எல்லாவற்றையும் துறப்பது எல்லோருக்கும் எளிதன்று. அதனால்தான், அனைத்தையும் துறந்தவன் போல் நடிப்பவனிடம் நாம் நம்மை இழந்து நிற்கிறோம். இளமையிலேயே உணர்வுகளை வென்று துறவுக்கோலம் பூண்டதாக பாவனை காட்டுபவனிடம், நாம் மிகுந்த விழிப்பு உணர்வுடன் நெருங்க வேண்டும். பிரமசரியம், இல்லறம், வனப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற படிநிலைகளை ஒவ்வொன்றாகக் கடக்க வேண்டும் என்பதுதான் இந்து தர்மம் போதிக்கும் பாடம். பரமஹம்சர், விவேகானந்தர், ரமணர் போன்றவர்கள் விதிவிலக்குகள்.

ஐந்து வயது சாரதாவை 23 வயது ராமகிருஷ்ணர் மணம் புரிந்தார். திருமணம் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு தட்சிணேசுவரம் திரும்பியவர், காளிகோயில் பணிகளில் தன்னை மறந்தார். உடல் சார்ந்த உணர்வுகளுக்கு இளமை முதல் அவர் உள்ளத்தில் இடம் இருந்ததில்லை. கணவருக்குப் பக்கத்தில் இருந்து சேவை செய்யும் நோக்கில், 18 வயதில் சாரதா தேவி ராமகிருஷ்ணரை வந்தடைந்தார். 'உலக வாழ்க்கையில் நீ

என்னை இழுக்க விரும்புகிறாயா?' என்று பரமஹம்சர் தம் மனைவி சாரதையிடம் கேட்டார். 'உங்கள் ஆன்மிக வாழ்க்கையில் உடனிருந்து உதவுவதற்காகவே நான் வந்திருக்கிறேன்' என்றார் சாரதாதேவி. 'கோயிலில் நான் வழிபடும் அன்னையும், என்னைப் பெற்று வளர்த்த தாயும், என் கரம் பற்றிய நீயும் என்னளவில் ஒன்றே!' என்றார் அந்த மகான். இருவர் மனநிலையும் ஆழ்ந்த சோதனைக்கு ஆட்படும் வண்ணம் ஒரே அறையில் ஆறு மாத காலம் தன்னுடன் படுத்துறங்கும்படி மனைவியைப் பணித்தார் பரமஹம்சர். இருவருடைய உணர்வுகளும் இறுதி வரை கீழிறங்கவில்லை. உடல் நாட்டம் இல்லாத சாரதா தேவியை பீடத்தில் அமரச் செய்து, காளியை நெஞ்சில் நிறுத்தி... பாத பூஜை செய்த பரமஹம்சர் போன்ற ஒரு மகாபுருஷரைக் காண்பதும் எளிதன்று; அவரைப் போல் வாழ்வதும் எளிதன்று.

சுவாமி விவேகானந்தர் தன் கனவின் கனவிலும்.. இன்ப நாட்டத்துக்கு இடம் தராதவர். இளம் பருவத்தில் தேர்வுக்குப் படிப்பதற்காகப் பாட்டியின் வீட்டில் தங்கினார்

விவேகானந்தர். படிப்பின் இடையே அவர் இனிமையாகப் பாடுவதில் ஈர்க்கப்பட்ட எதிர்வீட்டு இளம் விதவை, அவர் மீது நேசம் வளர்த்து ஒரு நாள் இரவு யாருமறியாமல் அவரது அறைக்குள் நுழைந்து... அவரைத் தன்வயப் படுத்த முயன்றாள். 'தாயே! இந்த இரவில் இப்படி நீங்கள் என்முன் வந்து நிற்பது முறையில்லை!' என்று சொல்லியபடி அவளுடைய பாதங்களில் விழுந்து பணிந்தார் நரேந்திரர் என்ற விவேகானந்தர்.

'தவம்' என்றால் எரிப்பது என்று பொருள். உலகியல் ஆசைகளை, புலன்களின் வேகத்தை, எதிர்மறைப் பண்புகளை எரிப்பதுதான் தவம். காமத்தை அடியோடு எரித்து அழிக்க முடிவு செய்த அந்த ஆன்மிக ஞானி, தன் இளம் வயதில், கனன்று கொண்டிருந்த குளிர் காயும் அடுப்பின் மேல் ஆண் உறுப்புப்படும்படி அமர்ந்து விட்டார். புண் ஆறுவதற்குப் பல மாதங்கள் ஆனாலும் காமம் அக்கணமே மனதிலிருந்து கழன்றுவிட்டது.

விவேகானந்தரைப் போன்று வேடம் புனைந்து, ஆன்மிக உரை நிகழ்த்துபவரெல்லாம் புலனடக்கம் பூண்ட மனிதப்

புனிதராக மாறிவிடக்கூடுமா? கேழ்வரகில் நெய்யென்றால், கேட்பவர்க்காவது புத்தி வேண்டாமா?

யாரேனும் ஒரு மகானை குருவாக ஏற்று, அவரது உபதேசங்களை உள்வாங்கி... மெய்ஞ்ஞானம் பெற்றவரில்லை ரமணமகரிஷி. மதுரைக்கு அருகில் திருச்சுழியல் என்ற ஊரில் பிறந்து, மதுரையில் பள்ளிக் கல்வி பெற்று, 'அருணாசலக் காதல்' முதிர்ந்து, மிகச் சிறிய வயதில் ஊரையும் உறவையும் துறந்து திருவண்ணாமலை அடைந்து, ஆசாபாசங்களின் வேரறுத்து, அருணாசலேஸ்வரக் கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்தில் ஓரமாக அமர்ந்து மூன்று மாதங்கள் சமாதி நிலையில் இருந்தவர் ரமணர். 'தனிமை கண்டதுண்டு; அதிலே சாரம் இருக்குதம்மா' என்றான் பாரதி. தனிமைத் தவமிருக்க விரும்பிய ரமணர் புழுவும் பூச்சியும் உலவிய, இருள் மண்டிக்கிடந்த பாதாள லிங்கக் கருவறையில் பல மாதங்கள் சமாதி நிலையில் அமர்ந்திருந்தார். அவரது உடம்பு முழுவதும் புழு பூச்சிகளால் அரிக்கப்பட்டு, ரத்தமும் சீழும் கசிந்தன. வாய் பேசா மௌனியாக

வீற்றிருந்த ரமணரின் வைராக்கியம் கண்டு ஊரே வியந்தது. 'நான் யார்?' என்று நம்மை உள்முகத் தேடல் செய்யச் செய்த அந்த ஞானி, ஒரு கோவணத்துக்கு மேல் எதையும் சொந்தம் கொண்டதில்லை.

காந்தி பிறந்த போர்பந்தரிலிருந்து கைத்தடியுடன் வருபவரெல்லாம் காந்தியாகக் கூடுமா? ஆனால், நாம் திருவண்ணாமலையில் இருந்து வந்து ஓஷோவின் புத்தகங்களிலிருந்தும், ஜென் கதைகளில் இருந்தும் அரைகுறையாக அறிந்தவற்றை உளறிய ஓர் இளைஞனை, கடவுளின் அவதாரமாகக் கொண்டாடி... எந்த ஞானத்தின் சுவடும் படியாதவனின் பாதங்களில் கோடிக்கணக்கில் கொட்டிக் குவித்த பேதைகளாகப் பாழ்பட்டுப் போனோம்!

மொத்தத்தில், சந்நியாசம் பற்றிய சரியான புரிதல் நமக்கில்லை. 'தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும்... பிறரைக் காப்பாற்றவும் சக்தி படைத்த மனிதன் சந்நியாசம் தரிப்பது போலி வேடமாகவே முடியும். 'பிரமசரியம், இல்லறம், வனவாசம், சந்நியாசம் என்ற நான்கு நிலைகளில் இல்லறமே சிறந்தது. இல்லறத்தானை

நம்பியே, மற்ற மூன்று தர்மங்களைப் பின்பற்றுபவரும் உள்ளனர். இல்லறம் இல்லாவிடில், பிற மூன்று தருமங்களும் நசிந்துவிடும்' என்கிறது மகாபாரதம். சுவாமி விவேகானந்தர், 'பைத்தியம் பிடித்துப் போய் சமுதாயத்தை உதறிவிட்டுக் காட்டுக்கு ஓடிக் குகைகளில் வாழ்ந்து உயிரை விடவேண்டிய அவசியமில்லை. நாம் எங்கே இருந்தோமோ... அங்கேயே இருப்போம். கண்ணால் காணும் உங்கள் சகோதரனிடம் உங்களால் அன்பு செய்ய முடியாதென்றால், கண்ணுக்குத் தோன்றாத கடவுளிடம் நீங்கள் எப்படி அன்பு கொள்ள முடியும்? உங்கள் முன் தந்தை, தாய், நண்பன், குழந்தை என்று பல்வேறு உருவங்களில் தோன்றும் ஒவ்வொருவரும் அந்த அழிவற்ற ஆனந்தப் பொருளான கடவுளே' என்று தெளிவுபடுத்தினார்.

சந்நியாசம் என்பது சுயநலம் துறப்பது; தன் நலனிலும், தன்னைச் சார்ந்தவர் நலனிலும் மட்டும் நாட்டம் கொள்ளும் சாதாரண மனித வாழ்வைத் துறந்து, உலகம் முழுவதையும் தன் உறவாக ஏற்று, எல்லா உயிர்களின்

நலனுக்காகவும் செயற்படும் பெருவாழ்வின் பேரருளில் கரைந்து போவது! காவி உடுப்பதும், கற்றைச் சடைமுடி வளர்ப்பதும் சந்நியாசமன்று.

'வீட்டை விட்டுக் காட்டுக்குப் போவதால்,ஆணவம் அழியாது. உறவைத் துறந்த சந்நியாசி என்ற உணர்வு, 'நான் சந்நியாசி' என்ற அகந்தையைப் பற்றிக் கொள்ளும். வீடானாலும், காடானாலும் மனத்தில் துறவுநிலை உண்டாக வேண்டும். காட்டுக்குப் போய் அகந்தையை மாற்றுவதென்றால், அதை வீட்டிலும் செய்யலாம். அகத்துறவு அமைந்தவர்க்கு எந்த இடத்தில் இருந்தாலும் அத்துறவு நிலை கெடாது' என்றார் ரமணர். நமக்கு பிரேமானந்தா முதல் நித்தியானந்தா வரை ஞானிகளாகவும், யோகிகளாகவும் முதலில் காட்சி தருகின்றனர். பின்னாளில் அவர்களுடைய காம லீலைகள் வெளிப்படும் போது அவர்கள் மீது காறி உமிழ வேண்டும் போல் நெஞ்சம் கசந்துவிடுகிறது. அவர்களைப் பற்றி நமக்குள் நாமாகவே உருவாக்கி வைத்திருக்கும் பிம்பம் உடையும் போது, நாம் நிலைகுலைந்துவிடுகிறோம்.

இந்த அற்ப மனிதர்களிடம் நம்மைச் சரணடையத் தூண்டுவது எது? அவர்களுடைய மூலம் குறித்து ஏன் நாம் ஆய்வு செய்வதில்லை? 'உடைமையற்றவனாக இருக்கவேண்டிய சந்நியாசிக்கு ஏன் கோடிக்கணக்கில் சொத்து?' என்ற கேள்வி எழவேண்டாமா! கந்தை அணிய வேண்டியவன் கழுத்து முதல் கால்வரை தங்கம் அலங்கரிப்பதே அவனுடைய போலித்தனத்தை வெளிப்படுத்தவில்லையா? தனிமையில் இருக்க வேண்டிய துறவிக்குப் பன்னாட்டு நிறுவன முதலாளிக்கு இருப்பதுபோல் பரிவாரம் எதற்கு? ஜீன்ஸ் கால்சட்டையும், கறுப்புக் கண்ணாடியும், விமானங்களில் முதல் வகுப்பில் பயணமும், ஐந்து நட்சத்திர விடுதி வசதிகளுமாக நம்மிடையே உலவும் நவீன சந்நியாசிகளின் உபதேசத்தால், எந்த ஏழையின் வாழ்க்கைச் சிக்கல் தீர்ந்தது?



பரமஹம்ஸரும், விவேகானந்தரும், ரமணரும் தங்களை அவதாரங்கள் என்று ஒருபோதும் அறிவித்ததில்லை.

அவர்களுடைய நிழலைக் கூடத் தீண்டத் தகுதியற்ற மிகச் சாதாரண போகிகள் தங்களை பகவான்களாகவும், கடவுளாகவும் அறிவித்துக் கொண்டதற்கு நம் அறியாமையும், மந்தை மனோபாவமும்தானே (herd mentality) முதற்காரணம்!

'இந்தியாவில் 30 கோடி வேதாந்திகள் இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், ஆயிரத்தில் ஒருவன் ஆன்மஞானம் பெற்றால் கூட, இந்த உலகம் விரைவில் பெரிய மாறுதலை அடைந்துவிடும். நம்மளவில் ஆன்மிகம் என்பதெல்லாம் வெறும் சாஸ்திர அறிவு, வெறும் வாய் ஜம்பம். ஒருவனுக்கு நன்றாகப் பேசத் தெரிந்தால் போதும்... அவனை ஆன்மிகவாதி என்போம். இது ஆன்மிகமும் அல்ல, மதமும் அல்ல. வார்த்தைகளை அற்புதமாக ஒன்று சேர்க்கும் திறமை, பேச்சாற்றல், புத்தகங்களுக்குப் பல விதங்களில் விளக்கங்கள் தரும் சாதுரியம்... மக்களுக்கு மகிழ்ச்சி தர மட்டுமே பயன்படும். ஆனால், இவை ஆன்மிகம் ஆகாது' ('எது இன்பம்' என்ற நூலில்) என்று விவேகானந்தர் சொன்னதை நவீன

நித்தியானந்தர்களோடு சேர்த்து, சிந்திப்பது நல்லது. ஆன்மிகத்தை உணர வேண்டும். வெறும் பேச்சால் எந்தப் பயனும் இல்லை.

புத்தர் மனித வாழ்வின் துயரங்களைத் தீர்ப்பதற்காகத் தான் துறவு பூண்டார்; அரச போகங்களை அனுபவிப்பதற்காகவே நித்தியானந்தர் போன்ற போலித் துறவிகள் பொய் வேடம் புனைகின்றனர். ஆனால், சித்தார்த்தனோ அரச சுகங்களைப் புறந்தள்ளி, புத்தரானார். போதி மரத்தடியில் புத்தஞானம் பெற்றவரைச் சோதிக்க மாறன் தன் அழகிற் சிறந்த பெண்களை அனுப்பி மோகவலை விரிக்கச் செய்தான். புத்தர் சற்றும் சலனப்படவில்லை. இயேசு, ஞானஸ்நானம் பெற்று, 40 நாட்கள் உபவாசம் இருந்த பின்பு அவரை சோதிக்க வந்த சாத்தான், 'நீர் சாஷ்டாங்கமாக விழுந்து என்னைப் பணிந்து கொண்டால்... உலகின் சகல ராஜ்ஜியங்களையும் உமக்குத் தருவேன்' என்று ஆசை காட்டியபோது, 'அப்பாலே போ சாத்தானே!' என்றார். சலனங்களுக்கும், சபலங்களுக்கும் ஆட்படாதவர்களே நம் ஆராதனைக்குரியவர்கள். காமமும்

காஞ்சனமும் (தங்கம்) தவிர்த்தவர்கள் ராமகிருஷ்ணரும், விவேகானந்தரும், ரமண மகரிஷியும். ஆனால், காமத்திலும் காஞ்சனத்திலும் தங்களை முற்றாகத் தொலைத்தவர்கள் நம் நவீன சாமியார்கள்!

பொருள் தேட்டமும், இன்ப நாட்டமும் இன்றைய நுகர்பொருள் கலாசாரத்தின் முற்றுகையில் நம் மக்கள் மனங்களில் வெறியாக வளர்ந்துவிட்டன. தேவைகளும் ஆசைகளும் பல்கிப் பெருகிவிட்ட வாழ்வில்... சிக்கல்களும் பெருகுவதைத் தவிர்க்க முடியாது. 'ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்; ஆசை விடவிட ஆனந்தம் ஆகுமே' என்கிறது திருமந்திரம். ஆசைகளும் தேவைகளும் அளவு மீறாத வரை, நாம் சாமியார்களையும், உபன்யாசகர்களையும் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. பிறர் மீது அன்பு செய்வதை வாழ்க்கை நெறியாக வகுத்துக் கொண்டால், அதில் கிடைக்கும் பேரானந்தம் எந்த நித்தியானந்தத்திடம் சென்றாலும் கிட்டுவதில்லை. அளவான உணவு, மிதமான காமம், போதுமான உறக்கம், தேவைக்கேற்ற உழைப்பு

உள்ளவர்கள் எவரிடத்தும் போய் எந்த யோகமும் பயிலத் தேவையில்லை. நம்மை அறிந்துகொள்ள ஒவ்வொருவருக்கும் 'உள்முகத் தேடல்' முக்கியம். நம் மனதுக்குள் செல்லும் மார்க்கமே தியானம். கும்பலிலிருந்து கொஞ்ச நேரம் விடுபட்டு, தன்னந்தனியே கண்மூடி நம் நிறைகுறைகளை அகத்தாய்வு செய்தால் போதும். நிறைகளைப் பெருக்கவும், குறைகளைத் தவிர்க்கவும் அது வழிகாட்டும். புத்தர் கண்மூடும்போது கடைசியாக 'உனக்கு நீயே ஒளியாவாய்' என்று உபதேசித்தார். 'நமக்கு நாமே ஒளி' என்பது நெஞ்சில் நிலைத்து விட்டால்... நமக்கு சாமியார்களும் வேண்டாம்; எந்த சத்குருக்களும் வேண்டாம்.

'ஜீவன் முக்தி' என்ற ஓஷோவிடமிருந்தும், ஜென்னிடமிருந்தும் பெற்றவற்றை இறக்கி வைத்த தன்னுடைய 'இரவல் சரக்கு' நூலில் நித்தியானந்தர் சொல்கிறார் 'ஞானி சொல்வதைச் செய்யுங்கள்; செய்வதைச் செய்யாதீர்கள்' என்று! ஞானிகள் செய்வதை நம்மால் செய்ய முடியாது. இந்தப் போலிகள் செய்வதை

நாம் செய்யவே கூடாது!

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்




33 'மானுடத்தை நேசிப்பதில் நாங் கள் யாருக்கும் குறைந்தவர்கள் இல்லை. எங்களுக்கு எவரிடத்தும் தனிப்பட்ட பகைமை இல்லை. நாங்கள் மனித வாழ்வை, விவரிக்க இயலாத புனிதமானதாகக் கருதுகிறோம். மனிதத் தத்துவத்துக்குச் சேவை செய்வதில் மற்றவர்க்குத் தீங்கிழைப்பதைவிட, எங்கள் உயிரை நாங்கள் மாய்த்துக்

கொள்வதையே விரும்புவோம். நாங்கள் ஏகாதிபத்தியவாதிகளின் கூலிப்பட்டாளத்தைப் போன்றவர்கள் அல்லர். அவர்களுக்கு ஈவிரக்கமின்றி மற்றவரைக் கொல்வதையே கற்பிக்கின்றனர். நாங்கள் வாழ்க்கையைக் கௌரவிப்பவர்கள். இயன்ற மட்டும் அதைப் பாதுகாக்கவே முயற்சிக்கிறோம். புரட்சி உலகத்தின் விதி. அது மனிதகுல முன்னேற்றத்தின் அடிப்படை. ரத்தம் தோய்ந்த போராட்டம் தவிர்க்க முடியாததன்று. தனிநபர் பலாத்காரத்துக்கு அதில் இடமில்லை. அது வெடிகுண்டுகள், துப்பாக்கிகளைக் கொண்ட சம்பிரதாயம் அல்ல. புரட்சியை எதிர்ப்பவர்கள்... வெடிகுண்டு, துப்பாக்கி, ரத்தக் களறி போன்றவையே புரட்சி என்று தவறாகப் பிரசாரம் செய்கின்றனர். புரட்சியின் உண்மையான அடிப்படை, சமுதாயத்தைப் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் மாற்றவேண்டும் என்னும் மக்களின் தீவிரமான விருப்பமே ஆகும்' என்று நீதிமன்றத்தில் பகத்சிங் அளித்த வாக்குமூலந்தான் எவ்வளவு அறிவார்ந்தது!

புரட்சி வேறு; பயங்கரவாதம் வேறு. அடிமை இந்தியாவில் பகத்சிங் தோழர்கள் ஆயுதம் ஏந்தியது தவிர்க்க முடியாதது. ஆனால், சுதந்திர இந்தியாவில் வாக்குச்சீட்டே வன்மையான ஆயுதம். எந்த ஆட்சியையும் மக்கள் நினைத்தால், மாற்ற முடியும். அதற்குத் தேவை அறியாமை கலப்பற்ற விழிப்பு உணர்வு. 'சமுதாயம் என்பது நமது தேவைகளால் உருவாகிறது. அரசாங்கம் என்பது நமது கயமையால் உருவாகிறது' என்றார் வில்லியம் கோட்வின். உலகெங்கும் அரசியல்வாதிகள் ஒரே மாதிரிதான் உலவுகின்றனர். ஆறில்லாத பொட்டலில் அணை கட்டுவோமென அவர்கள் வாக்குறுதி வழங்குவர். கட்சி அரசியல் இந்தியாவில் இழிந்துவிட்டது. அரசியல் என்ற ஒரே தொழிலுக்குத்தான் எந்தத் தயாரிப்பும் தேவையில்லை என்றாகிவிட்டது. நம் வாழ்வின் சகல அம்சங்களிலும் அரசியல் தொற்றுநோய் பீடித்துவிட்டது. அரசியல் ஒழிந்த தன்மைதான் (Depoliticalisation)இந்நோய்க்கு ஒரே மருந்து. இந்தியாவில் ஜனநாயகத்தின் பேரால் நடப்பது பொம்மலாட்டம். பலனை எதிர்பாராத சேவையும்,

சுயநலம் சாராத தியாகமும், தேசத்தின் மீதான பக்தியும் கொண்டவர்களைப் பொதுவாழ்வில் காண்பது அரிதாகிவிட்டது. சமுதாய மாற்றம் விரைவில் நிகழ்ந்தாக வேண்டும். ஆனால், வன்முறை அதற்குரிய வழியன்று. வன்முறையில் கட்டமைக்கப்படும் எந்த மாற்றமும் கால நடையில் காணாமற் போகும்.

மேற்கு வங்கத்தில் 'நக்ஸல்பாரி' என்ற கிராமத்தில் இடதுசாரி தீவிரவாதத்துக்கான விதை முதலில் தூவப்பட்டது. மாசேதுங்கின், 'துப்பாக்கிக் குழலின் வழியேதான் அதிகாரம் கசிகிறது' என்ற சித்தாந்தத்தில் சிந்தை செலுத்தியவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கத்திலிருந்து பிரிந்து... மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் இயக்கத்தைச் சாரு மஜும்தார் தலைமையில் உருவாக் கினர். விவசாயிகளைச் சுரண்டிக் கொழுத்த பெருநிலக் கிழார்களைப் படுகொலை செய்வதுதான் அந்த இயக்கத்தின் முதற்பணியாக இருந்தது. தனிமனிதப் படுகொலைகள் புரட்சியாகாது என்று கருதியவர்கள் சத்யநாராயண சிங் தலைமையில் மஜும்தாருக்கு

எதிராகக் கொடிபிடித்தனர். இயக்கம் இரண்டானது. மஜும்தார் 1972-ல் கைது செய்யப்பட்டு, அலிப்பூர் சிறையில் மரணமடைந்தார். அப்போது காங்கிரஸ் முதல்வராக இருந்த சித்தார்த்த சங்கர் ரேவின் கடும் நடவடிக்கைகளால் நக்ஸல் இயக்கம் வலுவிழந்தது. ஆந்திராவில் சீதாராமையா தலைமையில் 1980-ல் ஆயுதமேந்தும் 'மக்கள் போர்க்குழு' உருப்பெற்றது. பீகாரை மையமாகக் கொண்டு 1982-ல் மார்க்சிய-லெனினிய விடுதலை முன்னணி யின் கிளை அமைப்பாக 'இந்திய மக்கள் முன்னணி' வினோத் மிஸ்ரா தலைமையில் இயங்கத் தொடங்கியது. இந்த அணி தேர்தல் அரசியலில் ஈடுபட்டது. மார்க்சிய-லெனினிய அமைப்பு 1995-ல் அரசியல் கட்சியாக தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்டது.

பல்வேறு பகுதிகளில் இருந்து இயங்கிய நக்ஸலைட்கள் தங்களுக்குத் தாங்களே முரண்பட்டு உட்பூசலில் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்குள் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாக, 2004-

ல் 'மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட்' என்னும் புதிய அமைப்பு உருவானது. ஆறே ஆண்டுகளில் இந்த இயக்கம் மத்திய, மாநில அரசுகளை அச்சுறுத்தும் வண்ணம் விசுவரூபம் கொண்டது. இன்று இந்தியா முழுவதும் 20 மாநிலங்களில் உள்ள 220 மாவட்டங்களில் மாவோயிஸ்ட்கள் இயக்கம் வேர் பிடித்து வளர்ந்து விட்டது. நம் நாட்டின் நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி மாவோயிஸ்ட்களின் முற்றுகையில் முடங்கிவிட்டது. சத்தீஸ்கர், ஒரிஸ்ஸா, ஆந்திரம், பீகார், ஜார்கண்ட், உத்தரகாண்ட், மேற்கு வங்கம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் இந்த இயக்கம் ஆதிக்கம் செலுத்துகிறது. சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள தண்டேவடாவில் பாதுகாப்புப் படையினர் 76 பேர் மிகக் கோரமான முறையில் கொல்லப்பட்ட செய்தியறிந்து நாடே அதிர்ந்தது. 'எதிரியை ஒழிக்க, அவனது ஆயுதங்களைக் கைப்பற்றி, அவனை வலிமையற்றவனாக்க வேண்டும்' என்று பகிரங்கமாக அறிவித்திருக்கும் இந்த வன்முறை இயக்கம், அரசின் மிக நவீன ஆயுதங்களைக் கொள்ளையடித்து, அரசுக்கு எதிராகப் போரிடுகிறது.

'இதுவரை இந்தியா சந்தித்த உள்நாட்டு அச்சுறுத்தல்களிலேயே மிகப் பெரிய சவால் நக்ஸலிஸம்தான்' என்று நம் பிரதமர் அறிவித்திருக்கிறார். இந்த வன்முறைக்குப் பின்புலமாகப் பூர்வ பழங்குடி மக்களும், ஏழை விவசாயிகளும் நிற்பது ஏன்? கிளைகளை விட்டுவிட்டு, வேர்களை விசாரித்தால்தான் உண்மை புலப்படும்.

'இன்றைய ஆட்சியானது, சாராம்சத்தில் தரகர் கூட்டத்தின் ஆட்சியாகிவிட்டது. அரிய முக்கியத்துவம் உடைய நிலத்தையும், கனிம வளத்தையும், மனித வளத்தையும் அதிக ஏலத் தொகைக்குக் கேட்கும் எவருக்கும் விற்கத் தயாராக உள்ளனர். இந்த ஆட்சியாளர்கள், உடனடி அற்ப நலன்களுக்காக எதையும் செய்யத் தயார். எந்தக் கொள்கையையும் கைகழுவத் தயார். எந்த முதலீட்டாளரையும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கத் தயார். உள்நாட்டுச் சந்தையைப் பாளம் பாளமாக அவர்களுக்கு வெட்டிக் கூறு போட்டுத் தரத் தயார். இயற்கை மூலவளங்கள் எதையும் தாரை வார்க்கத்

தயார். அரிதினும் அரிதான நகர்ப்புற நிலங்களில் நீண்ட காலம் பயன்பாட்டு உரிமையை வழங்கத் தயார்' என்று சீனாவின் நிலையை வில்லியம் ஹிண்ட்டன் தன்னுடைய 'சோஷலிஸத்தில் வர்க்கப் போராட்டம்' என்ற நூலில் சித்திரிக்கிறார். வார்த்தைக்கு வார்த்தை இந்திய ஆட்சியாளரின் அணுகுமுறையோடு பொருந்திப்போவது ஆச்சர்யம்தான். புதிய பொருளாதாரக் கொள்கையைக் கண்மூடிப் பின்பற்றும் நாடுகள் அனைத்துக்கும் பொதுவான நிலை இது.

விவசாயிகளின் கிளர்ச்சியாகத் தொடங்கிய நக்ஸல் இயக்கம், இன்று பழங்குடி மக்களின் பாதுகாப்பு அமைப்பாக மாறி விட்டது. சத்தீஸ்கர், ஜார்கண்ட், வடக்கு ஆந்திரம், ஒரிஸ்ஸா போன்ற பகுதிகளில் காலம் காலமாகக் காடுகளில் வாழும் தொன்மைப் பழங்குடியினர் பலாத்கார முறையில் அப்புறப்படுத்தப்படுகின்றனர். அவர்கள் வாழும் கனிம வளம் நிறைந்த பிரதேசங்கள் இந்தியப் பெரு முதலாளிகளுக்கும், பன்னாட்டுப் பகாசுர நிறுவனங்களுக்கும் ஆட்சியாளர்களால் பொருளாதார

வளர்ச்சி என்ற பெயரில் பங்கு போடப்படுகின்றன. அமெரிக்காவில் அடியெடுத்து வைத்த வெள்ளையர்கள் அந்த நாட்டின் ஆதிகுடிகளான செவ்விந்தியரின் நிலங்களைப் பறித்து, அவர்களை அழித்ததும், ஆஸ்திரேலியாவுக்குள் புகுந்து பூர்வகுடிகளிடமிருந்து சொந்த மண்ணைப் பறித்து அடர்ந்த காடுகளுக்குள் துரத்தியதும், லத்தீன் அமெரிக்க நாடுகளின் பூர்வகுடிகளைப் பூண்டோடு அழித்து ஐரோப்பியர்கள் தங்கள் ஆதிக்கத்தை வளர்த்ததும், ஆப்பிரிக்கர்கள் அடிமைப்படுத்தப் பட்டதும் கடந்த கால வரலாறு. இன்று இந்தியாவில் அந்த வரலாறு திரும்புகிறது (History repeats itself)..

'மாவோயிஸ்ட்களை அடியோடு அழிக்கவும், பழங்குடியினர் வாழ்வை மேம்படுத்தவும் அரசு முயன்று வருகிறது' என்கிறார் உள்துறை அமைச்சர் சிதம்பரம். ஆக, இது வரை பழங்குடியினர் வாழ்க்கை மேம்படவில்லை என்பதை நம் சிதம்பரம் ஒப்புக் கொள்கிறார். நாடு சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகள் கடந்த பின்பும், எந்த அடிப்படை வசதிகளும் பழங்குடி மக்களிடம் சென்று

சேரவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களை விட மிக மோசமான சுழலில் பழங்குடியினர் சீரழிந்து நிற்பது சிதம்பரத்துக்குத் தெரியுமா? அரசு அறிவிக்கும் எந்த நலத்திட்டமும் முறையாக அவர்களுக்குப் பயன்தரவில்லை என்பது மன்மோகன் சிங்குக்குப் புரியுமா? ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது, 'அரசு செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் 15 பைசாதான் மக்கள் நலனுக்குப் போய்ச் சேருகிறது' என்று வாக்குமூலம் வழங்கவில்லையா?

நம் நாட்டின் சுகாதாரம் எப்படிப் பராமரிக்கப்படுகிறது? 'இந்தியாவில் ஆண்டுதோறும் அசுத்தமான தண்ணீர், காற்று போன்றவற்றால் 8 லட்சம் பேர் பலியாகின்றனர். இந்தியாவில் உள்ளதைப் போல் குப்பைகள் நிறைந்த நகரங்களை உலகில் வேறெங்கும் பார்க்க முடியாது. அசுத்தத்தில் நம் நாட்டுடன் வேறெந்த நாடும் போட்டி யிட முடியாது. குப்பை, அழுக்கு போன்றவற்றுக்கு நோபல் பரிசு வழங்கினால்... அது நம் நாட்டுக்குத்தான் கிடைக்கும்' என்று புதுடெல்லியில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற

மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டதை நம் பிரதமர் அறிவாரா? நகரங்களின் நிலையே இது என்றால், வனங்களில் வாழும் மக்களின் நிலையை கற்பனை செய்யக் கூடுமா? வறுமைதான் வன்முறையை வளர்த்தெடுக்கிறது என்ற அரிச்சுவடி கூட நம் ஆட்சியாளர்களுக்குப் புரியவில்லையே. மாவோயிஸ்ட்களை ஒழிக்க 7,300 கோடி ரூபாய் ஒதுக்கும் மத்திய அரசு, அந்தப் பணத்தைப் பூர்வகுடிகளின் நலனுக்குப் பயன்படுத்தினால் வன்முறை விருட்சம் தானாகப் பட்டுப் போகுமே!

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 1960களில் 1 சதவிகிதமாக இருந்தது; 1980-களில் 3 முதல் 4.5 சதவிகிதமாக வளர்ந்தது. புதிய பொருளாதாரக் கொள்கையை 1991 முதல் நாடு பின்பற்றத் தொடங்கிய பின்பு, வளர்ச்சி விகிதம் 9 சதவிகிதமாக ஏற்றம் பெற்றது. ஆனால், வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை குறையாமல் கூடியது ஏன்? 300 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் இன்றும் ஏழ்மையின் பிடியில் சிக்கித்

தவிக்கின்றனர். அவர்களுக்கு ஒருநாள் ஊதியம் 20 ரூபாய் மட்டுமே. முரண்பட்ட நம் சமுகத்தின் மறுபக்கம் மும்பைக்கருகில் 40 ஆயிரம் ஏக்கரில் முகேஷ் அம்பானிக்கு ஒரு நகரமே சொந்தம். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்னும் பெயரில் பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள் விவசாயிகளிடமிருந்து பறிக்கப்படுகின்றன. 'மாவோயிஸ்ட்களின் வலிமை அதிகரிப்பதற்கு அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளே காரணம். பன்னாட்டுப் பெரும் நிறுவனங்களின் கொள்ளை லாபத்துக்காக ஏராளமான கனிமச் சுரங்கங்களையும், பெருமளவில் வனப்பகுதிகளையும் மத்திய அரசு தாரை வார்த்துப் பல்லாயிரக்கணக்கான பழங்குடி மக்களைத் தங்கள் சொந்த வாழ்விடங்களிலிருந்து விரட்டியுள்ளது' என்று நாடாளுமன்றத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா குறிப்பிட்டது மறுக்க முடியாத உண்மை.

சுதந்திரம் பெற்று நாம் சாதித்தது என்ன? இன்றும் 10 வீடுகளில் 4 வீடுகளுக்கு மின்சாரம் இல்லை. மூன்றில்

ஒரு பங்கு மக்களுக்கு ஒரு டாலர் கூட ஊதியமில்லை. 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாயப் பொருள்கள் போதிய கிடங்கு மற்றும் விநியோக வசதியின்றி நுகர்வோருக்குப் பயன்படாமல் வீணாகின்றன. ஸ்பெக்ட்ரம் ஊழலில் 60 ஆயிரம் கோடி மத்திய அரசுக்கு இழப்பு என்று சொல்லப்படும் நிலையில் பிரதமரால் அந்த அமைச்சரை வீட்டுக்கு அனுப்ப முடியவில்லை. விதர்பா பகுதி விவசாயிகளில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளில் 1,211 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக 'விதர்பா ஜன் அன்டோலன் சமிதி தெரிவிக்கிறது. அதற்கு நிவாரணம் தேட வழியில்லை. நிழல் பொருளாதார மையமாக விளங்கும் கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்தும் நேர்மை அரசிடம் இல்லாததால், 71 லட்சம் கோடி ரூபாய் ஸ்விஸ் வங்கியில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக அதன் 2008-ம் ஆண்டறிக்கை தெரிவிக்கிறது. ஏழைக்கும், பாழைக்கும் வளமாக வாழ்வதற்கு வழி பிறக்கவில்லை. ஆனால், நம் மத்திய அரசு காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிக்கான கட்டமைப்புக்கு 1,740 கோடி ரூபாயைக்

கொட்டிக் குதூகலிக்கிறது. இந்த நிலை நீடித்தால் என்ன நடக்கும்? மக்களின் பொறுமை எல்லை மீறும்.

'நம் சமுதாய, பொருளாதார வாழ்வில் இன்னும் எத்தனை காலம் நாம் சமத்துவத்தை மறுக்க முடியும்? கூடிய விரைவில் இந்த முரண்பாட்டை அகற்றாவிடில், ஏற்றத்தாழ்வினால் அவதியுறும் மக்கள் அரசியல் ஜனநாயகம் என்ற கட்டமைப்பை வெடி வைத்துத் தகர்த்துவிடுவர்' என்றார் அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கர். 'வன்முறையற்ற சுதந்திர சமுதாயத்துக்கான மந்திரச்சாவி பொருளாதார சமத்துவமே. பணக்காரனுக் கும், பசித்தவனுக்கும் இடையில் பிளவு நீடிக்கும் வரை அகிம்சை சார்ந்த அரசுக்கான சாத்தியம் இல்லை. பணம் படைத்த வர்க்கம் தன் செல்வத்தையும், அதிகாரத்தையும் தாமே முன் வந்து ஏழையுடன் பகிர்ந்து கொள்ளத் தவறினால், வன்முறை மிகுந்த ரத்தப் புரட்சி ஒரு நாள் தவிர்க்க முடியாததாகிவிடும்' (India of my dreams' நூலில்) என்றார் காந்தி. இருவரும் வன்முறையாளர்கள் இல்லை. வறுமை தீராவிடில், வன்முறை வளரும் என்பதே

அவர்களுடைய அபிப்ராயம்.

'மேய்ச்சல் நிலத்திலிருந்து வாத்தினைத் திருடும் ஆணையோ, பெண்ணையோ சட்டம் கண்டிக்கிறது. ஆனால், வாத்திடமிருந்து மேய்ச்சல் நிலத்தைத் திருடும் குற்றவாளியை விட்டுவிடுகிறது' என்ற ஹென்றி மெய்ன் எழுதிய கவிதையை நம் ஆட்சியாளர்கள் அறிவார்களா?

– பயணம் தொடரும்–

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

34

# புகலிடம்

'நமக்கு உடல்நலம் இல்லையென்றால் அழகான மருத்துவரையோ, பேச்சுத் திறமை மிக்க மருத்து



வரையோ நாம் தேடிச் செல்வதில்லை. தொழில் திறமையும், சரியான மருந்தளித்து நோய் தீர்க்கும் ஆற்றலும் உள்ள மருத்துவரையே நாம் நாடுவோம். அதேபோன்றுதான், நாடு நோயுற்று நலிந்திருக்கும்போது, அறிவிற் சிறந்தோரையும், நிர்வாகத் திறன் மிக்கோரையும் நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அரசியல் தத்துவத்தின் பிரச்னையே, இந்தத் தேடலில்தான் அடங்கியிருக்கிறது. ஆட்சியில் அமர்பவர்களின் தன்மைக்கு ஏற்பவே மக்களும் அமைவர்' என்றார் பிளேட்டோ. நம் தமிழகத்தைப் பொறுத்தவரை நீண்ட காலமாகவே அழகாகப் பேசத் தெரிந்தவர்களையும், கவர்ச்சிகரமான தோற்றம் உள்ளவர்களையும் மாற்றி மாற்றி நாம் அரியாசனத்தில் அமரச் செய்கிறோம். பொதி

சுமக்கும் கழுதையைப் புறக்கணித்து, கவர்ச்சி விருந்தளிக்கும் மயிலுக்குப் போர்வை போர்த்தி மகிழ்ந்த பேகனின் வாரிசுகள்தானே நாம்!

நமக்கு வயிற்றுப் பசி போக்கும் கஞ்சிக் கலயத்தை விட, காதுக்குச் சுகமளிக்கும் கச்சேரி தான் முக்கியம்.

தேசவிடுதலைப் போரின்போது கலைஞர்களில் சிலர் வெள்ளையர் ஆதிக்கத்தைத் துணிந்து எதிர்த்துச் சிறைக்கும் சென்றனர். நாடக மேடை யில் நாட்டுப் பற்றைத் தூண்டிய விசுவநாத தாஸை நன்றிமிக்கவர்களால் மறக்க முடியாது. கொடுமுடிக் கோகிலம் கே.பி.சுந்தராம்பாள், தீரர் சத்தியமூர்த்தி பேசிய மேடைகளில் தன் வெண்கலக் குரலால் எழுப்பிய சுதந்திர கீதம் பல்லாயிரம் மக்களின் உணர்வைத் தூண்டியது. சுதந்திரம் பெற்ற பின்பும் காங்கிரஸில் கலைஞர்கள் தங்கள் பங்களிப்பைத் தந்தனர். ஆனால், காங்கிரஸ் தலைவர்களுக்குக் கலை, இலக்கிய ஞானம் இல்லாததால், அவர்களை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. சுயமரியாதை இயக்கம் கண்ட பெரியார் தமிழரிடையே

ஒழிக்கப்பட வேண்டிய முக்கியமான 5 நோய்களில் சினிமாவும் ஒன்று என்றார். பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பியதால் நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் நாடகங்களை அவர் ஆதரித்தார். அண்ணாவின் நாடகங்களை அவர் எதிர்க்கவில்லை என்றாலும், தன் சகோதரர் மகன் சம்பத் அண்ணாவுடன் சேர்ந்து நடிப்பதை அவர் ரசிக்கவில்லை. 'கூத்தாடிகள்' என்று இழிவாகப் பழிக்கப்பட்ட கலைஞர்களுக்கு மிகப் பெரிய சமூக மரியாதையை அண்ணாவும், அவர் தோற்றுவித்த தி.மு.கழகத்தின் தலைவர்களும்தான் தேடித் தந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

தி.மு.கழகம் தமிழகத்தில் தலைநிமிரத் தொடங்கிய வளர்பருவ நாட்களில் நடத்திய அரசியல் மாநாடுகள் அனைத்திலும் நாடகங்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. அண்ணாவுக்கு நாடகக் கலையில் தணியாத தாகம் இருந்தது. பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் 1943-ல் திருவத்திபுரத்தில் முதன் முதலாக 'சந்திரோதயம்' நாடகத்தை அண்ணா அரங்கேற்றினார். நாடகத்தை

எழுதியதோடு நில்லாமல் அதை இயக்கி, நடிக்கவும் செய்தார் அண்ணா. அதன் பின்பு, 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்', 'ஓர் இரவு', 'வேலைக்காரி', 'நீதிதேவன் மயக்கம்', 'காதல் ஜோதி' என்று அண்ணாவின் நாடகப் பயணம் தொடர்ந்தது. அண்ணாவைப் போல் அதிக மாகக் கலைத் துறையில் கவனம் செலுத்தியவர் கலைஞர். எம்.ஆர்.ராதாவுக்கு எழுதிக் கொடுத்த 'தூக்குமேடை' நாடகத்தில் கலைஞரும் நடித்தார். 'தூக்கு மேடை' தொடங்கி 'காகிதப் பூ' வரை கலைஞரின் நாடக மேடை அனுபவங்கள் நீடித்தன.

தமிழர் வாழ்வில் சினிமா தனிப்பெரும் செல்வாக்கு டன் திகழ்வதை மிகத் துல்லியமாக நாடி பிடித்து அறிந்து கொண்ட அண்ணா, 'ஓர் இரவு', 'வேலைக்காரி', 'நல்லதம்பி', 'சொர்க்கவாசல்' படங்களுக்குத் கதை வசனம் எழுதி, திரையுலகில் ஒரு திருப்பத்தை உருவாக்கினார். அவர் எழுதிய 'ரங்கோன் ராதா', 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' ஆகிய கதைகளும் திரைப்படங்களாக வலம் வந்தன. பாமர மக்களிடம் தி.மு.கழகம் சென்று சேர்வதற்கு

அண்ணா தேர்ந்தெடுத்த திரைப்பட ஊடகமே முக்கிய அடித்தளமானது. அண்ணாவின் பாதையில் தடம் மாறாமல் சுவடு பதித்த கலைஞர், திரையுலகில் தன் வசனங்களால் அனைவரையும் வசீகரித்தார். அண்ணாவை விட, சினிமா வசனத்தில் கலைஞர் கூடுதல் வெற்றி பெற்றார் என்பது மிகையான புகழுரை அன்று. 'வனவாசம்' நூலில் கலைஞரைக் கடுமையாக விமர்சித்த கண்ணதாசனே, "அபிமன்யு படத்தில் கேட்ட தமிழ் என்றும் மறக்க முடியாத இன்பத் தமிழாகும். 'ஒடிந்த வாளானாலும் ஒரு வாள் கொடுங்கள்; அண்ணன் செய்த முடிவைக் கண்ணன் மாற்றுவதற்கில்லை; கண்ணன் மனமும் கல் மனமா; அர்ச்சுனனால் கூடத் துளைக்க முடியாத சக்ரவியூகத்தை அபிமன்யு துளைத்து விட்டான் என்றால், அங்கேதான் இருக்கிறது ஆச்சாரியாரின் விபீஷண வேலை' என்ற வசனங்கள் இன்று வரை அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன' என்று மனம் நெகிழ்ந்து புகழ்கிறார்.

கே.ஆர்.ராமசாமி, சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந் திரன்,



டி.வி.நாராயணசாமி போன்ற பல கலைஞர்கள் அண்ணாவின் படைவரிசையில் சேர்ந்தனர். கலைஞர் வசனம் எழுதிய 'ராஜகுமாரி' படத்தில் நாயகனாக நடித்த எம்.ஜி.ஆர். கதராடையும், கழுத்தில் துளசி மணிமாலையும் துலங்கக் காந்தியவாதியாகக் காட்சியளித்தார். அவரைக் கழக உடன் பிறப்பாக உருமாற்றம் செய்தார் கலைஞர். ஓர் உறையில் இரு வாட்கள் இருக்க முடியாது என்ற இயற்கையின் நியதி சிவாஜியின் சிந்தையில் படர்ந்தது. திருச்சியில் 1953-ல் நடந்த தி.மு.கழக மாநாட்டில், 'அண்ணா ஆணையிட்டால் நடிப்பதற்காக நான் போட்டிருக்கும் படவொப்பந்தங்களைக் கிழித்தெறிந்து விட்டு, கழகம் நடத்தும் போராட்டத்தில் முழுமையாக ஈடுபடுவதற்குத் தயார்' என்று சூளுரைத்த சிவாஜி திருப்பதி சென்று திரும்பி வந்து காங்கிரஸில் கலந்தார். சினிமாவின் செல்வாக்கால் வேகமாக வளர்ந்த

கழகம், அந்த சினிமா நாயகர்களின் நடத்தையால் 1961 ஏப்ரலில் முதல் சரிவைச் சந்தித்தது.

எம்.ஜி.ஆரால் கழகம் வளர்ந்தது. கழகத் தொடர்பால் எம்.ஜி.ஆர். வளர்ந்தார். ஒருகட்டத்தில் எம்.ஜி.ஆர்., கழகத் தலைவர்கள் பேசும்போது கூட்டத்தில் இடையில் வந்து பரபரப்பை உருவாக்கி அவர்களுடைய பேச்சின் மீதான கவனத்தைத் தன்மீது திருப்பியதும் உண்டு. அண்ணா அதைச் சகித்துக் கொண்டார். ஆனால், மேடையை அறிவார்ந்த களமாக அமைத்துக் கொள்ளும் சம்பத்தால் அதைச் சகிக்க முடியவில்லை. 'நான் பங்கேற்கவிருக்கும் கூட்டங்களில் மிகச் சிறந்த பேச்சாளர்கள், தத்துவமேதைகள், தலைவர்கள் என்று என்னை விட தகுதி மிக்கவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது நான் நுழைந்து விட்டால் மக்கள் எழுப்பும் ஆர்வ ஒலியில், பேசுபவர் பேச்சு தடைப்பட்டு விடும். அதற்குப் பின்பு அவர்களால் பேச்சைத் தொடர முடியாது' என்று எம்.ஜி.ஆரே 'நான் ஏன் பிறந்தேன்?' என்ற தன் சுய சரிதையில் குறிப்பிட்டிருக்கிறார். சென்னை மூர் மார்க்கெட்டில் நடந்த

கூட்டத்தில் சம்பத் பேசிக் கொண்டிருந்தபோது எம்.ஜி.ஆர் இடையில் வந்ததால், ஏற்பட்ட சலசலப்பைக் கண்டு அவரை சம்பத் வெறுத்ததாகவும் அந்த நூலில் பதிவு செய்திருக்கிறார். சம்பத் கழகத்தை விட்டு வெளியேறித் தமிழ்த் தேசியக் கட்சியைத் தொடங்கியதற்கான பல காரணங்களில் நடிகர்களின் செல்வாக்குக்கு அண்ணா அணை போடவில்லை என்பதும் ஒன்று.

'மந்திரிகுமாரி'க்கு வசனம் வரைந்த கலைஞர் எம்.ஜி.ஆருக்கு அந்தப் படத்தில் முக்கியப் பாத்திரம் வழங்க வற்புறுத்தினார். 'மருத நாட்டு இளவரசி' படத்துக்குக் கலைஞர் வசனம் எழுத எம்.ஜி.ஆர். வற்புறுத்தினார். 'புரட்சி நடிகர்' என்று எம்.ஜி.ஆருக்குக் கலைஞர் அடைமொழி கொடுத்தார். கலைஞரின் வசனத்தில் உருவான நாமக்கல் கவிஞரின் 'மலைக் கள்ளன்' படம்தான் எம்.ஜி.ஆரை 'சூப்பர் ஸ்டார்' ஆக்கியது. அண்ணாவின் மறைவுக்குப் பின்பு எம்.ஜி.ஆர் ஆதரித்ததால்தான் கலைஞர் முதல்வரானார். அப்படி இருக்க, ஒருவருக்கொருவர் நன்றிக்கடன்பட்ட நிலையில்

கழகம் இரண்டாவது முறை 1972-ல் ஏன் பிளவைச் சந்தித்தது?

வளர்ந்து வந்த எம்.ஜி.ஆர் செல்வாக்கைக் கழகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளும் ராஜதந்திரம் அண்ணாவிடம் இருந்தது. 'இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர்பார்த்தனர். அது என் மடியில் வந்து விழுந்தது. என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்...' என்று 'நாடோடி மன்னன்' பட வெற்றி விழாவில் (1958) அண்ணா குறிப்பிட்டார். 'உங்கள் முகத்தை மக்கள் பார்த்தால் 30 ஆயிரம் ஓட்டுகள் ஒவ்வொரு தொகுதியிலும் எனக்குக் கிடைக்கும். உங்கள் பேச்சை மக்கள் கேட்டால் 10 லட்சம் பேர் மனம் திரும்புவர்' என்று 1967-ல் விருகம்பாக்கம் தேர்தல் மாநாட்டில் அண்ணா எம்.ஜி.ஆரைப் புகழ்ந்தார்.

'காமராஜர் என் தலைவர்; அண்ணா என் வழிகாட்டி' என்று ஒருமுறை பேசினார் எம்.ஜி.ஆர். அண்ணா 1964-ல் சிறையில் இருந்தபோது, யாரும் எதிர்பாராத சூழலில் தமிழக மேலவை உறுப்பினர் பொறுப்பிலிருந்து எம்.ஜி.ஆர்.

விலகினார். அந்த நேரத்தில் வெளிவந்த 'என் கடமை' படம் கழகத் தொண்டர்களால் புறக்கணிக்கப்பட்டு மிக மோசமான தோல்வியைத் தழுவியது. தன்னை மீறிய ஆளுமை மக்களிடம் அண்ணாவுக்கு இருந்ததை அன்றுதான் எம்.ஜி.ஆர். உணர்ந்தார். அதன்பின்பு அண்ணாவைத் தழுவியே அவருடைய அரசியல் நடந்தது.

ஆளுமை மிக்க அண்ணா, எம்.ஜி.ஆரைப் புகழ்ந்து பேசியே தன் பக்கத்தில் வைத்துக் கொண்டார். ஆனால், எம்.ஜி.ஆரின் உதவியோடு முதலமைச்சரான கலைஞர், அவருடைய செல்வாக்கைக் குறைக்கும் வேலையில் ஈடுபட்டார். தன் மகன் மு.க.முத்துவை எம்.ஜி.ஆர். பாணியில் நடிக்க வைத்து விட்டால் போதுமென்று கலைஞர் முடிவெடுத்தது அவருடைய ராஜதந்திரத்தில் விழுந்த முதல் ஓட்டை. வயதேறிய நிலையில் திரையுலகில் நாயகனாக நீடிப்பது இயலாது என்ற புரிதலில்தான் எம்.ஜி.ஆர் அமைச்சராக விரும்பினார். 'மெடிகல் மினிஸ்டராக வேண்டுமென்று டெல்லியிலிருந்து தொலைபேசியில் சூசகமாகத் தெரிவித்தார்' என்கிறார்

கலைஞர். (நெஞ்சுக்கு நீதி-இரண்டாம் பாகம்) 'படங்களில் நடித்தபடி அமைச்சராக இருக்க முடியாது' என்று கலைஞர் கூறியதிலிருந்து பிரச்னை வளர்ந்தது. 'தி.மு.க. மக்கள் கட்சி. இது தனி மனிதக் கட்சி அல்ல. அண்ணா அவர்கள் கழகத்தை உருவாக்கினார்கள். கலைஞர் அவர்கள் இதனைக் கட்டிக் காத்து வருகிறார்கள். கழகத்தைப் பிளவுபடுத்தச் சிலர் நினைக்கிறார்கள். அப்படி நினைப்பவர்க்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். கழகத்தைப் பிளவுபடுத்த எவரும் பிறக்கவில்லை. இனிமேலும் பிறக்கப் போவதில்லை' என்று சபதம் செய்தார் எம்.ஜி.ஆர். ஆனால், அவர் தாமாக வெளி யேறும் வரை பொறுக்காமல், செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி அவரை வெளியேற்றியது கலைஞரின் ராஜதந்திர நடவடிக்கையில் விழுந்த இரண்டாவது ஓட்டை. எம்.ஜி.ஆரிடம் ஆட்சியைப் பறிகொடுத்த கலைஞர், அந்த எம்.ஜி.ஆர். உயிருடன் இருக்கும் வரை முதல்வராக முடியவில்லை.

எம்.ஜி.ஆரைப் பார்த்துச் சூடுபோட்டுக் கொள்ளும் நடிகர்கள்

அவர் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க வேண்டும். இலங்கையிலுள்ள கண்டி நகருக்கு அருகில் ஒரு கிராமத்தில் பிறந்து, தந்தையைக் குழவிப் பருவத்தில் இழந்து, கும்பகோணத்தில் விதவைத் தாயின் அரவணைப்பில் வளர்ந்து, இளமையில் நாடகவுலகில் ஆயிரம் அவமானங்களை அடைந்து, சினிமாவில் சின்னஞ்சிறு பாத்திரங்களில் தோன்றி, அங்குலம் அங்குலமாக வளர்ந்த எம்.ஜி.ஆருக்கு ஏழ்மையும், பசியின் கொடுமையும் பூரணமாகத் தெரியும். எம்.ஜி.ஆரின் செல்வாக்கு வளர்ந்ததற்கு அவருடைய மனிதநேயமும், வள்ளல் தன்மையும்தான் முதற்காரணம். நடிப்பில் கரை கண்ட சிவாஜியால் ஒரேயரு தொகுதியில் எம்.எல்.ஏ-வாக முடியவில்லை. ஆனால், தன் ரசிகர்களுக்குப் பிடித்த ஒரே பாணியில் கைவீசி நடித்த எம்.ஜி.ஆரை ஆட்சிக்கட்டிலிலிருந்து இறக்க எந்தச் சாணக்கியராலும் இயலவில்லை. அடுத்தவர் துயர்துடைக்க உடனே உதவிக் கரம் நீட்டும் உள்ளம் கலைவாணருக்கும், எம்.ஜி.ஆருக்கும் இருந்தது. கழகம் காலூன்றிய காலத்தில் கலைஞரால்

இழுக்கப்பட்ட எம்.ஜி.ஆர். தான் இயக்கி, தயாரித்த 'நாடோடி மன்னன்' திரைப்படத்தின் தொடக்கத்தில் துணிவோடு கழகக் கொடியைக் காட்டியவர்; காட்சிகளில், பாடல்களில், உடுத்தும் ஆடைகளில் கழகத்தைப் புகுத்தியவர்; கதாநாயகன் பெயரை 'கதிரவன்' என்று வைத்தவர். 1953-ல் கழகத்தில் இணைந்த எம்.ஜி.ஆர். 1977-ல்தான் தமிழக முதல்வரானார். அவரால் 24 ஆண்டுகள் அரசியலில் பொறுமை காக்க முடிந்தது. ஆனால், இன்றுள்ள நடிகர்கள் 24 மணி நேரத்தில் முதல்வராகத் துடிக்கின் றனர்.

அண்ணாவுக்குப் பின்கலைஞர் முதல்வரானார். அவர் காலத்தில் தான் ஊழல் பெருகியது. அவரை வீழ்த்தி விட்டு எம்.ஜி.ஆர் ஆட்சி நடத்திய 10 ஆண்டுகளில் ஊழல் ஒழிக்கப்பட்டதா? ஜெயலலிதாவின் ஆட்சியில் ஊழல் ஒழிந்து விட்டதா?

திரையுலகிலிருந்து வரும் மனிதர்களால் எப்படி நல்லாட்சி மலரும்? நாட்டில் நிழல் பொருளாதாரத்தை நடத்தும் கறுப்புப் பணம் இல்லாத பெரிய நடிகர்கள் இங்கே யார்?

வாங்கும் கோடிக்கணக்கான ரூபாய்க்கும் முழுமையாகக் கணக்குக் காட்டி 30 சதவிகிதம் வருமான வரி செலுத்தும் மனிதர்கள் 'கோலிவுட்' வட்டாரத்தில் யார் யார்? வரி ஏய்ப்பு செய்து பழகியவர்கள் கறை படியாத கரங்களுடன் ஆட்சி நடத்துவார்கள் என்று எப்படி நம்ப முடியும்? ரசிகர் மன்றங்கள் மூலம் நான்கு நல்ல காரியம் செய்து விட்டால், நாடாளும் தகுதி தானாக வந்து விடுமா? இரண்டு திராவிடக் கட்சிகளுக்கு மாற்று இன்றைய அரசியலில் அவசியத் தேவை. ஆயிரம் ராகுல் காந்திகள் வந்தாலும் பட்டுப் போன காங்கிரஸ் மீண்டும் பசுமைபெறப் போவதில்லை.

'காங்கிரஸ் பேரியக்கம் எவ்வளவுக்கெவ்வளவு உன்னதமானதோ, அவ்வளவுக்கவ்வளவு அதிலிருக்கும் காங்கிரஸ்காரர்கள் பலர் சுயநலக்காரர்கள். அவர்கள் கட்சியை வாழவும் விடவில்லை. கட்சிக்குள்ளே வந்தவர்களை வளரவும் விடவில்லை. காங்கிரஸ் எப்போதுமே எதிரிகளால் அழிந்ததில்லை; காங்கிரஸ் காரனாலேயே அழிந்திருக்கிறது. கட்சியே அழிந்தாலும்,

அடுத்தவன் உயர்ந்துவிடக் கூடாது என்பதில் காங்கிரஸ்காரன் மாதிரி லட்சியவாதியை யாரும் பார்க்க முடியாது' (மனவாசம்) என்று கண்ணதாசன் எழுதியது அனுபவத்தில் வந்து விழுந்த வார்த்தைகள். ஈழப் பிரச்னையில் காங்கிரஸ் மேற்கொண்ட அணுகுமுறைக்குப் பின்பு அது இந்த மண்ணில் மறுவுயிர்ப்பு பெறுவதற்கு வாய்ப்பில்லை. திராவிடக் கட்சிகளுக்கு மாற்றை ஒருநாள் காலம் காட்டும். ஆனால், அந்த மாற்றத்துக்கான விளைநிலம் நிச்சயம் கோடம்பாக்கமாக இருக்காது!

- பயணம் தொடரும்-




35

## காமம்

'**பா**லுணர்வு சிற்றின்பம்.

இறையுணர்வே பேரின் பம்' என்ற


கற்பிதம்தான் நம் சமூக வாழ்வில்

காலம் காலமாய் வேர்விட்டு

விருட்சமாய்க் கிளை பரப்பி நிற்கிறது.

பரம்பொருளை நாடும் ஞானத்

தேடலுக்குப் பெண்ணின்பமே



பெரும்

தடைச்

சுவர்

என்று

பாடம்

போதி

க்காத

மதத்

தலை

வர்கள்

நம்

மண்ணில் எங்கும் இல்லை. ஆனால்,

அந்த அறிவு ரையைக் காதில் வாங்கி,

அதைக் கௌரவிக்கத்தான் ஆள்

இல்லை. காரணம், மனித உடல்

காமத்தாலானது. காமம் என்னும்

கடையாணி கழன்றுவிட்டால்,

உடனடியாய் உலக இயக்கம்

நிலைகுலைந்து நின்று விடும்.

காமம்தான் இருபால் இணைப்புக்கும்

பாலம். இருபால் உறவுதான் குடும்பம்

என்னும் கோயிலைக் கட்டி

மகிழ்கிறது. குடும்பங்களின்

தொகுப்பில்தான் சமூகம்

சமைக்கப்படுகிறது.

காமம் ஒடுக்கப்படுவதால்தான்

உலகில் ஓராயிரம் வன்முறைகள்

வளர்கின்றன. ஓர் இடத்தில் ஒடுக்கப்

படுவது, வேறிடத்தில் வெடித்து

வெளிக் கிளம்பும். அப்போது அதன்

வேகமும் எதிர்வினையும் எல்லை

மீறும். பெருகி வரும் தண்ணீரை

வாய்க்காலில் வழிப் படுத்துவதுபோல்,

பொங்கியெழும் பாலுணர்வை ஆண்-

பெண் உறவில் நெறிப்படுத்துவதே

நன்மை தரும். இயற்கையின்

படைப்பில் பாலுணர்வு மிகுந்தது

மனித இனம் மட்டுமே. விலங்குகள்

ஒரு குறிப்பிட்ட பருவத்தில்தான்

கூடும். ஆனால், காமத் தில்

மனிதர்களுக்குக் காலம், நேரம் என்ற

எந்த வரை யறையும் கிடையாது.

காமம், தவிர்க்கப்பட வேண்டிய

தவறான உணர்ச்சியின் உந்துதல்

என்று நம் முன்னோர்

நினைத்திருந்தால், கோயில்

சிலைகளில் கலவிக் காட்சிகளை

வடித்திருக்க வாய்ப்பு இல்லை.

காமத்தைத் தவிர்த்துவிட்டு அவர்கள் கடவுளைத்

தேடச் சொல்லவில்லை; காமத்தை முற்றாகவும் முறையாகவும் அனுபவித்த பின்பு, அதைக் கடந்து வந்து கடவுளிடம் சேரச் சொன்னார்கள். தவிர்த்தல் வேறு. கடத்தல் வேறு. தவிர்க்கச் சொன்னால், மனக் குரங்கு அங்கேதான் திரும்பத் திரும்பத் தாவிச் செல்லும். அனுபவித்துக் கசந்தால், மனம் அதைத் தானாகக் கடந்து, கடவுளை நாடும். ஒரு பெண்ணிடம் முழுமையான தெய்வீக இன்பத்தை அனுபவித்தவன், இன்னொரு பெண்ணை வாழ்வில் தேட மாட்டான்.

காமத்தைக் கடந்துதான் கடவுளிடம்

கலக்க முடியும் என்பதற்கு ஓஷோ,

கஜுராஹோ கோயிலைச்

சாட்சியாக்குகிறார். அந்தக் கோயிலின்

வெளிச் சுவர், சுற்றுச் சுவர் முழுவதும்

கலவிக் காட்சி களை விதம்விதமாய்

சித்திரிக்கும் சிற்பங்கள்

அலங்கரிக்கின்றன. நம் வாழ்வின்

வெளிச் சுவரில் காமமும் மோகமும்

காட்சி தருகின்றன. அங்கேயே

நின்றுவிட்டால், கடவுளை அடைய

வழி இல்லை. வெளிச் சுவரைத்

தாண்டினால்தான் கடவுளின்

கருவறைக்கு வர முடியும். காமத்தில்

ஈடுபட்டவனுக்கு ஒருநாள் அதில்

இருந்து விடுதலை கிடைத்துவிடும்.

காமத்தைத் தவிர்க்க முயல்பவனின்

சிந்தனை ஒருநாளும் அதன்

கடும்பிடியில் இருந்து விடுபட

முடியாது. கஜுராஹோ கோயில்

கருவறை வெற்றிடமாக

உள்ளதுபோல், காமம் நுகர்ந்து

கடந்தவன் உள்ளமும்

வெற்றிடமாகும். அந்த

வெற்றிடத்தில்தான் ஆன்ம ஞானம்

வந்து அமரும்.

மானிட மனத்தின் மாறாத

வேட்கைகளில் பாலுணர்ச்சியே

வலிமையானது. பாலியல் வேட்கை

ஒரே நேரத்தில் உடலையும்

உள்ளத்தையும் வருத்து கிறது.

பாலுணர்ச்சி உந்தும்போது அதை

உடனே வெளிப்படுத்த உள்ளம்

துடிக்கிறது. இயல்பாக வெளிப்படுத்த

முடியாத சூழலில் உள்ளத்தில் துன்பம்

அலைமோதி இறுக்கத்தை

உருவாக்குகிறது. உடல்

வேதனையைவிட உள்ளத்து

வேதனையே மோசமானது. அந்த

நேரத்தில் மோகவயப்பட்ட மனம்

கட்டறுந்து அலைபாயும். மனம்

போகும் வழியில் கால் போகக் கூடாது

என்பதற்காகத்தான் சமூக வாழ்வில்

பாலியல் கட்டுப்பாடுகள் வேகத்

தடைகளாக நம் முன்னோ ரால்

ஏற்படுத்தப்பட்டன. எப்படியோ... அன்று

முதல் இன்று வரை மனித மனம்

பொங்கியெழும் பாலுணர்ச்சிக்கும்,

நெறிப்படுத்தும் நாகரிகத்துக்கும்

நடுவில் நின்று தடுமாறுகிறது.

உடல் சார்ந்த பாலுணர்ச்சியும், சமூகம்

சார்ந்த பண்பாட்டு உணர்ச்சியும்

ஒன்றையன்று ஆளத் துடிக்கின்றன.

இரண்டில் எதையும் விட்டுவிட

முடியாத நிலையில் மனத்துள்

முரண்பாடு முகிழ்க்கிறது.

இவ்விரண்டு உணர்ச்சிகளின்

முரண்பாட்டையே உளவியல்

பேரறிஞர் ஃபிராய்ட்

'இருபொருளுண்மை' (dualism) அல்லது

'இருமை' என்கிறார். இயற்கையாய்

எழும் பாலியல் வேட்கையும்,

செயற்கையாய் சமூகம் உருவாக்கித்

திணிக்கும் பண்பாட்டுக் கருத்தியலும்

இடைவிடாமல் ஒன்றோடொன்று

மோதுவதால் மனிதர்களிடம்

நடத்தைத் தடுமாற்றத்துக்கு வழி

வகுக்கும் உளப்போராட்டம் நிகழ்வது

தவிர்க்க முடியாததாகிறது.

பாலுணர்ச்சி ஒன்றும் பாவகாரியம்

இல்லை. அது பாவம் என்றால்

ஆணென்றும் பெண்ணென்றும்

இருவேறு படைப்புகளுக்கு அவசியமே

இல்லை. பழைமைச் சமூகத்தில்
தடையற்ற பாலுறவு இருந்தது.
அப்போது விலங்குக்கும் மனிதருக்கும்
இடையில் வாழ்க்கை முறையில்
பெரிய வேறுபாடு இல்லை. அந்தப்
பழைமைச் சமூக வாழ்வை நோக்கி
நாம் திரும்பி நடப்பதில் நாகரிக
வளர்ச்சியோ, பண்பாட்டு மலர்ச்சியோ
அறவே இல்லை. காலப்
பெருவெளியில் மானுடன் கொஞ்சம்
கொஞ்சமாய் அனுபவங்களின்
அடிப்படையில் பண்பட்டு
வளர்த்ததுதான் பண்பாடு. 'உயிர்களின்
துன்ப நீக்கத்துக்கு இன்றியமையாதது
ஆண்-பெண் சேர்க்கை. அதை
வெறுப்பதும், துறப்பதும் அறமா?'
என்று கேட்டவர் தமிழ் முனிவர்
திரு.வி.க. பாலுணர்ச்சியைத் தடுத்தால்

உடலும் உள்ளமும் கெடும். இதை நன்றாக உணர்ந்த நம் மூதாதையர் கண்டுபிடித்த கண்கண்ட மருந்தே இல்லறம். ஓர் ஆணும், ஒரு பெண்ணும் சேர்ந்து காதலும் காமமுமாய் வாழ்வதற்கு வகுக்கப்பட்டதுதான் திருமணம்.

முறையாக மணம் முடிப்பதற்கு முன்பே முதிர்ச்சியற்ற இளைய சமூகத்தில் சிலர் முறை தவறிய காமச்சகதியில் சரிந்து விழுகின்றனர். சமூகக் கட்டுப்பாடு சிலரை ஓரினச் சேர்க்கையில் தள்ளிவிடுகிறது. இந்த முறை தவறிய மனப்போக்கு 'மோகத்திரிபு' என்று உளவியலாளரால் குறிக்கப்படுகிறது. பாலுணர்ச்சியை வெளியே தெரியாமல் அதிக மாக

அடக்குபவர்கள் இந்தப் பள்ளத்தில்
விழுந்து விடுகின்றனர். சமூக
அவமானத்துக்கு அஞ்சி,
குற்றவுணர்வுடன் இந்த ஓரினச்
சேர்க்கையில் மறைவாக
ஈடுபடுபவர்கள் மனநோய்க்கு
இரையாகின்றனர். ஓரின மோகம்
குறித்து 1,500 ஆண்டுகளுக்கு முன்பே
வாத்ஸ்யாயனர் 'காமசூத்திரம்' நூலில்
விரிவாக விளக்கு கிறார். நம்
சமூகத்தில் பாலியல் பிரச்னைகளுக்கு
வெளிப் படையான வடிகால்
இல்லாததால், இன்று சீழ்பிடித்து
நாறுகிறது. எதிர்ப் பாலினம் மீது
ஏற்படும் அச்சம், வெறுப்பு,
ஆணாதிக்கக் கொடுமை, தீவிரப்
பெண்ணியவாதப் போக்கு,
தன்னகங்காரம் போன்றவற்றின்

எதிர்மறை வெளிப்பாடுகள்தான் இந்த ஓரினச் சேர்க்கையின் பெருக்கம்.

'இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 377-வது பிரிவு ஓரினச்



சேர்க்கையைக் கிரிமினல் குற்றமாகப் பாவிக்கிறது. பால்வினை நோயால் பாதிக்கப்படும் ஓரினச் சேர்க்கையாளர்கள் பகிரங்க மாக மருத்துவ சிகிச்சை பெற முடிவதில்லை. சிகிச்சை தருவதற்கு முன்வரும் மருத்துவரும் தண்டனைக் குரியவராகிறார். இதனால் அடிப்படை மனித உரிமை மீறப்படுகிறது' என்று டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த டெல்லி உயர் நீதிமன்றம், 'ஓரினச்

சேர்க்கையில் வயது வந்தோர்
ஒருவருக்கொருவர் இசைந்து
ஈடுபட்டால் குற்றம் இல்லை' என்று
தீர்ப்பளித்தது. ஓர் உயர் நீதிமன்றம்
வழங்கும் தீர்ப்பு நாடு முழுவதும்
நடைமுறைக்கு வரும் என்பதால்,
இப்போது ஓரினச் சேர்க்கையாளர்கள்
பகிரங்கமாக டெல்லி, புவனேசுவரம்,
பெங்களூரு, சென்னை போன்ற
பெருநகரங்களின் வீதிகளில் பேரணி
நடத்துகின்றனர். நோபல் பரிசு பெற்ற
அமர்த்தியா சென், எழுத்தாளர் விக்ரம்
சேத் போன்றவர்கள் இவர்களை
ஆதரித்து அறிக்கைவிடுகின்றனர்.
இரண்டு பெண்கள் சேர்ந்து
மணமுடிப்பதும், இரண்டு ஆண்கள்
இணைந்து இல்லறம் நடத்துவதும்
இந்தியச் சமூகத்தில் அங்குமிங்கும்

அரங்கேறி வருகின்றன. இவர்கள்
உறவைக் கனடா சட்டபூர்வமாக
'தம்பதியர்' என்று அங்கீகரித்ததுபோல்,
இந்தியாவும் அங்கீகரித்தால் என்ன
நடக்கும்? குற்றவுணர்வின்றி இவர்கள்
கூடி வாழக் கூடும். ஆனால் குழந்தை
பிறப்புக்கு என்ன வழி?
தத்தெடுத்துக்கொள்வார்களா? நற்றாய்,
செவிலித்தாய் என்று சங்க இலக்
கியங்கள் சொல்வதுபோல் ஒவ்வொரு
குழந்தைக்கும் இரண்டு அன்னையரா?
சமுதாய வீதிகளில் பின்னாளில்
அந்தக் குழந்தைகள் சந்திக்கப்போகும்
பிரச்னைகளுக்கு என்ன தீர்வு?

ஒருதலைக் காமம் 'கைக்கிளை'
என்றும், மூத்தோர் - இளையோர்
தொடர்பு 'பெருந்திணை' என்றும் சங்க
இலக்கியங் களில் பழிக்கப்படுகின்றன.

உணர்வாலும் வயதாலும், உயர்ந்த

ஒழுக்க நெறிகளாலும் அன்பு சார்ந்த

ஆண்-பெண் இருவரிடையே எழும்

ஒத்த காமமே 'ஐந்திணை' என்று

இலக்கியங்களில்

ஆராதிக்கப்படுகின்றது. 'மலரினும்

மெல்லிது காமம்' என்றார் வள்ளுவர்.

காமத்தில் இயல்புணர்ந்து அதில்

முழுமையாக ஈடுபட்டு, உண்மையான

இன்பத்தைச் சிலர் மட்டுமே

அனுபவிப்பதாகக் குறள் கூறுகிறது.

'படைப்புக் காலத்தில் ஆணும்

பெண்ணும் ஒரே பொருளாக

இருந்தனர். ஆண்டவனின் சாபத்தால்

அந்தப் பொருள் பிளவுபட்டு

இரண்டாயின. அன்று முதல் அவை

ஒன்றாய் இணைவதற்காக

ஒன்றையன்று தேடுகின்றன' என்றார்

பிளேட்டோ. ஆணும் பெண்ணும் இணைந்து இன்புறுவதுதான் இயற்கை. ஒருவர் அன்பில் ஒருவர் திளைப்பதுதான் சொர்க்கம்.

நம் வாழ்கால இளந்தலைமுறையில் பலருக்குப் 'புலனடக்கம்' என்றால் பொருள் புரிவதில்லை. புலன் களை அடக்குவது துறவு பூணுவதற்காக அன்று; இல்லற சுகத்தை இனிதாய் அனுபவிப்பதற்காக. வரையறை மீறாமல் வாழ்வதற்குப் பெயர்தான் தர்மம். இயற்கையான பாலுணர்வை இருவரிடையே மட்டும் நெறிப்படுத்துவதனால், தாம்பத்யம் இல்லற தர்மமாகிவிடுகிறது. அளவான பாலுணர்ச்சியே மனநலத்தின் அடையாளம். மனையறம் சிறப்பது மனநலம்

பொறுத்தது.

வேதகாலத்து முனிவர்களும்
மனைவியரோடுதான் வாழ்ந்தனர்.
சமணமும் பௌத்தமும் பிறந்த
பின்னரே, துறவறம் உயர்வாகப்
போற்றப்பட்டது. மரத்தில் இருந்து
பட்டை தானாக உரிவதுபோல்,
மனத்தில் இருந்து காமம்
படிப்படியாகத்தான் விடுபட வேண்டும்.
அதற்காகவே இந்து தர்மம் மனித
வாழ்க்கையை பிரமசரியம். இல்லறம்,
வனவாசம், சந்நியாசம் என்று நான்கு
நிலைகளை நோக்கி நடக்கச்

செய்தது. இளமையில் துறவு இயற்கை
நெறிக்குப் புறம்பானது. இன்பமாய்
இருப்பதற்காகவே நமக்கு இந்தப்
பிறவி வாய்த்திருக்கிறது.

கலவியின்பம்தான் வாழ்வின்

தலைமையின்பம் என்றான் பாரதி.

ஆணும் பெண்ணும் உடல் கலந்து,

உயிர் கலந்து, உள்ளம் கலந்து

வாழ்வதுதான் உண்மையான இன்ப

வாழ்வு. இல்லறமே நாம் பின்பற்ற

வேண்டிய நல்லறம்.

எவ்வளவு உயர்ந்த இல்லறமாயினும்,

ஆணும் பெண்ணும் உடலுறவை

நோக்கியே வசப்படுகின்றனர்.

'காமம்தான் மானுடத்தின் மாபெரும்

சொத்து. ஆனால், அதை

நெறிப்படுத்திக்கொண்டு

செலுத்துவதில்தான் மனித இனத்தில்

பிரச்னையும், வாழ்க்கையும்

இருக்கிறது' என்றார்

காமவுணர்வுகளை ஃபிராய்டுக்கு

முன்பு முழுமையாக ஆய்வு செய்த

ஹவ்லக் எல்லீஸ். 'தனிமனிதன்
காமச் சுமையைத் தாங்க முடியாமல்
அவதியுறும்போது அதை எப்படி
இறக்கி வைப்பது என்று வழி தேடித்
தவிக்கிறான். அப்போது
இயற்கையான ஈரினச் சேர்க்கைக்கு
வாய்ப்பு இல்லாதபோது, ஓரினச்
சேர்க்கையில் தடம் மாறுகிறான்'
என்று கண்டறிந்தார் எல்லீஸ்.
காமத்தில் தடம் மாறாமல் இருக்கவே
சமூகம் பண்பாட்டுச் சட்டம் போட்டுப்
பாதுகாக்க முயல்கிறது.

விதை மண்ணுக்குள் மறைந்தால்தான்
செடி வளரும்; பூ மலரும். விதையின்
மீது மூடி இருக்கும் மண், விதையை
அழுத்துவது அதனுடைய
வளர்ச்சியைத் தடுப்பதற்கு அன்று.
விதை பக்குவமடைந்து, மெள்ளப்

பிளந்து முளைவிடுவதற்காகத்தான் அதை மண் அழுத்துகிறது. காமம் தவிர்க்க முடியாதது; தவிர்க்கக் கூடாதது. ஆனால், அது கட்டற்று மோகத் திரிபுகளாய் மாறிவிடலாகாது. ஒவ்வொருவர் வாழ்விலும் காமத்துக்கு இடம் உண்டு. ஆனால், காமமே வாழ்வாகிவிடக் கூடாது.

வணிகமயமாகிவிட்ட இன்றைய வாழ்க்கைக் கலாசாரத்தில் நம் பழம்பண்பாட்டின் பெருமை நமக்குப் புரியாது. எது மிகையானாலும் அதனால் துன்பமே சூழும். அடங்காத காமம் அழிவு தரும் சாத்தானின் கைக்கருவி. அளவான காமம் தெய்வீக அருவி. உலகிலுள்ள அனைத்தும் ஓர் ஒழுங்குமுறைக்கு உட்பட்டவைதான். 'ஒழுங்குமுறை என்பது தண்டவாளம்

மாதிரி. தண்டவாளத்தை விட்டு ரயில் விலக முடியாது' என்கிறார் தத்துவஞானி ஜே.கிருஷ்ணமூர்த்தி!

தேடச் சொல்லவில்லை; காமத்தை முற்றாகவும் முறையாகவும் அனுபவித்த பின்பு, அதைக் கடந்து வந்து கடவுளிடம் சேரச் சொன்னார்கள். தவிர்த்தல் வேறு. கடத்தல் வேறு. தவிர்க்கச் சொன்னால், மனக் குரங்கு அங்கேதான் திரும்பத் திரும்பத் தாவிச் செல்லும். அனுபவித்துக் கசந்தால், மனம் அதைத் தானாகக் கடந்து, கடவுளை நாடும். ஒரு பெண்ணிடம் முழுமையான தெய்வீக இன்பத்தை அனுபவித்தவன், இன்னொரு பெண்ணை வாழ்வில் தேட மாட்டான்.

காமத்தைக் கடந்துதான் கடவுளிடம் கலக்க முடியும் என்பதற்கு ஓஷோ, கஜுராஹோ கோயிலைச் சாட்சியாக்குகிறார். அந்தக் கோயிலின் வெளிச் சுவர், சுற்றுச் சுவர் முழுவதும் கலவிக் காட்சி களை விதம்விதமாய் சித்திரிக்கும் சிற்பங்கள் அலங்கரிக்கின்றன.

நம் வாழ்வின் வெளிச் சுவரில் காமமும் மோகமும் காட்சி தருகின்றன. அங்கேயே நின்றுவிட்டால், கடவுளை அடைய வழி இல்லை. வெளிச் சுவரைத் தாண்டினால்தான் கடவுளின் கருவறைக்கு வர முடியும். காமத்தில் ஈடுபட்டவனுக்கு ஒருநாள் அதில் இருந்து விடுதலை கிடைத்துவிடும். காமத்தைத் தவிர்க்க முயல்பவனின் சிந்தனை ஒருநாளும் அதன் கடும்பிடியில் இருந்து விடுபட முடியாது. கஜுராஹோ கோயில் கருவறை வெற்றிடமாக உள்ளதுபோல், காமம் நுகர்ந்து கடந்தவன் உள்ளமும் வெற்றிடமாகும். அந்த வெற்றிடத்தில்தான் ஆன்ம ஞானம் வந்து அமரும்.

மானிட மனத்தின் மாறாத வேட்கைகளில் பாலுணர்ச்சியே வலிமையானது. பாலியல் வேட்கை ஒரே நேரத்தில் உடலையும் உள்ளத்தையும் வருத்து கிறது. பாலுணர்ச்சி உந்தும்போது அதை உடனே வெளிப்படுத்த உள்ளம் துடிக்கிறது. இயல்பாக வெளிப்படுத்த முடியாத சூழலில் உள்ளத்தில் துன்பம் அலைமோதி இறுக்கத்தை உருவாக்குகிறது. உடல் வேதனையைவிட உள்ளத்து

வேதனையே மோசமானது. அந்த நேரத்தில் மோகவயப்பட்ட மனம் கட்டறுந்து அலைபாயும். மனம் போகும் வழியில் கால் போகக் கூடாது என்பதற்காகத்தான் சமூக வாழ்வில் பாலியல் கட்டுப்பாடுகள் வேகத் தடைகளாக நம் முன்னோ ரால் ஏற்படுத்தப்பட்டன. எப்படியோ... அன்று முதல் இன்று வரை மனித மனம் பொங்கியெழும் பாலுணர்ச்சிக்கும், நெறிப்படுத்தும் நாகரிகத்துக்கும் நடுவில் நின்று தடுமாறுகிறது.

உடல் சார்ந்த பாலுணர்ச்சியும், சமூகம் சார்ந்த பண்பாட்டு உணர்ச்சியும் ஒன்றையன்று ஆளத் துடிக்கின்றன. இரண்டில் எதையும் விட்டுவிட முடியாத நிலையில் மனத்துள் முரண்பாடு முகிழ்க்கிறது. இவ்விரண்டு உணர்ச்சிகளின் முரண்பாட்டையே உளவியல் பேரறிஞர் ஃபிராய்ட் 'இருபொருளுண்மை' (dualism) அல்லது 'இருமை' என்கிறார். இயற்கையாய் எழும் பாலியல் வேட்கையும், செயற்கையாய் சமூகம் உருவாக்கித் திணிக்கும் பண்பாட்டுக் கருத்தியலும் இடைவிடாமல்

ஒன்றோடொன்று மோதுவதால் மனிதர்களிடம் நடத்தைத் தடுமாற்றத்துக்கு வழி வகுக்கும் உளப்போராட்டம் நிகழ்வது தவிர்க்க முடியாததாகிறது.

பாலுணர்ச்சி ஒன்றும் பாவகாரியம் இல்லை. அது பாவம் என்றால் ஆணென்றும் பெண்ணென்றும் இருவேறு படைப்புகளுக்கு அவசியமே இல்லை. பழைமைச் சமூகத்தில் தடையற்ற பாலுறவு இருந்தது. அப்போது விலங்குக்கும் மனிதருக்கும் இடையில் வாழ்க்கை முறையில் பெரிய வேறுபாடு இல்லை. அந்தப் பழைமைச் சமூக வாழ்வை நோக்கி நாம் திரும்பி நடப்பதில் நாகரிக வளர்ச்சியோ, பண்பாட்டு மலர்ச்சியோ அறவே இல்லை. காலப் பெருவெளியில் மானுடன் கொஞ்சம் கொஞ்சமாய் அனுபவங்களின் அடிப்படையில் பண்பட்டு வளர்த்ததுதான் பண்பாடு. 'உயிர்களின் துன்ப நீக்கத்துக்கு இன்றியமையாதது ஆண்-பெண் சேர்க்கை. அதை வெறுப்பதும், துறப்பதும் அறமா?' என்று கேட்டவர் தமிழ் முனிவர் திரு.வி.க. பாலுணர்ச்சியைத் தடுத்தால் உடலும் உள்ளமும் கெடும். இதை நன்றாக உணர்ந்த நம்

மூதாதையர் கண்டுபிடித்த கண்கண்ட மருந்தே இல்லறம். ஓர் ஆணும், ஒரு பெண்ணும் சேர்ந்து காதலும் காமமுமாய் வாழ்வதற்கு வகுக்கப்பட்டதுதான் திருமணம்.

முறையாக மணம் முடிப்பதற்கு முன்பே முதிர்ச்சியற்ற இளைய சமூகத்தில் சிலர் முறை தவறிய காமச்சகதியில் சரிந்து விழுகின்றனர். சமூகக் கட்டுப்பாடு சிலரை ஓரினச் சேர்க்கையில் தள்ளிவிடுகிறது. இந்த முறை தவறிய மனப்போக்கு 'மோகத்திரிபு' என்று உளவியலாளரால் குறிக்கப்படுகிறது. பாலுணர்ச்சியை வெளியே தெரியாமல் அதிக மாக அடக்குபவர்கள் இந்தப் பள்ளத்தில் விழுந்து விடுகின்றனர். சமூக அவமானத்துக்கு அஞ்சி, குற்றவுணர்வுடன் இந்த ஓரினச் சேர்க்கையில் மறைவாக ஈடுபடுபவர்கள் மனநோய்க்கு இரையாகின்றனர். ஓரின மோகம் குறித்து 1,500 ஆண்டுகளுக்கு முன்பே வாத்ஸ்யாயனர் 'காமசூத்திரம்' நூலில் விரிவாக விளக்கு கிறார். நம் சமூகத்தில் பாலியல் பிரச்னைகளுக்கு வெளிப் படையான வடிகால் இல்லாததால், இன்று சீழ்பிடித்து நாறுகிறது. எதிர்ப் பாலினம் மீது ஏற்படும் அச்சம், வெறுப்பு,

ஆணாதிக்கக் கொடுமை, தீவிரப் பெண்ணியவாதப் போக்கு, தன்னகங்காரம் போன்றவற்றின் எதிர்மறை வெளிப்பாடுகள்தான் இந்த ஓரினச் சேர்க்கையின் பெருக்கம்.



'இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 377-வது பிரிவு ஓரினச் சேர்க்கையைக் கிரிமினல் குற்றமாகப் பாவிக்கிறது. பால்வினை நோயால் பாதிக்கப்படும் ஓரினச் சேர்க்கையாளர்கள் பகிரங்க மாக மருத்துவ சிகிச்சை பெற முடிவதில்லை. சிகிச்சை தருவதற்கு முன்வரும் மருத்துவரும் தண்டனைக் குரியவராகிறார். இதனால் அடிப்படை மனித உரிமை மீறப்படுகிறது' என்று டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த டெல்லி உயர் நீதிமன்றம், 'ஓரினச் சேர்க்கையில் வயது வந்தோர் ஒருவருக்கொருவர் இசைந்து ஈடுபட்டால் குற்றம் இல்லை' என்று தீர்ப்பளித்தது. ஓர் உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு நாடு முழுவதும் நடைமுறைக்கு வரும்

என்பதால், இப்போது ஓரினச் சேர்க்கையாளர்கள் பகிரங்கமாக டெல்லி, புவனேசுவரம், பெங்களூரு, சென்னை போன்ற பெருநகரங்களின் வீதிகளில் பேரணி நடத்துகின்றனர். நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென், எழுத்தாளர் விக்ரம் சேத் போன்றவர்கள் இவர்களை ஆதரித்து அறிக்கைவிடுகின்றனர். இரண்டு பெண்கள் சேர்ந்து மணமுடிப்பதும், இரண்டு ஆண்கள் இணைந்து இல்லறம் நடத்துவதும் இந்தியச் சமூகத்தில் அங்குமிங்கும் அரங்கேறி வருகின்றன. இவர்கள் உறவைக் கனடா சட்டபூர்வமாக 'தம்பதியர்' என்று அங்கீகரித்ததுபோல், இந்தியாவும் அங்கீகரித்தால் என்ன நடக்கும்? குற்றவுணர்வின்றி இவர்கள் கூடி வாழக் கூடும். ஆனால் குழந்தை பிறப்புக்கு என்ன வழி? தத்தெடுத்துக்கொள்வார்களா? நற்றாய், செவிலித்தாய் என்று சங்க இலக் கியங்கள் சொல்வதுபோல் ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு அன்னையரா? சமுதாய வீதிகளில் பின்னாளில் அந்தக் குழந்தைகள் சந்திக்கப்போகும் பிரச்னைகளுக்கு என்ன தீர்வு?

ஒருதலைக் காமம் 'கைக்கிளை' என்றும், மூத்தோர் - இளையோர் தொடர்பு 'பெருந்திணை' என்றும் சங்க இலக்கியங் களில் பழிக்கப்படுகின்றன. உணர்வாலும் வயதாலும், உயர்ந்த ஒழுக்க நெறிகளாலும் அன்பு சார்ந்த ஆண்-பெண் இருவரிடையே எழும் ஒத்த காமமே 'ஐந்திணை' என்று இலக்கியங்களில் ஆராதிக்கப்படுகின்றது. 'மலரினும் மெல்லிது காமம்' என்றார் வள்ளுவர். காமத்தில் இயல்புணர்ந்து அதில் முழுமையாக ஈடுபட்டு, உண்மையான இன்பத்தைச் சிலர் மட்டுமே அனுபவிப்பதாகக் குறள் கூறுகிறது. 'படைப்புக் காலத்தில் ஆணும் பெண்ணும் ஒரே பொருளாக இருந்தனர். ஆண்டவனின் சாபத்தால் அந்தப் பொருள் பிளவுபட்டு இரண்டாயின. அன்று முதல் அவை ஒன்றாய் இணைவதற்காக ஒன்றையன்று தேடுகின்றன' என்றார் பிளேட்டோ. ஆணும் பெண்ணும் இணைந்து இன்புறுவதுதான் இயற்கை. ஒருவர் அன்பில் ஒருவர் திளைப்பதுதான் சொர்க்கம்.

நம் வாழ்கால இளந்தலைமுறையில் பலருக்குப்

'புலனடக்கம்' என்றால் பொருள் புரிவதில்லை. புலன் களை அடக்குவது துறவு பூணுவதற்காக அன்று; இல்லற சுகத்தை இனிதாய் அனுபவிப்பதற்காக. வரையறை மீறாமல் வாழ்வதற்குப் பெயர்தான் தர்மம். இயற்கையான பாலுணர்வை இருவரிடையே மட்டும் நெறிப்படுத்துவதனால், தாம்பத்யம் இல்லற தர்மமாகிவிடுகிறது. அளவான பாலுணர்ச்சியே மனநலத்தின் அடையாளம். மனையறம் சிறப்பது மனநலம் பொறுத்தது.

வேதகாலத்து முனிவர்களும் மனைவியரோடுதான் வாழ்ந்தனர். சமணமும் பௌத்தமும் பிறந்த பின்னரே, துறவறம் உயர்வாகப் போற்றப்பட்டது. மரத்தில் இருந்து பட்டை தானாக உரிவதுபோல், மனத்தில் இருந்து காமம் படிப்படியாகத்தான் விடுபட வேண்டும். அதற்காகவே இந்து தர்மம் மனித வாழ்க்கையை பிரமசரியம். இல்லறம், வனவாசம், சந்நியாசம் என்று நான்கு நிலைகளை நோக்கி நடக்கச்

செய்தது. இளமையில் துறவு இயற்கை நெறிக்குப்

புறம்பானது. இன்பமாய் இருப்பதற்காகவே நமக்கு இந்தப் பிறவி வாய்த்திருக்கிறது. கலவியின்பம்தான் வாழ்வின் தலைமையின்பம் என்றான் பாரதி. ஆணும் பெண்ணும் உடல் கலந்து, உயிர் கலந்து, உள்ளம் கலந்து வாழ்வதுதான் உண்மையான இன்ப வாழ்வு. இல்லறமே நாம் பின்பற்ற வேண்டிய நல்லறம்.

எவ்வளவு உயர்ந்த இல்லறமாயினும், ஆணும் பெண்ணும் உடலுறவை நோக்கியே வசப்படுகின்றனர். 'காமம்தான் மானுடத்தின் மாபெரும் சொத்து. ஆனால், அதை நெறிப்படுத்திக்கொண்டு செலுத்துவதில்தான் மனித இனத்தில் பிரச்னையும், வாழ்க்கையும் இருக்கிறது' என்றார் காமவுணர்வுகளை ஃபிராய்டுக்கு முன்பு முழுமையாக ஆய்வு செய்த ஹவ்லக் எல்லீஸ். 'தனிமனிதன் காமச் சுமையைத் தாங்க முடியாமல் அவதியுறும்போது அதை எப்படி இறக்கி வைப்பது என்று வழி தேடித் தவிக்கிறான். அப்போது இயற்கையான ஈரினச் சேர்க்கைக்கு வாய்ப்பு இல்லாதபோது, ஓரினச் சேர்க்கையில் தடம் மாறுகிறான்' என்று கண்டறிந்தார் எல்லீஸ். காமத்தில் தடம் மாறாமல்

இருக்கவே சமூகம் பண்பாட்டுச் சட்டம் போட்டுப் பாதுகாக்க முயல்கிறது.

விதை மண்ணுக்குள் மறைந்தால்தான் செடி வளரும்; பூ மலரும். விதையின் மீது மூடி இருக்கும் மண், விதையை அழுத்துவது அதனுடைய வளர்ச்சியைத் தடுப்பதற்கு அன்று. விதை பக்குவமடைந்து, மெள்ளப் பிளந்து முளைவிடுவதற்காகத்தான் அதை மண் அழுத்துகிறது. காமம் தவிர்க்க முடியாதது; தவிர்க்கக் கூடாதது. ஆனால், அது கட்டற்று மோகத் திரிபுகளாய் மாறிவிடலாகாது. ஒவ்வொருவர் வாழ்விலும் காமத்துக்கு இடம் உண்டு. ஆனால், காமமே வாழ்வாகிவிடக் கூடாது.

வணிகமயமாகிவிட்ட இன்றைய வாழ்க்கைக் கலாசாரத்தில் நம் பழம்பண்பாட்டின் பெருமை நமக்குப் புரியாது. எது மிகையானாலும் அதனால் துன்பமே சூழும். அடங்காத காமம் அழிவு தரும் சாத்தானின் கைக்கருவி. அளவான காமம் தெய்வீக அருவி. உலகிலுள்ள அனைத்தும் ஓர் ஒழுங்குமுறைக்கு உட்பட்டவைதான். 'ஒழுங்குமுறை என்பது தண்டவாளம் மாதிரி.

தண்டவாளத்தை விட்டு ரயில் விலக முடியாது' என்கிறார் தத்துவஞானி ஜே.கிருஷ்ணமூர்த்தி!

- பயணம் தொடரும்-

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

36

## பெண்ணியம்



'ஆண்டவன் படைப்பில் அற்புதமான சிருஷ்டி பெண். அவளைவிடமென் மையும் மேன்மையும் நிறைந்த படைப்பு உலகில் வேறு எதுவும் இல்லை' என்றார் அண்ணல் காந்தி. பெண், அன்பின் பிறப்பிடம். தாய்மை

நிலையில் மனிதகுலம் முழுமைக்கும் அன்பை அவள் பகிர்ந்தளிக்கிறாள். அன்பும், பரிவும், பாசமும், தன்னல மறுப்பும், துன்பத்தைச் சகிக்கும் மனத்திண்மையும் இயற்கை யாகவே ஒரு பெண்ணின் இதயத்தில் இடம்பெற்றுவிடுகின்றன. ஆணுக்குப் பிறப்பளிக்கும் அன்னையாய், துன்பத்தில் ஆறுதல் தரும் உயிர்த் தோழியாய், சொர்க்கத்தின் சுகம் வழங்கும் இல்லறத் துணையாய்ப் பல பரிமாணங்களில் வாழ்க்கைக்கு அழகு சேர்க்கிறாள். ஆனால், அந்தப் பெண் இன்றளவும் பல ஆண்களால் அடிமையாகவே இழிவுபடுத்தப்படுகிறாள்.

பெண், பாவத்தின் பிறப்பிடம் என்பது பல மதங்களின் பார்வை. ஆண்களைத் தவறான திசையில் திருப்பிவிடும் சாத்தானின் கவர்ச்சி ஆயுதம் பெண் என்பது மதவாதிகள் மனோபாவம். 'சூதாட்டம், மது, பெண் மூன்றும் மனிதரை மாய்க்கும்

பெரும் தீமைகள்' என்கிறது மைத்ரேயினி சம்ஹிதை. 'தனித்துவத்துடன் வாழ்வதற்குத் தகுதியானவள் பெண் இல்லை' என்று பாடம் போதிக்கிறது வசிஷ்ட

பௌத்யாயன சூத்திரம். 'வீட்டையும், கணவனையும், பெற்றோரையும், கணவனோடு பிறந்தவரையும் கட்டி ஆள்பவள் பெண்' என்று புகழ்ந்த ரிக் வேதத்தின் பாதையில் இருந்து, பின்னாளில் தோன்றிய சமய சாத்திரங்கள் பிறழ்ந்துபோயின. பெண்ணைப் பெற்றவர், ஆணிடம் பணத்துக்குத் தாரைவார்க்கும் 'கன்யாசுல்கம்' வழக்கில் வந்தது. ஆனால், இன்று ஆணுக்குச் சுகம் தரவும், அவனுக்கு அடிமை ஊழியம் புரியவும், அவனுடைய வாரிசுகளை வயிற்றில் சுமக்கவும் பெண்ணே வரதட்சணை வழங்கும் பெரு வழக்கம் வளர்ந்துவிட்டது.

'தமிழ்நாட்டில் மாத்திரமே அல்லாது, பூமண்டலம் முழுதிலும் பெண்ணைத் தாழ்வாகவும், ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்; அநீதிக்கெல்லாம் கோட்டை; கலியுகத்தின் பிறப்பிடம்' என்று குறிப்பிடும் பாரதி, 'பெண்களுக்கு ஜீவன் உண்டு. மனம் உண்டு, புத்தி உண்டு. ஐம்புலன்கள் உண்டு.

அவர்கள் செத்த யந்திரங்கள் அல்லர். உயிருள்ள செடி கொடிகளைப்போலவும் அல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியாகவேதான். புறவுறுப்புகளில்தான் மாறுதல். ஆத்மா ஒரே மாதிரி' என்கிறார். பெண்களுக்குப் பாரதி வேண்டியது சம உரிமை. ஆனால், இன்றைய தீவிரப் பெண்ணியம் பேசுவோர் ஆணாதிக்கத்தை எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, குடும்பக் கட்டுமானத்தையே குலைக்கப் புறப்பட்டுவிட்டனர். 'ஆணைவிடப் பெண்ணே உயர்ந்தவள்' என்பது இவர்களது சித்தாந்தம். உயர்வு தாழ்வு குடியிருக்கும் இடத்தில் சமத்துவத்துக்கும், சுதந்திரத்துக்கும் இடம் இருக்காது என்ற உண்மையை இவர்களுக்கு யார் புரியவைப்பது?

ஆணும் பெண்ணும் சமநிலையில் போற்றப்பட வேண்டும் என்பது சரி. ஆனால், இருவரும் இயற்கையின் நியதிப்படி ஒரே தன்மையராக இருக்க வாய்ப்பே இல்லை. ஆண் செய்யும் அனைத்தையும் தானும் செய்ய முடியும் என்று அடம்பிடிப்பது சரியன்று. பெண்ணுக்கு எதிராக நம் சமூகம் நீண்ட காலமாக நிகழ்த்திவரும் கொடுமைகள் தகர்க்கப்பட

வேண்டும் என்று போராடுவதில் தவறில்லை. அதே நேரத்தில், 'பெண் மகளாகத் தோன்றி, மனைவியாக வாழ்ந்து, தாயாகத் தொண்டு செய்து, தெய்வமாகக் காட்சி தருபவள்' என்ற திரு.வி.க-வின் பார்வையில் ஆணாதிக்கம் படிந்திருக்கிறது என்று பழிப்பதைப் பெண்ணியவாதிகள் மறுவாசிப்பு செய்ய வேண்டும். பெண்ணின் பிறவி நோக்கம் ஆணுக்கு எதிராகப் போரிடுவது அன்று. ஒரு பாதியாய் நிற்கும் பெண் மறுபாதி ஆணுடன் இணைந்து, வாழ்வில் இன்பத்தைப் பெருக்கி உலகை உய்விப்பதுதான் அவள் நெஞ்சத்தில் நேர்ந்துகொள்ள வேண்டிய நெறி. ஆணுடன் கலந்து அவள் அன்பு செய்ய வேண்டும். பெண் ஆணோடு உரிமை பூண்டு வாழ்வதற்காக வகுக்கப்பட்டதுதான் இல்லறம். உயிர்களை உருவாக்கி, நல்வழிப்படுத்தி, உலகை மேன்மையுறச் செய்வதே பெண்ணுக்குரிய அறம். அதை ஒருபோதும் ஆண்களால் செய்ய முடியாது. அதனால்தான், 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா' என்று பரவசம் பொங்கப் பாரதி பாடிவைத்தான்.

ஆணும் பெண்ணும் சமவுரிமைகளையும்,சமவாய்ப்பு களையும் அனுபவிக்க அனுமதிப்பதுதான் ஆரோக்கிய மான சமூகத்துக்குரிய அடையாளம். ஆணைவிடப் பெண் அறிவில் குறைந்தவள் இல்லை. ஓர் ஆண் பேசும் பொய்யைப் பெண் எளிதில் புரிந்துகொள்வாள். குழந்தையின் மிக மெல்லிய முனகலைக்கூட மிகத் துல்லியமாகக் கேட்கும் செவிப்புலன் பெண்ணுக்கு மட்டுமே உண்டு. செய்திப் பரிமாற்றம் செய்வதில் பெண்ணே சிறந்தவள். ஆணின் மூளையைவிட அளவில் கொஞ்சம் சிறியதாயினும், வருமுன் ஊகிக்கும் ஆற்றல் பெண் மூளைக்கே அதிகம் என்கிறது உளவியல். சாமர்த்தியமாகப் பேசுவ திலும், சொல்ல வேண்டியதைச் சுருக்கமாக உணர்த்துவதிலும் பெண்ணுக்கே முதலிடம். 'பெண்ணே, நீ யார்? உன் கணவன் யார்? இந்தப் பிள்ளை யார்?' என்று கடந்தகால நினைவுகளை மறந்த துஷ்யந்தன் கேட்ட மூன்று கேள்விகளுக்கு, 'மகனே, பரதா! உன் தந்தையை வணங்கு' என்று ஒரு வரியில் விளக்கம் தந்தவள் சகுந்தலை. பெண்ணை ஒரு சக உயிரியாக

ஆண் பாவிக்கத் தொடங்கினால்... ஆணாதிக்கமும் அடிமைத்தனமும் தானாகவே தகர்ந்துபோகும்.

மேலைக்காற்று சுமந்து வந்து இந்த மண்ணில் சேர்த்ததுதான் பெண்ணியவாதம். அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்தைப் பின்பற்றி 1848-ல் செனகாபால்ஸ் என்னும் இடத்தில் நடைபெற்ற மாநாட்டில் பெண்கள் உரிமைப் பிரகடனம் (Declaration of the Rights of Women) தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. பெண்ணுரிமை இயக்கத்தை இங்கிலாந்தில் வில்லியம் காட்வினும், அவருடைய மனைவி வோல்ஸ்டோன் கிராப்டும் வளர்த்தெடுத்தனர். வோல்ஸ்டோன் கிராப்ட் வரைந்த 'பெண்களின் உரிமைச் சாசனம் (A vindication of the Rights of



Women) என்ற நூலில், 'காம இச்சைக்குரிய கருவியாகத் திகழ்வதற்கு முன் பெண் என்பவள் ஒரு மனிதப் பிறவியாக அமைகிறாள். மனித மனத்தைப் பொறுத்தவரை பால் வேறுபாடு கிடையாது. சமுதாயம் தேவையில்லாமல் பெண்களைக் குடும்ப

அடிமைகளாகவும், காமப் பொருளாகவும் பயன்படுத்துகிறது. பொருளாதாரச் சுதந்திரத்தை அவர்களுக்குத் தராமல், சமுதாயம் அவர்களை அடிமைகளாக வாழத் தூண்டுகிறது. அடிமைகள் எவ்வாறு சொத்தாகக் கருதப்பட்டார்களோ, அவ்வாறே பெண்களும் உடைமைப் பொருளாகக் கருதப்பட்டனர்' என்று தெளிவுபடுத்தினார். ('பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும்' - இரா.ரெங்கம்மாள், சி.வாசுகி)

பெண்ணியவாதம் 1960-களுக்குப் பின்பு திசை மாறித் தீவிரப் பெண்ணியவாதம் என்ற வடிவம் பெற்றது. திருமணம், குடும்பம், குழந்தைப்பேறு, கருத்தரித்தல் போன்றவற்றுக்கு எதிராக எழுந்த பெண்கள், ஆண்களைத் தங்கள் எதிரிகளாகப் பாவித்து, அவர்களிடம் இருந்து பிரிந்து வாழும் உரிமைக்குக் குரல் கொடுத்தனர். பாலியல் சுதந்திரம், கட்டுப்பாடற்ற விடுதலைக் காதல், பெண் ஓரினச் சேர்க்கை ஆகியவற்றை நோக்கி இந்தப் 'புரட்சிப் பெண்கள்' நடக்கத் தொடங்கினர். குடும்பக் கட்டுமானத்தை முற்றாகத் தகர்த்தெறிவதே இவர்களுடைய முதல்

நோக்கமாக முழங்கப்பட்டது. ஆண்களால் உருவாக்கப்பட்ட அனைத்தையும் மீறுவதே இவர்களின் லட்சியமானது. மிகவும் இறுக்கமாகக் கட்டியமைக்கப்பட்ட 'குடும்பம்' நம் கண் முன்னால் இன்று நம்முடைய மண்ணிலேயே விரிசல்கண்டுவிட்டது. படித்த இளைய வர்க்கத்தில் சிலர் திருமண பந்தம் இல்லாமல் ஒரு கூரையின் கீழ் சேர்ந்து வாழும் 'living together' கலாசாரச் சகதியில் விழத் தொடங்கிவிட்டனர். விரும்பியவரை இணைந்திருப்பதும், கசந்த பின் பிரிந்துவிடுவதும் இக்கலாசாரத்தின் 'பண்புநலன்'. திருமணப் பந்தத்தில் விவாகரத்துக்காக நீதிமன்றப் படியேற வேண்டும். இந்த நவீனக் கலாசாரத் தில் அதுபோன்ற 'தொல்லைகள்' கிடையாது. நுகர்வுதான் வாழ்வின் ஒரே நோக்கம் என்றாகிவிட்ட நிலையில்... நம் இளைய சமூகம் இந்த இழிந்த கலாசார வெளிச்சத்தை நோக்கிப் படையெடுத்துப் பாழாகும் விட்டில் பூச்சிகளாகிவிடக் கூடாது.

பெண்ணுரிமை குறித்த சரியான புரிதல் பெண்களுக் குத் தேவை. 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற புரட்சிகரமான

நூலில் பெரியார், 'கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுதுகொண்டிருக்கச் செய்யும்படியான நிர்ப்பந்தக் கல்யாணங்கள் ஒழிய வேண்டும். கற்புக்காக புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும் என்கின்ற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாய வேண்டும். கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மை அன்பை, காதலை மறைத்துக்கொண்டு, காதலும் அன்பும் இல்லாதவனுடன் இருக்க வேண்டும் என்கிற சமூகக் கொடுமை அழிய வேண்டும்' என்று தெளிவாகவும் அழுத்தமாகவும் வலியுறுத்துகிறார். விரும்ப முடியாதவனோடு 'கற்பு' என்ற பாசாங்குச் சொல்லில் முகம் மறைத்து நிற்கும் ஆணாதிக்கத்தைப் பாதுகாக்க ஒரே கூரையின் கீழ் காலம் முழுவதும் கண்ணீர் சிந்தியபடி வாழ்வது பேதைமை. பெரியார் அறிவுறுத்தியபடி அந்த வேலையைத் தாண்டி, விரும்பும் மனிதனின் கைப்பிடித்து வாழ்வதுதான் நேர்மை. அந்த நேர்மைக்குப் பெயர்தான் 'கற்பு'. ஆனால், 'சேர்ந்து வாழ்தல்' என்று பூத்திருக்கும் புதிய கலாசாரம் விலங்கு

வாழ்க்கையில் இருந்து எந்த விதத்திலும் வேறுபட்டதன்று.

பழைய ஏற்பாட்டில் யூதர்களுக்கு மோசஸ் வழங்கிய 10 கட்டளைகள்போன்று, பாரதி ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பெண் விடுதலைக்காக 10 கட்டளைகளைப் பட்டியலிட்டிருக்கிறான்.

1. பெண் ருதுவாகு முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது 2. விரும்பாத புருஷனை விவாகம் செய்ய வற்புறுத்தல் கூடாது. 3. விவாகம் செய்தவனை விட்டு நீங்கிய பெண்ணை அவமானப்படுத்தக் கூடாது 4. மூதாதையர் சொத்தில் பெண்ணுக்குச் சமபங்கு கொடுக்க வேண்டும். 5. புருஷன் இறந்தால் மறுவிவாகம் செய்ய அனுமதிக்க வேண்டும். 6. விவாகமே செய்யாமல் தனியாகத் தொழில் செய்து ஜீவிக்க இடம் தர வேண்டும் 7. கணவனைத் தவிர பிற புருஷருடன் பேசுவதையும் பழகுவதையும், பயத்தாலும் பொறாமையாலும் தடுக்கக் கூடாது. 8. ஆண்களைப்போலவே பெண்களுக்கு உயர்கல்வி வழங்க வேண்டும் 9. அரசுத் துறைப் பணிகளில் பெண்கள்

இடம்பெற வேண்டும். 10. சுயராஜ்யம் கிடைத்ததும் பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளில் பங்கு கொடுக்க வேண்டும் பாரதியின் 10 கட்டளைகளை அறியும்போது, அவன் காலத்தில் அவனளவு முற்போக்காய் சிந்தித்தவர் எவரும் இல்லை என்ற உண்மையை உணர முடியும்.

பெண்ணுரிமைக்காக உருகியுருகி எழுதிய பாரதி தீவிரப் பெண்ணியம் முன்னெடுத்துவைக்கும் விடுதலைக் காதலை ஆதரிக்கவில்லை. கட்டற்ற காற்றைப்போல் எல்லாக் கட்டுகளில் இருந்தும் விடுபட்டு விலகி, மனம் போனபோக்கில் பெண் வாழ்வதற்கு வழியமைப்பதே உண்மையான பெண் விடுதலை என்று பாரதி எண்ணவில்லை. 'ஒரு பெண் அடிமையாக இருக்கும்போது, ஆண் மட்டும் எப்படிச் சுதந்திரமாக இயங்க முடியும்?(can man be free if women be a slave?)என்று கேட்ட ஷெல்லியின் பெண் விடுதலை பற்றிய கருத்தாக்கத்தில் பெருமளவு இயைந்து போகும் பாரதி, அவனுடைய கட்டற்ற விடுதலைக் காதலை அங்கீகரிக்கவில்லை. 'ஆணும் பெண்ணும் தங்களுக்குப் பொதுவான அடிமைத்தனத்தை

உடைத்தெறிந்து, சட்டவரம்புக்குட்படாத காதல் மூலம், தங்கள் துயரத்துக்கு மாற்றான ஆறுதலைத் தாராளமாகப் பெறலாம்' என்ற ஷெல்லியின் கருத்து, நம் மண்ணின் மரபார்ந்த குடும்ப வாழ்க்கைமுறைக்கு மாறானது என்று சிந்தித்துப் புறந்தள்ளியவன் பாரதி.

'இந்தத் தண்ணீர்க் கோப்பைக் கொள்கை முற்றிலும் மார்க்ஸிய விரோதமானது. மேலும், சமூக விரோதமானது என்றே கருதுகிறேன். உடலுறவு வாழ்க்கையில் வெறும் இயற்கையை மட்டும் கருதிப் பார்க்கக் கூடாது. கலாசாரத் தன்மைகளையும் பார்க்க வேண்டும். ஆணும் பெண்ணும் ஏற்கும் உறவுகள் பொருளாதாரத்துக்கும், உடல் தேவைக்கும் இடையே நிகழும் சக்திகளின் விளையாட்டு மட்டுமன்று. தாகம் தணிக்கப்பட வேண்டும் என்பது உண்மைதான். அதற்காக ஒரு சாக்கடையின்

மீது படுத்து, குட்டையிலுள்ள தண்ணீரை, அல்லது பல உதடுகள் பட்டு விளிம்பெல்லாம் கறைபடிந்துவிட்ட கோப்பையில் உள்ள தண்ணீரை ஒருவன் அருந்துவானா? தண்ணீர் அருந்துவது தனிநபர் விவகாரம். ஆனால்,

காதலில் இரு உயிர்கள் சம்பந்தப்பட்டுள்ளன. மேலும், மூன்றாவது ஒரு புதிய உயிரும் தோன்றுகிறது. இதுதான் சமுதாயத்தின்பால் ஒரு கடமையைத் தோற்றுவிக்கிறது' (லெனின் பற்றிய நினைவுக் குறிப்புகள்) என்ற லெனின் வாசகம் இளைஞர்களின் சிந்தனையைச் செழுமைப் படுத்தக்கூடியது.

ஆணும் பெண்ணும் எதிரிகள் அல்லர். நம்மை நாம் உணரும்போதுதான் மற்றவர்களால் எளிதாக உணரப்படுகிறோம். ஒன்றே ஒன்றுதான் தேவையென்றால், இரண்டு எதற்கு? நாம் ஒவ்வொருவரும், இருவர் ஒன்றாக இணைந்ததனால்தானே உருவாக முடிந்தது. ஆண் தன்னை இழந்து பெண்ணையும், பெண் தன்னை இழந்து ஆணையும் கண்டுவிட்ட பின்பு அங்கே ஆதிக்கம் ஏது? 'இழப்பதுதான் காண்பது' என்கிறது தாவோயிசம். ஆண்-பெண் இருவரில் தருபவர் யார்? பெறுபவர் யார்? கொடுப்பது ஒருவர், ஏற்பது ஒருவர் என்றால் தானே உயர்வும் தாழ்வும். இந்தப் புரிதல் இருந்தால் ஆணாதிக்கம், பெண்ணியம் என்பதெல்லாம் அர்த்தமற்ற

வெற்றுச் சொற்களாகிவிடாதா!

- பயணம் தொடரும்-

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

# இல்லறம்

பெண்ணும் ஆணும் ஒன்றுசேர்ந்து வாழ்வதுதான் உண்மையான வாழ்க்கை. இருவரின் அன்பு வழிப்பட்ட இணைப்பில்தான் மண்ணில் மனித இனம் நடத்தும் வாழ்க்கை முழுமையுறும். தொன்மைச் சமூகத்தில் திருமண பந்தம் இல்லை. யாரும் யாரோடும் கூடிக் களிக்க, அப்போது எந்தத் தடையும் இல்லை. விலங்குகளுக்கும் மாந்தர்க்கும் வாழும் வகையில் வேறுபாடில்லாத காலம் அது.

37

வேட்டைச் சமூகம், நிலவுடைமைச் சமூகமாகப் பரிணாமம் பெற்ற பின்பே... காதல் வாழ்க்கை கனிந்தது. குழுக்களாகக் கூடி வாழ்ந்தவரிடையே, குடும்ப உறவு பூத்தது. பாலுணர்ச்சியை நெறிப்படுத்தும்

பண்பாட்டு வேலி போடப்பட்டது. ஆணும் பெண்ணும் அடுத்தவர் அறியாமல் மறைவாகக் கலந்து மகிழும் களவு வாழ்க்கை முகிழ்த்தது. களவில் ஈடுபட்டவர்கள் இடையே கால நடையில் பொய்யும் வழுவும் தோன்றியதால், கற்புக்குக் களங்க மில்லாத திருமண ஏற்பாடு பின்னாளில் உருவானது என்று தொல்காப்பியம் கூறுகிறது.

ஊரறிந்த இருவர் உறவுக்கு, உற்றார் கூடி முகவரி சேர்க்கும் முயற்சியே திருமணம். குடும்பக் கோயிலுக்கு அதுவே நுழைவாயில். வெறும் இரண்டு உடல்களின் இணைப்புக்காக நம் முன்னோர் திருமணம் நடத்தவில்லை. மாந்தர்கள் வெறும் உடல்கள் மட்டுமில்லை; காமம் மட்டுமே காதல் வாழ்வில்லை. 'காதற் காமம் காமத்துச் சிறந்தது' என்கிறது பரிபாடல். உயிர் கலந்து, உள்ளம் தோய்ந்து வாழும் காதல் வாழ்க்கை இறப்பு வரை தொடரும். உடலின் மேடு பள்ளத்தில் ஈடுபடும் காமம், பாதிப் பயணத்தில் பட்டுப்போகும். உடல் இன்பத்தை முற்றாகத் துறந்து ஆண்கள் புத்தபிக்குகளாகவும், பெண்கள் மணிமேகலையின்

வாரிசுகளாகவும் மாற வேண்டிய அவசியம் இல்லை.



சுவாமி விவேகானந்தர் துறவு நிலையைப் போற்றிப் புகழ்வதை பாரதி விமர்சிக்கிறான். 'வேத காலத்தில் இந்தத் துறவு வழி, இந்துக்களுக்குள்ளே

கிடையாது!' வேத காலத்தில் சந்நியாசம் நமக்குள்ளே இருந்திருப் பதாக சுவாமி விவேகானந்தர் சொல்கிறார். வசிஷ்டர், வாமதேவர் முதலிய வேதரிஷிகள் அத்தனை பேரும் மனைவி மக்களுடனேயே இன்புற்று வாழ்ந்தனர். வேத ரிஷிகளுக்குத் துறவறம் என்ற விஷயமே இன்னதென்று தெரியாது. 'சுவாமி விவேகானந்தர், வேதத்தின் பிற்சேர்க்கைகளாகிய உபநிஷத்துகளையே முக்கியமாகப் பயின்றவர்' என்கிறான் நம் மகாகவி.

'ஒருவனுக்கு மனத் துறவைக் காட்டிலும் அதிகத் துன்பம் விளைவிக்கத்தக்க செய்கை வேறு இல்லை. இல்லாள் அகத்திருக்க, இல்லாததொன்றில்லை. கற்புடைய மனைவியுடன் காதலுற்று, அறம் பிழையாமல் வாழ்தலே இவ்வுலகத்தில் ஸ்வர்க்க வாழ்க்கையை ஒத்ததாகும்' என்று மண வாழ்க்கையைக் கொண்டாடி மகிழ்கிறான் பாரதி. ஆனால், இன்று சிலர் 'திருமணம் ஒரு தேவையற்ற பந்தம்' என்றும், 'அது உடனே உடைத்து நொறுக்கப்பட வேண்டிய அடிமைச் சங்கிலி' என்றும், 'பாலுறவு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில்தான் நிகழ வேண்டும் என்ற அவசியம் இல்லை' என்றும், 'ஆண்களும், பெண்களும் தனித்தனியாக ஓரினச் சேர்க்கையில் ஈடுபடலாம்' என்றும், 'இந்தப் பாலியல் பிறழ் உறவுகளை இந்தியச் சட்டம் அவசரமாக அங்கீகரிக்க வேண்டும்' என்றும் 'புது யுகப் புரட்சிக் குரல்கள்' ஒலிக்கத் தொடங்கிவிட்டன!

ஓரினச் சேர்க்கை ஆண்களுக்கு இடையில் 'கே' (Gay)என்றும், பெண்களுக்கு இடையில்

'லெஸ்பியன்' (Lesbian) என்றும் அழைக்கப்படுகிறது. இந்தப் பாலியல் பிறழ்வுகள் பழங்காலத்துக் கிரேக்க, ரோமானிய மக்களிடையே நிகழ்ந்திருக்கின்றன. சாக்ரடீஸ் காலத்திலேயே ஆண்களின் நிர்வாணச் சிலைகள் அமைக்கப்பட்டதன் ரகசியம் ஓரினச் சேர்க்கையில் கிரேக்கருக்கு இருந்த நாட்டமேயாகும். பிளேட்டோ தன்னுடைய 'கருத்துக் கோவையில் (symposium) மூன்று விதமான பாலியல் உறவுகளைப் பட்டியலிடுகிறார். ஓரினச் சேர்க்கை குறித்து கி.மு. 96-ல் யூத வரலாற்றாசிரியர் ஜோசபஸ் குறிப்பிட்டிருக்கிறார். பெண்ணியத்தின் பேரெழுச்சி மேலை நாடுகளில் பிரவாகமாகப் பொங்கியபோது, 'லெஸ்பியன்' உறவுகள் பகிரங்கமாக வெளிப்பட்டன. இந்த பிறழ் உறவுகள் மேற்கில் இருந்து நம் மண்ணில் இறக்குமதியாகி, இளம் இதயங்களை நோக்கி இன்று வலை விரிக்கின்றன.

ஓர் ஆணைச் சார்ந்திருக்க அவசியமற்ற பொருளாதாரச் சுயசார்புத்தன்மை பெண்ணிடம் வந்து சேர்வது வரவேற்கத்தக்கது. பெண்களுக்கான சுதந்திரமும்,

சமத்துவமும், பொருளாதாரச் சுயசார்பின் மூலமே சாத்தியப்படும். ஆனால், இந்தச் சுயசார்பு... மண வாழ்க்கை, குடும்பம், குழந்தைப்பேறு போன்றவற்றுக்கு எதிராகத் திரும்புவது தவறான விளைவுகளையே தேடித் தரும். ஆணாதிக்கம் என்ற மூட்டைப் பூச்சியை ஒழிக்க, குடும்பம் என்னும் வீட்டையே எரிப்பது பேதைமை.

'லோகஸ்ட்' எனப்படும் வெட்டுக்கிளிகள் திடீரென்று பல கோடியாய்ப் பல்கிப் பெருகிப் பச்சைத் தாவரங்களை நோக்கிப் படையெடுக்கும். ஒரு பசுமைப் பிரதேசத்தில் இந்த வெட்டுக் கிளிகள் இறங்கியதும் சில நிமிடங்களில் அத்தனை இலைகளையும் தின்று தீர்த்து, அந்த இடத்தையே பாழ்வெளியாக்கிவிடும். ஆயிரம் மைல் தூரம் வரை பறந்து வந்து பசுஞ்சோலைகளைப் பாழ்படுத்தும் 'லோகஸ்ட்' போன்றுதான், வணிகக் கலாசாரம் வளர்த்தெடுத்த பாலியல் பிறழ்வுகள், நம் பண்பாட்டு வேரறுக்கப் பார்க்கின்றன.

பாலியல் பிறழ்வுகளால் மன இறுக்கம் ஏற்பட்டு வாழ்க்கையின் மீது விரக்தி வளர்கிறது. ஓரினச்

சேர்க்கையில் ஈடுபடுபவர்களில் 18 சதவிகிதம் பேர் தற்கொலை செய்துகொள்வதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. ஆனால், தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் 'Reality Show'ஓரினச் சேர்க்கையில்தான் உண்மையான மனநிறைவு கிடைப்பதாகப் பொய்யுரைக்கிறது. அன்பில் தோய்ந்த உறவும், அறம் தழுவிய வாழ்வும்தான் நம் இல்வாழ்வின் இலக்கணம் என்பதை இளைய சமூகம் உணர வேண்டும். மனைவி, மக்களைப் பராமரிக்கும் சுயநலத்தோடு இல்வாழ்க்கை முடிவதில்லை. ஏழைக்கும், யாருமற்ற அநாதைக்கும், ஊனமுற்றவர்க்கும் உதவிக் கரம் நீட்டுவதில்தான் இல்வாழ்வின் அர்த்தம் நிறைவடைகிறது.

'ஒரே கூரையின் கீழ் பாதுகாக்கப்படும் இதயங்களின் இணைப்பே குடும்பம், அன்பு, பரிவு, பாதுகாப்பு உணர்வு, ஒன்றிணைந்து வாழ்தல், சகிப்புத்தன்மை ஆகியவற்றின் உறைவிடமே குடும்பம்' என்று உலகநாடுகள் சபை வரையறை செய்திருக்கிறது. இன்றைய இளைய சமூகத்திடம் சகிப்புத்தன்மை இல்லாமற் போய்விட்டது.

அதனால்தான் 'தேனிலவு' முழுமையடைவதற்கே வாய்ப்பின்றிக் கட்டில்கள் பிரித்துப் போடப்படுகின்றன.

'ஆணாதிக்கம் முதலில் குடும்பத்தில்தான் கருக்கொள் கிறது. ஆணுக்குப் பெண் சமமாக மதிக்கப்படுவதும் இல்லை; ஓர் ஆண் அனுபவிக்கும் சலுகைகள் எந்தப் பெண்ணுக்கும் வழங்கப்படுவதும் இல்லை. சுதந்திரமும் சமத்துவமும் இல்லாத குடும்ப அமைப்பு இனியும் ஏன் நீடிக்க வேண்டும்?' என்ற பெண்ணியத்தின் குரல் எல்லா வகையிலும் நியாயமானது.

அடக்குமுறை எந்த வடிவத்தில் இருந்தாலும், எதிர்ப்பும்



முரண்டும் எழுவது இயல்பு. கட்டுப்படுத்துபவரும் கட்டுப்படுபவரும், உண்மையான அன்பை எப்படி அனுபவிக்க முடியும்? அன்பு உண்மையாக இல்லாதபோது, இல்லறம் எப்படி இனிமை தரும்?

'ஒரு பெண்ணும் ஓர் ஆணும் தனித்திருந்தால் அவர்கள் இருவருக்கும் இடையில் சாத்தான் இருப்பான்' என்றார் நபிகள் நாயகம். ஆணாதிக்க எதிர்ப்பு திசை மாறிக் குடும்ப

அமைப்புக்கு எதிராகப் பயணித்து, பாலியல் பிறழ்வாக முடிந்துவிடக் கூடாது. பெண்ணை எந்த நிலையிலும் சக உயிரியாய்ப் போற்றும் தன்மையில் இருந்து ஆண் விலகி நிற்கலாகாது.

'ராதையை விட்டுவிட்டு நம்மால் கண்ணனை நினைத்துப் பார்க்க முடியாது. கண்ணனின் மென்மைக்கும் நளினத்துக்கும் ராதையே மூலகாரணம். ராதையே கண்ணனின் கீதம்; அவனது ஆனந்த நடனம், அவனுடைய பெண்மைப்பண்பு. ராதாகிருஷ்ணனுக்குச் சரியான ஒரு குறியீட்டைச் சீன மொழியில்தான் காண முடியும். அதற்கு யின், யாங் என்று பெயர். ஒவ்வொரு சொல்லுக்கும் பொருளுக்கும் சீன மொழியில் படங்கள் உண்டு. பிரபஞ்சத்துக்கு யின், யாங்தான் குறியீடு. ஒரு வட்டம். அதன் சுற்றுக் கோட்டில் ஒரு வெள்ளை மீனும், ஒரு கறுப்பு மீனும். ஒரு மீனின் வாலை இன்னொரு மீன் கவ்வியபடி இருக்கும். இவை இரண்டும் இணைந்தே பூரணப் பிரபஞ்சம் ஆகிறது. அரை வட்டம் வெள்ளை மீன். மீதம் அரை வட்டம் கறுப்பு மீன். வெள்ளை மீன் 'யாங்'

இயற்கையின் ஆண்தன்மையையும், கறுப்பு மீன் 'யின்' பெண்தன்மையையும் கொண்டுள்ளன. இவை இரண்டும் இணைந்து எல்லாவற்றையும் படைக்கின்றன. ராதையும் கண்ணனும் வாழ்வின் முழுமையான வட்டம். 'கண்ணன் ராதையிடம் இருந்து பிரிந்தால்... சாரமற்றுப்போவான்' என்கிறார் ஓஷோ.

பெண்ணுக்கு மட்டும் 'கற்பு' என்ற விலங்கு பூட்டி அடிமையாக்கிக்கொண்ட ஆணாதிக்கம், அதற்கேற்பக் கதைகளை உருவாக்கி, அவற்றையே மரபாகவும் சமூகச் சட்டமாகவும் மாற்றிவிட்டது. ஒருவருக்கொருவர் உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்பதற்குப் பெயர்தான் கற்பு. கோவலனுக்காகவே கண்ணகி வாழ்ந்தால், அந்தக் கண்ணகிக்காகவே கோவலன் வாழ வேண்டும். அதுதான் பாரதி பேசும் கற்பு. ஒருவருக்காக ஒருவர் வாழ்வதில் ஆதிக்கம் இல்லை; அடிமைத்தனம் இல்லை. அன்பிற் சிறந்த தவம் அகிலத்தில் உண்டா?

'இல்வாழ்வில் ஈடுபடாத ஒருவனது உள்ளத்தை, ஜன்னல்களும் வாயிற்கதவுகளும் மூடப்பட்டுக் காற்று

நுழையப்பெறாத பாழும் கட்டடத்துக்கும், ஓட்டமில்லாத நீர்நிலைக்கும் ஒப்பிடலாம்' என்றார் திரு.வி.க. 'மண வாழ்வில் துன்பத்தோடு இன்பமும் இருக்கும். ஆனால், தனித்து வாழ்வதில் துன்பத்தைத் தவிர வேறேதுமில்லை' என்று தெளிவுபடுத்தினார் சாமுவேல் ஜான்சன். 'ஒருவருடைய உடல் மற்றவருக்கு விருந்தாகிறது. விருந்தளிப்பவர் தாராளமாக நடந்து கொள்ளட்டும்... விருந்தாளி பெருந்தன்மையாக ஏற்றுக்கொள்ளட்டும்' என்கிறது தாவோயிசம்.

'திருமணத்தினால் ஏற்படும் முரண்பாடுகளுக்குத் தீர்வு, திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பதுதான்' என்ற ஓஷோ ஒரு கதை சொன்னார். 'ஒரு பழைய நகரத்தின் மதில்சுவர் பிளவில் கொத்து மலர்கள் பூத்துக் குலுங்கின. பாதுகாப்பான இடத்தில் இருந்ததால் காற்றும் புயலும் அந்தப் பூக்களைப் பாதிக்கவில்லை. மழையினாலும் அவை சேதப்படவில்லை. மதில்சுவருக்குப் பக்கத்தில் மண்ணில் வளர்ந்த செடியில் மலர்ந்து சிரித்த ரோஜாக்களின் கவர்ச்சியில் மயங்கிய காட்டுப் பூக்கள்,

'எங்களையும் ரோஜா மலர்களாக மாற்றிவிடுங்கள் ஆண்டவரே' என்று வேண்டிக்கொண்டன. 'ரோஜாக்களின் வாழ்க்கை சிரமமானது. காற்றடித்தால் வேரோடு அவை ஆடும். மலர்ந்துவிட்டால் மனிதர்கள் பறித்துவிடுவார்கள். மதில்சுவரின் நடுவில் பாதுகாப்பாய் இருக்கும் நீங்கள், மண்ணில் சிரிக்கும் ரோஜாவாக மாறினால், பாதுகாப்பற்றுத் துயரப்படுவீர்கள்' என்று அறிவுறுத்தினார் ஆண்டவர்.

'இதுபோன்ற மூடத்தனமான விருப்பத்தி னால், முன்பு நம் முன்னோர் மிகுந்த துயருற்றனர். நம் இனத்தின் அனுபவத்தில் கிடைத்திருக்கும் அறிவு, நாம் சரியாகவே பிறந்திருக்கிறோம் என்பதுதான். நீங்கள் ரோஜாவாக முயன்றால் துயரம்தான் தொடரும்' என்று பக்கத்தில் இருந்த பூக்கள் புத்தி புகட்டின. ஆனால், ரோஜாவாக ஆசைப்பட்ட காட்டுப் பூக்கள் விடாமல் ஆண்டவரை வேண்டின. ஆண்டவரும் மனமிரங்கி அவற்றின் ஆசையை நிறைவேற்றினார். காட்டுப் பூக்கள் கவர்ச்சி மிக்க ரோஜாச் செடிகளாக மண்ணில் மலர்ந்தன. அப்போது

புயல் வீசியது. மழை ஓங்கியடித்தது. அந்த ரோஜாச் செடிகள் வேருடன் பெயர்ந்து தரையில் சரிந்தன. மழைக்குப் பின்பு காய்ந்த வெயிலில் இதழ்கள் கருகின. 'முன்பு எவ்வளவு பாதுகாப்பாக இருந்தீர்கள். பழைய வாழ்க்கை நமக்குப் பழக்கப்பட்டது. அதில் சில பிரச்னைகள் இருந்தாலும் அவற்றை எளிதில் நம்மால் சமாளிக்க முடியும். ஆபத்தான சூழலில் அழகிய ரோஜாவாக வாழ்வது அவசியம்தானா?' என்று முதலில் புத்தி சொன்ன பூக்கள் கேட்டன.

'ஆபத்தான சூழலில் ஒரு நாள் வாழ்ந்தாலும் சூரிய னோடும் நட்சத்திரங்களோடும் எங்களால் பேச முடிந்தது. வாழ்க்கையைப் பூரணமாக வாழ்ந்து நிறைவாக நாங்கள் சாகிறோம். சுவாரஸ்யமற்றுப் பாதுகாப்பாய் நீங்கள் பலநாள் வாழ்ந்து என்ன பயன்? என்று சொல்லிய பின்பு கருகிய ரோஜாக்கள் கண் மூடின'. ஓஷோ சொன்ன கதை நயமானது. ஆனால், அதன் மூலம் அவர் அறிவுறுத்தும் கருத்து மிகத் தவறானது.

ஆம், கவர்ச்சிமிக்க ஒரு நாள் வாழ்க்கை, மலருக்கு

நிறைவாக இருக்கலாம். நிச்சயமாக மாந்தர்க்குஉகந்ததில்லை. திருமணம் என்பது நம் முன்னோர் வாக்குப்படி ஆயிரங்காலத்துப் பயிர்; அடுத்த தலைமுறையின் நாற்றங் கால். அதைப் பாதுகாப்புடன்தான் நாம் பராமரிக்க வேண்டும்.

பண்பாட்டு வேலியைத் தாண்டும்போது வெள்ளாடு களுக்குக் கொண்டாட்டமாகத்தான் இருக்கும். பின்பொரு நாள், அவை எங்கோ வெட்டுப்பட்டு விழுந்துகிடக்கும்!

– பயணம் தொடரும்–

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

விவாகரத்து

38

'திருமணத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. திருமணம் கை கால்களைப் பிணைக்கும் விலங்கென்று யாராவது கருதினால், அது அவர்களிடம்

மண்டியிருக்கும் அறியாமையைக் காட்டும். 'நான் மணம்புரியும் மனைவியை மகிழ்விப்பேன்!' என்று உறுதி பூண்டு எவன் திருமணம் செய்துகொள்கிறானோ, அவன் சரியான காரியத்தையே செய்கிறான். ஒரு நல்ல மனைவியின் பூரண அன்பை ஒருவன் அடைந்துவிட்டால், அவன் பிச்சைக்காரனாக வாழ்ந்து செத்தாலும், தன் வாழ்க்கையில் அவன் பெற்றது வெற்றியே. ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாகப் பேர் பெற்று, அதன் பின் சிறைப்பட்டு இறந்ததைவிட, ஒரு குடிசையில் மனைவியின் நெருக்கத்தில், அருமைக் குழந்தைகள் மடியில் விளையாட, கட்டைச் செருப்பணிந்த ஒரு சாதாரண பிரெஞ்சு விவசாயி என்ற அந்தஸ்தில் நெப்போலியன் அளவற்ற இன்பத்துடன் வாழ்ந்து மறைந்திருக்கலாம்!' என்று குடும்ப வாழ்க்கையைக் கொண்டாடியவர் அமெரிக்க அறிஞர் இங்கர்சால்.



'எல்லா விலங்குகளில் இருந்தும் விடுதலை பெற்றுவிடுங்கள். திருமணமும் ஒரு

விலங்குதான். அதைப்போன்று மரணத்துக்கு அருகில் இருப்பது வேறொன்றும் இல்லை. உயிருள்ள இருவர் அருகருகில் இருக்கின்றனர், சுத்தமாய் செத்துப்போனவர்களாக!

திருமணம் இயற்கைக்கு எதிரானது. அது மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட மிகக் கேவலமான அமைப்பு. அது கண்டுபிடிக்கப்பட்ட நோக்கமே, பெண்ணை ஓர் ஆண் முழு உரிமை கொண்டாடத்தான். சிறைக் காவலனுக்கும், சிறைக் கைதிக்கும் இடையில் நட்பு சாத்தியமில்லை. சமமான மனிதர்களிடையேதான் நட்பு சாத்தியம். கணவனுமில்லை;

மனைவியுமில்லை, நண்பர்களாக இருப்பது நல்லது.
உங்கள் சொந்த வாழ்வில் நீதிமன்றமும், சட்டமும், அரசும் தலையிடுவது அசிங்கம். விருப்பம் மறைவதாய் நீங்கள் உணரும்போது 'குட்பை' சொல்லிவிடலாம்.
வலித்தாலும்கூட வாழ்வின் வழி அதுவே' என்று திருமணத்தையும், குடும்ப அமைப்பையும் எதிர்த்துக் கலகக் கொடி பிடிக்கிறார் ஓஷோ.

ஆணும் பெண்ணும் திருமண பந்தமின்றி நண்பர்களாக நீடிப்பது நல்லது என்று பரிந்துரைக்கும் ஓஷோ வைப் பின்பற்றுவோர் பட்டியல் நாளும் பெருகி வருகிறது. இந்த இருவரின் உடல் கலப்பில் ஒரு குழந்தை உருவானால், அதன் தலையெழுத்தை எப்படி நிர்ண யிப்பது? தாயாகவும் தந்தையாக வும் இருக்க விரும்பாதவர்கள், தங்களுக்குப் பிறக்கும் குழந்தையை உரிமையோடு கொஞ்சி மகிழ்ந்து வளர்க்க முன்வருவார்களா?

ஓஷோ அதற்கு ஒரு வழி சொல்கிறார். 'எனக்குத் தெரிந்த ஒரு மாற்று வழி கம்யூன். அதாவது கூட்டு வாழ்க்கை. அதுவே சிறந்தது. ஒரு 'கம்யூன்' என்பதன் பொருள், மக்கள்

ஓர் இறுகிய பிணைப்பற்ற குடும்ப வாழ்வில் இருப்பார்கள். குழந்தைகள் கம்யூனைச் சேர்ந்தவர்கள். தனிச் சொத்து, தனி ஆணவம் எதுவும் இல்லை. ஆணும் பெண்ணும் வாழ்க்கையை அனுபவித்துச் சுவைத்து மகிழ்ந்த நிலையில் நேசம் குறைந்தால், அவர்கள் இருவரும் ஒருவரையருவர் இறுகப் பிடித்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். முழு நன்றியுணர்வுடன், முழு நட்புடன் விலகிவிடுவார்கள். அடுத்தவருடன் கலந்து பழகத் தொடங்குவார்கள். குழந்தைகள் கம்யூனில் பலருடன் கலந்து வாழ்ந்து ஆன்மாவை வளப்படுத்திக்கொள்ள வழி கிடைக்கும்' என்று சொல்லும் ஓஷோவின் கருத்து எந்த வகையிலும் புதுமையானது அன்று.

பிளேட்டோ 2,000 ஆண்டுகளுக்கு முன்பே, 'அரசுப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் அனைவரும் அதே அரசுப் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கும் ஆண்களுக்கு மனைவியராக வேண்டும். ஒரு பெண் ஓர் ஆணுடன் தனியாக வசிக்கக் கூடாது. இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அனைவருக்கும்

பொதுவானவையாக இருக்க வேண்டும்.

பெற்றவர்களுக்குத் தங்களது குழந்தைகள் இவைதான் என்பது தெரியக் கூடாது. இரு பாலாரும் பொதுவான வீட்டில் வசிக்க வேண்டும்; பொதுவான உணவை உண்ண வேண்டும். யாரும் தங்களுக்கென சொந்தமாக எவ்வித சொத்தும் வைத்திருக்கலாகாது' என்றார். பெண்ணும் குழந்தையும் பொதுவாக்கப்பட்ட, தனிச் சொத்துடைமையற்ற சமூகத்தைச் சிந்தித்தவர் பிளேட்டோ. ஓஷோவின் கம்யூனிலும் பெண்ணும் பொது; குழந்தையும் பொது; சொத்தும் பொது.

இன்று குடும்ப அமைப்பை எதிர்ப்பவர்கள், திருமண பந்தத்தை மறுப்பவர்கள் தாங்கள் பெறும் குழந்தைகளைப் பொதுவாக்க முன்வரலாம். ஆனால், தங்கள் சொத்தைப் பொதுவாக்கச் சம்மதிப்பார்களா?

'வாழ்வின் ஒரு மூலை ஒழுங்கற்றிருந்தால், ஒட்டுமொத்த வாழ்க்கையும் தாறுமாறாகிவிடுகிறது. பாலுறவு ஒழுங்கற்றுப் போனால், பாக்கி உள்ள வாழ்வும் சீர்கெட்டுத்தான் போகும். நீங்கள்எதைக் காதல் என்று

கருதிக்கொள்கிறீர்களோ, அதுவெறும் கிளர்ச்சிதான். அது உங்கள் மன வெறுமையைத் தற்காலிகமாக மூடி மறைக்க உதவுகிறது. பிரச்னைகளைச் சந்திக்காமல் தப்புதல் ஆபத்தானது. அது போதை மருந்து மாதிரி! உண்மையான பிரச்னையை மறைத்துவிடும். உங்களுக்குள் அன்பு இல்லை. அது வெளியில் இருந்து வந்து உங்களை நிரப்பும் என்று தேடுகிறீர்கள். இந்த அன்பற்ற நிலைதான் உங்களைத் தனிமைத் துயரில் தள்ளிவிடுகிறது. தங்களுடைய உறவில் குழப்பமோ, கசப்போ, மோதலோ இல்லாமல் ஓர் ஆணும் பெண்ணும் குழந்தைகள் பெற்றுக்கொண்டு ஒன்றாய் வாழ முடியுமா? இரு தரப்பிலும் சுதந்திரமாய் இயங்கும் நிலை சாத்தியமா?' என்று கேட்கும் ஜே.கிருஷ்ணமூர்த்தி, 'அது சாத்தியமே' என்கிறார்.

'நான் ஒருத்தியை நேசிக்கிறேன். அவளும் என்னை நேசிக்கிறாள். நாங்கள் மணந்துகொள்கிறோம். நேர்மையானவர்களாய், கபட மற்றவர்களாய் இருக்கும்பட்சத்தில் எங்களுக்குள் ஏன் மோதல்

வரப்போகிறது? இருவரிடமும் அறிவுத் திறன் இருந்தால், சுதந்திரம் பறிபோய்விடுமோ என்கிற கவலை இருக்காது. காதல் உணர்வு குடிகொண்ட இடத்தில் மோதல் வராது. மோதல் வருமெனில், அங்கே காதல் முடிவு பெற்றுவிட்டது என்று அர்த்தம். அடிப்படையில் எல்லாரும் தம்முடைய மகிழ்ச்சியில் மட்டுமே அக்கறைகொண்டவர்கள். தம்மை அடுத்தவருக்குக் கொடுப்பதும், அவர்கள் தம்மிடம் உள்ளதைக் கொடுப்பதும் நமது திருப்திக்காகத்தான். மனிதனைவிட மிருகம் மேலானது. காரணம் அதனிடம் தன்முனைப்பு இல்லை'



என்ற ஜே.கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனை ஆழ்ந்த அர்த்தம் செறிந்தது. இன்று பெருகி வரும் விவாகரத்து வழக்குகளின் அடித்தளம் அவரவருடைய தன்முனைப்பும், தன்னகங்காரமும்தான். சகிப்புத்தன்மையும், விட்டுக்கொடுத்தலும் தன்முனைப்புள்ள இதயத்தில் இடம்பெற வழி இலை. அதனால் தான் பலரது வாழ்க்கை போர்க்களமாகிவிட்டது.

நம் எண்ணங்களை, உணர்வுகளை, நோக்கங்களை, அபிப்ரா யங்களை, பொறாமையை, பேராசையை அடுத்தவர் மீது திணிக்க முயலும்போதுதான் பிரச்னை முகிழ்க்கிறது. அடுத்தவரைப் புரிந்துகொள்ளும் முன் நம்மை நாம் புரிந்துகொள்ள முயல் வதில்லை. ஒருவரையருவர் சார்ந்திருக்க வேண்டிய சமூக வாழ்வில், தனி மரமாய் நிற்பதில் ஒன்றும் இன்பம் இல்லை. உடல்ரீதியான தொடர்பு மட்டுமே கணவன் - மனைவி உறவை அர்த்தப்படுத்தும் வாய்ப்பு இல்லை. துன்பங்களுக்கும், தோல்வி களுக்கும் இடையில்கூட தங்கள் ஆழ்ந்த அன்பின் நெருக்கத்தைத் தொலைத்துவிடாத தம்பதியர்களுக்குத்தான் குடும்ப அமைப்பு ஓர் வரம். நம் வாழ்க்கை மிகவும் குறுகியது. அதை விவாகரத்தில் ஏன் வீணடிக்க வேண்டும்? பெண்கள் கல்வியை ஒரு சிறகாகவும், பொருளாதாரத் தற்சார்பை மற்றொரு சிறகாகவும் பெற்றுச் சுதந்திர வானில் பறக்கத் தொடங்கியது வரவேற்கத்தக்கது. ஆனால், எல்லாவிதமான கட்டுகளில் இருந்தும் விடுபட விரும்பும் சில 'புதுமைப்

பெண்கள்' குடும்பக் கூட்டில் இருந்தும் விடுபட்டு ஓஷோவின் பாதையில் பயணிக்க விரும்புவதன் மூலம் பெறப்போகும் பேரின்பம் எது? இந்தப் 'புதிய பண்பாடு' இந்தியாவின் பெரு நகரங்களில்தான் வேகமாகப் பரவி வருகிறது. படித்த இளைய சமூகம்தான் இதை நாடுகிறது.

உலகில் அதிகமாக விவாகரத்து அரங்கேறும் நாடுகள் ஸ்வீடனும் அமெரிக்காவும். இந்த இருநாடுகளில் திருமணமான 100 பேர்களில் 55 பேர் விவாகரத்தைப் பெறுகின்றனர்; ரஷ்யா, பிரிட்டன், ஜெர்மனி ஆகியவற்றில் நூற்றுக்கு 40 பேர் பிரிந்துவிடுகின்றனர். உலகிலேயே மிகக் குறைந்த விவாகரத்து இடம்பெறும் நாடு இந்தியா. இங்கு மணமான ஆயிரம் தம்பதியரில் 11 தம்பதியர் சட்டபூர்வமாகப் பிரிந்துவிடுகின்றனர். இந்த எண்ணிக்கையும் கடந்த பத்தாண்டுகளில்தான் பெருகியது. டெல்லி, மும்பை, கல்கத்தா, சென்னை, பெங்களூரு போன்ற பெருநகரங் களில் இளம் தம்பதியர் விவாகரத்து கோரும் வழக்குகள் நாள்தோறும் பெருகி வருகின்றன. பெங்களூரு தகவல் தொழில்நுட்ப மையங்களில் பணிபுரிபவர்களில்

மட்டும் 1,246 பேர் விவாகரத்து வழக்கு தொடுத்துள்ளனர். கல்வியறிவும், கணிசமான ஊதியமும் இவர்களுடைய சகிப்புத்தன்மையைச் சாகடித்துவிட்டன. அற்ப விஷயங்களுக்காக இவர்களுடைய திருமண பந்தம் அறுபடுகிறது.

நம் நாட்டில் விவாகரத்துக்கான முக்கியக் காரணம் பாலியல் பிறழ்வுகள். கணவன் வேறு பெண்ணுடனோ, மனைவி வேறொரு ஆணு டனோ உடல் சார்ந்த உறவு கொள்வது இருவருக்கும் இடையே உள்ள இணைப்புச் சங்கிலியை அறுத்துவிடுகிறது. முதலில் ஒன்றை நினைத்து, நினைத்ததை அடைய முயன்று, அடைந்ததை அனுப வித்து, அனுபவித்தது கசந்து, கசந்ததை மறந்து, புதிதாக வேறொன்றை நாடி ஓடுவது சராசரி மனத்தின் இயல்பு. ஆங்கிலக் கவிஞன் பைரன் பல பெண்களோடு பழகியவர். ஏறக்குறைய 70 பெண்களுக்கு மேல் அவரோடு உறவுகொண்டனர். அதற்குப் பின்பு அவருக்குத் திருமணம் நடந்தது. தேவாலயத்தில் இருந்து புதுமணப் பெண்ணுடன் வெளியே வந்தவர் வேறொரு அழகான பெண்ணைப்

பார்த்து அவளையும் அடைய நினைத்தாராம். இதுபோன்ற ஆடவருடன் ஒரு பெண் கூடி வாழ்வது கொடுமை. இந்த முறை தவறிய காமம், ஆண்களுக்கு மட்டுமே பீடித்த நோய் அன்று. நுகர் பொருள் வேட்கை இன்று பெண்களையும் பெரிதாகப் பாதித்துவிட்டது. கூண்டு வேறு; கூடு வேறு. குடும்பம் ஒரு கூடே தவிர, கூண்டு அல்ல. கூடு என்பது அன்பாலயம். கூண்டு என்பதோ அடிமைச்சிறை!

'மக்களின் அன்பும் ஆசையும் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, அது இன்னவிதமாக, இன்னாரோடு மாத்திரம் தான் இருக்க வேண்டும் என்பதாக நிர்ப்பந்திக்க எவ்வித நியாயமும் இல்லை. ஏனெனில், ஆசை என்பது ஜீவ சுபாவம். அதை ஏதோ ஒரு நிர்பந்தத்துக்காகத் தடுத்து வைப்பது என்பது ஒரு வகை அடிமைத்தனமேயாகும். அன்பு, ஆசை ஆகியவை ஏற்படுவது ஜீவனுக்கு இயற்கை சுபாவம் என்றும், அது சுதந்திரமுடையதாயும், உண்மையுடையதாயும் இருக்க வேண்டும் என்றும், அதை ஓர் இடத்திலாவது, ஓர் அளவிலாவது கட்டுப்படுத்துவது

என்பது ஜீவ சுபாவத்துக்கும், இயற்கைத் தத்துவத்துக்கும் மீறினதென்றும் ஒப்புக்கொள்கிற மக்கள், அன்பு ஒருவரிடம்தான் இருக்க வேண்டும் என்று சொல்ல முன்வருவது முன்னுக்குப் பின் முரண்' என்று மனித மன நாட்டத்தை ஆதரித்து எழுதிய பெரியார், 'ஆனால், அனுபவத்தில் உள்ள சில சௌகரிய, அசௌகரியங்களை உத்தேசித்தும், இயற்கைத் தடுப்பு, சமுதாய வாழ்க்கை நலக் கொள்கை முறை முதலியவைகளை உத்தேசித்தும், அன்பும் ஆசையும் கட்டுப்பாட்டுக்குள் அடங்க வேண்டியதாக ஏற்படலாம் என்பதை நாம் மறுக்க வரவில்லை' என்றும் பதிவு செய்திருக்கிறார் (பெண் ஏன் அடிமையானாள்?).

மனக் கட்டுப்பாடு இல்லை என்றால், மண வாழ்க்கை கெட்டுப்போகும்; சமூகக் கட்டுப்பாடு முற்றாகத் தகர்ந்து, கற்கால நாகரிகம் நடைமுறையாகிவிடும். பாலியல் தவறுகளுக்கு அடுத்து உடல், உள்ளம் சார்ந்த வன்முறை விவாகரத்தை நாடச் செய்கிறது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 498-எ பிரிவு பெண்களுக்கு எதிரான குடும்ப

வன்முறையைத் தடுப்பதற்குக் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. திருமணமான ஒரு பெண் அல்லது அந்தப் பெண்ணின் பெற்றோர், அவளை மணமுடித்த கணவன் மீதோ, கணவனுடைய பெற்றோர், உடன் பிறந்தோர் மீதோ வன்கொடுமைக் குற்றச் சாட்டைப் பதிவுசெய்தால், அவர்கள் விசாரணையின்றிக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதற்கு இந்த சட்டப் பிரிவு வழி வகுக்கிறது. இந்தப் பிரிவு சில நேரங்களில் ஆண்களைப் பழிவாங்க ஒரு சில பெண்களால்தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும் முணுமுணுப்புகள் எழுவதை மறுப்பதற்கில்லை!விவாகரத்து பெருகாமல் இருக்க ஒரே வழி - தம்பதியர் இருவரும் மனம் திறந்து பேசும் பக்குவத்தை கையிலெடுக்க வேண்டும். பேசித் தீராத பிரச்னை எதுவும் இல்லை. கைகளைக்கொண்டு கட்டிய கட்டடத்தை இதயங்களைக்கொண்டு பாதுகாத்தால்தான் அது இல்லமாகும். அதற்கு ஆணும் பெண்ணும் சில தியாகங்களைச் செய்ய வேண்டும். நாம் எப்படிப்பட்ட

குடும்பத்தில் இருந்து வந்தோம் என்பதைவிட, எப்படிப்பட்ட குடும்பத்தை உருவாக்கப்போகிறோம் என்பதுதான்முக்கியம். மணமான புதிய தம்பதிகள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட பிம்பங்கள் சிதைந்த நிலையில் பிரிவதைக்கூட நாம் சகித்துக்கொள்ளலாம். ஆனால், குழந்தை பெற்ற பின்பு தங்கள் சுய விருப்புகளுக்காகப் பிரிந்துவிடுவதும், அந்தக் குழந்தையின் ஆழ்மனதை ரணமாக்கி அதன் எதிர்காலத்தைக் கெடுப்பதும் எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

'பயணம் புறப்படும் முன்பு ஒருமுறை பிரார்த்தனை செய்யுங்கள். போருக்குப் போகும் முன்பு இருமுறை பிரார்த்தனை செய்யுங்கள். திருமணம் நடப்பதற்கு முன்பு, மூன்று முறை பிரார்த்தனை செய்யுங்கள்' என்றார் பேகன். ஆழ்ந்து சிந்தித்து, அன்பு சார்ந்து இருவரும் சேர்ந்து நடந்தால், அங்கே விவாகரத்துக்கு ஏது இடம்?

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

## நுகர்வு

39 உயிரோட்டத்துடன் காலம் காலமாய் பெருக்கெடுத்து ஓடும் கங்கையைப்போல் ஜீவனுடன் திகழ்ந்த நம் பண்பாட்டு நதி, இன்று நுகர்வுக் கலாசார வெப்பத்தில் வறண்டுவிட்டது. தெளிந்த நீர்ப்பரப்பாய் நம் பாரம்பரியப் பெருமைகளைச் சுமந்தபடி சுழித்தோடிய இந்திய வாழ்க்கை நதியில், புதிய கலாசாரம் கொண்டுவந்து குவித்த காமச் சேறும், பாவச் சகதியும்,

மனித மனோபாவத்தை
அடியோடு
மாற்றிவிட்டன.
வேட்கை இப்பொழுது
வெறியாகிவிட்டது.

தேவைகளுக்கேற்ப ஆசை களைச் சீரமைத்துக்கொள்ளும் சிந்தனை தடம் புரண்டு, ஆசைகளுக்கேற்பத்



தேவைகளைப் பெருக்கிக் கொள்ளும் தாகம் அதிகரித்துவிட்டது. அன்பும் அறனும் இல்வாழ்வின் பண்பும் பயனு மாய்ப் பராமரிக்கப்பட்ட பண்பாடு, பொய்யாய், கனவாய், பழங்கதையாய்ப் போய்விடுவதற்கான சூழல் நம் கண்ணெதிரில் புலப்படுகிறது. உடற் பசியை மீறி உள்ளத்தின் உணர்வுகளைக் கொண் டாடி மகிழ்ந்த நம் குடும்பக் கோயில்களின் அடிப்படைக் கட்டுமானம், சிறுகச் சிறுகச் சிதைந்து வருகிறது.

அன்றாடம் நெறிமுறை தவறிய பாலியல் நிகழ்வுகளை அச்சேற்றாத செய்தித்தாள் இன்றில்லை. 'உறங்கிய கணவனின் கழுத்தைக் கள்ளக் காதலனுடன் சேர்ந்து அறுத்த மனைவி, கள்ள உறவுக்கு இடையூறாய் இருந்த

பிள்ளை யைக் கொன்று கால்வாயில் வீசிய தாய், தேனிலவுக்குச் சென்ற இடத்தில் பழைய காதலனை ரகசியமாய் வரவழைத்து, அவனோடு இணைந்து புதிய நாயகனின் மூச்சைப் பறித்தப் புது மணப் பெண், மனைவியின் நடத்தையில் சந்தேகம்கொண்டு அரிவாளால் அவளுடைய கதை முடித்த கணவன்' என்று நாள் தவறாமல் வரும் செய்திகள் சொல்லும் சேதி என்ன? வரைமுறையற்ற நுகர்வு வெறியில் திளைக்கும் சமூகம்... இப்படித்தான் சீரழிந்து போகும். 'அறத்தான் வருவதே இன்பம்' என்ற ஐயன் வள்ளுவனுக்கு நாம் சிலை வைத்தோம். ஆனால், அவனுடைய எந்த வார்த்தைக்கும் நம் வாழ்வில் இடம் வைக்கவில்லை. உயிரும் உடம்புமாய் இறக்கும் வரை இணை பிரியாமல் இல்லறம் வளர்த்த இந்த மண்ணில் வெறும் சரீரத்தின் சதை மயக்கமே இகவாழ்வின் ஆதாரச் சுருதியாய் இன்று அமைந்துவிட்டது.

நம் சங்க இலக்கியங்களில் ஒன்றான 'ஐங்குறுநூறு' ஓர் அழகான இல்லறத்தைக் காட்சிப்படுத்துகிறது. 'எளிமையில்

அழகு துலங்கும் அமைதியான ஒரு வீடு. அந்த வீட்டில் கணவன், மனைவி, குழந்தை ஆகியோர் இருக்கின்றனர். இரவு வந்தது. உணவு முடித்து, இதயம் கலந்து உரையாடி, மழலை இன்பத்தில் கணவனும் மனைவியும் மகிழ்ந்தனர். பின்பு மூவரும் உறங்கப் படுக்கை விரித்தனர். கணவன் மனம் நிறைந்த பாசத்துடன் குழந்தையைத் தழுவிக்கொண்டான். மனைவியோ, இருவரையும் சேர்த்து அணைத்தபடி கண் வளர்ந்தாள். இப்படி இதயம் நெகிழ்ந்து தழுவித் துயிலும் இன்பத்துக்கு இந்தப் பரந்த உலகமே ஈடாகாது' என்கிறது நம் இலக்கியம். முறை தவறிய காமத்தில் இந்தப் பேரின்பம் கிடைக்குமா?

'கட்டுப்பாடு என்பதே நாகரிக மற்றது என்று நினைத்தால், எவ்விதக் கட்டுப்பாடும் இல்லா மல் வாழ்வதே மனிதகுலச் சட்ட மாகிவிடும். இயற்கையிலேயே மனிதன், மிருகத்தைவிட உணர்ச்சிவயப்பட்டவன். கட்டுப்பாடு இல்லையெனில், மனிதரின் அடங்காத காமம் முடிவில் மனித இனத்தையே அழித்துவிடும். தன்னைக் கட்டுப்படுத்துவதிலும், பிறர் நலனுக் காகத் தியாகம்

செய்வதிலும் மிருகத்திடம் இல்லாத ஆற்றல் மனிதரிடம் இருப்பதால்தான், உயர்நிலையில் மனித இனம் இருக்கிறது. நம் உடல் அளவற்ற ஆசைகள் கூடிக் கும்மாளமிடும் போகபூமியாகவும் இருக்கலாம்; தன்னை உணர்ந்துகொள்ளும் கோயிலாகவும் மாறலாம். உடல் கோயிலாகும்போது, எதையும் செய்யலாம் என்ற கொள்கைக்கு இடமில்லை. ஒவ்வொரு முறையும் நம் ஆன்மா உடலின் போக்கைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்றார் காந்தி.

நுகர்வு வெறிகொண்டவருக்கு நாணமும் இல்லை; மானமும் இல்லை. செம்மொழி மாநாடு நடத்தும் நாம், அந்த மொழி தந்த பண்பாட்டைப் பாதுகாக்கவில்லையே? 'நற்றிணை' இலக்கியத்தில் இன்னொரு காட்சி. 'காதலி இருக்குமிடம் தேடிக் காதலன் வந்தான். அவன் கரம் பற்றி மார்புறத் தழுவினான். அவளோ விடுபட்டு விலகி நின்றாள். 'ஏன் பெண்ணே விலகி நிற்கிறாய்?' என்று காதலன் கேட்டதும், புன்னை மரத்தைக் காட்டினாள் காதலி. 'என்னிடமிருந்து நீ விலகி நிற்பதற்கும், இந்தப்

புன்னை மரத்துக்கும் என்ன சம்பந்தம்?' என்றான் தலைவன். 'நான் சின்னஞ்சிறுமியாய் இருந்தபோது இந்தச் சோலையில் புன்னைக் காய்களை மண்ணில் புதைத்து விளையாடினேன். அவற்றில் ஒன்று செடியாய் முளைத்தபோது நெய்யும் பாலும் ஊற்றி வளர்த்தேன். 'உன்னைப்போன்றே வளரும் புன்னையும் எனக்கு இன்னொரு மகள்தான்' என்றாள் அன்னை. தங்கை புன்னை மரமாய்ப் பக்கமிருந்து பார்க்கும்போது, இந்த நங்கை நாணமின்றி உங்களைத் தழுவி நிற்பதோ பண்பாடு?' என்றாள் தலைவி. ஆனால் இன்று, 'நான்கு பேர் பார்த்தால் நமக்கென்ன?' என்றல்லவா நாம் நாணமற்றுப்போனோம்! டேட்டிங், அவுட்டிங், நைட் லைஃப் என்று எங்கோ போய்க்கொண்டு இருக்கிறோம் நாம்.

ஆசைப்படுவதில் தவறில்லை. வாழ்வில் எவ்வளவோ துன்பங்கள் இருந்தாலும், மனித னுடைய வற்றாத ஆசைகள்தான் வாழ வேண்டும் என்ற தாகத்தை வளர்க்கின்றன. குறைவானவற்றை வைத்துக்கொண்டு நிறைவாக வாழ்வதுதான் சிக்கலற்ற வாழ்க்கை. நாளைய

நுகர்வுகளுக்காக இன்றைய இருப்பை வருத்திக்கொள்வது பேதைமை. பேராசை முடிகின்ற இடத்தில்தான் பேரின்பம் தொடர்கிறது. மது, மங்கை, சூது போன்ற தவறான போதைகள் முதலில் சிலந்தி வலையாய் உருவெடுத்து, அதன் பின் இரும்பு வளையமாய்க் கழுத்தை இறுக்கும். எந்த நுகர்வும் எத்தனை முறை அனுபவித்தாலும் நிறைவைத் தராது. நெய்யூற்றி நெருப்பை அணைக்க யாரால் இயலும்? 'வாழ்வின் அர்த்தமும் நோக்கமும் மகிழ்ச்சிதான். மனிதரின் இறுதி லட்சியமும் அதுதான்' என்றார் அரிஸ்டாட்டில். பணமும், பதவியும், அதிகாரமும் முழுமையான மகிழ்ச்சியை ஒரு நாளும் தராது. இன்னும், இன்னும் அடைய வேண்டும் என்ற வெறியைத்தான் அவை தீவிரமாக வளர்த்தெடுக்கும். நிறைவு என்பது இறுதி வரை கிடைக்காது. நிறைவான மனம்தான் சந்தோஷத்தின் சந்நிதானம்.

'பணத்தால் உணவை வாங்கலாம்; பசியை வாங்க முடியாது. மருந்தை வாங்கலாம்; ஆரோக்கியத்தை வாங்க முடியாது. தொடர்புகளைப் பெறலாம்; நண்பர்களைப் பெற

முடியாது. வேலையாட்களைப் பெறலாம். விசுவாசத்தைப் பெற முடியாது. தோன்றி மறையும் இன்பத்தைப் பெறலாம்; அன்பில் விளையும் அமைதியைப் பெற முடியாது' என்றார் ஹென்றிக் இப்சன். நாம் பணமிருந்தால் எல்லாவற்றையும் அனுபவிக்கலாம் என்ற தவறான முடிவில் அல்லும் பகலும் அதை நோக்கியே ஓடுகிறோம். ஓர் அரசியல்வாதி ஆயிரம் தவறுகள் செய்து பணத்தைக் குவிக்கிறான். ஒரு அதிகாரி லஞ்சம் வாங்கித் தன்னைக் கறைப்படுத்திக்கொள்கிறான். ஒரு முதலாளி, நேர்மைக்கு மாறாக நடந்து பெரும்பொருள் ஈட்டுகிறான். மூட்டை மூட்டையாய்ப் பணம் குவிப்பதால் என்ன பயன்? அம்பானி 27 மாடி கட்டினாலும் படுத்து உறங்கப்போவது ஓர் அறையில்தானே! பணக்காரன் 10 கார் வைத்திருந்தாலும் பயணம் போவது ஒரு காரில் தானே! அரசனும் ஆண்டியும் 'உண்பது நாழி, உடுப் பவை இரண்டு' என்று புறநானூறு சொல்வது நமக்குப் புரியவில்லையே?

'வகைவகையாய் அனுபவிக்க வேண்டும். விதம் விதமாய் உண்டு சுவைக்க வேண்டும். ஊருக்கு ஒரு மாளிகை

வேண்டும். திரும்பிய திசையெல்லாம் தோட்டம் துரவு என்று வாங்கிப் போட வேண்டும்' என்ற பேராசையில் வாழ்க்கையை அழுக்காக்கிக்கொள்ளும் மனிதர்கள் நம் அனுதாபத்துக்குரியவர்கள். எளிமையான வாழ்க்கையில், குறைந்த தேவையில்தான் கோடி இன்பம் கூடி வரும். 'வாலிபத்தின் அழகை வயோதிகம் அழிக்கிறது. ஆசை, தைரியத்தை அழிக்கிறது. பொறாமை, தர்மத்தை அழிக்கிறது. கோபம், செல்வத்தை அழிக்கிறது. தகாத உறவு, குணத்தை அழிக்கிறது. காமம், வெட்கத்தை அழிக்கிறது. ஆனால், செல்வத்தினால் ஏற்படும் ஆணவம் அனைத்தையும் அழித்துவிடுகிறது. உள்ள வற்றுள் செல்வம்தான் மிகப் பெரிய தீமை' என்று சொல்லும் மகாபாரதம், 'செல்வத்தைச் சேர்ப்பதிலும் துன்பம். சேர்த்ததைக் காப்பதிலும் துன்பம். அது நம்மிடமிருந்து மறையும்போதும் துன்பம். செல்வம் என்பதே துன்பம் தருவதுதான்' என்றும் அறிவுறுத்துகிறது.

சிந்தனையாளர் சாக்ரடீஸ் ஒவ்வொரு நாளும் கடைத்தெருவுக்குச் சென்று, ஒவ்வொரு கடையிலும் உள்ள பொருள்களை உற்றுப் பார்ப்பார். ஆனால், எதையும் அவர் என்றும் வாங்கியதில்லை.

சாக்ரடீஸ்



'ஒரு பொருளையும் வாங்காத நீங்கள் ஒவ்வொரு நாளும் கடைத்தெருவுக்கு வருவது ஏன்? என்று கடைக்காரன் ஒருவன் கேட்டபோது, 'எவ்வளவு பொருள்கள் இல்லாமல், நான் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்று அறிந்துகொள்ளவே அன்றாடம் வருகிறேன்' என்றாராம் சாக்ரடீஸ். லண்டனில் பல்பொருள் அங்காடி ஒன்றை பெர்னாட்ஷா திறந்துவைக்க வேண்டும் என்று அதன் உரிமையாளர் விரும்பி அழைத்தார். 'இந்த அங்காடியைத் திறந்துவைத்த நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?' என்று செய்தியாளர்கள் கேட்டபோது, 'உலகில் எனக்கு அவசியமற்ற பொருள்கள் எவ்வளவு இருக்கின்றன என்று இங்கு வந்த பின்னரே அறிந்துகொண்டேன்' என்றார் பேரறிஞர் பெர்னாட்ஷா. சாக்ரடீஸ§க்கும்

பெர்னாட்ஷாவுக்கும் புரிந்த வாழ்க்கை ரகசியம் நமக்குப் புரியவில்லையே! 'ஆசையைத் தொடர்ந்து செல்பவன் அமைதியும் இன்பமும் அடைய மாட்டான்' என்கிறது கீதை. 'எவ்வெவற்றை நீ விட்டு விலகி நிற்கிறாயோ, அவ்வவற்றினால் வரும் துன்பங்களிலிருந்தும் நீ விலகிவிடுகிறாய்' என்கிறார் திருவள்ளுவர். நம் மனதில் ஆசை என்னும் பசி தீராத வரை நாம் அனைவரும் பிச்சைக்காரர்களே!

கிரேக்கத் தத்துவ ஞானி டயோஜனிஸ் உடைமைகளற்ற வாழ்வின் அர்த்தம் உணர்ந்தவர். ஒரு கோப்பை மட்டுமே அவருக்குச் சொந்தமாக இருந்தது. ஒருநாள் ஆற்றங்கரை மணலில் அவர் படுத்திருந்தார். அப்போது ஒரு நாய் அங்கு வந்தது. ஆற்று நீரில் வாய் வைத்து அருந்தி அதன் தாகத்தைத் தீர்த்துக் கொண்டது. நாயின் செய்கையைப் பார்த்த டயோஜனிஸ் தன்னிடமிருந்த கோப்பையை வேண்டாத சுமையென்று உணர்ந்தார். அந்தக் கோப்பையை ஆற்றில் வீசியெறிந்துவிட்டு அங்கிருந்து நடந்தார். நாம் அனைவரும் டயோஜனிஸ் போன்று வாழ

முடியாது. ஆனால், நுகர்வுகளைக் கூடுமான வரை நெறிப்படுத்திக்கொள்ளலாமே. வித்தியாசத் தில் உள்ள கவர்ச்சிதான் நம்மைக் கட்டி இழுக்கிறது. ஒன்றிலிருந்து வேறொன்று வித்தி யாசமாகத்தான் இருக்கும். ஆனால், உலகின் அனைத்து வித்தியாசமான விஷயங்களிலும் நீந்திக் கரை சேர்தல் யாருக்கும் சாத்தியம் இல்லை. இல்லாதவற்றை அடைவதற்கு முயன்று இருப்பவற்றை அனுபவிக்காமல் இழந்துவிடக் கூடாது.

வாழும்போதே முழுமையாக வாழ்ந்துவிட வேண்டும். எத்தனை வருடங்கள் வாழ்ந்தோம் என்பதைவிட, எப்படி வாழ்ந்தோம் என்பது தான் முக்கியம். ஒவ்வொரு கணமும் நாம் நிறைவாக வாழப் பணம் அவசியமில்லை. அமெரிக்காவின் அருந்தவப் புதல்வர் எமர்ஸன் அறச் சிந்தனைகளுக்கு முழு வடிவம் கொடுத்தவர். அவருடைய பாட்ட னார் தன்னுடைய சந்ததியினரில் யாரும் பணக்காரனாகாதிருக்க அருள் புரியும்படி ஆண்டவனைப் பிரார்த்தித்தாராம். செல்வச் செருக்கு நல்ல பண்புகளை முற்றாக அழித்து விடும் என்று எமர்ஸன் குடும்பம்

எண்ணி வாழ்ந்தது. நியாயத்தின் நிறம் மாறாமல் ஓரளவுக்கு மேல் யாரும் செல்வம் சேர்க்க இயலாது. இன்று பணத்தில் புரளும் அரசியல்வாதிகள், அதிகாரிகள், முதலாளிகள் பட்டியலில் நூறு சதம் நேர்மையாளரை நம்மால் இனம் பிரித்துக் காண முடியாது. ஏழைகளைவிட பணம் படைத்தவர்களே தவறான வழிகளில் தடம் பதிப்பவர்கள். தவறான வழியில் சேர்த்த பணத்தில் தவறான இன்பங்களை அவர்கள் அனுபவித்தாலும் களங்கப்பட்ட அவர் களுடைய வாழ்க்கை கங்கை நீரில் கழுவினாலும் தூய்மை அடையாது.

உண்மையைப் பேசுவதைவிட உண்மையாக வாழ்வதுதான் வரவேற்புக்குரியது. காந்தியைச் செதுக்கிய சிந்தனைகளை எழுத்தில் வடித்த டால்ஸ்டாய், எளிமையின் பெருமையைத் தன் எழுத்தில் வலியுறுத் தினார். ஆனால், அவர் ஆடம்பரமாக வாழ்ந்தார். ஒரு பாட்டாளி மாணவன் 1910-ல் டால்ஸ்டாய்க்கு வரைந்த கடிதத்தில் அவருடைய எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை வருத்தத்துடன் பதிவுசெய்தான். 'உன்

கடிதம் என் மனத்தை உருக்கிவிட்டது. நீ குறிப்பிட்டுள்ளபடி எளிமையாக வாழும் என் கனவை நான் இன்னமும் நனவாக்கவில்லை. என்னைச் சுற்றிலும் வறுமை நிறைந்திருக்கும்போது, நான் வீட்டில் மனைவி மக்களுடன் வெட்கமுறத்தக்க உல்லாசச் சூழலில் வாழ்ந்து வருவது என்னை வருத்தவே செய்கிறது. உன் கடிதம் குறித்து நான் சிந்திக்காத நாளில்லை' என்று அந்த மாணவனுக்கு டால்ஸ்டாய் பதில் எழுதினார்.

வாழ்க்கை நமக்காக மட்டும் சுயநலமாய் வாழ்வ தற்கு வாய்க்கவில்லை. பில்கேட்ஸைவிட ஒருவன் கூடுதலாகச் சம்பாதிக்கலாம். ஒருவனுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள லட்சம் கோடி அவசியமில்லை. தேவையை நிறைவேற்றும் வரைதான் அது பணம். அதற்கு மேல் எஞ்சிக்கிடப்பது வெறும் காகிதம். அது மீண்டும் பணமாக மாற வேண்டுமானால், தேவையுள்ளவர்களிடம் போய்ச் சேர வேண்டும். 'பணம் படைத்தவர்களே! பசித்த வர்க்கு உணவளியுங்கள். நோயுற்றவர்க்கு மருந்து கொடுங்கள். அறியாமையில்

உழல்பவர்க்குக் கல்வி அளியுங்கள். எல்லாவற்றிலும் முதற்பங்கு ஏழை எளியவர்களுக்குத்தான். அவர்களுக்குத் தந்தபின்பு எஞ்சியிருப்பதைப் பெறவே நமக்கு உரிமையுண்டு.' என்றார் விவேகானந்தர்.

பணத்தினால் அடையக்கூடிய ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு இன்றுள்ள இளைய சமுதாயம் இரவைப் பகலாக்கி, இளமையை இழக்கிறது. நுகர்வு வெறியில் கட்டற்ற சமுதாயம் நம் கண் முன்னால் கட்டமைக்கப்படுகிறது. 'மனிதன் இயல்பாக இரை தேடும் ஒரு விலங்குக்குச் சமமானவன். அந்த விலங்கினைக் கட்டிப்போடுவதே நாகரிகம்மிக்க சமுதாய வளர்ச்சியின் சாதனை. சமூகக் கட்டுப்பாடுகளில்தான் சுகமும், அமைதியும் பிறக்கின்றன' என்பது வால்டேர் வழங்கிய வாக்குமூலம். நுகர்வு தவறல்ல; முறை தவறிய நுகர்வுதான் தவறு.

'குளிர் அதிகம்தான். உடை கந்தைதான். ஆனாலும், என் ஒழுக்கம் எனக்கு வேண்டிய வெப்பம் தரும்!' என்றார் ட்ரைடன்.

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

## ஊடகம்

40 உலகின் மிகப் பழைமையான படைப்பாகிய ரிக்வேதம், 'சிறந்த சிந்தனைகள் ஒவ்வொரு திசையில் இருந்தும் நம்மை வந்து சேரட்டும்' என்கிறது.

'உண்மையே பேசு' என்றும், 'வாய்மையே வெல்லும்' என்றும் நம் உபநிடதம் உரைக்கிறது. ஒவ்வொரு நாளும் ஊடகங்கள் மூலம் நாம் அறியும் செய்திகள் உண்மையை மட்டுமே சார்ந் தவை என்று யாரும் சத்தியம் செய்ய முடியாது.



சார்புத்தன்மை இல்லாத ஊடகம் என்று, இங்கே எதுவும் இல்லை. மக்கள் வரிப் பணத்தில் இயங்கும் அரசுத் துறை மூலம் அமைக்கப்பட்ட வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் ஆளும் கட்சியின் தவறுகளை வெளிப் படுத்துவதில்லை. ஆளும் வர்க்கத்தின் நலன்களைக் காப்பதுதான் அவற்றின் முதற்கடமை. இப்போது ஒவ்வொரு கட்சிக்கும் சொந்தமாக ஒரு டி.வி. சேன லும், ஒரு செய்தித்தாளும் மக்களை 'மூளைச்சலவை' செய்வதற்காகத் தேவைப் படுகின்றன. 'நடுநிலை' பிரகடனத்துடன் வரும் பத்திரிகையிலும் நாம் நடுநிலையை நாட முடியாது. 'காமம் செப்பாது கண்டது மொழிதல்' ஊடகத்துக்கு இன்று இலக்கணமாக இல்லை.

தென் ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய காந்தி, தன் கருத்து களைப் பரப்ப 'இந்தியன் ஒபீனியன்'

என்ற இதழை வெளியிட்டார். 'இதழைத் தொடங்கிய முதல் மாதத் திலேயே பத்திரிகையின் ஒரே நோக்கம் மக்கள் சேவைதான் என்பதை நான் உணர்ந்துகொண்டேன்' என்றார் மகாத்மா. வணிக மயமாகிவிட்ட இன்றைய வாழ்க்கைச் சூழலில் சேவாவுணர்ச்சி

என்றைக்கோ செத்து விட்டது. பணப் பொருளாதாரத்தின் அசுரப் பசிக்கு ஆட்பட்டுவிட்ட ஊடகங்களின் ஒரே நோக்கம் எண்ணிக்கையில் அதிகமான வாசகர்களையும், கேட்பாளர்களையும், பார்வையாளர்களையும் எப்படித் தம் பக்கம் ஈர்ப்பது என்பதுதான். மனித மதிப்பைவிட, பண மதிப்புதான் பல ஊடகங்களின் அறிவிக்கப்படாத லட்சியமாகி விட்டது.

விற்பனை தர்மம் குறித்து மறைந்த ஆச்சார்ய கிருபளானி ஒரு கதை சொன்னார். 'ஒரு புகழ்பெற்ற துணிக்கடையில் ஒரு பெண் தனக்குப் பிடித்த சேலை ஒன்றை வாங்கினாள். வீடு திரும்பியதும் தன் உறவினரிடம் அந்த சேலையைக் காட்டினாள். சேலையின் விலை குறித்து அவர்கள் விசாரித்தனர். வாங்கிய விலையை அவள்

சொன்னதும், அதைவிட மிகக் குறைந்த விலைக்கு அதேபோன்ற சேலையைத் தாங்கள் வாங்கியதாகவும், கடைக்காரர் அவளை அதிக விலைக்கு வாங்கச் செய்து ஏமாற்றிவிட்டதாகவும் தெரிவித்தனர். கடைக்காரர் மீது அவளுக்கு அளவற்ற கோபம் மூண்டது. மனதுக்குள் அந்த மனிதரைத் திட்டித்தீர்த்தாள். இரவு நேரம் அவள் வீட்டின் கதவு தட்டப்பட்டது. அவள் சென்று கதவைத் திறந்தாள். வாசலில் ஒரு பையுடன் கடைக்காரர் நின்றிருந்தார். 'அம்மா, இது உங்கள் பை என்று நினைக்கிறேன்.

10 ஆயிரம் ரூபாய் உள்ள இந்தப் பையை நீங்கள் கடையில் சேலை வாங்கும்போது மறந்துவைத்துவிட்டீர்கள். கடையை மூடிய பின்பு இந்தப் பையில் உள்ள முகவரியைப் பார்த்து இப்போதுதான் கொண்டுவந்து சேர்க்க முடிந்தது. மன்னிக்க வேண்டும்' என்றார் அந்த மனிதர். வியப்பின் சிகரத்தை அடைந்த அந்தப் பெண், 'இவ்வளவு நெறி சார்ந்த நீங்கள், சேலையை மட்டும் அதிக விலைக்கு ஏன் விற்றீர்கள்?' என்றாள். 'அம்மா, ஒரு பொருளின் மீது லாபம்வைப்பது வணிக

தர்மம். ஆனால், அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாமல் வாழ்வது எங்கள் குல தர்மம்' என்றார் அந்த கடைக் காரர். இன்றைய பல ஊடகங்களின் போக்கைப் பார்த் தால், எந்த தர்மமும் தென்படவில்லை.

ஊடகங்களுக்குச் சமூகப் பொறுப்பு உணர்வு அவசியம். ஒவ்வோர் ஊடகமும் சமூக நலனைப் பாது காக்கும் காவல் நாயாகவும், சரியான, முறையான வழியில் மக்களை நெறிப்படுத்தும் பண்புகளைப் பயிற்றுவிக்கும் கருவியாகவும் (watch dog and an educator) செயற்பட வேண்டும். அறிவுறுத்தலும், இன்புறுத்தலும் ஓர் ஊடகத்தின் இரண்டு பக்கங்களாக இருக்க வேண்டும். ஆனால், நம் ஊடகங்கள் மலினமாக மக்களை இன்புறுத்துவதையே தங்கள் வணிகமாக வடிவமைத்துக்கொண்டன. எல்லாவிதமான சமூகம் சார்ந்த தகவல்களும் எந்தவிதமான தடையும் இல்லாமல் வெளிப்படுத்தப்படுவதும், பல தரப்பட்ட கருத்துகளும், அபிப்ராயங்களும் மக்களிடம் சென்று சேர வழிவகுப்பதும் ஊடகங்களின் அடிப்படை லட்சியங்களாக அமைய வேண்டும். உலக நாடு களில் ஸ்வீடனில்தான்

அரசியல் குப்பை
பத்திரிகையில்
அசிங்கமான குத்துப்பாட்டு
வானொலியில்
அரைநிர்வாண ஆட்டம்
தொலைக்காட்சியில்
சும்மா இருப்பதே சுகம்!

– பூரணி

முதன் முதலாக 1916-ல் பத்திரிகையாளர் சங்கம் (The Swedish Press Council) உருவாக்கப்பட்டது. பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சிக்கான நெறிமுறைக் கோட்பாடுகளை இந்த அமைப்புதான் பின்னாளில் தோற்றுவித்தது.

சுதந்திரம் பறிபோகாமலும், ஜனநாயகம் பாழ்பட்டு விடாமலும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. அரசு நிர்வாகம் ஒழுங்காக நடப்பதைக் கண்காணிப்பது, நாடாளுமன்ற, சட்டமன்றங்களின் பணி. நாடாளுமன்றமும், சட்ட மன்றங்களும் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராகச் செயற்படாமல் பார்த்துக்கொள்வது நீதிமன்றத்தின் பொறுப்பு. இந்த மூன்று அமைப்புகளும் முறையாக இயங்குகின்றனவா என்று இடையறாமல் ஆய்வு செய்வதுதான் ஊடகங்களின் கடமை. அதனால்தான், இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் அரசியல் அறிஞர் எட்மண்ட் பர்க், செய்தியாளர்களை... 'ஜனநாயகத்தின்

நான்காவது தூண்'(Fourth Estate) என்றார்.

இந்திராகாந்தி 1975-ல் நெருக்கடி நிலையை அறிவித்துப் பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகிய வற்றைப் பறித்தபோது, நாட்டின் பெரும்பாலான ஊடகங்கள் அவரைஎதிர்த்து வாய் திறக்க வில்லை. இன்றும் ஆள்பவர்களின் வெறுப்புக்கு ஆளாகிவிடக் கூடாது என்று பல ஊடகங்கள் பதமாகவும் இதமாகவும் நடந்துகொள்கின்றன. நம் ஆட்சியாளர்களுக்குப் பிடித்தமானது சுருதியும் லயமும் கலையாமல் ஊடகங்கள் எழுப்பும் 'ஜால்ரா' சத்தம் ஒன்றுதான். சுயமரியாதை உள்ள சில ஊடகங் களின் 'சுருதிபேதம்' அவர்களுக்குச் சுத்தமாகப் பிடிப்பதில்லை.

பத்திரிகை, படித்தவனை மட்டும் பாதிக்கிறது. வானொலியும் தொலைக்காட்சியும் பாமரன் மீது செல்வாக்கைச் செலுத்துகின்றன. நம் தொலைக்காட்சி ஊடகங்களின் மூலம் ஒரு புதுவிதமான பண்பாட்டுப் படையெடுப்பு இந்த மண்ணில் அன்றாடம் நிகழ்ந்துகொண்டு இருக்கிறது. உலகமயமாக்கலின் தோரணவாயில்தான் தொலைக்காட்சி. இந்தியாவில்

டெலிவிஷன் 1950-களில் அறிமுகமானபோதும், 1980-களில்தான் பரவலாக மக்கள் வாழ்வில் இடம் பெற்றது. சாட்டிலைட் டி.வி. 1991-ல் வந்த பின்பு

'எம் டி.வி.' கலாசாரம் நம் தொலைக்காட்சிகளின் மூலம் தொற்றுநோயாய் மிக வேகமாகப் பரவியது. உலகத்தின் எந்த நாட்டிலும் நம் நாட்டைப்போல் தொலைக்காட்சி மூலமாகக் கலாசாரச் சீரழிவு வேகம் பெற்றதில்லை. உணவு, உடை, பழக்கவழக்கம், உறவுமுறை என்று நாம் வாழ்வின் சகல நுனிகளிலும் அமெரிக்கத்தன்மை படிந்துவிட்டது. ஆணுக்கும் பெண்ணுக்கும் வேற்றுமை தெரியாத ஆடைக் கலாசாரத்தில் இருந்து ஓரினச்சேர்க்கை வரை எல்லாவற்றிலும் நம் மண்ணுக்குரியநிறமும் மணமும் அடியோடு மாறிவிட்டன. நுகர்வெறி யின் உந்துதலில் ஒவ்வொரு வரும் இதயத்தில் ஈரமற்றுச் சுயநலத்தில் சுருங்கி விட்டோம். முதியோர் இல்லங்களின் வளர்ச்சி நம் நாகரிக வறட்சியின் வாழ்காலச் சாட்சியம். மதன காம லேகிய மன்மதத் தீனி தரும் தொலைக்காட்சி களால் பாதிக்கப்பட்டு இளம் தலைமுறைப் பெண்களில் 20

சதவிகிதம் பேர் ஒரு மாநிலத்தில் கருச்சிதைவில் ஈடுபடுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. ஊடகங்கள் நம்மை எங்கே கொண்டுபோகின்றன?

ஒருநாளில் 8 மணி நேரம் உழைப்பு, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்று வகைப்படுத்திக் கொண்ட வாழ்க்கைமுறைதான் ஆரோக்கியமானது. தனிமனித ஆரோக்கியத்தில்தான் சமூக ஆரோக்கியம் சாத்தியப்படும். தனிமனித வளர்ச்சிக்கும், சிந்தனை வளத்துக்கும், கலை-இலக்கிய, பண்பாட்டு மலர்ச்சிக்கும் ஒருவன் தன் ஓய்வுப் பொழுதை எப்படிப் பயன்படுத்துகிறான் என்பதுதான் அடித்தளம். இன்று நம்மில் பலருக்குத் தொலைக்காட்சி பார்ப்பதுதான் ஒரே ஓய்வு நேரப் பொழுதுபோக்கு.

நம்முடைய தொலைக்காட்சிகளுக்கு ஒரு பொது வான ஃபார்முலா உண்டு. குடும்ப உறவுகளைக் கொச்சைப்படுத்தும் அபத்தமான மெகா தொடர்கள், பாரம்பரியக் கலைகளை வளர்க்கும் போர்வையில் அருவருப்பூட்டும் ஆபாசமான அரை நிர்வாணக் குத்தாட்டங்கள், கதாநாயகன் நெஞ்சில் தன் மார்பை

மோதவிட்டு ஒரு பெண் விரகதாபத்தை விரசமாக வெளிப்படுத்தும் மோகலாகிரிப் பாடல்கள், அறிவார்ந்த செய்திகளை உள்ளடக்கமாகக்கொண்டு இராத சாரமற்ற வெட்டிப் பேச்சு அரட்டைகள், நபும்சகத்தனமான நகைச்சுவைக் கூத்துகள் இல்லாத சேனல்கள் இங்கு அரிதிலும் அரிது. 'மக்கள் தொலைக்காட்சி'யை மனம் திறந்து பாராட்டலாம். நம் மண் வாசனை பெரு மளவில் வீசும் சேனல் அது.

புகழ்பெற்ற தொலைக்காட்சி சேனலில் ஒரு விவாத அரங்கம் நிகழ்ந்தது. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர், 'உங்கள் கணவர் யாரைப்போல் இருக்க வேண்டும் என்று கனவு கண்டீர்கள்?' என்று ஒரு பெண்ணைக் கேட்டார். 'கமல்ஹாசனைப்போல் அமைய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். எல்லோருக்கும் கமல்ஹாசன் கணவராக முடியுமா?' என்று ஏக்கப் பெருமூச்சுடன் அந்தப் பெண் பதில் சொன்னார். அவருக்கு எதிரில் அப்பாவிக் கணவர் அசடு வழியச் சிரித்தபடி அமர்ந்திருந்தார். என்னே தாம்பத்யப் பண்பாடு! 'கிடைச்சது பழையது ஆனாலும்,

நினைப்பு பிரியாணிமேல் இருக்கக் கூடாதா?' என்று 'சினிமாவுக்குப் போன சித்தாளு'வில் ஜெயகாந்தன் எழுதியதை அந்த நிகழ்ச்சி நிஜமாக்கியது. ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. ரூபர்ட் முர்டோக்கின் 'நியூஸ் கார்ப்பரேஷன்' உலகம் முழுவதும்



விரித்துவைத்திருக்கும் ஆக்டோபஸ் விரல்களின் இடுக்குகளில் சிக்கிச் சீரழிந்த தொலைக்காட்சிகளின் நகல்களாகச் செயற்படும் நம் சேனல்கள், சந்தைப் பொருளாதாரத் தேவைக்கு மக்களை ஆட்டு மந்தையாக்கி விளம்பரதாரர்களிடம் விற்றுக் காசைக் குவிப்பதில் குறியாய் உள்ளன. பொதுவாகவே, காசுக்காக ஊடகங்கள் செய்துவரும் சாகசங்களில் நம் கலாசாரம் காற்றில் பறக்கிறது.

எந்த நாட்டிலும் புரட்சியும் சமூக மாற்றமும், பணக்காரர்களாலும் ஏழைகளாலும் நடந்தது இல்லை. பணம் படைத்தவர்க்கு யார் எப்படிப் போனாலும் கவலை இல்லை. ஏழைக்கோ, வயிற்றுப்பாட்டுக்கு வழி

தேடுவதற்கு மேல் நேரம் இல்லை. கல்வியும், ஓரளவு பொருளாதார வசதியும்கொண்ட நடுத்தர வர்க்கம்தான் ஓய்வுப் பொழுதில் சமூக அவலங்கள் குறித்துச் சிந்திக்கும்; தீமைக்கும், அடிமைத்தனத்துக்கும் எதிராகப் போராடக் கிளர்ந்து எழும். நடுத்தரவர்க்கத்தின் நடைமுறைகளால்தான் புரட்சி பூக்கும். இன்று, அந்த நடுத்தர வர்க்கம், ஊடகங்களின் போதை மாத்திரைகளில் மயங்கிக்கிடக்கிறது.

போதை எப்போது தெளியும்?

*- பயணம் தொடரும்...*

எங்கே போகிறோம் நாம்? எரிமலைத் தொடர்

தமிழருவி மணியன்

41

# கல்வி

நம் நாட்டின் மிகப் பெரியதோல்வி, எழுத்தறிவின்மையை முற்றாக ஒழிக்கத்

தவறியதுதான். சுதந்திரம் கண் விழித்து 60 ஆண்டுகள் கடந்த பின்னும்... இந்த மண்ணில் 30 கோடிக்கு மேற்பட்ட மக்கள் அறியாமை இருட்டில் அழுந்திக்கிடக்கும் அவலம் தொடர்கிறது! இந்தியாவில் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்து, 10 ஆண்டுகளுக்குள் 6 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தை களுக்கும் இலவசக் கல்வி கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் என்று 45-வது ஷரத்து (இந்திய அரசமைப்புச் சட்டம் - நெறிமுறைக் கோட்பாடுகள்) அறிவித்தது. இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வருவ தற்கு... 59 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுதான் இந்தியாவின் அரசியல் நடைமுறை!

அரசமைப்புச் சட்டத்தின் 86-வது திருத்தம், இன்று கல்வியை அடிப்படை உரிமைகளில் ஒன்றாக உருவாக்கிவிட்டது. ஆனால், அனைவருக்கும் தரமான



கல்வி என்பது இன்றளவும் நிறைவேறாத கனவாகவே நீடிக்கிறது. நமது கல்வி அமைப்பின் மைய அம்சம், அதனுடைய இரட்டைத் தன்மை (dualism) என்கிறது ஆச்சார்யா ராமமூர்த்தி கமிட்டியின் அறிக்கை. பணம் படைத்தவர்க்கு உலகத் தரம் வாய்ந்த கல்வியும், அடித்தளத்து மக்களின் குழந்தைகளுக்கு அறிவும் திறனும் வளர்க்கப் பயனற்ற கல்வியும் வழங்கப்படுவதுதான் இங்கே 'சமூகநீதி'.

சுதந்திரம் அடைந்ததில் இருந்துஇன்று வரை இந்தியாவில் கல்வி வளர்ச்சியே இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. 1950-ல் 15 பல்கலைக்கழகங்கள்தான் இருந்தன. இன்று 400 பல்கலைக் கழகங்களுக்கு மேல்

பெருகிவிட்டன. அன்று 500 கல்லூரிகள்; இன்று 18 ஆயிரத்துக்கும்மேற்பட்ட கல்லூரிகள். அன்று கல்லூரி ஆசிரியர்கள் 15 ஆயிரம் பேர். இன்று 5 லட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியப் பெருமக்கள் கல்லூரிகளில் பணியாற்றுகின்றனர். ஆனால், கல்வியின் தரம் பெரிதாக உயர்ந்துவிடவில்லை. உயர் கல்வியைப் பெறுபவர்களில், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், கிராமப்புற ஏழை மாணவ மாணவியரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. நாடு விடுதலை அடைந்தபோது உயர் கல்வி பெற்றவர்கள் ஒரு சதவிகிதம். இன்று உயர் கல்வி பெறுவோர் எண்ணிக்கை 10 சதவிகிதம். பதினோராம் ஐந்தாண்டு திட்டத்தின் இலக்கு 15 சதவிகிதம். இது ஒன்றும் மகிழ்ச்சிக்குரிய வளர்ச்சி இல்லை.

ஆரம்பக் கல்வியில் அடியெடுத்துவைக்கும் 100 குழந்தைகளில் 30 பேர் ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிப்பதில்லை. எட்டாம் வகுப்போடு 50 பிள்ளைகள் நின்றுவிடுகின்றனர். உயர் கல்வி நிலையங்களில் உள்ளே வெறும் 10 பேர் நுழைகின்றனர். அந்த 10 பேரிலும்

பெரும்பான்மையினர், பணம் படைத்தோரின் வாரிசுகள். 'எல்லாருக்கும் கல்வி' என்ற 'யுனேஸ்கோ' அமைப்பின் கனவு என்று இங்கே நனவாகும்? கோத்தாரி கமிஷன் தேசிய வருவாயில் ஆறு சதவிகிதம் கல்விக்கு ஒதுக்கவேண்டும் என்று வலியுறுத்தி ஆண்டுகள் பல ஓடிவிட்டன. இன்றுவரை மூன்று சதவிகிதத்துக்கு மேல் கல்விக்காக ஒதுக்க முடியாத மத்திய அரசு ராணுவத்துக்கு மட்டும் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் செலவழிப்பதில் முனைப்பாக இருக்கிறது. கல்விக்காக ஒதுக்கும் நிதி, நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கான முதலீடு என்பதையும், ஜனநாயக அமைப்பை வலுப்படுத்துவதற்கான வழிமுறை என்பதையும் நம் பொருளாதார மேதைகளால் ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை?

> *காசுக்கு உடல் தந்தால்*
> *வேசிமகள்*
> *கரன்ஸிக்கு இடம் தந்தால்*
> *கல்வி வள்ளல்!*
>
> \- பூங்குன்றன்

ஆரம்பக் கல்விக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்ட மத்திய, மாநில அரசுகள் உயர் கல்வியைத் தனியாரிடம் தாரை

வார்த்துவிட்டன. அரசுப் பொறுப்பில் நடக்கும் தொடக்கப் பள்ளிகள் பலவற்றில் அடிப்படை வசதிகள்கூட இல்லை. இந்தியா முழுவதும் 75 ஆயிரம் பள்ளிகளில் வகுப்பறைகளே கிடையாது. உத்தரப் பிரதேசத்தில் 900 பள்ளிகளில் ஆசிரியர்களே இல்லை. கரும்பலகை இல்லாத பள்ளிகள் கணக்கில் அடங்காது. ஏழையும் பாழையும்கூட தனியார் பள்ளிகளை நாடும் நிலை வந்துவிட்டது. காளான் குடைகள்போல் பெருகிக்கிடக்கும் நர்சரி, மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பல இன்று, பகற்கொள்ளைக் கூடாரங்கள். 'இந்தியாவில் பல்கலைக்கழகத்தில் படிப்பதைவிட தொடக்கப் பள்ளிகளில் படிப்பதற்கு அதிகம் செலவாகிறது. அதனால்தான், ஏழைகள் தங்கள் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது கனவாகிவிட்டது. தங்கள் ஆண்டு வருமானத்தில் 28 சதவிகிதம், குழந்தைகளின் தொடக்கக் கல்விக்குப் பெற்றோர் செலவழிக்க வேண்டியுள்ளது. பல்கலைப் படிப்புக்கு 14 சதவிகிதம் மட்டுமே செலவாகிறது. தொடக்கக் கல்வியில் தனியார் துறை

ஈடுபாடு அதிகரித்தால், ஏழைகளுக்குக் கல்வி எட்டாக் கனியாகிவிடும்' என்று அக்டோபர் 13, 2007-ல் யுனெஸ்கோ வெளியிட்ட அறிக்கை எச்சரித்தது. இன்றுள்ள நிலைமை அதைவிட மோசமான பின்பு, மாநில அரசு கொஞ்சம் உறக்கம் கலைந்து பள்ளிக் கட்டணத்துக்கு உச்ச வரம்பு விதித்துள்ளது. கொள்ளையடித்த கூட்டம் பள்ளிகளை மூடிவிடுவோம் என்கிறது. மிகவும் நல்லது. அப்படி மூடப்படும் பள்ளிகளை அரசே ஏற்று நடத்தலாம். ஆனால், பாதாளம் வரை பாயும் பணம் எப்போது எதைச் செய்யும் என்று யார் கணித்துச் சொல்ல முடியும்?

'பல இடங்களில் நம் பல்கலைக்கழகங் களின் தரம் பழுதடைந்துவிட்டது. நாட்டில் பாதிக்குக் குறையாத மாவட்டங்களில் உயர் கல்வி பெறுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்படுகிறது. தர அடிப்படையில் மூன்றில் இரண்டு பங்கு பல்கலைக்கழகங்களும், 90 சதவிகிதம் கல்லூரிகளும் சராசரிக்கும் கீழே உள்ளன. துணை வேந்தர் பதவி உட்பட, பல்கலைக்கழகங்களின் பல பொறுப்புகளில் அரசியல், சாதி, மத அடிப்படைகளில்

மனிதர்கள் நியமிக்கப்படும் போக்கு மிகவும் கவலை தருகிறது. தனிச் சலுகையும், ஊழலும் பெருகி வருவது குறித்து என்னிடம் புகார் செய்யப்படுகிறது' என்று பகிரங்கமாகப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். சத்தீஸ்கர் மாநில அரசு ஒரே சட்டத்தின் மூலம் 112 தனியார் பல்கலைக்கழகங்களைஉருவாக்கிப் புதிய சாதனை படைத்தது. பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவராக விளங்கிய யஷ்பால், உச்ச நீதிமன்றத்தில் சத்தீஸ்கர் அரசுக்கு எதிராக வழக்கு தொடுத்தார். சில அடுக்கு மாடிக் கட்டடங்களில் பல்கலைக்கழகங்கள் இயங்கியதையும், ஏட்டளவில் சில பல்கலைக்கழகங்கள் இருந்ததையும் அவர் நீதிமன்றத்தில் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தினார். மாநில அரசின் சட்டத்தை ரத்துச் செய்த உச்ச நீதிமன்றம், 'கட்டட வசதி இன்றி, கற்பித்தல் வசதியும் இன்றிப் பட்டங்கள் வழங்க முடியுமெனில், இந்த நாட்டுக்கு இதைவிடப் பெரிய தீங்கு வேறு எதுவும் இருக்க முடியாது' என்று தன் தீர்ப்பில் தெரிவித்தது.

இந்தியாவில் இயங்கி வரும் 126 நிகர்நிலைப்

பல்கலைக்கழகங்களின் செயல்திறன் குறித்து ஆய்வு செய்த பி.கே.டாண்டன் குழு, 44 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்று பரிந்துரைத்தது. பல்கலைக்கழகத்துக்குரிய கட்டமைப்பு வசதி இல்லையென்றும், கல்வித் தகுதியற்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களால், முறையற்று நிர்வகிக்கப்படுவதாகவும், பல்கலைக்கழக மானியக் குழு வகுத்திருக்கும் எட்டு விதிமுறைகளை மீறிச் செயற்படுவதாகவும், குற்றஞ்சாட்டப்பட்ட 44 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் 17 தமிழகத்தில் இயங்குபவை. இவற்றுள் பல, அரசியல் கட்சிகளில் ஈடுபட்டு, சமுதாயச் சீர்திருத்த இயக்கங்களில் பாடுபட்டு, அடித்தள மக்களின் அறிவு வளர்ச்சிக்காகவே 'சிறிதும் சுய நலம் இன்றி'த் தங்கள் பொதுவாழ்வை முற்றாக அர்ப் பணித்துவிட்ட (!) அமைச்சர்கள், தலைவர்கள், பிரமுகர்களால் நடத்தப்படுபவை. அறிவுக் கோயில்களாகத் திகழ வேண்டிய இந்த நிகர் நிலைப் பல்கலைக்கழகங்களின் வேந்தர்கள், துணை வேந்தர்கள், செயல் வேந்தர்கள்

அனைவரும் கணவன் - மனைவி - மகன் - மகள் - மருமகன் மருமகளாகவே இருப்பர். குடும்பம் ஒரு கோயில்அல்லவா! குடும்பக் கோயில் அறிவுக் கோயில் மீது ஆட்சி நடத்தி அருள் பாலிப் பது எவ்வளவு பொருத்தமானது!

'பல்கலைக்கழகம் என்பதன் அடிப்படையே அச்சுறுத்தலுக்கு ஆட்பட்டுவிட்டது. அது தன்னுடைய முக்கியத்துவத்தை இழந்து விட்டது. அதன் சுய அதிகாரம் கரைந்துவிட்டது. பட்டக் கல்வி புதைக்கப்பட்டுவிட்டது. அறிவுத் துறைகள் இடையே இடைவெளி அதிகரித்துவிட்டது. புற யதார்த்த உலகத்தில் இருந்து அவை தனிமைப்பட்டுவிட்டன. பெருமளவில் கல்வி வணிகமயமாகிவிட்டது' என்று தன் ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்தியது யஷ்பால் குழுவின் அறிக்கை. தனியார் கல்வி நிறுவனங்களின் தாழ்ந்த தரம், கொள்ளை லாபம், அருவருப்பான வணிகத்தன்மை ஆகிய தீமைகளுக்கு என்று முற்றுப்புள்ளி விழும்? பதவியில் இருக்கும் அரசியல்வாதிகள் பலருக்கு 'ஆயுட்கால வைப்பு நிதி'

அவர்களுடைய பின்புலத்தில் உருவெடுக்கும் தனியார் தொழிற் கல்லூரிகள்தான். கன்றின் பசி தீர்க்கப் பால் சுரக்கும் பசுவின் பாசம் அறியாமல், அதன் மடிக் காம்பில் ரத்தம் வரும் வரை கறக்கும் மனிதரைவிட மலினமானவர்கள் இந்தக் கல்வி வணிகர்கள். இவர்களுக்குக் காந்தி, காமராஜர், பெரியார், அண்ணாவை விட வணக்கத்துக்குரியவர் 'பணம்' என்னும் பகவான்தான். அந்தப் பகவானை வழிபடுவதற்கு எந்த இழி தொழிலிலும் இவர்கள் கூச்சமின்றி இறங்குவார்கள்.

தனியார் தொழிற் கல்லூரிகளில் சேர்க்கைக்கான கட்டணம் (capitation fees) வசூலிப்பது சட்ட விரோதச் செயல் என்று 1993-ல் உன்னிகிருஷ்ணன் வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு உரைத்தது. அதற்கு முன்பே, ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம், தமிழ்நாடு போன்ற மாநில அரசுகள் சேர்க்கைக் கட்டணத்துக்கு எதிராகச் சட்டம் இயற்றின. உச்ச நீதிமன்றம் தனியார் தொழில் கல்லூரிகள் வசூலிக்கும் சேர்க்கைக் கட்டணத்தை அங்கீகரிக்க மறுத்ததுடன், கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்க

ஒவ்வொரு மாநிலத்திலும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்று கூறியது. 'சேர்க்கைக் கட்டணம் குறித்து நாங்கள் மிகத் தீவிரமாக இருக்கிறோம். கல்வியின் அடித்தளத்தையே இது பாழாக்குகின்றது. இந்தக் குற்றத்தில் ஈடுபடுவோர் மீது 50 லட்சம் ரூபாய் அபராதமும், மூன்று ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கும் வகையில் மசோதா வடிவமைக்கப்படும்' என்று மத்திய அமைச்சர் கபில்சிபல் எச்சரிக்கை விடுத்தார். நாம் கல்வி வள்ளல்கள் அரசையும் நீதிமன்றத்தையும் அலட்சியப்படுத்திவிட்டு இந்தக் கல்வி ஆண்டிலும் கட்டணம் வசூலிக்கத் தொடங்கிவிட்டனர். பிரபலமான தனியார் தொழிற்கல்லூரிகளில் ஐந்து லட்சம் முதல் ஏழு லட்சம் வரை சேர்க்கைக் கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும், ஆதாரங்கள் சிக்காமல் இருக்க, செல்போன், பேனா முதற்கொண்டு அனைத்துப் பொருள்களையும் நுழைவாயிலில் வைத்துவிட்டு, கடும் சோதனைக்குப் பின் பெற்றோரும் மாணவரும் கல்லூரி

அலுவலகத்துக்குள் அனுமதிக்கப்படுவதாகவும் (மே 31, 2010) 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கணக்கில் வராத 'கேபிடேஷன்' பணம் கறுப்புப் பணப் புழக்கத்தைப் பெருக்குகிறது. தகுதி மிக்க மாணவரின் வாய்ப்பை மறுக்கிறது; ஒடுக்கப்பட்ட மக்களை உயர் கல்வி பெற முடியாமல் தடுக்கிறது. கோடிக்கணக்கில் குவிக்கப்படும் இந்தக் கள்ளப் பணம், அரசியல் களத்தில் இறக்கப்படுகிறது; முறை தவறிய வழியில் பதவிகளை விலைக்கு வாங்கும் 'பண்பாட்டை' வளர்க்கிறது; இறுதியில் ஜனநாயக மரபுகள் அழித்தொழிக்கப்படுவதற்குத் துணை நிற்கிறது. இந்தப் போக்கை இன்னும் எவ்வளவு காலம் நாம் அனுமதிக்கப்போகிறோம்? லட்சக்கணக்கில் செலவழித்துக் கோடிக்கணக்கில் சொத்துகளைக் குவிப்பதற்காகவா கல்வியை நம் பிள்ளைகளுக்கு வழங்க ஆசைப்படுகிறோம்?



பெரிதாகப் படிக்கும் வாய்ப்பு இன்றி, சின்னஞ்சிறு வயதில் செருப்புக் கடையில் வேலை செய்து, சிம்லாவில் ஹோட்டல் தொழிலாளியாக உழன்று, பின்பு உலகப் புகழ் வாய்ந்த ஓபராய் ஹோட்டல் குழுமங்களின் அதிபராக உயர்ந்தவர் ஓபராய். லூதியானாவில் ஏழைக் குடும்பத்தில் பிறந்து, பனியன் தொழில் செய்து, சுரங்க முதலாளிகளிடம் பெற்ற நிலக்கரியை ஒவ்வொரு நாளும் 36 மைல் சைக்கிள் மிதித்து வினியோகம் செய்து பின்னர் சொந்தமாகச் சுரங்கம், காகிதம், சர்க்கரை, ஜவுளி, க்ரீவ்ஸ் காட்டன் பொறியியல் நிறுவனங்களை வளர்த்தெடுத்தவர் கரம்சந்த் தாப்பர். தரகு மண்டியில் தொழில் தொடங்கி, இந்தியாவின் முதல் தொழிலதிபராக உயர்ந்தவர் திருபாய் அம்பானி. இவர்களைப் பணக்காரர்களாக்கியது படிப்பு அல்ல. கல்வி கற்பதன் அடிப்படை நோக்கம் பொருளீட்டுவது என்று நம் பெற்றோர்கள் பொய்யாகப் புரிந்துவைத்துள்ளனர். பணம்

குவிப்பதும், பதவி வகிப்பதும்தான் வாழ்வின் வெற்றிகளாக இவர்களால் பார்க்கப்படுகின்றன. கல்வி வணிகமயமானதற்கு இவர்களே முக்கியக் காரணம். தன்னை அறியவும், தன் ஆற்றலை வெளிப்படுத்தவும், ஒழுக்கம் செறிந்த நெறிகளைப் பேணிப் பராமரிக்கவும் உதவுவதற்குப் பெயர்தான் கல்வி. 'கல்வியின் பயன் அறிவு; அறிவின் பயன் பண்பாடு' என்ற புரிதல் நமக்கு வர வேண்டும். கல்வியின் நோக்கம் வாழ்க்கையில் வெற்றி பெறுவது அன்று; நாம் வாழும் வாழ்க்கையை வளப்படுத்துவது!

*- பயணம் தொடரும்-*

எங்கே போகிறோம் நாம?



தமிழருவி மணியன்

எரிமலைத் தொடர்

# முடியும்

42 'நம் வாழ்கால இந்தியாவில் ஊழல், சட்டம் இயற்றுபவர்களில் இருந்து... அதிகார வர்க்கம் வரை விரிவடைந்துவிட்டது. கடந்த காலத்தில் அதிகார அமைப்பின் கீழ்மட்டத்தில் மட்டுமே ஊழல் இருந்தது. வீட்டு மனைப் பட்டா, மின் இணைப்புக்கான அனுமதி, வேலைக்கு ஆள் எடுப்பது என்று சிறிய

அளவில் முன்பு ஊழல் நடந்தது. சமீப காலங்களில் பெரிய அதிகாரிகள் வரை ஊழல் பெருகிவிட்டது. இந்திய அரசின் செயலாளர்கள், மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்கள் வருவாயை மீறிய சொத்துகளைக் குவிப்பதாக சி.பி.ஐ. குற்றம் சாட்டியது. அதிகாரிகளின் பண்ணை வீடுகளும், ஆடம்பரமான விடுமுறைக்

கொண்டாட்ட வைபோகங்களும், அவர்களுடைய வாழ்நாள் வருவாயைவிடப் பன்மடங்கு அதிகமாகச் சேர்த்துவிட்ட சொத்தின் வெளிப்பாடுகள்தாம்.

நேருவின் காலத்தில் ஆட்சிப் பணியில் இருந்த அதிகாரிகள், அரசியலுக்கு அப்பாற் பட்டவர்களாக இருந்தனர். பணியிட மாற்றம், பதவி உயர்வு போன்றவை அதிகாரிகள் மட்டத்திலேயே தீர்மானிக்கப்பட்டன. ஆனால், 1970-க்குப் பின்பு அதிகாரிகள், அரசியல்வாதிகளோடும் அரசியல் கட்சிகளோடும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தனர். ஆளுங்கட்சிக்கு ஏற்ப நடந்து, மிக முக்கியமான பதவிகளில் அமர்ந்தனர். அதற்குக் கைம்மாறாக அரசியல்வாதி களின் அபிலாஷைகளைநிறை வேற்றிவைத்தனர். அவர்களு டைய அமைச்சர்களோடு நெருக்க மாக இயங்கி, அடித்த கொள்ளையில் தங்களுக்கு உரிய பங்கினைப் பெற்றனர்.'

'இந்தியாவின்
ஒருங்கிணைப்பை
உருவாக்கிய வல்லபபாய்
படேல், ஆட்சி நிர்வாகத்தில்
அதிகாரிகள் சுதந்திரமாகவும்
நேர்மையாகவும்
நடந்துகொள்ள வழி வகுத்தார்.
தன்னுடைய
அபிப்ராயங்களைத் திருத்தவும்
நெறிப்படுத்தவும்



அதிகாரிகளுக்கு முழு உரிமை வழங்கினார். ஆனால், இன்று அமைச்சர்களின் ஊதுகுழல்களாக அதிகாரிகள் மாறிவிட்டனர். ஆட்சிப் பணியின் அனைத்துத் துறைகளிலும் ஒழுங்குமுறை கெட்டுவிட்டது. ஒரு மேலதிகாரி, தன் கீழ் இருக்கும் ஒருவரின் தவறைக் கண்டித்து நடவடிக்கை எடுத்தால்... அரசியல் செல்வாக்குடன் அந்த மனிதர் மேலதிகாரிக்குத் தீங்கு விளைவிக்கும் நிலை இன்று காணப்படுகிறது. பொறுப்பு

உணர்வு, பணிகளை ஒழுங்காக மேற்பார்வையிடும் தன்மை, நிதி மேலாண்மையில் ஒழுக்கம் என்று எதுவும் அற்றுப்போன நிலையில்தான் இன்றைய நிர்வாகம் நடக்கிறது' (India After Gandhi)என்று புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளர் ராமச்சந்திர குஹா தன்னுடைய நூலில் தெளிவாகப் பதிவு செய்திருக்கிறார்.

நாடு சுதந்திரம் பெற்ற சூழலில் அரசியல்வாதிகள் நேர்மை சார்ந்தவர்களாகவும், மக்கள் நலனில் உண்மையான நாட்டம் உள்ளவர்களாகவும், பொது வாழ்க்கைக்காகவே சுயநலம் துறந்து முற்றாகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்களாகவும் விளங்கினர். இன்று ஒவ்வொரு கட்சியிலும் வஞ்சகம், சூழ்ச்சி ஆகியவற்றின் மூலம் சுய ஆதாயம் அடையத் துடிக்கும், மேலான சமூக லட்சியங்களற்ற, மலினமான மூன்றாம் தர மனிதர்கள் பெருகிவிட்டனர். 60 நாடுகளில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு, 'மக்களின் நம்பிக்கையை மிக அதிகமாக இழந்துவிட்டவர்கள் இந்திய அரசியல்வாதிகள்தான்!' என்றும், 'வாக்களித்த மக்களில் 91 சதவிகிதம் பேர் தங்கள்

பிரதிநிதிகள் நேர்மையற்றவர்கள் என்று தெரிந்துவைத்திருக்கின்றனர்!' என்றும் தெரிவிக்கிறது.

நாட்டைவிடக் கட்சியும், கட்சியைவிடத் தலைவரும் முக்கியமாகக் கொண்டாடப்படும் மனோபாவம் மக்களிடம் வளர்ந்ததுதான் ஜனநாயகத்தைப் பீடித்த பெரு நோய்க்கான முதல் அடையாளம். இந்திய அரசியல் நிர்ணய சபையில் அண்ணல் அம்பேத்கர் இறுதி உரை ஆற்றியபோது, தனி நபர்களை உயரமான பீடத்தில் ஏற்றிவைத்துக் கடவுள் நிலைக்கு உயர்த்திப் பூஜை செய்யும் பக்தி மனோபாவம் வளர்த்தெடுக்கப்படுவதைக் கடுமையாக விமர்சித்தார். 'அரசியலில் அன்பு வழிபாடாகவும், பாராட்டு பூஜையாகவும் மாறிவிட்டால்... நல்லவர்கள்கூட நமது தவறால் பலி கேட்கும் தெய்வங்களாகவும், கோபித்துக் கொடுமை புரியும் காட்டுத் தேவதைகளாகவும் மாறிவிடுவர்' என்று எச்சரிக்கைக் குரல் எழுப்பினார் ஈ.வி.கே.சம்பத். இந்திய அரசியலில் இன்று தனிநபர் பூஜை தவிர்க்க முடியாத அம்சமாகிவிட்டது.

விவசாயிகளின் பிரச்னைகள் அனைத்தும் 60 ஆயிரம்

கோடிக் கடன் தள்ளுபடியில் தீர்ந்துவிட்டதாக மத்திய அரசு சாதனை முழக்கம் செய்கிறது. ஆனால், ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கு ஒரு விவசாயி வீதம் தற்கொலைச் சரித்திரம் தொடர்கிறது. ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏழை விவசாயிகள் 1997 முதல் 2005 வரை மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மத்தியப் பிரதேசம், கேரளம் ஆகிய ஐந்து மாநிலங்களில் தற்கொலையில் ஈடுபட்டு வாழ்வை முடித்துக்கொண்டனர். விவசாய இடுபொருள்களின் விலை அதிகரித்துவிட்டது. வங்கிக் கடன் கிடைப்பது குறைந்துவிட்டது. பணக்கார மேலை நாடுகளில் விவசாயத்துக்கு அதிக அளவு மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், நம் ஏழை இந்தியாவில் உலக வங்கியின் நிபந்தனைக்கு உட்பட்டு மானியங்கள் குறைக்கப்படுகின்றன. விவசாயத்தில் அரசின் முதலீடு சுருங்கிவிட்டது. உணவுப் பொருள் உற்பத்தி செய்யப்படும் நிலத்தின் அளவும் சுருங்கி வருகின்றது. ஏழை மக்களுக்குத் தரப்படும் விலையைவிட மிகக் குறைந்த விலைக்குப் பல மில்லியன் டன் உணவுப் பொருள்கள்

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு ஏழைகளுக்குக் கிடைக்காத தானியம் மிகவும் குறைந்த விலைக்கு ஐரோப்பிய நாடுகளில் கால்நடைகளுக்குத் தீவனமாக அனுப்பிவைக்கப்படுகிறது.

மத்திய அரசு, 2009 ஏப்ரல்-மே மாதங்களில் 2.2 லட்சம் மெட்ரிக் டன் அளவுள்ள கோதுமையும், அரிசியும், அவை கொண்டுவரப்பட்ட வழித்தடங்களிலும், சேமிப்புக் கிடங்குகளிலும் வீணாகிவிட்டதாக அறிவித்தது. ஒரு ஆண்டுக்கு 12 லட்சம் மக்களின் பசி தீர்க்கக்கூடிய உணவுப்பொருள் பாழடிக்கப்பட்டதாம். எப்படி நடக்கிறது நம் நிர்வாகம்? 70 சதவிகித மக்கள் விவசாயத்தை நம்பி இருக்கும் நாடு எங்கே போகிறது?

விதர்பா பகுதியில் உள்ள விவசாயிகளின் தற்கொலைக்கு முடிவு கட்டுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை, நம் நிர்வாகத் திறனுக்குச் சரியான சாட்சி. தண்ணீரும் தீவனப் பயிரும்கூட இல்லாமல் வறண்டு கிடக்கும் நிலங்களில் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நிற்கும் விதர்பா விவசாயிகளின் வறுமையைத் தீர்க்க அரசு விலை உயர்ந்த பசுக்களை வீட்டுக்கு வீடு வழங்கியது. ஒரு பசுவுக்குத் தீவனச் செலவு 45 ரூபாய்க்கு மேல் ஆனது. அது தரும் ஒரு லிட்டர் பாலை விற்ற பின்பும் விவசாயிக்கு ஒவ்வொரு நாளும் 30 ரூபாய் நட்டக் கணக்குக் கூடியது. தன் வயிற்றுப் பசி தீர்க்க வழி அறியாமல் தவிக்கும் விவசாயிக்குப் பசுவின் பசி தீர்க்கும் சுமை வந்து சேர்ந்தது. வறுமை தீர வழி தேடி நின்ற புலவனுக்குப் பரிசாக யானையைத் தந்த சங்க கால மன்னனை இலக்கியத்தில் படிக்கிறோம். அந்த

*மானிட சமுத்திரம் நானென்று கூவு!*
*பிரிவிலை எங்கும் பேதமில்லை*
*உலகம் உண்ண உண்!*
*உடுத்த உடுப்பாய்!*
*உடைமை மக்களுக்குப் பொது!*

– பாரதிதாசன்

மன்னர்களின் வாரிசுகளை இன்று ஆட்சியாளர்களாக நம் வாழ்வில் நேரில் பார்க்கிறோம்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாடும் மக்களுக்காக மிகக் குறைந்த விலையில் உணவுப் பொருள் வழங்கும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தரப்படும் ரேஷன் அட்டைகளைக் கந்து வட்டிக்காரர்களிடம் அடகுவைத்து, அவர்களிடமே அதிக விலையில் உணவுப் பொருள் வாங்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு, வளமான புலர்காலைப் பொழுது என்றாவது ஒரு நாள் விடியுமா? இல்லை... இப்படியே அவர்கள் வாழ்க்கை முடியுமா?

தனிநபர் ஆயுட்காலம், ஆரோக்கியம், கல்வியறிவு, சராசரி வருமானம் போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் மனித வள மேம்பாட்டுக் குறியீடு

(Human Development Index)உலக நாடுகள் அமைப்பால் தர நிர்ணயம் செய்யப்படுகிறது. 177 நாடுகளுக்கான தர நிர்ணயப் பட்டியலில், நமக்கு 128-வது இடம். கடைசி 50 நாடுகளில் ஒன்றாக இந்தியா 'ஒளிர்கிறது'. தென் அமெரிக்காவின் பரம ஏழை நாடாகக் கருதப்படும்

பொலிவியா, மத்திய அமெரிக்காவின் வறுமை மிகுந்த நாடாகிய கௌதமாலா, ஆப்பிரிக்காவின் பசிப்பிணி மிக்க போட்ஸ்வானா, ஆசிய நாடுகளில் அதிக ரத்தம் சிந்திய வியட்நாம், தமிழரின் ரத்தம் சுவைத்த இரக்கமற்ற இலங்கை போன்ற நாடுகளுக்கும் கீழேதான் நாளைய வல்லரசாகிய(!) நம் பாரத தேசம், மனித வள மேம்பாட்டில் பின்தங்கி நிற்கிறது.

சமூக நலத் திட்டங்களுக்கு உலகில் அதிகமாகச்



செலவழிக்கும் நாடு ஜெர்மனி. தேசிய வருமானத்தில் ஜெர்மனி 25 சதவிகிதமும், பிரான்ஸ் 23 சதவிகிதமும் செலவழிக்கின்றன. நம் இந்தியா 6.7 சதவிகிதம் மட்டுமே செலவழிக்கிறது. இந்த மண்ணில் பிறக்கும் குழந்தைகளில் 30 சதவிகிதம் குழந்தைகள் குறைவான எடையுள்ளவை. என்ன சாதித்துவிட்டார்கள் நம் மத்திய - மாநில ஆட்சியாளர்கள்? மனித வள மேம்பாட்டில் 126-வது இடத்தில் இருந்து 128-வது இடத்துக்கு இறங்கிவிட்ட இந்தியத் திருநாடு உலகின் பணக்கார டாலர் பில்லியனர் பட்டியலில் அமெரிக்கா,

ஜெர்மனி, ரஷ்யாவுக்கு அடுத்து நான்காவது இடத்தைப் பிடித்திருக்கிறது. முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு ஒரு நிமிடத்துக்கு 40 லட்சம் ரூபாய் வீதம் அதிகரித்துக்கொண்டே போகிறது. பணக்கார பில்லியனர் பட்டியலில் ஒரு நபர்கூட இடம் பெறாத கியூபா - மனித வள மேம்பாட்டில் 51-வது இடத்தைப் பெற்றிருக்கிறது. கல்வியையும் மருத்துவத்தையும் அனைத்து மக்களுக்கும் இலவசமாகத் தரும் கியூபா, சமமான வளர்ச்சியை நோக்கி நடக்கிறது. சமதர்ம முகமும், சமூக நீதியும் இல்லாத இந்த மண்ணின் இழிநிலை இனியாவது மாற வேண்டாமா? யார் மாற்றுவது? எப்போது மாற்றுவது?

இரண்டு ஆண்டுகள் ஜார்கண்ட் மாநில முதல்வ ராக இருந்து இரண்டாயிரம் கோடிக்கு மேல் கொள்ளையடித்த மதுகோடா விவகாரத்தில், வருமான வரித் துறை அதிகாரி உஜ்ஜவல் சௌத்ரி நடத்திய நேர்மையான விசாரணையில், ஹவாலா புள்ளிகளும் அரசியல் கொள்ளையரும் சுவிஸ் வங்கிகளில் குவித்துவைத்திருக்கும் கணக்கில் வராத கறுப்புப் பணம்

பற்றிய தகவல்கள் வெளிப்படும் தருணத்தில் அவர் அப்பணியில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டார். மன்மோகன் சிங் அரசு யாருக்குப் பாதுகாப்பு தருகிறது? நேர்மைக்கு இடமாற்றம்தான் பரிசா?

ஃபோபர்ஸ் பீரங்கி ஊழலில் வெறும் 60 கோடி ரூபாய் ஊழல் நடந்தது. அந்த ஊழல் வெளிப்பட்டதும் 'திருவாளர் பரிசுத்தம்' என்று பாராட்டப்பட்ட ராஜீவ் காந்தி தன் ஆட்சியையே பறிகொடுத்தார். இன்று 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் 60 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் முறைகேடு என்று மீடியாக்கள் தொடர்ந்து குரல் கொடுத்த பின்னும் ஆ.ராசாவும் அசையவில்லை; கலைஞரும் கலங்கவில்லை; மன்மோகன் சிங்கும் மிரளவில்லை; சோனியாவும் எதுவும் சொல்லவில்லை. அந்த அளவு இந்திய ஜனநாயகம் மரத்துப்போய்விட்டது. நாம் மௌனப் பார்வையாளர்களாக வேடிக்கை பார்க்கிறோம்!

ஜெயலலிதா வருவாய்க்கு மேல் சொத்து சேர்த்து விட்டதாக வழக்கு ஆண்டுக்கணக்கில் நடக்கிறது. அதேசமயம், தமிழக அரசியலில் வருவாய்க்கு மேல்

சொத்து சேர்த்தது ஜெயலலிதா மட்டும்தானா? இங்குள்ள அரசியல் கட்சிகளின் சார்பில் அமைச்சர், எம்.பி., எம்.எல்.ஏ., உள்ளாட்சி மன்ற உறுப்பினர் என்று பல்வேறு பதவிகளில் இருந்தவர்கள், இருப்பவர்கள், நெறி நின்றும் நேர்மை சார்ந்தும் சொத்து சேர்த்தவர்களா? அரசியல் பதவிக்கும், அரசுப் பதவிக்கும் வந்த நாள் தொட்டு இன்று வரை இவர்கள் சேர்த்திருக்கும் சொத்துகள் எப்படி வந்தன என்று தனித்தனியாக விசாரணை நடத்தினால்... எத்தனை பேர் தேறுவார்கள்? இடது சாரிகளில்கூட சில கறுப்பு ஆடுகள் இருந்திருக்கக்கூடுமே. ஆனாலும், இந்த இழிந்த சூழலிலும் நமக்கு நம்பிக்கை தருபவர்கள் 90 சதவிகிதம் இடதுசாரிகளே!

இன்று குற்றவாளிக் கூண்டில் நிற்பவர் ஜெயலலிதா போன்ற சிலர். நாளை நிற்க வேண்டியவர்கள் பல்லாயிரம் பேர். நிறுத்த வேண்டிய நாம், இன்று வரை நியாயத்தின் நிறம் அறிந்து நடக்கவில்லையே! இலவச மயக்கத்திலும், சாராய போதையிலும் இன்னும் எவ்வளவு நாள் இருக்கப் போகிறோம்?

இன்று தமிழகத்தில் என்ன நடக்கிறது? குடிபோதையில் வாகனம் ஓட்டினால் குற்றம் என்று தண்டிக்கும் அரசுதான், ஒவ்வொரு தமிழனும் தாராளமாகவும் ஏராளமாகவும் குடிப்பதற்குக் கடை திறந்துவைத்திருக்கிறது. இலவசத் திட்டங்களில் மக்களை மயக்கி, திருமங்கலம் ஃபார்முலாவின்படி வாக்காளர்களை விலை பேசி எளிதில் வெற்றிவாகையை மீண்டும் சூட முடியும் என்ற நம்பிக்கையில் தி.மு.க. இருக்கிறது. தி.மு.க. ஆட்சி நடத்தினால், கலைஞரைச் சேர்ந்தவர்களுக்கு லாபம். ஜெயலலிதா மீண்டும் வந்தால், சசிகலா குடும்பத்துக்கு லாபம். எப்போதும் நட்டப்படுவது நாம்தான் என்ற புரிதல் இப்போதாவது வருமா?

அரசியலைப் பிழைப்பாக வைத்திருப்பவர்கள் ஒதுக்கப்பட வேண்டும். தேர்தலைத் தீர்மானிக்கும் சக்தியாகப் பணம் இருக்கும் நிலை மாற்றப்பட வேண்டும். சந்தர்ப்பவாதக் கூட்டணிகள் முறியடிக்கப்பட வேண்டும். குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பொது வாழ்வில் ஈடுபட்டுக் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது

மக்கள் பணியில் தன்னலமின்றி ஈடுபட்டவர்கள் மட்டுமே வேட்பாளர்களாக நிறுத்தப்பட வேண்டும். பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்றாதவர்களை வாக்காளர்கள் திரும்பப் பெறும் உரிமை (Right to Recall) கிடைக்க வேண்டும். எவ்வளவு ஆற்றல் மிக்கவராக இருந்தாலும், எந்தப் பொறுப்பிலும் இரு முறைக்கு மேல் இருக்கலாகாது. தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களின் பார்வைக்கு ஒவ்வோர் ஆண்டும் பதவியில் இருப்போர் தங்கள் நெருங்கிய உறவுகள் உட்படச் சேர்த்திருக்கும் சொத்துக் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு... நாட்டின் பிரதமர், மாநில முதல்வர், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் நேரிடையாக மக்களால் ஒரே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். வெற்றி பெற்றுப் பதவியில் இருப்பவர் இறந்தால்... அடுத்தவரை அவர் சார்ந்த கட்சியே நியமிக்க வேண்டும். இடைத் தேர்தல்களே இந்த ஏழை நாட்டில் கூடாது. பிரதமரும் முதல்வரும் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், கூட்டணி அதர்மம் குலைந்து

நல்லாட்சி நடக்க வழி பிறக்கும். ஆளுநர், குடியரசுத் தலைவர் போன்ற வேண்டாத ஆட்சி அங்கங்கள் அகற்றப்பட வேண்டும். தேர்தல் செலவை அரசே ஏற்க வேண்டும். கட்சிகளுக்கு எந்த நிறுவனமும் நன்கொடை தருவது தடுக்கப்பட வேண்டும். கட்சிகளின் நிதிநிலை முறையாகத் தணிக்கை செய்யப்பட வேண்டும். அரசியல் சாக்கடையைச் சுத்தப்படுத்த இவைபோன்று இன்னும் ஆயிரம் நடவடிக்கைகள் வேண்டும். அரசியல் தூய்மை அடைந்தால்... நிர்வாகம் தானாகவே தூய்மையுறும். ஊழலின் ஊற்றுக்கண் அப்போதுதான் அடைபடும். இவையெல்லாம் நடக்க வேண்டும் என்று முதலில் மக்கள் முடிவெடுக்க வேண்டும். முடியுமா என்றால் முடியும்... முடியும்... முடியும்!

சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தின் சொந்தக் காரர்கள் என்று இறுமாந்திருந்த வெள்ளையர்களுக்கு எதிராகக் கைராட்டை சுழற்றியபடி காந்தி அகிம்சை வழியில் அறப்போர் நடத்தியபோது, 'இந்த அரை நிர்வாண ஆண்டியால் சுதந்திரத்தைப் பெற முடியுமா?' என்று

சர்ச்சில் ஆணவத்துடன் கேட்டார். காந்தியின் பின்னால் மக்கள் திரண்டதால், சுதந்திரக் காற்றை நம்மால் சுவாசிக்க முடிந்தது. இங்கிலாந்தின் காலனி நாடாக இருக்க விரும்பாத அமெரிக்க மக்கள், ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையில் ஆயுதப் போர் நிகழ்த்தியபோது, அமெரிக்கப் படையால் வெல்ல முடியுமா என்ற ஐயம் அகிலத்துக்கு இருந்தது. அமெரிக்கர்கள் இறுதியில் குடியரசைக் காண முடிந்தது. ஒன்றுபட்ட பிரான்சு நிலப்பரப்பை ஆண்ட வலிமைமிக்க போர்போர்ன் வம்சப் பேரரசைத் தூக்கியெறிந்து, பாஸ்டில் சிறைச்சாலையை உடைத்து நொறுக்கி மக்கள் புரட்சியில் ஈடுபட்டபோது, அவர்களால் வெற்றி பெற முடியுமா என்று ஐரோப்பா மூக்கில் விரல்வைத்த நிலையில் 'மனித உரிமை அறிக்கை'யின்(Declaration of the rights of man)மூலம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற தாரக மந்திரங்களை உச்சரித்தபடி பிரெஞ்சுப் புரட்சி வெற்றியில் முடிந்தது.

'வீழ்த்தவே முடியாது!' என்று நினைத்த ஜார் மன்னரின் கொடுங்கோலாட்சிக்கு மக்கள் துணையுடன் லெனின்

முற்றுப்புள்ளிவைத்து மார்க்ஸியத்தை சோவியத் மண்ணில் மலரச் செய்ய முடிந்தது. கறுப்பர்கள் அமெரிக்காவில் வெள்ளையருக்குச் சமமாக வாழ, ஆபிரகாம் லிங்கனால் சட்டம் இயற்ற முடிந்தது. நெல்சன் மண்டேலாவால் தென் ஆப்பிரிக்காவில் கறுப்பர் ஆட்சியைக் கொண்டுவர முடிந்தது. ஷியாங் கே ஷேக்கின் மாபெரும் படையால்



நிர்மூலமாக்கப்பட்ட மாசேதுங்கின் சிவப்புச் சேனை 12,500 கிலோ மீட்டர் தூரம் காடு மலைகளில் ஓர் ஆண்டு முழுவதும் நெடும் பயணம் நடத்தி மக்கள் சக்தியால் செஞ்சீன அரசை அமைக்க முடிந்தது. கியூபாவில் 12 பேருடன் புறப்பட்ட ஃபிடல் காஸ்ட்ரோவின் புரட்சிப் படை வளர்ந்து, மொன்கடா ராணுவ முகாமைத் தாக்குவதில் தோல்வியடைந்து, தளர்வின்றிப் போராடி, பாடிஸ்டா என்னும் அமெரிக்க எடுபிடியின் கொடுங்கோன்மையில் இருந்து நாட்டை விடுவித்துச் சோஷலிச அரசைச் சமைக்க முடிந்தது. மக்கள் சக்தியால் இவை எல்லாம் முடியுமெனில்... ஊழல்

நாற்றமெடுக்கும் இந்திய அரசியலை ஏன் மாற்ற முடியாது?

'மக்கள்... மக்கள் மட்டுமே உலக வரலாற்றை உருவாக்குவதில் எப்போதும் உந்து சக்தியாக இருக்கிறார்கள்!' என்றார் மாவோ. ஆயுதம் ஏந்தாமலே அதிசயங்களை நம்மால் நிச்சயம் படைக்க முடியும். அதற்கு, சமூகம் குறித்த சிந்தனை முதலில் நம்முள் முகிழ்க்க வேண்டும்!

அடுத்த இதழில் பயணம் முடியும்...





எங்கே போகிறோம் நாம்?
எரிமலைத் தொடர்

வாக்குமூலம்

43

அன்புக்கினிய ஜூ.வி. வாசகர் களுக்கு... வணக்கம். 'எங்கே போகிறோம் நாம்?' இந்த இதழுடன் நிறைவடைகிறது. ஒவ் வொரு மூலத்துக்கும் ஒரு முடிவு தவிர்க்க முடியாதது. இயற்கையின் படைப்பில் எல்லை இல்லாதது எதுவும் இல்லை. ஓட்டப் பந்தயத்தில்கூட, ஒரு முடிவு இருந்தால்தான் ஓடுபவனுக்கு அதில் ஓர் உற்சாகம் பிறக்கும்!

சமூக நலன் சார்ந்த உணர்வின் உந்துதலில் உருப்பெற்ற இந்தத் தொடர், பலரைப் பெரிதாகப் பாதித்தது. சிலரை, என் மீது எரிச்சலடையச் செய்தது. நெருப்பு மட்டுமா சுடும்? உண்மையும் சுடும்! இழப்பையும் வலியையும் தாங்கிக் கொள்ளும் மனம் இருப்பவனால்தான், உண்மை களை உரத்த குரலில் சொல்லவும், அச்சமின்றி



எழுதவும் முடியும். இந்தத் தொடர் முடியும் வரை காத்திருக்க முடியாத சில அவசரக்காரர்கள் 'நீ மட்டும் கட்சி மாறவில்லையா? காங்கிரஸ் குறித்து இப்போதுதான் ஞானம் வந்ததா? கலைஞர் கொடுத்த திட்டக் குழு உறுப்பினர் பதவியை நீ ஏற்றவன்தானே?' என்று விமர்சனக் கணைகளை வேகமாக வீசினார்கள். அவர்களுக்காகவே இந்த வாக்குமூலம்என்னால் இப்போது வழங்கப் படுகிறது.

நான் கட்சி மாறியவன்தான். ஆனால், கொள்கை மாறியவன் இல்லை. பதவிக்காகவும் பணத்துக்காகவும் என் ஆன்மாவை ஒருநாளும் அழுக்காக்கிக்கொண்டவன் இல்லை. ஒருநாள் காங்கிரஸிலும், மறுநாள் கலைஞரிடமும், அதற்கடுத்த நாள் போயஸ் தோட்டத்திலும், 'மூளை விபசாரி'யாக நான் போய் நின்றதில்லை. மாணவப் பருவத்தில் இருந்து இன்று வரை எனக்குப் பெரியாரைப் பிடிக்கும். இடதுசாரி இயக்கங்களைப் பிடிக்கும். ஆனால், ஒரு கடவுள் மறுப்பாளனாக இருக்க முடியாத என்னால், பெரியாரின்

சமுதாயச் சீர்திருத்த இயக்கத்தில் இணைய முடியவில்லை.

வன்முறையின் நிழலைக்கூடத் தீண்ட விரும்பாத நான், கம்யூனிஸ்ட் ஆகவில்லை. இலக்கிய உலகில் பாரதியும், ஆன்மிகத் தளத்தில் விவேகானந்தரும், அரசியல் களத்தில் காந்தியும்தான் எனக்கு ஆதர்சமாக அமைந்தனர். இந்த மூவரிடமும்கூட எனக்குச் சில சிந்தனைகளில் கூர்மையான விமர்சனப் பார்வை உண்டு. எனக்கு எவரிடத்தும் கண்மூடித்தனமான 'தேவதா விசுவாசம்' என்றும் இருந்ததில்லை!

என் கல்லூரிப் பருவத்தில் காந்தியத் தைப் பழுதறக் கற்க முனைந்தேன். காந்தியின் சாயலில் தமிழ் மண்ணில் உலவிய காமராஜரின் காலடியில் போய் விழுந்தேன். காங்கிரஸ்காரனாக இருந்த நான், இந்திரா காந்திக்கு எதிராகப் பெருந்தலைவர் எழுந்தபோது, அவரோடு நான் ஸ்தாபன காங்கிரஸ்காரனாக மாறினேன். கையில் ஒரு பெட்டியுடன் மாநிலம் முழுவதும் நெருக்கடி நிலை காலத்தில் இந்திரா காந்தியின் அடக்குமுறையையும்

குடும்ப அரசியலையும் மிக மூர்த்தண்யமாக எதிர்த்து நான்கு சுவர்களுக்கு நடுவே ஜனநாயகக் கடமையாற்றினேன். இந்திரா காந்தி கொண்டுவந்த 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ். நடத்திய கூட்டத்தில் பங்கேற்கப் பலர் அஞ்சியபோது, துணிவுடன் நான் அதற்குத் தலைமையேற்றேன். காமராஜ் மறைவுக்குப் பின்பு ஸ்தாபன காங்கிரஸ், ஜனதாவாகி, ஜனதா கட்சி சீரழிந்து, ஜனதா தளமாகி, ஜனதா தளம் சிதைந்து... காமராஜரின் லட்சியம் சார்ந்த தொண்டர்கள் வீதியில் நிற்க நேர்ந்தது. என் இளமை முழுவதும் இந்திரா காங்கிரஸ் எதிர்ப்பிலும், திராவிடக் கட்சிகளின் எதிர்ப்பிலும் கழிந்தது. அது குறித்து எனக்கு இன்று வரை கழிவிரக்கம் எதுவும் இல்லை.

நேர்மை சார்ந்த அரசியலுக்கு இனி தமிழகத்தில் இடம் இல்லை என்ற புரிதல் என்னுள் ஏற்பட்டதும், ஒழுங்காக வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கைச் செலவுகளுக்கு வழி தேடிக்கொள்ளலாம் என்று உயர் நீதிமன்றத்தின் உள்ளே நுழைந்தேன். விதி என்னை

விடுவதாக இல்லை. நான் பெரிதும் மதித்த ராமகிருஷ்ண ஹெக்டே தொடங்கிய 'லோக் சக்தி' இயக்கத்தின் தமிழகத் தலைவராகப் பொறுப்பேற்க நேர்ந்தது. ஓர் உயரிய லட்சியத்துக்காக அரசியல் களம் புகுந்து, ஜனதா தளத்தின் அழிவுக்குப் பின் அநாதைகளாகிவிட்ட காமராஜ் தொண்டர்களின் பாசறையாக லோக் சக்தி பரிணமித்தது. ஹெக்டே மத்திய அமைச்சராக அமர்வதற்கு பி.ஜே.பி-யுடன் கைகோத்து நின்றபோது, அந்த சந்தர்ப்பவாதத்தை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அந்த நேரத்தில்தான் மூப்பனார், நான் தமிழ் மாநில காங்கிரஸில் இணைந்து பணியாற்ற வேண்டுமென்று பெரிதும் விரும்பினார்.

ஒரு நாள் இரவு மூப்பனாரை அவரது வீட்டில் சந்தித்து நீண்ட நேரம் பேசினேன். 'தமிழ் மாநில காங்கிரஸில் நான் இணைய வேண்டும் என்றால், நீங்கள் எனக்கு இரு வரங்கள் தர வேண்டும்!' என்றேன். 'எந்த நிலையிலும் இந்திரா காங்கிரஸில் நீங்கள் இணையக் கூடாது. இரண்டு திராவிடக் கட்சிகளுடன் தேர்தல் உறவு தொடரக் கூடாது.

இவையே நான் விரும்பும் வரங்கள்...' என்றேன். 'உங்கள் விருப்பப்படியே இரண்டும் நடக்கும்' என்றார் மூப்பனார். கால ஓட்டத்தில் இரு வரங்களும் பொய்த்துப்போயின. தமிழ் மாநில காங்கிரஸ், இந்திரா காங்கிரஸுடன் இணைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. த.மா.கா-வின் பொதுச் செயலாளராக இருந்த நான், காங்கிரஸின் பொதுச் செயலாளராகவும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தேசியக் குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்றேன். வாசனும் நானும் நெஞ்சத்தளவில் நெருக்கமுற்றோம். வாசன் என் மீது பொழிந்த அன்புக்கு எல்லை இல்லை. ஒரு கட்டத்தில் வாசன் நான் தமிழ்நாடு காங்கிரஸின் தலைவராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று மிகவும் வற்புறுத்தினார். 'ஒழுங்கீனமான இந்தக் கட்சிக்கு ஒருநாள்கூட என்னால் தலைவராக இருக்கவியலாது' என்று மறுத்துவிட்டேன். இதை வாசனுடைய மனச்சான்று அறியும். என் பொருளாதார நிலை கண்டு, மூப்பனார் என் மகளின் திருமணச் செலவை மகிழ்ச்சியுடன் ஏற்க முன் வந்தார். 'நான் பெற்ற மகளுக்கு என் வியர்வையில்

இருந்துதான் மணமுடிக்க வேண்டும்' என்று நான் மறுத்துவிட்டேன். வசதிமிக்க ஒரு வாடகை வீட்டை எனக்காகத் தேடிப் பிடித்து என் வாழ்க்கைச் செலவுகளை வாசன் ஏற்க விரும்பியபோது, அதை முற்றாக நிராகரித்தவன் நான். பல லட்சம் ரூபாயை ஒரு பையில் வைத்து அன்போடு வேறொரு அரசியல் நண்பர் அனுப்பிவைத்தபோது, அதைத் தொட மறுத்தவன் நான். எதன் பொருட்டும், எவர் பொருட்டும் என் கைகளில் இன்று வரை கறை படிந்ததில்லை!

கலைஞர் என்னை மாநிலத் திட்டக் குழு உறுப்பினராக நியமித்தார். நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது... பதவிப் பித்தினாலும் அதிகார வேட்கையாலும் அன்று. மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களில் நம் பங்களிப்பும் இருக்க அது ஒரு நல்வாய்ப்பு என்று கருதினேன். அங்கு ஊழலுக்கு இடம் இல்லை; சலுகை காட்ட வாய்ப்பு இல்லை என்பதனால் ஏற்றேன். என் பதவிக் காலத்தில் ஒரேயரு முறைகூட என் மேசை மீது இருந்த அரசுத் தொலைபேசியை நான் என் தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்தியது இல்லை. பணிக் காலத்தில் நான் காட்டிய ஈடுபாட்டையும், கடைப்பிடித்த நேர்மையையும் திட்டக் குழுவின் துணைத் தலைவர் அன்பிற் சிறந்த நாகநாதன் நன்கு அறிவார். நான் கலைஞரைச் சந்தித்தபோதெல்லாம் அவர் என் மீது பொழிந்த அன்பும் பாசமும் எளிதில் மறக்க முடியாதவை. காங்கிரஸில் இருக்கும் தலைவர்கள் அனைவரும் இன்றளவும் எனக்கு நல்ல நண்பர்களே.

> மனதில் உறுதி வேண்டும்
> வாக்கினிலே இனிமை வேண்டும்
> நினைவு நல்லது வேண்டும்
> நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்!
>
> – பாரதியார்

எவரிடத்தும் எனக்கு எந்த மூடப் பகைமையும் கிடையாது. ஆனால், ஈழத் தமிழர் இன்னலுற்றபோது, அவர்கள் துயர் துடைக்க முதல்வர் கலைஞர் முனைப்பாகச் செயலாற்றவில்லை. தமிழினத் தலைவராக அவர் எந்தத் தியாகத்துக்கும் தன்னை ஆட்படுத்திக்கொள்ளத் தயாராக இல்லை. அதனால் மனம் கசந்த நான் திட்டக் குழுவில் இருந்து விலகினேன். இனவுணர்வு இல்லாத காங்கிரஸ்காரர்களோடு இணக்கம் கொள்ள விரும்பாத நிலையில்... அங்கே இருந்தும் வெளியேறினேன்.

இறக்கும் நாள் வரை இனி என் வாழ்வில் கட்சி அரசியலுக்கு இடம் இல்லை. தன்னை அறிய புத்தனுக்கு எட்டு ஆண்டுகள் ஆயிற்று. என்னை அறிந்துகொள்ள எனக்கு 40 ஆண்டுகள் தேவைப்பட்டன. என் இனத்துக்காகவும் மொழிக்காகவும் பாடுபட எத்தனையோ தலைவர்கள் புறப்பட்டுவிட்டார்கள். அவர்களது பயணம் தொடரட்டும். நான் தலைவன் இல்லை. என் தலைக்குப் பின்னால் எந்த ஒளி வட்டமும் இல்லை. விரிந்த சொத்து சேர்க்கும் விழைவு அறவே இல்லை. தமிழகத்தில் பல

வீடுகள் சொந்தமாக உள்ள மனிதர்கள், நான் வசிக்கும் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் சென்னை வந்தால் ஓய்வெடுப்பதற்காகப் பல்லாண்டுகளாகக் குறைந்த வாடகையில் தங்கியிருக்க தமிழக அரசு வசதி செய்து கொடுத்திருக்கிறது. ஒரு வீடும் இல்லாத எனக்கு வாடகைக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் இருந்து வெளியேறும்படி அரசு 'நோட்டீஸ்' அனுப்புகிறது.

பொதுவாகவே நான் பார்க்கிறேன்... இன்றைய இளைஞர்களிடம் நம்பிக்கை வறட்சி நன்றாகத் தெரிகிறது. நம்பிக்கை வறண்டுபோனவர்களின் கைகளில் நாடு எப்படிப் பாதுகாப்பாக இருக்க முடியும்? நம்பிக்கைத் துடுப்புகளால் வாழ்க்கைப் படகை வழி நடத்தினால்தான், நாம் அடைய விரும்பும் கரை கண்ணுக்குத் தெரியும்.


பீகாரில் 1970-களில் இருந்த சீரழிவைப் போக்க இளைஞர்கள்தான் புறப்பட்டனர். 1957-ல் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் இருந்து விலகி 'இனி அரசியலே வேண்டாம்' என்று மனம் கசந்து, வினோபாவின் பூமி தான இயக்கத்திலும், காந்திய நிர்மாணத் திட்டங்களிலும்

தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட ஜெயப்பிரகாஷ் நாராயணை, மாணவர்கள் 18 ஆண்டு அரசியல் துறவறத்தில் இருந்து விடுவித்து, ஊழல் எதிர்ப்பு இயக்கத்துக்குத் தலைமை தாங்கச் செய்தனர். அதன் விளைவுதான் இந்தியாவில் நடந்த இரண்டாவது சுதந்திரப் போராட்டமும், இந்திரா காங்கிரஸின் வீழ்ச்சியும்.

பணமும், பதவியும், அதிகாரமும், மனிதனுக்கு உண்மையான இன்பத்தையும் அமைதியையும் தராது என்பதை இன்றைய இளைஞர்கள் உணர வேண்டும். அன்னிபெசன்ட் அம்மையார், தத்துவ மேதை ஜே.கிருஷ்ணமூர்த்தியைப் புத்தரின் மறு அவதாரம் என்று நம்பினார். தான் உருவாக்கிய உலக அமைப்பின் லட்சக்கணக்கான சீடர்களுக்குத் தலைமை ஏற்று, கோடிக்கணக்கில் குவிந்திருக்கும் சொத்துகளை ஜே.கே. பரிபாலிக்க வேண்டும் என்று அன்னிபெசன்ட் வற்புறுத்தினார். ஜே.கே. அதற்கு இணங்கவில்லை. 'நான் ஒரு அவதார புருஷன் இல்லை. யாரையும் குருவாக ஏற்காதீர்கள்' என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்த


ஜே.கே., ஹாலந்தில் வழங்கப்பட்ட ஒரு பெரிய கோட்டையையும், 5,000 ஏக்கர் நிலப்பரப்பையும், உலகம் முழுவதும் அவர் காலடியில் கொட்டிய சொத்தையும் துச்சமெனத் தூக்கியெறிந்து, மனித குலத்தின் நல்வாழ்வுக்காக 90 வயது வரை தன் சிந்தனைகளை விதைத்தார்.

அந்த ஜே.கே-யை நான் படித்திருக்கிறேன். அரசியல் அதிகாரம் என்ற மேனகையிடம் மயங்காத மகாத்மாவை முடிந்தவரை பின்பற்ற முயல்கிறேன். இரண்டாவது மகாத்மா ஜே.பி-யைப்போல், பகுத்தறிவுப் பகலவன் பெரியாரைப்போல், அதிகார அரசியலுக்கு அப்பால் நின்று மக்கள் பணியாற்ற விரும்பும் இளைஞர்கள் என்னோடு காந்திய அரசியல் இயக்கத்தில் ஈடுபடலாம். நேர்மை தவறாமல், பதவிகளுக்குப் பல் இளிக்காமல், ஆள்பவர்க்குப் பல்லக்குத் தூக்காமல், பொதுச் சொத்தில் ஒரு செப்புக் காசுக்கும் ஆசைப்படாமல், மக்கள் நலத் திட்டங்களில் ஈடுபடுவதற்குப் பெயர்தான் 'காந்திய



அரசியல்'.

கைம்மாறு கருதாமல் சமூக நலனுக்காக உழைக்க விரும்புவோர் என்னோடு கைகோத்து நடக்கலாம். இழப்புகளுக்கும் வலிகளுக்கும் யாரும் தயாராக இல்லையெனில், தாகூர் சொன்னபடி நான் தனியாக (walk alone) நடப்பேன். என் கையில் பேனா இருக்கிறது. என் வாக்கில் உண்மை இருக்கிறது. குறைந்த தேவைகளில் என்னால் நிறைவாக வாழ முடிகிறது. சமூகத் தீமைகளுக்கு எதிரான பயணம் என் இறுதி நாள் வரை தொடரும். 'மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க அவர்களே வழி தேட முனைய வேண்டும். அவர்களுக்கு உண்மை புரிந்துவிட்டால், தங்களுடைய வழியைத் தாமே கண்டுகொள்வார்கள். அவர்களுக்கு உண்மையைப் புரியவைப்பதுதான் நம் வேலை!' என்பது மாக்ஸிம் கார்க்கியின் மணிமொழி!


எங்கே போகிறோம்
நாம்?
தமிழருவி மணியன்
விகடன்
பிரசுரம்

Title :
ENGAE POGIROM NAAM?
© THAMIZHARUVI MANIAN
ISBN : 978-81-8476-303-4

விகடன் பிரசுரம்: 539

நூல் தலைப்பு:
எங்கே போகிறோம் நாம்?

நூல் ஆசிரியர்:
© தமிழருவி மணியன்

ஓவியங்கள்:
ஸ்யாம்

முதற்பதிப்பு : ஜூலை, 2010

விலை : ரூ. 135

**விகடன் பிரசுரம்**
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: publications@vikatan.com

| | |
|---|---|
| பதிப்பாளர்: | பா.சீனிவாசன் |
| ஆசிரியர்: | வீயெஸ்வி |
| பொறுப்பாசிரியர்: | பொன்ஸீ |
| உதவி ஆசிரியர்கள்: | சா.இலாகுபாரதி, எம்.நாகமணி, கே.பாசுமணி, எஸ்.கோபால், சிவராஜ் |
| தலைமை வடிவமைப்பு: | மு.ராம்குமார் |
| வடிவமைப்பு: | அ.அன்பழகன் |

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துமூலமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.